# மானாவாரிப் பூ

மேலாண்மை பொன்னுச்சாமி



# மானாவாரிப்பூ

மேலாண்மை பொன்னுச்சாமி

வைகை வெளியீடு
6/16, புறவழிச் சாலை,
மதுரை - 625 018

மானாவாரிப்பூ (தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதைகள்) ■ ஆசிரியர் : மேலாண்மை பொன்னுச்சாமி ■ முதல் பதிப்பு : செப்டம்பர் – 2001 ■ பதிப்புரிமை : ஆசிரியருக்கே ■ பக்கம் : 384 ■ விலை : ரூ. 100 ■ முகப்பு அட்டை : ஓவியம் – தி.வரதராஜன், வடிவமைப்பு – வே.பாண்டி, போட்டோ – சோழ.நாகராஜன் ■ அச்சிட்டோர் : வைகை பிரிண்டர்ஸ் & பப்ளிசர்ஸ், 6/16, புறவழிச்சாலை, மதுரை – 625 018 போன்:(0452) 667450 ■ வெளியிட்டோர் : வைகை வெளியீடு, 6/16, புறவழிச்சாலை, மதுரை – 625 018 போன் : (0452) 669769 பேக்ஸ் : (0452) 667070 இ–மெயில் : theekati@md3.vsnl.net.in ■

**Manavarippoo** (Collection of selected short stories) by: **Melanmai Ponnuchami** ■ Language : Tamil. ■ First Edition : September 2001. ■ © to the writer. ■ Pages: 384 ■ Price Rs. 100 ■ Cover : Art - T.Varadharajan, - Design : V.Pandi - Photo : Chola.Nagarajan. ■ Printed by : Vaigai Printers & Publishers, Madurai - 625 018; Ph: (0452) 667450. ■ Published by : Vaigai Veliyeedu, 6/16, Bypass Road, Madurai - 625 018; Ph: (0452) 669769; Fax : (0452) 667070. E-mail : theekati@md3.vsnl.net.in ■

## சமர்ப்பணம்

ஊர் விட்டு
உறவு விட்டு
உள்ளூர் மொழி விட்டு
ஏழு கடல் தாண்டி
ஏழு மலை தாண்டி
பாலைவன தேசம் சென்று
வேர்வை சிந்தும் - எம்
வாலிபத் தமிழருக்கு ...

# பதிப்புரை

தோழர் மேலாண்மை பொன்னுச்சாமி அவர்களின் சிகரச் சிறுகதைகளை ஒரே தொகுப்பாக வெளியிடுவதில் வைகை வெளியீட்டகம் பெருமிதம் கொள்கிறது. இக் கதைகள் அனைத்தும் பல்வேறு பத்திரிகைகளில் வெளிவந்தவை. பல்வேறு பரிசுகளைக் குவித்தவை.

சம காலத் தமிழ்ச் சிறுகதை உலகம் விரிந்து வருகிறது. பண்பட்ட சிறுகதைகள் வெளிவருகின்றன. இவற்றில் முற்போக்கு இடதுசாரி எழுத்தாளர்களே முதலிடம் வகிக்கிறார்கள். அந்த முதல் வரிசையில், முன்னணியில் நிற்பவர் தோழர் மேலாண்மை.

இலக்கியம் என்பது வாழ்விலேயிருந்து பிறப்பது; யதார்த்த வாழ்வில் நிகழும் சம்பவங்களை அடிப்படையாக வைத்து யதார்த்த இலக்கியம் படைப்பதுதான் நின்று நிலைக்கும். வாழ்வில் வதைபடும் கிராமப்புற மக்களின் கதைகளை இலக்கியமாக்குதல் எளிதான காரியமல்ல. அதிலும் வானம் பார்த்த பூமியாய்க் கிடக்கும் தமிழகத்து மானாவாரி மனிதர்களைப் படைப்பது எளிதல்ல. வாழ்க்கையை ஊடுருவிப் பார்த்து உள்ளார்ந்த உணர்வுகளையும், உணர்ச்சிகளையும் வெளிக்கொணரவேண்டும். இதில் வெற்றிபெற்ற படைப்பாளிகள், அதிலும் தொடர்ந்து எழுதுகிறவர்கள் மிகச் சிலரே. மேலாண்மை பொன்னுச்சாமி அத்தகு சமகாலப் படைப்பாளிகளில் தலைசிறந்தவர்.

ஒரு சின்னஞ் சிறுவனாய் செம்மலரில் கால் பதித்து, இன்று வெகுஜனப் பத்திரிகைகளிலும் பவனிவரும் அளவுக்கு உயர்ந்துள்ளார். இருபதுக்கும் மேற்பட்ட சிறுகதைத் தொகுதிகள், நாவல்கள், கட்டுரை நூல்கள் இதுவரை வெளி வந்துள்ளன. இத் தொகுப்பிலுள்ள 31 கதைகளும் மானாவாரி மனிதர்களின் மகத்துவத்தை உங்களுக்கு எடுத்துரைக்கும்.

மதுரை. வைகை வெளியீட்டகம்,
1.9.2001

## நன்றியுரையே முன்னுரையாய் ...

இந்த நூலுக்கு முன்னுரை என்று தனியாகத் தேவையில்லை. இந்த நூலில் இடம் பெற்றிருக்கும் சிறுகதைகள் யாவும் என் மொத்தச் சிறுகதைகளிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட மணிக் கதைகள்.

துபாயில் பணியாற்றுகிற சின்னவன் பாரதி என்ற கவிஞர் பி.எஸ்.அழகேசன்தான் ஆனந்த விகடனில் என் சிறுகதையைப் படித்துவிட்டு முதலில் கடிதம் எழுதினார். பாராட்டுக் கடிதமாகவும் இருந்தது. பரிவுக் கடிதமாகவும் இருந்தது.

என் மீது ஆழ்ந்த அன்பும், தூய்மையான பாசமும் கொண்டிருந்தார். பதில் கடிதம் நானும் எழுதினேன். அவருடன் கைகோர்த்தனர் அவரையொத்த நண்பர்கள்.

திரைகடல் ஓடி திரவியம் தேடுகிறவர்கள். யாதும் ஊரே; யாவரும் கேளிர் என்ற அன்பு நம்பிக்கையில் வியர்வை விதைக்கிறவர்கள். சுற்றம் சொந்தம் விட்டுப்பிரிந்துபோய் அயல்நாட்டில் பணி செய்கிறவர்கள்.

தமிழின் மீதும் நல்லிலக்கியங்களின் மீதும் காதல் கொண்டவர்கள். எனக்கு ஏதேனும் ஒருவழியில் உதவி செய்ய விரும்பினர். வற்புறுத்தினர். அவர்கள் மனதில் உதயமானதுதான் இம்மாதிரியான நூல் வெளியிடும் முயற்சி. துபாயில் வாழ்கிற தமிழர்களின் இலக்கியப்பற்றையும், தமிழ் நேயத்தையும் நம்பி துபாயிலும் நூல் விற்கிற திட்டம். கடல்தாண்டிய மணல் தேசங்களில் நமது தமிழ்ச்சிறுகதைகள்.

கவிஞர் அழகேசன் திட்டம் நிறைவேற்ற களம் இறங்கினார்.

அவருடன் தமிழ் நேயத்தோடும், நல்லிலக்கியப் பாசத்தோடும் பரிவுணர்வோடும் தோள் தந்த துபாய்வாழ் நண்பர்கள் மதுரை சக்தி கணேஷ், மதுரை சங்கர், பெரம்பலூர் ரத்தின குமார், இராமநாதபுரம் மாதவன், மதுக்கூர் இமாம் முகமது, சென்னை லட்சுமிபதி, சந்திரசேகரன், தஞ்சை அன்பழகன், மதுக்கூர் ஜமால் முகமது, பெரம்பலூர் வைத்தி ஆகியோர் தோள் தந்தனர்.

இவர்களுக்கு எப்படி நன்றி சொல்ல? உற்றார் உறவினரைப்

பிரிந்து அயல்நாட்டில் பாடுபடுகிற இந்த நல்நெஞ்சங்களின் நல்லுணர்வில் இரு பலன்கள் விளைகின்றன.

ஒன்று, ஏழை, எளிய கிராமத்துத் தமிழ் எழுத்தாளனுக்கு மதிப்பும் மரியாதையும் கிடைக்கிறது.

இரண்டு, கடல்கள் தாண்டிய அந்த மணல் தேசங்களில் தமிழ் நூல்கள் பரவுகின்றன. உள்ளூரைப்பற்றிய தமிழ்ச்சிறுகதைகள், உலகமெல்லாம் பரவுகின்றன. இது பாராட்டத்தக்க தமிழ்ப்பணி; இலக்கியப்பணி; முற்போக்குச் சிந்தனைப் பரவல் பணி.

இவர்கள் எல்லாம் என்பிள்ளைகள். இவர்கள் அன்பிலும், பாசத் திலும் நன்றி சொல்லக்கூட நா எழாமல் பரவசத்தில் நனைகிறேன்.

தமிழ் இவர்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறது.

இப்படியொரு நூல் வெளியிடவேண்டும் என்றவுடன், ஆர்வத்தோடும், உற்சாகத்தோடும் முன்வந்த வைகை வெளியீட்டகம், அதன் பொறுப்பாளர் சி.செல்லச்சாமி அவர்கள், என் ஆசான் திரு. எஸ்.ஏ.பெருமாள் அவர்கள்,

நல்லவிதமாக அட்டை வடிவமைப்பு செய்த ஓவியர் தி.வரதராசன், வே.பாண்டி ஆகியோர், கதைச்சேகரிப்பில் கை தந்த ஸ்ரீரசா,

அச்சு சரிபார்ப்பதிலிருந்து பக்க எண் பட்டியலிடுகிற வரை என் பிரதிநிதியாகவே நின்று ஓடிஓடி உழைத்த என் இனிய தோழனும், கவிஞரும், புகைப்படக் கலைஞரும், செம்மலர் உதவி ஆசிரியருமான சோழ.நாகராசன்,

மற்றும் வைகை அச்சக ஊழியர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளும் வணக்கமும் என்றென்றும் உரித்தாகும்.

பொறுக்கியெடுத்து தொகுக்கப்பட்ட சிறுகதைகள் என்ற முறையில் இந்த நூலுக்கு ஒரு முக்கியத்துவம் கிடைக்கிறது.

நூல் உங்கள் கையில். வாசியுங்கள். உங்கள் பாராட்டுப் பூக்களையும் வீசுங்கள் கடிதமாக. உற்சாகமூட்டும்; விமர்சனம் இருந்தாலும் எழுதுங்கள், என்னை நெறிப்படுத்தும். நன்றி!

என்றும் உங்கள்,
**மேலாண்மை பொன்னுச்சாமி**

மேலாண்மை மறைநாடு – 626127
இராஜபாளையம் வழி,
விருதுநகர் மாவட்டம், தமிழ்நாடு.

அயல்தேசமிருந்தாலும் தமிழ் மறக்காமல்
இந்த நூல் மலர நல்மனதும் தோளும்
வழங்கிய துபாய்வாழ்
தமிழ்ச்சங்க நண்பர்கள் குழு:

சின்னவன் பாரதி என்ற
திரு. பி.எஸ்.அழகேசன், பெரம்பலூர்.
" சக்திகணேஷ், மதுரை.
" சங்கர், மதுரை.
" ரத்தினகுமார், பெரம்பலூர்.
" மாதவன், இராமநாதபுரம்.
" இமாம் முகமது, மதுக்கூர்.
" லட்சுமிபதி, சென்னை.
" சந்திரசேகரன், சென்னை.
" அன்பழகன், தஞ்சை.
" ஜமால் முகமது, மதுக்கூர்.
" வைத்தி, பெரம்பலூர்.

*தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத் தமிழ்*

*இன்பதமிழ் எங்கள் உயிருக்கு நேர்...*

**பா**வேந்தர் பாரதிதாசன் குறிப்பிட்டதுபோல்.... தமிழ்மொழி ஒப்பிலாதது... இந்த நூல் வெளியிடுவதில் பெரும்பங்காற்றிய இளவல் அழகேசன் அவர்கள், இளவல் சத்யா அவர்களும் நன்றிகூறத்தக்கவர்கள். துபாயிலிருந்து நூல் வெளியீடு என்றபோது சற்று கடினமாக இருந்தது. அதை எளிமைப்படுத்தி அழகுற வெளியிட்ட இவர்களுக்கு எனது பாராட்டுக்கள் பல.

பெற்ற தாயின் மடியில் தவழ்ந்து உணவருந்தி அன்போடு வாழ்ந்தபோது தாயின் அருமை தெரிவதில்லை. தாயினை இழந்து மாற்றாந் தாயிடம் மாட்டி அவதிப்படும்போதுதான் தாயின் அருமை புரிகின்றது. அதுபோல் தமிழ்நாட்டில் இருந்தவரை தமிழின் அருமை தெரியவில்லை. தமிழ்நாட்டை விட்டு வெளிவந்து மாற்று நாடுகளில் அவதிப்படும் போதுதான் தமிழ்நாட்டின் பெருமை, தமிழ் மொழியின் சிறப்பு புரிகின்றது.

'செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே...' என்ற பாரதியின் வரிகளுக்கேற்ப அயல் நாட்டில் மாற்று மொழிகளைக் கேட்டுப் புளித்துப்போன காதுகளுக்கு இடையே தமிழ்மொழி கேட்கின்றபோது, படிக்கின்ற போது இன்பத்தேன் வந்து பாய்ந்தது போன்றே உள்ளது. இங்கே ஃன்புச்கோதரர்களின் கவிதைகளும் இடம்பெற்றுள்ளன. அயல் நாட்டில் குளிர்சாதன அறைகளில் மெத்தையில் அமர்ந்துகொண்டு குளிர்சாதன காற்றை அனுபவிக்கின்ற இன்பத்தைவிட சொந்த கிராமத்தில் மணல் வெளியில் அமர்ந்து கொண்டு தென்றல் காற்றை சுவாசித்துப் பெறுகின்ற சுவை மிகமிக இனிது....

அதுபோல் இங்கு இடம் பெற்றுள்ள திரு.மேலாண்மை பொன்னுச்சாமி அவர்களின் சிறுகதைகள் கிராமத்து வாசனைகளை அள்ளிவருகின்றன. பாத்திரங்களின் யதார்த்தங்கள், எழுத்தின் நடை, கதையின் கரு யாவும் உண்மையின் எதிரொலிகள்.

இந்த நூல் வெளியிட உதவி செய்த அனைத்து அன்பு தமிழ் சகோதரர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்க தமிழ்!

துபை.
10.12.2000

அன்புடன்,
*சந்திரசேகர்.*

இலக்கிய விரும்பிகளுக்கு வணக்கம்.

சிறுகதைச் செம்மல் மேலாண்மையாரது சிறுகதைகளைத் தொகுத்து நூலாக வெளியிடுவதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். இலக்கிய உலகம் புரியாத மொழிகளில் தேவையில்லாத சுவையோடு செல்கிறது. அவர்களுக்கு மத்தியில் மேலாண்மையாரின் படைப்புகள் எங்களுக்கு இயல்பு வாழ்க்கையை... அவற்றில் நடைபெறுகிற மௌனக் குற்றங்களை படம் பிடித்துக்காட்டுகின்றன. துபையில்... பணிக்குச் சென்று அறைக்குத் திரும்பியவுடன் நம்மை நம் ஊருக்கே அழைத்துச் சென்று அவரது படைப்புப் பாத்திரங்களோடு ஒன்றி உலாவச் செய்துவிடுவார் மேலாண்மை அவர்கள். ஓய்வு நேரங்களில், அநேக நாட்கள் இவரது படைப்புகளைப் பற்றிய பேச்சுக்களே நண்பர்கள் மத்தியில் இருக்கும். மேலாண்மையாருடைய கதைகளுக்காவே ஆனந்த விகடன் பத்திரிகை எங்கள் சத்வா பகுதியில் விற்றுத் தீர்ந்துவிடும். அவருடைய படைப்புகளில் வருகிற யதார்த்தமான... எளிய பாத்திரங்கள் பலமுறை இங்குள்ள துபை தமிழ் நண்பர்களை உணர்ச்சிவசப்பட வைத்துள்ளது.

2000ஆம் ஆண்டை முன்னிட்டுச் ஏதேனும் சிறப்பாக செய்யலாமென நண்பர்கள் கூடி விவாதித்தபோது எல்லோரது ஒருமித்த கருத்தாய் முன்வைக்கப்பட்ட விசயம்தான் மேலாண்மைப் பொன்னுச்சாமியின் சிறுகதைகள் தொகுப்பு. மெல்லிய கிராமத்தில் பிறந்து சராசரி விவசாயிக்கே உரிய கடன் சுமைகளோடு இவ்வளவு சிறப்பாகப் படைப்புகளை நம் தமிழ் உலகத்திற்கு வாரிவாரி வழங்குகிறார் என்பது ரொம்பவும் வியத்தகு விஷயம்தான். இன்றைய படைப்பாளிகள் எல்லோரும் பொருளாதாரச் சக்தியின்மையால் துவண்டு போயிருப்பது நன்றாக தெரிகிறது. அரசாங்கம் அவர்களுக்காக ஏதேனும் செய்ய முன்வரவேண்டும். மேலாண்மையாரின் படைப்புகள் மூலம் நாங்கள் புதுமைப் பித்தனையும், சமுத்திரத்தையும் காண முடிகிறது. 'தமுஎச'வின் முக்கியப் பொறுப்பில் உள்ள மேலாண்மையார் மென்மேலும் படைப்புகளை வழங்கி இலக்கிய உலகில் உயர்ந்து நிற்க வேண்டும். துபாய் தமிழ் நண்பர்கள் யாவரும் இந்த நூலை வாங்கி இலக்கிய பயனுறுமாறு வேண்டுகிறோம். நூல் வெளியிட உதவிய அனைத்து நண்பர்களுக்கும் நன்றியினை உரித்தாக்குகிறோம்.

வெல்க தமிழ்!

அமீரகம். துபை.
04.12.2000

அன்புடன்,
*சின்னவன் பாரதி* (எ) *பி.எஸ். அழகேசன்*

# உள்ளே ...


1. மானுடப் பிரவாகம் 11
2. அரும்பு 20
3. உயிரைவிட 29
4. ஒரு நகர்வுக்கு 42
5. ஊர்ச்சோறு 53
6. பூச்சுமை 64
7. அதிகாரி 75
8. கொலை 86
9. சுயம் 98
10. உள்மனிதன் 108
11. சிபிகள் 119
12. ஜீவிதத்தின் உள்வட்டம் 131
13. பூக்காத மாலை 140
14. மைதானம் 147
15. பௌர்ணமி 157
16. பூ 165
17. முக்காலும் காலுமாய் 174
18. தாய்மதி 186
19. கணக்கு 198
20. காட்டு ருசி 210
21. விரல் 222
22. வேறுவேறு 234
23. உயிர்க்காற்று 245
24. பூமிக்குப் பொறுக்காது 258
25. புது ஐயா 270
26. என் கனா 281
27. மரணம் 290
28. ரோஷாக்னி 305
29. மாயமாகும் மயில் உலகம் 318
30. தீண்டாதே 330
31. பட்டம் 339
32. கிறுக்கு 354
33. ஆட்டுக் கம்பும் பூ மொட்டும் 366

# மானுடப் பிரவாகம்

*'ராசாத்தி மகன் பாண்டி செத்துப் போனான்' என்ற அதிர்ச்சி, தீப்பிடித்த மாதிரி ஊரெல்லாம் சட்டென்று பரவியது. சாமிநாதன் செவியில் அந்தச்செய்தி நெருப்பாகவே இறங்கி மனசைச் சுட்டது. சர்வாங்கமும் குலுங்கிப்போனான்.*

*நெஞ்சைக் கவ்விய துக்கம், தொண்டைக்குள் அடைத்துக் கொண்டு நின்றது. 'நெசந்தானா?' என்று நம்ப முடியாமல் மனது திகைத்துக்கிடந்தது.*

*நேற்றுக்கூட குடுகுடுவென்று ஓடிவந்து விரலைப்பிடித்துக் கொண்டு, "மாமா, மாமா" என்றானே! அந்த ஏழுவயசுச் சிறுவனைப் பார்த்து "என்னடா" என்று அன்பு கனியச் சிரித்தானே...*

*"தங்கச்சி ஒனக்குப் பகை, தங்கச்சி மகன் ஒனக்கு உறவா?" என்று கடைத்தெருவில் யாரோ கேலி செய்தார்களே...*

*"மருமகனைக் கையிலே பிடிச்சிக்கிட்டாத் தானே... நாளைக்கு மகளை ஒசியா தள்ளிவிடலாம். சாமிநாதன் காரியக்காரன் தானப்பா".*

*அந்தப் பெரியவர்களின் கிண்டலான பலத்த சிரிப்புக்கு அர்த்தம் விளங்காமல், மாமா முகத்தைத் திகைப்பாய்ப் பார்த்தான், பாண்டி.*

*"என்னடா வேணும் பாண்டி?"*

" துட்டு மாமா.. துட்டு"

"துட்டு எதுக்குடா..? வடை வேணுமா?"

"ம்..."

அந்தப் பிஞ்சு முகத்தில் கும்மாளமிடுகிற களிப்பு. சின்ன உதடுகளில் மின்னுகிற சிரிப்பு.

உளுந்த வடையைக் கையில் வாங்கியவுடன் உலகத்தையே ஜெயித்துவிட்ட பெருமை. அந்தச்சிறுவனுக்கு. முகமெல்லாம் பூஞ்சிரிப்பாக விரிய, கால் முளைத்த பூச்செண்டாக ஓடினானே....! நேற்றுதானே....

அந்தப் பயலா செத்துப்போனான்? இதென்னடா... பேய்க்கூத்தா யிருக்கு... அந்தப் பூவைக் கிள்ளிக்கொண்டு போகச் சாவுக்கு எப்படித்தான் மனசு வந்துச்சு? இந்தச்சாவு வாயிலே மண்ணுவிழ!

சாமிநாதன் மனசெல்லாம், மழையில் நனைந்த காகிதமாக நைந்துபோய்... சோகத்தில் பொதும்பிப் போயிருந்தது.

அந்தப் பிஞ்சு முகத்தைக் கடைசியாக ஒரு தடவை பார்த்துவிட மனசு ஆவேசப்பட்டது. பரபரத்தது. ஓடத் துடிதுடித்தது. துண்டைத் தூக்கித்தோளில் போட்டுப் புறப்பட்டவன்.. அப்படியே திகைத்துப் போனான்.

'அதுக்காக... அந்தப் பயலோட வீட்டு வாசப்படி மிதிக்கவா?' மனசில் சுரீரிடுகிற உணர்வுகள். வெக்கையடிக்கிற அனலாக நினைவுகள். ரோஷமாய் எழுகிற அக்கினி.

அப்படியே சோர்வுடன் திண்ணையில் உட்கார்ந்துவிட்டான். மட்டியைக் கடித்துக்கொண்டான். மனசைக் கட்டுப்படுத்திக் கொண்டான். முறுக்கிக்கொண்ட மனசுக்குள் விறைத்துக் கொண்ட உணர்வுகள்.

போலீஸ் ஸ்டேஷனில் பயத்தில் வியர்க்கிற மனசோடு நின்ற காட்சிகள்: கண்ணில் தட்டுப்பட்ட காக்கிச்சட்டைகளுக்கெல்லாம் பயந்து குழைந்த அவலம்.

"ஏண்டா, டேய்... நீயெல்லாம் கல்லெடுத்துப் பாய்றதுன்னா... நாங்க நாற்காலிக்கு அலங்காரமாக இருக்கவா இங்கே இருக்கோம்?" என்று அதட்டலாக நெருங்கிய சப்-இன்ஸ்பெக்டர், ஓங்கிய கை மாறாமல் சப்பென்று அறைந்த அடியில் பொறி கலங்கி நின்ற பயங்கரக்கோலம்.

அந்தக் கேஸ் கோர்ட் வரைக்கும் போனால் என்ன ஆகுமோ,

ஏது ஆகுமோ என்ற அச்சத்தில்... ஸ்டேஷனிலேயே தீர்த்துக் கொள்ள யார் யாரிடமோ கெஞ்ச வேண்டிய அசிங்கம்....

ஆசை ஆசையாய் வளர்த்த – பணம் பெற்ற பசுமாட்டை, அடிமாட்டுக்கு விற்றதுபோல விற்று யார் யாருக்கோ லஞ்சமாய்க் கொடுத்துச் சீரழிந்த கொடுமை...

இதனாலெல்லாம் அடைந்த கேவலம்... இந்தத் தலைமுறைக்கே தாங்குமே. ஊரெல்லாம் கைகொட்டிச் சிரிக்கிற சிரிப்பாணியாய்... அவமானப்பட்டுத் தலைகுனிய வேண்டியதாகியிருந்ததே...

இத்தனைக்கும் காரணமான தங்கச்சி புருஷன் மூக்கையா.

ச்சே! இம்புட்டு நடந்த பிறகும்.... அந்த அற்பப்பயல் வீட்டிலே போய்க் கால் வைக்கவா? சோறு திங்கிற மானஸ்தன் எவனாவது, அவன் வீட்டிற்குப் போவானா?

மனசில் கொந்தளித்துக் கொதிக்கிற நினைவுகள், உள் காயத்தின் ரணங்களை நினைவுபடுத்துகிற வேதனை, அப்படியே சுவரில் சாய்ந்துகொண்டான்.

உள்ளே சின்ன முகம் காட்டுகிற பாண்டி; பூஞ்சிரிப்போடு எச்சில் வடிக்கிற பாண்டி; கால் முளைத்த பூச்செண்டாக ஓடுகிற பாண்டி.

வெறியோடு இழுத்த இழுப்பில் பீடியின் முகம் கங்காய் மின்னி வெடிக்க, மனசுக்குள் போலீஸ் ஸ்டேஷன், எஸ்.ஐ.அடித்த அடிகள், செத்துப்போன அம்மா அய்யாவையெல்லாம் இழுத்து நாறிப் போன வார்த்தைகளால் திட்டிய வசவுகள்.

அப்போது –

நாலைந்து பேர்கள் திமுதிமுவென்று வீட்டுக்குள் நுழைந்தனர். ஆள் ஆளுக்குச் சத்தம் கொடுத்துக்கொண்டு, கண்டன வார்த்தைகளை உதிர்த்துக்கொண்டு....

ஆளுக்கொரு இடத்தில் உட்கார, ஒரு பெரியவர் மட்டும் நின்றுகொண்டே உரிமையோடு கண்டித்தார்.

"என்ன சாமிநாதா. ஒனக்குப் புத்தியேயில்லியே. கிளம்பு. முதல்லே அங்கே போவோம்".

"எங்க மாமா?"

"ஊரே திரண்டு ஒந்தங்கச்சி வீட்டிலே கூடிக்கிடக்கு. வாயிலே வயித்துலே அடிச்சிக்கிட்டுப் புலம்பிக் கிடக்கு. கூடப் பொறந்த அண்ணன் நீ. இப்படிக் குத்துக்கல்லா இருந்தா... எப்படி?"

"அங்கே எனக்கொன்னும் சோலி இல்லியே, மாமா"

"அறிவுகெட்டதனமா பேசாதே. உறவு முறைகளுக்குள்ளே சண்டை சத்தம் வரத்தான் செய்யும். அதுக்காக, பகையைப் பத்திரப்படுத்தக்கூடாதப்பா நல்லதுலே கூடிப்போகாட்டாலும்... இழவுலே கட்டாயமா கூடிப்போகணும்"

"இது கூடிப்போற பகையில்லே மாமா. நா அனுபவிச்ச அவமானம் எனக்குத்தான் தெரியும். அவுகஅவுகளுக்கு வந்தால் தான் தெரியும், காய்ச்சலும் தலைவலியும்!"

"அதெல்லாம் வாஸ்தவம்தானப்பா. இதெல்லாம் நினைச்சுக் கிட்டிருக்கிறதுக்கு இது நேரமில்லை. சாமிநாதா, ஒரே நாள் ராத்திரியிலே வாயாலே, வயித்தாலே போய், செத்துக்கிடக்கிற அந்தச் சின்னப்பயலுக்கு நீ தாய்மாமன். நீதான் கோடித்துணி போட்டு, மயானம் வரைக்கும் ஒம் மருமகனைத்தூக்கிட்டு வரணும். சம்பிரதாயம் தெரியாதா, ஒனக்கு? புறப்படு".

"தாய்மாமன் இருந்தால்தானே, மாமா? செத்துட்டான்னு வைச்சுக்கோங்க"

"ஏலேய் சாமிநாதா, நீ மாமா சொல்றதைக் கேக்கப் போறீயா, இல்லியா".

"மாமா, நீங்க இதை விட்டுட்டு வேறு பேச்சைப் பேசுங்க, கேக்கறேன்"

ஒரே பிடி சாதனையாய் மறுத்துவிட்டான். வாய்க்கு வந்தபடி திட்டிப்பார்த்தார் பெரியவர். மற்றவர்களும் அற்பப்பயலே, என்றெல்லம் திட்டிப்பார்த்தனர். இவன் அசையவேயில்லை.

எப்படி அசைவான்?

அசைகிற மாதிரியான பகையா? மானத்தையும் பொருளையும் சேதப்படுத்தி, ஊரார் முன்னிலையில் நிர்வாணப்படுத்திய அந்த அவமானத் தீயை அவ்வளவு சுலபமாகவா மறந்துவிட முடியும்? தலைமுறை உள்ளளவுக்கும் மறக்க முடியாத கேவலமாயிற்றே...!

ஃ ஃ ஃ

சாமிநாதனின் பெரியப்பா இறந்த இழவுக்குத் தங்கச்சி புருஷன் மூக்கையா, வேட்டியும் பாலியஸ்டர் சட்டையும் எடுத்துப்போட்டி ருந்தான். மூக்கையா வழியில் ஒரு பெரியவர் இறந்த இழவுக்கு "செம்பு" எடுத்திருந்தான்.

அவனுக்குச் சாமிநாதன் வேட்டி சட்டை எடுத்துப்போடணும்

அருங்கோடை. கைக்கும் மெய்க்கும் காசில்லாத நேரம். கண்ணு முழி பிதுங்குகிற காலம். அதற்காகச் செய்ய வேண்டிய "வளமுறை"யைச் செய்யாமல் இருக்க முடியுமா?

எப்படியோ உருட்டிப்புரட்டி. கிடைத்த பணத்தில் வேட்டியும் துண்டும்தான் எடுத்துப்போட முடிந்தது. சட்டை எடுத்துப் போடவில்லை என்பதில் மூக்கையாவுக்கு மனச்சடவு, கோபம்.

"சபையிலே கரியைப் பூசிட்டானே, இவனெல்லாம் மச்சானா?" என்று சாடை மாடையாய்ப் பேசினான். இவனுக்கு ஆத்திரமாய் வந்தாலும் சகித்துக்கொண்டான். பல்லைக்கடித்துக்கொண்டான். இயலாமையைக் குத்திக் காட்டுகிற அவமானம்.

உறவில் சின்ன விரிசல். தங்கச்சி கூடப் பார்த்தால் முகத்தைத் திருப்பிக்கொண்டாள். மூக்கையன் அதற்கும் மேல்.

அப்போதுதான்... அந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

துட்டுச்சிக்கல் காரணமாகப் புஞ்சைப்பொழியில் நின்ற நான்கு வேலி மரங்களை விலைபேசி விறகுக்கு விற்றிருந்தான் சாமிநாதன். பெரியமரங்கள் அந்த வேலிமரங்கள். சாமிநாதன் புஞ்சைக்கும், மூக்கையா புஞ்சைக்கும் நடுவில் ஓடிய ஓடையில் நின்றன.

விறகுக்கு வாங்கியவன் என்ன நினைத்தானோ... சாமிநாதனையே மரத்தை வெட்டித்தரும்படி கூறிவிட்டான். வெட்டுக் கூலியாக ரூபாய் முப்பது கொடுத்துவிட்டான்.

அரிவாள் கோடாரியோடு புஞ்சைக்குப்போய்... சாமிநாதன் வேலையைத் தொடங்கினான், துரட்டியால். மேல்முட்களையெல்லாம் இழுத்து ஒதுக்கிவிட்டு. கட்டைவிறகை வெட்டத் துவங்கிய போது.

"எந்தப் பய மகன்டா விறகை வெட்டுறது?" என்ற குரல், இவனது மனசில் செருப்படியாக விழுந்தது. திரும்பிப் பார்த்தால்... மூக்கையா.

"என்ன மாப்புள்ளே, வாய் நீளுது?"

"மாப்புள்ளே... எம் புஞ்சை விறகை எதுக்காக வெட்டணும்?"

"இது ஒம் புஞ்சைக்குப் பாத்தியப்பட்டதில்லே. எம் புஞ்சை பொழியிலேதான் மரம் நிக்குது".

"உழுது உழுது பொழியை நகட்டிக்கிட்டே வந்ததுமில்லாம... மரத்தையும் வெட்டவா வரணும்? இதைப் பார்த்துக்கிட்டுச்

சும்மாயிருக்க. நா ஒன்னும் பொட்டப்பய இல்லே".

"ஊர்லே பெரியாளுக இருக்காக, கூட்டிக்காட்டுவோம். அவுக சொல்றதைக் கேட்டுக்கிடுவோம்".

"பெரியாளுக.. கிழிப்பாக! இந்த ஊர்லே நியாயம் பேசுற பெரிய மனுசன் எவன் இருக்கான்? மரத்தை வெட்டக்கூடாதுன்னா... வெட்டக்கூடாது".

"மீறி வெட்டினா..?"

"ஒருத்தனுக்குப் பெறந்த உத்தமன்னா... வெட்டக்கூடாது".

"மாப்புள்ளே வெவகாரம் பேசுறப்போ... வார்த்தை சுத்தமா பேசணும், சிந்துனா... அள்ள முடியாது".

"எனக்குப் புத்திமதி சொல்ல ஒரு பயலும் வரவேண்டாம்".

"பய பரட்டைன்னு பேசினா... மண்டை சிதறிப்போகும். ஜாக்கிரதை".

அரிவாளை ஓங்கிய இவனின் கையைப் பிடித்தான் மூக்கையா. வார்த்தைகள் தடித்தன.

சாமிநாதன் நெருப்பாகிவிட்டான்.

கைகலந்துவிட்டார்கள். மல்லுக்கட்டிப் புரண்டார்கள். விலக்கிவிட யாருமில்லை. கீழே கிடந்த சாமிநாதனின் மேலே உட்கார்ந்து மூக்கையா அரிவாளை ஓங்க...

சாமிநாதனுக்கு உயிர்ப்பறவை சிறகடிக்க....

அவன் கைக்கு ஒரு பெரிய கல் கிடைக்க ஓங்கியடித்துவிட்டான்.

முக்கையாவின் வலது நெற்றியில் ரத்தம் சள்ளென்று முகம் காட்டி வழிந்தது. அவன் போட்ட அலறலில் காடுகளில் வேலை பார்த்த ஆட்கள் ஓடிவர, இருவரையும் பிய்த்து விலக்கிவிட்டனர்.

மூக்கையா ரத்தம் வழிய சைக்கிளை எடுத்துக்கொண்டு போலீஸ் ஸ்டேஷன் போய்விட்டான்.

எல்லாம்.... நூத்தியறுபது ரூபாய்க்கு விற்றவேலி மரத்தால் வந்த வினை. உணர்ச்சியின் பாதையில் வார்த்தைகளைச் சிதறி வந்த சண்டை. ஒரு பசுமாட்டையே விற்று காக்கிச்சட்டைகளின் வாயில் போட்டதுடன் முடிந்தது.

அதையெல்லாம் இப்போது நினைத்தால்கூட... மனசின் ஆழத்திலும் கசந்துகிடக்கிறது. அவமானத்தீ எரிகிறது...

ச்சே! இதுக்குப்பிறகும் அந்த வீட்டு, வாசப்படியை நா மிதிக்கவா? வெக்கக்கேடு! அப்படிப்பட்ட மானங்கெட்ட சொந்தம் என்னத்துக்கு?

வீட்டுக்குள் விருட்டென்று நுழைகிறாள் மனைவி பார்வதி. அலை குலைய வருகிற அவள் கையில் ரெண்டு மீட்டர் மல் கோடித்துணி.

"என்ன பார்வதி, இது?"

"நீங்க போங்க. போகணும்"

"அதெல்லாம் நடக்காது"

".... இங்க பாருங்க, பெரியாளுக செய்ஞ்ச அக்ரமத்துக்கு, அந்தச்சின்னப்புள்ளை என்ன செய்யும்? சொல்லுங்க, அவுகதான் உங்களுக்குப் பகை. இந்தப்புள்ளை என்னைக்காச்சும் ஒதுங்கி நின்னதா? மாமா, மாமான்னு ஓயாமெ ஓடி வருமே, அத்தை, அத்தைன்னு என்னை வாய்நிறையக் கூப்புடுமே, இனிமே அந்தச் சத்தத்தை எங்க போய்க் கேக்கப்போறேன்... அய்யய்யோ!"

என்றவள் தாங்கமுடியாமல் கதறியழுதுவிட்டாள், பேச வாய் வராமல் தலையில் "மடேர், மடேரென்று அடித்துக்கொண்டே அப்படியே உட்கார்ந்துவிட்டாள். அவள் அழுத அழுகையில், இவனும் கலங்கிவிட்டான்.

"மாமா, துட்டு" என்று ஓடி வருவானே... தெருவில் எந்த இடத்தில் உட்கார்ந்திருந்தாலும், மடியில் உரிமையோடு ஏறி உட்காருவானே...

"உங்ககிட்டே துட்டு வாங்குனா... அய்யா அடிக்காரு, ஏன் மாமா?"

"உங்கப்பன்கிட்டேதான் கேக்கணும்".

"எங்கய்யா ரொம்ப மோசம். என்ன மாமா....."

மனசில் பூக்களை அள்ளித்தூவுகிற அந்தச் சிரிப்பு; காடைக் குருவியாய் அவன் ஓடுகிற அந்த ஓட்டம்; அந்தச் சிறுவனின் உதட்டோரங்களில் வழிகிற எச்சில்; அதில் ததும்பி நிற்கிற அன்புணர்ச்சி...

சாமிநாதனுக்குள் ஊற்றெடுக்கிற ஒரு பிரவாகம். உள்ளுக்குள் ஏதோ நொறுங்கிச் சரிகிற உணர்வு, கண்களில் உறுத்திக்கொண்டு வெளிவரத் துடிக்கிற கண்ணீர்.

"இங்க பாருங்க, உங்களுக்கு உங்க தங்கச்சியும் வேண்டாம். மச்சினனும் வேண்டாம். அவுக பகை, பகையாகவே இருக்கட்டும். அந்தப் புள்ளைக்குத் தாய்மாமன் கடமையை மட்டும் செய்துட்டு வந்துடுங்க".

அழுகையோடு அவள் சொன்ன வார்த்தையில் அர்த்தம் இருந்தது. இவன் அசைந்தான்.

"தாய்மாமன் கடமையை மட்டும் செய்துட்டு வந்துடணும். கோடித்துணியைப் போட்டுட்டு, மயானம் வரைக்கும் அந்தப்புள்ளையைக் கையிலே ஏந்திக்கொண்டு போய்க் குழியிலே போட்டுட்டு நேரா வீட்டைப் பார்த்து வந்துடணும். அந்தச் சனியன்ங்க முகத்திலே விழிக்கவே கூடாது...!"

* * *

பாண்டியைக் குளிப்பாட்டி முடித்துவிட்டார்கள். ஊரே திரண்டு நின்றது. திடீரென்று வந்த சாவின் அதிசயம் பற்றி – தாய்மாமன் தீராப்பகை பற்றிப் புலம்பிக்கொண்டு நின்றது. பெரியவர் பெருமூச்சோடு கூறினார்.

"இனிமே அந்தப்பய வரமாட்டான். தூக்குறதுக்கு வழியைப் பாருங்க. யப்பா நாவிதா, சங்கை ஊது".

"சாமிநாதன் இந்தா வந்துட்டான்".

எல்லாரும் இந்தப்பக்கம் திரும்பிப்பார்க்க, சாமிநாதன் ஒற்றை யாளாக வந்துகொண்டிருந்தான். அவன் யாரையும் பார்க்காமல், நேராகக் கிடத்தப்பட்டிருந்த பாண்டியின் பக்கம் வந்தான்.

மஞ்சள் தடவிக் குளிப்பாட்டிக்கிடந்த அந்தச் சிறுவன் சடலத்தைப் பார்த்ததும் அவனுள் உடைப்பெடுத்துப் பாய்ந்த உணர்ச்சிகள்...

நெஞ்சுக்குள் உடைந்து தொண்டைக்குள் வந்து திரண்டு கொண்ட அந்தத் துக்க உணர்வுகள்.

"அண்....ணாச்சி, எம் புள்ளை கிடக்குற கோலத்தைப் பாத்தீகளா?" என்ற கதறலுடன் தலைவிரிகோலமாய் இவன் கையைப் பிடித்துக்கொண்டு அழுகிற தங்கச்சி ராசாத்தி.

முகத்தை மூடிக்கொண்டு இறுகிக்கிடந்த மூக்கையா இவனைக் கண்டதும் உடைந்துபோய், குலுங்கிக் குலுங்கி இவன் தோளில் முகம் புதைக்கிறான். அவனது கண்ணீர் தோளில்...

முழிக்கக்கூடாத முகங்கள் ஒன்று கையில்; ஒன்று தோளில்.

இவனுக்குள் கற்றையாய் ஊற்றெடுத்த மானுடப்பிரவாகம். நொறுங்கிச் சரிந்து கிடந்த கழிசடைகளையெல்லாம் அடித்துக் கொண்டு கரைபுரள....

ஆறுதல் தேடி அலைமோதுகிற அந்த ஆத்மாக்களை அன்போடும் அழுகையோடும் அணைத்துக்கொண்டான்.

இவனும் துக்கம் தாளாமல் வெடித்துக் கதறிவிட்டான்!

*'கல்கி' தீபாவளி மலர் 1987*

# அரும்பு

**சா**ரல் காற்று குளிர்ச்சியை வாரியிறைத்தது. கூதலடிக்கிறது. அப்படியே மூடிக்கொண்டு முடங்கிக் கொள்ள ஆசைப்படுகிற குழந்தை மனசு. 'நிமாண்ட் நாழியிலே ரெடியாகு'. சாட்டைக் குச்சியாக மனசுக்குள் குத்துகிற ஏஜெண்டின் குரல்.

உறக்கத்திற்கு ஏங்கித் தவித்த மனசை, அம்மாவின் இருமல் சத்தம் திசை திருப்பி வழிநடத்தியது. அடுப்புச் சாம்பலில் பல்லைத் தேய்த்தாள். கஞ்சியைக் குடித்தாள். தலையில் எண்ணெய் வைத்து, பின்னிக் கொண்டாள். கணக்குச் சிட்டையையும், சில்லறை டப்பாவையும் எடுத்துக்கொண்டாள். சோறுவைத்த தூக்குச் சட்டியை நீட்டினாள், வேலாயி.

பாவம். அம்மா! நோய் அவளைத் துளைத்துத் துவட்டியெடுத்து விட்டது. தசையையெல்லாம் கரைத்துக்குடித்துவிட்டு, எலும்பும் தோலுமாக்கி விட்டது. நிற்கக்கூடத் தெம்பில்லாமல், இடது கையால் சுவரைப்பிடித்துக்கொள்கிறாள்.

"நேத்து எம்புட்டுக் கட்டை அடுக்கினே, செல்லம்?"

"இருவத்தி ஒண்ணுமா"

"இன்னிக்கு சனிக்கிழமை. நாளை லீவ், திங்கட் கிழமை என்ன செய்யப்போறே?"

அடிபட்டவளாய்த் திகைத்து நிமிர்ந்தாள், செல்லி.

சட்டென்று வாடிக்கறுக்கிற பிஞ்சு முகம். சிறு கண்களில் கலக்கம். இமைகளில் ஈர மினுமினுப்பு. எதுவும் சொல்லத் திசையற்றுப் போய், மௌனத்தில் உறைந்தாள்.

வேலாயியின் குலை பதறியது. பெற்ற மனது பதைத்தது. மகளின் தலையை அன்புடன் தடவினாள். அவள் கண்களில் மாலை மாலையாகக் கண்ணீர்.

"ஏஜெண்டுத் தம்பி கண்டிசனா சொல்லிருச்சே" மனசைப் பிசைகிற வேதனையோடும் புலம்பினாள், வேலாயி. தாயைப் பார்த்து மனம் கலங்கி, பீதியுடன் நிற்கிற எட்டுவயதுச்சிறுமி செல்லி.

"செடிக்குச் செடியா உக்காந்து பறக்கிற தட்டானைப்போல... தெருவிலே ஓடி விளையாட வேண்டிய சின்ன அரும்பு. விடியுற துக்கு முந்திப்போய், பாடுபட்டு, பொழுதடைஞ்சு இருட்டுனப் பிறகு வீடு வந்து சேருகிற கொடுமை!"

மனக்குமுறல் தாளாமல், மார்பில் மடேரென்று அடித்துக் கொண்டாள் வேலாயி. "அடப் பாதரவே, கூத்துவன் என்னை ஒடிச்சுப்போட்டுட்டு, இப்படிக் கூத்துப்பார்க்கானே! கண்ணு முழியாத இந்தக் குஞ்சு ஒழைச்சுக்காலம் ஓட வேண்டியதா யிடுச்சே. அந்த 'ஒழக்கரிசிச் சீவன்' இருந்திருந்தா... நமக்கு இந்தக் கதி வந்திருக்குமா?

வேட்டு வெடித்த கிணற்றுப்பாறையில், நசுக்குண்டு இறந்து போன புருசனை நினைத்தாள், அந்த இழப்பின் கனபரிமாணம், நொந்துபோன இந்த நேரத்தில் முழுசாகத் தாக்கியது. விசும்பினாள்.

அழுது கதறுகிற அம்மாவைப் பார்க்கச் செல்லியின் மனம் சகிக்கவில்லை. முட்டுகிற விம்மலை அடக்கிக்கொண்டாள்.

"நேரமாச்சும்மா... நா போகட்டா?"

"போறீயா? போய்ட்டு வா, கண்ணு, யார் கூடயும் சண்டை கிண்டை போடாம, கருத்தா வேலையைப் பாரம்மா. எல்லாத் தையும் எடுத்துக்கிட்டீயா?"

தலையசைத்து விட்டு வாசல்படியைத் தாண்டிய செல்லியை இருட்டு அப்பிக் கொண்டது. 'நாய் குரைக்குமோ...' பயத்தில் திகைத்துப் போய்த் தேங்கி நின்றாள். நல்லவேளை. மேலத்தெரு முத்துலட்சுமி வந்துவிட்டாள்.

"வாரீயா?"

துணை கிடைத்துவிட்டது.

"திங்கட்கிழமைக்கு ஒண்ணும் பதில் சொல்லாமப்போகுது. புள்ளை, என்ன செய்யப் போறாளோ..." அம்மாவின் புலம்பல் சத்தம், காலை நேர அமைதியில் துல்லியமாகத் துரத்துகிறது.

தெருவில் ஒரு சுடு குஞ்சுகூட விழித்திருக்கவில்லை. நாய்கள் கூட கூதலடிக்காத இடம் பார்த்துப் போய் முடங்கிக்கொண்டன. அத்துவானக் காட்டில், ஒத்தையில் நடப்பதுபோலிருந்தது. செல்லிக்கு.

கிழடி வானம் முகம் சிவக்கத் தொடங்கியது. விடிவெள்ளியைச் சாரல் மேகம் ஒளித்துக்கொண்டது.

கிராமத்தையே கதிகலங்கடிக்கிற மாதிரி... விடாத ஓங்காரமாய் ஹாரன் சத்தம். பஸ் வந்துவிட்டது. செல்லி நடையை எட்டிப் போட்டாள். முத்துலெட்சுமி நடைக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. சிறுமி குட்டோட்டமாய் ஓடினாள்.

ஏற்கெனவே வந்திருந்த பிள்ளைகள், பஸ்ஸூக்குள் ஏறிப் படுத்திருந்தன.

ஓட்டமும், நடையுமாக ஓடி வருகிற இவர்களைப் பார்த்து கண்டக்டர் கோபமாய் அதட்டினார்.

"என்ன, தேரு மாதிரி ஆடியசைஞ்சி வாரீக? விருட்டுன்னு வாங்க, இன்னும் ஏழு ஊர்கள்லே புள்ளைகளை ஏத்திக்கிட்டு, ஆறு மணிக்குத் தீப்பெட்டியாபீஸ் போய்ச்சேர்ந்தாகணும்".

அந்த அதட்டல் உருட்டலெல்லாம் செல்லி மாதிரியான சிறுமிகளிடம்தான். தாவணி போட்ட முற்றிய சிறுமிகளிடம் பூப்பெய்திய இளம் பெண்களிடம் தொனியே மாறிவிடும். அவர்களிடம் பேசும்போது, எத்தனை நெளிவு... என்னமாயச் சிரிப்பு.. எவ்வளவு குழைவு!

அதைப்பார்த்தாலே.... செல்லிக்குப் பற்றிக்கொண்டு வரும். கண்டக்டர் கழுத்துக்கு மேல் ஓநாய் மூஞ்சி இருப்பதுபோல் மனசுக்குள் பயமாகவும், வெறுப்பாகவும் இருக்கும். காறித் துப்பணும்போல மனசில் தோன்றும்.

தீப்பெட்டி யாபீஸூக்குள் போய்விட்டால்.... இது போல நிறைய ஓநாய் மூஞ்சிகள்... எச்சில் வடிகிற நாக்குகளோடு ஓநாய்கள்.

செல்லி பஸ்ஸூக்குள் ஏறி உட்கார்ந்தாள். தாராளமாய் இடம் கிடந்தது. அடுத்த ஊரிலேயே சீட்டுகளெல்லாம், நிரம்பிவிடும்.

அப்புறம் உள்ள ஊர்களில் ஏறுகிற பிள்ளைகளெல்லாம் ஓவர்லோடுதான்!

மாதாங் கோவில்பட்டியைத் தாண்டுகிற போது, பஸ்ஸுக்குள் மூச்சுப்போக இடமிருக்காது. புளிச்சிப்பமாகப் பிள்ளைகள் திணிக்கப்பட்டு, கிட்டிக்கப்பட்டு, வியர்த்து, கசங்கி, திணறி.... சில சமயங்களில் ஒன்றிரண்டு பிள்ளைகள் மயக்கமே போட்டுத் துவண்டுவிடும்.

மந்தையாடுகளைப் பற்றிக்கொண்டு வருவதைப் போல.... குழந்தைகளை நகர்த்திக்கொண்டு பஸ்ஸுக்குள் அடைத்தார். ஏஜெண்ட் தலைகளை எண்ணிப்பார்த்தார்.

"ஒண்ணு குறையுதே, யாரு?"

"ஆவுடைச்சி".

"அவதான் சடங்காகிட்டாளே, இன்னும் பானைஞ்சு நாளுக்கு வரமாட்டாளே..." சொல்லிவிட்டுக் கண்டக்டர் அசிங்கமாகக் குறுநகை செய்தான்.

"ஆமா... நாந்தான் அயந்துட்டேன், அப்பச் சரி.. வண்டி போகலாம், ரைட்" ஏஜெண்ட் இறங்கிக்கொண்டார்.

டிரைவர், சாமி படங்களை – ஸ்டீரிங்கை – எல்லாம் கும்பிட்டு விட்டு ஸ்டார்ட் பண்ணினார். கிடங்கும் மேடுமான சாலையில் இடமும் வலமுமாய்ப் பஸ் ஆடியசைந்து குலுங்கும்போதெல்லாம்... சிறுபிள்ளைகள் குதூகலமாகச் சிரித்தனர்; கை தட்டினர்; "ஹோ...ஹோ" வென்ற மழலைக் கூச்சல்கள்.

எரிச்சலில் நெருப்பாகச் சீறினார், டிரைவர்.

"ஏய் குட்டிப் பிசாசுகளா! என்ன இளிப்பு வேண்டிக்கிடக்கு? வாயைப் பொத்திக்கிட்டுச் சும்மா கிடங்க".

சட்டென்று பஸ்ஸுக்குள் ஏறிக்கொண்ட மௌனத்தின் அழுத்தத்தைத் தாங்க முடியாமல்...... டிரைவர் கண்டக்டருடன் பேச்சுக்கொடுத்தார்.

ஜன்னலோரம் உட்கார்ந்திருந்த செல்லி, வெளியே இருட்டையே பார்த்துக்கொண்டிருந்தாள். அவளை 'திங்கட்கிழமை' மிரட்டிக் கொண்டிருந்தது. விலகிச் செல்லப் பாதையில்லை. வழிமறித்துக் கொண்டு நிற்கிறது. மென்னியைப் பற்றிக்கொண்டு இறுக்குகிறது.

ஃ ஃ ஃ

முந்தா நாள். ராத்திரி எட்டுமணி. இலேசாகச் சாரல் தூறியது. பஸ்ஸிலிருந்து இறங்கிய செல்லி, ஓட்டமும் நடையுமாய் ஓடி வீட்டுக்குள் வந்து விழுந்தாள். பேயின் இறுகலான பிடியிலிருந்து விடுபட்டுத்தாயின் மடியில் வந்து விழுந்த ஆறுதல். மனசுக்குள் சுகமான ஆசுவாசம்.

என்னமோ விசாரித்த அம்மாவுக்குக் கூடப் பதில் சொல்லாமல், மூலையில் சரிந்து உட்கார்ந்துகொண்டு விரலைச் சூப்பினாள். அதட்ட ஆளில்லாத இடம். "நாய்களா, குச்சியடுக்காம என்ன செய்றீக?" என்று கடித்துக்குதறுகிற நாய்கள் இல்லை. வீடு, தாய் மடி போன்ற வீடு. சுதந்திரமாகச் சுகமாக விரலைச் சூப்பினாள்.

அம்மாவைத் தேடிக்கொண்டு ஏஜெண்ட் வந்தார்.

"யக்கா..."

"என்னய்யா, தம்பி" தள்ளாடித் தவித்து எழுந்தாள், அம்மா.

"செல்லி ஏதாச்சும் சொன்னாளா?"

"இல்லியே... என்னமும் நடந்துபோச்சா?" பதறிப்பதைக்கிற அம்மா. ஆறுதல்படுத்துகிற ஏஜெண்ட், விரலைச் சூப்புகிற இன்ப மயக்கத்தோடு பேச்சைக்கேட்டுக்கொண்டிருந்தாள் செல்லி. மனசுக்குள் பூரான் ஊர்கிற மாதிரி... மெல்லிய திகில்.

"யக்கா, இப்போ....குளோரைடு கிடைக்க மாட்டேங்குது. ஏகத் தட்டுப்பாடு, நிறையத் திப்பெட்டியாபீஸ்க மூடிக்கிடக்கு. ஒண்ணு ரெண்டு ஆபீஸ்கள்லேதான் வேலை நடக்குது. வேலைக்கு வர்ற புள்ளைகளைக் குறைக்கச் சொல்லி எங்க மொதலாளி நச்சரிக்காரு".

வேலாயி திகிலோடு பார்த்தாள். இருமல் வரப்போவதை உணர்கிற போது மனசில் ஏற்படுமே, அதே படபடப்பும், பீதியும்!

"ஆனா... நம்ம கிராமங்கள்லே மழை தண்ணியில்லே, வறட்சி, வெள்ளாமை வெளைச்சல் இல்லை. கூலிச் சனங்களுக்குக் காட்டுவேலை ஒண்ணுகூடக் கிடைக்கல்லே. ஆபிஸ் வேலைக்கு நா வாரேன், நீ வாரேன்னு இவுக அலைமோதுறாக".

"நிலைமை அப்படித்தானே இருக்கு, தம்பி"

"இதுலே இன்னொரு சிக்கல், 'சின்னப்புள்ளைகளை வைச்சு' வேலை வாங்கக்கூடாதுன்னு ஏதோ சட்டம் இருக்காம். அப்பப்ப அதிகாரிமார்க வந்து, புள்ளைக வேலை செய்றதைப் பாத்துட்டு, ஆயிரக்கணக்குலே அவராதம் போட்டுடுறாங்க".

"அடக் கொடுமையே! பெத்தவுகளைக் காப்பாத்தாத சட்டம். புள்ளைக மேலே இரக்கப்பட்டு, திங்குற சோத்துலே மண்ணைப் போடுதாக்கும்? புள்ளைகளைக் கொடுமைப்படுத்த பெத்த தாய்க்கு ஆசையாகவா இருக்கும்? வவுத்துக் கொடுமை... வறுமைப் பொழைப்பு... வேற புகல் இல்லியே! இதையும் மறிக்கிறாகளாக்கும். பாவிப் பயக?"

"ஆமாக்கா. மொதலாளி கண்டிசனாச் சொல்லிட்டாரு. இந்த வாரத்தோட, நம்ம செல்லி மாதிரியான சின்னப் புள்ளைகளை யெல்லாம் நிறுத்தியாகணுமாம்".

எதிர்பார்த்த இடி வேலாயிக்குள் இறங்கியே விட்டது. உள் மனசின் ஆழம்வரை பரவிப் பாய்கிற நடுக்கம். வயிற்றுக்குள் தீக்கோலைச் சொருகுவது போலிருந்தது.

மாடு வைத்து விவசாயம் பார்த்த புருஷன். மாட்டுக்கும் மேலாக ராவும் பகலுமாக உழைத்த புருஷன், எத்தனை விளைய வைத்தாலும், வருஷா வருஷம் மிஞ்சி நின்ற கடன்.

நிலத்தை விற்றுவிட்டுக் கூலி வேலைக்குப் போன புருஷன் கிணறு வெட்டிக் கொண்டிருந்தபோது வெடித்த வேட்டில், கருங்கல்லை ரத்தமாக்கிவிட்டுப் போய்ச்சேர்ந்த புருஷன்.

நாதியற்றுப்போன குடும்பம். ஓடிவந்து பற்றிக்கொண்ட நோய், உடம்பை ஒடித்துக் கட்டிலில் துடிக்கப்போட்டுவிட்ட நோய்.

செல்லியும் வேலை பார்க்கப்போக முடியாமல் போனால்... வீட்டில் எப்படி அடுப்பு புகையும்?

நெஞ்சை முட்டிப் பிளக்கிற சோகம். தாட்சண்யம் பாராமல் சப்பென்று அறைகிற அவலம். கண்ணுக்குள் குத்தலெடுக்க, மாலை மாலையாகக் கண்ணீர், உதடுகள் நடுங்கித் துடித்தன.

"தம்பி, வாரத்துக்குத் தொண்ணூறு ரூவா இந்தப் புள்ளை கொண்டுவருது. இதுலேதா ரெண்டு ஜீவனோட ஜீவனம் நடக்குது. இதுக்கு ஒரு மாத்து யோசனை இல்லியா...ய்யா?"

"இருக்கு.... ஆனா, நீங்க செய்யணுமே?"

"சொல்லுய்யா..."

"நம்ம செல்லி சின்னப் புள்ளைதா. இருந்தாலும் சும்மாவாச்சும் தாவணியைச் சுத்தி அனுப்புங்க, மத்ததை நா பாத்துக்கிடுதேன். யக்கா, மனசிலே ஞாபகம் வச்சுக்கங்க, தாவணி போட்டா, திங்கட் கிழமை வரலாம். இல்லேன்னா... நின்னுக்கிட வேண்டியதுதான்".

ஏஜெண்ட் போய்விட்டார். வேலாயி வேரறுந்தவளாக அப்படியே சுவரில் சாய்ந்தாள். குத்துக்கால் வைத்துச் சரிந்து உட்கார்ந்துவிட்டாள், குமுறிக்குமுறிச் சத்தமில்லாமல் அழுதாள். உடம்பெல்லாம் நடுங்கிக் குலுங்குகிற கோரம்.

"இப்படியும் ஒரு வங்கொடுமையா? அததுக்குரிய வயசு வராமெ, விரலைச் சூப்புற புள்ளைக்கு எப்படித் தாவணி போடுறது? ஊரையழைச்சு, உறவைக் கூப்பிட்டு, விருந்து வைச்சு, தாய்மாமன் சீர் வரிசையோட, கூடுன கூட்டத்துலே போட வேண்டிய தாவணியை.... சட்டத்தை ஏமாத்துறதுக்காக எப்படிப்போட? ஐயோ... எம்புள்ளைக்குமா. இந்தக் கதி? அடக்கடவுளே, எளியவங்க பொழைப்பை எதுக்கு விதி, இப்படி பிய்ச்சுப் பிடுங்கிப் போடணும்?"

உள் மனசைச் சுட்டுப்பொசுக்குகிற அக்கினிக் கொழுந்துகளாக நினைவுகள், நினைக்க நினைக்க உள்ளுக்குள் ஏதோ ஒன்று உடைந்து நொறுங்குகிறது..... கோவென்று வெடித்து அழத் துவங்கியபோது, இருமலும் ஆரம்பித்துவிட்டது. வாடிப்போன மரத்தை ஆட்டிப்பிடுங்குகிற புயலாக, இருமல், இருமல்... இருமல்கள்...

அம்மாவின் அழுகையையும் இருமலையும் பார்க்கப் பார்க்கச் செல்லிக்குள் அழுகை விம்மிக்கொண்டு பீறிடுகிறது. நாசி நுனி துடிக்கிறது. காந்தலெடுக்கிறது. கண்களில் ததும்பி திரைபோடுகிற கண்ணீர்....

அந்தப் பிஞ்சை, தாவணி அச்சுறுத்தியது. உள் மனசின் மெல்லிய ஜவ்வுகளைப் பற்றி இழுத்தது. நினைத்தாலே திகிலில் மனசு துடிக்கிறது.

பூப்பெய்தாத பெண்ணைக் கல்யாணத்திற்கும் உடலுறவுக்கும் நிர்ப்பந்தப்படுத்துகிறபோது ஏற்படுவதைப் போல... வினோதமான அவமான உணர்ச்சி, செல்லியைக் கசக்கியது.

இயல்பாக நிகழ வேண்டிய மலர்ச்சியை.. ஊர் வேஷத்திற்காகக் கசக்கிப்பிழிந்து மலர வைக்கிற வேதனை. தாயிடம் கூடச் சொல்லியழ முடியாத ரகசிய உணர்ச்சி யவஸ்தை. அவளைத் திக்குமுக்காட வைக்கிற கொடிய அவஸ்தை.

'ஊஹூம்...ம்....செத்தாலும் சரி... இப்ப நா தாவணி போடவே மாட்டேன். சம்மதிக்கவே மாட்டேன். என்னாலே முடியாது.... முடியவே முடியாது... அதைவிட உசுரை வுட்டுருவேன்...

* * *

ஞாயிற்றுக்கிழமை கனமாய் நகர்கிறது. அந்த இரண்டு ஜீவன்களையும் மௌனச் சோகத்தில் அரைத்துக்கொண்டு நத்தையாக ஊர்கிறது.

திகிலும் பீதியுமாய்... வேதனையும் விசும்பலுமாய் வீடு. மூன்றாவது ஆளாய் வந்து உட்கார்ந்துகொண்டு பேயாட்டம் போடுகிறது. அவலம்.

முகம் செத்துக்கிடக்கிற மகளைப் பார்த்தாள் வேலாயி. சிறிய கண்களில் பீதி. வெட்டுண்ட பல்லிவாலாகத் துடிக்கிற இமைகள். பார்க்கவே பாவமாக இருந்தது. 'இந்த அரும்பை அடகுவைச்சா... நாம உசர்வாழணும்?"

செல்லியும் அம்மாவையே பார்த்தாள். அம்மா, தாவணி போடச்சொல்லி வற்புறுத்தினால்... மறுத்துவிடத் தயாராக இருந்தாள். பணிந்துவிடக்கூடாது என்ற வீறாப்பு. மனசுக்குள் ஒரு விறைப்பு.

"செல்லி..."

"என்னம்மா?"

"நாளை நீ வேலைக்கு போகவேண்டாம்மா..."

"........?"

"ஒன்னைக் கேவலப்படுத்தி அடகுவைக்க, மூளியலங்காரம் பண்ணி... நா கஞ்சி குடிக்க வேண்டாம். நாம உசுரு வைச்சு இருக்கவும் வேண்டாம்மா..."

"ஏம்மா?"

"பூக்க வேண்டிய அரும்பைப் புடிச்சு நசுக்கி மோந்து பாக்குற பாவத்தைச் செய்றதுக்கு, இந்தத்தாய் மனசுலே தைரியமில் லேம்மா".

"..."

"விதி நம்மளை எப்படி விட்டிருக்கோ... அப்படியே நடக்கட்டும். கண்ணு. நீ நாளையிலேருந்து வேலைக்குப் போகவேண்டாம்".

தாயின் முகம் முன்னைவிடப் பிரகாசிப்பது போலிருந்தது செல்லிக்கு. அந்தக் கண்களில் பொங்கித் ததும்பிய பரிவு... வறுமையில் நீர்த்துப்போகாத தன்மானம்.... வாழ்க்கைக்குப் பணிந்துபோய்விடாத பாச வைராக்கியம்.....

செல்லி துவண்டு விட்டாள். மனசுக்குள்ளிருந்த விடைப்பு....

விறைப்பு, வீறாப்பு எல்லாம்..... தாயின் பாசக்கண்ணீரில் நனைந்து... மனசே தளர்ந்துபோய்....

அடிபட்டவளைப் போல கோவென்று அழுதாள். புறங்கையால் கண்ணைக் கசக்கிக்கொண்டு விம்மி விம்மியழுத அந்தக் கண்ணு முழியாத பச்சை மண்ணை, மடியில் இழுத்துப்போட்டுக்கொண்டு கதறியழுதாள் வேலாயி.

* * *

முத்துலட்சுமி இருட்டில் வந்து கொண்டிருந்தாள். வாசலில் திகைத்துப்போய் செல்லி.

"என்ன செல்லி, வேலைக்கு வரலியா?"

"வாரேன்" உயிரில்லாமல் முனங்கினாள்.

"தாவணி?"

"மடிச்சு கையிலே வைச்சிருக்கேன். பஸ்கிட்டே போய் போட்டுக் கணும்" சத்தமில்லாத தெருவில், சத்தமில்லாமல் நடந்தனர்.

இழவு வீட்டுச் சங்காக அலறுகிறது தீப்பெட்டியாபீஸ் பஸ்சின் ஹாரன்.

ஒரு பிரேதத்தைப்போல..... அடங்கிப்போன சலனங்களுடன் நடந்தது. அந்த அரும்பு.

*'கல்கி" ஆகஸ்ட் 1989 சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு*

# உயிரை விட...

"பொழுதாவுது. கஞ்சியை ஊத்து."

பூச்சன் மாரியம்மாளைத் துரிதப்படுத்தினான். லங்கோடு கொடியில் கிடந்தது. எடுத்து இடுப்பில் மாட்டிக்கொண்டான். அதற்கும் மேல் வேட்டியை கட்டிக் கொண்டான்.

"என்ன, இன்னும் சோறு வைக்கலியா?" குரலில் அதட்டல் தொனித்தது. ஏறிட்டுப் பார்த்தாள். அவளது பார்வையில் பயம் தெரியவில்லை. எரிச்சல் அனல் வீசியது. "எதுக்கு இப்படி பறக்குறே? வேற வேலைக்குப் போகணும்னா... தள்ளிவுட்டாலும் அசையமாட்டே. கூரைமேயனும்னா... இப்படி குதியாளம் போடுதியே... எதுக்கு?"

"இந்தா... இந்த மயிரெல்லாம் ஒனக்கெதுக்கு? பேசாம கஞ்சியை ஊத்துன்னா... ஊத்த வேண்டியது தானே" என்று சத்தம்போட்ட பூச்சன் தொடர்ந்து தனக்குள் பேசிக்கொள்வதைப்போல சலிப்போடு முணுமுணுத்துக் கொண்டான். "ஒரு ஜோலிக்குப் போகணும்னா... இவகிட்ட பாதி உசுரைக் கொடுக்க வேண்டியிருக்கு."

அதற்குள் தட்டுப்பலகையையும், ஆக்கைக் குச்சியையும் எடுத்து வெளியில் வைத்துக் கொண்டான். அவனுக்குள் ஒரு உற்சாக நதி பிரவாக மெடுத்து ஓடிக்கொண்டிருந்தது.

இவள் சொல்வது நிஜம்தான். வேறுவிதமான கூலி வேலைக்குச் செல்ல வேண்டிய நாட்களிலெல்லாம் அலுத்துச் சலித்துக் கொள்வான். விருப்பமேயில்லாமல் நெட்டித் தள்ளுகிற ஜீவன நிர்ப்பந்தத்திற்காகத்தான் நகருவான். ஆனால், கூரை வேய்தல் வேலை வந்துவிட்டால்...

அவனுக்குள் ஒரு சந்தோஷமான ஈடுபாடு வந்துவிடும் மனசுக்குள் கும்மாளமிடும் குதூகலம், அவனது துறுதுறுத்த செயல்களில் முகம்காட்டிச் சிரிக்கும். உற்சாகப் பரபரப்பில் காலில் சக்கரம் கட்டிக்கொண்டு அலைவான். அவனுக்கே அந்த வித்தியாசம் புரியத்தான் செய்கிறது. அவனும் பல தடவைகள் யோசனை பண்ணிப் பார்த்திருக்கிறான்.

'கூரை மேய்ச்சல்லே மட்டும் நமக்கு ஒரு பிடிப்பு, ஆர்வம் இருக்கே, இது ஏன்? என்ன காரணம்?'

மற்ற கூலி வேலைகளெல்லாம் எந்தக் கிராமத்து உழைப்பாளியும் செய்துவிடக்கூடிய சராசரித்தனமானது. ஆனால், இந்தக் கூரைவேய்தல், ஊருக்கு ஓரிருவருக்கு மட்டும் தெரிந்திருக்கக்கூடிய தனித்துவமான உழைப்புக்கலை என்பதாலா இந்தப் பிடிப்பு?

மற்ற வேலைகளில் பிறரால் ஏவப்பட்டும், கண்காணிக்கப் பட்டும் செய்வதைப் போலல்லாமல், இதில் பிறரை ஏவுகிற வனாகவும் கண்காணிக்கிறவனாகவும் இவன் திகழ முடிகிறதே... அதனாலா?

அவனுக்குப் பிடிபட்டதில்லை.

ஊற்றிவைத்த கம்மங்கஞ்சியை அள்ளிக் குடித்தான். கம்மங் கஞ்சிக்கு 'கடிச்சிக்கிட' அவனுக்கு எப்போதும் தேவைப் பட்டதில்லை.

வாயைக் கழுவித் துடைத்துக் கொண்டான். கொடியில் கிடந்த அழுக்கான சட்டையின் பையைத் துழாவினான். ஒரு சிகரெட் கிடந்தது.

"மாரியம்மா, தீப்பெட்டி எடும்மா."

அவள் மீண்டும் ஏறிட்டாள். கண்டனத்துடன் பார்த்தாள்.

"குடிக்கிற கஞ்சிக்கு சிரெட்டுதான் கேக்குதோ? கொத்து வேலைக்காரன் இப்படி சிரெட்டா ஊதுனா... கட்டுபடியாகு மாய்யா? ஆச்சி நூக்குற நூலு அய்யரு பூணூலுக்குத்தான் வரும்."

"கத்தரிச் சிரெட்டா குடிக்கேன்...? எட்டு பைசா சிரெட்டுதானே?"

"துட்டை வுட்டுத்தள்ளுய்யா. உடம்பு என்னத்துக்காகும்? ஒன்னை வச்சுதானேய்யா எங்க ஆட்டம்? சுவரு இருந்தாத்தானே சித்திரம் வரையமுடியும்..."

"புள்ளைங்களை எங்க? காணலியே..."

"தெருக்காட்டுலே வெளையாடுங்க"

"சரி சரி, தீப்பெட்டியெ எடு. நேரமாகுது."

பற்ற வைத்துக்கொண்டான். காந்தலான அந்தப்புகை, உள்ளுக்குள் மோதி பரவி வெளிவரும்போது, மனசுக்குள் ஒரு சுகம் நுழைகிறது. இதமாகத் தழுவிக் கொள்கிறது.

"சரி, நா போயிட்டு வாரேன், ம்?"

"பாத்துப்போயா. மசக்கம் கிசக்கம் வராமப் பாத்துக்கோ..."

ஏதோ ஊருக்கு விருந்துக்குச் செல்பவனைப்போல ஆர்வத் தோடும் சந்தோஷக் களிப்போடும் புறப்பட்டான். தட்டுப்பலகை யையும் ஆக்கைக் குச்சியையும் தோளில் வைத்துக்கொண்டு நடக்கிறபோது, பெருமிதத்தில் கூடக்கொஞ்சம நிமிர்ந்தான். அவன் விட்ட புகையை ஆவணி மாதத்து மெலிந்த காற்று உருத்தெரியாமல் தன்வயமாக்கிக் கொண்டது.

* * *

சோலையப்ப நாடார் முதல் நாளே கூரையைப் பிரித்துப் போட்டிருந்தார். பூச்சனைப் பார்த்ததும் அவர் முகம் மலர்ந்தார். சந்தோஷத்துடன் வரவேற்றார். "வா பூச்சா, வாவா... வெள்ளனத் துலேயே வந்துட்டீயே."

"ஆமா முதலாளி, மேச்சலைக் காலாகாலத்துலே முடிச்சிட்டுப் போக வேண்டியதுதானே."

அவர் மிகவும் பூரித்துப் போய்விட்டார். பலமாக உபசரித்தார்.

"இந்தா, இந்தக் காபியைக் குடி., டேய் சேகர், கடையிலே போய் பூச்சனுக்கு நாலு சிரெட்டுவாங்கிட்டு வா!"

"ஆக்கை முடியெல்லாம் நனையப் போட்டுட்டீங்களா, முதலாளி?"

"நேத்து ரவ்வே போட்டாச்சு, பூச்சா"

"ஆக்கை புடிக்குறதுக்கு யாரைக் கூப்பிட்டுருக்கீக?"

"நம்ம தீக்கொளுத்தி மூர்த்தி"

"அவரையே போய் மொச்சிக்கட்டை வெட்டிட்டு வரச்சொல்லி ருங்க. முகடுபோடுறதுக்கு வேணுமில்லே?"

காபி என்ற பெயரில் வழங்கப்பட்ட தேநீரின் ருசியில் மனசு லயிக்க, அண்ணாந்து பார்த்தான்.

கூரையைச் சுமந்து நின்ற கைமரங்களும், குறுக்கு வரிச்சுகளும், வல்லடைக் கட்டுகளும் நன்றாகத் திருத்தியமைக்கப்பட்டு, கச்சித மாக இருந்தது. நிறைய புதிய நார்கள் கட்டப்பட்டிருப்பதைக் கவனித்தான்.

காலை வெய்யில் வஞ்சகமில்லாமல் வீட்டுக்குள் சுதந்திரமாக விழுந்தது. மரக்கட்டுகளின் நிழல்கள் சதுரம் சதுரமாகச் சுவர்களில் தெரிந்தது. வீட்டுக்கு வெளியே வந்தான்.

நேற்றுப் பிரித்த கூரையில் சேதப்படாமலிருந்த கம்பத் தட்டைகள் ஒதுக்கி, பிரிக்கப்பட்டு, சின்னச்சின்ன முடிகளாகக் கட்டப்பட்டு அடுக்கப்பட்டிருந்தன. நாலு வருஷப் புகையில் அந்தத் தட்டைகள், செங்கலிச்ச நிறமாக மாறிப்போயிருந்தன.

"போனமாசம் அறுத்த புதிய கம்பந்தட்டை பச்சை உலர்ந்து போய், சிமெண்ட் நிறத்தில் அழகாகக் கிடந்தது.

வீட்டைச் சுற்றிலும் ஒழுங்கில்லாமல், குவிந்துக்கிடக்கிற இந்தப் பழசு புதுசு தட்டைகளெல்லாம், பூச்சனின் கைவரிசையால், வீட்டின் மேல் கூரையாக... பட்டாளத்துச் சிப்பாய்களாக... ஒழுங்கு செய்யப்பட்டு விடும். நாலு வருஷத்துக்கு இனிக் கவலையில்லை. மழையோ, காற்றோ, வெய்யிலோ எந்தக் கொம்பனும் நெருங்க முடியாமல் இந்தப் பட்டாளத்துச் சிப்பாய்கள் பார்த்துக் கொள்வார்கள்.

"சரி, தீக்கொளுத்தி வந்துட்டாரா? மேலே ஏறுவோம். முடி யாரு எடுத்துப் போடுறது?"

"ஏன், நானே எடுத்து எறியிறேன்."

"அப்பச்சரி"

ஏணியில் கால் வைப்பதற்கு முன், 'குலதாம்பரத்தை' மனதிற்குள் நினைத்துக் கொண்டான். "மேய்ச்சலுக்கு நா பொறுப்பு. எனக்கு நீதான் பொறுப்பு" என்று உதடுகளை அசைக்காமல் மௌனமாக நினைத்துக்கொண்டான். பொறுப்பை இறக்கிவைத்த நிம்மதியோடு உற்சாகமாக ஏணியின் 'பழுது'களில் வலதுகால் வைத்து ஏறினான்.

கூரை வேய்தல் வேலை மளமளவென்று நடக்கிறது. காக்கியில் தைத்த லங்கோடு அவன் இடுப்பிலிருந்து தொடை வரை மறைத்திருக்கிறது. வேட்டியைத் தலையில் சுற்றிக் கட்டியிருந்தான்.

கீழிருந்து அம்பாகப் பாய்ந்து வருகிற முடிகளை லாவகமாகப் பிடித்து, சப்பென்று வைத்து, 'கம்பறுத்தி'யால் குறுக்குக்கட்டை அறுத்து, குலைத்துவிட்டுப் பரப்புகிறான்.

ஒவ்வொரு வரிசைக்கும் முதலில் "நீள முடி போடும்" என்கிறான். அப்புறம் பழைய முடி கேட்கிறான். அப்புறம் புதுசில் நறுக்குன முடி கேட்கிறான். அவன் உத்தரவுகளுக்குக் கட்டுப்பட்டு சோலையப்ப நாடார் ஓடி ஓடி அலைகிறார். கட்டுகளை வீசிவீசி எறிகிறார். வியர்வை வியர்த்துக் கொட்டுகிறது. வீட்டுப் பெண்கள் ஓடி ஓடி தண்ணீர் சுமக்கிறார்கள். தட்டைக் கட்டுக்குவியல்களில் பானை பானையாகக் கவிழ்த்துத் தெளிக்கிறார்கள்.

மனிதர்களுக்கு வெறிபிடித்ததைப் போல் 'வேகுவேகு' என்று அலைகிறார்கள். வேலைக்குச் சிறகு முளைத்துப் பறக்கிறது. வீட்டுக்குள் விழுகிற சதுர நிழல்கள் வரிசை வரிசையாக மறைந்து... முழுமையான நிழலாக வளர்கின்றது.

சோலையப்ப நாடார் கீழிருந்து கம்பந்தட்டை முடிகளை எறிந்து கொண்டிருந்தார். அவருக்கு முடி எறிகிற நுட்பம் தெரியவில்லை.

அவனை விட்டு விலகிப் பாய்கிற முடிகளை பூச்சன்பிடிக்காமல் விட்டான். உயரத்திலிருந்து கண்டனத்துடன் பார்த்தான்.

"யோவ், முடியை ஒழுங்கா இங்க பாத்துப் போடுமய்யா."

"போடுதேனில்லே, பூச்சா"

"நல்லா போட்டீர்! நா எங்க நிக்கேன். நீர் போடுற முடி எங்க போகுது? பாரும்!"

"காத்து அடிக்குது. அதுக்கு நா என்ன செய்ய?"

"வாளித் தண்ணியிலே தூரை முக்கி நனைச்சு, நுனியைப் பிடிச்சு எறியும் காத்து அடிக்குதைப் பார்ப்போம்."

நாடார் முகம் 'கொறாவி'ப் போவதைப் பார்க்கும்போது, அவனுள் சந்தோஷம் துள்ளுகிறது.

கம்பந்தட்டை முடியின் தூர்ப்பகுதியைத் தண்ணீரில் நனைத்து, மறுமுனையைச் சரியாகப் பிடித்து வீசுகிறபோது.... நிஜந்தான்! காற்றைக் கிழித்துக்கொண்டு சர்ரென்று பாய்கிறது. பூச்சனிடமே போய்ச் சேருகிறது.

"பாத்திருமா, உம்ம காத்து என்ன செஞ்சது?" அவன் குரலில் வெளிப்படையான நையாண்டி துள்ளியது. கேலி மின்னும் பார்வையால் அவரை மோதினான்.

இப்படி உயரத்திலிருந்து அந்நியமனிதர்களைப் பார்க்கிற பொழுதெல்லாம், பூச்சனுக்குள் பரவுகிற இனிமையான சந்தோஷம், இப்போதும் ஒரு இசையாக எழுகிறது. வெள்ளமாய்ப் பெருக்கெடுத்தோடுகின்ற அந்த ஆனந்தப்பெருக்கு அவன் அனுபவித்தறிந்த எந்த இன்ப உணர்ச்சியை விடவும் மிகச்சிறந்ததாக – உன்னதமானதாக – அவனுக்குத் தோன்றுகிறது.

மாரியம்மாளுடன் கூடுகிற அந்தப் பொழுதின் சுகத்தைக் கூட, சாதாரணமாக்கிவிடுகிறது, இந்த உயரப்பார்வை இன்பம்

.... போனமாசம் தொழி வெட்டுக்குப் போய்விட்டு வந்த களைப்பில் சர்க்கார் போட்டு வைத்தபஞ்சாயத்துப் பெஞ்சில் உட்கார்ந்திருந்தான், பூச்சன். சம்பளம் வாங்க சகதொழிலாளி போயிருந்ததால் இவன் காத்திருந்தான்.

'இதே சோலையப்ப நாடார் அங்கு வந்தார்.

யாரோ ஒருவர் வானத்தை நோட்டம் விட்டுவிட்டு சோலையப்ப நாடாரிடம் கேட்டார். "ஏன் மே(ல்) காத்து இப்படி அடிக்குதே. இந்த வருஷம் ஆடிப்பட்ட வெதைப்புக்கு மழை பெய்யாதோ..."

பூச்சனை 'குர்ர்'ரென்று பார்த்த நாடார் "கீழே உக்காரக் கூடாது. தலைமேலேதா ஏறி உக்காரணும்னு எளிய சாதிக்காரப் பயகளெல்லாம் நெனைக்குற காலத்துலே, மழை எப்படி எட்டிப் பாக்கும்? ஆடிப் பட்டத்துக்கும் பேயாது, மயிர்ப்பட்டத்துக்கும் பேயாது."

பூச்சனுக்கு 'இங்குட்டுக் குத்தி அங்குட்டு வாங்கியது' போலிருந்தது. மனுஷத்தனமில்லாத அந்த அடி, அவனது உள்மனசில் கூட வலித்தது. அவமானத்தில் முகம் கறுத்துப் போய், பெஞ்சிலிருந்து எழுந்துவிட்டான்.

இந்த மாதிரி நெஞ்சின் அடியாழம் வரை காயப்படுத்தி ரணப்படுத்திய சம்பவங்கள் அவனுக்கு நிறைய நிகழ்ந்திருக்கின்றன. அப்போதெல்லாம் ஏற்பட்ட அந்த ஆழமான அவமான உணர்ச்சி... கீழ்மைப்பட்ட தனது ஜாதியின் மீது பரிதாபமாக வெளிப்படவில்லை. சிந்தனையால் கீழ்மைப்பட்டுக் கிடக்கும் இந்த உயர் ஜாதித் திமிரைக் காலின் கீழ் போட்டு மிதிக்க வேண்டும். மிதித்துத் துவைக்க வேண்டும். துவைத்துக்கொண்டே "இப்போ எப்படியிருக்கு" என்று கேட்கவேண்டும் என்ற கொதிப்பாகத்தான்

அவனுள் ஜ்வாலை விட்டெறியும்!...

... அதே சோலையப்ப நாடார்தான்தலைக்கு மேல் மட்டுமல்ல, இன்னும் உயரத்தில் பூச்சனை ஏற்றிவைத்து அவன் இடுகிற உத்தரவுகளை ஓடிஓடி நிறைவேற்றி, அவன் செய்கிற கண்டனங் களை - கேலிகளை - அசட்டுச்சிரிப்பால் தட்டிக் கழித்துக் கொண்டு....

பூச்சனுக்குள் ஆழத்தில்புதைந்து கிடந்த ஒரு உணர்வு, சமத்து வத்துக்காக ஏங்குகிற மனித உணர்வு. திருப்தியுடன் சிரித்துக் கொள்கிறது.

விரித்துப் பரப்பியிருந்த கம்பந்தட்டைகளைச் சரிசெய்து கொண்டான். தட்டுப் பலகையால் சப்பென்று அறைந்து சைஸ் செய்து கொண்டான். கூரையின் உள்பக்கத்திலிருந்த தீக்கொளுத் தியிடம்,,, "யோவ், ஆக்கை பிடியுமய்யா" என்றான்.

"ம், வரட்டும்" என்றான்.

கருவேல விளாரை (ஆக்கை) உள்ளே சொருகினான் பூச்சன். உள்ளே வந்த ஆக்கையை இரண்டாகக் கிழித்துக் கொண்டே தீக்கொளுத்தி, "பூச்சா, இறுக்கிவிடு" என்றான்.

"ம்ஹிம் இந்த்தா, ம்ஹ்ஹ்ம் இந்த்தா..." என்ற சப்தங்களைப் பரஸ்பரம் எழுப்பியவாறு இறுக்கினர். "கட்டிரும்" என்று பூச்சன் சொன்னவுடன், ஆக்கை இழுத்து முறுக்கி மடக்கிவிடப்பட்டது.

பூச்சன் இடத்தை மாற்றி நின்று கொண்டான். நாடாரைப் பார்த்தான். அவர் வழுக்கையில் வியர்வை அரும்பி, வெய்யிலில் ஜ்வலித்தது. அவனுள் சந்தோஷ நதி பொங்கிப் பிரவகிக்க, உதடுகள் சொன்னது,

"முதலாளி,நீளமுடி போடும்"

.....பெஞ்சுபோட்ட பலகாரக்கடைகளில்சாப்பிடப்போனாலும், இவர்களுக்குத் தரையில்தான் இலைபோடுவார்கள். அந்நிய மனிதர்களை அண்ணாந்துதான் பார்க்க வேண்டும்.

ஊர்ப்பெரிய மனிதர்கள் கூட்டம் நடக்கும், மற்ற ஜாதிகளின் பெரிய மனிதர்கள் திண்ணைகளில் உட்கார்ந்து இமை தாழ்த்திப் பார்ப்பார்கள், புழுக்களைப் பார்ப்பதைப் போல! ஒரு ஜாதியின் பிரமுகர் என்ற அந்தஸ்தோடு சென்றிருந்த போதிலும்கூட, இவர்கள் தரையில்தான் உட்கார வேண்டும். அண்ணாந்துதான் பார்க்க வேண்டும், நிலவைப் பார்ப்பதுபோல!

... ... மனசுக்குள் ஜ்வாலை விட்டெரிந்த நெருப்பு அவனுள் ஒரு வெறியை ஏற்படுத்தியிருந்தது. நரம்புகளை முறுக்கேற்றியிருந்தது. அந்த வெறி, முடியின் குறுக்குக் கட்டை அறுக்கிற வேகத்திலும், தட்டுப்பலகையால் அறைகிற சப்தத்திலும் வெளிப்பட்டது.

நாடாரை எரிச்சலுடன் பார்த்தான். "முடியை நேரா பாத்துப் போடும். எத்தனை தரம் சொல்றது?" இப்போது குரலில் கடுமை ஏறியிருந்தது.

காலை வெய்யில் உஷ்ணம் கூடியிருந்தது. ஏறுபொழுது இளமதியத்திற்கு வந்துவிட்டது. குடித்த கம்மங்கஞ்சி போன இடம் தெரியவில்லை. வயிற்றில் பசியின் கூச்சல் கேட்டது.

சூரியக் கிரணங்கள் கண்களைக் கூசச்செய்தது. வழியனுப்புகிற போது மாரியம்மாள் சொன்ன வார்த்தைகள் மனசுக்குள் ஒலித்தது.

"மசக்கம் கிசக்கம் வந்துராம பாத்துக்கோ, ஒன்னை வைச்சுத்தானே எங்க ஆட்டம்?"

... ... வேறு வேலைத்தளத்தில் ஏற்கெனவே இரண்டு மூன்று முறைகள் மயங்கி விழுந்துவிட்டான். சோடாவை முகத்தில் அடித்தனர். வெங்காயத்தை வாயில் மென்றுகொண்டே நாசியிலும், செவிகளிலும் ஊதினர். நெருப்புச் சட்டியில் மிளகாய் வற்றலைப்போட்டு வாடை காட்டினர்.

தகவல் அறிந்து மாரியம்மாள், 'லபோ, திபோவென்று நெஞ்சில் அறைந்துகொண்டு, அழுது ஆர்ப்பரித்தாள். நலைந்து நாட்கள் கழித்து, கையில் பத்து ரூபாயை வைத்துக்கொண்டு டாக்டரிடம் மாரியம்மாள் அழைத்துச் சென்றாள்.

நிறைய விசாரித்தார். தொழிலை–சிகரெட் பழக்கத்தை – மயக்கம் வருகிற நேரத்தை – விதத்தை – எல்லாம் விசாரித்தார். உடம்பை ரொம்ப நேரம் பரிசோதித்தார். ஒரு ஊசியைப்போட்டு நாலைந்து மாத்திரைகளும் தந்தார். இன்னொரு தடவை வரச்சொன்னார். எக்ஸ்ரே எடுத்து வரச்சொல்லி, அதற்கும் சீட்டு எழுதிக் கொடுத்தார்.

போட்டோ எடுக்கணும் என்றவுடன் என்னவோ ஏதோவென்று பயந்துபோய் மாரியம்மாள் புலம்பி அழுதாள்.

"அம்புட்டு ரூவாய்க்கு இந்த ஏழைச்சிறுக்கி எங்க போவேன்? ஏழைபாழைகளுக்கு வறுமையைத் தந்து வேடிக்கை பாக்குற குருட்டுப்பய தெய்வம் நோயையும் ஒரு பங்காளியாக்கி வைச்சு கூத்துப்பாக்குதே".

தெய்வத்தைத் திட்டித்திர்த்த மாரியம்மாள், தன் குலதெய்வத் துக்கு நேர்த்திக்கடன்தான் போட்டு வைத்தாள். அவ்வளவுதான் முடிந்தது. போட்டோவும் எடுக்க முடியவில்லை. டாக்டரிடம் போகவும் இயலவில்லை.

எப்படிப் போகமுடியும்? 'அன்னாடம் உழைக்குறது. அன்னன்னிக்கு வழிச்சுத்திங்கக்கூட எட்டியும், எட்டாமப் போகுது. தொட்டுக்கோ தொடச்சுக்கோன்னு அனுதினமும் கழியுறப்போ... டாக்டருகிட்டே எதை வைச்சுக்கிட்டுப்போறது? தர்மாஸ்பத் திரிக்குப் போனா... நம்பளை திரும்பிக்கூட பாக்கமாட்டாக... ஆள் இருக்காது. ஆள் இருந்தா, மருந்து இருக்காது....

'சரி பாப்போம்... நோயில்லாத ஆளு பூமியிலே யாரு இருக்காக? அவுக எல்லா செத்தாபோறாக? விதி முடிஞ்சுவர்ர சாவை, டாக்டரு மட்டும் நிறுத்திடுவாரா, என்ன?..."

இல்லாமையை ஈடுகட்டிய எண்ணப் பிரமைகளில் நாளும் பொழுதும் நகர்ந்து ஓடிக்கொண்டிருக்கிறது...

..."என்ன பூச்சா, சாப்புட்டுக்கிடுவோமா?" நாடார்தான் கேட்டார். மனசுக்குள் வட்டமிட்ட நினைவுகளிலிருந்து விடுபட்ட பூச்சன்,

"எல்லாம் ரெடியா ஆச்சா?"

"ஆச்சு, எறங்கு..."

ஏற்கெனவே காபிகுடிக்க ஒருதடவை இறங்கியாகிவிட்டது. இப்போது சாப்பாட்டுக்கு. அண்ணாந்து பொழுதைப்பார்த்தான். பார்க்க விடாமல் சூரியன் தகதகத்தது. மணி ஒன்றரை இருக்கும்.

எல்லோரும் கால் கையைக் கழுவி துடைத்துக்கொண்டனர். உட்கார்ந்தனர். சோற்றில் ஆவி வந்து கொண்டிருந்தது.

சாப்பிட்டு முடிப்பதற்குள் வியர்த்துக்கொட்டியது. கொதி வெய்யில்; சுடுசோறு; மழைக்காலக் கிணறுகளைப் போல உடம் பெல்லாம் நீர்க் கசிவெடுத்ததது. உண்டு முடித்த திருப்தியில் ஒரு சிகரெட்டைப் பற்றவைத்துக்கொண்டான் பூச்சன். அதன் புகை உள்ளே பிரவேசித்து, ஒரு இனிமையான உணர்வைப் பரப்பியது.

மறுபடியும் வேலை சிறகு கட்டிப் பறந்தது. வரிவரியாக வேய்ந்து கொண்டே உயரத்திற்குப் போனான் பூச்சன். வேகவேகமாக உத்தரவுகளைப் பிறப்பித்தான்.

"நீளமுடி வரட்டும்..."

"ம்ம்...கட்டைமுடி"

"பழசு போடும்...ம் ம் ம்"

"ஆக்கை"

மளமளவென்று வேளை சாய்ந்து. வீட்டுக்குள் இருட்டு பரவிக் கொண்டிருந்தது. இனி, முகடுதான் பாக்கி. அதையும் முடித்து விட்டால் இறங்கி விடலாம்.

சூரியன் தங்கத்தகடாக மஞ்சளாக ஜ்வலித்தது. உஷ்ணமில்லாத வெய்யிலாக இருந்தது. மேலடிவானம், முகம் முழுவதும் மஞ்சள் பூசிக்கொண்டது.

சோலையப்ப நாடாரைத் தேடினான்.

"முதலாளி.."

"என்ன பூச்சா" ஓடி வந்தார்.

"முகடுக்குத் தட்டைக்கட்டு கட்டிவைச்சிருக்கீகளா?"

"இருக்கு"

"போடுங்க கொஞ்சம் எட்டிப்போடணும்"

உயரத்திலிருந்து அவரைப் பார்த்தான். மனசுக்குள் அதே குழந்தைத்தனமான சந்தோஷம். இனம் விளங்காத இன்பப் பூரிப்பு, பெற்றோர்கள் ஒளித்து வைத்த பொருளை எட்டி எடுத்துவிட்ட குழந்தையின் குதூகலக் களிப்பு...

நாடாரின் உடம்பெல்லாம் கரியாக இருந்தது. முதுகின் ஓடையில் வியர்வை நீர்ப்பயணம். நாடார் மெல்ல மங்குவது போலிருந்தது.

கண்ணுக்குள் வியர்வைத்துளி வழிந்துவிட்டதோ...

புறங்கையால் அவசரமாகத் துடைத்துக்கொண்டான்.

ஏதோ ஒரு ராட்சஸக்கரம் இருதயத்துக்குள்ளிருந்த சதையைப் பற்றிப் பிசைவது போன்றதோர் படபடப்பு, நாடார் மீண்டும் மங்கு கிறார். வெய்யில் நிறம் மாறிக் கறுப்பாகிறது...

காலூன்றி நிற்கிற கைமரத்தை யாரோ உருவுவதைப் போல ஒரு திகில்... மனசு பயத்தில் அலறித்துடிக்க....

கண்ணுக்குள் அடர்ந்த இருட்டு கூட அசுர வேகத்தில் சுழல்வதைப்போல...

இருதயம் வெடிக்கப் போவதைப்போல விம்மி விம்மித் தணிய...

சரி... நம்ம விதி முடிஞ்சுபோச்சு...

எல்லாம் நிமாண்ட் நாழியில் நிகழ்ந்துவிட்டது. கூரையில் உருண்டு வந்ததைத்தான் நாடார் பார்த்தார். அவருக்குக் கையும் காலும் ஓடவில்லை. அதிர்ச்சியில் திகைத்துப்போனார்.

அலறக்கூட வாய் எழவில்லை.

உருண்டு வந்த பூச்சன் குவிந்து கிடந்த கம்பந்தட்டைக் குவியலில் பொத்தென்று விழுந்தான். நாடாரின் 'ஐயய்யோ' அலறலில் தெருவே ஸ்தம்பித்து நின்றது. நாலா திசைகளிலிருந்தும் மனிதர்கள் பாய்ந்து வந்தனர்.

"சோடா வாங்கிட்டு வா." "வத்தல் அள்ளிக்கிட்டுவா"

"ஏய் வெங்காயத்தைக் கொண்டாயா".

"ஏய் சம்முகம், ஆர்எஸ் பதி தைலம் வாங்கிட்டு ஓடிவா".

பதறி துடித்த மனிதர்கள் அல்லோல கல்லோலப்பட்டனர். யாரும் உத்தரவுக்காகக் காத்திருக்காமல், ஆளுக்கொரு வைத்தியத்தில் முனைந்தனர். எல்லா மனிதர்களும் பரபரத்து ஓடிச்சாடினர். ஜாதி மற்றும் சமூகத்தடைகளைக் கடந்து ஆழத்தில் கிடக்கும் மனிதர்களுக்குரிய கருணை உணர்ச்சி, ஒரு புயலாக ரூபம் கொண்டு, வீசியடித்து அத்தனை மனிதர்களையும் ஒரே மனிதனாக்கி, ஒரே பரபரப்பில்–வேகத்தில்–வேலையில் உந்தித் தள்ளியது.

சோலையப்ப நாடார் பதைத்துப்போய், கண்மூக்கு தெரியாத வெறி வேகத்தில் பரபரத்துக்கொண்டிருந்தார்.

சில நிமிஷங்கள் நத்தையாக நகர்ந்தன. பூச்சன் மெல்லக் கண் விழித்தான். சுற்றி நின்ற மனிதர்களுக்கு அப்போதுதான் உயிர்வந்தது.

* * *

பத்து நாட்கள் ஓடிவிட்டது. பூச்சன் கிணறு வெட்டுக்கு ஆட்களை அனுப்பிவிட்டு, கடப்பாரை முனைக்குக் கூர்மை வைப்பதற்காக, கொல்லுப்பட்டறைக்குக் கிளம்பிக்கொண்டிருந்தான்.

போலப்ப நாயக்கர் வந்தார்.

"வாங்க சாமி" என்று வரவேற்றான்.

"ஆமா பூச்சா..."

"என்ன சாமி, இந்தப் பக்கம்?"

"ஒன்னைத் தேடித்தான் வந்தேன்".

"என்ன சாமி விஷயம்?"

"நம்ம கூரை மேயணும்."

வில்லிலிருந்து விடுபட்ட அம்பாக மாரியம்மாள் பாய்ந்து வந்தாள். "சாமி இவனை வுட்டுடுங்க. கூரை மேச்சல்னா இந்த மனுஷனும் பறக்கத்தான் செய்வான். ஆனா, நாங்க இவனைப்பறி குடுத்துட்டு வெம்பரப்பா இருக்க முடியாது சாமி."

"ஏன் மாரி, இப்படிப் பேசுறே?"

போலப்ப நாயக்கர் திகைத்துப்போனார். 'கூரை மேய்தலுக்கும் பறி கொடுத்தலுக்கும் என்ன சம்பந்தம்'

சோலையப்ப நாடார் வீட்டுக் கூரையிலிருந்து உருண்டு விழுந்த மறுநாள், வெள்ளாட்டை விற்றுக்கொண்டு ஆஸ்பத்திரி சென்றது... டாக்டர் பரிசோதித்தது – எக்ஸ்ரேயைப் பார்த்துவிட்டு 'ஹார்ட் வீக்' என்று கவலையோடு முணுமுணுத்துக்கொண்டது. தொழில், வருமானம் பற்றியெல்லாம் விசாரித்தது. ஊசி மருந்துகளுக்கும் டானிக்குக்கும் எழுதித்தந்தது....

"மயக்கம் எப்ப வரும்னு முன்கூட்டியே சொல்ல முடியாது. முடிஞ்சளவுக்கு ரெஸ்ட் எடுக்கணும். அப்படியே வேலைக்குப் போனாலும், தன் தரையிலேயே நின்று செய்கிற வேலைக்குத்தான் போகணும். ஆனா, கண்டிப்பா கூரை ஏறக்கூடாது. அதுமாதிரி உயரத்துலே நின்று செய்கிற வேலைக்குப்போனா... உயிருக்கே ஆபத்து" என்று டாக்டர் கவலையோடும் கண்டிப்போடும் எச்சரித்தது....

ஆதியோடந்தமாக... மாரியம்மாள் தனக்குரிய பாஷையில் விவரித்தாள். அழுகையும், கேவலும் சொற்களுடன் போட்டி போட்டுக் கொண்டு பொங்கியது.

பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்த போலப்பநாயக்கர்...

"அப்பச்சரி மாரி... பூச்சா நா வாரேன்" என்று தலையசைத்து விட்டுப் புறப்பட்டார். அவருக்கு வருத்தமாக இருந்தது.

மௌனத்தில் புதைந்து நின்ற பூச்சனுக்கு யோசனையாக இருந்தது. அவர் போவதையே பார்த்துக்கொண்டிருந்தான். ஏதேயோ பறிகொடுத்தவனைப்போல மனசு கிடந்து தவித்தது.

அண்ணாந்து பார்த்தே பழகிவிட்ட அந்நிய மனிதர்களை உயரத்திலிருந்து பார்க்கிற அந்த உன்னதமான இன்ப உணர்வை

நிரந்தரமாக இழந்துவிட வேண்டியதுதானா. அவனுக்குச் சம்மதமில்லை.

மாரியம்மாளுடன் கூடுகிற அந்தப் பொழுதின் சொர்க்க சுகத்தை விடவும் மிகச் சிறந்ததல்லவா! அவனைப் பொறுத்த வரை, அது ஈடு இணையற்ற சந்தோஷமல்லவா!

தெருவுக்கு வந்துவிட்ட போலப்பநாயக்கர், "சாமியோவ்" சத்தம் கேட்டுத் திரும்பினார். பூச்சன்தான் ஓடிவந்தான். 'கேஹை பூஹை' என்று மூச்சிரைத்தது.

"என்ன பூச்சா...?"

"நாளை திங்கக்கிழமை. திங்கக்கிழமை கூரையைத் தீண்டக் கூடாது. மறுநாளைக்கு கூரையைப் பிரிங்க. புதன்கிழமை வந்து மேஞ்சு தாரேன் சாமி".

"என்னமோ... உசுருக்கே ஆபத்துன்னு..."

"அது கெடக்கட்டும் சாமி... விதி முடியுறதுன்னா, கூரையிலே தானா முடியும்? நடந்து போகையிலே கூட சாவு வந்துசேரும், சாமி. அதை வுடுங்க. புதன்கிழமை நா வாரேன் சாமி..."

"மாரி சத்தம் போடுதாளப்பா..."

"அவளுக்கென்ன தெரியும் சாமி... சொல்லிட்டா நிக்கமாட்டேன். சத்தியமா வாரேன். நீங்க நம்பி கூரையெப்பிரிங்க சாமி".

போலப்பநாயக்கர் இனம்புரியாத திகைப்போடு சென்றார். ஆயினும், அவன் வர ஒப்புக்கொண்டதில் அவருக்கு மகிழ்ச்சி!

பூச்சனும் சந்தோஷத்துடன் ஒரு சிகரெட்டைப் பற்றவைத்துக் கொண்டான்.

*1987*

## ஒரு நகர்வுக்கு....

**வே**லை முடிந்து வயக்காட்டை விட்டு வெளியேறும்போதே, பொழுது விழுந்துவிட்டது. மேற்கு மலைத்தொடருக்குள் வெயில் சுருண்டு படுத்துக்கொள்ள, மேகத்து வெளிச்சம் மட்டும் மிச்சமாய் இருந்தது. ஒரு தவிப்போடு முதத்தக்கா ஊரை நோக்கி "வேகு வேகு" என்று நடந்தாள். இவள் மனசுக்குள் ஏங்கிவாடிப்போன மகனின் முகம் உறுத்தியது.

தலையில் சின்னதாக ஒரு முள் விறகுக் கட்டு. கட்டைப்பிடித்திருந்த வலது கையில் தூக்குச்சட்டியும். ஆடி ஆடித் தொங்கியது. விடிந்ததிலிருந்து ஓடிஓடி பருத்தி எடுத்ததில் இரண்டு கைப்பெரு விரலும் காயம்பட்டதுபோல வலித்தது. குனிந்து குனிந்து நிமிர்ந்ததில் இடுப்பெல்லாம் கடுப்பு. நடக்கிற நடையில் தொடைச்சதையெல்லாம் ரணமெடுக் கிறது. முகத்தில் உலர்ந்துபோன வியர்வையின் உப்பு வரிக்கோடுகள்.

தூரத்தில் மங்கலாய் கிராமம். இன்னும் ஒரு மைல் இருக்கும். போய்ச் சேருவதற்குள் கருகருவென்று இருண்டுவிடும். "பாவம், ராமசாமி" என்று மகனை நினைத்து மருகிய மனசு, அவளை முந்திக்கொண்டு ஓடியது.

பள்ளிக்கூடம் விட்டவுடன்... மற்ற பிள்ளைகளைப்

போல அவனும் வேகமாய் வந்து பார்த்திருப்பான். பூட்டிக் கிடக்கிற கதவை.

வந்தவுடனேயே அம்மா மடியில் விழுந்து, பள்ளிக்கூடத்தில் நடந்ததையெல்லாம் சொல்லிச்சொல்லி மகிழ்கிற ஆசைத் துடிப்போடு ஓடி வந்திருப்பான். சிட்டாக சிறகடித்து வந்தவன் கதவில் முட்டிய ஏமாற்றத்தில் சுருங்கிப்போய சிறகொடிந்து நிற்பான்.... பாவம்.

பைக்கட்டை வாசலில் போட்டுவிட்டு தண்ணி கூட குடிக்க வழியில்லாம உதட்டை நக்கிக்கொண்டு விளையாட்டு ஆசையில் தெருவுக்குப் போயிருப்பான். தெரு புழுதிகளில் கூட்டாளிச் சிறுவர்களோடு ஓடி விளையாடி, சண்டை போட்டு களைத்துப்போய்....

"அவரவர் வீட்டுக்கு அவரைக் கஞ்சி குடிக்கப் போறோம்" என்ற ராகம் போட்ட பாடலோடு குழந்தைகள் குதூகலமாய்ப் பிரிந்து போயிருக்கும். ராமசாமி அப்போதும் வந்து பூட்டிய கதவில் மோதி மனசு உடைஞ்சிருப்பான். தாய் முகத்தைப் பார்க்க முடியாம தண்ணிகூட குடிக்க முடியாம, "எம்மா..... மிட்டாய் வாங்க துட்டு" என்று சிணுங்கி அழ ஆளில்லாம தேம்பி நிப்பான்....

நினைக்க நினைக்க முத்தக்காவுக்கு மனசு மருகியது. வாடிச் சோர்ந்த ராமசாமியின் பிஞ்சு முகம் கண்ணுக்குள் நின்றது. மனசெல்லாம் தவித்தது. "இந்த பாதகத்தி மானம் பாத்த பூமியிலே கூலிக்காரியா பொறந்து தொலைச்சுட்டேனே... புள்ளைக்கு நல்லது செஞ்சு பாக்காட்டாலும், 'அம்மா'ன்னு ஆவலோட வர்ற புள்ளைய 'என்னடா, ஏங்கண்ணு'ன்னு ஆசையா தூக்கி குளுர வைக்கிற தாயா இருக்கக்கூட இந்தச் சிறுக்கிக்கு லபிக்கலியே... பாவிப்பய தெய்வம், என்னைச் சீரழிச்சு கூத்துப் பாக்குதே..."

பழசாய்ப்போன தோல் செருப்பு. நடைக்கேற்ப டபக் டபக்கென்று சத்தமிடுகிறது. நடையைத் துரிதப்படுத்தினாள்.

மத்த கூலிக்காரப் பொட்டச்சிகளெல்லம்... வேலைக்குப் போய்ட்டு நாலு மணிக்கெல்லாம் வீடு வந்து சேந்துருவாக.. நா மட்டும் தினசரி இந்த தூரந்தொலைவான காட்டுக்குவந்து... புள்ளை மனசை ஏங்கவைச்சு, இருட்டுன பிறகு வூடு போய்... அடக்கொடுமையே....

இந்த வழக்கத்தை முறிக்க முடியலியே... தாலி கட்டுன அந்தப்பாவியால வந்த கதி இது!

நாளையிலேருந்து இங்கே வேலைக்கு வரவே கூடாது என்றுதான் முத்தக்கா சாயங்காலம் நினைப்பாள். அது என்ன மாயமோ... மந்திரமோ விடிந்தால். இந்த வேல்சாமியண்ணன் புஞ்சையில்தான் வந்து நிற்பாள். அவளது விருப்பத்தை அவளையே அலட்சியப்படுத்த வைப்பது. என்ன மாயம்?

எதிரில் யாரோ சைக்கிளில் வருவது. நிழலுருவமாகத் தெரிந்தது. ஒதுங்கிக்கிடந்த மாராப்பை இடது கையால் இழுத்துச் சொருகிக்கொண்டாள்.

முந்தியெல்லாம் முத்தக்காவும்.... நாலுபேரைப்போல வாழ்ந்தவள்தான். கூப்பிட்ட சம்சாரிகளுக்கு வேலைபார்த்து விட்டு நாலு மணிக்கெல்லாம் வீடு வந்துசேருவாள்.

வெள்ளனத்துலே கஞ்சி காய்ச்சத் துவங்கிவிடுவாள்.

பூனைக்குட்டியைப்போல ராமசாமி காலைக்காலை சுத்தி வருவான்.

"எம்மா அஞ்சு பைசாம்மா... எம்மா... அஞ்சு பைசாம்மா..."

"ஏங்கிட்டே துட்டு ஏதுடா? அய்யாகிட்டே போய்க்கேளு"

"அவரைத்தான் காணோமில்லே?"

"அதுக்கு நா என்ன செய்ய?"

"ஆஆ... ஆய்.. ஆஆ... ஆங்" என்று வாயைக் கோணிக் கொண்டே கள்ள அழுகையாய் அழுவான். பிஞ்சுக் கையை உதறிக்கொண்டே, கால் மாற்றிக் காலால் தரையை உதைப்பான். மகன் அழுகிற லட்சணதத்தில் இவள் சிரித்துவிடுவாள். மனசெல்லாம் ததும்பி வழிய வாய்விட்டுச் சிரித்துவிடுவாள். அம்மாவின் சிரிப்பைக் கண்டவுடன், அவனுக்கு நம்பிக்கை வந்துவிடும். ஆனாலும் அழுகையை – உதையை– நிறுத்தமாட்டான்.

"போடா... போ.... போக்கத்த பயலே. போய் அய்யா சொன்னார்னு சொல்லி கடையிலே பத்துப்பைசாவுக்கு என்னமாச்சும் வாங்கிக்கோ..."

"ஹைய்...யா..." ஆனந்த கூச்சலாய் குதித்துக்கொண்டு குதூகல நதியாய் ஓடுவான்.

"ஏலேய். ஏதாச்சும் தீம்பண்டம் வாங்கித்தின்னு. உடம்புலே சேரட்டும். வெளையாட்டு சாமான் வாங்குனீன்னு தெரிஞ்சா... தோலை உரிச்சுப் போடுவேன்..." என்று ஓங்கிய அதட்டல் சத்தம் அவனைத் துரத்திக்கொண்டு ஓடும்.

உற்சாகப் பெருக்காய் ஓடுகிற மகனைப்பார்த்து அப்படியே பூரித்துப் போவாள். மனசெல்லாம் பூப்பூவாய் பூத்துச் சொரிவதைப்போல ஒரு மென்மையான கிளுகிளுப்பு.

இதெல்லாம்... புருஷன் இருந்த காலத்தோடு முடிந்துவிட்டது. அந்தக்குட்டைக்கால் தேவடியாச் சிறுக்கியை இழுத்துக்கிட்டு அவன் ஓடிப்போன பிறகு நிலைமையே தலைகீழ்.

ஒருத்தி கூலியிலியே ரெண்டு வயிறு கழுவணும். நல்லது பொல்லது பாக்கணும். நோய் நொடிக்குப் பதில் சொல்லணும். நடக்குமா? இதுபோக கூலி வேலை கிடைக்காத கோடைக்காலம்... போக முடியாத அடைமழைக்காலம்... அப்போவெல்லாம் எதை வைச்சுத் திங்குறது?

இதெல்லாம் சேர்ந்து புயலாக வீசி... முத்தக்காவை இந்தத் தூரந்தொலைவான வயக்காட்டுக்குள்ளே தூக்கிக்கொண்டுவந்து புதைத்துவிட்டதே.

பூங்கொத்து மாதிரியான இந்தப் மணிப்புள்ளையை விட்டுட்டு ஓடிப்போறதுக்கு அந்தப்பாவி மனுஷனுக்கு எப்படித்தான் மனசு வந்ததோ...

முத்தக்காவுக்குள் படர்கிற கசப்பு. வாழ்க்கையின் கைப்பான உணர்வுகள் அவளை கவ்வியது. தனது பெண்மையே உதாசீனப் படுத்ததப்பட்ட அவமானமும், நிராதரவாய் விடப்பட்ட அவலமும் மனசின் ஆழத்தைத் தீக்கோலாய் இறங்கிச்சுட்டது.

வெக்கையாக பெருமூச்சு வந்தது. நடையை எட்டிப்போட்டாள். மனசுக்குள் மீண்டும் ராமசாமி. முகம் மறைக்கிற இருட்டு, முகம் காட்டும்போது ஊருக்குள் நுழைந்தாள். தெருவுக்குள் வந்தாள். வாசலைப் பார்த்தவளுக்குப் பகீரென்றது.

வாசல் படியில் ராமசாமி சுருண்டுகிடந்தான். கூதலில் கிடுகிடுப்பவனைப்போல, மடக்கிய காலுக்குள் கைகளைத் திணித்து. முகத்தைத் தன் நெஞ்சுக்குள் புதைத்துக்கொண்டு....

பதைத்துப் பதறிப்போன முத்தக்கா அப்படியே முள்ளுக் கட்டைத் தூர எறிந்துவிட்டு, மகனை ஆவித்தூக்கி அணைத்தாள். அந்தப் பிஞ்சு உடம்பு நெருப்பாகத் தகித்தது. உதடெல்லாம் காய்ந்து.... கண்ணெல்லாம் சிவந்து....

மனசை உடைத்துக்கொண்டு அழுகை பீறிட்டது. கலங்கித் தவித்த உணர்ச்சி, காயம்பட்ட பறவையாகத் துடித்தது.

"என்னடா.... இப்படிக் காய்ச்சல்... எள்ளாப் பொறியுதே"

சிவந்த கண்களை ஏறிட்டுப்பார்க்கவே முடியாமல் சிரமப்பட்டான். நெற்றியெல்லாம் தீயாகச் சுடுகிறது.

"பள்ளிக்கோடத்துலே... மத்தியானம் கக்கிட்டேம்மா... டீச்சர்தா வீட்டுக்குப்போன்னு சொல்லிட்டாங்கம்மா... வந்துட்டேம்மா... ஒண்ணைக் காணோம்மா... அழுதுக்கிட்டே படுத்துட்டேம்மா... நாக்கெல்லாம் கசக்குதும்மா..."

தொண்டைக்குள் சத்தமாய் விட்டுவிட்டுக் கிசுகிசுத்த ராமசாமி... அடங்கிக்கிடந்த ஏக்கமெல்லாம் பொங்கிப் பிரவகித்ததைப் போல பலமாய் அழுதுவிட்டான். அம்மாவின் நெஞ்சுக்குள் முகத்தை புதைத்துக்கொண்டான்.

அவளுக்குக் குடலைப் பிடுங்கிப்போட்டது போலிருந்தது. குலையெல்லாம் பதறியது.

"அய்யய்யோ... ஏம் பச்சை மண்ணை நாதியத்த புள்ளையாத் தவிக்க விட்டுட்டு, தூரந்தொலைவான காட்டுலே இருந்துட்டேனே, இந்தப் பாதகத்தி. இந்த வங்கொடுமையை நா எப்புடித் தாங்கப் போறேன்...."

வலது கையால் ஓங்கி ஓங்கி மடேர் மடேரென்று கொதிப்போடு தலையில் அடித்துக்கொண்டாள். மாலை மாலையாய் கண்ணீர் மனசைக் கவ்விப்பிசைகிற தாய்மை உணர்ச்சி.

கதவைத் திறந்தாள். பாயை எடுத்துப்போட்டு தோளில் கிடந்த ராமசாமியை படுக்கவைத்தாள். பழைய சேலையை எடுத்து மூடினாள். பஞ்சு ரோமங்களை பாசத் தவிப்போடு கோதி விட்டாள்.

அவள் பரபரத்தாள். ஒவ்வொரு அணுவிலும் தாய்மைப் பரிதவிப்பு. அவசரமாய் அடுப்பை மூட்டினாள். வெல்லமும் தேயிலையும் போட்டு "காப்பி"யை கொதிக்க வைத்தாள்.

உதைபட்ட பந்தாக கடைக்கு ஓடினாள்.

"என்னம்மா வேணும்?"

"காச்ச மாத்திரை குடுங்கய்யா?"

"யாருக்கு காச்சல். நிதானமாச் சொல்லும்மா"

"எம்புள்ளைக்குத்தானய்யா. கொடியா சுருண்டு கிடக்கானய்யா.."

"இந்தா... இதுலே பாதி மாத்திரையைக்குடு. வெறும் வவுத்துலே மாத்திரை குடுக்கக்கூடாது. பண்ரொட்டியை குடுத்துட்டு குடு"

"ரெண்டு பண்ரொட்டி குடுங்க"

இறக்கையை கட்டிக்கொண்டு ஓடினாள். கொதித்த கடுங்காப்பியை ஆற்றினாள்.

"ஐயா ராசா, ஏஞ்செல்வம், ஏலே, ஏங்கண்ணு... எந்திடா"

அவனுக்கு இமைகள் கனத்தன. திறக்க முடியாமல் கண்ணைத் திறந்தான். நெற்றி சுருங்கியது. நாசியிலிருந்து அனல் மூச்சு. மெல்ல எழுந்தான். பிள்ளை அரை உசுராய்ப் போனான்.

"இந்த ரொட்டியைத் தின்னுடா..."

காய்ந்து கனல் பறந்த சின்ன முகத்தைச் சுளித்தான்.

"எனக்கு வேண்டாம்மா..."

"ஏங்கண்ணுல்லே, ஏந்தங்கமில்லே... இதைத் தின்னுட்டு மாத்திரையை முழுங்கிடு. காச்ச மண்டையடி விட வேண்டாமா ராசா."

எரிச்சலுடன் தூள் கொட்டினான். உதடெல்லாம் உலர்ந்த கோடுகள். அவளே ரொட்டியை பிய்த்துக் கறுப்புக் காப்பியில் முக்கிமுக்கி வாயில் ஊட்டினாள். சிணுங்கி சிணுங்கி மறுத்துக் கொண்டே... முழுங்கினான். மாத்திரைக்கு ஒரேயடியாய் மறுத்து அடம்பிடித்தான். அவனை ஒருவழியாக சமாதானம் செய்து, அரவணைப்பாய் பேசி,.... விழுங்க வைத்துவிட்டாள்.

"படுத்துக்க ராஜா" என்றாள். சேலையை மூடினாள். தலையை பரிவோடு கோதி விட்டு நெற்றியில் கை வைத்தாள்.

ஒருக்கழித்துப் படுத்திருந்த ராமசாமி சின்ன விழிகளால் அம்மாவைப்பார்த்தான். அரவணைப்பு கிடைத்துவிட்ட கதகதப்பான நிம்மதியும், சந்தோசமும் கண்களில் ஆறுதலாய் மின்னுகின்றன. அதை மனதால் உணர்ந்து முத்தக்காவால் சகித்துக்கொள்ள முடியவில்லை. பொங்கிப் பொருமிய அழுகையை அடுப்பங்கரைக்குள் வந்து முழுசாகக் கொட்டித் தீர்த்தாள்.

ஓடிப்போன புருஷனை–பொழுது அடைகிற வரை வேலை வாங்குகிற வேல்ச்சாமி அண்ணனை–கண்ணாமூச்சி காட்டி அழுக வைக்கிற வாழ்க்கையை–தும்பப்படுத்தி வேடிக்கை பார்க்கிற கூத்துவனை – சகலரையும் ஒரு மூச்சு திட்டித்தீர்த்துப் புலம்பினாள்.

அடுப்பு வேலைகள் வேலைகளாயிருக்க, அவ்வப்போது மகனையும் தொட்டுத் தொட்டுப்பார்த்துக்கொண்டாள்.

நெற்றி தலையெல்லாம் வேர்வையின் பிசுபிசுப்பு. மூச்சு

திணறலில்லாமல் சீராக வந்தது. அவளுக்கும் மனசு ஒருநிலைப் பட்டது. "காச்ச குறைஞ்சிருக்கு..."

வீட்டைபெருக்கி முடித்தாள். விளக்கு வெளிச்சத்தில் அவளும் எதையோ வயிற்றில் அள்ளிப்போட்டுக்கொண்டாள். நாளைக்கும் புஞ்சையில் போய் உசுரைக் கொடுக்க உடம்பில் சக்தி வேணுமே....

அப்போதுதான் தெற்குத்தெரு ராமாத்தா வந்து சேர்ந்தாள்.

"என்ன முத்தக்கா... சாப்புடுதியா?"

"ம்... ஆச்சு. அத்தை. என்ன இன்னைக்கு வழி தப்புனாப்போல இந்தப் பக்கம் வந்துருக்கீகளே... என்ன விஷயம் அத்தை?"

"சும்மாதான் வந்தேம்மா...."

"சும்மான்னு ஒன்னு இருக்கவா செய்யுது? சோலி இல்லாம, சுத்திப்பாக்கவா வரப்போறீக?"

"என்ன, பேராண்டி ஒறங்கிட்டானாக்கும்?"

"அதை ஏன் கேக்குறீக கொடுமையை..." என்று ஆரம்பித்தவள் மகனுக்குக் காய்ச்சல் – மகனின் தவிப்பு – என்றெல்லாம் மனசின் ஆற்றாமையையெல்லாம் ஒரு பாட்டம் கொட்டித் தீர்த்தாள். ராமாத்தாவும் தலையைத் தலையை ஆட்டி, உம் கொட்டிக் கொண்டேயிருந்தாள். அவளது காதுகளில் தொங்கிய பாம்படமும் அசைவுக்கேற்ப ஆடின.

ஊர்மாறி வந்துவிட்ட நாயைப்போல, பேச்சு நிகார் கெட்டுப் போய் அதுபாட்டுக்கு எங்கெங்கோ சுற்றியலைந்துவிட்டு, மையத்துக்கு வந்து சேரும்போது... இருவரின் உள் மனசும் ரொம்பக் கூர்மையாகிக்கொண்டது.

"பேசிப்பேசி தும்பம் குறையவா போகுது? நா ஒரு கிறுக்கச்சி. நாம் பாட்டுக்கு பேசிக்கிட்டிருக்கேன்.... என்ன சோலியா வந்திக. அத்தை?"

"தெக்காட்டு புஞ்சையிலே மொளகாயிலே களை வெட்டணும்; தண்ணிக்குப் பின்னாலேயே பருத்தி விதை ஊனணும். கொத்துக்கு ஆளு கூப்புடத்தான் வந்தேன். ஒன்னைத்தான் கூப்புட முடியாதே.... நீ தான் வேல்ச்சாமி வயக்காட்டுக்கு பதிவா போய்க்கிட்டிருக்கியே..."

"அப்படிப் போய்ப் போய்த்தானே இம்புட்டுச் சீரழிவு? பெத்த புள்ளையை தாயிருந்தும் நாதியத்த புள்ளையா தவிக்கவிட்ட பாதகத்தியா நிக்கேன்...."

"அப்ப... நாளைக்கு வேலைக்கு வாரீயா?"

"வாரேன் அத்தை. நாலு மணிக்கு வேலை விட்டுடுவீகளா?"

"ஆமா.. தாயி"

“அப்ப வாரேன்.... அத்தை... இன்னொரு சங்கதி...."

"சொல்லு தாயி..."

சொன்னாள். ராமத்தாவும் உம் கொட்டினாள். யோசனையோடு பதில் சொல்லிவிட்டுப் போனாள்.

மறுநாள்.

சாயங்காலச் சூரியன் நிறம் மாற்றம் பெற்றுக் கொண்டிருந்தது.

வீட்டுவாசலில் முத்தக்கா. இப்படி முற்றத்தில் நின்று சாயங்காலச் சூரியனைப் பார்த்து ரொம்ப காலமாகிவிட்டது. அவளுக்கே அது அதிசயமாக – மகிழ்ச்சியாக இருந்தது.

ராமசாமிக்கோ... இன்றைக்கு சந்தோஷம் பிடிபடவில்லை. பைக்கட்டை வீசியெறிந்து விட்டு “அம்மா” என்று மடியில் வந்து விழுந்தான். பூவாகப் பூத்துச் சிரிக்க முகமெல்லாம் உற்சாக வெள்ளமாக மடியில் கிடக்கிற மகனைப் பார்க்கப் பார்க்க அவளுக்குள் பொங்கி வழிகிற ஓர் இன்ப நதி.

காற்றில் மிதக்குற பஞ்சாக மனசே லேசாகி... தாய்மை உணர்வில் ததும்பி நின்றது.

இறுகிக்கிடந்த சாளரமெல்லாம் திறந்துகொண்டதைப் போல, நானா திசைகளிலிருந்தும் மனசுக்குள் பாய்கிற இனிய காற்று, வாழ்க்கையையே புதுமுகத்துடன் அறிமுகமாகிற மாதிரி ஒரு மர்ம மயக்கம்.

மடியில் உல்லாச நதியாய் கும்மாளமிடுகிற வாழ்க்கை.

மகனுக்கு பொழுதிருக்க சோறு வைத்துக்கொடுத்தாள். ஆசை ஆசையாய்ப் பேசிக் கொண்டே சாப்பிட்டான். டீச்சர் கொடுத்த பாராட்டுக்களை, சக பிள்ளைகளுடன் விளையாடிச் ஜெயித்த சமாச்சாரங்களையெல்லாம் பெருமிதம் ததும்ப சொன்னான்.

கேட்க கேட்க இவளுக்குள்... இழந்து போன இன்பமே மனசுக்குள் இறங்குவதைப் போன்ற சுகம். மனசை மயிலிறகால் நீவுகிற சிலிர்ப்புணர்வு.

வாழ்வின் வெளிவட்ட வறுமை நீங்கிப் போய்விடவில்லை. உள்வட்ட ஜீவிதத்திற்குள் விழுந்திருந்த ஒரு முடிச்சு

அவிழ்ந்திருக்கிறது. அம்புட்டுத்தான்... அதுலே எம்புட்டு ஆறுதலா இருக்கிறது...!

"வெளை... யாடப் போறேன்" ராகம் போட்டுக் கத்திக்கொண்டே ராமசாமி தெருவில் பாய்ந்தான். சிட்டுக்குருவியாக. கூடு கிடைத்த குருவியாக இவள் மனசு நிம்மதியில் தலை சாய்ந்தது.

வீட்டு முற்றத்தை பெருக்கிவிட்டு, அடுப்பில் சுட வைத்திருந்த வெந்நீரில் குளித்துவிட்டு, வீட்டு வாசலில் நின்று 'சிணுக்கலி'யால் தலையை சிக்கெடுத்துக் கொண்டிருந்தாள். முத்தக்காவுக்கு உடம்பே சிக்கெடுத்தது போல சிலாக்கியமாக இருந்தது. கல்யாணமான புதுசில் போல மனசு ததும்பிக் கிடந்தது.

கருகருவென்று மசங்குகிற நேரம். கதர்த் துண்டை இழுத்து மூடிக்கொண்டு வேல்ச்சாமி வருகிறான். முத்தக்காவுக்குள் திக்கென்றிருந்தது. பிடிபட்டுக் கொண்ட திருடி போல தவித்தாள்.

தப்பித்து ஓட முடியாதே.... எதிர்கொண்டாகணுமே.... தன்னைச் சமாளித்துக்கொண்டாள்.

கோபமேயில்லாமல் ரொம்ப அன்பாய், சகஜமாய் கேட்டார்:

"என்னம்மா... இன்னைக்கு ராமாத்தாவுக்கு வேலைக்கு போனீயாக்கும்?"

பதில் சொல்ல நா எழவில்லை. படபடக்கிற மனசோடு மௌனமாய் அவன் முகத்தைப் பார்த்தாள். உடம்பில் பல்லி ஏறுவதைப் போல மனசில் ஒரு கூச்சம்.

வேல்ச்சாமி முகத்தில் அமைதியான சிரிப்பு. கள்ளமில்லாத ஒரு பரிவான பார்வை. தங்கச்சியிடம் உரிமையோடு பேசுகிற தினுசில், அவரது அன்பான வார்த்தைகள்...

"மச்சான் ஓடிப்போன காலத்துலே... நாதியத்துப் போய் நீ ஒத்தையிலே உக்காந்து அழுதுக்கிட்டிருந்தப்ப ஆறுதலும், தைரியமும் சொன்னது இந்த அண்ணன்தாம்மா... வேலையத்த காலத்துலே அடை மழைக்கும்.... கோடைக்கும் சாப்பாட்டுக்கு தான்யம் கொடுத்ததும் இந்த அண்ணன்தாம்மா. ஆடு குட்டிப் பிடிக்கணும்னு வந்து வாசல்லே நின்னப்ப, ரூபாயாத் தூக்கிக் குடுத்ததும் இந்த அண்ணன்தாம்மா... ராமாத்தா இல்லே."

அன்புத்திரை போட்ட அடிகள். பரிவோடு குத்துகிற ஊசிகள். அவளுக்குள் நறுக் நறுக்கென்கிற வலி. செய்ததைச் சொல்லிக் காட்டி குத்துகிற வார்த்தைகள். உள்மனசைச் சுண்டியிழுத்தது செருப்பால் அடிப்பதுபோல் இருக்கிறது அவளுக்கு.

நெஞ்சு உதடெல்லாம் சட்டென உலர்ந்து போய்... பேச முடியவில்லை. அவனது ஒவ்வொரு வார்த்தையும் இவளை இங்குட்டுக் குத்தி, அங்குட்டு பிடுங்குவதைப் போலிருக்கிறது....

"அண்ணாச்சி.. நீங்க சொல்றது வாஸ்தவம்தான். நானும் அந்த நன்றி விசுவாசத்தை மறக்கலே. நா சோத்துலே உப்பு போட்டுத்தானே சாப்பிடுதேன் அண்ணாச்சி? ஆனா... நா உசுர் வைச்சுப் பிழைக்கிறதே எம்புள்ளைக்காகத்தானே, அண்ணாச்சி? எம்புள்ளையை நாதியத்து தவிக்கவிட்டுவிட்டு... அந்தக் கொழுந்து மனசை ஏங்க விட்டுட்டு நா எதுக்குப் பாடுபடணும் அண்ணாச்சி? நீங்களே சொல்லுங்க."

"ராமாத்தா புஞ்சைக்கு வேலைக்குப் போனா... ஓம் புள்ளைக்கு நாதி வந்துருமாக்கும்? சரி சரி... எதுக்கு வெட்டிப்பேச்சு? நீ யாருக்கு வேணுமானாலும் வேலைக்குப்போ. போகாம... ஊஞ்சலலே மகனோட சேர்ந்து ஆடணும்னாலும் ஆடு. எனக்கென்னே வந்தது? எனக்கு ஏம்பாக்கியை கணக்கு முடிச்சிடம்மா..."

கண்ணுக்குப் புலப்படாத கயிறுகள், அவள் கழுத்தில் சுருக்காக விழுகிறது. இழுத்து இறுக்குகிறது.

"இப்படி.... விட்டாத்தியா வெடுக்கென்னு பேசுனா... எப்புடி அண்ணாச்சி? நீங்க அப்படி கட்டன்ரைட்டா கேட்டா... நானும் ராமாத்தா அத்தைகிட்டே வாங்கி உங்க கடனை அடைச்சிருவேன். ஆனா, என்னை விசுவாசம் கெட்ட சிறுக்கின்னு ஊர்லே பேசுவாகளே...?"

"அதுக்கு நா என்ன செய்ய முடியும்?"

"நாலு பேரைப் போல வெள்ளனத்துலே வேலை விடணும்."

"வெள்ளனத்துலே வேலைவிட்டா... தூரம் தொலைவானா காட்டுலே என்ன வேலை நடக்கும்?"

"தூரந்தொலைவுலே நீங்க காடு வைச்சிருந்தா... அதுக்கு நா என்ன செய்ய முடியும்? அதுக்காக நா எம் புள்ளையைத் தவிக்க விடணுமா?"

அந்தக் கயிறுகளை முடிச்சவிழ்த்து எறிந்துவிட்டாள். வேல்ச்சாமி அவளை ஏறிட்டுப் பார்த்தார். கோபமான பார்வை. ஆத்திர அக்னி, அந்த அக்கினியை அவள்மேல் வீசமுடியாத நிர்ப்பந்தம்.

தூரந்தொலைவான காட்டிற்கு யாரும் வேலைக்கு வர மாட்டார்களே. ஒரு ரூபாய் கூலி அதிகமாக கொடுத்தாலும்,

வீடுவர இருட்டிரும் என்ற பயத்தில் மறுத்துவிடுவார்களே... வருகிற ஓரிருவர்களையும் இழந்துவிடுவதா...

அவரது பார்வை நிலைக்கொள்ளாமல் இடம் மாறி, இடம்மாறி உட்கார்ந்தது. வாய்க்குள் வார்த்தைகளே வரவில்லை. திகைத்து நின்றார்.

"அண்ணாச்சி... நானும் விசுவாசத்தை நெனைக்கிறவதான். நீங்க நாலுபேரைப் போல வெள்ளனத்துலே வேலை விடுறதுன்னா... சொல்லுங்க. நாளையிலேயிருந்து வயக்காட்டுக்கு வாறேன்."

"ம்ஹூம்... நீயும் இப்படிப் பேசுற காலம் வந்ததே... இதெல்லாம் எங்க தலையெழுத்து... எப்படியும் வந்து தொலை..."

போய்விட்டார். அவர் முதுகையே வெறித்தாள். அவளுக்குள் நீண்ட அயற்சி. ஒரு போர்க்களத்தில் மல்லுக்கட்டி முடித்த ஆயாசம்.

ஒரு சின்ன நகர்வுக்கு.... இத்தனை முரண்டு பண்ணி சண்டைபோட வேண்டியிருக்கே...

முத்தக்காவுக்கு ஒரு திருப்தி பூவாய் மலர்ந்து விகசித்தது. நன்றி கெட்டவள் என்ற கெட்டப்பெயர் வாங்காமலேயே... ஒரு பிரச்சனை தீர்ந்ததே!

*'செம்மலர்' 1987*

# ஊர்ச்சோறு

"யம்மோ...வ், சோ....று போடுங்கம்மா... ஆ...வுடைச்சி வந்திருக்கேன்..."

வாசல்படிக்குக் கீழே ஓரமாக நின்னு ராகம் போட்டுச் சத்தம் கொடுத்தாள். இடுப்பில் எவர்சில்வர் குத்துச்சட்டி. அதில் கலர் கலராய் சோறு. பழுப்பும், மஞ்சளும், வெள்ளையுமாய் பல வீட்டுச் சோறு.

"என்ன... ஆவடைச்சி, இன்னிக்குக் கொஞ்சம் சீக்கிரமா வந்துட்டே போலிருக்கே."

உள்ளிருந்து வந்த குரலைத் தொடர்ந்து வலது கை நிறைய சோற்றுடன் வீட்டுக்காரி.

"ஆமாம்மா. மூத்தபய சாப்டுட்டு காட்டு வேலைக்குப் போகணும்னு பறக்கான்லே? கால்லே கொதி வெந்நியை ஊத்திக்கிட்டு நிப்பான்."

"காட்டு வேலைக்குத்தான் போறானா?"

"ஆமம்மா..."

"ராக்கப்பன் வேலையை கத்துக்கிடலியா? அவனுக்கும் வயசாகுதுலே? அவனுக்குப் பின்னாலே ஒம்மவந்தானே குடிவேலை செய்யணும்?"

"நானும் அந்த மனுசனும் படிச்சுப் படிச்சுச் சொல்லிட்டோம்மா. கேக்குற வழியில்லே. மாட்டேன்னு பிடிசாதனையா நிக்கான்."

"ஏனாம்?"

"இது... ஊருக்கு அடிமைப்பட்ட வேலையாம். வீடு வீடா பிச்சைச் சோறு எடுத்துப் பொழைக்கிற பொழைப்பு அவனுக்குப் பிடிக்கலையாம்."

"ஊர்ச்சோறு அவனுக்குப் பிச்சைச் சோறா?"

"அப்படித்தான் சொல்லுதாம்மா. விலாவுலே வெடிச்ச பய. தாய் தகப்பன்மார்க நீங்க. உங்க சோத்தை பிச்சைச் சோறுன்னு சொன்னா... அவன் உருப்படுவானாம்மா? ஊரை மதிக்காத அம்பட்டையன். சிப்புக்குப் படியாத ரோமந்தானம்மா? சிலுப்பிக்கிட்டிருக்கிற ரோமம் கத்தரிப்பான் வாய்லே கடிபடத்தானே செய்யும்?"

"கூரை நிழல்லே உக்காந்து ஊருக்கு முடிவெட்டுறதை விட, வாட்டியெடுக்கிற காட்டுவெயில்லே கெடந்து சீரழியுறது... உசத்தியாக்கும்? என்னமோ... அந்தச் சாமிதா ஒம்மவனுக்கு நல்ல புத்தியை குடுக்கணும்."

"என்னத்தை நல்ல புத்தி வரப்போகுது...! நா வாரேம்மா... இன்னும் பத்துவீடுக கெடக்கு. சோறு எடுக்கணும்."

பெருமூச்சோடு நகர்கிற ஆவுடைச்சியை அனுதாபத்தோடு பார்க்கிறாள் வீட்டுக்காரி.

ஆலமரத்தடியில் முடிவெட்டிக் கொண்டிருந்தான், ராக்கப்பன். குத்துக்கால் வைத்து உட்கார்ந்திருக்கிற அவன் கையில் கத்தரிக்கோல் ஒரு பரபரப்போடு இயங்கியது. பசியெடுத்த மைனாவைப் போல "கர்ரீச்... கர்ரீச்... கர்ரீச்..." சென்று பதற்றமாகக் கூவியது.

அவன் நிழலில் ஒரு சிறுவன். கழுத்தும் தலையும் சாய்ந்து கொண்டே போயிற்று. அழுது சிணுங்கி அடங்கிய விம்மல். "நேர... இரும்மையா" என்று எரிச்சலோடு நிமிர்த்துவைத்தான். இடது கையில் இரும்புச் சீப்பு. 'வருட், வருட்'டென்று இழுத்தான். சீப்புக்குள் படியாமல் சிலுப்புகிற ரோமத்தையெல்லாம் 'கர்ரீச், கர்ரீச்' சாக்கினான். சீப்பும், கத்தரியும் அவன் கைகளில் முளைத்த விரல்களைப் போல ஒன்றிப்போயிருந்தன.

ராக்கப்பனுக்கு இந்த நாலைந்து நாளாய் ஓர் ஆசை. சிறுபிள்ளைத்தனமான சபலம். ஒரே மாதிரியான கஞ்சியைக் குடித்துக் குடித்துச் சளைத்துப்போன ஏழ்மையின் நோய். இன்றைக்கு இந்த ஆசை உச்சத்தில் போய் ஏறிக்கொண்டது.

இட்லிக்கடையில் சட்னியும் சாம்பாருமாய் சுடச்சுட நாலு இட்லியாச்சும் திங்கணும் என்று நாக்கு அலைபாய்ந்து வந்தது. முறுகலாய் தாளித்த சட்னியில் கிடக்கும்கடுகு வாசனை. அவனுக்கு ரொம்பப் பிடிக்கும்.

எட்டு மணிக்கு மேலாகி விட்டால் இட்லி விற்றுத் தீர்ந்து போகுமே என்கிற ஏக்கம். அவனுக்கு அந்தப் பரபரப்பு. சட்னியின் தாளித்த வாசம் மனசைச் சுண்டியிழுக்கிறது. அடிமனசின் நரம்புகளெல்லாம் அதிர்கிறது. இட்லியின் மிருதுச் சூட்டை நுனிவிரல் உணர்கிற பிரமை.

இறக்கை கட்டிப் பறக்கிற மனசு. மனசுக்கு முந்திக்கொண்டு 'கிச், கிச்'சென்று பறக்கிற கத்தரி.

தக்கென்று வந்து நிற்கிற ஒரு நிழல். ராக்கப்பன் கழுத்தைத் திருப்பி நிமிர்ந்தான். அவனுக்குள் பரவுகிற வெக்கை. பற்றிக் கொண்டு வருகிற எரிச்சல்.

முனியசாமிதான் வந்து நிற்கிறான். மூத்த பயல். கைலியை மடித்துக் கட்டியிருந்தான். கையில் சோற்றுத் தூக்குச்சட்டி. தலையில் வட்டக் கட்டாகத் துண்டு. தோளுக்கு மேல் வளர்ந்த பயல். கை மீறிப் போனவன். தனது நிழலாக இருக்க மறுக்கிறவன். ரத்த நிழல்தான். புத்தி நிழலில்லை.

மனசின் வேக்காடு வார்த்தையின் கடுப்பில்.

"என்னலே? எங்கே கெளம்பிட்டே?"

"விறகு வெட்டப்போறேன்."

"முடி வெட்டுறது ஒனக்குக் கேவலமாப் போச்சோ? வெறகு வெட்டுறது பெருமையோ? கிரீடமா வைச்சு விடுவாக?"

பயத்தின் மௌனத்தில் முனியசாமி, தரையைப் பார்க்கிறான், எங்கோ பார்க்கிறான். அப்பனின் கண்களை எதிர்கொள்ள முடியாமல் அலைபாய்கிற பார்வை.

"எனக்குப் பிடிக்கலே" முணுமுணுப்பாக மகன்.

"ஏம்லே?"

"உங்க காலம் வேற. இப்பக் காலம் வேற."

"காலம் என்னடா... காலம்? அடைஞ்ச பொழுது விடியுது. நாளும் பொழுதும் நகருது. இதுலே எதுடா மாறிருச்சு? அப்பன் மாமனாயிருவானா? ஆத்தா அத்தையாயிருவாளா? இல்லே... நீங்கதான் தலையை தரையிலே ஊனி நடந்துருவீகளா?

கனன்று சீறுகிற ராக்கப்பனின் கண்களை மோதுகிற அந்த இளவட்டப் பார்வை. அந்த இளங்கண்களின் ஒளித்தெறிப்பு. அதில் விம்மி விடைத்து ஒளிர்கிற மறுப்புகள். சத்தமாகிவிடாத மறுப்புகள். மௌனக் கவசத்துக்குள் மறைந்து நிற்கிற மறுப்புகள்.

"இங்கே எதுக்குலே இப்ப வந்தே?"

"நாகர்கோவிலுக்குப் பக்கத்துலே ஆரல்வாய் மொழியிலே அணைக்கட்டு வேலை நடக்கு. நம்மூர்லேயிருந்து நெறைய பேரு வேலைக்குப் போறாக. என்னையும் கூப்புடுதாங்க. நாப்பது ரூவா சம்பளமாம்."

"அதெல்லாம்... வேண்டாம். எங்கேயும் போய்ச் சீரழிய வேண்டாம். இங்கேயிருந்து எந்தொழிலைக் கத்துக்க. ஊருக்குப் புள்ளையாயிருந்தின்னா... ஒரு கொறையுமில்லாமப் பாத்துக்குவாக."

"இந்தத் தொழிலையா...? இந்த ஊர்லேயா?"

"ஆமா... இந்தக் 'குடிவேலை'யிலேதா உங்கப்பன் காலம் போயிருக்கு. உங்க தாத்தன் காலம் போயிருக்கு. தாத்தனுக்குத் தாத்தனெல்லாம் இந்த ஊர்லேதான் இருந்துருக்காக? என்ன கொறைச்சல்? வீடு குடுத்துருக்காக. கல்யாணம் காட்சியை பாத்துக்கிடுவாக. நல்லது பொல்லதுன்னாலும் கவனிச்சுக் கிடுவாக. அவுக வீட்டுப் புள்ளையா நம்மளை மதிப்பாக. அவுக சாப்புடுறதை நமக்குப் போடுவாக."

"அந்தக் காலமெல்லாம்... போயிருச்சு."

"என்னடா சொல்லுதே?"

"இப்ப இருக்கற ஊரு... பழைய ஊருல்லே."

மறுத்து மறுத்து எதிர்வாதம் செய்கிற சின்னப்பயல். நேற்று முளைத்த சிறுகீரை. எல்லாக் காலத்தையும் அளந்து முடிச்சிட்ட அறிவாளி மாதிரி....

ராக்கப்பனுக்குள் சண்டாளமாய் வந்தது.

"பூராவும் தெரிஞ்சிட்டீயோ... தேவடியாமவனே? மப்பேறிப் போன ராஸ்கல், போடா... அங்குட்டு, மூஞ்சியிலே நிக்காதே... போடா... நாயி."

ராக்கப்பனின் ரத்தச்சூடும் சத்தமும் சட்டென்று அதிகரிக்க... கண்களில் கனல், கோபத்தின் அழுத்தத்தில் மட்டியை கடித்தான். நாசித்துளை விடைத்தது.

தழைந்து தழைந்து நிமிர்கிற மகனின் பார்வை. கண்ணீர் மல்குகிற பார்வையில் மறுப்புச் சத்தங்கள். எது எதுவோ சொல்ல வேட்கைப்படுகிற உதடுகள். வெறுமனே, முணுமுணுப்பில் நகர்ந்துவிட்டான்.

அடங்க மறுத்துப் பீறிடுகிற ஆத்திரம் ராக்கப்பனுக்குள்.

"வந்து பொறந்துருக்கான் பாரு... வவுத்துலே மூத்த பிள்ளையா. மயிர்க்கணக்கா, அப்பன் காலடி வாழையா அனுசரிச்சு வளரு வான்னு ஆசைப்பட்டா... இவன் என்னடான்னா... தலைமுறை தத்துவமாயிருந்து வர்ற வழமுறையை அறுக்குற பயலா வந்து வாய்ச்சிருக்கான். எடுபட்டபய. தலைக்கொழுப்பு ஏறித்திரியுதான்.."

இன்னும் நீளம் நீளமாகத் தெறிக்கிற மனப்பொறிகள். உள் கொதிப்பை உளறிக் கழித்தான். வேலை வேலையாகவுமிருந்தது.

சிறுவனுக்கு முடிவெட்டி முடித்தான். கத்தியை எடுத்து நிமிர்த்தி சுற்று வழிப்பும் முடித்து, முதுகில் ஒட்டியிருந்த ரோமக் கற்றைகளை தட்டி உதறினான்.

வேலை முடிந்த நிறைவில்... மனசுக்குள் பழைய இழை. இட்லி சாப்பிடப்போகிற ஆசை. தாளித்ததில் பொறிந்த கடுகுவாசம். கருகிச் சுருண்ட கருவேப்பிலை மணம்.

வேட்டியிலும் பனியனிலும் ஒட்டியிருந்த ரோமத்துகள்களை அடித்து உதறிக்கொண்டு எழுந்தான். முழங்கால் மூட்டுகளின் நெறுநெறுப்பு, பொழுதுக் காலை பார்த்தான். மணி எட்டை நெருங்கும்.

இட்லிக் கடையில் இலை போட்டுச் சாப்பிடுகிற சுகம். இட்லியைப் பிய்த்துப் பிய்த்து சட்னியில் குழைத்து... அடடா!

அந்நேரம் பார்த்தா... நாட்டாண்மை வந்து மறிக்க வேண்டும்? இட்லி சாப்பிடணும் என்று அவரிடம் போய்ச் சொல்லவா முடியும்? "ஏண்டா, அம்பட்டைப் பயலுக்கு இந்நேரம் இட்லி கேக்குதோ?" என்று நாலு வசவு நாறவசவாக வைய்யவா?

"என்ன மோலாளி"

"முடிவெட்டணும்பா"

இவனுக்குள் பூரான் ஊர்கிற உணர்வு. ஈர்க்கிற இட்லிச் சபலம். வழி தேடித் தவிக்கிற சுண்டெலியின் யத்தனிப்பு.

"வீட்லே ஒரு சின்ன வேலை. போனதும் வந்துருதேனே மோலாளி."

"நா ஒம்பது மணிப் பஸ்ஸுக்கு குளிச்சிட்டு, சாப்பிட்டுட்டுப் போகணும்பா. இப்பவே லேட்டாயிடுச்சு."

"அப்படியா மோலாளி"

"ஆமப்பா... போய்ட்டு சாயங்காலம் வண்டிக்கு வந்தாகணும்லே? இன்னிக்குப் பௌர்ணமியில்லே? ஊர்க்கூட்டம் இருக்குல்லே?"

"ஆமா... நெசந்தா"

"நீயும் சாயங்காலம் வீடுவீடாப் போய் ஊர்க்கூட்டம்னு சொல்லிரு."

"ஆட்டும் மோலாளி"

நாட்டாண்மையின் சொற்கள் எதுவும் மனசில் ஒட்டவே யில்லை. அவர் மீது இவனுக்குள் எரிச்சல் எரிச்சலாக வந்தது. இப்படிக் காலடிச் செருப்பாகக் கட்டுப்பட்டுக் கிடக்க வேண்டி யிருக்கிறதே என்று கசந்து வந்தது. நேரங்கெட்ட நேரத்தில் வந்து கழுத்தறுக்கிறாரே என்கிற கடுப்பு.

எட்டு மணியாகிவிட்டால்... இட்லி காலியாகிப் போகும். இட்லியின் மிருதுச்சூடு மனசுக்குள் சோகமாக ஆவி பிரிந்தது. உள் ஒடுங்கிய உணர்வலைகளுடன் சுருட்டியிருந்த கத்திப்பையை மீண்டும் விரித்து உட்கார்ந்தான்.

அவர் சம்மணம் போட்டு உட்கார, இவன் குத்துக்கால் வைத்து உட்கார்ந்தான். கிண்ணியிலிருந்து தண்ணீரையள்ளி அவரது பிடறிப்பக்கம் தெளித்துத் தேய்த்தான்.

"என்ன ராக்கப்பா... மூத்த பய கையிலே கத்தரியை தரக்கூடாது? ஒனக்கும் வயசாகுது. அவனையும் வசக்கணும்லே?"

"எனக்கும் நெனைப்புத்தான். அவந்தா வசங்கி வரமாட்டேங்கான்."

"ஏனாம்"

"அவுக முகரைக்கு இந்தத் தொழிலு பிடிக்கலையாம்."

"வரட்டும் பயலை நா சத்தம் போட்டு அரட்டிவிடுதேன். சின்ன நாய், நம்மளை மிஞ்சியா போயிரும்?"

மறந்து போயிருந்த மனசில் மீண்டும் புண் வேதனை. முனியசாமி, படிய மறுக்கிற அவனது அறியாமை, கட்டுப்பட்டு வாழ்கிற வாழ்வுக்குள் இருக்கிற சுகத்தையும் பாதுகாப்பையும் உணராமல்... புத்தி கெட்டுத் திரிகிற பொசை கெட்ட பயல்.

ரண அதிர்வாய் நினைவலைகள்.

இரும்புச் சிப்பும், கத்தரியும் கற்றை கற்றையாக நரை முடியை வெட்டித் தள்ள... நாட்டாண்மையிடம் வாய் வாயாக இருக்க... மனசு மட்டும் எங்கோ... எங்கோ...

ஆவுடைச்சியை கல்யாணம் 'மூய்த்து'க் கொண்டு வந்த அன்றைக்கு அப்பன் முனியன்தான் சொன்னான். "ஏலேய் ராக்கா, ஊர் மோலாளிமார்க கால்லே விழுந்து, திருநூறு பூசச் சொல்லுடா".

மாலையும் கழுத்துமாய் வீடு வீடாகப் போனான் ஆவுடைச்சியைக் கூட்டிக்கொண்டு. காலில் விழுந்து எழுவார்கள் ஜோடியாக. திருநீறுத் தட்டை நீட்டுவார்கள். எடுத்து இருவர் நெற்றியிலும் பூசுவார்கள். கும்பிட்ட கைக்குள் ரெண்டோ ஐந்தோ ரூபாயை திணிப்பார்கள். வந்த வரவு ஜாஸ்தி.

கல்யாணச் செலவு முழுவதையும் சரிக்கட்டி, மிஞ்சி நின்ற பணத்தில் ஆவுடைச்சிக்கு ஒரு சேலை எடுத்தான்.

... பங்குனிப் பொங்கல். ஊரெல்லாம் ஓலைக் கொழுக்கட்டை அவிப்பார்கள். பச்சரிசி மாவும், கருப்பட்டிப் பாலும் பிசைந்து, அறுபட்ட குருத்தோலைகளில் மாவை வைத்து வேக வைத்து எடுப்பார்கள். கத்திபோல இருக்கும். கடித்தால் தித்திப்பும் வாசமும் மனசைக் கிறங்கடிக்கும்.

அவித்த வீடுகளில் ரெண்டு நாளைக்கு இருந்தால்... அதிகம். எல்லா வீட்டார்களும் குடிமகன், ஏகாலிக்கும் கொழுக்கட்டை போடுவார்கள், பிள்ளைகளுக்குத் தருகிற பாங்கில்.

இவன் வீட்டில் வந்து நிறைந்து போகும். பத்து நாளைக்குப் பிறகும் மிஞ்சிக் கிடக்கும். காயக்காய ருசி. காய்ந்த கொழுக்கட்டையையும், தேங்காய்ச் சில்லையும் கடித்துக் கடித்துத் தின்றால்... அந்த ருசியே... தனீ.

... ஆடி தீபாவளி என்றால் ஊர்ப்பட்ட தோசை இட்லியெல்லாம் இவன் வீட்டில். கறிக்காசு வேறு தனியாகத் தந்துவிடுவார்கள்.

– ஊரில் எந்த வீட்டில் கல்யாணம், இழவு என்றால் இவன் காரியம் இல்லாமல் போகாது. இவனையும் வீட்டுப் பிள்ளையாகக் கருதி வேட்டி துண்டு அரிசி பருப்பு காய்கறியெல்லாம் தந்து, மேற்கொண்டு 'சுதந்திரப் பணமும்' உண்டு.

நாவிதர் தானே என்று இளப்பமாக நினைத்து அடுத்த

சாதிக்காரரர்கள் யாரும் நாக்கில் பல் போட்டு ஒரு சொல்கூட பேசிவிட முடியாது. தப்பித் தவறி யாராச்சும் பேசிவிட்டால்... அம்புட்டுத்தான். ஊரே கொதித்துவிடும்.

"எங்க சாதி நாவிதனை பேசுறதும், எங்க சாதியை வையுறதும் ஒண்ணுதான். பைசல் பண்ணாம விடமாட்டோம்"னு வரிந்துகட்டிக் கொண்டு ஒத்தைக்காலில் நிற்பார்கள்.

இம்புட்டுச் சௌகர்யம்... வாஞ்சை... பாதுகாப்பு... இத்தனையையும் அத்து விட்டுட்டுப் போகணும்னு மழைக்காட்டுத் தவளை கணக்கா கத்துதானே... இந்தத் தறுதலைப்பய.... இதெல்லாம் இவனைப் பிடிச்ச ஏழரை நாட்டான் இவனோட போகுமா? குடும்பத்தையும் பிடிச்சு ஆட்டத்தானே செய்யும்?...

ராக்கப்பனுக்குள் கவலைப் பின்னல்களாய் நினைவுச் சுழல்கள்.

நாட்டாண்மைக்கு முடிவெட்டு முடித்து, முகச்சவரம் செய்து, மீசையை சரிபண்ணி, நாசிரோமங்களைக் கத்தரித்து, கம்மங்கூடும் வழித்து முடித்தபோது, முள்ளெடுக்கணும் என்று காலை ஏந்திக்கொண்டு ரெண்டுபேர்.

ஆக... 'அந்தா, இந்தா' என்று நேரமாகி, எழுந்திருக்க மணி ஒன்பதரை. கடையில் இட்லி விற்றுத் தீர்த்து போயிற்று.

ராக்கப்பன் மனசுக்குள் சப்பென்று அறைகிற ஏமாற்றம். முன்பே உணர்ந்ததுதான். எதிர்கொள்கிறபோது ஏற்படுகிற சலிப்பு, ஏக்கம், எரிச்சல். காய்ந்து கிடந்த இட்லித் தட்டுக்களை ஏக்கமாய்ப் பார்த்தான்.

சாயங்காலம். பொழுதடைந்துவிட்டது. மேலடி வானத்துச் சாரல். மேகங்களில் மட்டும் சூரியமிச்சம். கன்றிச் சிவந்த மேகத்து வெளிச்சம்.

ராக்கப்பன் வீடு வீடாகப் போய்ச் சொன்னான்.

"யம்மோ...வ்"

"என்ன ராக்கப்பா?"

"மோலாளி இருக்காகளா?"

"புஞ்சைக்குப் போயிருக்காக. இன்னும் வரல்லே."

"இன்னிக்கு மடத்துலே ஊர்க்கூட்டம்.. ராக்கப்பன் சொல்லிட்டுப் போறான்னு மோலாளி கிட்டே சொல்லி ருங்கம்மா."

நூற்றியெட்டு தலைக்கட்டு. அத்தனை வீடுகளுக்கும் நடையாய் நடந்து செத்தான். நாலைந்து வீடுகளின் முன்னால்... ஆட்டுரலில் உளுத்தம் மாவு போட்டு ஆட்டிக் கொண்டிருந்தனர். பக்கத்தில் ஊறி நனைந்த அரிசி. உரல் முழுக்க வெள்ளை வட்டாமாய் குழையும் மாவு.

"இப்ப என்ன?... பண்டிகை தீவாளின்னு ஒண்ணுமில்லியே... இவுக வூடுகள்லே மட்டும் 'ஆசை'க்கு போடுதாகளோ...'

ராக்கப்பன் மனசுக்குள் இட்லி, தோசை சபலம், சவலைப் பிள்ளையாய் சிணுங்கியது.

விடிந்தது.

ராக்கப்பனுக்கு ஆலமரத்துக்குப் போகவே மனசில்லை. போர்வையை இழுத்து மூடிப் படுத்துக்கொண்டான். முடி வெட்டணும். முகச்சவரம் பண்ணனும் என்று தேடி வந்த ரெண்டொருவரிடமும் "காய்ச்சல்" என்று பாவலா பண்ணி விட்டான்.

ஆலமரத்தடிக்குப் போய்விட்டால்... வேலை நாறிப்போகும். சாப்பிட முடியாது. பத்து மணிக்குமேல்தான் சாப்பாட்டை நினைக்க முடியும்.

இன்றைக்கு அப்படி இருக்க முடியாது. ராக்கப்பனால், வறுத்த கறி இருக்கிற உரியை சுற்றிச்சுற்றி வருகிற பூனை மாதிரி... அவன் மனசு வாலாட்டிக் கொண்டேயிருந்தது.

முற்றம் தெளிக்க, வீடு பெருக்க என்று வழமையான வீட்டு வேலையாக இருந்த ஆவுடைச்சியை விடாமல் நச்சரித்தான். 'சீக்கிரம் சோறு எடுக்கப்போ" என்று.

ஆவுடைச்சிக்கு புருஷன் புதுசாகத் தெரிந்தான். புதிராகவும் தெரிந்தான். "என்ன மனுசா, இன்னைக்கு ஒனக்கு என்னாச்சு? என்னை இந்தப் பாடுபடுத்துறே?"

சலிப்போடு எரிந்து விழுந்த பெஞ்சாதியிடம் "ஒண்ணுமில்லை" என்று அப்பாவித்தனமாய் சொல்லிவிட்டு, பூனையாகச் சுருண்டு முடங்கிக்கொண்டான்.

சோறெடுக்க தெருவுக்குப் போயிருந்த ஆவுடைச்சி வருவதற்குள், அடுப்புச் சாம்பலில் பல் தேய்த்துக் கொண்டான். போர்வையை இழுத்து மூடிக்கொண்டு கையில் கிளாஸுடன் இட்லிக் கடைக்கு ஓடினான். 'குற ஜாலம்' போட்டு ஓசிச் சட்னி வாங்கிக்கொண்டு வந்தான்.

பாலுக்குத் தாயை எதிர்பார்த்து ஏங்கித் தவிக்கிற சோனிப்பிள்ளையாய்... மனசு.

ஆவுடைச்சி வீடு நுழையவும், ராக்கப்பன் 'தடபுடா'வென்று எழுந்தான். பரபரத்தான்.

"சரி... எடுத்துவை"

"என்ன?"

"சாப்புடணும்லே?"

"இந்நேரத்துலேயா?"

"சாப்புட்டுட்டுத்தான் ஆலமரம் போவணும்."

"என்ன... இன்னைக்கு எல்லாமே புதுவழமையாயிருக்கு."

இடுப்பிலிருந்த குத்துச்சட்டியை இறக்கிவைத்தாள். சின்னப்பிள்ளை மாதிரி ஆவல் பறப்போடு சட்டியை எட்டிப் பார்த்தான் ராக்கப்பன். கலர் கலராய்ச் சோறு. சோறுகள்.

விருட்டென்று நிமிர்ந்து அவளைப் பார்த்தான். அவன் கண்களில் கோப வெக்கை. சிறிவிடைக்கிற நாசி. முகம் முழுக்க ஆத்திர விறைப்பு.

"எல்லா வீடுகள்லேயும் சோறு எடுத்தியா?"

"ஆமா?"

தெற்குத்தெருவில் மாவாட்டிக் கொண்டிருந்த அந்த நாலைந்து வீட்டுக்காரர்களின் பெயர்களைச் சொன்னான், படபடவென்று.

"அங்கெல்லாம் போனீயா?"

"ஆமா"

"என்ன போட்டாக?"

"பழைய சோறுதான்."

"எல்லாமே சோறுதானா?"

"ம்"

"வேறொன்னுமில்லே...?"

"இல்லே. என்ன இப்படி கேக்கே? சோறுபோடாம, தங்கக் கட்டியா தூக்கிப் போடுவாக?"

கோப விறைப்பில் விம்மிக் கிடந்த அவன் முகத்தில் சட்டென்று ஒரு தளர்வு. சுருங்கி இடுங்கிய கண்கள். முகத்தில் துல்லியமாய்

துடித்து நின்ற ஏமாற்றம். நம்பிக்கையின் ஆணிவேரையே சுட்டுக் சுருக்கிவிட்ட கொடிய ஏமாற்றம். கோபமும், வாட்டமுமாய் குலைந்து கிடக்கும் புருஷனின் மனநிலை புரியாமல், அவனையே ஓர் அதிர்வோடும் பரிவோடும் பார்த்தாள்.

அவனது கண்ணிலிருந்த கற்றைச் சோகம், அவளுள் திணறடித்தது. மனப்பிசைவோடு கேட்டாள்.

"ஏன்யா... என்னாச்சு ஒனக்கு?"

உடைந்த குரலில் கரகரத்த அவளை நிமிர்ந்து பார்த்தான். அவன் முகத்தில், அடிபட்ட பறவையின் வலி.

"தாய் தகப்பன்மார்க தோசை இட்லியை தின்னுட்டு, புள்ளைகளுக்கு பழைய சோறு போடுவாகளா?"

"எதுக்கு இப்படிக் கேக்கே?"

"இல்லே ஆவுடை, நம்ம ஊரு முந்தி மாதிரியில்லே. தலைகீழாப் போயிருச்சு."

அவன் குரலில் எல்லையற்ற கனத்த சோகம். தன்னையே இழந்துவிட்ட மாதிரி... தானே இழிவுபடுத்தப்பட்ட மாதிரி. அவன் முகத்தில் அப்படியோர் அவமான அவஸ்தை.

"என்னய்யா... சாப்புடலியா?"

"இல்லே"

"எங்க கௌம்பிட்டே?"

"வாயெல்லாம் கசந்து கெடக்கு. கடையிலே போய் காசக்குடுத்து நாலு இட்லி சாப்புடணும்..."

"ஏன்... நெசமாவே காய்ச்சலா?"

"ம்"

வாசலுக்குப்போய் திரும்பிப் பார்த்தான்.

"மூத்தபய முனியசாமி அணைக்கட்டு வேலைக்குப் போவணும்னு சொன்னான்லே?"

"ஆமா"

"போவச்சொல்லு. போவட்டும்" என்றான்.

*புதிய பார்வை 1995*

# பூச்சுமை

'**அ**ப்பவும்... இப்படியா ஒரு மனுசர், அப்புராணியா இருக்கிறது?'

அடுப்பு வேலையிலிருந்த பூவாத்தா விடிந்து பொழுது புறப்பட்ட பிறகும் ஒதுங்குகிற கைலி தெரியாமல் 'குண்டக்க முண்டக்க' படுத்து உறங்குகிற புருஷனைப் பார்த்தாள். குறட்டைச் சத்தம் வேறு. கள்ளமில்லாத ராசாவுக்கு கவலையற்ற உறக்கம்.

இரண்டு அடுப்பிலும் தீ. ஒன்றில் சோறு; மற்றதில் குழம்பு. அவசரமாய் சோறு ஆக்கி வைத்துவிட்டு, ஏழு மணிக்குள் பூமார்க்கெட்டுக்குப் போயாகணும்.

முள்ளில் உட்கார்ந்திருப்பவளைப் போலத் தவித்தாள். பெரிய பூக்குடலையை எடுத்துவைத்தாள். ஈரத்துணியும், பையும் எடுத்துப் போட்டாள். வாழை மட்டைகளை நீரில் நனையப் போட்டாள்.

ஏற்கனவே நனைந்த மட்டைகளை எடுத்துப் போட்டு, கத்தியால் கிழித்தாள். பழகிய கை. தன்னிச்சையாக இயங்கியது. சிந்தாமல், சிதறாமல் உரித்தாள். மயிரிழையாய் நார்கள் மடியில் துவண்டன. அதையும் முடிச்சாகப் போட்டு நீருக்குள் போட்டாள்.

மறுபடியும்... அடுப்படியிலிருந்து கொண்டே புருஷனைப் பார்த்தாள். நல்ல கறுப்பு. முரட்டு உடம்பு.

தடித்த உதடுகள். உதடுகளின் பருமனை மறைக்கிற கட்டி மீசை. அவன் சிரித்தால், முகத்தில் ஓர் அழகு விரியும். கண்ணில் ஒளி துள்ளும். உள் வேதனையை மறைத்துக் கொண்டு சிரிக்கிற மாதிரியாக பக்குவப் பட்ட ஒரு தோற்றம் தெரியும்.

தோற்றத்திற்குச் சம்பந்தமில்லாத மனசு. ரொம்ப இளகின மனசு. கோழை மனசு. அசட்டு மனசு. அப்புராணி...

இப்படிப்பட்ட அப்புராணியாக யாரும் இருக்கமாட்டார்கள். அதுவும்... இந்தக் கலிகாலத்தில்!

போன மாதம்... அப்படித்தான்,

கடையை பார்த்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டு, பூ மார்க்கெட் போயிருந்தாள். வந்து பார்த்தால்... கடையே காலி. சின்ன மாலை, பெரிய மாலை எல்லாம் குளோஸ். பூப்பந்து கூட ரொம்பக் குறைந்து போயிருந்தது.

பூவாத்தாவுக்குள் பகிர் என்றது.

டப்பாவை திறந்தாள். அவசரமாய் எண்ணிப் பார்த்தாள். அவள் பயந்தபடியே ஆகியிருந்தது. பணம் ரொம்பக் குறைந்திருந்தது. அசல்கூடத் தேறவில்லை. கட்டுக்கூலி, லாபம் எல்லாம் போச்சு, மண்ணாப்போச்சு.

அவளுள் ஆத்திரமும், குழப்பமும். ரெளத்ரமாய் புருஷனைப் பார்த்தாள். பார்வையின் தொனியில் அரண்டு போனான்.

... அதிகாலையில் நகரத்தின் மிக முக்கிய பிரமுகர் பெரிய தொழிலதிபர். அருஞ்சுனை நாடாரின் மரணம், அந்த நகரைக் குலுக்கியது. ஏகப்பட்ட பேர் அஞ்சலி செலுத்த மாலை கேட்டு ஆலாய் பறந்திருக்கிறார்கள். அருஞ்சுனை நாடார் இவனுக்கும் முதலாளி. அவரது நிறுவனங்களில் ஒன்றான பெரிய தீப்பெட்டியாபீஸில் ரெண்டு வருஷம் வேலை பார்த்திருக்கிறான்.

மோலாளி செத்துப் போனார் என்ற செய்தியில் இவன் ரொம்ப ஆடிப்போனான். மாலை கேட்டு வந்தவர்களுக்கு எல்லாம் தூக்கி தூக்கி தந்துவிட்டான்.

விலையும் சொல்லவில்லை; பேரமுமில்லை அவர்களாக கொடுத்த பணத்தை மட்டும் டப்பாவில் போட்டு வைத்திருந்தான்.

பூவாத்தாவுக்குள் திகு திகுவென்று எரிந்தது. "அடப்பாவி மனசா" என்று மனசு கிடந்து புலம்பியது.

"இப்படியும் ஒரு மனசரா? இளிச்ச வாய்த்தனமாய் ஏமாந்து போய் இருப்பாகளா? அடக்கொடுமையே"

காலை நீட்ட பொழுதில்லாமல் மடக்கிக்கொண்டே உட்கார்ந்து, இடுப்பொடிய பூக்கட்டியவள். அவள் குலை கொதித்தது.

"இப்படி... எல்லாத்தையும் கரியாக்கித் தொலைச்சுட்டு நிக்கிகளே - உங்களுக்கு அறிவேயில்லியா? சுரணையில்லியா? நீங்க ஒரு ஆம்பளைதானா? ச்சே"

சீறினாள். அவள் முகமே ரணகாளியாய் கோரமாய் இருந்தது.

அவன் அலுங்காமல் நின்றான்.

இந்த கதைதான் எப்பவும். வெள்ளை மனசில் காரியம் செய்து, ஏமாந்துபோய் நிற்பான். அதைவிடக் கொடுமை, ஏமாந்து போனதை உணரவே மாட்டான்.

'கடையோ, கருவூலமோ' என்று கருதுகிற அக்கறை இருக்காது. லௌகிக வாழ்வின் மேடுபள்ளம் தெரியாது.

பஸ் ஸ்டாண்டு பக்கத்தில் மெயின் வீதியில் ஓரத்தில் வரிசையாக பூக்கடைகள். பெரிய கடையல்ல. ரோட்டின் விளிம்பில் ஒரு மேஜை. பின்னால் இரண்டு மரப்பெட்டி. இரண்டு குச்சிகளை ஊன்றி, அதன்மேல் ஒரே ஒரு கிடுகு. அவ்வளவுதான் கடை.

மாமூல் வாங்க மாசாமாசம் காக்கி உடுப்பு வரும். பழக்கமான ஆள்தான். அவரைக் கண்டுகூட இவன் பதறுவான். கைகால் எல்லாம் நடுங்குவான். வேட்டியைக் கூட சிலசமயம் நனைத்துக் கொள்வான். பூவாத்தா வந்தால்தான் அவனுக்கு உயிரே வரும். மூச்சு விடுவான்.

உறங்குகிற இந்த மனிதரை இலேசில் எழுப்பிவிட முடியாது. கும்பகர்ணனை எழுப்புகிற மாதிரித்தான். கத்திக் கத்தி தொண்டைத் தண்ணீர் வற்றிப் போகும்!

கடை திறக்கப் போகச் சொன்னால் - ஏகமாய் 'பிகு' பண்ணுவான். கிராக்கி பண்ணுவான். 'ஐயா, ராசா' என்று நாடியை பிடித்து, கெஞ்சிக் கூத்தாடி, தள்ளி விடுவதற்குள்... ஆத்தாடி அம்மாடி என்றாகிப்போகும்.

மார்க்கெட்டுக்குள் நுழைந்தாள் பூவாத்தா. அங்கே கமிஷன் கடையில் ஏலம் துவங்கிவிட்டது. ஏகப்பட்ட ஆட்கள். பூ வாங்க காத்திருக்கிற ஏலம் கேட்கிற ஆட்கள்.

அரும்புகள் யாவும் நானூறு நானூறு கிராமாக கூறுகட்டி ஏலம் விடப்பட்டது.

"சிவலப்பேரி மல்லி அரும்பு... அம்பது பைசா..."

"ஒன்னேகால்"

"ஒன்னேகால்"

"ஒன்னேமுக்கா"

"ஒன்னைமுக்கா"

"ரெண்டரை"

"ரெண்டரை"

பூ வாங்க வந்தவர்கள் கேட்கிற ஏலத்தொகையை கமிஷன் கடைக்காரர் எதிரொலிக்கிறார். ஒரே கூச்சல், கிண்டல், கேலி, போட்டி. பூவின் தரம் பற்றிய அபிப்பிராயங்கள்... காலடியில் நசுங்கிக் கிடக்கிற பூக்கள். மூடை மூடையாய் கேந்திப்பூக்கள், குவிந்து கிடக்கிற ரோஜாப் பூக்கள்...

பூவின் பவித்திரமும் கவித்துவமும் காணாமல் போய், ஏலப் பொருளாய், கேலிப்பண்டமாய்...

கூட்டம் நெரிபட்டது. 'நாமுந்தி நீ முந்தி' என்று ஏலம் கேட்கிற கூவல். ஏலம் முடிந்த பூவை அள்ளிக்கொண்டு கணக்கு முடிக்கிற பேரம், இரைச்சல். சந்தைக் கடை இரைச்சல்.

கையில் உள்ள பணத்திற்கேற்ப ஏலம் கேட்டு, பூ வாங்கிக் கொண்டாள். அப்புறம் கேந்தி, ரோஜா, சேவல் கொண்டை, மரிக்கொழுந்து எல்லாவற்றையும் எடை போட்டு வாங்கிக் கொண்டாள்.

பூச்சந்தைக் கூட்டத்திலிருந்து பிதுங்கிக்கொண்டு பூவாத்தா வெளியே வரும்போது, வியர்வையில் தொப் தொப்பென்று நனைந்திருந்தாள்.

நீரில் நனைத்த அரும்பு, துணிப் பொட்டலத்தில் கசிந்து வழிகிற நீர், செவியோரங்களைக் கடந்து புஜத்தில் சொட்டு போட்டது.

பூச்சுமை தாளாமல் பூவாத்தா திணறினாள்.

மணி எட்டரை இருக்கும். நகரம் ரொம்பச் சுறுசுறுப்பாகி விட்டது. யந்திர கதியில் பரபரத்தது. அவளும் யந்திரமாய் நடந்தாள்.

... இன்னிக்கு மட்டும் எரநூத்தி நாப்பது ரூபாய்க்கு பூ வாங்கியிருக்கு. நமக்கும் அரைகுறுக்கம் புஞ்சை இருந்திருந்தா... இம்புட்டு ரூபாயும் மிச்சமாகும். பாடுபட்டு வெளையவச்ச பூவைமட்டும் மாலைகட்டி வித்து துட்டாக்கிடலாம்!

புஞ்சையில்லே. துட்டு போட்டு சரக்கு வாங்கி, இடுப்பொடிய உக்காந்து, கண் பூத்துப் போற அளவுக்கு உத்து உத்துப் பாத்து... பூக்கட்டி வித்துப் பொழைக்குற ஏவாரப் பொழப்பாய்ப் போச்சு. நாலு சில்லறை மிஞ்சுறதும் உண்டு. இல்லாமப் போறதும் உண்டு.

சொந்த பந்தம் ஒட்டுதலும் இல்லை. நாதியற்ற நிலைமை. தாய் தகப்பனை உதறிவிட்டு வந்தவள், பூவாத்தா.

அதுவும் இந்த ராசாதி ராசாவுக்காக!

இவனது இரக்க சுபாவம்தான் அவளது மனசை முதலில் ஈர்த்தது. இரும்பு உடம்புக்குள் இருந்த பூப்போன்ற மிருதுவான மனசு, பூவாத்தாவின் பூ நெஞ்சுக்குள் வேர்விட்டது.

தெருவில் பூ விற்றுக்கொண்டு திரிந்த கன்னி மனசு, கள்ளமற்ற அந்த மனிதனின் வெள்ளையான சிரிப்பால் சூறையாடப்பட்டது.

வாடுவதற்குள் சூடினால்தானே பூ பூவாக பயன்படும். அதனால் தயங்கித் தயங்கி அய்யாவிடம் வாயைத் திறந்தாள். அவரோ வெகுண்டு சீறினார். முரட்டுத்தனமாய் பூக்கூடையை எற்றினார்.

நாதியத்த பயல். உப்பு கல்லுக்குக்கூட பெறாத வெறும் பயல்... உருப்பட வழியறியாத குருட்டுப் பயல்.

இதுதான் இவனைப் பற்றிய அய்யாவின் கணிப்பு.

"பூ விக்குறதுக்கு... தெருவுல திரிஞ்சதுலே, ஒம் மனசே நாறிப் போச்சு. பேசாம வீட்லே கிட"

அய்யாவின் கட்டளை அவளை உசுப்பியது. உழைப்பும், தொழில் அறிவும் அவளை தைரியப்படுத்தியது. தீயின் பலத்தோடு புறப்பட்டாள்.

"நாதியத்தவனோட நாதியத்த ஒருத்தி சேர்ந்துட்டா நாங்க தனிமரமில்லியே, தோப்பு மரங்கதானே? பாருங்க அய்யா, நா உப்புக்கல்லை வைரக்கல்லா ஆக்கிக் காட்டுறேனா... இல்லியான்னு பாருங்க"

என்று வீராவேசமாய் சவால் விட்டுவிட்டு வந்தாள் இவனுடன். வந்து, வருஷம் மூன்றாகிப் போயிற்று. இன்னும் இவன் சுக்கான் கல்லாகக்கூட மாறவில்லை.

அதே இரக்கம். அதே அப்பாவித்தனம். அதே நடுக்கம். அதே, அதே, எல்லாம் அதேதான்.

அன்பில் கரைத்துப் பார்த்தாள். ஆசை மோகத்தில் நனைத்தும் பார்த்தாள். தலையணை மந்திரத்தில் புரட்டி பார்த்தாள். கூடை

கூடையாக பூவையள்ளிக் கொட்டுகிற மாதிரி அறிவுரை சொல்லிப் பார்த்தாள். அதட்டி மிரட்டியும் பார்த்துவிட்டாள். அலுத்துப் போனதுதான் மிச்சம்.

மலையைக்கூட நகர்த்திவிடலாம். இந்த மனிதரை அசைக்கவே முடியலியே...

உருப்படவே மாட்டாரா? அய்யா சொன்ன சொல் மெய்யாகி விடுமா? உருட்டி வைத்த பொம்மை மாதிரித்தான் இருப்பாரா? சுய அறிவு வராதா? சுரணை வரவே வராதா? தொழில் சூட்சுமம் புரியாதா? துட்டோட அருமை புரியவே புரியாதா?

மாறவே மாட்டாரா? வாழ்க்கையே நஷ்டமாகி விடுமா? மழையில் நனைந்த கேந்திப்பூவாய்... குப்பைக்கு போய்விடுமா?

நினைக்க நினைக்க அவளுள் கலக்கம் மலைப்பு. அயற்சி...

மனசுக்குள் வந்து நிற்கிற அய்யா, 'என்னாச்சு, நீ விட்ட சவால்' என்று எகத்தாளமாய் கேட்டு கெக்கெலி பண்ணுகிறார்.

மெயின் வீதியில் ஒரு திருப்பத்தைக் கடந்தாள். இன்னும் பஸ். நிலையத்திற்குக் கொஞ்ச தூரம்தான். அங்குதான் வீதியின் விளிம்பில் பூக்கடைகள், அதில் இவளது கடையும் உண்டு. பிளாட் பாரக் கடை. அடிக்கடி போலீஸ் வந்து மிரட்டும். ஆக்ரமிப்பால் போக்குவரத்தே முடங்கிப் போவதாகக் கூச்சல் போடும். லத்தியால் மேஜையில் 'டம்ம்'மென்று அடிக்கும். கொடுப்பதைக் கொடுத்து விட்டால்... பஸ் போக்குவரத்து எல்லாம் ஒழுங்காகிவிடும்.

இதுவேறு... நிரந்தரத் தொல்லை. அடிக்கடி இன்ஸ்பெக்டர் மாறுவார். புதிதாக ஒருவர் வருவார். வந்தால் கடையை பந்தாடுவார்கள். ஏகக் கெடுபிடியாயிருக்கும்.

அப்போதெல்லாம் சாலையோர வியாபாரிகள் சங்கம்தான் வந்து கவசமாக இருக்கும். ஒற்றுமையின் பலத்தில் பாதுகாக்கும்.

சாலையோர வியாபாரிகள் சங்கக் கூட்டத்துக்கு அவன்தான் போவது வழக்கம். போய் என்ன பிரயோசனம்? நாலு வார்த்தை பேசினால்தானே!

அன்று ராத்திரி சாப்பிட்டு முடித்த கொஞ்ச நேரத்திற் கெல்லாம் கொட்டாவி விட்டான். படுத்து உறங்கிப் போனான். இவள்தான் ஒற்றையில் உட்கார்ந்து மாலை கட்டிக் கொண்டி ருந்தாள். விரல்கள் யந்திர கதியில் 'பொடு பொடு'வென்று இயங்கின. நேரம் போய்க் கொண்டிருந்தது.

அடிக்கடி கால் மரத்துப் போயிற்று. மரத்துப் போகப் போக காலை மாற்றி மாற்றி மடக்கிப் போட்டுக் கொண்டாள். இடுப்பு கடுத்தது.

இரண்டாவது ஷோ விடுகிற நேரம். உறக்கம் அப்பிக் கொண்டு வந்தது. நரம்பு முழுக்க அயற்சி. கண்ணை மூடினாள். இமைக்குள் கலர் கலராய் ரேகைகள்.

சமாளிக்க முடியவில்லை. எல்லாவற்றையும் எடுத்து வைத்துவிட்டு படுத்தவளை ஆயாசம் அமுக்கியது.

படுத்தவுடன் அவளது வயிற்றின் குறுக்காக வந்து விழுந்தது அவன் கை. கைரோமங்களின் வருடலில் அவள் தேகமே புல்லரித்தது. கழுத்தடியில் அவனது சூடான சுவாசம். முதுகில் வந்து உரசுகிற அவனது தேகச்சூடு.

நேரம் கெட்ட நேரத்தில் இந்த மனிதருக்கு... இந்த நினைப்பா? அலுத்துக்கிடந்த பூவாத்தாவுக்குள் மண்டிக்கொண்டு வந்த எரிச்சல்.

'என்ன...?' இறுகலான அவளது குரல்.

"சும்மாதா"

"சும்மான்னா"

"ஒண்ணுமில்லே"

அவனது கை இடம்மாறி, தடுமாறிக் கொண்டிருந்தது. அந்தக் கையை வெறுப்புடன் தட்டிவிட்டாள்.

"இதுக்கு மட்டும் பொண்டாட்டி வேணுமாக்கும்?"

"இதுக்கு மட்டுமா? எதுக்குமே எனக்கு பூவாத்தாதான். நீதான் எனக்கு சகலமும்"

"பேச்சுலே ஒண்ணும் கொறைச்சலில்லே. எம்மேல உங்களுக்கு அக்கறையேயில்லை"

"எனக்கா... இல்லே?"

"ஆமா"

"எப்படிச் சொல்றே?"

"நா குளிச்சு எம்புட்டு நாளாச்சு? ஒரு நாளாச்சும் ஏன்னு கேட்டதுண்டா?"

"நானே ஒன்னைக் குளிப்பாட்டி விடணுமா?"

"நா... அந்தக் குளிப்பைச் சொல்லலை"

"பெறகு? எந்தக் குளிப்பு?"

"அந்தக் குளிப்பு"

மனசின் ஆழத்தில் ர்கசியமாய் அவளது குரல். அந்தரங்கமாய் ஒலித்தது. கிசுகிசுத்து நழுவியது.

அவனது குரலிலும் ஓர் உணர்வு மாற்றம்.

"எம்புட்டு நாளாச்சு?"

"நாளு தப்பிப்போய்... இன்னையோட முப்பத்தேழு நாளாகுது"

"அப்ப்...படியா?"

"ஆமா. மூணு வருஷமா ரெண்டு பேருமா வாழ்றோம். நாளும் பொழுதும் நகர்றதே பெரும்பாடா இருக்கு. ஒரு புள்ளையும் பெறந்துச்சின்னா... அதை வச்சு எப்படிக் காப்பாத்தப் போறோம்? நம்ம கையிலே ஐவேசு ஒண்ணுமில்லே. எப்படிப் பாடுபடப் போறோம்? ஒரு நோய் நொடி வந்தா எப்படிச் சமாளிக்கப் போறோம்? நெனைச்சாலே... படபடப்பா இருக்கு. நீங்க என்னடான்னா... வெளையாட்டுப் புள்ளை மாதிரி பொறுப் பில்லாம இருக்கிக..."

கவலைப்பட்ட பாவனையில் பேசினாலும், பூவாத்தாவுக்குள் ஒரு பூரிப்புதான். ஓர் உயிரை சுமக்கிற மகிழ்ச்சியின் ததும்பல். ஒரு சிசுவைப் படைக்கும் தாய்மைப் பூரணத்தை எட்டப் போகிற சந்தோஷம். பனிச்சுமை தாங்காத பூவாக அவள் குலுங்கினாள்.

கர்ப்பம் என்றவுடன் புருஷன் குதிக்கப் போகிறான். சிறுபிள்ளை போல் கும்மாளம் போடப் போகிறான். தன்னைக் கட்டிப்பிடித்து சந்தோஷம் தாளாமல் கொண்டாடப் போகிறான்...

ஆவல் பரபரப்பில் காத்துக் கிடந்தாள். ஆனால், அவன் செயலற்றுப் போனான். ஆழ்ந்து பெருமூச்சுவிட்டான். மேலே போட்டிருந்த காலை எடுத்துக் கொண்டான். சூடான சுவாசமில்லை, மல்லாந்து படுத்துக் கொண்டான். அவன் தேகச்சூடு விலகிப் போயிருந்தது.

இடையில் வந்து உட்கார்ந்துகொண்ட இடைவெளியின் தகிப்பை அவள் மனசுக்குள் உணர்ந்தாள்.

"என்ன... பேச்சு மூச்சையே காணோம்?" திரும்பாமலேயே குறும்பாகக் கேட்டாள்.

"ஒண்ணுமில்லே" அடர்த்தியான அவனது குரல். யோசனையில் மூழ்கி, அமைதியில் அழுத்தமாகிவிட்ட குரல்.

* * *

"என்ன பூவாத்தா, கடைக்குப் போறீயா?" வேற்றுக்குரல் வெளி உலகமாய் வந்து முட்டியது. உள் உலகத்திலிருந்து மீண்டு வந்தாள் பூவாத்தா. எதிரில்...

சாலையோர வியாபாரிகள் சங்கத் தலைவர் சொர்ணமணி.

"என்னண்ணே... இங்குட்டு?"

"பிரஸ்ஸுக்குப் போயிட்டு வாரேன். ஆமா. ஒம் புருஷனுக்கு என்னாச்சு? ஆளே மாறிப் போய்ட்டானேம்மா..."

"என்னண்ணே சொல்லுதீக?" பதறிப் போனாள்.

சொர்ணமணி சிரித்தான்.

"முந்தியெல்லாம் சங்கக் கூட்டத்துக்கு வந்தான்னா பூப்போல் இருந்துட்டுப் போயிடுவான். இருக்குற இடமே தெரியாது. நேத்து என்னாடான்னா...!"

"ம்... ஏதாச்சும் ரகளை பண்ணிட்டாரா?"

"அதெல்லாமில்லேம்மா. நேத்துக் கூட்டத்துலே அவன் சத்தந்தான் தூக்கலா நின்னுச்சு. நெடுஞ்சாலைத்துறை மூணு தடவை நோட்டீஸ் அனுப்பியிருக்கே. அதைப்பத்தி கொதிச்சுப் பேசினான். ரெண்டுல ஒண்ணு பார்த்தே தீரணும்னு ஒத்தைக் கால்லே நின்னான்..."

"அப்புடியா?"

"ஆமா பூவாத்தா பயந்துபோய் கிடந்த அவன் இப்ப ரொம்பத் தெளிவா பேசுறான். என்னமோ – மாயம் நடந்திருக்கு"

அவளுக்குள் ததும்பிய பூரிப்பு. காலடி முழுக்க பூத்தூவிய மாதிரியோர் உணர்வு. அவள் அப்படியே குளிர்ந்து போனாள்.

எக்காளச் சிரிப்பு சிரித்த அய்யாவின் உதடுகள் சுருங்கி ஒடுங்கிப் போகிற மாதிரியோர் பிரமை. மகிழ்ச்சியில் நனைந்து போன மனசு.

அந்த மகிழ்ச்சிக்குள்ளும் ஒரு சின்ன நெருடல். ஒரு குழப்பம். அது என்ன மாயம்? ஆளைத் தலைகீழாய் மாற்றிய அந்த மாயம்தான் என்ன?

ஒரு இழவும் புரியவில்லை.

நிமிர்ந்து நடைபோட்டாள்.

அதோ கடை. கடையில் தொங்குகிற இரண்டு பெரிய மாலைகள். கடையின் முன்னால் ஒருவர்.

மாலையை காட்டி ஏதோ பேசுகிறார்.

அந்த மாலையை இருபத்தைந்து ரூபாய்க்கு விற்க வேண்டும். இருபதுக்கு குறைவாக விற்றால் நட்டம்தான்.

சத்தமில்லாமல் போய் கிடுகு மறைவில் நின்று கொண்டாள்.

"என்னய்யா, இந்த மாலை முப்பது ரூபாயா? அநியாயமா இருக்கே".

"அண்ணாச்சி, நம்மகிட்டே 'காமா, சோமா' அய்ட்டமே கிடையாது. பாருங்க, மாலை பூராவும் மல்லியும், ரோசாவுந்தான். வேற வாசனையில்லாத பூவே கிடையாது."

"அதெல்லாம் சரிதான். கொஞ்சம் கொறைச்சுக்கங்க"

"கொறைக்க இடமேயில்லை, இந்த வெலையும் ஒங்க மொகத்துக்காகத்தான்!"

"சொன்னா – சொன்ன வெலைதானா? ஒரு சொல் கடையா? கொஞ்சம் கொறைச்சுக்கங்க"

"ம்ஹூம் இடமேயில்லேண்ணாச்சி"

"இப்படிச் சொன்னா எப்படி?"

"என்ன செய்யறது? பூ வெல அப்படியிருக்கு, எட வாடகை ஆளைத் தூக்குது. இதுலே ரெண்டு ரூவா பாத்துத்தான் – நாங்க புள்ளைக்குட்டியை காப்பாத்த வேண்டியிருக்கு"

"சரி... உங்க மனசு. இந்த மாலையை எடுங்க. நல்லா எலைவைச்சு கட்டிக் குடுங்க"

"ம் – அழகா கட்டிருவம்"

அவன் மாலையை பார்சல் பண்ண, அந்த ஆள் முப்பது ரூபாயை மேஜை மேல் வைத்தார்.

"கடைக்கார அண்ணாச்சிக்கு புள்ளைக எத்தனை?"

"ஒரு புள்ளை, இன்னும் ஏழெட்டு மாசத்துலே பெறக்கப் போகுது"

அந்த ஆளுக்கு சிரிப்பாணி பொத்துக் கொண்டு வந்தது.

"அடேங்கப்பா... பெறக்கப் போற புள்ளைக்கு இப்பவே சம்பாதிக்கிகளாக்கும்?"

"என்ன செய்யச் சொல்லுதிக? நம்ம பொழைப்பும் அம்புட்டுக்குள்ளேதானே இருக்கு"

அவர் புன்சிரிப்பு உதட்டில் இருக்க, மாலையை எடுத்துக் கொண்டு புறப்பட்டார். மிச்சமிருந்த ஒரு மாலையை அவன் பார்த்தான்.

பூவாத்தாவுக்குள் மகிழ்ச்சித் திணறல். அட இந்த மனிதருக்குள் இப்படியொரு சாமர்த்தியமா? இத்தனை சாமர்த்தியத்திற்கும் மூலம் யார்? அந்த மாயம், என் கர்ப்பம்தானா? என் பிள்ளைதானா?

என் வயிற்றுப்பிள்ளைதான், இந்த அப்பிராணி மனிதரை ஒரு பொறுப்புள்ள அப்பனாக வார்த்துவிட்டதா...!

கடைக்குள் வந்தாள். அவன் ஓடிவந்து அவளது பூச்சுமையை இறக்கி வைத்தான். அவள் மனச்சுமையையும்தான்!

*1992 ஜூன் வாசுகி முதற் பரிசுக் கதை*

# அதிகாரி

ஆட்டுக்கம்பை ஊன்றிக்கொண்டு வேப்ப மரத்து நிழலில் வெக்கையாக நின்றான், சில்லாண்டி. மனசுக்கிடந்து கொதித்தது. பொங்கிப் பொங்கி வந்த அழுகையை ரோஷத்துடன் அடக்கிக்கொண்டான்.

"இந்தப்பய சொன்னதுக்கெல்லாம் அழுகணுமோ...? நா என்ன சின்னப் பப்பாவா?" சிடுசிடுப்பான முணு முணுப்பு. சீறிச்சினந்த ஆங்காரத்தில் கோவிந்தனைத் திட்டினான். அனல் பறக்கும் திட்டுகள். நாற வசவுகள். கேட்டால்... நாண்டுக்கிட்டுத்தான் சாகணும்.

இவனுக்கு எதிரே விரிந்து பரந்த கரிசல் தரிசு. அருங்கோடை. ஒரு பச்சையோ, பசப்போ கண்ணில் தட்டவில்லை. உலர்ந்து காய்ந்து சருகாகிப்போன கோரைப் புல், கரட்டுப்புல்லை நக்கித் திரிந்தன வெள் ளாடுகள். வெக்கரித்த வெயில், ஏக்கமும் நப்பாசையு மாய் நிமிர்ந்து நிமிர்ந்து கள்ளப்பார்வை பார்த்துக் கத்துகிற ஆடுகள், பச்சைக்கு ஏங்குகிற ஆடுகள்.

இவனது ஆங்காரத்தில் அதன் ஏக்கமான கதறல்கள்கூட எரிச்சல்படுத்துகிறது. குனிந்து கல்லை எடுத்து எறிகிறான். எரிகிற கற்கள் 'விர்ர்ர்...விர்ர்ர்ங்' என்ற விசை இரைச்சலோடு பாய்கின்றன. குறிப்பாக கோவிந்தனின் ஆடுகளை நோக்கியே பாய்கிற அவனது மனக்கற்கள்.

நீல டவுஷர் சாயம் போய்... நூல் நூலாய்த்

தொங்கியது. அழுக்கான சீசன் துண்டு தலையில் வட்டக்கட்டாகக் கட்டப்பட்டிருந்தது. இன்னும் பூனை ரோமம் அரும்பாத பிஞ்சுப் பருவம்.

இவனது முதுகுக்குப்பின்னால்–

கோலாகலச் சத்தம், பொங்கல் வைத்து மொட்டை எடுத்து, காது குத்த சாதிசனத்தோடு வந்தவர்களின் மகிழ்ச்சியான ஆரவாரக் கூச்சல்.

"அடுப்பை மூட்டுங்கடா..."

" அரிசியை அரிச்சுப் போடுங்க"

"பொங்கப்பானையிலே சந்தனம் பூசி... குங்குமம் வை"

ஏகமாய் மனிதக் கூச்சல். உத்தரவிடுகிற – எகிறுகிற – கிண்டலடிக்கிற – வெறுமனே கெக்கலிக்கிற சத்தங்கள்.

இவன் அந்தப்பக்கம் திரும்பவேயில்லை. மனசெல்லாம் கிடந்து கசக்கிறது. சத்தமுகங்களோடு மனசுக்குள் தெரிகிற அந்தக் கோவில் கோலாகலம், இவனுள் வெறுப்பலை அலையாக எழுப்புகிறது.

காட்டுக்கோயில், பெரிய கோயில், மூன்றாள் உயரத்துக்கு கல்கோட்டைச்சுவர். அதற்கும் மேலே நெஞ்சையும், தலையையும் பயங்கரக் கண்ணையும், மீசையையும் காட்டிக்கொண்டு, சாட்டையேந்திய உ...சத்தியான வீரபாண்டிச்சாமி. வாசல்படியில் நாலுபேர் படுக்கலாம். அத்தனை நீள அகலம்.

சில்லாண்டிக்குள் குதறப்பட்ட அவமான ரணம். ஒரு பிடிவாதத்தில் கழுத்தை அந்தப் பக்கம் திருப்பாமலிருந்தான். ஆனால்... மனசின் ஆழத்தில் ஆசை.

அந்தக்கோலாகல ஆரவாரக் கூச்சலில் தனது குரலும் கலந்து நிற்கவேண்டும் என்ற ஆசை. பொங்கல் வைப்பதை... மொட்டை போடுவதை.... சந்தனம் தடவிய சின்னத் தலையைப் பார்க்க ஆசை. அந்த மகிழ்ச்சியான மனிதக் களேபரத்தில் தானும் சமதையாகக் கலந்து மகிழ்ந்து குலாவிக் கிடக்கணுமென்னும் ஆசை. வெள்ளையும் சொள்ளையுமாகக் கிராமத்துஆண்கள்... பூப்போட்ட சேலைகளின் ஜ்வலிப்பில் கிராமத்துப் பெண்கள். சந்தோசமாய்ப் பேசிச் சிரித்து.... மனக் கொண்டாட்டமாய்க் குதூகலிக்கிற அழகைப் பார்க்க ஆசை....

என்ன செய்ய....?

இவன் எப்ப... எதுக்கு.... என்ன ஆசைப்பட்டாலும் நிறைவேறாது. அதோடு மட்டும் வெறுமனே போகாது. மனசின் ஆழம் வரைக்கும் ஓர் அரிவாள் வெட்டு விழும். காயமாக்கும். அவமான ரணம். சாகும்வரைக்கும் மாறாத தழும்பாகிப் போகும்.

இப்பவும்... அப்படித்தான்...

நின்ற நிலையில் நிற்பது கஷ்டமாக இருக்கிறது. கால் கடுக்கிறது. தொடைச் சதையெல்லாம் உளைச்சல் எடுக்கிறது. சற்று விலகி, விலகி கள்ளத்தனமாய் நழுவ தருணம் பார்க்கும் ஆடுகளை கல்லால் எறிகிறான்.

"ஹைய்த்... ஹைய்க்... ஏய் மூஞ்சி வெள்ளை, எங்க பாயப் பாக்கே?" என்று ஆடுகளின் பேர் சொல்லி அதட்டுகிறான்.

வேப்பமரத்து நிழலிலேயே ரெண்டு சுற்று சுற்றுகிறான். காலார நடக்கிறான், அப்புறம்... ஆட்டுக்கம்பை சாய்வாக ஊன்றி அதன் மேல் இடது கட்கத்தைப் போட்டு.... விறைத்த இடது கால் பாதத்தில், வலது காலைத் தளரச் செய்து ஊன்றிக்கொண்டு... உடம்பின் பாரம் முழுவதையும் கம்பின் மோல் போட்டு...

பசுக்களை மேய்க்கும் கோகுலகிருஷ்ணனைப் போல நின்றான் சில்லாண்டி.

தூரத்தில் ஊருக்குள் பள்ளி மணியோசை ஒலிப்பின் மங்கலான இரைச்சல். இவனுக்குள் இனம்புரியாத ஏக்கம். இழப்புச் சோகம்.

கோவிந்தன்கூடச் சுத்தித் திரியலாம்கிற விருப்பத்துக்காக – ஏழாப்பு அரைப்பரீட்சை முடிந்த கையோடு, அய்யாவிடம் சண்டை போட்டு அடம்பிடித்து ஆட்டுக்கம்பைப் பிடித்த அந்த நாள்.

ரெண்டு வருஷமாயிற்று.

இப்போது படித்தால்... ஒன்பதாம் வகுப்பில் இருப்பான். காக்கி டவுசரும், வெள்ளைச் சட்டையுமாக இருந்திருப்பான். வகுப்பில் நாலாவது... ஐந்தாவது ரேங்க்கில் இருப்பான்.

எல்லாம் போச்சு. இந்தக் கோவிந்தன் பயலோட நட்பை பெரிசா நெனச்சு வந்தது தப்பாப்போச்சு.... ஆயுசுக்கும் தீராத மானக்கேடாகிப்போச்சு.

ஒண்ணாப்பிலிருந்து கூட்டாளி கோவிந்தன். பக்கத்திலேயே ஒட்டியிருப்பான். சிலேட்டில் இவன் எழுதியதைப் பார்த்துப் பார்த்துத்தான் கோவிந்தன் எழுதுவான். படிப்பில் ரொம்ப மக்கு.

கோவிந்தன் ஏழாப்பு வரைக்கும் வந்தான். கால் பரீட்சை எழுதி முடித்தவுடன்... படிப்புக்கும் "கோவிந்தா" போட்டு விட்டான். ஆட்டுக்கம்பை எடுத்து அவனது அய்யா கொடுத்து விட்டார். அவனும் ஆனந்தக் கூத்தாட்டம் போட்டுக்கொண்டே ஆடுகளைப் பத்திக்கொண்டே காடுகரைக்குப் போய்விட்டான். கூண்டுவிட்டுப் பறந்த குருவி. ஆகாயம் முழுக்க ரெக்கையடித்த சுதந்திரக்குருவி.

ரெக்கையொடிந்த மாதிரியிருந்தது. சில்லாண்டிக்கு. ஏழு வருஷ சிநேகிதன். இல்லாமற்போன இழப்புச் சூன்யம். பழகுவதும் சிரிப்பதும்... கேலி கிண்டல் பண்ணுவதும்... நையாண்டி பண்ணி கூத்தடிப்பதும்... கோவிந்தன்கூட இருந்தாலே... கும்மாளம்தான். குதூகலம்தான். குறும்பும் குசும்புமாய் மனசே பொங்கி வழியும். சந்தோஷமாயிருக்கும். உயிர் சிநேகித்தை உணராமலேயே அனுபவித்தான்.

இதெல்லாம்... கோவிந்தன் இல்லாமற்போன பிறகுதான், சில்லாண்டிக்கே புரிந்தது. பிரிவின் வேதனை தாளாமல் ஏங்கினான். கோவிந்தனைப் பிரிந்துவாழ, சில்லாண்டிக்கு மனசில்லை. படிப்பிலிருந்த ருசியே போயிற்று. வகுப்பே சப்பென்று ஆகிவிட்டது. "அறுத்துக்கொண்டு ஓடிவிடலாமா" என்று அவன் மனசுக்குள் துடிப்பு, தவிப்பு, ரெக்கையடிக்க ஆசைப்படுகிற மனசு. கோவிந்தனுக்குள் போய் விழுந்துவிட ஆசை.

அய்யாவிடம் சண்டை போட்டான். அடம்பிடித்தான் ஆடு மேய்க்கப்போவதாக ஆலாய்ப் பறந்தான். பாவம், அய்யா!

நாயக்கர் வீட்டில் சாணி, சகதி அள்ளி, பழைய கஞ்சியை மாட்டுத்தொழுவத்தில் வைத்துக் குடிக்கிற அய்யா. 'ஆடு மேய்க்கப் போகணும்'னு ஆலாய்ப் பறக்கிற மகனின் அக்கறையில் குளிர்ந்துபோன அய்யா, பூரித்து மகிழ்ந்த அய்யா.

அரைப்பரீட்சை முடிந்த கையோடு ஆட்டுக் கம்பைத் தூக்கிவிட்டான் சில்லாண்டியும்.

கோவிந்தன் கூட்டுக்காக படிப்பையே தூக்கியெறிந்தான் சில்லாண்டி. ஆனால் கோவிந்தன்? கோவிந்தன்?

சில்லாண்டிக்குள் தீக் கோலைச் சொருகின மாதிரியிருந்ததது.. "அடப்பாவி... காறித் துப்பிட்டியேடா... நம்பி வந்த ஜீவனோட நரம்பை அறுத்துட்டீயேடா..."

மனசின் கனல் வார்த்தையாகாமல்... முகமற்ற உணர்வுத் தகிப்பாக உள் ஜவ்வையே சுட்டுப் பொசுக்க ...

... ரெண்டு மாசத்துக்கு முந்தி, ஆடுகள் ஊருக்குள் நுழைகிற

சமயம். ஆடுகளை இனம் பிரித்தனர். அவரவர் ஆடுகளை தனியாக்கிப் பத்திக்கொண்டு வந்தனர். கோவிந்தன் ஊருக்குள் போனான்.

சில்லாண்டி ஊரைத் தாண்டியிருக்கிற சேரிக்குப் போயாகணும்.

"போய்ட்டு வாரீயா...டா கோவிந்தா?"

"ம்"

"நீ வாரீயா....டா? நா வரட்டா? கொழை ஒடிக்கப் போவணும்லே?"

"ம். நானே வாரேன்"

சிரிப்பின் வெளிச்சம் சில்லாண்டி முகத்தில் மின்னியது. மனசின் சிரிப்பு. மனநட்பின் நெகிழ்வு. பூரிப்பின் மலர்ச்சி.

ஆனால்... கோவிந்தன் முகம் சிரித்தது. அது முகச்சிரிப்புதான். மனச்சிரிப்பாகத் தெரியவில்லை. ஏதோ தர்மசங்கடமான தவிப்பை வேப்பெண்ணெயை மாதிரி விழுங்கிக்கொண்டு சிரிக்கிறான்.

ஆடுகளைக் கொண்டுபோய், வேலிப்படலுக்குள் அடைத்தான். வேலிப்படலின் மூலையில் ஆட்டுச்சாணிக்குப்பை. அதன் கொச்சை வாடை. குப்பென்று நாசியை தாக்குகிற சாணியின் நெடி. அந்தக் குப்பை குமியிலிருந்து "கத கத" வென்று வெக்கையான ஆவி வந்துகொண்டிருந்தது. வேலிப்படலின் கதவை இழுத்து மாட்டிவிட்டு–

வீட்டுக்கு ஒட்டமும் நடையுமாய் வந்தான். மனம் முழுவதும் ஓர் இனம்புரியாத பரபரப்பு. அவன் ரத்த அணுக்களில் பரவியிருந்த ஒரு மனத்துரிதம். "கோவிந்தன் எப்பவருவான்?" என்று அலைபாய்கிற மனசு.

"எம்மா... எம்மா..."

கத்திக்கொண்டே ஓடிவருகிற சில்லாண்டி.

"எம்மா.... சோறு வை...வ வுறு பசிக்கும்மா..."

"ஏண்டா சனியனே, வந்து நிக்குறதுக்குள்ளே வவுத்தைக் காட்டுதே? கால்லே வெண்ணியை ஊத்திக்கிட்டு நின்னா... என்ன செய்ய?"

"இப்ப, சோறு வைக்கப் போறீயா, இல்லியா...?"

"இருடா.. எடுபட்ட பயலே"

உச்சஸ்தாயியில் கத்தி வெடிக்கிற அம்மா.

அள்ளிப்போட்ட மாதிரி 'அவுக், தொவக்' கென்று உண்டு முடித்தான். ஈரக்கையை டவுசரில் துடைத்துக்கொண்டே வந்தான். தெருவிளக்கின் வெளிச்சம். நுனி சுருண்ட வாலோடு சோம்பலான அசமந்தமாய் அலைகிற பன்றிகள்.

எட்டிப்பார்வையை எறிந்தான். கோவிந்தன் தட்டுப்படவில்லை. ஆவல்பறப்பில் ரெக்கையடிக்கிற மனசின் துள்ளல். பரபரப்பு நிலைகொண்டு நிற்க முடியவில்லை.

'இந்தக் கணமே கோவிந்தனைப் பார்த்தாகணும்' என்று துடிக்கிற மனசு.

பொறுமையில்லாதவனாக சில்லாண்டி ஊர்த்தெருவை நோக்கிப் புறப்பட்டான். இல்லை, பாய்ந்தான்.

ரெண்டுபேரும் ஊர் மைதானத்தில் உட்கார்ந்து ஊர்க்கதைகள் பேசினர். கொழை களவுக்குப்போகணும். 'ஊர் அடங்குகிற' வரைக்கும் பம்மிப் பதுங்கணும். ராத்திரி பூராவும் ஆடுகள் கடிக்க பசுங்கொழை வேண்டுமே...

நேரம் ஊர்ந்தது.

"கோவிந்தா... போவுமாடா?"

"ம். நேரம் எம்புட்டு இருக்கும்?"

"பத்துக்கு மேலே இருக்கும்டா... சரி, கொழைக்கு எங்க போறம்?"

"ராமையா நாடாரு புஞ்சைக்குடா" என்று கோவிந்தன் குசுகுசுத்தான், ரகசியமாக.

ரெண்டுபேரும் போய்க்கொண்டிருந்தனர். ஒருவர் மற்றவருக்கு கரிக்கட்டையான வடிவமாகத்தான் தோன்றினர். கனத்த இருட்டு. கிள்ளிவிட்டு ஓடுகிறவனைக்கூட காணவிடாத இருட்டு.

அப்போதுதான்–

கோவிந்தன் "டேய் சில்லாண்டி" என்று ரொம்பக் கனிவாகக் கூப்பிட்டான். "பேசவா வேண்டாமா" என்று பலநாள் மனத்தயக்கத்திற்குப்பிறகு, பேசப்போகிறான், இன்றைக்கு. குரலில் அந்தத் தயக்கம், தடுமாற்றம், குழைவு, வெட்டுவதற்கு முன் ஆட்டின் கழுத்தில் போடுகிற மாலை மாதிரியான ஒரு குழைவு".

"என்னடா... கோவிந்தா?"

"நாம ரெண்டு பேரும் ஒண்ணாப்புலேயிருந்து கூட்டாளிக. உசுருக்கு உசுரா பழகுறோம்... போடா, வாடான்னு சர்வ சாதாரணமாக பேசிக்கிறோம், இல்லியா?"

"ஆமா... அதுக்கென்ன?"

"எங்க தெருக்காரங்க என்னை வைதாக. தாறுமாறா இழிவாப் பேசுதாக"

"என்னன்னு?"

"என்னதான் கூடப் படிச்சாலும், சாதி இல்லேன்னு போயிருமா? எளிய சாதிக்காரன் வந்து 'ஏலேய்..... ஓலேய்'னு ஒன்னைக் கூப்புடுதான். நீயும் பல்லைக் காட்டிக்கிட்டு 'ஈ.ஈ'ன்னு இளிக்கியே... ஒனக்கு மானாபிமானமில்லியா? சாதி ரத்தம் ஓடலியா'ன்னு ரொம்ப மானக்கேடாப் பேசுதாக, அதட்டுதாக..."

உயிரில்லாமல் 'ம்' கொட்டுகிற சில்லாண்டி. அவனைச்சுற்றி நின்ற இருட்டு, இப்போது மனசுக்குள் பய இருட்டாக.... பீதி இருட்டாக... கிலி இருட்டாக...

மனசுக்குள் அரிவாள் வெட்டு விழுந்த மாதிரியோர் அதிர்வு. உலர்ந்து போன உயிரற்ற உதடுகள். "அதுக்கு நா என்ன செய்யணும்?" என்று ஹீனமாய்க் கேட்டான். மனச்சாட்சியின் குற்ற உணர்ச்சியின் உறுத்தலில் தடுமாறுகிற கோவிந்தனின் குரலை திகிலுடன் எதிர்பார்த்தான் சில்லாண்டி.

"அவுக சொல்றதுலேயும் ஞாயம் இருக்குல்லே?"

சம்பந்தமற்ற – தொடர்பற்ற கோவிந்தனின் பதில். சில்லாண்டிக்குள் ஏதோ ஒன்று நொறுங்கி உதிர்கிற உணர்வு, அடி வயிற்றில் பகிரென்கிற திகில். மௌனம். சில்லாண்டிக்குள் கனத்த மௌனம்.

"மத்த எடங்கள்ளே நீ 'வாடா, போடா'ன்னு கூப்புட்டுக்க. ஊருத் தெருவுக்குள்ளே மட்டும்..."

"ம்? மட்டும்? வாங்க சாமி, போங்க சாமிங்கணுமா?"

"வேண்டாம். 'வாங்க... போங்க'ன்னு கூப்ட்டாப் போதும்".

அப்போது அவர்கள் மயானத்தைக் கடந்து கொண்டிருந் தார்கள். இறந்தவர்களைப் புதைக்கிற – எரிக்கிற இடம்.

இவர்களது ஏழு வருஷ நட்பைப் புதைக்கவா, எரிக்கவா?

சில்லாண்டியின் வெள்ளை மனதில் – கள்ளமற்ற பாலக

மனசில் – பதிகிற சமூகத்தின் கூர் நகங்கள். குத்திக் கிழிக்கிற குரூர நகங்கள். மனித நீதிக்குப் பொருந்தாத கொடிய நகங்கள்.

"தடுமாற்றமும் தயக்கமுமாய் தர்மசங்கடப் பட்டாலும், கோவிந்தனும் சாதி பார்த்துவிட்டானே... நட்பைவிடச் சாதி பெரிசு என்று நினைத்துவிட்டானே" என்ற உணர்வுதான். நினைக்க நினைக்க அவனுள் ஒரு குண்டுபோல வெடித்தது.

இப்பவும் அப்படித்தான். ரெண்டுபேரும் ஆடுகளைப் பத்திக்கொண்டு கரிசல் தரிசில் விட்டனர். பக்கத்தில் எந்த வெள்ளாமையுமில்லை. ஆடுகளைத் தன்போக்கில் விட்டுப்புட்டு.... சற்று சுதந்திரமாக விட்டாற்றியாக இருக்கலாம்.

கோயிலுக்குள் நடந்த கோலாகலம். எப்போதும் வெறிச்சென்று கிடக்கிற கோயிலுக்குள் இன்றைக்கு நடந்த கோலாகலம். மனித நடமாட்டம். சந்தோசக் கூவல்கள். ஆரவார இரைச்சல். சில்லாண்டி தான் ஆர்வமும், குதூகலப் பரபரப்புமாய்க் கேட்டான்.

"ஆடுக மேயட்டும்.... நாம வேணும்னா கோயிலுக்குள்ளே போவமா?"

"எதுக்கு?"

"பொங்க வைப்பாக. மொட்டை எடுப்பாக... கொலவை போடுவாக... நாமளும் பொங்கச்சோறு வாங்கித் திங்கலாம்.

"அப்ப.... நா மட்டும் போறேன். நீ ஆட்டைப் பாத்துக்க"

"ஏன்? நா வரக்கூடாதா?"

"நீ உள்ளே வரமுடியாது. நா வேணும்னா, ஒனக்கும் சேத்து பொங்கச்சோறு வாங்கிட்டு வாரேன்..."

"ஏன்... நா வந்தா என்ன? எனக்குச் சாமியில்லியா?"

"அது என்னமோ.. எனக்குத் தெரியாது... இந்தக் கோயிலுக்குள்ளே நீ காலெடுத்து வைக்கமுடியாது. சொன்னாப் புரிஞ்சுக்க..."

அலட்சியமாகச்சொல்லிவிட்டு ஒரே ஓட்டமாய் ஓடிப்போய் விட்டான், கோவிந்தன். வெட்டுப்பட்ட வெள்ளாடாய்த் துடித்த இவன் முகத்தை – கண்களை – மனசை – பார்க்கவேயில்லை, கோவிந்தன்.

எந்தவித மன உளைச்சலுமில்லாமல், ஆர்வமும் ஆசையுமாய்ப் பரபரத்த இவனை – இவனது உணர்ச்சிகளை வெட்டிவிட்டுப் போய்விட்டான். அலட்சியமான புறக்கணிப்பு. அவமானகரமான நிராகரிப்பு.

காயம்பட்ட மனசில் உப்பையள்ளிப்போட்ட மாதிரி காந்தலெடுத்தது. வேப்பமரத்து நிழலில் வெக்கையாக நின்றான் சில்லாண்டி.

முதுகுக்குப் பின்னால் இருக்கும் கோயிலைப் பார்க்காமல் விசனப்பட்டுப்போய். கோபித்துக்கொண்டு.... விகாரங்களால் குதறப்பட்ட மானாபிமான ரணத்தோடு.... ஆட்டுக் கம்பை ஊன்றிக்கொண்டு....

நீண்ட யோசனையில் நேரம் போவது தெரியாமல் மூழ்கிக் கிடந்த சில்லாண்டி.... கால் எரிச்சல் பற்றியதால்.. காலை மாற்றி ஊன்றினான். தற்செயலாக கரிசல் தரிசைப் பார்த்தான்.

தரிசு, தரிசாகவே கிடந்தது. வெள்ளாடுகளைக் காணோம். ஓர் ஆட்டைக் கூடக்காணோம். திக்கென்றது.

விரிந்து பரந்த கரிசல் தரிசு முழுவதும் பார்வையை எறிந்தான். எங்குமே சூன்யம். ஆடுகளற்ற சூன்யம்.

'ஐயய்யோ.... பணம் பெத்த ஆடாச்சே... எங்க போச்சு...? ஏதாச்சும் வெள்ளாமை வெளச்சல்லே... பச்சைப்பசப்புலே போய் விழுந்து மேய்ஞ்சிட்டா...? ஐயய்யோ... ஊர்க்கூட்டம்... வசவுகள்.... அபராதம்....'

சில்லாண்டி பதறிப் பதைத்தான். உள்ளங்கால்வரை பரவிப் பாய்ந்த மன அதிர்ச்சி. பயச்சிலிர்ப்பு. கையும் காலும் ஓடவில்லை.

'முதலில் கோவிந்தனிடம் தாக்கல் சொல்லணுமே... கோயிலுக்குள்ளேயிருக்கிற கூட்டத்துக்குள்ளே இருக்கானே... எப்படிச் சொல்ல?' மனசுக்குள் வியர்த்துக் கொட்டியது.

ஒரே ஓட்டமாய்க் கோயிலைப் பார்த்து ஓடினான். வெறிபிடித்த ஓட்டம். உயிரைக் கையில்பிடித்துக்கொண்டு ஓடிய ஓட்டம்.

நாலு ஆள் நீட்டி நிமிர்ந்து படுக்கலாம். வாசல் படி அத்தனை நீள அகலம். ஓடிய ஓட்டத்தில் அதில் ஏறி மிதிக்கப்போன–

"ஏலேய்!..."

வாசலில் ராட்சஸத் தாட்டியமாய் ஓர் ஆள். வெள்ளை வேட்டியும் மஞ்சள் துண்டும் போட்டு, மீசையும் வைத்திருந்தார். பார்த்தாலே மனசு பதறும். அப்படியொரு தோற்றம்.

திகைத்துப்போய் நின்ற சில்லாண்டி முகத்தில் வெலவெலப்பு. கண்ணில் அப்பிக்கிடந்த பீதி.

"எங்கலே போற?"

கர்ண கடூரமான குரலில் இயல்பான அதிகாரத்தொனி.

ஓடிவந்த வேகத்தில் வேர்வைக்காடு, மூச்சிரைப்பு

"கோயிலுக்குள்ளே... கோவிந்தனை பார்க்க..."

"யாருலே... நீ"

"சில்லாண்டி..... ஆடு மேய்க்கேன்"

"சில்லாண்டியா? சேரிப் பயலா?"

"ம்"

"போடா அங்குட்டு" என்று கோபமாய் வெடித்துக் கத்துகிறார்.

பிடிபட்ட குருவிக்குஞ்சாக 'விலுக், விலுக்'கென்று விழித்தான் சில்லாண்டி.

"ஆடு மேய்க்குற எளிய சாதிப்பயலுக்கு எம்புட்டுத் திமிரு இருந்தா... கோயிலுக்குள்ளே வருவே? ராஸ்கல். போடா நாயே... வாசப்படியிலே காலை வச்சே... மண்டையை ஒடைச்சிப் போடுவேன்... படுவா... போடா... அங்குட்டு..."

கண் மூக்கு தெரியாத வெறியில் கத்துகிற அவர், அதட்டலும், மிரட்டலுமாய் காட்டுக்கத்தலாய் கூச்சலிடுகிற அவர்.

சில்லாண்டி அரண்டு போனான். பயத்தில் டவுசரே நனைந்து போயிற்று. உயிரே அறுந்துபோன மாதிரியிருந்து.

அவனுக்குள் 'என்னன்னவோ' நிகழ... ஆட்டுக்கம்பை எறிந்துவிட்டு நடந்தான். கோயில் வாசப்படியை திரும்பித் திரும்பிப்பார்த்துக்கொண்டே அரை உயிராக நகர்ந்தான்.

மனசெல்லாம் கிடந்து கசந்தது.

அடுத்த வருஷம் ஜூன் மாத்தில் ஏழாப்பில் சேர்ந்தான், சில்லாண்டி மட்டும்.

ஃ ஃ ஃ

கோயில் முன்னால்–

தர்மகர்த்தா உட்பட வெள்ளையும், சொள்ளையுமாய் பிரமுகர்கள் நின்றார்கள். அரசு ஊழியர்களும் நின்றனர். அவர்கள் பார்வைகள் முழுவதுமே ஊரிலிருந்து வரும் மெட்டல் ரோட்டின் மீது நங்கூரமிட்டிருந்தது. ஆவலான நங்கூரம். பரவசக்கூத்தாட்டமான நங்கூரம்.

ஊரிலிருந்து கோயில்வரை ரோடு போட்டு ஏழெட்டு வருஷமாயிற்று.

ரோட்டில் பால்நிறக்கார் புழுதியை கிளப்பிக்கொண்டு பாய்ந்து வந்துநின்றது. ஊழியர்கள் பதற்றமும் பரபரப்புமாய்க் கதவைத் திறக்க 'வாங்க சார்... வாங்க சார்...' என்று பவ்யமாக வணங்கி வரவேற்க... பிரமுகர்கள் முகமெல்லாம் சிரிப்பாக வணங்கி வரவேற்றார்கள்.

காரிலிருந்து இறங்கிவந்த அறநிலையத்துறை அதிகாரி. கோயிலுக்குள் மரியாதையான உபசரிப்போடு மாலையணிவித்து வரவேற்கப்பட்ட அதிகாரி. கோயிலுக்குள் நுழைகிற நேரம் அதிகாரி ஷூவைக் கழற்றிக்கொண்டே வாசல்படியைப் பார்த்தார்.

அதே வாசல் படி.... நாலு ஆள் படுக்கலாம். அத்தனை நீள அகலம்.

அவரைச் சுற்றிலும் வரவேற்புச் சத்தம். 'வாங்க, வாங்க' என்று மரியாதையான உபசரிப்புகள்.

வெறும் உள்ளங்காலை வாசல் படியில் வைக்கிறபோது – குப்பென்று பழைய அக்னி ஜ்வாலைகள் சில்லாண்டி மனசில்.

# கொலை

**கா**ற்று அறவே இல்லை. காடாவிளக்கின் சுடர் அசையாத பிம்பம் போல் நிமிர்ந்து நின்றது. அதன் உச்சியிலிருந்து நீண்ட புகைக்கோட்டின் உச்சி நுனி மட்டும் சுருள் சுருளாக உருண்டு கரைந்தது.

அந்தச் சந்தன வண்ணச் சுடரையே குறி மாறாமல் பார்த்துக் கொண்டிருந்தான் மாடசாமி. திண்ணை யில் சுவரையொட்டி படுத்திருந்த ராசாத்தி நிலை கொள்ளாமல் புரண்டாள். வியர்வை பெருக்கெடுத்து நசநசத்தது. குடிசையைப் போல் உயர்ந்திருந்த அவளது சுமைவயிறு மூச்சிரைப்பினால் விம்மி விம்மித் தணிந்தது.

"உஸ்ஸ்ஸ்... உஸ்ஸஸு... ஸ்ஸஸு..."

நாகப்பாம்பின் சீறலாக ஒலித்தாலும், கொடிய வேதனையும், அதன் உபாதையும் துல்லியமாக உணர்த்தியது.

நிறைமாத கர்ப்பிணியான தனது மனைவி மூச்சுத் திணறலுடன் படும்பாட்டை கண்டு மாடசாமிக்கு மனம் பயத்தால் படபடத்தது.

இரக்கத்தோடு அவளைப் பார்த்தான். அங்கும் இங்கும் புரள்வதும், அசைவதும்... அப்போதெல்லாம் சாய்ந்து நிமிரும் தேர் மாதிரி அவள் வயிறு தோன்றுவதும்....

வேதனைதாங்காமல் உதட்டைக் கடிக்கிறாள். நெற்றியிலும், நாசிக்கடியிலும் வியர்வை முத்துக்கள் விளக்கின் ஒளியில் மின்னுகின்றன. அவள் முகத்தில் சுருக்கங்கள்! வலி தாங்காமல் தவிக்கிற அந்தத் தவிப்பு!

இவனுக்கு இதயத்தை யாரோ அறுப்பது போலிருக்கிறது. அவளைப் பார்க்கப் பார்க்க நெருப்பில் விழுந்த மெழுகாக உருகினான். இதயக் கூட்டையே ஏதோ ஓர் அசுரக்கரம் நொறுக்குவது போன்றதோர் பிரமை!

காட்டுக்கள்ளியாக கவனிப்பாரற்று கிடந்த 'சல்லுவாரியப் பயலான' தன்னையும் ஒரு மனிதனாக மதித்து, கழுத்தை நீட்டி 'குடும்பஸ்தன்' என்ற கோபுரத்துக்கு தூக்கி வைத்தவள்! நஷ்டங்களை ஏந்திக்கொண்டு கஷ்டங்களுக்கு மருந்தாக - கவலைகளுக்குத் துணையாக நின்றவள்! உழைப்பதிலும் 'நாலு பேரைப் போல் வாழணும்' என்பதிலும் அழுத்தமான ஆர்வமும் வெறியுமுள்ளவள்!

இன்பத்தை வழங்கும் தர்மவதியாக பெருமிதம் கொள்ளச் செய்து, இன்பத்தை பெறுவதன் மூலமாகவே வழங்கிய அற்புதமானவள்! மூன்று குழந்தைகளைப் பெற்று ரெண்டை சாவுக்குத்தந்து விட்டு.... நாலாவதைத் தாங்கி.... நாடி நரம்பெல்லாம் முறுக்கேறி தவிப்பதைப் பார்க்கும்போது....

மாடசாமிக்கு நெஞ்சில் ரத்தம் வடிகிறது. மனிதச் சிருஷ்டிக்காக இப்படி மனித வதையா?

அவனுக்கு எதன் மீதோ கோபம் வந்தது. தன்னையே சாடிக்கொண்டான். 'ராசாத்தியின் கொழுப்புக்கு இது வேணும்' என்று சோகத்துடன் சபித்துக்கொண்டான்.

பாழாய்ப்போன 'குருட்டுத் தெய்வத்தை' சாடிக்கொண்டான்.

உபாதை பொறுக்காமல் தீயில் விழுந்த பூச்சியாக அவள் துடிக்கிற கொடுமையை அவனால் சகிக்க முடியவில்லை. "எப்போ என்ன ஆயிப்போகுமோ" என்ற பயம் அவன் நெஞ்சில் பயங்கரப் பாரமாக ஏறிக்கனத்தது.

ராசாத்தியை மெல்ல அணுகினான். வழக்கமான செல்லத்துடனேயே அழைத்தான்....

"ராசு.. ராசு... ஏம்மா ரொம்ப வலிக்குதா?"

அவனது மிருதுவான குரலில் அனுதாபமும் பரிவும் கனிந்துநின்றது.

வலி பொறுக்காதவள் போல உதட்டைக் கடித்துக்கொண்டே புருஷன் முகத்தைப் பார்த்தாள். "ம்க்ம்... ம்க்ம்..." என்று திணறினாள். அவன் முகத்தில் பரவி நின்றி அச்ச இருளைப் புரிந்துகொண்டாள். காய்ந்த உதடுகளை விரித்து சிரிக்க முயற்சித்தாள்....

'அப்படியொன்னுமில்லே...' என்று முணங்கினாள், தன் புருஷனை பயப்பட வைத்துவிட்டோமே என்ற சுயவருத்தம் அவள் நெஞ்சில் குமைந்தது போலும். தனது கண்களால் அவன் முகத்தைக் குளிப்பாட்டினாள். அப்பப்பா அந்தக்கண்கள்... அதன் ஒளி.... அதில் ததும்பிய கனிவு...

"ஏய்யா பயந்து தவிக்கிறே? எனக்கென்ன, கல்லுபோல இருக்கேன். ஓம் புள்ளைதான் என்னமோ இப்பவே சேட்டை பண்ணுதுக..."

சூழ்நிலையை இலேசுப்படுத்த அவள் சொன்ன அந்த அன்பும் ஆறுதலுமான வார்த்தைகள்!.... அவன் உணர்ச்சி கொஞ்சம் சமனப்பட்டன.

மூன்று பிள்ளை பெத்தெடுத்த அவளுக்குத் தெரியாதா? ஆறு மாதத்துக்கு முன்பே சொல்லிவிட்டாள். "இந்த வட்டம் ரெட்டைப் பிள்ளைதான்" என்று!

"ஏம்மா, ராசு... ரொம்ப புழுங்குதா? கதவைத் தெறந்து வைக்கட்டா?" என்ற பரிவுடன் விசாரித்தவாறே கதவைத் திறந்தான். வழி கிடைக்காமல் திகைத்து நின்ற காற்று, குளுமையான சுகத்துடன் உள்ளே பாய்ந்தது. சுடரும், ஒளியும் நடுங்கியது. காற்றும் இருளும் ஒளியை அமுக்க முயற்சித்து தோல்விகண்டன.

கதவைத்திறந்தவன், அப்படியே குனிந்து வெளியே வந்தான். முற்றத்தின் இடதுபுறத் தாழ்வாரத்தில் எருமைமாடு அசை போட்டுக்கொண்டு படுத்திருந்தது. மூத்திரத்தில் நனைந்து கிடந்த அதன் வாலை அடிக்கடி "சளப் சளப்" பென்று தூக்கி அடித்துக்கொண்டது. வலதுபக்கத்திண்ணையில் மூத்த பயலும், 'இளைய பொட்டச்சி'யும் தூங்கினார்கள். அவர்களது மூடு துணியை ஒழுங்குபடுத்திவிட்டு வெளியே வந்தான்.

தேய்பிறை நிலா சிவந்த முகத்துடன் மேல்வானத்தில் சரிந்து கொண்டிருந்தது. காற்று அவனை அன்புடன் தழுவிச்சென்றது. அந்தத் தழுவலில் ஏற்பட்ட சுகம், மனதுக்குள்ளும் கதகதப்பை ஏற்றியது.

அந்தக் கிராமம் ஏறக்குறைய இருண்டு கிடந்து. அங்கொன்றும், இங்கொன்றுமாக விளக்குகள் 'மின்னுட்டான்' (மின்மினி) பூச்சியைப் போல மின்னின. காற்றினால் எழுப்பி இழுத்து வரப்பட்ட தெருப்புழுதி முகத்தில் படிவதை மென்மையாக உணர்ந்தான்.

தூரத்தில் பார்வையை எறிந்தான். எங்கும் இருட்டுத்தான். தொலைதூரத்தில் ஒளித்தூள் மிதந்தன. சூரியன் வருவதற்கு முன்பே கிழக்கு வெளுக்கிறதே... அதைப்போல. ஏதோ நகரத்தின் விளக்கின் ஒளி மட்டும் வெள்ளையாக - அதுவும் மங்கலாக - தொலைதூரத்தில் தெரிந்தது.

இப்படிப்பட்ட வனாந்திர கிராமத்துலே இருக்கோமே.... நான் 'எதாச்சும்' ஆயிப்போச்சுன்னா.... என்ன பண்றது? 'அவுக்குன்னு போனோம், ஆஸ்பத்திரியிலே நின்னோம்'னு இருக்க முடியுமா என்ன? ஏதாவது நடந்து போச்சுன்னா...?

- இந்த நினைவே அவனை திகிலடைய வைத்தது. மனசு நடுங்கிக் குளிர்ந்துவிட்டது.

'இந்தக் கண்ணு முழியாத ரெண்டு குஞ்சுகளை வைச்சுக்கிட்டு நா எப்படி வாழ முடியும்...?'

"என்ன பாடு படுத்தி வைச்சாலும் சரி... அடக்கடவுளே, என்னை அந்தக் கதிக்கு மட்டும் ஆளாக்கிடாதேய்யா"

என்று அச்சத்துடன் வேண்டிக்கொண்டான்.

பதினாறு நாட்கள்-

பீதியும் திகிலுமாக - பயங்கரமான கனவுகள். துக்ககரமான கற்பனைகள். இப்படி மோசமான அவலங்களுடனேயே பதினாறு நாட்கள் கரைந்தோடிவிட்டன.

சாயங்காலம். மணி ஐந்து இருக்கும், மாடசாமிதான் உரலில் சோளத்தை இடித்துத் தந்தான். அவன் அந்த வேலையைச் செய்ய வேண்டிய அவலமும் வந்துவிட்டதற்காக தன்னையும், தன் "விதி"யையும் சபித்துக்கொண்ட ராசாத்தி சோளமாவை உலையில் போட்டுக்கிண்டினாள். அடுப்பில் நீலமும், சிவப்புமான ஜுவாலைகள் பெருகிக் கணகணத்தது.

ராசாத்தியால் உட்காரக்கூட முடியாமல் கனத்த வயிறு நிமிர்ந்து நின்றது... ஆனாலும் பல்லைக்கடித்து உபாதையை சகித்துக் கொண்டு கிண்டிக்கொண்டே இருந்தவளுக்கு மனதில்

கிள்ளியதுபோல ஒரு அதிர்ச்சி! வலி கண்டுவிட்டது.... இது பிரசவ வலிதான் என்று அவளுக்குத் தெளிவாகத்தெரிந்துவிட்டது.

"ஏய்யா.. ஏய்யா..." என்று புருஷனை திணறலுடன் அழைத்தாள். அவனும் பயத்தால் அலறிப்புடைத்து ஓடிவந்தான்.

"ராசு... ராசு... என்னம்மா... ராசு...?"

"லேசா வலிக்குது..."

"அந்த வலியா?"

"அப்படித்தான் நெனைக்கேன். எதுக்கும் என்னைக் கைத் தாங்கலாகத்தூக்கி அப்படி... திண்ணையிலே படுக்கவச்சிடேன்..."

அச்சத்திலும், பரபரப்பிலும் அவன் தவித்தான். அவனது கரங்கள் நடுங்கிற்று. கம்மங்கூட்டுக்குள் கைகளைக் கொடுத்து தன் நெஞ்சோடு அணைத்தே தூக்கி அப்படியே பூச்செண்டாக திண்ணையில் கிடத்தினான்.

"போயி, ராமாயம்மாளை கூட்டிவரட்டுமா?"

ராமாயம்மாள்தான் இந்தக் கிராமத்து லேடி டாக்டர். பேறுகாலம் பார்ப்பது... பேறுகால மருந்து இடித்துத்தருவது.... பிள்ளைக்குப் பக்குவமாகப் பாலூட்டுவது... குழந்தை கழுத்தை தூக்குகிறவரைக்கும் நீட்டிய காலின் இடுக்குக்குள் வைத்து குளுப்பாட்டி விடுவது. இதுபோன்ற பணிவிடை செய்கிற நர்சும் அவள்தான்! டாக்டரும் அவள்தான்!

ராமாயம்மாளைக் கூப்பிட ஓடிய மாடசாமியை மெல்ல முணங்கலாக அழைத்தாள் ராசாத்தி.

"ஏய்யா... ஏய்...யா..."

"என்னம்மா..."

"போற போக்குலே மேலத்தெரு அங்காளம்மா கிட்டேயும், நடுவீட்டு எல்லம்மாகிட்டேயும் 'இந்த மாதிரி ராசாத்தி இடுப்பு வலியெடுத்துக் கிடக்கிறாள்'னு ஒரு வார்த்தை சொல்லிட்டுப் போயிடு" என்று வலியின் முணங்கலுக்கிடையில் அறிவுறுத்தினாள்.

ராசாத்திக்கு 'இடுப்பு வலி இடுப்புவலி'ன்னு ஊர்பூராவும் செய்தி விஷக்காய்ச்சலாக பரவிவிட்டது.

ராமாயம்மாள் வீட்டை மாடசாமி நெருங்கினான். வீட்டின் முன் தாழ்வாரத்தில் அவளது மூத்த மகன், யாருக்கோ முடிவெட்டிக்கொண்டிருந்தான். மாடசாமியின் பதற்றமும்,

பரபரப்பும் அவனது கையிலிருந்த கத்தரிக்கோலையும் திகைக்க வைத்துவிட்டது. 'கர்ச் கர்ச் கர்ச்' சென்ற சப்தத்தை நிறுத்திக் கொண்டது.

"என்னப்பா, என்னாச்சு... இப்படி ஓடியாறீக?"

"அம்மா இருக்காளா?"

"இல்லியே... இப்பத்தான் சோறெடுக்க ஊருக்குள் போயிருக்கா... ஏன்,அதுக்கென்னப்பா?"

"ராசாத்திக்கு இடுப்பு வலி எடுத்துடுச்சு... அதான் கூட்டிட்டுப் போகணும்..."

"அடடே.... அப்புடியா.... ஆண்டவன் புண்ணியத்துலே ஆம்பளைப் புள்ளையெ அழகா.... பெத்தெடுத்து தாயும் புள்ளையும் சுகமா எந்திக்கட்டும்".

அவன் முகத்தில் மகிழ்ச்சி ஒரு பூவைப் போல மலர்ந்து ஒளிவீசியது. நல்லுணர்ச்சியுடன் வாழ்த்தி பிரார்த்தித்துக் கொண்டான்.

"நீங்க போங்கப்பா... எம் பயலை விரட்டி.... ஒரு நிமிஷத்துலே எங்கம்மா உங்க வூட்லே இருக்கிறாப்லே செய்துடறேன்... பயப்படாதேங்க... கடவுள் இருக்கார்,,, நாங்க இருக்கோம். ஏன் பயப்படணும்?"

அந்த எளிய தூய இதயத்திலிருந்து பீறிட்டுவந்த அந்த அன்பு வார்த்தைகள், அவன் நரம்புகளுக்குள் சூடாக ஓடுவது போலிருந்தது. நெஞ்சில் ஒருதன்னம்பிக்கை உறுதியுடன் நிமிர்ந்தது.

அப்படியே பொன்னு வேலய்யா மாமாகிட்டே போய், ஞாபகப்படுத்திட்டு வந்துடுவோம் என்ற நினைப்புடன் கிழக்காக நடந்து அந்தத்தெருவைக் கடந்து, தெற்குத்தெருவை நோக்கி அந்த நீலவண்ணமும், மஞ்சள் வண்ணமுமாக நிமிர்ந்து நிற்கும் 'காரை'வீட்டை நோக்கி நடந்தான்.

மாடசாமி என்ன செய்வான் பாவம்! சாதாரண விவசாயத் தொழிலாளி. அன்றாடக் கூலியில் நான்கு ஜீவன்கள் ஜீவித யாத்திரை நடத்தியாக வேண்டும். அதற்கும் மத்தியில் ஒரு வெள்ளாட்டுக்கிடா வளர்த்து விற்றததில்தான் ஒரு நாற்பது ரூபாயை பேறுகாலச்செலவுக்காக ஒதுக்க முடிந்தது. ரெட்டைப்புள்ளை என்ற நினைப்பு வேறு பயமுறுத்தியது.

பேறுகாலத்தில் ஏதாச்சும் சிக்கல் வந்துவிட்டால்....? ரெட்டிப்பு செலவு வந்துவிட்டால் அந்த அவசரத்துலே திடீர்னு ரூபாயைப்

புரட்ட முடியுமா என்ன? என்ற பயம் நிறைந்த முன் ஜாக்கிரதை உணர்வுடன் ஏற்கெனவே பொன்னு வேலய்யா மாமாவிடம் தலையைச்சொறிந்து நின்றிருந்தான். அவரும் "சரித—ன் போடா, அப்படிப்பட்ட அவசரத்துலே இல்லேனு சொல்றதுக்கு நானென்ன இரக்கமில்லாத அரக்கனாடா? ஒம் மாமாதானே! ஒம்பொஞ்சாதி உசிருக்கு மன்றாடுறப்போ, நா கல்லு மாதிரியா நிப்பேன்?" என்று சமத்காரமாக தைர்யம் சொல்லியிருந்தார்.

• கையோடு அதை நினைவுபடுத்திவைத்தால் நல்லதாகிப் போகுமே என்ற நினைப்பில் வீட்டுக்குள் நடந்தான்.

பொன்னுவேலய்யா மாமாவைக் காணவில்லை. அந்த அக்காதான் இருந்தாள். அவள் செய்தியைக் கேட்டவுடன் ஆனந்தப் புல்லரிப்புடன் 'அப்படியா' என்று எதிரொலித்தாள்.

"ஏதோ அந்த 'ஆத்தா' புண்ணியத்துலே தாய்க்குச் சேதார மில்லாமெ புள்ளையை எடுத்தா போதும்... அந்த ஆயிரக் கண்ணுடையாளுக்கு ராசாத்தியைப்பாக்க ஒரு கண்ணு இல்லாமலா போயிடும்? எல்லாம் 'அவா' பாத்துக்குவாள்" என்று தெம்பு சொன்ன அவள்... "சரிப்பா நீ போய் மத்ததைக் கவனி மாமா வரவும் சொல்லிட்டு... நானும் ராசாத்தியைப் பாக்க வாரேன்" என்று அன்பும், ஆறுதலாக அனுப்பிவைத்தாள்.

தனது வீட்டிற்கு மாடசாமி வந்தபோது மனதில் அச்சக்கறை பெரிதும் கரைந்திருந்தது. சுற்றியுள்ள மனிதர்களின் உறவும், அன்பும், ஆறுதலும் அவனது மனப்பயத்தை துடைத்து ஒளிபெறச் செய்திருந்தது.

கர்ப்பிணியல்லாத அவளது பழைய கோலத்தை மனதுள் நினைத்துக்கொண்டான். கறுப்புப் புறாவாக துடிப்பும், துள்ளலும், மின்னலுமாக சுழன்று திரியும் அந்த அழகு மேலும் செழுமை பெற்று முழுமையுற்ற பேரழகுடன் மீண்டும் தன்முன் நிற்பாள்.... மனதை சுண்டியிழுக்கும்படியான அந்த மாயப்பார்வையை வீசுவாள்.... உதட்டைச் சுளித்து அழகுகாட்டி, கண்ணில் ஒளி துள்ள சிரிப்பாளே அந்த சிரிப்பின் பிரகாசம் தன் நெஞ்சில் இன்ப வித்துக்களை வீசும் என்றெல்லாம் நம்பிக்கையுடன் நினைத்துக் கொள்கிறபோது... அவன் மனம் பரவசத்தில் சிலிர்த்துக் கொண்டது.

"ஆண்டவா எதை எப்படியாக்கினாலும் எனக்குக் கவலையில்லே... ராசாத்தியை மட்டுமாச்சும் மூளி பண்ணாமெ திருப்பிக்கொடுத்துடு".

மனைவி மேலுள்ள அளப்பரிய ஊமைப்பாசம், இதயத்துக்குள் இப்படி பிரார்த்தனைகளாக தவித்துக்கொண்டிருந்தது. பலஹீனம், பக்தியைத்துணைக்கு அழைத்தது.

தனது வீட்டை அடைந்தபோது நிலைமையே வேறு விதமாக காணப்பட்டது. அங்கு எதிர்பாராத பரபரப்பு; திகில் நிறைந்த தவிப்பு. 'என்னாகிப் போச்சு?'

பதற்றத்துடன் வந்தான். மாடசாமியின் மனதில் ஒரு பாறாங்கல்! அவன் விழிகள் பரக்க பரக்க அலைய, பிளந்த வாயுடன் பீதியுடன் கேட்டான்.

"எப்புடியிருக்கு?"

ராமாயம்மாள்தான் சொன்னாள்:

"என்னமோ தெரியலே... வலி துப்புரவா நின்னுபோச்சு..."

"ஐய்யய்யோ... அப்புறம்?"

"அடிச்சுப்போட்டாப்லே கிடக்குது. கொஞ்ச நேரத்துலேயாவது வலி வந்துட்டா சுகமா பேறுகாலமாகிப்போகும்".

வீடு பூராவும் பெண்கள் கூட்டம், அனுதாபமும் பரிதவிப்புமாக பெண்கள் சோகமாக அங்கலாய்த்தனர். ஓரிரு பெரியவர்களும் வீட்டின் முன் வருத்தம் நிழலாக படிந்துகிடக்க நின்றனர்.

மாடசாமி செய்வதறியாமல் தவித்துநின்றான். மனம் அச்சத்தில் வலையில் சிக்கிய புறாவின் சிறகுகளாகப் படபடத்தது.

பாடையில் அவள் செல்வது போலவும் குழந்தைகளை கையில் பிடித்துக்கொண்டு, மேல்துண்டை வாயில் திணித்துக்கொண்டு, தான் அழுவது போலவும் ஒரு கொடிய காட்சி நெஞ்சில் மின்னி மறையும்போது, அவனது சர்வாங்கமும் நடுங்கி அதிர்ந்து அடங்கியது.

பெண்கள் வீட்டுக்குள் அங்குமிங்குமாக பரபரப்பாக துப்பாக்கி குண்டுகளாக பாய்ந்து அலைந்தனர். அவர்களது அங்கலாய்ப்புகள் அனுதாப வார்த்தைகள் பிரார்த்தனை வேண்டுதல்கள்....

அந்தக் கிராமமே காட்டிய அன்னியோன்யம் வழக்கமானது தான்; சாதாரணமானதுதான்.

பெரியவர்களுடன் கவலையும் - பீதியுமான இருட்டுக்குள் மூழ்கி நினைவிழந்தவனாக நின்ற மாடசாமி, உஷ்ணப் புழுதியில் வெட்டிப்போட்ட பூங்கொடியைப் போல அசாதாரண

வாட்டத்துடன் தோன்றினான். அவன் மனத்துள் அலைபாயும் சோகப்பெருவெள்ளம் அவன் கண்ணில் முட்டி நின்றது.

ராமாயம்மாஓடிவந்தாள்.

"இங்கு ஒன்னும் நடக்காது. ஏதாவது ஒரு டாக்டரை கூட்டி வர்ரதுக்கு ஏற்பாடு பண்ணுங்க..." என்று சொல்லிவிட்டு பரபரப்புடன் திரும்பினாள்.

ஒரு பெரியவர் குறுக்கிட்டார்.

"இந்தா ராமாயி..."

"என்னப்பா...?"

"எப்படியிருக்கு, இப்போ..."

"வலி வந்து நின்னுப்போகுது. மூச்சுத்திணறுது... அதைவிடக் கொடுமை என்னன்னா அடிக்கடி ஒடம்பெல்லாம் தண்ணியா குளிர்ந்து போகுது..."

அவள் மறுபடியும் வீட்டிற்குள் போய்விட்டாள். மாடசாமிக்கு திக்கென்றாகிவிட்டது. எதிர்பார்த்த அபாயம் எதிர்வந்துவிட்டது. தன்னை மோதி வீழ்த்திவிட்டு குரூரமாக சிரிக்கப்போகிறது.

இதயமே வெறுமையாகிவிட்டது போன்ற ஒருபிரமை! நெஞ்சுக் குள் 'கபாகபா'வென்று ஏதோ ஒரு மூலையில் கொடிய வேதனை!

பெரியவர்தான் உஷாரானார்.

"என்ன மாடசாமி என்ன செய்றது?"

"அதான் எனக்கும் தெரியலை.." கைகளைப் பிசைந்தான்.

"டாக்டரைக் கூப்பிடணும்னா ஏழு மைல் போகணும், காட்டுப் பாதை. அப்படியே போனாலும் எந்த டாக்டரும் வரமாட்டானுவ..."

"ராசாத்தியைக் கொண்டுபோகலமா...?"

"எப்படி முடியும்? இந்த நிலையிலே இருக்கிறவளை மாட்டு வண்டியிலே வைச்சு, காட்டுப்பாதையிலே போனா... மேடு பள்ளத்திலே குலுங்குனா ஒன்னுருக்க ஒன்னு ஆயிப்போச்சுன்னா என்ன பண்றது? அப்புறம் திரும்பப் பார்க்க முடியாதே..."

பொறிக்குள் சிக்கிக்கொண்ட எலியைப்போல மாடசாமி திணறினான். எதையும் செய்ய முடியாமல்.... எதற்கும் இயலாமல் தவித்தான். முன்னுக்குப் போகவும முடியாமல் பின்னுக்கும் ஓட இயலாமல் மருகினான்.

பெரியவரும் கவலையுடன் முயற்சித்தார். "இப்ப என்ன செய்றது?"

ஒன்றும் பிடிபடவில்லை. எரிச்சலும் கண்மூடித்தனமான கோபமும்தான் பொங்கிச்சிறியது.

'கெட்ட ஜாதிப்பயலுக... முப்பது வருஷமா தேர்தல் வருது.... வாக்குறுதிகள் வருது; ஆனையெப் பூனையாக்குவேன்.... பூனையெ புலியாக்குவேன்'னு சாதனைப் புளுகு முழக்கங்கள் வருது. ஆனா... ஒரு ரோடு மட்டும் வர்ரதுக்குல்லே... ஒரு ரோடு மட்டும் வந்திருந்தா...? இந்த ஊரு இப்படி உலகத்திலேருந்து துண்டிக்கப்பட்டு அனாதையா கிடக்காதே! இந்த ராசாத்திக்கு இவ்வளவு சிக்கல் வராதே! கிராமங்கள் இந்தியாவின் இதயமாமே! நல்ல இதயம்தான் – துயரமும் சலிப்புமாக!' பெரியவரின் நினைவு ஓடியது.

ராசாத்திக்கு சீரியஸ் என்றவுடன் பெண்கள் கூட்டமும் நிறைந்தது. ஆண்களும் வேலைகளைப் போட்டுவிட்டு வந்தனர். ஒவ்வொருவரும்... 'என்னாச்சு... எப்படியிருக்கு' என்று துடிப்பான விசாரிப்புடனேயே வந்தனர்.

ஒரு வாலிபன் டாக்சியை அழைத்துவரப் புறப்பட்டான். ஏழு மைல் காட்டுப்பாதையைக் கடக்கணுமே.... ஒரு சைக்கிள் வேணும். அதற்கு அரை மணிநேரம் அலைந்த பிறகு கிடைத்தது. காற்றாகப் பறந்தான். இன்னொருவன்... சைக்கிளுக்காக அலைந்து கிடைக்காமல் ஓய்ந்தான். இன்னொருவனுக்கு கிடைத்து. டாக்டரை அழைக்க ஓடினான்....

அவ்வளவுதான். வேலைகள் சிறகு கட்டிப்பறந்தன. ஒரு ஜீவனையல்ல மூன்று ஜீவன்களை காப்பாற்றணுமே என்கிற பதைப்பு... அமைதியான கட்டுக்கோப்புடன் வாழும் ஒரு எளிய குடும்பம் நொறுங்கிச் சிதைவதை தடுத்தாக வேண்டுமே என்கிற துடிப்பு, அவர்களது பரபரப்பான வேகச் சூழலில் தெளிவாகத் தெரிந்தது.

நேரம் ஊர்ந்தது.... அந்த நேரம் துயரமும் பீதியும் நிறைந்து அழுத்தும் கொடிய நேரம். ஒவ்வொரு நிமிஷமும் ஒரு யுகமாய் வதைத்துவிட்டு நகர்கின்றது.

அடுத்தடுத்து. இரண்டு சைக்கிள்களும் புயல்வாய்பட்ட துரும்பாக பறந்துவந்தன.

'இந்தக்காட்டுப்பாதையிலே மோட்டார் பைக் வராதாம். ஆகவே டாக்டரும் வரமாட்டாராம்... ஆனா எந்த நேரத்துக்கு ஆஸ்பிடல் வந்துசேர்ந்தாலும் அலுப்பைப் பாராமெ கவனிக்கத் தயாராம்!

'அடப்பாவமே!.... இங்கே மூன்று ஜீவன்கள் மரணத்துடன் போராடிக் கொண்டிருக்கையில் இப்படியோர் பதிலா....?

மனிதாபிமானம், இத்தனை நிபந்தனைகளையா விதிக்கிறது...?

டாக்ஸியும் கிடைக்கவில்லையாம்! இடையிலே செத்துத் தொலைஞ்சுட்டா பெரிய. ரோதனையாப் போகுமாம்...! அட இழவே, இப்ப என்ன செய்வதாம்...?'

பெரியவர் திகைத்தார்; வழி ஒன்றும் புரியவில்லை. சுற்றிலும் இருள் புகை மூட்டமாக சூழ்ந்துகொண்டது போலிருந்தது.

மாடசாமி அழ ஆரம்பித்துவிட்டான்....

பெரியவர் எரிச்சலுடன் திட்டினார்:

"ஏண்டா பொம்பளை மாதிரி ஒப்பாரி வைக்கிறே? ஆக வேண்டியதெப் பாக்காமெ... அழுதா என்னடா லாபம்?"

பெண்கள் மத்தியில் பரபரப்பும் சலசலப்பும் அதிகரித்தது. ஆண்களும் அங்குமிங்குமாக அலைந்தனர். ஆங்காங்கிருந்து யோசனைகள் வெடித்தன; மருத்துவம் சொல்லப்பட்டது. கூட்டம் கூட்டமாக அனுதாபப் புலம்பல்கள்.... அங்கலாய்ப்புகள்.... இறுதியில் ஒரு முடிவு வந்தது.

'ஆவது ஆகட்டும்' என்ற இறுதியான அசட்டுத் துணிச்சலுடன் மாட்டுவண்டியைப் பூட்டினர். வைக்கோலைப்பரப்பி போர்வையை விரித்து... வேலைகள் சிறகுகட்டிப் பறந்தன. ஒரு வேலையைச் செய்ய பல இதயங்கள் துடித்தன.... அந்த ஏழை நெஞ்சங்கள் அத்தனையும் ஒரே பிரச்சனையால் ஒரே அன்புக் கயிற்றால் – கட்டியிழுக்கப்பட்டது போன்றதோர் ஒன்றுபட்ட இயக்கமாக அது இருந்தது.

மாடு, கிளம்பியது. வண்டியுள் ராசாத்தி கிடத்தப்பட்டுக் கிடந்தாள். நிழலுக்கு மேலே குடைகள்.... துணிவிரிப்புகள்! அவளுக்கு ஆதரவாக வண்டியில் இரண்டு பெண்கள்.... வண்டி நகன்றது.. இதயங்கள் அவநம்பிக்கையுடன் புலம்பின....

"ஆயிரங்கண்ணுடையா.... நீ...தான் காப்பாத்தணும்..."

வலி எடுத்ததோ ஐந்து மணிக்கு... வண்டி புறப்படுவதோ இரவு பதினோரு மணிக்கு.

பெரியவரும் மாடசாமியும் புறப்பட்டனர். பிள்ளைகளை ஒரு பெண் ஆதரவுடன் அணைத்துக்கொண்டாள். நெருங்கிய உறவினர்கள்சிலர். அவர்களாகவே வண்டிக்குப்பின் கிளம்பினர்.

கிளம்ப துடிப்பிருந்தும் கையில் காசில்லாமல் மனதைப் பிசைந்துகொண்டு சிலர்....

வண்டி ஊரைக்கடந்தது. ராசாத்தி. மூச்சுப்போகாமல் திணறினாள்.

ஏழு மைல் கடந்தது. வண்டியிலிருந்த பெண்கள் பதறிக் கொண்டேயிருந்தனர். மனம் 'திக் திக்' என்று அடித்துக் கொண்டது. சாமத்தைக்கடந்து மணி ஒன்றரையாகிவிட்டது. ஆஸ்பத்திரியில்போய் வண்டி சேர்ந்தது.

வண்டியை விட்டு ராசாத்தியை அந்தப்பெண்களும், மாடசாமியும் சேர்த்து இறக்கி... ஆஸ்பத்திரிக்குள் கொண்டுபோய்ச் சேர்த்து... ஒரு ஐந்து நிமிஷம்கூட இருக்காது. அந்தப் பெண்களின் 'கோ'வென்ற கதறல்..... அந்தப் பெரியவரின் இதயத்தையே பிளந்தது. மாடசாமி நெஞ்சிலும் தலையிலுமாக அடித்துக் கொண்டு அழுது புலம்பிய அந்தக்காட்சி... அவருடைய வைராக்யத்தையே உடைத்து... கண்களில் நீர்முட்டச்செய்தது....

"ராசாத்தி செத்துப்போனாள்...."இந்த உண்மையை அவரால் நம்ப முடியவில்லை....

ஏனெனில் அவள் சாகவில்லை.... கொலை செய்யப்பட்டாள்! அநியாயமாக சாகடிக்கப்பட்டாள்! இந்தியாவின் இதயம், இந்தியாவுடன் முறையாக பொருந்தியிருந்தால்... ரோடு இருந்திருந்தால்... மருத்துவ தாமதமும், மரணமும் நிகழ்ந்திருக்காதே! இது ஒரு மரணம்தான்; ஆனால் கொலை! இந்தக்கொலைக்காக யாரை தூக்கில் போடுவது?

கோபமும், சோகமும் பின்னிப்பிணைந்த நினைவுகள் அவரது இதயத்துள் பொங்கிப் பிரவகித்தது. ராசாத்தியின் சடலத்தைப் பார்த்தவுடன் பொறுக்கமுடியாமல் அலறியே விட்டார்!

"ராசாத்தியைக் கொன்னுட்டீகளடா... பாவிகளா..."

இந்தச் சமுதாயத்தை குற்றம் சாட்டுவதைப் போல சடலத்தை பார்த்த மாத்திரத்தில் அம்புபோல் வெளியே வந்து அழுதுகொண்டே கதறினார்.

*(இலக்கியச் சிந்தனை பரிசு பெற்ற சிறுகதை)*

*செம்மலர், ஆகஸ்ட், 1977*

## சுயம்

**பெ**ற்ற தாய்க்குப்பிள்ளை மீது பாசம் என்பது அதிசயமா! ஆனால், பூவனத்துக்கு முத்து என்றால் உயிர். மூத்தவள் ராஜியை விட, முத்து மீது கூடுதல் பிரியம். வித்தியாசமான விசேஷமாக ஒரு பிடிப்பு. ராஜி, அவளது அப்பா ஜாடை. ஆறுவயது முத்து, பூவனத்தின் அண்ணன்சாயல். அதுதான், அந்த விசேஷமான பாசம்.

பூவனம் பாவாடைச் சிறுமியாக இருக்கும்போது, மாட்டு வண்டியில் பருத்தி மருகைகளை பாரமேற்றி விட்டு, கயிற்றை இழுத்துக் கட்டுகிறபோது, பாரத்தோடு வண்டி வாரி, அதற்குள் சிக்கி நசுங்கிச் செத்துப்போன அண்ணனின் அதே அச்சு. அதே கண்கள்... அதே நெற்றி... சுபாவம் கூட அதுதான்.

அண்ணனின் மறுபிறப்பு. சின்ன வயது இழப்புச் சோகத்தை இட்டு நிரப்பிய பொக்கிஷம். மனசுக்கே விளங்காத மன ஆழத்தில் உறைந்து கிடக்கிற உணர்வுகளுக்கு உயிர் தருகிற உயிர்வடிவம்.

முத்துவைப் பார்க்கும்போதெல்லாம் அவளுக்குள் ஒரு உல்லாசம். ஆர்வப் பரபரப்பு. அளவுக்கு மிஞ்சி கொஞ்சத் தூண்டுகிற ஏதோ ஓர் உத்வேகம்.

சிந்திச் சிதறிக் கொண்டு சில்மிஷங்களோடு சாப்பிட்டுக் கொண்டிருந்த மகனை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

வேலைக்குப் போகணும் என்பதைக்கூட மறந்தவளாக... அவள். அவளது மனசின் உலகத்தில்....

"அம்மா.. நா எருமையை அவுத்துவுடப் போறேம்மா.." வெளியிலிருந்து ராஜியின் சத்தம். அவளை இங்கு கொண்டுவந்தது.

"ஆங். சரி சரி, பாத்து, அடியே, மாட்டை ஒழுங்கா மேச்சுட்டுவா. செனைமாடு. வேற மாடு ஏதாச்சும், முட்டிகிட்டி விடாம, பாத்து மேய். வேற எவன் புஞ்சையிலேயும் மேய விட்டுராதேடி.... சும்மாவே, நமக்குப் பொல்லாத நேரம். அதுவேற வம்பு. மதியம் திரும்பி வந்து தம்பியை பார்த்துக்கடி...."

எதிரொலி இல்லை. அவிழ்த்துவிட்டவுடன் ஓடிய மாட்டைத் தொடர்ந்து வீதிக் கோடிக்குப் போய்விட்டாள் ராஜி.

"முத்து, பள்ளிக்கூடம் போறீயாடா?"

"ம்"

"அம்மா வேலைக்குப் போய்ட்டு வாரேன். என்ன கண்ணு. நல்லா படி, யார் கூடயும் சண்டை கிண்டை போடாதே. இந்தா பத்து பைசா. கடையில் ஏதாச்சும் வாங்கிக்க. என்ன செல்லம்?"

சாப்பிட்டு முடித்த மகனுக்கு மேல்ச்சட்டையை போட்டு விட்டாள். புத்தகம், சிலேட்டுப்பையை எடுத்துத் தந்தாள்.

"போறீயாடா கண்ணு?"

"ஆகட்டும்மா..."

என்ன நினைத்தாளோ... மகனை வாரியணைத்து, கண்ட மேனிக்கு முத்தமிட்டாள். அர்த்தம் விளங்காத வார்த்தைகளை மிழற்றிச் கொஞ்சினாள். முத்து, விளங்காமையுடன் பூவனத்தைப் பார்த்தான். அவள் முகம் பூரித்து மலர்ந்துகிடந்தது.

வீதியில் நடந்துசெல்லும் முத்துவின் அழகைப் பார்த்த அவள் மனசுக்குள் ஆயிரம் பூவனங்கள்.... ஒளியும் மணமும் துலங்குகிற வண்ண ஜால பூவனங்கள்....

பெருமூச்சோடு கதவைச் சாத்தினாள், களை சுரண்டியோடு, தூக்குச்சட்டியோடு பூவனம் கூலி வேலைக்குக் கிளம்பினாள்.

நாராயணசாமி நாயக்கர், மிளகாய்த் தோட்டத்தில் களை வெட்டப்போகணும். 'பொழுதாயிடுச்சு'ன்னு கூப்பாடு போடுவாகளோ....

நடையை எட்டிப்போட்டாள். தெருவுக்குள் விழுந்து, ஒரு

சந்தைக் கடந்து. மற்றோர் வீதியில் நுழைந்து. ஊர்க்கீழ்கோடிக்கு வரும்போது. காலை வெய்யில் முகத்தில் சுள்ளென்று விழுந்தது.

'அடியாத்தே... பொழுது உசக்கே வந்துருச்சே...' மனசின் பதைப்பு. கால்களுக்குப் புரிந்தது. முன்னைவிட வேகமாக இயங்கின. ஒரு மஞ்சள் கட்டிடத்தைக் கடந்தாள்.

விவசாயிகள் கூட்டுறவு நாணயச் சங்க அலுவலகம். இந்த ஊர் உழவர்களுக்கு விவசாயத்திற்கு பணக்கடனும். உரக்கடனும் கொடுத்து உதவியது என்பதெல்லாம். நொறுங்கிப்போன குடும்பக் கிழவனின் நினைவைப்போல ரொம்பப் பழைய சமாச்சாரம். இப்போதெல்லாம்... அது வெறும் ரேஷன் கடைதான். சீனி. மண்ணெண்ணெய்... அரிசி...

அரிசி ரேசன்லே போட்டு மாசம் ரெண்டாக போகுதே.... அதுக்குப்பெறகு போடலியே... ஏன்? கடையிலே அரிசி கேட்டா.... கிலோ நாலு நாப்பதுங்கிறான். அஞ்சு ரூவாய்க்கு கூலி வேலை செஞ்சு பொழைக்குற நம்மளை மாதிரி ஏழைப்பட்டதுகளுக்கு அந்த விலைக்கு வாங்கவா முடியுது? வேகமாட்டாத செவப்பரிசியா யிருந்தாலும்.... ரேசன் அரிசின்னா.... அது ஒரு மாதிரிதான்..... போட்டா நல்லதுதான். போடமாட்டேங்குறாகளே....."

நினைவுகள் தன்போக்கில்கூடு கட்டிக் கொண்டிருக்க கால்கள் திசைநோக்கி தன்போக்கில் நடைபோட்டுக் கொண்டிருந்தன.

நிறைநிறையாக பிடித்து களை வெட்டு சாய்ந்து கொண்டி ருந்தது. மதிய வெய்யிலைப் பொருட்படுத்தாமல் பெண்கள் பேச்சும். சிரிப்புமாய். கேலியும் கிண்டலுமாய். ஊர்ப் பொரணிகளை பேசிக்கொண்டு களை வெட்டினர். இடுப்பு ஆற்று வதற்கு நிமிர்ந்த ஒரு பெண் 'சொஸைட்டியிலே கூட்டமாயிருக்கே' என்றாள்.

பூவனம் நிமிர்ந்து பார்த்தாள்.

"ஆமாடி..ஆணும் பொண்ணுமா நெறைய நிக்குறாகளே!"

"முந்தா நாள் லாரியிலே அரிசி மூட்டை வந்து எறங்குச்சு. கிளார்க்கு இன்னைக்கு வந்து அரிசி போடுவாரோ... என்னவோ"

"இருந்தாலும் இருக்கும்.... காலையிலேகூட... அரிசி எடை போடுகிற கணேசன் 'கிளார்க் வந்தாலும் வருவாரு. அரிசி போடுவாரு'ன்னு சொன்னான்".

பூவனத்துக்குள் ஒரு மெல்லி திகில்....

"ஐயய்யோ..... ரேசன்லே அரிசி வாங்கணுமே. கையிலேயிருந்த இருவது ரூபாயை கடைப்பாக்கிக்கு காலையிலேதான் குடுத்தேன், ரேசன்லே அரிசி போடுவாகன்னு தெரிஞ்சிருந்தா... அந்த ரூவாயை குடுக்காம வைச்சிருக்கலாமே.... இப்ப யாரு கிட்டேபோய் கைமாத்து கேக்குறது....?"

"வேலை முடிய நாலு மணியாயிடுமே. அதுக்குப் பிறகு வீட்டுக்குப்போய்.. வீடு வீடுக்கு கைமாத்துக்கு அலைஞ்சு... நேரமாயிடுமே... அது வரைக்கும் ரேசன் போடுவாகளா? மூடிட்டுப் போயிடுவாகளோ..."

அச்சுறுத்துகிற நினைவுகள், பூவனத்திற்குள் பயம் கலந்த கவலைகள். ஒன்றை முந்திக்கொண்டு ஒன்றாக எண்ணங்கள் ஓட்டம். மனசெல்லாம் ஏதேதோ எண்ணங்கள் புகையாக அடைத்துக்கொள்ள – இயங்கிக் கொண்டிருந்த களை சுரண்டி ஒரு மிளகாய்ச் செடியை "சதக்"கென்று வெட்டிச் சாய்த்துவிட்டது.

'அட' என்று துணுக்குற்றாள்.

'புஞ்சைக்காரி பாத்தா... நாலு வார்த்தை நாறவார்த்தையா பேசுவாளே...' பயத்துடன் அவசரமாக செடியை புழுதிக்குள் அமுக்கி, காலால் மண்ணைத் தள்ளிவிட்டு, அடுத்த பாத்திக்குள் பிரவேசித்தாள். குனிந்த உடம்பு நிமிர நேரமில்லை. இடுப்பு கடுக்கிறது. உள்ளங்கைகள் ரத்தம் கன்றி வலியெடுக்கிறது.

பசலிக் கீரையையும், கோரப்புல்லையும் புழுதியோடு வெட்டி யெறிந்து கொண்டு பூவனம் முன்னேறினாள். சகபெண்களுக்கு ஈடாக, மனசுக்குள் ரேசன்... அரிசி... யார் கிட்டே ரூபா கேக்குறது என்ற நினைவோட்டங்கள்.

நம்பிக்கைகள், சந்தேகங்கள் இரண்டும் மாறிமாறி மனசில் ஊசலாடி, கடைசியில் விதியை நொந்து முணுமுணுத்துக் கொண்டாள்.

"அட இழவே, ரெண்டு மாசம் கழிச்சு ரேசன்லே அரிசி போடுதாக, அதையும் வாங்கக் குடுத்துவைக்கலியோ...முடியாமப் போயிடுமோ..."

உச்சியிலிருந்து பொழுது மேற்கில் இறங்க இறங்க... பூவனத்துக் குள் பதைப்பு, மனசுக்குள் ஏதோதோ மயக்கங்கள்.... சஞ்சலங்கள்.

வேலை முடிந்தவுடன் வழக்கம்போல் மாட்டுக்கு புல்லரிக்க வில்லை. கொழை ஒடிக்கவில்லை. வெகுளிப்பாய்ச்சலில் (குடையைக் கண்டு மாடு வெகுண்டு பாய்கிற வேகம்) ஊருக்குள்

வந்தாள். சுரண்டியையும், தூக்குச்சட்டியையும் போட்டுவிட்டு தாகத்துடன் தண்ணீரைக் குடித்தாள். கொஞ்சம் தெம்பு.

நாராயணசாமி நாயக்கர் வீட்டுக்கு வேகமாகப் பாய்ந்தாள். அந்தப் பரபரப்பிலும்... மனசு முத்துப்பயலைத் தேடி பருந்துப் பார்வையாக பார்த்தலைந்து.

"இன்னைக்கோட எட்டுநா சம்பளம் தரணும். நாப்பது ரூவா. இதைக் குடுத்தாலாச்சும் போதும். ஒரு சீட்டுக்கு எட்டு கிலோ அரிசி, கிலோ ரெண்டு ரூவா எழுவது பைசா, மொத்தம் எம்புட்டு ஆகும்? அந்தா இந்தான்னும் இருவத்தி அஞ்சுக்குள்ளே வருமா..."

மனசுக்குள் கணக்குகள்.... நம்பிக்கைகள்.... பிரார்த்தனைகள்....

நாயக்கர் வீட்டில் மகள் தான் இருந்தது.

"என்ன பூவனம்?"

"ஐயா இல்லியா? சம்பளம் வாங்கணும், ரேசன் வாங்கணும்"

"சங்கரன் கோவிலுக்கு பணம் வாங்கப்போயிருக்காக. ராத்திரி வருவாக. காலையிலே வந்து வாங்கிக்கோயேன்..."

பூவனத்துக்குள் ஒரு பூச்சி ஊர்ந்தது. நம்பிக்கையின் கொழுந்துகளை அரிக்கிறது.

"அதுக் கில்லேம்மா.... ரேசன் வாங்கணும், வேற துட்டு இல்லே. இதை நம்பித்தான்..."

"சரி, இப்ப என்ன செய்ய முடியும்? ஐயா வந்தாத்தானே எதுவும் நடக்கும்"

முற்றுப்புள்ளி கருப்பாக் விழுந்துவிட்டது? வெட்டுப்பட்ட மிளகாய்ச்செடியாக முகம் வாடிப்போனாள் பூவனம். ஆனாலும், அசந்துவிடவில்லை. ஏழ்மையின் தாழ் மட்டத்திலும் வாழ்வோடு மல்லுக்கட்டுகிற பழகிப்போன பரம்பரை வைராக்யத்தோடு.... கடைக்கு ஓடினாள்.

"என்னம்மா, தம்பி இல்லியா?"

"என்ன, அவுகளைத் தேடுதீக?"

"காலையிலே இருபது ரூபா குடுத்தேன். அது இப்ப வேணும். ரேசன் வாங்கணும். பொழுதாவுது..."

"அவுக ராசபாளையம் சரக்கு வாங்கப்போயிருக்காக, ஆமா.... நீங்க கடைப்பாக்கிதானே குடுத்தீக...?"

"பாக்கிதான், இப்ப ரேஷன் வாங்கணும். அவசரம்"

"ம்ம்.. அப்படியா! அவுக வரட்டும்"

கடைக்காரியின் குரலிலிருந்த அலட்சியமும், ஏளனமும் பூவனத்துக்குள் ஊசிகளாக பாய்ந்து தைத்தன. கண்ணுக்குத் தெரியாத மாயச் சாட்டையின் சுளீரிடுகிற சுழற்சி. மனசுக்குள் ரத்தம், வலி. கண்ணுக்குள் முட்டி உறுத்துகிற

கண்ணீரை தன்மானத்துடன் விழுங்கிக்கொண்டாள். மனது கிடந்து அடித்துக்கொண்டது. ஏங்கியது. 'ரேசன் வாங்க முடியாதோ.. ரூவா கெடைக்காதோ....'

தெருவில் கன்றுகளுடன் எருமைகள் வரத்தொடங்கிவிட்டன. பால் பீய்ச்சி ஊற்றப் போகிறார்கள். மணி அஞ்சாகிப்போச்சே. கிளார்க் கதவைப் பூட்டிட்டுப் போயிடுவாரோ.....

பதைப்பு... சோர்வு.... பரபரப்பு.... மனசு தாளாமல் திணறியது.

பால் சொஸைட்டி செக்ரட்டரியிடம் ஓடினாள் பூவனம். மனசு முத்துவைக்கூட மறந்துவிட்டது.

"பால்ச்சாமி, ஒரு இருபது ரூவா குடு. பாலூத்துறதுலே புடிச்சுக்கோயேன்"

"அதெப்படி? நீங்க ஊத்தற பாலுக்கும் மேல் வெதையும் புண்ணாக்கும் வாங்கிட்டீக. இன்னும் எந்த ரூபாயிலே போயி பிடிக்க?"

"ரேசன் வாங்கணும் பால்ச்சாமி, அவசரம்...."

"உங்க அவசரத்துக்கு நா என்ன செய்ய?"

பூவனத்துக்குள் ஆடிக்கொண்டிருந்த சுடர், பொசுக்கென்று அணைந்துவிட்டது. இனி யார்கிட்டே போய் கையேந்துறது? "அவுக இருந்திருந்தா... ஓடியாடி, நாலு பேரைப் பாப்பாக, கேப்பாக, நா தாலியறுத்த முண்டை. நாதியத்தவ, யாருகிட்டே கேக்குறது? யாரு குடுப்பாக?"

விரக்திக்குள் விழுந்த மனசு, நைந்துதுவண்டுவிட்டது. எதிரில் முழுக்க இருட்டு, ஏகமாய் இருட்டு. கைத்துப்போய், கசந்துபோன மனசின் அழுகை,கண்ணுக்கு வரத்துடித்துக் கொண்டிருந்தது. முட்டிக்கொண்டுவந்தது. கையறு நிலைமையும், கதியற்ற தன்மையும் அவளை உள்ளுக்குள் வதைத்துக்கொண்டிருந்தது. எங்கோ வனாந்தரத்தில் - மனிதவாடையில்லாத காட்டுப் பயங்கரத்தில் சிக்கிக்கொண்டதைப் போன்ற ஒரு அவல உணர்ச்சி!

மஞ்சள் வெய்யிலையும், மேற்குத்தொடர்ச்சிமலை முதுகை உரசிக் கொண்டிருக்கும் சூரியனையும் பீதியுடன் பார்த்தாள். 'கிளார்க் பூட்டிட்டுப் போயிடுவாரே' சோர்ந்து களைத்துப்போன

மனசு. ஓய்வுக்கு ஏங்கிய கால்கள், கடுப்பாய் கடுக்கிற இடுப்பு, முத்துவை நினைக்க நேரமில்லை.

'போகவே கூடாது' என்று நினைத்திருந்த அக்கா வீட்டுக்குள் ஓடினாள். வேறு புகலில்லை.

அக்கா கொடுத்த ரூபாயோடு, வீட்டுக்குள் உருட்டி புரட்டி இருப்பதை பொறுக்கிக்கொண்டாள். சீட்டையும், பெட்டியையும் தூக்கிக்கொண்டாள். எதிர்ப்பட்ட ஒருத்தியிடம் கேட்டாள்.

"சீட்டுக்கு எம்புட்டு ரூபா ஆகுது?"

"இருபத்தோரு ரூபா அறுவது பைசா"

எண்ணிப்பார்த்தாள். பத்து பைசா குறைந்தது.

"இந்தா பத்து பைசா, சிக்கிரமா ஓடு. நேரமாச்சு, பூட்டிட்டுப் போனாலும் போயிருப்பாரு..."

பூவனத்தின் காலுக்கு இறக்கை முளைத்துக்கொண்டது. அடித்துப் பறந்தது. உடம்பெல்லாம் இறுதி நேரப் பரபரப்பு. பூட்டியிருப்பாரோ.... மனசைப் பிடித்தாட்டிய பேய்த்திகில். அந்நேரம்தான்–

புழுதி அப்பிய உடம்போடு ஓடி வந்து காலைக் கட்டிக் கொண்டான், சிறுவன் முத்து. "யம்மா, துட்டு குடும்மா... துட்டும்மா... குடும்மா.."

"பொறுடா... அரிசி வாங்கிட்டு வாரேண்டா"

"ஆமா... துட்டுக்குடு. குடுத்துட்டுப்போ..."

அவன் சிணுங்கலைக் கேட்க இது நேரமில்லை. பெட்டியும் சீட்டுமாக 'வேகு வேகு' என்று நடக்க துவங்கினாள். அவளுடைய முந்தி சேலையை பிடித்து இழுத்துக்கொண்டே..... அழுது அரற்றிக் கொண்டே.....

"யம்மா... ச்சிய்.... துட்டு குடும்மா.... துட்டும்மா...." என்று முத்துவும் தொல்லை செய்தான்.

அவள் அவளாக இல்லை, சூழ்நிலை உஷ்ணத்தில் சூடேறிப் போயிருக்கிறாள். மகனின் அழுகையும், இரைச்சலும் எங்கோ தூரத்தில் கேட்பதைப்போல மனசில் ஒரு உணர்வு. அதைக்கூட தாங்காத மனசு எரிச்சலும், கோபமுமாய்.....

மகனைத் திட்டக்கூட நேரமில்லாமல், பரபரப்பாய் ஓடினாள்.

அதோ மஞ்சள் கட்டிடம். கதவைச் சாத்திக்கொண்டு கிளார்க்

அரிசி எடை போடுகிற கணேசனுடன் பேசிக்கொண்டு.

மனசுக்குள் குப்பென்று ஒரு தீ!

பூவனம் சட்டென்று வேகமெடுத்து விரைய. முந்திச்சேலையை பிடித்துக்கொண்டு வந்த முத்து. அந்த சுழல் இழுப்பைத் தாங்காமல் குப்புற விழுந்தான். சத்தம் போட்டு அழுதான்.

இதையெல்லாம் பார்க்க இதுவா நேரம்? ஒரே குறியில் பாய்ந்தாள். வெகுளிப் பாய்ச்சல் வேகம்.

முகமெல்லாம் வேர்வைப் பெருக்கு... அப்பிய சோர்வு.. கண்களில் தவிப்பு... காய்ந்துபோன உதடுகள்.... காலெல்லாம் களைவெட்டுப்புழுதி.

கிளார்க் பூவனத்தைப் பார்த்தார்.

"என்னம்மா...?"

"அரிசு வேணும்"

"எல்லாம் முடிஞ்சு போச்சு... காலையிலேருந்து போட்டுக்கிட்டிருக்கேன். இந்நேரம் வரைக்கும் வர முடியலியாக்கும்? முடிஞ்சு போச்சு"

"வேலைக்குப் போய்ட்டு வந்து... ரூவா பாத்துட்டு வர நேரமாயிடுச்சு. ஐயா... குடுங்க"

"அதெல்லாம் முடியாதம்மா...டயம் முடிஞ்சு போச்சு. நானும் ஏழு மைல் சைக்கிள் மிதிச்சு ஊருக்குப் போகணும். இப்பவே இருட்டிப்போச்சு. போம்மா... அடுத்த வாட்டி வாங்கிக்க."

விழுந்த முத்து அப்போதுதான் எழுந்து அவளிடம் வந்துசேர்ந்தான். அழுகையோடுதான்.

பூவனம் முகம் கறுத்துப் போனாள். இத்தனைப் பாடுகளுக்குப் பிறகும் ஏற்பட்டுவிட்ட தோல்வியை ஏமாற்றத்தை – இழப்பை ஜீரணிக்க மாட்டாமல் துவண்டாள். கண்களில் குத்துண்ட பறவையின் வேதனை. குற்றுயிராக துடிக்கிற துடிப்பு...

மனசெல்லாம் தவிக்கிற எதிர்பார்ப்போடு கிளார்க் முகத்தைப் பார்த்தான். அவர் திருப்பிக் கொண்டார். கதவை இழுத்துப் பூட்டத் துவங்கினார்.

அந்நேரம்... முத்து அவளின் கால்களைப் பிடித்துக்கொண்டு வீலென்று அழுதான். அவள் மனசின் கைப்பு, கசப்பு, தோல்வி, ஏமாற்றமெல்லாம் ஒன்று திரண்டு எரிச்சலாக வடிவமெடுக்க...

பார்வை தாழ்த்தி மகனைப் பார்த்தாள்.

அவனை இடது கையால் விருட்டென்று இழுத்தாள். எரிந்த மனசு வலது கையில் இறங்க.... அந்தப் பிஞ்சின் முதுகிலும். கன்னத்திலும் 'மடேர்' 'மடேர்' என்று அறைந்தாள். பூவனம் பூவனமாக இல்லை. தீவனமாகிவிட்டிருந்தாள். முத்து துள்ளித் துள்ளி விழுந்தான். துடித்தான்.

"சனியனே... வந்து வந்து காலைக் கட்டிக்கிட்டு... நானே பரிதவிச்சுக்கிட்டிருக்கேன்' உதடுகள் புலம்ப.. கை மாறி மாறி விளையாட, அந்தப் பறவைக் குஞ்சு துடித்துக் கதறியது. பூவனத்திடமிருந்து பிய்த்துக்கொண்டு, உதைபட்ட பந்தாக ஓடினான். கிலிபிடித்துப்போய் திரும்பித் திரும்பி பார்த்துக் கொண்டே ஓடினான். கிளார்க் திகிலடைந்துபோனார்.

"ஏம்மா.... நீயெல்லாம் பெத்த தாய் தானா? புள்ளையை இப்படிப் போட்டு ஏம்மா கொல்லுறே?"

"ஏங் கொடுமை"

"நேரத்தோட அரிசி வாங்குறதுக்கில்லாம... புள்ளையைப் போட்டு இப்படி அடிக்கிறீயே... பாவம், பச்சைப்புள்ளை! அவனுக்கென்ன தெரியும். கணேசா, இந்தம்மாவுக்கு அரிசியைப் போட்டனுப்பு. கொண்டாம்மா ரூவாயை..."

வனாந்திரஅவலத்தில் புதைந்து கிடந்த பூவனம் அவரிடம் வீசிய மனித நெடியை நுகர்ந்து மனசுக்குள் கூசினாள். வெட்க வேதனை வதைத்தது. இந்த மனித நேய ஈரத்தில் அவள் துவண்டாள்.

தலையில் அரிசி பெட்டி கனக்க..பூவனம் வீடு திரும்பும்போது அவள் மனம், வெள்ளம் வடிந்து ஆற்று மணலை, போல சுத்தமாக – பூர்ண நிறைவாக இருந்தது. நீண்ட மனச் சோதனைகளுக்குப் பிறகு கிட்டிய சின்ன வெற்றி, ரொம்ப ஆறுதலாக இருந்தது. கொஞ்சம் குதூகலமாகக்கூட இருந்தது.

மனசுக்கு சிறகு முளைத்துக்கொண்டது. மேகமில்லாத நிர்மலவானத்தில் நிச்சிந்தையோடு சிரமமில்லாமல் மிதந்தது.

வீட்டை நெருங்கினாள். திண்ணை தெரிந்தது. மனது பகிரென்றது. கிட்டவந்தாள். விரலைச் சூப்பிக் கொண்டு முத்து தூங்குகிறான். கன்னத்தில் கண்ணீர்க்கறை. தூக்கத்திலும் ஏங்கிஏங்கி விம்முகிற பரிதாபம்...

சுயம்... சுயம்... சுயம்....

சுமந்து பெத்தவளுக்கு குலை பதறியது. உடம்பெல்லாம் அதிர்ந்து நடுங்கியது. அரிசி பெட்டியை அவசரமாய் இறக்கினாள். அவள் மனசை ஒரு சோக வெள்ளம் வடித்துப் புரட்ட... மனசெல்லாம் ஓலமிட்டுக் கதற... செல்ல மகனை வாரியெடுத்து அணைத்துக் கொண்டாள்.

கூடப்பிறந்த அண்ணனின் மறுபிறப்பு. சின்ன வயது இழப்புச் சோகத்தை இட்டு நிரப்பிய பொக்கிஷம். மனசுக்கே விளங்காத மன ஆழத்தில் உறைந்து கிடக்கிற உணர்வுகளுக்கு உயிர் தருகிற உயிர் வடிவம்....

'இந்தப் பாதகத்தி முண்டைக்கு அந்நேரம் மனசவிஞ்சு போச்சே.... ஏம் பூச்செண்டை போட்டு அடிச்சு நொறுக்கிட்டேனே.... ஏங்கையில் புத்து பெறப்பட.....'

தன்னைத்தானே சபித்துக்கொண்டு.... கோவெனக் கதறினாள் சுயமாகக் கதறினாள். உள்ளிருந்து வந்த கதறல் அவள் அவளாக... தாயாக...

அம்மாவின் அழுகையையும், கோலத்தையும் கண்டு, விளங்காமல் திகைத்துப்போய்... அலங்க மலங்கப் பார்த்தான் மகன்.

சூழ்ந்துநின்று கைகொட்டிச் சிரித்தது, வாழ்க்கை.

*ஜனரஞ்சனி, 29.3.86*

*ரூ 1000 முதல் பரிசுக் கதை*

# உள்மனிதன்

*கிராமத்தின் கிழக்கோடியில் சமப்படுத்தப்பட்ட ஒரு பொட்டல் மைதானம். அந்தப் பேருந்து நிலையத்தில் கூட்டம் கூட்டமாக மனிதர்கள். நைலக்ஸ் ஸாரிகளும், டைமன் சேலைகளும், ஓரிரண்டு கோடம்பாக்கம் சேலைகளும் கலர் கலராக... பூப்பூவாக டிசைன் டிசைன்னாக... பலரகமானவர்கள்.*

*பவுடர் அப்பி துடைத்துப் பாலீசான முகங்கள்... எண்ணெய்க் கசிகிற முகங்கள்...*

*நிறைய வேட்டிகள்... ஓரிரண்டு கயிலிகள், சட்டைகள்.*

*எல்லாருமே கழுத்தை எக்கி எக்கி பொழுதுக் காலையே பார்த்தனர்.*

*புழுதிப்படலம் தெரியுதா? பஸ் வருமா நேரம் தப்பிருச்சே... வருமா, வராமலேயே போயிடுமோ...*

*அனைவருக்குள்ளும் உட்கார்ந்து உதைத்துக் கொண்டிருந்த பதைப்பு... காத்திருந்து காத்திருந்து களைத்துப் போய்விட்டவர்களின் முகங்களில் சலிப்பு.*

*"பேரு பெத்த பேரு. தாகத்துக்கு நீலு லேது" என்பதைப் போல, பெரிய தலைவர் பெயரில் பெரிய பேருந்து நிலையப் போர்டு நிற்கிறது. பஸ் என்னவோ... ஒன்னே ஒன்னு கண்ணே கண்ணாக வந்து போகுது. அதுவும்... காலை மாலை இரண்டு டயம்.*

டிரைவர் லீவ் – கண்டக்டர் இல்லே... பஸ் ரிப்பேர்... ஏதாவது கோவில் திருவிழாவுக்கு ஸ்பெஷல் அடிக்கப் போய்...

இப்படி ஏதாச்சும் காரணத்தாலே, அந்த ஒரு பஸ்சும் வராமல் போயிடலாம். வந்தால் உண்டு. இல்லேன்னா இல்லைதான்.

ஆத்திர அவசர ஜோலிகளை வைத்துக்கொண்டு காத்துக் கிடந்த ஜனங்கள் ஏலாமைப் பெருமூச்சோடு வேலை கெட்டுப் போன புலம்பலோடு வீடு திரும்ப வேண்டியதுதான்!

சரி... மணி எட்டாகப் போகுது. ஏழேகாலுக்கே வந்து திரும்ப வேண்டிய பஸ் இன்னும்... வரல்லே... அட, இனிமே வருமா?

அனைவர் மனசிலும் இதே நமைச்சல். ஆளுக்கொரு அவசர வேலை. அத்தியாவசியமான காரியம். உழைப்பதற்கே ஜென்மம் எடுத்திருப்பதாக நினைக்கிற கிராமத்து ஆட்கள், ஆத்திர அவசரம் இல்லேன்னா... லேசுலே கிளம்புவார்களா? பொழுது போக ஊரு சுத்துற புத்தியுள்ளவுகளா... பாவம்!

'இன்னும் பஸ் வரல்லியே' என்ற நமைச்சல், நம்ம சண்முகத் துக்கு கூடுதலாக இருந்தது. உச்சபட்ச எரிச்சலில் இருந்தார். பாவம், அவர் அவசரம் அவருக்கு. அவர் மனைவிக்கு இது ஏழாவது கர்ப்பம். நிறைமாசம். மெடிக்கல் செக்கப்புக்கு ராஜபாளையம் போய் வரணும். அதோ... முகத்தில் துளிர்த்த வியர்வையோடு கல்லில் உட்கார்ந்திருக்கிற பார்வதி.

சண்முகம் நல்ல சிவப்பு. முகத்தில் கொஞ்சம் படிப்பு வாசனை, நாலு காடு போய் வந்த அனுபவம். நாலு விபரம் தெரிந்த மனிதர். ஊர்க் கூட்டத்தில் அவர் சத்தம்தான் ஓங்கிக் கேட்கும்.

பஸ் வராதா என்று மற்ற சராசரிகளை போல மௌனமாக ஏங்கிக் கொண்டிருக்கவில்லை அவர். சுற்றி நின்றவர்களிடம் கோபத்துடன் அங்கலாய்த்துக் கொண்டிருந்தார். எரிச்சலில் சகட்டுமேனிக்குத் திட்டிக் கொண்டிருந்தார்.

'இந்த டிரான்ஸ்போர்ட் ஒர்க்கர்ஸ் எல்லாருக்கும் திமிர் ஏறிப் போச்சு. மாசாமாசம் கை நிறையச் சம்பளம் வாங்குறாங்க. கொஞ்சங்கூட பொறுப்புணர்ச்சியே கிடையாது. யாரு செத்தா நமக்கென்னன்னு அக்கறையில்லாம நடந்துக்கிறாங்க...'

சுற்றி நின்ற சிலர் 'அதானே' 'ஆமாமா' 'நெசந்தா' என்பது போன்ற தலையாட்டல் வார்த்தைகளை உச்சரித்துக் கொண்டு ஆமோதித்துக் கொண்டிருந்தனர்.

அதிலும் சண்முகத்துக்கு எதிரில் நின்ற பெரியவர் முத்தையா.

ரொம்ப உடன்பாடாக தலையை அசைத்தார். "சம்முகம் சொல்றது தான். நூத்திலொரு வார்த்தை" என்று இடை இடையே ஒரு பாராட்டையும் போட்டு வைத்தார்.

அப்போதுதான் –

ஊரின் கீழ்க் கோடியில் உதயமாகி வருவதைப் போல பஸ்ஸின் உருவம் சன்னஞ் சன்னமாய்த் தெரியத் தொடங்கியது.

'ஹேய்... பஸ் வந்துருச்சு... பஸ் வந்துருச்சு' சிறுவர்களின் உற்சாகமான ஆனந்தக் கூச்சல் புழுதிப் படலமாக எழுந்து உயர்ந்தது. 'வராதோ' என்று துவண்டுகிடந்த எல்லோர் முகத்திலும் பளிச்சிட்ட வெளிச்சங்கள்... கண்களில் உற்சாக மின்னல்கள்... மகிழ்ச்சி நதிகள்...

வேகமாய் வந்து நின்ற டவுன் பஸ்ஸை புழுதிப்படலம் மறைத்து, விலகி, அடங்கியது.

முதலில் இறங்கிய கண்டக்டர் விட்டு விட்டு விசிலடிக்க, பஸ் பின்னோக்கி ஊர்ந்தது. உச்சகட்ட விசிலடிப்பில், பஸ் முன் னோக்கி வளைந்து, பாய்ந்து, மூச்சடங்கியது.

அதற்குள் ஜனங்கள் பஸ்ஸை மொய்த்தனர். ஏறுவதில் போட்டி. இடம் பிடிக்க முந்துகிற முயற்சிகள். ஒருவரையொருவர் இடித்துக் கொண்டு, திட்டிக் கொண்டு, மிதித்துக் கொண்டு... காட்டுக் கூச்சலாக இருந்தது.

இறங்க வேண்டியவர்கள் இறங்க விடாமல் ஏறுவோரின் அவசரம். அவர்களை இடித்து வெளித் தள்ளிக் கொண்டு இறங்கு வோரின் பிரயத்தனங்கள்...

ஒரே கசகசப்பு... இரைச்சல்... ஒரு சின்ன யுத்தம்.

இறங்கி நின்ற டிரைவரையும், கண்டக்டரையும் சூழ்ந்து கொண்ட ஒரு வாலிபவட்டம், கேள்விகளால் நச்சரித்தனர்.

"என்ன, இன்னைக்கு லேட்டு?" என்ற கேள்வியை நிறைய பேர் மாறி மாறிக் கேட்க...

"கூட்டம் ஏகப்பட்ட கூட்டம்... ஃபுல்லா ஸ்டாண்டிங், வழிநெடுக ஏகப்பட்ட ஸ்டாண்டிங், வழிநெடுக ஏகப்பட்ட ஸ்டாப்பிங்ஸ் நின்னு நின்னுவர நேரமாயிடுதுல்லே...?" என்ற பதிலை டிரைவரும் சலிக்காமல் மாறி மாறிக் கூறினார்.

முன்வாசல் வழியாக பார்வதியை பத்திரமாக ஏற்றுவதற்குள் சண்முகம் ரொம்பச் சிரமப்பட்டு விட்டார். 'ஆத்தாடி, அம்மாடி'

என்றாகிவிட்டது. அவரும் ஏறிக் கொண்டார். வியர்ந்து விறுவிறுத்துவிட்டது. அவருக்குள் ரொம்ப கடுகடுப்பு.

"எறங்குறவங்க எறங்க முடியலே. ஏர்றவங்க ஏறமுடியலே இதையெல்லாம் கண்ட்ரோல் பண்ணாம... கவனிக்காம கன்டக்டர் எங்க போயிட்டார்... ச்சே!" என்று உஷ்ணத்துடன் முணு முணுத்துக் கொண்டார்.

பெரியவர் முத்தையா 'என்ன என்ன சொன்னீர்' என்று கேட்டுக் கொண்டே உட்கார சீட் தேடினார். நல்ல வேளை முன் பகுதியிலேயே சீட் கிடைத்தது. மனைவியை உட்கார வைத்துக் கொண்டார். முழு வயிறும் சுமையாக இழுக்க, பாவம் பார்வதி மூச்சிரைத்தாள். சண்முகம் நடுவில் உட்கார்ந்தார். முத்தையா அதே சீட்டில், ஓரத்தில்,

கண்டக்டரும் டிரைவரும் பேசிக்கொண்டே ஊருக்குள் சென்றனர். கண்டக்டர் துரிதப்படுத்தினார். "வாங்கண்ணே சீக்கிரம். டயமாகுது."

"என்னப்பா, டிபன் சாப்பிட வேண்டாமா?"

"டயமாகுதே... டிரிப் அடிக்க முடியாதே"

இப்ப டயமெடுத்துப் போனா ராஜபாளையம் போய்ச் சேர மணி ஒன்பதரை ஆயுடுமே'

என்ன செய்யறது... அங்க போய்த்தான் டிபனை பார்க்கனும்'

"இப்ப மணி எட்டு பத்தாகுது. வயிறு பசிக்குதே"

"டீயை ஊத்திக்க வேண்டியதுதான்..."

"நல்ல பொழப்புதான். சாப்பிடக்கூட நேரமில்லாம... நாயைவிடக் கேவலமப்பா..."

டீக்கடைக்குள் நுழைந்தவுடன், கண்டக்டர் கடைக்காரரைத் துரிதப்படுத்தினார். சுற்றி நின்றவர்கள் அந்த காக்கிச் சட்டைகளை அதிசயமாகப் பார்த்தனர்.

டவுன் பஸ்சுக்குள் நல்ல கூட்டம். ஏறு வெய்யில் கள்ளென்றது. புழுங்கியது. வழிகின்ற வியர்வைப் பெருக்கு அயர்ன் பண்ணிய சட்டைகளை நனைத்து உடம்போடு ஒட்ட வைக்கிறது.

பார்வதி இருப்புக் கொள்ளாமல், அசைந்து கொண்டு, நெளிந்து கொண்டு, சலனப்பட்டுக் கொண்டேயிருந்தாள். வயிற்றைத் தொட்டுப் பார்த்துக் கொண்டாள். உள்ளுக்குள் குழந்தை நெளிகிற வேதனை உணர்ச்சி. வயிற்றின் வலது மேல் முகப்பில்

குழந்தையின் பிஞ்சுக் கால் உதைக்கிற உதைப்பு... அந்த இடத்தில் காலின் உருவ அடையாளம் தெரிந்து மறைகிறது.

'வவுறு பெருசாக இருந்தால் பெண் பிள்ளையாக இருக்கும்னு சொல்வாகளே... அப்படியும் இருக்குமோ... ம்ச்சூ... எதுவாயிருந்தா லென்ன வவுத்தைவுட்டு கழிஞ்சா.. சரி!'

அவளுக்கு மூச்சுவிடக்கூட முடியாத திணறல். முகத்தில் வலியை தாங்கிக் கொள்ள முடியாத கோணல்கள். அடிக்கடி அடி உதட்டை அழுந்தக் கடித்துக் கொண்டாள். சீட்டில் வாகாக சாய்ந்து கொண்டாலும் நெளிந்து கொண்டேயிருந்தாள். கல்லெறி பட்டு துடிக்கிற பறவையின் வேதனை கண்களில் அப்பியிருந்தது.

இதையெல்லாம் கவனிக்காமல்... எரிச்சலும் கோபமுமாக முத்தையாவுடன் வெடித்துச் சிதறிக் கொண்டிருந்தார் சண்முகம்.

சூழ்ந்து சுற்றிய உள்ளூர்க்காரர்களுடன் பேசிக்கொண்டே, சிகரெட்டை அணைத்து விட்டு வண்டியில் ஏறினார், டிரைவர்.

அவரையே கடுப்புடன் கவனித்துக் கொண்டிருந்த சண்முகம். உணர்ச்சியை மறைக்காமல்.. சள்ளென்று சீறினார்.

"வந்ததே லேட்டு. இங்கயும் கால்மணி நேரம் போட்டா எப்படி சார்? அவசர ஜோலிகளுக்குப் போக வேண்டாமா நாங்க?"

"மணி ஒம்பதாகுது. டிபன் கூட சாப்பிடலே. ஒரு டீயாச்சும் சாப்பிட வேணாமா? நாங்களும் மனுஷங்கதானே, சார்?"

"அதுக்கும் ஒரு லிமிட் இல்லே. எவ்வளவு நேரம்தான் லேட்டாகுறது?"

"அவ்வளவு அர்ஜென்ட்னா டாக்சியிலே போக வேண்டியது தானே. காருக்கு எதுக்கு வாரீக...? எங்க உசுரை வாங்கவா?"

"நாங்க காருக்கு வரலேன்னா ஆயிரம் ஆயிரமா சம்பளம் யார்கிட்டே வாங்குவீக?"

"ஆமா! ஊர் பூராவுக்கும் இவருதான் படியளக்கிறவரு. நீங்க வரவும் வேணாம். சம்பளம் தரவும்வேணாம். பேசாம இருங்க சார்."

"பேசாம இருக்கவா? நானா? என்னைப் பேச வேண்டாம்னு சொல்ல, நீ யாரு? ஆஃப்ட்ரால் ஒரு டிரைவர். நீயா, என் வாயை மூடுறது?"

"சொல்லிட்டேன்... மரியாதையா பேசணும். வார்த்தை தடிச்சா.. அப்புறம், நாறிப்போகும். ஆமா இப்ப என்னய்யா செய்யனும். ஒனக்கு? ரொம்ப முறுக்குறீயே என்னமோ பெரிய இவருகணக்கா...

வார்த்தைகள் தடித்து, உணர்ச்சிகளில் உஷ்ணம் ஏற, சத்தம் உயர்ந்து, சண்டையாக வந்து முடிய...

பஸ் முழுவதும் செய்வதறியாது திகைத்துப் போயிருந்தது. கண்டக்டர் அவசரமாக முன்பக்கம் ஓடி வந்தார்.

"என்ன இங்க கசகசப்பு. வார்த்தையை நிறுத்துங்க வீண் சண்டை எதுக்கு? நீங்க சும்மா இருங்க சார்... அண்ணே நீங்க கம் முன்னு வண்டி எடுங்க..."

'என்ன செய்யணும்' என்ற வழி அனைவருக்கும் தெரிந்து விட்டது. கண்டக்டரைப் பின்தொடர்ந்து சண்முகத்தையும், டிரைவரையும் கண்டித்து சமாதானப்படுத்துகிற சத்தங்கள்.

பார்வதி உள்ளுக்குள் பயந்தாள். பதைத்தாள். புருஷனைப் பேசாமலிருக்கச் சொல்ல நினைத்தாலும், ஆயாசத்தில் கண்களை மூடிக் கொண்டாள்.

கோபத்தில் கடுகடுப்போடு டிரைவர் வண்டிக்கு உயிரூட்டி னார். காற்று உள்ளுக்குள் வந்தது. புழுக்கமும், நசநசப்பும் ஒரு இனிய சுகமாக மாறியது. சண்முகத்திற்குள் மட்டும் ஒரு கொதிப்பு.

"இந்த மீசைக்காரன் எம்புட்டு திமிரா பேசிட்டான்? அடிக்க வர்ரவன் மாதிரி அரட்டுறானே... ஊர்ப்பயகளும் அவங்கூட சேர்ந்துக்கிட்டு, என்னை சத்தம் போடுறானுகளே... எம்புட்டு கேவலமாப் போச்சு..."

அடிபட்டு வெகுண்ட நாயாக கண்டக்டரைப் பார்த்தார். பார்வையில் பகைமை அனல் பறந்தது. கண்டக்டர் பின்பக்கத்தில் டிக்கெட் கொடுப்பதில் கவனமாயிருந்தார். அடுத்த ஸ்டாப் வருவதற்குள் டிக்கெட் கொடுத்து முடிக்கனும்.

அந்த டவுன் பஸ் கிழக்காக ஓடியது. எலும்பு தெரிய மெலிந்து கிழட்டு நோயாளியாக குற்றுயிராக கிடந்த மெட்டல் ரோட்டில் பஸ் குதியாட்டம் போட்டுக் கொண்டே சீறிப் பாய்ந்தது.

"டிக்கட்... டிக்கட்... டிக்கட்... எடுங்க சார்..."

"சில்லறையாக குடுங்க, நோட்டாக நீட்டுனா நா சில்லரைக்கு எங்க போக? 20 பைசா இருந்தா குடுங்க. 4 ரூபாயா தர்ரேன்..."

"ஏம்மா குழந்தையை வச்சுக்கிட்டு நீக்கிறீக! தம்பி, தள்ளியிரு. எம்மா இங்க உக்காருங்க. டிக்கட் டிக்கட்..."

ஒரு யந்திரச் சுறுசுறுப்போடு இயங்கிக் கொண்டிருந்தார் கண்டக்டர்.

பார்வதி வதைத்தெடுக்கிற அயற்சியிலும் சோர்விலும் கணவனுக்காகவும் அழுது கசிந்தாள்.

ஆலங்குளத்தைத் தாண்டும்போது பஸ் நிரம்பி வழிந்தது. காற்று நிற்கக்கூட முடியாமல் மனித அடைசல். சதையும் எலும்புமாக குழைக்கப்பட்டு மனிதர்களை கிட்டித்து விட்டதைப் போல, பஸ் திணறியது.

அவமதிக்கப்பட்டு, புண்பட்டுப் போன உள் மனக்காயங்களின் வேதனையோடு சண்முகம் உள்ளுக்குள் முணங்கிக் கொண்டிருந்தார். புழுக்கமும், நசநசப்பும் வேறு இச்சிலாத்திப் படுத்தியது.

இவரின் மனக்கொதிப்பை இன்னொருவர் கண்டக்டரிடம் எதிரொலித்தார்.

"ஆடுகளை அடைச்சமாதிரி ஆளுகளை ஏத்துறீகளே, இது என்ன நியாயம் சார்?"

"என்ன சார் செய்றது? ஏறிக்கிட்ட நீங்க, ஏத்தாதீங்கிறீக. காத்துக்கிட்டிருக்கிற பயணிகள், 'கையைக் காட்டுனா நிக்காம போறானே'ன்னு எங்களைத் திட்டுவாங்க. நாங்க யாருக்குப் பதில் சொல்றது சார்? ஜனங்களோட தேவைக்கேத்தாப்புல கூடுதலா பஸ் விட வேண்டிய கவர்மெண்ட்டை எதிர்த்து ஒரு வார்த்தை கூடப் பேசமாட்டீக. உங்களுக்கு இளைச்சவங்க நாங்கதான்; எங்களைத் திட்டித் தீத்துக்கிடுறீங்க.. இது என்ன சார் நியாயம்? நாலு வண்டிகளை ஓட்ட வேண்டிய ரூட்லே ஒரு வண்டியை ஓட்டுற சர்க்கார், உங்களையும் எங்களையும் கீரியும் பாம்புமா ஆக்கி, வேடிக்கை பாக்குது சார்."

கண்டக்டரின் சொற்கள் சண்முகத்திற்குள் நெருஞ்சி முட்களாக விழுந்து சிக்கிக் கொண்டன. நினைவு இழைகள் முடிச்சு விழுந்து திகைத்து நின்றன. அவருள் திரண்ட மழை மேகங்கள், தென்றலுக்காக காத்திருந்தன. வெக்கை மிகவும் அடங்கியிருந்தது.

ஆயாசத்திலும், அயற்சியிலும் கண்களை மூடிக்கிடந்த பார்வதி, கொடிய வலியைத் தாங்க முடியாமல் "ஹ் ஹா" என்று கீச்சிட்டாள். அந்த அலறலில் பதறிப்போன சண்முகம் திரும்பிப் பார்த்தார்.

அடிவயிற்றை தாங்கிப் பிடித்துக் கொண்டு வேதனையில் கத்தினாள். முகமெல்லாம் பொடிப் பொடியாய் வியர்வை. அடி உதட்டை ரத்தம் வரக்கடித்தாள். முகம் கோணிக்கொண்டே

போனது. கால்கள் சீட்டுக் கடியில் விறைத்துக் கொண்டு, நீண்டு அகல விரிந்து கொண்டு –

சண்முகம் ஆடிக்குலுங்கிப் போனார். அடிவயிற்றில் ஏதோ புரண்டது. பயத்தில் உறைந்து கொண்டிருந்தார்.

"ஐயய்யோ... பிரசவவலியா? பஸ்ஸுக்குள்ளேயா? அடப் பாதரவே, நடுக்காட்டுலே... ஓடுற பஸ்லே... என்ன செய்ய முடியும்?"

பின்சீட்டில் அமர்ந்திருந்த பெண்கள் பார்வதியின் துடிப்பை கவனித்து விட்டனர். பதறிப் பதைத்து எழுந்தனர்.

"வாங்கய்யா இங்கிட்டு அட, விலகுங்கய்யா!" பெண்கள் சண்முகத்தையும், முத்தையாவையும் அதட்டி அப்புறப்படுத்தினார். பரபரப்பாகச் செயல்பட்டனர்.

"ஐயய்யோ... மறைப்புக்கு ஒரு சீலையாச்சும் வேணுமே, யார்கிட்டேயாச்சும் இருக்கா?"

"முத்தம்மா நீ தலையை தாங்கிப் பிடிச்சுக்கோ. ஏய்தாய், இங்கவா, காலு ரெண்டையும் தூக்கி சீட்லே போடு... மெல்ல மெல்ல.. பாத்து... பாத்து."

உத்தரவுகள் பறந்தன. பஸ்ஸுக்குள் பரபரப்பும் பதைப்பும் உச்சகட்டத்தை எட்டியது. ஒருத்தி பாலியஸ்டர் சேலையை அவசரமாக எடுத்துத் தந்தாள். பார்வதி படுத்திருந்த சீட்டை சுற்றி சேலையை பிரித்து இரண்டு பெண்கள் பிடித்துக் கொள்ள மூன்று பெண்களும் மறைப்புக்குள் நின்று பார்வதிக்கு ஆறுதல் சொல்லி யோசனைகளைக் கூறி, வாய்த்த கைப்பக்குவம் செய்தனர்.

பஸ் முழுவதும் ஒரே உணர்ச்சி மயம். ஒருத்தர் உத்தரவுக்கு ஓடுவதற்கு நூறுபேர் முந்தினர். ஒவ்வொருத்தரும் ஏதாவதும் செய்ய வேண்டுமென்று துடித்துக் கொண்டிருந்தனர். காற்றுக்கூட நிற்க முடியாத அந்த பஸ் முழுவதும் மனிதாபிமானம் விஸ்வ ரூபமாக எழுந்து நின்றது.

சண்முகத்திற்கு முகம் கறுத்துவிட்டது. அவமானமும் லஜ்ஜையும் உயிரைப் பிடுங்கித் தின்றது. ஓரிரு நிமிஷத்திற்குள் பரிதாபத்திற்குரிய இழிபிராணியாக தாழ்ந்து நிற்கிற அவலம் அவருக்குள் அறுத்தது. அலைக்கழித்தது. அழக்கூடத் தோன்றாத ஸ்தம்பிப்பில் உறைந்து நின்றார்.

அட... இதென்ன கொடுமை...? இப்படியாகிப் போச்சு. போக்கிட மறியாத குருட்டு ஈயாக மனம் அலைமோதி அங்கலாய்த்துக் கொண்டிருந்தது.

"அர்ஜென்டா ஆஸ்பத்திரி போய்ச் சேரணுமே. நம்ம அவசரத்துக்கு பஸ் போகுமா? இடையிலே எத்தனை ஸ்டாப்? இன்னும் ஏழு மைலாச்சும் இருக்குமே... ஏறியிருக்கிற ஆளுகளை இறக்கிவிடுவதற்காவது ஸ்டாப்புகளிலே நின்னாகனுமே. நின்னு நின்னு போனா... அரைமணி நேரமாவது ஆயிடுமே. அதுக்குள்ளே பார்வதிக்கு என்ன ஆகுமோ."

மனசு மருகித் தவித்தது. கண்ணுக்குள் உறுத்தல், கண்களின் ஓரங்களில் நீர்ப் பிசுபிசுப்பு. சிறகொடிந்த பறவையாக துடித்த மனசோடு, ஏக்கமும் சோகமுமாய் பார்வையால் அலைந்தார். அனைவர் கண்களிலும் திகில்... பயம்.... அனுதாப உணர்வுகள்...

"பார்வதிக்கு என்ன ஆகுமோ" என்ற சிந்தனை குலை நடுங்க வைத்தது. சர்வாங்கமும் பயத்தில் நடுங்கி ஒடுங்கியது.

'முகம் முறிச்சு சண்டை போட்ட டிரைவர் கிட்டே, எந்த முகத்தோட எப்படிச் சொல்றது? என்ன கேட்பது?'

மனசு பலதையும் எண்ணி மருகியது. தவித்தது. பலமெல்லாம் வடிந்துவிட்டதைப் போல... மருட்சியும் சோகமும் அவரை மௌனத்தில் புதைக்க... செய்வதறியாமல் திகைத்து நின்றபோது–

கண்டக்டரின் சத்தம் ஓங்கி ஒலித்தது.

"பிளீஸ்... எல்லோரும் இந்த ரெண்டு சீட்டை விட்டுட்டு பின்னுக்குப் போங்க... போங்க சார்... ஏய் தம்பி, போப்பா அங்குட்டு"

அவரையும் மீறிக்கொண்டு பஸ்ஸுக்குள் மனிதர்களின் கூச்சல்... புலம்பல்... அனுதாப வார்த்தைகள்....

"டிரைவரண்ணே, இப்ப என்ன செய்றது? ஏதாச்சும் செய்யணுமே?"

"அதுதான் நானும் யோசிக்கிறேன்" என்ற டிரைவர் சட்டென்று சொன்னார். இடையிலே இறங்க வேண்டியவங்களை திரும்பி வரும்போது எறக்கி விட்டிடுவோம். எந்த ஸ்டாப்புலேயும் நிக்காம, சல்லுண்ணு வண்டியை அழுத்தி, நேரா ஆஸ்பிட்டலுக்கு விட்டிடுவோமா?"

"விடுங்க, சிக்கிரமா விடுங்க. எவ்வளவு ஹை ஸ்பீடுலே போக முடியுமோ... அழுத்திருங்க... நேரா ஆஸ்பத்திரிக்குள்ளேயே விட்டிடுங்க"

"ரூட்டைவிட்டு விலகிப் போனா... நிர்வாகம் மெமோ குடுப்பாங்கப்பா"

"குடுக்கட்டும் குடுக்கட்டும். அதையெல்லாம் பார்த்தா,

ஒண்ணும் நடக்காது." பஸ் எங்கும் நிற்காமல் விரைந்தது.

முகத்திலும், கழுத்திலும் வழிகிற வியர்வையைக் கூட துடைத்துக் கொள்ளாமல், டிரைவர் ஸ்டீயரிங்கை சுழற்றினார்.

கண்டக்டர் டிக்கெட் கட்டுகளையெல்லாம் பைக்குள் போட்டு விட்டு சிறுவர்களை பின்னுக்குத் துரத்தினார். மற்றவர்களை அதட்டி உட்காரச் சொன்னார்.

சேலை மறைப்புக்குள் பார்வதி துடித்துக் கொண்டும், அலறிக் கொண்டும், அவளைச் சுற்றி மூன்று பெண்கள் வியர்வை வழிய பராமரித்துக் கொண்டும்...

பார்வதி அலறும்போதெல்லாம் சண்முகத்தின் உயிர்ப் பறவை துடித்தழுதது. அவரை எதிர்பார்க்காமல் காரியங்கள் சக்கரம் கட்டி ஓடிக் கொண்டிருந்தது. அடுத்த ஏழாவது நிமிஷத்தில் –

அனைத்துச் சட்டவிதிகளையும் அலட்சியப்படுத்திவிட்டு, அந்த டவுன் பஸ் அரசு மருத்துவமனைக்குள் பாய்ந்து வட்ட வடிவமாக வளைந்து, வாசலோரத்தில் குலுங்கி நிற்க...

மருத்துவமனையே அதிர்ந்து குலுங்கி ஓடிவர...

டிரைவர் வண்டியை நிறுத்திவிட்டு இறங்கினார். ஆறாகப் பெருக்கெடுத்தோடிய வியர்வையை கழுத்துத் துண்டால் அழுந்தத் துடைத்துக் கொண்டார், கண்டக்டர். அவசரமாக இறங்கினார். திகைத்து நின்ற நர்ஜசுகளிடம் "ஸ்ட்ரெட்சர் கொண்டு வாங்க, சீக்கிரம் டெலிவரிகேஸ்" என்று கத்தினார். அந்த அதட்டலில் வேலைகளுக்கு சிறகு முளைத்து, வினாடி வேகத்தில் பறந்தது. பார்வதி ஆஸ்பத்திரிக்குள் கொண்டு செல்லப்பட்டாள்.

அவரவரின் அவசர வேலைகளையெல்லாம் மறந்து அனைவரும் வராண்டாவில் திகைத்து நின்றனர், மனிதர்களாக!

டிரைவரும் கண்டக்டரும் ஆசுவாசப் பெருமூச்சுடன் சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு ஒருவரையொருவர் களிதுள்ள பார்த்துக் கொண்டனர்.

டிரைவர் மீசையை நீவிக்கொண்டே மகிழ்ச்சியுடன் "எப்படியோ... நல்லபடியா கொண்டு வந்து சேர்த்தாச்சப்பா..."

"ஆமண்ணே, இப்பத்தான் எனக்கு மூச்சே விடமுடியாது." மனசுக்குள் பொங்கிப் பிரவகித்த திருப்தி. சந்தோஷம் முகத்தில் பிரகாசிக்க ஒருவரையொருவர் குதூகலப் பார்வையால் தழுவிக் கொண்டனர். அந்தப் பார்வையில் மானுடம் ஜெகஜோதியாக ஒளி

வீசிக் கொண்டிருந்தது.

முகம் கறுத்து, செய்வதறியாமல் கைபிசைந்து நின்ற சண்முகத்திடம் வந்தனர். “நீங்க ஆஸ்பிட்டலுக்குள்ளே போய், ஆக வேண்டியதைப் பாருங்க. நல்லபடியாகப் பார்த்துக்கோங்க.”

சண்முகம் தலையாட்டினார். கண்களில் கண்ணீரோடு சேர்ந்து கொண்டு எதை எதையோ நினைத்துக் கொண்ட ஏதேதோ உணர்ச்சிகள் திமிறிக் கொண்டு ததும்ப...

"பரவாலே... ஒண்ணும் மனசுலே வச்சுக்காதீங்க. அங்க போய் கவனிங்க" என்ற டிரைவர் சண்முகத்தின் கையைப் பற்றி பரிவோடு அழுத்தினார். ஆயிரம் விஷயங்களைப் பேசி முடித்துவிட்ட அந்த அழுத்தலோடு வண்டியில் ஏறினார்.

“வண்டிக்கு வர்ரவங்க வாங்க... க்விக்” என்று சத்தம் கொடுத்த கண்டக்டர் வண்டியில் ஏறிக்கொள்ள...

வராண்டாவிலும், மர நிழல்களிலும் அன்பின் வடிவங்களாக – மனித உன்னதங்களாக – நின்றுகொண்டிருந்த அத்தனைபேரும் அவசர அவசரமாய் ஓடி வந்தனர். ஏககாலத்தில் ஏற முயன்று – ஒருவரையொருவர் இடித்துக்கொண்டு, திட்டிக்கொண்டு ஈரமில்லாமல் மிதித்துக்கொண்டு...

எல்லாரும் இடம் பிடிக்கிற அவசரம்... ஆத்திரம்...

சிறுவர்களை கசக்கிக் கொண்டு குழந்தைகளைக் கசக்கிக் கொண்டு நடந்த இந்த யுத்தத்தைப் பார்த்து உள்ளுக்குள் சிரித்துக் கொண்டார், விஷய ஞானமுள்ள கண்டக்டர். மெல்லிய வியப்பு அவருள் படர்ந்தது.

“இந்நேரம் வரை இங்கிருந்த மனுஷங்க எல்லாம் என்ன மாயமாய் மறைஞ்சுட்டாங்க! அதுக்குள்ளே மாறிட்டாங்களே... சமூகப்பிராணிகளாக, சண்டை பிரஜைகளாக!”

பஸ்ஸுக்குள் மறுபடியும் வெக்கை.

*செம்மலர், ஜூலை 1985*

# சிபிகள்

**வி**டிந்த அரவத்தில் முழிப்புத் தட்டிய மயிலப்பனுக்கு, தலை 'விண்ண்'ணென்றிருந்தது. பாறையாகக் கனத்தது. கெட்ட கெட்ட கனாக்கள் நிறைய கண்ட களைப்பு. தீப்பிடித்த மாதிரி கண்கள் எரிந்தன. நாசிக்குள் வெப்பஅலைகள். காய்ச்சலாக இருக்குமோ...? அவன் மார்பில் கைவைத்துப் பார்த்துக் கொண்டான். நெருப்பாகத் தகித்தது. எழுந்திருக்க முயன்றான்.

ம்ஹூம். முடியல. அப்படியே கிடக்க வேண்டும் போல ஓர் அயற்சி. மூச்சுப் பிடித்துக்கொண்டு எழுந்தான்.

மூட்டுக்கு மூட்டுவலி. இடுப்பைச் சுற்றிக் கடுகடுப்பு. தொடைச் சதைகளில் முறுக்கிப் பிழிகிற வலி.

அப்படியே குத்துக் காலிட்டுச் சுவரில் சாய்ந்து கொண்டான். பெருமூச்சுவிட்டபோது... நாசித் துளைகள் காந்தலெடுத்தது.

'இதென்ன கடவுளே, ஒறங்கி முழிக்குறதுக்குள்ளே காச்ச வந்து பேயா அமுக்கிடுச்சு. பன்னிகளைப் பத்தணுமே! எப்படி மேய்க்கப் போறது? ஏலாது போலிருக்கே...'

பங்குனி மாசம். வலுத்த கோடை, மழைத் தண்ணி யில்லாமல் வறண்ட கோடை, இந்தக் காலத்தில் இப்படி கூதல் நடுக்குகிறதே, மார்கழி மாசம் மாதிரி...

விரித்திருந்த பழைய கிழிந்த சேலைத்துணியை எடுத்து மூடிக் கொண்டான். கொக்கு நோய் கண்ட கோழி மாதிரி, தலையைத் தொங்கப்போட்டுக்கொண்டு. அப்படியே உட்கார்ந் திருந்தான்.

குடிசைக்கு வெளியே, கூட்டுக்குள் பன்றிகளின் இரைச்சல். நேரம் தப்பிவிட்டதால் ஒன்றையொன்று கடிக்கிறதோ....?

அவன் மனசுக்குள் பன்றிகளின் உறுமல்களும், அலறல்களும், குட்டிகளின் கிச்சிடல்களும்.

'பன்னிகளைத் தொறந்துவிடணுமே... என்ன செய்யறது?'

மகளைக் கூப்பிட நினைத்தான். உதடுகள் காய்ந்து வெடித்துக் கிடந்தன. வாயில் வறட்சி. நாவெல்லாம் கசப்பு. சிரமப்பட்டு வாயைத்திறந்தால்... உயிரும் உஷ்ணமும் வெளியேறுவதைப் போன்ற பிரமை.

"செந்தட்டி.... செந்தட்டி...."

அவ்வளவு சத்தமிட்டு அழைத்ததில் அயற்சி. கண்களை மூடிக் கொண்டான். இமைகளின் அழுத்த உரசலில் மெல்லிய சுகம்.

காய்ந்த தலையைச் சொறிந்துகொண்டு, தூக்க அசதியோடு வந்து நின்றாள், சிறுமி, பத்து வயசுக்கு மீறாத அரும்பு. சாயம் போய்க் கிழிந்த பாவாடை, உடலில் ஒட்டியிருந்தது.

'இந்தச் சின்னஞ்சிறுசு, இத்தனை பன்னிகளையும் எப்படிக் கவனிச்சு மேச்சுடும்? விளையாட்டுப் போக்கில் கவனம் பிசகிட்டா ஏதாச்சும் தப்பு வந்துசேருமே.. ஆனால் வேறு கதியில்லியே....'

'மகராசி போனவருஷம் போய்ச்சேர்ந்துட்டாள். வரிசையாய் நாலு புள்ளைகளைப் பெத்துப்பெத்துச் சாவின் கையில் பறி கொடுத்தவள், அஞ்சாவதைப் பெறுகிறபோது.... புள்ளையோடு சேர்ந்து அவளும் பறிபோயிட்டா.'

'பிரசவத்திலே கஷ்டம் வந்துட்டா... இந்தப் பட்டிக்காட்டுலே என்ன வைத்திய வசதி இருக்கு? ஒரு ஆசுபத்திரியோ... ஒரு டாக்டரோ.... ஒரு எழவும் கிடையாது.... பொழைச்சு எந்திரிச்சா.... சாமிக்குப் பொங்கல் வைக்குறது. போய்ச்சேர்ந்துட்டா விதியைச் சொல்லிப் பொலம்ப வேண்டியது. வேறென்ன செய்ய....? ஹூம்!'

'அவ கண்ணை மூடுன அன்னிக்கே... நானும் போய்ச் சேர்ந்திருக்கணும். முடியலியே... எப்படி முடியும்? தாயில்லாத இந்தப் பச்சை மண்ணை நாதியத்த அனாதையாக்கிட்டு. நாம மட்டும் எப்படிக்கண்ணை மூடுறது?'

"என்ன அய்யா....?"

செந்தட்டியின் மூன்றாவது அழைப்புக்குரலில் தலையைத் தூக்கி மகளைப் பரிவோடும், பச்சதாபத்தோடும் பார்த்தான். நாவால் உதட்டை ஈரமாக்கிக் கொண்டான்.

"அய்யாவுக்குக் காச்சலா இருக்கு. எந்திரிக்கக்கூட முடியலே. பன்னியைப் பத்திக்கிட்டுப்போய் மேச்சுட்டு வா... என்ன?"

சின்ன உடம்பை ஏழு கோணலாக வளைத்தாள். முகத்தில் செல்லச் சிணுங்கல், மறுக்கிறாள். மனிதர்கள் 'உட்கார்ந்து' கொண்டிருக்கிற ஓடைக்காட்டில், போக அவளுக்கு இஷ்டமில்லை.

காய்ச்சல் வெறியில் இந்தச் சின்ன மறுப்பைக்கூடச் சகித்துக் கொள்ள முடியவில்லை. சண்டாளமாக வந்த கோபத்தில் மட்டியைக் கடித்தான். ஆத்திரத்தில் கண்களை விரித்தான்.

மனசுக்குள் ஒரு சின்ன மனித நேயக்குரல்...'பாவம் தாயில்லாப் புள்ளை.... பச்சை மண்ணு'.

கடித்த அடிஉதட்டை விடுவித்தான். பார்வையில் கனிவை வரவழைத்துக் கொண்டான். குரலை மிருதுவாக்கிக்கொண்டான்.

"அய்யாவுக்கு முடியலேம்மா... பன்னி கத்துது பாரு... பத்திக்கிட்டுப் போம்மா.... சொன்னதைக் கேளு... நல்ல புள்ளை இல்லே நீ? அடுத்த மாசம் பொங்கலுக்குப் புதுச்சட்டை தைச்சுத் தாரேன். என்ன?"

"சரி..." முகத்தில் பயத்தின் வாட்டம். சம்மதிக்காத மனத்தோடு சம்மதித்தாள்.

"கூட்டை மறைச்சிருக்கிற பலகைக் கல்லை நகர்த்தி வைச்சுடு. கூடையைக் கையிலே எடுத்துக்க. சாணி பொறுக்கணும்லே? வெள்ளாமையிலே தப்பிவுழுந்துராமப் பாத்துக்கோ. அந்தச் சலவனும், 'வால் வெள்ளையும்' கள்ளத்தட்டுலேயே திரியும். அதுகளைக் கவனிச்சுக்கோ... என்னம்மா..."

"சரிய்யா"

அவ்வளவு பேசிய களைப்பில் கழுத்து வலிக்க, மறுபடியும் தலையைத் தொங்கப்போட்டுக்கொண்டான். கண்களை மூடிக் கொண்டான். மூடிய இமைகளுக்குள் வர்ண வர்ணமாய் ரேகைகள் மிதந்தன.

அகலக்கல்லை 'முக்கிப்' புரட்டுகிற சப்தம். விடுதலையான களி வெறியில் சப்த இரைச்சல்களோடு ஓடுகிற பன்றிகளின் சப்தம்,

பன்றிகளை அதட்டிக்கொண்டே ஓடுகிற செந்தட்டியின் காலடிச்சப்தம்.

கிராமத்தின் விளிம்புகளாக ஊரைச் சுற்றிலும் ஓடைகள், மழைநாள் தவிர, மற்ற நாட்களில் நீரோட்டமில்லாத ஓடைகள். சில இடங்களில் பாறைகள்... சில இடங்களில் மணல், சில இடங்களில் கரிசல்... இன்னும் சில இடங்களில் பொட்டல் தரைகள். ஆனால், எல்லா இடங்களிலும் வஞ்சனையில்லாமல் அடர்த்தியான வேலிச்செடிகள்.

இந்த ஓடைகள்தான் கிராமத்து மக்களுக்குத் திறந்தவெளி கழி வறைகள். காற்றோட்டமான கழிவறைகள். மனிதர்கள் அவஸ்தை யோடு கழித்துவிட்டுப் போகும் அசிங்கத்தை... வாலை யாட்டிக் கொண்டு ஆவலோடு வாரித்தின்று கொண்டே பன்றிகள்...

ஓடைகளைச் சுற்றிவிட்டுக் கூடு வந்துசேர மணி பத்துக்கு மேலாகிவிடும்.

* * *

"முதலாளி.... நல்ல ஸ்ட்ராங்கா ஒரு டீ குடுங்க!"

"என்னப்பா மயிலு. ஆளு ரொம்ப அசந்திருக்கிறே, நேத்துச் சாயங்காலம் தண்ணி சாஸ்தியா?"

"தண்ணிக்கு வழியேது முதலாளி? என்னமோ தெரியலே, ராவோட ராவா வந்து காய்ச்சல் அமுக்கிக்கிடுச்சு. உசுர் போற மாதிரி மேலெல்லாம் வலி. மண்டைக்குத்து, நீங்க குடுக்கிற டீயிலேதான், காச்சவுடணும், பன்னிப்பத்தப் போவணும்."

"இந்தா, அடி, கஷாயமா எறக்கியாச்சு, உதட்டுலே ஒட்டும்."

வெள்ளை மாத்திரையை வாய்க்குள் போட்டு, டீயை உறிஞ் சினான். மாத்திரை தொண்டைக்குள் சிக்கிக் கொண்டது. முகத்தைக் கோணி கண்களைச்சுருக்கி, வாயை அழுந்த மூடி... அப்பாடா.... ஒரு வழியாக உள்ளுக்குள் இறங்கிவிட்டது.

டீயைக் குடித்தான். வழக்கம்போல் பீடியைப்பற்ற வைத்தான். பீடிப்புகை ஒவ்வவில்லை. வாயெல்லாம் கசந்து அழறியது.

பீடியைத் தரையில் தேய்த்து எறிந்தான். வெளியே வந்து, வெறுப்புடன் எச்சிலைத் துப்பினான்.

உள்ளுக்குள் இறங்கிய டீயில், உடம்பு கதகதப்பாகியது. சீலைத் துணியை மூடிக்கொண்டு, முட்டங்காலைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்தான்.

நேரம் என்ன இருக்கும்?

ஒரு கொள்ளைக்காரனைப்போல் பேய் வேகத்தில் வந்து, வட்டமடித்து நின்றது பால் லாரி. வெற்றுக்கேன்களை இறக்கி விட்டு, பால் நிரம்பிய கேன்களை ஏற்றிக்கொண்டு, வந்த வேலை முடித்த திருடனைப்போல் வெறிவேகத்தில் புறப்பட்டுப் போய்விட்டது.

இந்தப் பால் லாரி ஊருக்குள் வரத்துவங்கிய பிறகு... பிள்ளைப் பால், ஓசிமோர், உறவுக்காரர்களுக்கு வெண்ணெய் தருதல் என்ற வழக்கங்களெல்லாம் 'ஒரு காலத்து விஷயமாக' ஆகிவிட்டது.

பால் லாரி வந்து திரும்பினால், மணி ஏழரை என்று அர்த்தம். இம்புட்டு நேரத்துக்கு, செந்தட்டி எங்கே போயிருப்பாள்? முத்தையா நாடார் புஞ்சைக்கு நேராகவா, ரெங்கசாமி நாயக்கர் புஞ்சைக்கு நேராகவா?

பாவம், சின்னப்புள்ளை! கவலைன்னா என்ன, வேலைன்னா என்னன்னு தெரியாம, தெருப் புழுதியிலே வீடு கட்டி விளையாட வேண்டிய வயது. பெரிய மனுஷியைப்போல வீட்டுப்பொறுப் பேத்து, சட்டிபானை கழுவி, விறகுபாத்து, அடுப்புப்புகையிலே அல்லாடி... சோறாக்கி, காப்பி போட்டு, ஆணம் காச்சி.... எல்லாம் விதிக்கொடுமை!

ஏதோ.... நொண்டிவீரன் சாமிபுண்ணியத்துலே இந்த ஒரு பொட்டப்புள்ளையாச்சும் தப்பிப் பிழைச்சுத் தங்கியிருக்குறது னாலேதான்... நாம ஒரு குடும்பம்ங்கிற அந்தஸ்துலே இருக்கோம். வீடு வாசலோடு இருக்கோம். இந்த அரும்பு இல்லேன்னா... நா. ஒண்டிக்கட்டையா.... பொறம்போக்கா... தண்ணீ குடுக்கக்கூட நாதியத்த அனாதையாகத்தான் அலையணும்....

மயிலப்பன் அயற்சியோடு கண்களை மூடி.... இறுக அழுத்தி விட்டுத் திறக்கையில் இமைரோமங்கள் ஈரத்தில் நனைந்திருந்தன.

நோய் வாய்ப்பட்ட நேரத்தில்தான் எந்த இழப்பும் பூதாகரமாகத் தெரியும். மயிலப்பனுக்கும் மனைவியின் இழப்பு, எந்த நேரத்தையும்விட, இப்போது பெரிதாகத் தோன்றியது.

கொதிக்கிற நெற்றியைத் தொட்டுப் பார்க்கிற ஈரமான கைகள் இல்லை. 'ஐய்யோ, காச்ச தீயா பொறியுதே' என்று பதறித் துடிக்கிற அந்த இதயம் இல்லை. 'படுத்துரு, பத்து அரைச்சுப் போடுதேன். கசாயம் காச்சித்தாரேன்' என பதைத்துப் போய் ... பரபரத்துத் திரிகிற – அந்தப் பரிவு – அன்பு – உறவு – இல்லை.

ஆ...எம்புட்டுப்பெரிய இல்லை! சூன்யத்தையே சூழலாக்கிவிட்ட குரூரமான இல்லை. அடப்பாதரவே. எந்த மனுஷனுக்கும் வாய்த்து விடக்கூடாத கொடுமையான இல்லை...!

உடம்பெல்லாம் வியர்த்துவிட்டதை, கொஞ்ச நேரம் கழித்தே உணர்ந்தான். தலைமுடிக்குள் வியர்வைக் கசகசப்பு. கனம் குறைந்துவிட்டது. நாசிக் காந்தல், எரிச்சல் எல்லாம் மட்டுப் பட்டிருந்தது.

சீலைத்துணியால் நெஞ்சு, முகம் எல்லாம் துடைத்துக் கொண்டான். மேய்ச்சல் தளத்துக்குப் போகலாம் என்ற நினைப்பில், வீட்டுக்குப்போய்க் குச்சியை எடுத்துக்கொண்டான்.

ஊரையொட்டி நடந்தான். சாக்கடை வாய்க்கால் கட்டுமானத் துக்கான செங்கற்குவியல்... கற்குவியல்.... சத்துணவுக் கூடத்துக் கான ஆஸ்பெஸ்டாஸ் தகடுகள்... ஊரையொட்டி ரோடு ரோலர்... புதுச்சாலை...

எல்லாம் நடந்து முடிந்த பஞ்சாயத்துத் தேர்தலின் உடனடிப் பலன்கள்.....

ஓடைக்குள் இறங்கினான். மனிதக்கழிவுகள், வேலிச்செடியைச் சுற்றி அசிங்கங்கள். பழகிப்போன வேலைத்தளம். அருவருப் பில்லாமல் "வில், வில்" லென்று விறைப்பாக நடந்தான்.

மேல் பக்க ஓடையிலிருந்து வடப்பக்க ஓடைக்குப்போவதற்காகத் தோட்டங்கள் வழியாக குறுக்காக விழுந்து நடந்தான். மிளகாத் தோட்டங்கள் அஸ்தமன கதியில் இருந்தன. தொங்கட்டான் மாதிரி சின்னக் காய்கள் உச்சியில் தொங்க. இலைகள் பச்சை மாறிப்பழுப்பு நிறத்தில் நரைத்துப்போயிருந்தன.

அகத்தி வரிசைகள் மொட்டை மொட்டையாக நின்றன.

இந்த ஓடைக் கரையிலிருந்த புஞ்சை மண்ணை மிதித்தபோது... உடம்பில் சிலிர்த்தது. தொட்டுக் கும்பிடணும்போல் மனசுக்குள் ஒருபுல்லரிப்பு.

இந்தத் தோட்டத்தில்தான்... அது நடந்தது. அட, இந்தப் புஞ்சைக்கார முதலாளி எம்புட்டு நல்ல மனுசர்...!

அன்னிக்கு நடந்ததென்ன. சாமான்யமான தப்பா? முந்நூறு. நானூறுனு அவராதம் போட்டுத் தள்ளியிருப்பாகளே... அதுக்கும் மேலேதானே அவருக்குத் சேதாரம் இருக்கும். ஆனா எம்புட்டுப் பெருந்தன்மையாச் சொன்னாரு.

“சரி.சரி. போய்ட்டுவா.. தப்பு யாருக்கும் வரத்தானே செய்யும். அதுக்காக எளியவன் - ஒன்னை என்ன செய்யறது? எனக்கு நேரம் சரியில்லேன்னு நெனச்சுக்கிடவேண்டியதுதான்...ம்”

நொண்டி வீரன் சாமியே அவர் மனசுக்குள் நின்னு பேசின மாதிரி, என்ன அருமையா - மனுசத் தன்மையோட - பெருந் தன்மையோட - பேசினாரு! அவரு காலுககுப் பூப்போட்டுத்தான் கும்புடணும். முடிஞ்சா... அவரு கைக்குக்குத் தங்கக்காப்புக் கூடப் போடலாம். அவரு குடும்பம் ஒரு கொறையில்லாம தழைக்கணும்.

*  *  *

அப்போது....

மயிலப்பனிடம் நிறைமாதச் சினையாக, ஒரு பன்றி இருந்தது. இன்றைக்கோ, நாளைக்கோ எப்பவும் குட்டி போடலாம் என்ற விளிம்பில் நின்றது.

அந்தச் சின்னப் பன்றியைக் கூட்டுக்குள் அடைக்க முடியாது. மற்ற பன்றிகள் இதைச் சித்ரவதைப்படுத்திவிடக்கூடும். அல்லது பிரசவ வேதனை வெறியில் இதுவும் மற்றப் பன்றிகளைக் கடித்துக் குதறிவிடக்கூடும்.

சினைப் பன்றியின் பின்னங்காலில் கயிறுபோட்டு, கூட்டுக்கு வெளியே இரும்பு முளையில் கட்டிப்போட்டிருந்தான். அதன் முன் தரையில் பதித்திருந்த பட்டிலில் வாடாமல் கஞ்சித்தண்ணீர், அந்தக் கர்ப்பிணியை ராவும் பகலுமாகக் கவனித்துக் கொண்டிருந்தான். பணம் பெத்த பன்னி!

விடிந்து வெளியே வந்துபார்த்தான். கண்ணில் தேள் கொட்டியது போலிருந்தது. கயிறு அறுந்து இற்றுக்கிடந்தது. பன்றியைக் காணோம்.

பயமும் திகிலுமாய் நெஞ்சடைத்துப் போனான்.

பணம் பெத்த பன்னி பாழாயிடுமோ...

பழியைக் கொண்ணாந்து சேர்த்திடுமோ....

இரண்டு வகையான பயம் மனத்தைக் கவ்விக் கொண்டது.

மனத்தின் பரபரப்பு, காலில் இறங்க... மின்னலாகக் காடுகளில் ஓடித்திரிந்தான். முள்ளு மொடல்களைப் பொருட்படுத்தாமல், கண், மூக்கு தெரியாத வெறி வேகத்தில் அங்குமிங்குமாய்ப் பாய்ந்தான்.

கடைசியில்....

இந்தத் தோட்டத்தில் வந்து பார்த்தால்....

நிலம் உழுது புரட்டப்பட்டுக் கிடக்கிறது. வடகிழக்கு மூலையில் மிளகாய் நாற்றங்கால், பத்துப்பதினாறு பாத்திகள். 30 நாள் வயசான நாற்றுகள், பிறந்து நாலைஞ்சு நாளான கோழிக்குஞ்சு களைப் போல மென்மையா... அழகா... சின்னஞ்சிறுசா.... அடர்த்தியான இளம்பசுமையாய்....

நாற்றங்கால் முழுவதும் சினைப்பன்றி உருண்டு, புரண்டு, குரூரமான நாசக் காடாகிக் கிடந்தது. ஒடிந்துபோன நாற்றுகளின் மிருதுவில் அரைமயக்கத்தில் பன்றி படுத்துக் கிடந்தது.

அந்த மயக்கத்திலும் பார்ப்பவர்கள் மிரளுகிற மாதிரியான மிரட்டலான உறுமல். 'மூசு... மூசு...' என்று பெரிதாக மூச்சுவிட்டுக் கொண்டிருந்தது. சுற்றிலும் நிறைய குட்டிகள்... 'மொய் மொய்' யென்று.

அப்பாடா...! மனத்தின் கனம் பாதியாகக் குறைந்தது. உள்ளுக்குள் ஒரு கதவு திறந்துகொண்டதைப்போல, பாய்ந்த இளங்காற்றில் மனத்தின் வியர்வை துடைக்கப்பட்டது.

ஆனால், இன்னோர் அச்சம் மனத்தை அறுத்தது. நாசக்காடாகிக் கிடந்த நாற்றங்கால்!

நாற்றாங்கால் என்பது, சம்சாரிக்கு மூலவித்தல்லவா? வெள்ளாமையை விட மதிப்பு மிக்கதல்லவா! நடுவைக்குப் பணம் போட்டு நாற்று வாங்கப் போனால்.... ஆயிரத்திற்கும் மேலாகுமே! அம்புட்டையும் நாசமாக்கிடுச்சே!

மனசு மருகித் தவித்தது.

அடக் கொடுமையே... என்னதான் ஆகுமோ...? எம்புட்டுதான் அபராதம் போடுவாகளோ... நம்ம குடும்பமே, இதுலே நொறுங்கி, 'நொத்தவிடா' போயிடுமோ... பீதியும், திகிலும் சினைப் பன்றி யாகப் புரள, மனசு நாற்றங்காலாய்ச் சிரழிந்து கொண்டிருந்தது.

பிரசவ வலி பொறுக்காமல். வேதனை வெறியில் கயிற்றை அறுத்துக்கொண்டு கண்மூக்குத் தெரியாமல் ஓடித்திரிந்து, படுக்கச்சுகமாக இருந்த நாற்றங்காலில் வந்து புரண்டிருக்கிறது.

சே! மிருகங்கிறது சரியாப்போச்சே! அது குணத்தைக் காட்டிடுச்சே! பச்சைப் புள்ளை மாதிரி இருக்கிற இந்த நாத்துலே படுத்துப்புரள மனுசனுக்கு மனசு வருமா?

அடக் கொடுமையே...! இப்ப என்ன செய்யறது?

ஒரு வழியாக - பன்றியை வீடு சேர்த்து விட்டு, புஞ்சைக்கார முதலாளி வீட்டை நோக்கிப் பறத்தான். சிபிச் சக்கரவர்த்தி காலடியில் வந்து விழுந்த அடிபட்ட புறாவைப் போல... மயிலப்பனும் அவர் காலடியில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து கும்பிட்டான்.

பதறிப்போன அவர், "எந்தி, எந்தி... எதுக்கப்பா கால்லே வந்து வுழறே?"

பயத்தில் வாய் உளற... கண்ணில் நீர் மாலை மாலையாக வழிய... காய்ச்சல் கண்டவன் புலம்புகிற மாதிரி, தவித்துத் தவித்துச் சொல்லி முடித்தான். கடைசியில் -

"முதலாளி, நானறியாமல் நடந்து போன தப்புதான். ஆனாலும், ஒங்களுக்கு நட்டம் நட்டந்தானே! நீங்க எனக்குத் தகப்பன் போல. நா, உங்க நெழல்லே - ஆதரவுலே - பொழைக்கிறவன். நீங்க பாத்து, மனசு வச்சு, என்ன நியாயம் சொன்னாலும்... மறு பேச்சில்லாம நான் கட்டுப்படுதேன் முதலாளி"

என்று சொல்லிவிட்டு மருகி நின்றான்.

அப்போதுதான் அந்த வார்த்தைகளைக் கூறினார். தங்கமான மனுசராய்... தெய்வத்தை விட உயர்ந்த மனுசராய் - சிபிச் சக்கரவர்த்தியாய்...

"சரி சரி, தப்பு யாருக்கும் வரத்தானே செய்யும். அதுக்காக எளியவன் - ஒன்னை என்ன செய்யறது? எனக்கு நேரம் சரியில்லேன்னு நெனைச்சுக்கிட வேண்டியதுதான்"

அந்த மனித நேயக்குரல், இதோ... இப்பொழுது கூட ஒலிப்பது போலிருக்கிறது. நெஞ்சுக்குள் ஒரு சிலிர்ப்பு... தேகமெல்லாம் புல்லரிப்பு.

அடடா... எம்புட்டு அருமையான மனுசர் - மனுசர்னா இவருதான் மனுசர்...

* * *

அந்தத் தோட்டத்தின் சரிவில் இறங்கி, மயலப்பன் ஓடைக்குள் விழுந்தான். முள் செடிகளுக்கு மத்தியில் ஊடுருவி, கிழக்காகச் செல்கிறபோது நிமிர்ந்து பார்த்தான்.

கருமை கருமையாக நிறைய மேகங்கள். கல்யாணமாகி இன்னும் கர்ப்பம் தரிக்காத பெண்ணைப் போன்ற மேகங்களாக மாறவும் செய்யலாம். மலட்டு மேகங்களாகப் போய்விடவும் செய்யலாம்.

எல்லாம்... அடிக்கிற காற்றைப் பொறுத்த விஷயம்.

காலைச் சூரியனின் கோடைக் கிரணங்களைத் தவிர்க்க, கையால் கண்ணுக்குக் குடையமைத்துப் பார்த்தான். செந்தட்டி கண்ணில் தட்டுப்படவேயில்லை. குச்சியைக் கக்கத்தில் இடுக்கிக் கொண்டு, மனிதக் கழிவுகளிடையே நடந்தான். தெற்காகத் திரும்பிவிட்டான்.

ஓடையிலேயே அதோ... அந்த இடம் பெரும் பள்ளம். ஆள் நின்றால் தலை தெரியாத ஆழம்.

அந்தத் தங்கமான மனிதருக்கு அந்த இடத்திலும் ஒரு துண்டுப் புஞ்சை இருக்கிறது.

ஓடையின் ஆழமான இடத்தை தாண்டிய மேட்டில், பன்றிகள் மேய்வது தெரிந்தது. செந்தட்டி எங்கே?

"விளையாட்டுப் போக்காக எங்காச்சும் நிக்காளா? பன்னிகளைத் தன்போக்கில் விட்டுவிட்டு, கவனப் பிசகாக இருக்காளா?"

மயிலப்பனுக்குள் ஒரு சின்ன உதைப்பு.

நடையை எட்டிப் போட்டான். பத்தடி தூரத்தைத் துடியாய்க் கடந்திருப்பான். மகளின் கதறல், துல்லியமாகக் கேட்டது. மனசுக்குள் திக்கென்றது.

"ஐயய்யோ... ஐயய்யோ... அம்மா... அய்யா... ஐயய்யோ... வலிக்கே"

வலி தாளாமல் துடித்தலறுகிற தனது ரத்தத்தின் குரல். தாயில்லாப் பிஞ்சின் அவலக்குரல்.

அவனது குலை பதறியது. ஈரக் குலையைப் பிடுங்குவதைப் போன்றதொரு திகிலுணர்வு. திக்திக்கென்று அடிப்பதைக் கூட மனசு நிறுத்திக் கொள்ள... ஓட்டமும் நடையுமாக முட்செடிகளைக் கிழித்துக் கொண்டு பாய...

அந்த ஓடையின் ஆள் தெரியாத ஆழத்தில் –

செந்தட்டியின் காய்ந்த தலைமயிரை இடது கை பற்றியிழுக்க, வலது கையால் கன்னத்திலும், முதுகிலும் ஓங்கி ஓங்கி அடித்துக் கொண்டிருந்தார், ஒருவர்.

அவள் துடியாய்த் துடித்தாள்.

"புஞ்சையிலே இனிமே பன்னியெ விடுவீயா? இனிமே விடுவீயா? பன்னியைப் புஞ்சையிலே... இனி மேயவிட்டே... கொன்னு தோலை உரிச்சிடுவேன்... சாக்கிரதை".

அவரின் முரட்டுக்குரல். அதேகுரல். தங்கமான அதே மனிதரா... இப்படி...! புறாக் குஞ்சை வதைக்கிற சிபியாக... அவரா, இப்படி!

"முதலாளி, முதலாளி" என்று கூப்பாடு போட்டுக் கொண்டே, ஒரே பாய்ச்சலில் வந்து சேர்ந்தான். மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க வந்த மயிலப்பன், மகளைப் பிடுங்கித் தொடையோடு சேர்த்து அனைத்துக் கொண்டான்.

அந்தப் புறாக் குஞ்சின் கன்னத்திலும், முதுகிலும் முரட்டுக்கை விளையாடிய தடங்கள்... தடிப்பு தடிப்பாக ரத்தம் கன்றிப்போய்...

அவனுள் தீக்கோலைச் சொருகியது போலிருந்தது. மனசெல்லாம் கிடந்து கொதிக்க.. "முதலாளி, இந்தப் பச்சை மதலையை எதுக்கு இப்படி அடிச்சுக் கொன்னுருக்கிக...?"

"தண்ணி பாஞ்சு கெடக்குற வெள்ளாமையிலே பன்னிகளை வுட்டு, ஒழப்புனா, எப்படி இருக்கும்?"

செந்தட்டி பயத்தில் ஒட்டிக்கொண்டு, விக்கி விக்கியழுதாள். அவள் விம்மித் துடிக்கிற துடிப்பைப் பார்க்கப் பார்க்க மனசுக்குள் குத்துண்ட வேதனை.

"இதுக்காகவா முதலாளி. இப்படிப் புள்ளையைத் தொலைச்சு எடுக்கணும்? இது நியாயமா முதலாளி? தாயில்லாப் புள்ளை முதலாளி!"

"தாயில்லாப் புள்ளைங்கிறதுக்காக... புஞ்சையிலே பன்னியை விட்டுப் பாழாக்குனா... முத்தமா கொஞ்சுவாக? நியாயமாம்... நியாயம்!"

"பாழாக்கணும்னு நெனச்சா முதலாளி செய்திருப்பா? தப்பித் தவறித்தானே விழுந்திருக்கும்? இதுக்குப் போய் இப்படி அடிச்சுக் கொன்னுருக்கிங்களே... அப்படியே தப்பித் தவறிப் புஞ்சையிலே விழுந்துட்டாலும், என்ன அழிமானம் ஆயிருக்கும் முதலாளி? ஒஞ்சு போன வெள்ளாமைதானே? இதைக்கூட முதலாளிமார் பொறுத்துப் போகக் கூடாதா முதலாளி?"

"எதுக்குடா பொறுத்துப் போகணும்? பஞ்சாயத்துத் தேர்தல்லே ஏஞ்சாதிக்காரனுக்கு ஓட்டுப் போடாத சாதிக்காரனுக்கெல்லாம் என்னத்துக்குப் பொறுத்துப் போகணும்? நாலு போடு போட்டு வைக்கிற இடத்துலே உங்களை வச்சாத்தான்... உங்களுக்கெல்லாம் மனசுலே பயம் வரும்."

வாயடைத்துப் போனான் மயிலப்பன். இதுக்கு மேலே என்னத்தைப் பேச?

இவர் இவரா இருந்தப்போ, எம்புட்டு அருமையான மனுசரா இருந்தாரு...! மனுசனை மனுசனா மதிக்கிற, மனுசரா இருந்தாரே...!

பூப்போட்டு கும்புடக் கூடிய காலாக... தங்கக் காப்பு செய்து போடத்தக்க கையாக இருந்தாரே...!

அதே கைதான்... செந்தட்டியை – சின்னஞ்சிறு மலரை – கிள்ளி நசுக்கி எறிஞ்சிருக்கு...

அப்பேற்பட்ட மனுசர்... எப்படி இப்படி மாறிட்டாரு? எது இவரை இப்படி மாத்திச்சு? அதான்... அவரே சொல்லிட்டாரே...

"ஏஞ்சாதிக்காரனுக்கு ஓட்டுப் போடாத சாதிக்காரனுக..."

காலோடு ஒட்டி நிற்கிற மகள் நடுங்குகிறாள். விக்கி விக்கி அழுகிறாள். அவள் பாவாடை மூத்திரத்தில் நனைந்து கிடந்தது.

'அடிபட்ட பயத்திலே காய்ச்சல் வந்து செத்துப் போவாளோ...'

அவன் மனசு நினைக்கக் கொதித்தது...

மகளைத் தடவிக் கொடுத்தபோது... கழுகின் காலடியில் சிக்கிக் கொண்ட புறாவைப் போலத் துடித்தது, அவனது மனம்.

*கல்கி, 3.8.86*

*ரூ. 1000 முதல் பரிசு பெற்ற கதை*

# ஜீவிதத்தின் உள்வட்டம்

*செட்டைகளை தட்டி சடசடத்துக்கூவிய தலைக்கோழி, செல்லம்மாவின் உறக்கத்தைத் தட்டிப் பறித்துக்கொண்டது. 'அவக், தொவக்'கென எழுந்த செல்லம்மா... கூந்தலை உதறி முடித்துக் கொண்டாள்.*

*'அதுக்குள்ளே விடிஞ்சிருச்சா' என்று சலிப்போடு முணு முணுத்துக் கொண்டாள். கதவைத் திறந்து வெளியே வந்தாள். கும்மென்ற இருட்டு சூழ்ந்து கொண்டது. கிழ்த்திசையில் அடிவானம் முகம் வெளுக்க ஆரம்பித்திருந்தது.*

*'அடியாத்தே... நேரம் ஓடிப்போச்சே! அலுத்துக் களைச்ச உடம்பை ஒறக்கம் ஒரே அமுக்கா அமுக்கிப் புடிச்சே... ஊம்...' என்று சுயவிமர்சனமாக முனங்கினாள்.*

*இன்னும் ஏழு மைல் தூரம் நடந்துதான் வேலைத் தளத்துக்குப் போகமுடியும் என்ற நினைவு, அவளுக்குள் ஒரு மலைப்பை ஏற்படுத்தினாலும், அவளது கால்களுக்கு சக்கரம் கட்டிவிட்டது. பரபரவென்று மாரியப்பன் வீட்டுத் தொழுவத்துக்குச் சென்றாள்.*

*சாணம் எடுத்துவந்து மண் சட்டியில் கரைத்தாள். சளப் சளப்பென்று தெளித்தாள். அடுப்புச் சாம்பலை அள்ளிய கையோடு, அதே சாம்பலில் பல்லையும் துலக்கிக்கொண்டாள். வீட்டைப் பெருக்கினாள்.*

பாயை விட்டு விலகி உருண்டு கிடந்த பெண் குழந்தையின் பாவாடையை இழுத்து மூடினாள். கோழையை வடித்துக்கொண்டு உறங்கிய சின்னவன் மீது பழைய சேலையை விரித்து மூடினாள்.

பரபரத்து வேலை செய்த செல்லம்மா... பிள்ளைகளைப் பார்த்த பார்வையை விலக்காமல் நிலைத்து நின்றாள். மனசுக்குள் ஒரு சோகம் திரண்டுவந்தது. கண்களுக்குள் மோதி உறுத்தியது. படபடத்த இமைகள் ஈரத்தில் நனைந்தன.

"இப்பப்போனா வீடுவந்து சேர்ரதுக்குள்ளே பொழுது சாஞ்சுடும். அதுவரைக்கும் இந்தப் 'பச்சை மண்ணுக' என்ன செய்யும்! தாயில்லாப் புள்ளைக போல தெருக்காட்லேதான் திரியணும். பாவம்! ஒருவாய் கஞ்சியை ஊத்தி குடிக்க வைச்சு, 'கங்' குளூரப் பாக்குறதுக்கு, நமக்கு கொடுத்து வைக்கலியே....'

இந்த எண்ணம் ஒரு துன்பமாக சுரந்து மனசுக்குள் நிரம்பித் தளும்பியது. ஏதோ ஒரு பாரம் ஏறிக்கொண்டதுபோல கனத்தது. கனத்த நினைவுகளை ஒரு பெருமூச்சாக்கி... காற்றில் கரைத்தாள்.

கஞ்சியை ஊற்றிக்குடித்தாள். புள்ளைகளுக்கு ரெண்டு வேளைக்கு சரியா வருமா என்று பானையில் உள்ளதை சரிபார்த்துவிட்டு, மூடிவைத்தாள்.

டயர் செருப்பை காலில் மாட்டிக்கொண்டாள். ஒரு பழைய சாக்கை மடித்து வைத்துக்கொண்டு, கட்டைக் குச்சியையும் எடுத்துக்கொண்டாள். 'கொட்டு மம்பட்டி'யை எடுத்து தோளில் கோர்த்து மாட்டிக்கொண்டாள்.

கூட்டுக்குள் கத்திய கோழிகளை திறந்துவிட்டாள்.

கதவைச் சாத்துவதற்கு முன்பாக குழந்தைகளை ஒருமுறை பார்த்துக்கொண்டாள். பார்வையினாலேயே அள்ளி மனசுக்குள் அணைத்துக்கொள்பவளைப்போல பார்த்தாள்.

இதயத்தின் அடியாழத்திலிருந்து சிற்றத்துடன் வெளிப்பட்ட பெருமூச்சுடன் தெருவில் இறங்கினாள். இருட்டு இன்னும் அடர்த்தி குறையாமலிருந்தது. இலேசாக பனியடித்தது. புளித்த கஞ்சி வயிற்றுக்குள் குளிர்ந்து தேகம் முழுவதும் புல்லரிக்க வைத்தது.

வாடைக்காற்று வேகமில்லாமல் வீசியது. பனியின் வீர்யத்தை அதிகப்படுத்தியது.

அடைமழை அடைச்சுக்கிட்டு பேயவேண்டிய இந்தப் பொரட்டாசி மாசத்துலே, இப்படிபனி கொட்னா என்னத்துக் காகும்? மழை எப்படி எட்டிப் பாக்கும்? 'மானம்' பாத்து மனசு

இறங்கி மழை பெய்யாட்டா... மனுச மக்க எப்படி பொழைக்கிறது? காட்லேதா என்ன வேலை நடக்கும்? கூலியாளுகளுக்கு என்ன வேலை கெடைக்கும்?

'பூமியுள்ள சம்சாரிகளாச்சும்... இந்த வறட்சியிலேயும் கெத்து விடாம இருந்துருவாக. அன்னாடம் பாடுபட்டு பானை கழுவுற கூலி ஜனங்க வூடுகள்ளே என்னத்தை வைச்சி உலைகாய வைக்குறது? ம்ஹூம்... வேலையத்து விதியத்து இப்படி வேந்தட்டிக் கெழங்கு வெட்டி, வித்து...சே! இது என்ன பய பொழப்பு, சீரழிஞ்ச பய பொழப்பு!'

நினைவுகள் வாழ்வின் அவலத்தை சுற்றி மொய்க்க,

செல்லம்மா நடையை துரிதப்படுத்தினாள். மையிருட்டு கண்களை மறைத்தாலும், பாதங்கள் பட்டு வெளுத்துப்போன ஒற்றையடிப்பாதை, இருட்டுக்குள் விரித்துப்போட்ட வெள்ளை நாடாவைப்போல வளைந்தும் நெளிந்தும் புலப்பட்டது.

பழகிய பாதை... பாதைக்குப் பரிச்சயப்பட்ட பாதங்கள்... தயக்கம் எதுவுமில்லாமல் கால்கள் முன்னேறிக்கொண்டிருந்தது.

இன்னும் ஏழு மைல்கள் இடையில் நாலைந்து ஊர்கள்... வேலைத் தளத்துக்குப் போய்ச்சேர்ரதுக்குள்ளே 'ஆத்தாடி அம்மாடி'ன்னு ஆயிப்போகும். உஸ்ஸென்னு உக்கார முடியாது. உழுகாமக் கெடக்குற கருசக்காடுகள்ளே ஓடி ஓடி மம்பட்டியாலே 'மொங்கு மொங்கு'ன்னு வெட்டணும். முழங்கால் ஆழத்துக்குக் கீழேதான், வேந்தட்டிக் கெழங்கு, இஞ்சிபோல மண்ணுக்குள்ளே புதைஞ்சி கிடக்கும். அதைக்கண்டுபிடிச்சு, கட்டைக் குச்சியாலே குத்திக் கௌறி... தொடச்சித் தொடச்சி சாக்குக்குள்ளே போடணும்...

சாயங்காலம் வரைக்கும் சளைக்காம தோண்டுனா... மூணு, நாலு கிலோ கெடைக்கும். கொண்டுபோய் காளிமுத்து கடையிலே போட்டா... ஒரு கிலோவுக்கு ஒரு ரூவா இருபது பைசாவாம்... அவங்க என்ன மறு வெலைக்கு விப்பானோ, யார் கண்டாக? – அவன் குடுக்கிற துட்டுலேதான்...உலை காயணும்...

மழையத்துப்போய் வறட்சியாகப் போனதுனாலேதானே,இந்தப் பஞ்சப் பொழப்பு...! இந்த மாதிரி சீப்பட்டுப்போய் வாழ்றதைவிட.... உசுரை மாய்ச்சுத்தொலைக்கலாம்... நம்ம இருந்துதான், நாட்டையாளப்போறோமாக்கும்...!

செந்தட்டியாபுரத்து நாய்கள் ரொம்ப விழிப்பாக இருந்தன. கிராமமே அலறிப்போகிற மாதிரி குரைத்தன. அவள் அதைக்

கண்டுகொள்ளவேயில்லை. நாய்களை நெருங்கவிடாமல், கட்டைக் குச்சியை பின்னால் நீட்டிக்கொண்டே அவள் பாட்டுக்கு நடந்தாள்.

பாய்ந்து வந்த நாய்கள் குச்சியை ஒரு மிரட்சியோடு பார்த்து திகைத்தாலும், குரைப்பதை மட்டும் நிறுத்தவில்லை. செல்லம்மா 'நிமாண்ட்' நாழியில் ஊரைக் கடந்தாள். ஓடைக்குள் விழுந்தாள். கலகலத்துப்போன மணலில் கால்கள் புதைய, 'பொதுக் பொதுக்' கென்று சப்தம் வந்தது.

வேலிமரத்துக் கிளைகள் முகத்தைப்பற்றிப் பிடிக்க முயல் கின்றன. அதை ஒதுக்கிவிட்டு, முள்ளின் கீறலினால் ஏற்படுகிற காந்தலை உணர்ந்தவாறே விறுவிறுவென நடந்தாள்.

பாதையின் இருமருங்கிலும் நிலம் கரேலென்று விரிந்து கிடந்தது. தாலியறுத்த மலடியைப்போல வெறுமையாகத் தோற்ற மளித்தது.

'எந்த மகராசன் புஞ்சையோ... வெள்ளாமைக்கு வழியத்துப் போய் வெம்பரப்பாய் கெடக்கு...'

ஆடி ஆவணி மாசத்திலே பேய வேண்டிய மழை. பேஞ்சிருந்தா... காடுக இப்படியா கெடக்கும்? கருசக்காடுகள்லாம் வெதைப்பாயி ருக்குமே! நாத்தோ பருத்தியோ,.. இந்நேரம் முழங்கால் உசரத்துக்கு வந்துருக்குமே...

இந்த மாதிரி இறைவைப் புஞ்சைகளையும் சம்சாரிக இப்படியா சும்மா போட்டுவைச்சிருப்பாக? குப்பையடிப்போ... உழவடிக் கிறதோ... கெடைபோடுறதோ... பாத்திகட்டுறதோ மொளகா நாத்து நடுறதோ... சன்ன வேலையா நடந்துருக்கும்?

கூலிசனங்களுக்கும் 'நெரிபுரி'யா வேலை கெடைச்சிருக்கும். காலாகாலத்துலே கொத்துவாங்கி, காச்சிக்குடிச்சுட்டு, புள்ளை களோடு நேரத்தோடப்படுத்து உறங்கலாம்...

கல்லுமனசா இறுகிப்போய் 'மானம்' கண்ணை மூடப்போய்... பூமி இப்படி சும்மா கெடக்கு? வேலையத்துப்போய் கூலியாளுக ஆலாய்ப்பறக்குற பொழைப்பாயிப்போச்சு..... வேந்தட்டிக் கெழங்கே விதின்னு ஆயிப்போச்சு...

மானம் அயத்துப்போனாலும், பூமி மனுஷனை அயக்காது. அதுலேயும் கருசப்பூமி – அடிவவுத்துலே சேத்து வைச்சிருந்து, பஞ்ச காலத்துலே பஞ்சாய்ப் பறக்குற ஏழைபாழைகளுக்கு ஏதாச்சும் குடுத்துக்காப்பாத்துது. இன்னைய நெலமைக்குவேந்தட்டிக் கெழங்கு மட்டும் இல்லேன்னா... கூலிமக்க பொழைக்க வழியில்

லாம... வேற சீமைக்குத்தான் போய்ச்சேரணும். எந்தச்சாமி புண்ணியமோ – கருசமண்ணு இந்த மட்டுக்காச்சும் ஏதோ காப்பாத்துதே...

ஆமர்நாட்டு நாய்களும் உறங்கிவிடவில்லை. கூட்டமாகக் குரைத்துக்கொண்டு பாய்ந்து வந்தன. உறக்கச் சடைவோடு முற்றத்தில் நின்ற ஒன்றிரண்டு பெண்கள் நாய்களை அதட்டினர்.

'சேடு...சேடு.. கழுதை, சும்மா கெடங்களேன்! விடிஞ்ச பெறகு கள்ளனை வெரட்டிப் பிடிக்கிகளாக்கும்? சே... டு' நாய்களை அதட்டிய உயர்ந்த குரலை தாழ்த்திக் கொண்டு விசாரித்தனர்...

"யாரது... இந்நேரம்... செல்லம்மாவா?"

"ஆமம்மா'....

"என்ன இந்நேரம்? தூரவா?"

"வேந்தட்டிக்கெழங்கு வெட்டப் போறேம்மா புல்லாப்பட்டி காட்டுக்கு. 'அடே...யம்மா... சல்லம்பட்டியிலேருந்து புல்லாப் பட்டிக்கா...? ரொம்பத் தூரமாயிருக்குமே..."

"தூரந்தாம்மா, என்ன செய்றது? மழையில்லாம வேலையு மில்லே ஜோலியுமில்லே... எப்பாடு பட்டாச்சும் கொதிக்குற வவுத்தை அமத்தணுமேயம்மா..."

"அதுவும் சரிதான். மழை செய்ற கூத்துலே மனுஷப் பொழப்பு. நாய்ப் பொழப்பா போச்சு... சரி... செல்லம்மா.. காலடிப் பாத்துப்போ"

"சரிம்மா..."

ஆமர்நாடு பின்னால் நழுவிக்கொள்ள, ஆற்றுக்குள் விழுந்தாள். பனந்தோப்பில் ஏறினாள். வண்டிப் பாதைக்கு நடுவில் நீண்ட ஒற்றையடிப் பாதையில் நடையை எட்டிப் போட்டாள்.

நாய்ப்பொழப்பா போச்சு... என்று அந்தப் பெண்கள் அனுதாபப்பட்டது, நினைவுக்கு வந்தது. அவமான உணர்வு மனசில் ரம்பம் போட்டு அறுத்தது. அவளும் உணர்ந்து சலித்த அவலம்தான் என்றாலும், மற்றவர்கள் உதடுகளிலிருந்து அந்த அவலத்துக்கு அனுதாபம் சொல்லும்போது... ஒரு கேவலத்தை உணர்கிறாள். இப்படியாகிப் போச்சே... என்று தன் நிலைமையை எண்ணி எண்ணி கைத்துப் போகிறாள்.

இதைவிட் செத்துத் தொலைக்கலாம்... இந்தப் பூமியிலே இருந்து பட்டத்தைக் கட்டி ஆள போறோமாக்கும்...!

கீழடிவானத்தின் வெளுப்பில் பிரகாசம் தெரிகிறது. துண்டு துக்காணியாகக் கிடந்த மலட்டு மேகங்களின் விளிம்புகள் கன்றிச் சிவந்து கிடந்தன.

பாதையின் இருபக்கங்களிலும் அடர்த்தியான வேலி மரக்காடுகள். கால் வைக்க இடமில்லாமல் புதர்போல் வளர்ந்து கிடந்தது. சுவர்க்கோழியின்ஙீ என்ற இரைச்சல் காதைக் குடைவது போலிருந்தது.

வேலிமரக்காட்டின் முதுகுக்குப் பின்னால் பதுங்கி நின்ற வலையபட்டியைக் கடந்து செல்லும்போது ரத்தப் பிரகாசமாய் பொழுது தலைதூக்கி தகதகத்தது. நடையின் வேகத்தில் கட்கத்திற்குள் வியர்த்துக் கசகசத்தது. நாசிக்கடியிலும் வியர்வை மணிகள் நழுவி விழுந்தன.

மெட்டல் ரோடு குற்றுயிரும் குலையுயிருமாகக் கிடந்தது. கிடங்கும் மேடுமான வெறும் பாதையில் கருங்கல் சல்லிகளை தாறுமாறாகப் பரப்பி வைத்தாற்போலிருந்தது. கால் விரலைப் பதம் பார்க்கிற கற்களைக் கூட குனிந்து பார்க்காமல் வேகு, வேகு என்று நடந்தாள்.

மழையில்லாத காட்டு ஜனங்களுக்கு சர்க்கார் என்னமோ வேலைக. தான்யம்... துணிமணி ஓசியா... மாட்டுக்கடன் எல்லாம் தர்றதாக ரேடியோவுலே சொல்லுதாங்க... இங்கே ஒரு எழவையும் காணலே... ஏதாச்சும் குடுய்யான்னு கேக்கலாம்னாலும்... அந்தப் பாழாப்போற சர்க்கார் எங்கயிருக்குன்னும் தெரியலியே... இந்த பட்டிக்காட்லே கெடக்குற ஏழை பாழைகளை... சர்க்கார் மட்டுமா... சாமிகூட ஏறெடுத்துப் பார்க்காது.

தூரத்தில் கூட்டமாய் வரிசையாக மனிதர்கள் பரபரக்கிற தோற்றம். எல்லாம் இவள் ஊரைச் சேர்ந்த கூலி மக்கள்தான். வேந்தட்டிக் கிழங்கு வேட்டைக்காரர்கள்தான்.

எம்மா டீ... எம்புட்டுத் தொலைவுக்குப் போயிட்டாக? நம்ம ஊருச் சிறுக்கிக... போறப்போ வாரியான்னு ஒரு வார்த்தை கேட்டாளுவளா? அரவமில்லாம முந்தி ஓடியிருக்காகளே... என்னத்தை அள்ளுறதுக்கு இப்படி கமுக்கமா ஓடுதாளுவளோ...

மனசுக்குள் ஜ்வாலை விட்டெரிந்த வெளத்தை வாய் விட்டே முனங்கிக் கொண்டாள். கூட ரெண்டு கெட்ட வார்த்தைகளையும் உதிர்த்துக் கொண்டாள்.

நடக்க நடக்க தொலைவு தொலையவில்லை. தொடைச் சதைகளில் வலியெடுத்தது. இடுப்பைச் சுற்றி கடுகடுத்தது. உடலின்

ஒவ்வொரு சதைத் துணுக்கும் 'உட்கார் உட்கார்' என்று ஓய்வுக்காகக் கெஞ்சியது.

ஒரு போட்டியின் வைராக்யத்தில் உடம்பின் அவஸ்தைகளை தாங்கிக் கொண்டு மேலும் துரிதமானாள். "ஏய் பலவற்றைச் சிறுக்கிக... உங்களுக்கு நா எளச்சவளா...? பாத்துருவோம்."

குளிர்ச்சியான காலை வெய்யில், இலேசான வாடைக் காற்று வியர்வையைப் புணர்ந்தது.

வானத்தை முத்தமிடுகிற உயரத்தில் நிமிர்ந்து நின்ற சிமிண்டாலையின் புகைக் குழாயிலிருந்து வெண்ணிற மேகங்கள் கூட்டமாகப் படையெடுத்தது. தென்மேற்குத் திசையில் அணிவகுத்து பயணப்பட்டது. வானத்தில் போடப்பட்ட வெள்ளி ரோடு போலத் தோற்றமளித்தது. நடை நடையாக இருக்க... மனசு பிள்ளைகளிடம் ஓடியது.

இந்நேரத்துலே சின்னவன் முழிச்சிக்கிட்டு என்னைத் தேடுவான். 'ம்மா... யம்மா...' ன்னு சிணுங்கிச் சிணுங்கி அழுவான். பாவம், அந்தப் பொம்பளைப் புள்ளை... அவளாலே எப்படி அந்தப் பயலை சமாளிக்க முடியும்?

கஞ்சியைத்தா ஊத்திக்குடுப்பா. அதுதானே முடியும்? தாயேத் தேடுற பச்சை மண்ணுக்கு, கஞ்சியைக் காட்டுனா போதுமா....?

செல்லம்மாவின் பெற்ற மனசு ஏங்கித் தவித்தது.

இதயத்துள் ஒரு சோகம் திரண்டுவந்து நின்றுகொண்டது. கண்ணுக்குள் வந்து மோதி குத்தலெடுத்தது.

புள்ளைக முகமறிஞ்சு பேசிச் சிரிச்சு, பசியறிஞ்சு கஞ்சி குடுத்து பார்த்துப் பூரிக்க கொடுப்பினை இல்லாமல் போயிற்றே... எல்லாம் அந்தப் பாவி மனுசனாலே வந்த வெனை.

ஓடியாடி ஒழைச்சு சம்பாதிச்சுப் போட வேண்டிய மனுசன், இந்த மணிக்கொத்துப் புள்ளைகளை மறந்துட்டு... ஊர்ப்பட்ட ஒரு சிறுக்கியை இழுத்துக்கிட்டு ஓடிட்டான். பொட்டைச் சிறுக்கிநா பொழப்புக்காக இப்படி நாயா அலைஞ்சு... காட்லே சீரழிய வேண்டியிருக்கு...

தன்னையும் குழந்தைகளையும் தவிக்க விட்டு விட்டு ஓடிப் போன புருஷனை நினைக்கிற கணத்தில் சண்டாளமாக வெளம் பொங்கினாலும், அந்தக் கோபம் மறுநிமிஷமே இழப்பின் சோகமாகக் கனிந்து மனசை அழுத்துகிறது.

நெஞ்சுக்குள் மோதித் தமும்புகிற வேதனை, கண்களின் ஓரங்களில் நீராகக் கசிகிறது...

கம்மாபட்டியை கழித்துவிட்டாள். சுள்ளென்று உரைக்க வேண்டிய ஏறுவெய்யில் இதமாக இருந்தது. மெட்டல் ரோட்டை விட்டு விலகி, வெறுமையாகிக் கிடந்த கண்மாய்க்குள் இறங்கினாள். குறுக்குப் பாதையில் நடந்தாள். கண்ணில் சூரிய வெளிச்சம் ஊசியாகக் குத்தியது ஆயிற்று... இதோ வந்தாகி விட்டது. இன்னும் ரெண்டுமைல்தான். புல்லாப்பட்டி கருசக்காடு.

ஏர்முகம் பாராமல் ஏங்கிப் போய் வெம்பரப்பாகக் கிடக்கிற கருசக்காட்லே மொங்கு, மொங்குன்னு வெட்ட வேண்டியதுதான். முழங்கால் ஆழத்துக்குக் கீழே இஞ்சி போல புதைஞ்சு கிடக்கிற வேந்தட்டிக் கிழங்கை குத்திக் கிளறி எடுக்க வேண்டியதுதான் எம்புட்டுக் கிடக்குதே... அம்புட்டுக்காசு...

ஏதோ, யோகமிருந்து நாலு கிலோ வாச்சும்கெடச்சா... அஞ்சு ரூவா சம்பளமாவது கெடைக்கும்... அந்தத் துட்டைப் பார்க்க... இத்தனை அலைச்சல்... பாடுகள்!

ஒரு பொழுதின் வயிற்றுப்பாடு கழிய... இந்த நாய் படாத பாடு பட வேண்டியிருக்கு. இந்த அவலத்துலே உசுர் வைச்சுக்கிட்டு இருக்கிறதை விட மாண்டு மடிஞ்சு போகலாம்... சே!

பொழுது முகம் சிவந்துவிட்டது. மேற்குத் தொடர்ச்சி மலையின் முதுகுக்குள் பதுங்கிக் கொண்டிருந்தது.

காளிமுத்து கடையை விட்டு வெளியே வந்த செல்லம்மா, சாமான்கள் வாங்கியது போக மிச்சமிருந்த சில்லரையை எண்ணிப் பார்த்தாள், ஒரு ரூபாய்க்குக் கூட எட்டவில்லை. முந்தியில் அதை முடிந்துகொண்டு பெருமூச்சு விட்டுக் கொண்டாள்.

வீட்டுக்குள் நுழைந்தாள். வீடெல்லாம் கோழிப்பீ. பானை சட்டிகள் தாறுமாறாகக் கிடந்தன. சாமான்களை வைத்துவிட்டு மனசைக் கவ்வுகிற ஒரு ஆவலோடு வெளியே பார்த்தாள்.

இடுப்பில் தம்பியை வைத்து இழுத்துக்கொண்டு, ஒரு வெறிவேக ஆவலில் ஓடிவந்தாள் பொம்பளைப்புள்ளை. செல்லம்மா வெளியே பாய்ந்து மகனை ஆவிச்சேத்து வாங்கிக் கொண்டாள். மனசெல்லாம் பொங்கிப் பாய்ந்த ஒரு இன்ப ஊற்று அவளுக்குள் மோதி விம்மியது.

ஒரு முரட்டு வெறியோடு மகனை தன்முகத்தோடு சேர்த்து அணைத்துக் கொண்டு மாறி மாறி முத்தமிட்டாள். 'ஏங்கண்ணு..

ஏஞ்செல்லம்...' என்று பிதற்றிக் கொண்டே முத்தமழை பொழிந்தாள்.

கொஞ்சி முடித்து நிறுத்தியபோது... அவள் கண்களில் நீர்க்கசிவு தெரிந்தது. மனசுக்குள் பொங்கிய இன்ப ஊற்றின் கசிவு.

"எம்மா... எம்மா.." என்று துவக்கிய மகள், தம்பியைப் பற்றியும், அவன் செய்த சேட்டைகளைப் பற்றியும் நீட்டி முழக்கி நிறையச் சொன்னாள்.

அதைக்கேட்டு நெஞ்செல்லாம் பூரித்துப் போனாள்.

கடையில் வாங்கிவந்த பொறி கடலையை மகன் கையிலும், முறுக்கை மகள் கையிலும் தந்தாள். 'தின்னுங்கடா கண்ணுகளா... தின்னுங்க...'

"ஏண்டா.. நீ அம்மா எங்கேன்னு தேடலியாடா... கண்ணு ஏஞ் செல்லமில்லே ஏந் தங்கமில்லே"

அவளுள் பொங்கிப் பீறிட்ட சந்தோஷக் கிளர்ச்சியில் செல் லம்மா குழந்தைஙய மறுபடியும் அழுந்த அணைத்து முத்தமிட் டாள். அவள் முகத்தில் காலைச் சூரியனின் பிரகாசம் ஒளிர்ந்தது.

மகளின் காய்ந்த தலையை வலது கையால் தடவிக் கொண்டே, மார்பிலிருந்த மகனின் அழுக்குக் கன்னத்தை தன் கன்னத்தோடு சேர்த்து தேய்த்துக் கொண்டாள். அந்த ஸ்பரிசத்தில் தோன்றிய சுக உணர்ச்சியும், மனசுக்குள் பூத்துச் சொரிந்த ஆனந்தமும்.. பொழுது பூராவும் அவள் வடித்த வியர்வையும், களைப்பையும், சலிப்பையும் துடைத்துவிட்டது போலிருந்தது.

அந்தப் பிஞ்சு முகங்களின் மலர்ச்சியையும், வெளிச்சத்தையும் பார்க்கப் பார்க்க அவளுள் ஒரு இனிமையான இசை எழுந்து ஒலிப்பது போலிருந்தது.

இந்த உணர்ச்சியின் உத்வேக பலம் மட்டும் சாஸ்வதமாக இருந்தால்... இந்தப் பஞ்சத்துடன் மட்டுமல்ல, எந்த ராட்சஷ வாழ்க்கையுடனும் மல்லுக்கட்டுவதற்கு அவள் பயப்பட மாட்டாள்!

மரணமே நெருங்கி வந்தாலும் தூரப்போ என்று துரத்துவாள்.

*தாமரை பிப்ரவரி 1985*

*இலக்கியச் சிந்தனை பரிசு பெற்ற கதை*

## பூக்காத மாலை

*தொழுவத்தில் கட்டிக் கிடந்த எருமை மாடு "ம் ம் மே...ஏ...ஏ..." என்று ஏக்கமாய்க் கதறியது. கதறிய கதறலில் அதன் பருத்த வயிறு விம்மித் தணிந்தது. இடி முழக்கமாய் நீண்ட அதன் கதறலில்.. அந்தத் தெருவே அதிர்ந்தது.*

*காடியில் புல்லோ – கூளமோ, ஒரு துரும்புகூட இல்லை. மதியத்திலிருந்து அதற்கு இரை இல்லை. புல்லறுத்துப் போடுகிற ராசாத்தியை எதிர்பார்த்து எதிர்பார்த்து ஆவலோடு அதன் கருங்கண்கள் வாசலைப் பார்த்தன.*

*வீட்டை விட்டு வெளிவர முடியாமல் வெட்கப் பட்டுப்போய் உள்ளேயே கிடந்தாள், ராசாத்தி. வெம்பலும், விசும்பலுமாய்... கசியும் கண்களுமாய், வெட்டுப்பட்ட கொடியாய்த் துவண்டு கிடந்தாள். ஊர் முகத்தை ஏறிட்டுப்பார்க்க அவளுக்குத் தைரிய மில்லை. எப்படி அவள் ஊர் முகத்தைப் பார்க்க முடியும்? அய்யாதான் அவளை மூக்கறுத்து மூலையில் தள்ளிவிட்டாரே!*

*அய்யாவும் வாய்க்கு வாய் ஆசையோடு சொல்வார். "இந்த வருஷ வெள்ளாமையிலே... எப்படியாச்சும் ஒனக்கு அஞ்சு பவுன் நகை வாங்கிப் போடணும். எந்தச் செலவை நிறுத்தினாலும் சரி... நகை கட்டாயமாக வாங்கிடணும்."*

அவர் ஆசையும், ஆர்வமும் போலியல்ல. ஏமாற்றல்ல. உண்மையானவைதான். ஆனால் மிளகாயும் பருத்தியும் வருஷா வருஷம் விளையத்தான் செய்கிறது. வியாபாரிகளிடம் போய்ச் சேர்கிறது. கடைசியில் கணக்குப் பார்க்க ஒன்றும் இருக்காது. கைக்கு எட்டினால் வாய்க்கு எட்டாது. வாய்க்கு எட்டினாலும் வயிற்றுக்கு எட்டாது. என்னதான் மாயமோ, அது!

வருஷம் என்பது வருஷங்களாகி... அதுவும் ஏழு எட்டு என்றாகிவிட்டது. அஞ்சு பவுன் நகை வாங்க முடியமில்லை. அய்யா ஆசையாய்ச் சொல்வதை நிறுத்தவுமில்லை.

இப்போ–

செடிப் பருவத்தில் நிற்கிற மிளகாய்ச் செடி சுருட்டையடித்துக் கிடக்கிறது. பூச்சி மருந்து அடிக்கணும், உர உப்புப் போடணும், முதல் தண்ணீர்ப் பாய்ச்சணும். அய்யாவும் சூறாவளியாய் ஓடிப் பார்த்தார். 'அங்கு, இங்கு' என்று குருட்டு ஈயாய்ப் பறந்து பார்த்தார். முட்டி மோதி, அலைந்து, அலுத்துச் சோர்ந்த நிலையில்–

ராசாத்தி காதிலும், மூக்கிலும் கிடந்த கம்மலையும், மூக்குத்தியையும் கழற்றும்படியாகிவிட்டது.

மூளியாகிப்போன முகத்தோடு எப்படி வெளியே தலை காட்டுவது? ஊர் முகத்தை எப்படி ஏறிட்டுப் பார்ப்பது? காதையும், மூக்கையும் பார்த்தவர்கள் என்ன நினைப்பார்கள்? முதுகுக்குப் பின்னால் கெக்கலி பண்ணி, நமுட்டுச் சிரிப்புச் சிரிக்க மாட்டார்களா?

ராசாத்திக்கு உள்ளுக்குள் குத்திக் குடைந்தது. எந்த வேலையும் செய்ய விருப்பமில்லாமல் உயிரற்ற மனத்தோடு... வெட்டுண்டு கிடந்தாள்.

அம்மா உயிரோடு இருந்திருந்தால்... இவளை இப்படி குறைகோலமாக்கிக் குப்புறக் கிடத்த விட்டிருப்பாளா? ராசாத்தியை இன்னும் இந்த வீட்டில் இருக்கவா விட்டிருப்பாள்? அடுத்த வீட்டுக்குக் காலா காலத்துலே மாலையும் கழுத்துமாய் அனுப்பி வைத்து, பேரன், பேத்தி என்று பூப்பிஞ்சுகளைப் பார்த்துப் பூரித்திருக்க மாட்டாளா?

அய்யா இவளை ஒரு கடமை – சுமை – என்று நினைக்கத்தான் செய்கிறார். இறக்கி வைக்க வேண்டும் என்று ஆசைப்படத்தான் செய்கிறார். ஆனால்... அதற்கான முன் முயற்சி எடுக்கத் தெரியவில்லையே...

அம்மா இருந்திருந்தால் இவரைக் குத்திக்குடைந்து முடுக்கி விட்டிருப்பாளே... புலம்பிப் புலம்பித் துரிதப்படுத்தியிருப்பாளே... 'கன்னி கழியாத புள்ளையை எம்புட்டு நாளைக்கு வீட்டிலே வைச்சிருக்கிறது' என்று நச்சரித்து நச்சரித்து... அய்யாவை ஏதாச்சும் ஏற்பாடு செய்ய வைத்திருப்பாளே...

இப்ப யாரு அய்யாவை நச்சரிக்கிறது?

பாவம், தூண்டிப் பத்த ஆளில்லாத மாடு போல.. தன் நடையாய் நடக்கிறார். வெள்ளத்தில் மிதக்கிற மரக்கட்டையைப்போல் தன் போக்கில் புரண்டு கொண்டிருக்கிறார்...

ஊரில் இருக்கிற இரக்கப்பட்ட பெரிய மனிதர்கள்... இரண்டு தடவை 'ஏற்பாடு'களுக்கு அய்யாவுடன் பேசிப் பார்த்தனர்.

முதல் தடவை, "எட்டு பவுன் நகை முடியுமா" என்றனர். இரண்டாவது தடவை "அஞ்சு பவுன் நகையாச்சும் போட முடியுமா" என்று கேட்டனர்.

அய்யா வெறும் கையைப் பிசைந்தார். ஏக்கப் பெருமூச்சுடன் சப்புக்கொட்டினார். அவ்வளவுதான்!

'சந்தைக்கு வராத மாடு இது' என்று சுத்தமாகக் கைகழுவி விட்டனர். இப்போ?

ராசாத்தியோடு அஞ்சாம் கிளாஸ் வரை ஒன்றாகப் படித்தவள் ராமாயி. இதோ... அவளது மகன் மூணாம் கிளாஸ் போய்க் கொண்டிருக்கிறான்!

இவள் சடங்காகி, மூலையில் பதினாறு நாள் இருந்தபோது, பாவாடைச் சிறுமியாக வந்து, முட்டாள்தனமாய்ப் பல்லாங்குழி விளையாடிய கமலா, தலைப்பிள்ளையைப் பெற்றெடுத்துத் தாய் வீட்டில் வாங்கித் தந்த புதுச்சேலை, தொட்டில் வேட்டியோடு போன வாரம்தான் புருஷன் வீட்டுக்குப்போகிறாள்....

இவள் தாவணி போட்ட அதே மாதத்தில் பிறந்த பேச்சியம்மா, வளர்ந்து, மலர்ந்து பெரிய மனுஷியாகி, இதோ, தை ஏழாம் தேதி அவளுக்கு முகூர்த்தம் வைத்திருக்கிறார்கள்...

இவளைச் சுற்றிக்கொண்டு காலம் ஓடுகிறது. கண்ணாமூச்சி காட்டுகிறது. எல்லாவற்றையும் தழுவி வளர்க்கிறது. சிறு செடியை, பெரிய செடியாக்கி, மொட்டுகளை அரும்ப வைத்து, பிஞ்சாக்கி, காயாக்கி, கனிய வைத்து, பறிக்க வைத்து, விதையாக்கி....

மாய்மாலம் செய்கிற காலம், இவளை மட்டும் பூத்த நிலையிலேயே நிற்கவைத்துவிட்டது.

காலமும் வாழ்க்கையும் இவளை விட்டு விட்டு... தன் போக்கில் ஓடிக்கொண்டேயிருக்கின்றன...

ராசாத்தி கைத்துப்போன மனசோடு குமுறிக் குமுறி அழுதாள். சத்தமில்லாமல் அழுதாள். நெஞ்சின் ஆழத்தில் நைந்து கிடந்த ரகசிய உணர்ச்சிகளெல்லாம் பொங்கிப் பீறிட்டு, அவளை உலுக்கியெடுத்தன. அழுந்திக்கிடந்த அவலச் சோகம் விசுவரூபமெடுத்து... அவளை அடித்துப் புரட்டியது.

உள்ளுக்குள்ளேயே கொத்திக் குதறுகிற சோகம்; அடுத்த ஜீவனிடம் பகிர்ந்துகொள்ள முடியாத ஊமைச் சோகம்; சுமையாய் அழுத்தித் திணறடிக்கிற சொந்தச் சோகம்; மனத்தின் மெல்லிய ஜவ்வுகளைக் கிள்ளிக்கிள்ளித் துடிக்க வைக்கிற சோகம்; அவமானத்தில் குன்றிக் கூசிக் குறுகச் செய்கிற கொடிய சோகம்.

"அம்மா...தாயே" என்று வெடித்துக் கதறிவிட்டாள்.

"என்னை இப்படித் தவிக்க விட்டுவிட்டு, நீ மட்டும் போய்ச் சேர்ந்துட்டியே" என்று புலம்பலோடு அழுதாள். மனத்தில் மண்டிக்கிடந்த அவலமெல்லாம் கண்ணீரில் கலந்து கரைந்தது. அழுது அழுது...விம்மி, விசும்பி... மெல்ல மெல்ல அடங்கினாள்...

"ம் ம் ம் மே ஹ் ஹ் ஏ....ஏ..."

எருமையின் விடாப்பிடியான கதறல், இவளை நச்சரித்தது. 'பாவம் வாயில்லாச் சீவன்' என்று பரிவோடு சிந்திக்க வைத்தது. தாய்மை ததும்பும் அவளின் பெண்மை உள்ளம், வாயில்லாச் சீவனின் பசியை நினைத்துப் பதைத்தது.

தாயை விழுங்கிய சாமியையும், தகப்பனைக் கையாலாகாத நிலையில் நிற்க வைத்த வாழ்க்கையையும் சபித்துக்கொண்டே எழுந்தாள். முகத்தைக் கழுவி அழுந்தத் துடைத்துக்கொண்டாள். கலைந்து கிடந்த தலைமுடியைக் கோதி ஒழுங்குபடுத்திக் கொண்டாள்.

கடாப் பெட்டியையும், பன்னரிவாளையும் எடுத்துக் கொண்டாள். வெளியே வந்து பார்த்தாள். மஞ்சள் வெயிலில் நிழல்கள் நீளமாய்ப் படுத்துக்கிடந்தன. பொழுது மேற்கு மலையின் முதுகை உரசிக்கொண்டிருந்தது. மேகங்கள் காயம்பட்ட ரத்தக் கசிவோடு மிதந்தன.

கதவைச் சாத்தினாள். எருமையின் முதுகைத் தட்டிக் கொடுத்தாள். ராசாத்தியைப் பார்த்ததும், ஆவலோடு தறிய முறிய

விழுந்தது, எருமை.

"பொறுத்துக்க... இன்னும் அஞ்சு நிமிசத்துலே ஒனக்குப் புல்லைக் கொண்ணாந்துருவேன்... பொறு, பொறு..." என்று சமாதானம் சொல்லிவிட்டுத் தெருவில் இறங்கினாள்.

நடுத்தெருவுக்குள் நுழைந்தாள். டீக்கடையில் டேப்ரிக்கார்டு காதல் பாட்டுப் பாடிக்கொண்டிருந்தது. அப்போதுதான் வந்த டவுன் பஸ்ஸில் இறங்கி, புத்தம் புதிய கல்யாணத் தம்பதியோடு உறவினர் குழு ஒன்று இவளைக் கடந்தது.

மடத்துத் திண்ணையில் சிலர் உட்கார்ந்திருந்தனர். மாடசாமியும் குத்துக்கால் வைத்து உட்கார்ந்திருந்தான். கடாப் பெட்டியோடு வந்த இவளை அவன் பார்த்தான்.

அவன் சும்மாதான் பார்த்தானோ... காரியமாய்ப் பார்த்தானோ... ஆனால், ராசாத்திக்கு அவன் பார்வையில் ஏதோ அர்த்தம் தொனிப்பது போலிருந்தது. காரியமும் கபடமும் ஒளிந்திருப்பது போலத் தோன்றியது. இரைக்காக ஒற்றைக் காலில் காத்து நிற்கிற கொக்கின் தாகம் அவன் கண்களுக்குள் பதுங்கியிருப்பதுபோல... இவளுக்குத் தோன்றியது.

மனத்துக்குள் படபடவென்று அடித்துக்கொண்டது. திகிலாகவும் திகைப்பாகவும் இருந்தது. பறவையின் இறக்கையைப் போல் துடித்தது மனசு.

நாலு பக்கமும் ஆள் உயரத்திற்கு மேல் சோள நாற்றுப் புஞ்சை. சுவர்போல அடர்த்தியான நாற்று. நடுவில் பருத்திப் புஞ்சைகள். இங்கே கொலையே நடந்தாலும் வெளியே தெரியாது.

பொழிகளில் காடாய் வளர்ந்து கிடந்த அருகம்புல்லையும், மத்தாங்கப் புல்லையும் பரட் பரட்டென்று வேக வேகமாய் அறுத்துக்கொண்டிருந்தாள். உள்ளுக்குள் இனம் புரியாத பதைப்பு. பரபரப்பாய் அறுத்துப் போட்ட புல்லில் பெட்டி நிறைந்தது. இருகைகளாலும் அமுக்கி அமுக்கி நிறையப் புல்லைத் திணித்தாள்.

மனசுக்குள் மர்மமான படபடப்பு....

மஞ்சள் வெயிலும் மறைந்துவிட்டது. மேகத்து வெளிச்சம் மட்டும் மிஞ்சி நின்றது. கருகருவென்று இருட்டு துரத்திக் கொண்டு வந்தது.

ராசாத்தி துரிதமானாள். விறுவிறுவென்று பெட்டியைத் தூக்கக் குனிந்தபோது—

உரசிக்கொண்டு பின்னால் யாரோ நிற்பது போன்ற பதற்ற உணர்வு.

திரும்பிப் பார்த்தால்... மாடசாமி.

அவனது சூடான மூச்சு இவளது தோளில் சுடுகிறது.

நிதானிப்பதற்குள்–

அவன் அவளைச் சுற்றித் தழுவிக்கொண்டான். முரட்டுத் தனமாய்ச் சேர்த்து அணைத்தான்.

திமிறினாள். தப்பிக்க முயன்று போராடினாள். திமிறிய திமிறலில் அலம்பி மல்லாக்க விழுந்தாள்.

நுகர்ந்து அறிந்திராத ஆண்வாடை; தொட்டு உணர்ந்திராத ஆண்மையின் உஷ்ணம்; அனுபவித்தறியாத ஆணின் மூர்த்தண்ய உணர்ச்சி... ஆற்று மணலை அள்ளி விழுங்குகிற புதுவெள்ளத்தின் வெறி வேகம்...

மலத்தை மிதித்துவிட்ட அருவெருப்பில் அவள் திமிறினாள்.

"டேய்... விடுடா... என்னை... விடுடா... ஐயோ... கேவலப்படுத்திடாதேடா... விடுடா..." என்று அலறிக்கொண்டே போராடினாள்.

"அங்க யார்டா அது?" என்ற வேற்றுச் சத்தத்தில் மாடசாமி ஸ்தம்பித்துப்போனான். பதறிப்போய் எழுந்தான். அரை நிர்வாணமாய் – அலங்கோலமாய் – ராசாத்தி உயிரையே அறுப்பதுபோல அவமானத்தில் துடித்தாள்.

பரபரவென்று துணியைச் சுற்றிக்கொண்டு எழுந்தாள். நனைந்த கோழிக்குஞ்சாக நடுங்கினாள்.

ஓட முயன்ற மாடசாமியை, வந்து சேர்ந்த மேலத்தெரு சின்னையா விடாமல் பற்றி, இறுகப் பிடித்துக்கொண்டார். ராசாத்தி தலையில் அடித்துக்கொண்டு அழுதாள்.

மாடசாமி அவரிடம் கெஞ்சி அழுதான். விட்டு விடும்படி காலில் விழுந்து அர்த்தமில்லாத வார்த்தைகளை மிழற்றினான். அவர் அவனை அதட்டலான குரலில் சத்தம் போட்டார்.

"ஏலேய்... ஒனக்கு ராசாத்தி வேணும்னு தானடா... இம்புட்டுத் தூரம் வந்தே? படுவா ராஸ்கல், பயப்படாதே. ஊர்க்கூட்டத்துலே உங்களைக் கொண்டுபோய் நிறுத்துறேன். ஊரறிய ராசாத்தியை ஏத்துக்கணும் நீ..."

உறுமினார். குற்றவாளியாய்த் தலைகுனிந்தான். அவரது

மீசைக்கடியில் ஒரு பெருமிதப் புன்னகை.

"நீ என்னம்மா சொல்றே? ஒனக்குச் சம்மதமா?"

அவள் மௌனமாய் அழுது கொண்டிருந்தாள். காயம் பட்ட ரணத்தோடு கதறிக்கொண்டிருந்த அவளுக்கு, அவரது அதட்டலான கேள்வி ஆறுதலாய் இருந்தது...

கல்லில் மோதிய கால் பெருவிரல் சுரீரென்று வலித்தது. ராசாத்தி பிரக்ஞையுற்று, காலைப் பார்த்தாள். நகத்தைச் சுற்றி மெல்லிய ரத்தக் கசிவு. வலி சுண்டி இழுத்தது.

இன்னும் மஞ்சள் வெயில்தான் அடிக்கிறது. இடுப்பில் வெற்றுக் கடாப்பெட்டியோடு நடுத்தெருவின் இறுதி நுனியைக் கடக்கிறபோது, திரும்பிப் பார்த்தாள்.

மடத்துத் திண்ணையில் குத்துக்கால் வைத்து உட்கார்ந்திருந்த மாடசாமி எங்கோ பார்த்துக்கொண்டிருந்தான்.

கண்ட கனவில் மனசு கசந்து அழுறியது. வெட்கத்திலும், அவமானத்திலும் மனசு குன்றிக் குறுகித் தவித்தது.

"ச்சே... இந்தக் கொரங்கு மனசு, எம்புட்டு வெக்கங்கெட்டுப் போய் அலையுது" என்று தன் மனசைத்தானே சபித்துக்கொள்ளும் போது... அவளுக்குள் ஓர் ஆழ்ந்த வேதனை சூழ்ந்துகொண்டு... நெரித்தது.

*கல்கி 14.2.88*

## மைதானம்

பேச்சிக்கு எந்நேரமும் கால் துறுதுறுக்கும். சும்மா ஓரிடத்தில் நிற்காது. சக்கரம் கட்டிக்கொண்டுதான் பறப்பாள்.

வீடே செயில் மாதிரி. இருக்கப் பிடிக்காது. இறுக்கிப் பிடித்தமாதிரியிருக்கும். தெருதான் ரொம்பப் பிடிக்கும். அதுதான் அவளுடைய உலகம்.

அங்குதான் இவளது கூட்டாளிகள் பாவாடை கட்டிய வண்ணத்துப்பூச்சிகளாக திரியும். சிரிப்பும் விளையாட்டுமாய்... சண்டையும் சத்தமுமாய் மனசுக்கு நல்லாயிருக்கும்.

தெருவைவிட அவளுக்கு களம் ரொம்பப் பிடிக்கும். ஊருக்கு மேற்கேயுள்ள மைதானம் விளைந்த பொருள்களை சம்சாரிகள் காயப்போட்டு, தூத்தி எடுக்கிற இடம். விரிவான களம், கடல்போல. கண்ணை மூடிக்கொண்டு ஓடிப்பிடித்து விளையாடலாம். 'திரிதிரி பம்பக்கா' விளையாட்லாம். வட்டமாய் உட்கார்ந்து கொண்டு 'கல்போகுது' விளையாடலாம் நேரம் போறதே தெரியாது. வெயில்கூட உறைக்காது.

வீட்டு நினைப்பும் வராது. பசியும் தெரியாது. அம்மா முதுகில் நாலு சாத்து சாத்துவாளே என்கிற நினைப்பும் வராது. விளையாட விளையாட ஆசையாய் இருக்கும். தேனில் சிக்கிய எறும்பு மாதிரி... நகர்வதற்கே மனசு வராது.

"அவரவர் வீட்டுக்கு அவரைக் கஞ்சி குடிக்கப்போ....ங்க" என்று கூச்சலான அறிவிப்புக்குப் பிறகு எல்லாச் சிறுமிகளும் 'டுர்ர்ர்..' ரென்று வாயாலேயே காரை ஓட்டிக்கொண்டு கலைந்த பிறகு... கடைசியாகத்தான் பேச்சி வீடு போவாள்.

வீட்டில் காத்திருப்பது வசவுதான், அம்மாவின் அங்கலாய்ப்பு தான். கொதித்துப்போன கோபத்தில் அம்மா கத்துவாள்.

"தைப் பொறந்தா... ஒம்பது வயது முடியப் போகுது இப்படி தெருக்காட்டுலே கழுதைக் குதியா குதிச்சுக்கிட்டுத் திரிஞ்சா... அறிவு வருமா? பொறுப்பு வருமா? பொட்டச்சி இப்படியா அலையுறது? அவுத்து விட்ட கன்னுக்குட்டியா பொட்டச்சி இப்படியா அலையுறது? அவுத்து விட்ட கன்னுக்குட்டியா பொட்டச்சி ஓடித்திரிஞ்சா... வீடு விளங்குமா?"

அம்மாவின் நச்சரிப்பு, முள் முள்ளாகக் குத்துகிற இச்சிலாத்தி. வீடு வெறுத்துப் போவது இதனால்தான். அம்மா சிடுமூஞ்சி. எந்நேரமும் அடைக்கோழி மாதிரி வெடுக் வெடுக்கென்று கொத்திப் புடுங்குவாள்.

இந்தப் பிடுங்கலைச் சகித்துக் கொண்டு... உண்டு முடிப்பதற்குள், பேச்சிக்கு மூச்சு முட்டிப்போகும். அம்மாவின் முதுகைப் பார்த்து வாயைக் கோணித்து 'வெவ்வே' காட்டுவாள்.

கழுவிய கையை துடைப்பதற்கு தெருவுக்கு வந்துவிடுவாள். விட்டு விடுதலையான சிட்டாகப் பறந்து விடுவாள். தெருதான் அவளது உலகம். அங்குதான் அவளது பொழுது கரையும். மனசு நிறையும், ததும்பி வழியும். ஆகாயத்தில் ஜிவ்வென்று பறக்கும்.

இதெல்லாம்... போன மாதம் வரைக்கும்தான். எல்லாமே பொய்யாகி, பழங்கதையாகி...

இப்போது, கதையே வேறு.

அன்றைக்கும் அப்படித்தான். களத்தில் சின்னஞ்சிறிசுகளோடு ஓடிப்பிடித்து விளையாடிக் கொண்டிருந்தாள். பொழுதடைந்து விட்டது. கருகருவென்று மயங்கி கொண்டு வந்தது பொழுது. முகம் காட்டுகிற இருட்டு. கன்றிச் சிவந்த மேக வெளிச்சம் மட்டும்.

அம்மா தூரத்தில் வருவதைப் பார்த்துவிட்டாள். பேச்சி இவளைத் தேடிக் கொண்டு தான் வருகிறாள். அடி விழத்தான் செய்யும்.

ஆங்காரமாய்க் கத்துவாள். "நாசமாய்ப்போக, கட்டையிலே

வேக" என்று கொதிப்பாள். இடதுகையால் தலைமுடியைப் பற்றி வெடுக்கென்று இழுத்து... முதுகில் நாலு போடு போடுவாள். தீப்பிடித்த மாதிரி முதுகு எரியும்.

அடிவயிற்றைக் கலக்குகிறது.

"உங்கப்பன் வழிப் புத்திதானே ஒங்கிட்டேயும் வரும்? ஆடுகாலிப் பரம்பரை. துப்புக்கெட்ட நாயி... பொட்டச்சி இப்புடி பொழுது போறது தெரியாம விளையாண்டா... உருப்படுவீயா? ஒரு உப்புக் கல்லுக்காச்சும் பெறுவீயா?"

அடியும் வசவுகளுமாக நாறடித்துக் கொண்டுதான் வீட்டுக்கு இழுத்துச் செல்வாள். எதிர்ப்படுகிற பெண்களிடமெல்லாம் இவளைப்பற்றி புகார்கள்தான். அங்கலாய்ப்புதான்.

திகில் பிடித்துப் போய் நின்றாள். நெருங்கி வந்து விட்ட பேய். உள்ளுக்குள் திக், திக், திக்...

"என்னடி பேச்சி, இங்கதான் இருக்கீயா? இன்னும் சாப்பிடலியா? வாகண்ணு, உன்னைத் தேடித்தானே வாரேன்"

பேச்சிக்கு ஒன்றும் புரியவில்லை. ஏகமாய் மர்மம். ஆச்சர்யம். அம்மாவிடம் இத்தனை கனிவான குரலும் உண்டா? இம்புட்டு குழைவாகப் பேசத் தெரியுமா?

பாசமும் பரிவுமாய் அவள் தலைமுடியைத் தடவினாள். அம்மா முகத்தில் ஒரு குழைவு. பிடறியில் கழுத்தில் படிகிற அம்மாவின் உள்ளங்கையில் குளிர்ச்சி.

பேச்சிக்கு இன்னும் திகைப்பு அடங்கவில்லை. இதென்ன... புது அம்மா! அன்பான அம்மா. விளையாடுகிற களத்தைப் போல... மனசுக்குப் பிடிக்கிற அம்மா. அம்மா வாக.... அம்மா.

கனிவோடு சேர்த்து அணைத்துக் கொண்டு பேச்சியை அழைத்துச் செல்கிறாள்.

வட்டிலில் சோறு வைத்துத் தந்தாள். சாப்பிட உட்கார்ந்த பேச்சியின் முகத்தை பரிவோடு கண்களால் விழுங்கினாள். இவளுக்குள் ஜில்லிடுகிற பரவச உணர்ச்சி. புல்லரித்து அடங்குகிறது. உடம்பு நெகிழ்ந்து கரைகிற மனசோடு அம்மாவை ஏறிட்டுப் பார்த்தாள், பேச்சி.

அம்மா கண்களில் பொங்கிப் பருகுகிற பரிவுணர்ச்சி. கண்களுக்குள் ஊடுருவி மனசுக்குள் உறுத்தும் கனிவு. அதையும் தாண்டிய ஆழத்தில் ஒரு மௌனமான வேதனை வலியைச் சகித்துக் கொள்கிற சோக நிழல்.

"சாப்புடுடா... செல்லம். சோத்தைப் பிசைஞ்சு உண்ணுடா... ஏங்கண்ணு. இன்னும் கொஞ்சம் குழம்பு ஊத்தட்டா?"

பேச்சி உள்ளுக்குள் கலங்கிக் கரைந்தாள். பாசத்தின் அதிசயத்தைத் தாள முடியாத நெகிழ்வு.

சாப்பிடுகிற சாக்கில் தலை கவிழ்த்தாள்.

"ஏண்டி பேச்சி"

அம்மாவின் கனிந்த குரலில் ஒரு கெஞ்சல்.

"என்னம்மா?"

"ஏசெண்ட் அண்ணாச்சி.... ஒன்னைத் தீப்பெட்டியாபிஸு வேலைக்கு வரட்டும்னு சொல்றாரு. நீ போறீயா கண்ணு?"

வட்டில் சோற்றில் மண்ணையள்ளிப் போட்ட மாதிரியிருந்தது. உள் மனசின் ஆழம் வரை நடுங்கி அதிர்ந்தாள். நெஞ்சு கிடந்து அடித்துக் கொள்ள... வார்த்தை நாவுக்குச் சிக்காமல் கண்ணாமூச்சி காட்ட..

"பேச்சி, நம்ம வீடு முந்தி மாதிரி இல்லேம்மா. ஏதோ கையகலப் புஞ்சையாச்சும் பூர்வீகச் சொந்தம்னு கெடந்துச்சு. காலூன்னி நிக்குறகுக்கு ஒரு எடமா இருந்த அதுவும் உருவிக்கிட்டுப் போயிருச்சி. உழைச்சா கஞ்சி இல்லேன்னா இல்லேம்மா. அத்தலைஞ்ச பொழப்பா போச்சு. நீயும் இனிமே சின்னப்புள்ளை யில்லே. ஒம்பது வயது முடியப்போவுது. நாளை ஒனக்கு ஒரு நல்லது செய்யணும்னா கையிலே ஐவேசு இல்லே. நீ வேலைக்குப் போய்... வாரச் சம்பளமா நாப்பது ரூபா கொண்ணாந்தாலும்போதும் ஒய்ஞ்ச கைக்கு ஒத்தாசையாயிருக்கும்மா..."

புற்றிலிருந்து பாம்பு வரும். குளிர்ச்சியான அம்மாவிடமிருந்தும் வருமா? வெலவெலத்துப் போய்விட்ட பேச்சிக்கு பேச்சே வரவில்லை.

பேச்சியைப் போலவே நேரம் காலம் பார்க்காம விளையாடிக் கொண்டிருந்த செல்லி இப்பொழுது தீப்பெட்டியாபிஸுக்கு வேலைக்குப் போகிறாள். எந்நேரம்தான் போவாளோ, எந்நேரம்தான் வருவாளோ... கண்ணிலேயே தட்டுப்பட மாட்டாள்.

ஞாயிற்றுக்கிழமை மட்டும் விளையாட களத்துக்கு வருவாள். குழந்தைகளோடு குழந்தையாக கலக்க முடியாமல் தண்ணிலே எண்ணெயாக நிற்பாள்.

அவளைக் கேலி பண்ணி விரட்டுவாள் பேச்சி. விளையாட்டில்

சேர்க்க மறுப்பாள். அதிகாரமாய் அழிச்சாட்டியம் பேசுவாள். அவமானத்தில் சிறுமைப்பட்டுப் போய், கண்கலங்கி அவள் நிற்பதைப் பார்த்து, பேச்சி கைதட்டிக் கும்மாளமாய்ச் சிரிப்பாள்.

... இவளும் செல்லியைப் போல ஆகவோ? அந்த விளையாட்டு உலகத்தில் சேர முடியாமல்சிறுமைப்பட்டு நிற்பதா? நாதியற்று, ஒற்றையாய் நிற்கிற அவலம் தனக்குமா?

பேச்சி வீறிட்டுக் கத்தினாள். "முடியாது... முடியாது"

சாப்பிட்டுக் கொண்டிருந்த எச்சில் கையை உதறினாள். சீற்றத்தில் சோற்று வட்டிலை காலால் எற்றினாள். உருண்டு போய் சுவரில் மோதியது வட்டில்.

"நா போகமாட்டேன். செத்தாலும் சரி... நா போக மாட்டேன்... போகவே மாட்டேன்"

அம்மாவின் முகத்தில் குப்பென்று கோபத்தீ. கண்கள் இடுங்கின. மட்டியைக் கடித்தாள்.

"போகமாட்டீயா?" என்று எதிரொலித்த அம்மாவின் குரலில் ரௌத்ரம். அடிவயிற்றைக் கலக்குகிற மிரட்டல்.

"பெறகு, என்னடி செய்யப் போறே? தெருக்காட்டுலே 'திங்கு, திங்கு'ன்னு ஆடிக்கிட்டே அலையப் போறீயா? திங்குறதுக்கு எங்க போவே? நா மாண்டு மடிஞ்சிட்டா... சோத்துக்கு எங்க போயி நிப்பே?"

ஆத்திரத்தில் பொறிந்தாள். வார்த்தைகளால் கடித்துக் குதறினாள்.

பேச்சி மறுத்தாள், திமிறினாள், அழுது கரைந்தாள் சாப்பிட மறுத்து குப்புறப்படுத்துக் கொண்டாள். ஊஹூம், அம்மா அசையவில்லை. வாழ்க்கையைப் போல - வறுமையைப் போல அம்மாவும் தாட்சண்யமற்றுப் போய்விட்டாள், மனசைக் கல்லாக்கிக் கொண்டாள்.

குலை பட்டினியாய் உறங்கிப்போன பேச்சிக்குள் கனா. குலை பதறுகிற கனா. கண்ணாமூச்சி விளையாட்டில் ஒளிவதற்காக, ஓடிப்போய் ஒரு குழியில் குதிக்கிறாள். காலுக்குத் தரை தட்டுப்பட வில்லை. ஆழம் காணமுடியாத குழி. போய்க் கொண்டே யிருக்கிறாள். அலறுவதற்கு வாயைத் திறந்தால் சத்தம் வரவில்லை. கிலியில் மனசு மூச்சடைக்கிறது...

பதறிப்போய் முழிக்கிறபோது - பிடரியிலிருந்து முதுகு வரை மென்மையாக வருடுகிற அம்மாவின் உள்ளங்கை ஸ்பரிசம்.

"அடப்பாதரவே, படிச்சிக்கிட்டு, சிட்டுக்குருவியா செறகடிச்சிக் கிட்டுத் திரிய வேண்டிய சின்னஞ்சிறிசு... ஏ வவுத்துலே வந்து பொறந்த தங்கப்பெட்டி..... இதை வேலைக்கு அனுப்பி வைச்சு வெந்து சாகுறதைக் கண் கொண்டு பாக்கணுமா? இந்த வங்கொடுமை எனக்கா வாய்க்கணும்? குருட்டுப்பய தெய்வம், ஏழை பாழைகளைச் சீரழிச்சி, இன்னும் எம்புட்டுத்தான் கூத்துப் பார்க்கப் போறீயோ..."

தொண்டைக்குள் சத்தமாய் முணு முணுப்பு. அதை முடிக்க விடாமல் முட்டிக்கொண்டு வருகிற விசும்பல். பேச்சியின் பிடறிக் கழுத்தில் விழுந்த சுடுநீர்த் துளியில் அம்மாவின் நொந்த மனசு தெரிய...

நெக்குருகிப் போய் விட்டாள் பேச்சி. அப்படியே அம்மாவைக் கட்டிப்பிடித்துக்கொண்டு கதற வேண்டும் போலிருந்தது.

அம்மாவுக்குள் இப்படியோர் அம்மாவா...!

மறு வாரமே, டப்பாவும் சிட்டையுமாக தீப்பெட்டியாபீஸ் பஸ்ஸில் ஏறிவிட்டாள். பகல் நேரக்கிராமத்துக்கு மறை பொருளாகிவிட்டாள் பேச்சி.

சிறகை பிய்த்துவிட்டாலும் சிட்டுக்குருவி சும்மா கிடக்காதே! தவ்வித் தவ்விக் குதிக்கத்தானே செய்யும்!

தீப்பெட்டியாபீஸிலும் வேலையோடு வேலையாக பேச்சிக்கு விளையாட்டுத்தான். குச்சியடுக்குகிறபோதும் குறும்புதான். வேடிக்கைதான். குறுக்கும் நெடுக்குமாய் கன்றுக்குட்டியாக ஓடுவாள். மற்றவள் அடுக்கி வைத்திருந்த சக்கையை அவள் பாவாடை நுனிதட்டிச் சிதறிவிடும். வசவை வாங்கிக் கட்டிக்கொண்டு, குதூகலமாய்ச் சிரிப்பாள்.

அப்படித்தான் மூன்று நாளுக்கு முன்னால் பக்கத்தில் உட்கார்ந்து 'அடிப்பெட்டி' ஒட்டிக் கொண்டிருந்த ஆவுடைச்சி யோடு நடந்த விளையாட்டு வினையாகி... வாய்ச் சத்தம் சூடேறி கைச்சரசமாகிவிட...

குச்சியடுக்குகிற சக்கை ரெண்டு ஒடிந்து போய்விட்டது. வாய்க்கு வராத வார்த்தைகளால் மேஸ்திரி நாற வசவாக திட்டிவிட்டான். சுற்றி நின்று வேடிக்கை பார்த்த கண்களால் தோலுரிக்கப்பட்டதைப் போல அவமானத்தை உணர்ந்தாள்.

அடிப்பதற்கு கையை ஓங்கிக் கொண்டு ஆத்திரத்துடன் மேஸ்திரி நெருங்கியபோது நடுங்கியேவிட்டாள். நல்லவேளை. அடிக்கவில்லை.

அம்மாவிடம் சொல்லவில்லை. பாவம் அவள் வேறு நொந்து புலம்புவாள்.

நேற்றும் அப்படித்தான். மதியம் மணி ஒன்றரை எல்லோரும் சாப்பிடப் புறப்பட்டார்கள். இவளும் தூக்குச் சட்டியை, எடுத்துக் கொண்டாள்.

வேப்பமரத்தடியில் சாப்பிட்டு முடித்துவிட்டு, அடிபம்பில் தண்ணீர் அடித்துக் கைகழுவினாள். தண்ணீர் சிறிய வாய்க் காலில் சென்று நாலைந்து பூச்செடிகளுக்குப் பாய்கின்றது. கேந்திப்பூ சந்தன நிறத்தில் சிரிக்கிற அதன் அழகு.

அடிபம்ப் அடிக்கிறபோது எழுகிற 'டடக் டடக்'கென்கிற சத்தம் வேறு அவளுக்கு உற்சாகமாயிருந்தது. வயதுக்குரிய விளையாட்டுக் குணம் தலைதூக்கி சாப்பிட்டு வந்த சகலருக்கும் தண்ணீர் அடித்துக் கொண்டிருந்தாள்.

"டடக், டடக்.. டடக்... ட்டடக்" அவளுக்குள் சங்கீதமாய் இந்தச் சபதம்.

தன்னை மறந்து அடித்துக் கொண்டிருந்தாள்.

"ஏய், வேலை பார்க்க வந்தியா, விளையாட வந்தியா?" என்ற மேஸ்திரியின் அதட்டல் கேட்டுத்தான் நிஜ உலகத்துக்கு வந்தாள்.

சுற்றிலும் ஒரு சுடு குஞ்சுகூட இல்லை. எல்லாரும் வேலைக்கு உள்ளே போய்விட்டனர். இவள் மட்டும் ஒற்றையாக.

அலங்க மலங்க முழித்தாள். குற்ற உணர்வு உறுத்தினாலும் பணிய மனசில்லை. இவன் அன்றைக்குத் திட்டியவன். அடிக்க வந்தவன்.

அவளது பிஞ்சுக் கையை இறுகப்பற்றி ஆத்திரத்துடன் உலுக்கினான்.

"வேலைப் பாக்காமே, இங்க என்ன செய்கிற?"

ஒரு உதறி உதறி கையை உருவிக்கொண்ட பேச்சி, "அதைப்பத்தி ஒங்களுக்கென்ன? குச்சி அடுக்குன கட்டை எம்புட்டோ அதுக்குத்தானே கூலி? கூலி கொறைஞ்சா எங்கம்மாதான் என்னை வையணும்? ஒங்களுக்கென்ன வந்துச்சு?"

"எங்களுக்கு என்னவா? எதுத்துப் பேசுற அளவுக்குத் திமிரா? கஞ்சிக்கு வழியத்துப் போய் கந்தகத்துக்குள்ளே சிரழிய வந்த சின்ன நாய்க்கு இம்புட்டு வாயா? இரு, இரு ஒன்னைப் பார்த்துக்கிடுறேன்..."

ஆபீஸுக்குள் ஓடுகிற அவளைத் துரத்துகிற மிரட்டல். ஏதோ தைர்யத்தில் பேசிவிட்டாலும்... பேச்சிக்கு இப்போது உதறலெடுக்கிறது. மிரட்டல் என்ன ரூபமெடுக்கிறதோ...

மீள முடியாத முள்ளுப் புதருக்குள் சிக்கிக் கொண்டதைப் போல... உள்ளுக்குள் ஒரு மிரட்சி.

இன்னும் விடியாதபொழுது. அம்மா உசுப்பிவிட்டாள். கண் விழிக்கவே முடியவில்லை. பேச்சிக்குக் கண்ணெல்லாம் எரிந்தது.

முகத்தைக் கழுவினாள். பல்லைத் தேய்த்தாள். சடைபின்னிக் கொண்டாள். மனசுக்குள் மேஸ்திரியின் மிரட்டல் என்ன ஆகுமோ... என்ன செய்வானோ...

"என்னடி பேச்சி. முகம் கொறாவிப் போயிருக்கே?"

"ஒண்ணுமில்லேம்மா..."

ஆனாலும் உள்ளுக்குள் தடக். தடக். தடக்...

புறப்பட்டாள். முற்றத்தில் இறங்கியதும் இருட்டும். வாடைக்காற்றும் மோதிற்று நாய்ப்பயம் கூட தெரியவில்லை. எதையும் உணரமுடியாத அளவுக்கு மனசெல்லாம் மேஸ்திரி பயம்.

"பார்த்துப்போ கண்ணு. இருட்டுலே கல்லு கில்லு காலை எத்திராம... யாருகூடயும் சண்டைகிண்டை போட்டுடாம... கருக்கிடையா வேலை பாக்கணும்மா. என்ன?"

முதுகைத் துரத்திய அம்மாவின் கவலைக்கு உயிரில்லாமல் "ஆட்டும்மா" சொல்லிவிட்டு நடந்தாள். தெருவில் இறங்கினாள் களத்தை நோக்கி நடந்தாள். அங்குதான் தீப்பெட்டியாபீஸ் பஸ் வந்து நிற்கும். ஊரையே அலறடிக்கிற ஹாரன் சப்தம் மூன்றாவது தடவையாக...

இவள் பரபரப்பானாள்.

பதினாறு பேரும் ஏறிவிட்டனர். ஏற்கெனவே பத்துப் பதினைந்து பேர். பேச்சி மூன்றாவது சீட்டில் ஜன்னலோரம் உட்கார்ந்தாள்.

டிரைவர் கழுத்தைத் திருப்பி பேச்சியை குர்ரென்று பார்த்தார். பார்வையில் தெரிந்த தீக்கங்கு. அவளைத் திகிலாக்கியது. அடிவயிற்றில் ஒரு கலக்கம்.

ஏஜெண்ட் பஸ்ஸுக்குள் ஏறி. தலைகளை எண்ணினார். அவரை எதிர்பார்த்துக் காத்திருந்த டிரைவர் கடுப்போடு பேச்சியைப் பார்த்துச் சீறினான்.

"நீ எதுக்கு வண்டியிலே ஏறுனே?"

ஏஜெண்ட் திகைக்க, சகல கண்களும் இவள் மீது கவிழ, உள்ளுக்குள் தடுமாறினாள், பேச்சி. அம்புபட்ட பறவையாக மனசு துடிக்க, மருகித் தவித்தாள்.

"ஏய் இந்தா! நா கேக்கேன் இல்லே? எதுக்கு வண்டியிலே ஏறுனே? எறங்கு முதல்லே"

பேச்சிக்குள் கொத்திப் பிடுங்குகிற அவமானம். சக சிறுமிகளின் அனுதாபப் பார்வைகள் ஊசிகளாக இவளுள் பாய்ந்து...

"எதுக்கு எதுக்கு?"

பதைப்போடு குறுக்கிடுகிறார் ஏஜெண்ட்.

"இந்தக் குட்டி நாயை மொதல்லே எறக்கிவிடுங்க"

ஆத்திரமாய் எகிறுகிற டிரைவர்.

"ஒழுங்கா வேலை செய்யமாட்டா. குழாயடியிலே விளையாடுவா. அதட்டுனா எதுத்துச் சட்டம் பேசுவா. இந்த மாதிரி வேலை செய்யாத வெட்டிக் கழுதைகளையெல்லாம் எதுக்கு வண்டியிலே ஏத்தனும்? டீசல் விக்கிற விலையிலே..."

பஸ் முழுவதும் திகிலான கசாமுசா சப்தம். இன்னதென்று புரியாமல் பயத்தோடு முணு முணுக்கிற சப்தம்.

இவளுக்கு உயிரே கழன்று போவதைப் போலிருந்தது. குதறியெடுக்கிற அவமான அவஸ்தை.

"டீசல் போட்டு இந்தச் சாமக்காட்டுலே நாங்க டிரிப் அடிக்கோம். இதுகளை அள்ளிப்போட்டுக்கிட்டுப் போறோம். எதுக்கு? வேலைக்குத்தா? வெளையாடவா? முளைச்சு மூணு எலை விடுறதுக்குள்ளே இந்தக் குரங்கு சட்டம் பேசுதே, இதெல்லாம் உருப்படவா போகுது?"

ஏஜெண்டுக்கு எதுவுமே புரியவில்லை. பேச்சி அழுதுவிடுவாள் போலிருந்தது. வெட்டுண்ட கொடியாக தலை தொங்கிக் கிடந்தாள்.

புரியாத நிலையிலேயே டிரைவரின் ஆத்திரத்தை குளிர் வார்த்தைகளால் சமாதானப்படுத்தி... இவளையும் மென்மையாகக் கண்டித்தார்.

"இனிமே... இப்படியெல்லாம் புகார் வர்ற மாதிரி நடந்துக்காதே" என்று அன்பான அதட்டலில் சத்தம் போட்டு...

"ம்ம்.. சரி சரி... வண்டி போவட்டும்" என்று இறங்கினார் ஏஜெண்ட்.

சுக்கல் சுக்கலாக கிழித்தெறியப்பட்ட காகிதமாக பேச்சி.

இந்த வயசில் விளையாடுவது. இம்புட்டுப் பெரிய குற்றமா?

முட்டிக்கொண்டு ததும்பிய அழுகையை உதட்டைக் கடித்து அடக்கிக் கொண்டாள். கண்ணிமைகளில் நீர்க்கனம்.

ஸ்டார்ட்டான பஸ்ஸின் அதிர்வில் குலுங்கி உதிர்ந்த நீர்த்துளி. அவளது புறங்கையில்...

மிரட்டலான எகத்தாளத்துடன் இரைச்சலோடு பஸ் நகர்ந்தது. முகத்தை மறைப்பதற்காக ஜன்னலுக்கு வெளியே பார்த்தாள்.

மைதானம் அவளை விட்டுப் பிரிந்து. தூரம் தூரமாகப் போய்க் கொண்டிருந்தது.

*1991 செம்மலர்*

## பௌர்ணமி

றெக்கை முளைத்த மாதிரியிருந்தது சிந்தாமணிக்கு. சந்தோஷமென்றால் சந்தோஷம்... அம்புட்டுச் சந்தோஷம். உள் நரம்புகளுக்குள் ஓடிப் பரவுகிற பரவசம். உள்மனச் சிலிர்ப்பு. ஒவ்வொரு அணுவிலும் மனத்துள்ளல்.

சிரமப்பட்டு மறைத்தாலும் மீறிக்கொண்டு. முகத்தில் மனசின் மலர்ச்சி. அதன் ஒளி.

சிந்தாமணிக்கு வயது முப்பத்தைந்துக்கும் மேலே, மூன்று பிள்ளைகள். மூத்தவள் ராஜி. ஏழாங்கிளாஸ்.

சிந்தாமணிக்குள் சிறகடிப்பு. இப்பத்தான் கல்யாணம் ஆனவளைப் போல குதூகலத் துடிப்பு. மனசுக்குள் குமரிப் பருவக் கொந்தளிப்பு, கும்மாளம்.

எல்லாம்... புருஷனை நினைத்துத்தான். குமரேசனை நினைக்க நினைக்க ஒரே கொண்டாட்டம். அவனிடம் அத்தனை மாற்றம். தலைகீழ் மாற்றம்.

"நாற்பது வயசில் நாய்க்குணம்" என்பார்கள். நாய்க்குண வயசில்தான் அவனிடம் மனிதக்குணம் வந்திருக்கிறது. சூரியக்குணம் – பகலில் இயங்குகிற அக்கறை குணம். லௌகீக குணம்!

முந்தியெல்லாம் குமரேசன் இப்படி இருக்கவில்லை. வேறு மாதிரியிருந்தான். 'ஒரு மாதிரி'யாய்...

காடுகரைக்குப் போகமாட்டான். போனாலும்,

அங்கேயும் புத்தகம்தான் படிப்பான். ஒரு வேலை ஜோலி பார்க்கமாட்டான். பொறுப்பே கிடையாது.

சூரியனைக் கேலி செய்கிற மாதிரி சும்மாவே இருப்பான். அக்கறை கிடையாது. ஆர்வம் கிடையாது.

விருந்தாளி மாதிரிதான் அவனும்! காலநேரம் பார்த்து கரெக்டாக சாப்பிடுவான். காலநேரம் தெரியாமல் வாசிப்பான். கண் பூத்துப்போனால் தெருக்காட்டுக்கு போய்விடுவான்.

டீக்கடையில் உட்கார்ந்து பேசினால், அப்படிப் பேசுவான். பசிதான் ஆளை எழுப்ப முடியும்.

'இப்படி ஆக்கங்கெட்ட ஆம்பளைக்கு வந்து வாக்கப்பட்டுச் சீரழியுறோமே' என்று சிந்தாமணி புலம்பாத மாதமில்லை; வருத்தப்படாத வருஷமில்லை.

...மதியக்கரண்டு. பருத்திக்கு தண்ணீர் பாய்ச்ச கூலியாள் போயிருக்கும். சொந்தப் புஞ்சையில் நடக்கிற வேலை பற்றிய சுரணையேயில்லாமல், ஊர் மடத்தில் அவன் சத்தம் ஓங்கிக் கேட்கும்.

பக்கத்தில்தான் வீடு. சிந்தாமணிக்கு வயிறு எரியும். குலை கொதிக்கும்.

"புஞ்சைவேல நடக்கையிலே பொறுப்பில்லாத இந்த ஆளு இப்படி இருக்கே..." என்று புலம்பி தகிப்பாள்.

"போடி.... உங்கப்பனை இழுத்துட்டு வாடி" கோபத்தில் மகளை விரட்டுவாள்.

வந்து நிற்பான். குற்ற உணர்வில்லாமல் வெகு இயல்பாய் இருப்பான். "காபி போட்டுட்டியா?"

வெறுப்பும் கொதிப்புமாய் அனலாய்ச் சினந்து பார்ப்பாள். அவன் அலுங்கவேமாட்டான்.

"இப்படித் திரிஞ்சா எப்படி?".

"என்ன செய்யச் சொல்றே... நீ?"

"புஞ்சைக்கு போகலாம்லே? தண்ணி பாய்ச்சுறவனுக்கு காப்பியைக் கொண்டுபோய்க் குடுத்துட்டு, அங்க உண்டான ஜோலியை பார்க்கலாம்லே?"

"நானா?"

"நீங்கதான். ஏன், நீங்க புஞ்சையிலே வேலை பாக்கக்கூடாதா? கிரீடம் எறங்கிடுமா? நீங்க என்ன பெரிய சீமானா?"

புண்பட்டவனைப் போல அவன் முகம் குறாவிப்போகும். கண்ணில் ஒரு வேதனை துடிக்கும். அறுபட்ட பல்லி வாலாக!

"மொதல்லே... எனக்கு காப்பியைக் குடு."

குடித்து முடித்தவுடன் சின்னவனைப் பார்ப்பான். "ஏலேய், புஞ்சையிலே போய் நீ காபியைக் குடுத்துரு."

உத்தரவு போட்டுவிட்டு, சீமைராசா மாதிரி புறப்பட்டு விடுவான். திணுங்காமல் அவன் போகிற லட்சணத்தைப் பார்க்கப் பார்க்க, இவளுள் கிடந்து மனசு தகிக்கும்.

"இப்படியும் ஒரு மனுசரு இருப்பாரா? நாலு பேரைப் போல பாடுபடணும்... நாலு காசு சம்பாதிக்கணுங்கிற அக்கறையில்லாம ஒரு ஆம்பளை இருப்பாகளா? சும்மாவே இருக்கிற இருப்பும் ஒரு இருப்பா? சூரியனுக்கடியில் குருவி கூட சும்மாயிருக்காதே... தெருக்காட்டிலே ஆம்பளை சுத்தினா வீடு விளங்குமா?"

கொதிபானைச் சோறாக அவள் நினைவு... தளதளத்துக் கொதிக்கிற நினைவு... ததும்பிப் பொங்கி, புலம்பலாக வழிகிற நினைவு.

இருக்கிறதே ஒண்ணே முக்கால் குறுக்கம் புஞ்சைதான். இறவைத் தோட்டம். உப்புத்தண்ணீர்க் கிணறு.

இந்தக் குண்டுச்சட்டிக்குள்தான் குடும்பத்தின்குட்டோட்டம், நெட்டோட்டம் எல்லாம். இதில் விளைவதை வைத்துத்தான் அஞ்சு ஜீவன்கள் மூச்சுவாங்க வேண்டும்.

இந்த ஆளுக்கு இந்தக் கவலையெல்லாம் கிடையாது. பெரிய்ய பண்ணையார் நினைப்பு. கைவிரலில் அழுக்குப்படாமல் திரிகிற கித்தாப்பு.

உழவுக்கு மாடு கூப்பிட, பாத்திகட்ட ஆள் பார்க்க என்று எல்லா வேலைகளும் இவள் தலையில்தான். தாலியறுத்த பொட்டச்சி மாதிரி தெருத்தெருவாய் அலைந்து காலொடியணும்.

புஞ்சைக்கு வேலைக்கு வருகிறவர்கள், வாயை வைத்துக் கொண்டு சும்மா வேலை பார்ப்பதில்லை. கிண்டிக் கிளறுவார்கள். புண்ணில் சிண்டி பார்ப்பார்கள்.

"அண்ணாச்சி புஞ்சைக்கு வரமாட்டாரா?"

அப்புராணிப் பாவனையில் கேள்வி கேட்பார்கள். ஏளனமும் பரிகாசமும் உட்கார்ந்திருக்கும். அவமானமாய் உணர்வாள் சிந்தாமணி. வெளிக்காட்டிக்கொள்ள முடியாது.

"வருவாரு..."

"இன்னிக்கு வரல்லே?"

"ஊருக்குப் போயிருக்காரு"

"அண்ணாச்சி கவலையத்த ராசா. மகராசி நீங்க எல்லா வேலைகளையும் செஞ்சிடுறீக. அவரு சீமைராசா கணக்கா ஊரு சுத்தறாரு."

பாராட்டா, கேலியா? தொனியை நிதானிக்க முடியாமல் துடிப்பாள். மனசுக்குள் கொத்திப் பிடுங்கும் அவமானம். இந்தப் பக்கம் ஊசியால் குத்தி, மறுபக்கம் உருவுவதைப் போல அவளுள் பரவுகிற வேதனை. அணுஅணுவாய் அவஸ்தை.

ஒன்றும் பதில் பேசமுடியாது சிந்தாமணியால். என்னத்தைப் பேச? என்ன யோக்யதையில் பேச? கூறுகெட்ட ஆம்பளையை வைத்துக்கொண்டு எந்த வாயைத் திறந்து பேச?

அவளுள் குலை கொதிக்கும். ஊரில் அகப்பட்ட சாமிகளையெல்லாம் இழுத்துப் போட்டு வைது தீர்ப்பாள்.

"ஈ எறும்புக்குக்கூட தீங்கு நினைக்காத சாதிமான்கன்னு நான். எனக்கா இந்தக் கேவலம்? அட, குருட்டுப் பய தெய்வமே..."

வாழ்வின் வெளிவட்டத்தில்தான் குமரேசன் இப்படி உள்வட்டத்தில் கதையே வேறு. ரொம்பக் குளிர்ச்சி. பௌர்ணமி நிலாக் குளிர்ச்சி.

பிள்ளைகளுக்கு அருமை அருமையாய்ப் பாடம் சொல்லிக்கொடுப்பான். நல்ல நல்ல கதைகள் போடுவான். குழந்தைகளோடு குழந்தையாய், நிலா வெளிச்சமாய் சிரித்து சிரித்து விளையாடுவான். மழலை மனசு.

சாப்பிட உட்கார்ந்துவிட்டான் என்றால்... குமுறிக் கொதித்துப் போயிருக்கிற சிந்தாமணியை குளிர வைத்துவிடுவான்.

"கொழம்பு ரொம்ப நல்லாயிருக்கு. தாழிச்ச வாசம் ஆளைத் தூக்குது" என்பான்.

"சோறு வேக்காடு ரொம்பப் பக்குவம்" என்பான். குழம்பு எதுவானாலும் நாலு வார்த்தை பாராட்டாமல் அதைத் தொடமாட்டான். வெறும் ரசமும் துவையலும் மட்டும் வைத்திருந்தால்கூட முகம் சுளிக்கமாட்டான்.

"ரசத்துலே மல்லிச்செடி வாசம். மனசைக் கொள்ளை யடிக்குது" என்று அதற்கும் பூக்களைத் தூவுவான்.

பாராட்டைப் பழிப்பவளைப் போல சிந்தாமணி முகம் சுளிப்பாள். "ஆமா... இந்தச் சொக்குப்பொடிப் பேச்சுக்கு ஒண்ணும் கொறைச்சலில்லே" என்று ஏளனமாய்ச் சொல்வாள்.

ஆனால், உள்ளுக்குள் பௌர்ணமி நிலாக் குளிர்ச்சி பாய்ந்து பரவும். பூப்புவாய்ப் பூத்து, மனசே பூவனமாய்ச் சிலிர்க்கும்... தைமாச நிலா மிதக்கும் ஆகாயமாய் அவள்...

இரவின் அந்தரங்கத்தில் அவன் தொடுகிற விதம்கூட ஒரு நேர்த்திதான். நேரமறிந்து... மனசறிந்து... தாகமும் மோகமுமாய் அவள் கனிந்து நெகிழ்கிற கணத்தில்தான் தொடுவான்... நிலா வெளிச்சமாய்.

மறுக்க வழியிருக்காது.

அவனது ஆக்கிரமிப்பின் இங்கிதத்தில், இதத்தில் சுகத்தில் அப்படியே லயித்துத் துவண்டு கிடப்பாள்... தேனில் விழுந்த எறும்பாக.

அப்படியான ஒரு மயக்கப்பொழுதில்தான் சிந்தாமணி அந்தத் தகவலைச் சொன்னாள்.

"உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா?"

"என்னது?"

"தெக்குத்தெரு மாடத்தி மகள் சடங்காயிட்டா..."

"அந்தச் சின்னப்புள்ளையா?"

"ம்..."

"அவ... நம்ம ராஜி வயசுதானே?"

"ம்... ராஜியும் அந்தப் புள்ளையும் ஒரே நாள்லே? பொறந்தாங்க..."

"அந்தப் புள்ளையா சடங்காயிருச்சி? அதுக்குள்ளேயா?"

"ம்..."

அவனது வியப்பில் ஒரு இறுக்கம் இருந்தது. உள் நடுக்கம் தெரிந்தது. பதற்றத்தில் பேசக்கூடப் பயந்து மௌனத்தில் உறைந்து போய்விட்டான். வாழ்க்கையின் மூர்க்கச் சுமையில், அவன் மனசு மூச்சுத் திணறியது.

இந்த ஒரு மாசமாய்த் தலைகீழாய் மாறிவிட்டான், குமரேசன்... வேலை... வேலை... எந்த நேரமும் வேலைதான். சூரியனுக்குப் போட்டியாக அலைச்சல். சூரியோதயம். அஸ்தமனம் ரெண்டையும்

புஞ்சையிலிருந்துதான் பார்ப்பான் – அதுக்குப் பிறகும் வேலைகள்...

இப்போதெல்லாம் தண்ணீர் பாய்ச்ச கூலியாள் கிடையாது. அவனேதான்... அசைப்பு பிரேயரைத் தூக்கி முதுகில் போட்டுக் கொண்டு, பருத்திக்கு ஓடி ஓடி மருந்தடிப்பதுவும் அவன்தான்.

சிந்தாமணியுடன் களைவெட்டக்கூட கூச்சப்படாமல் புறப்பட்டு விடுவான். நிரைபிடித்து குனிந்தால், லேசில் நிமிரமாட்டான்.

இதையெல்லாம் தூசியாக நினைக்கிற மாதிரி, இன்றைக்குப் பெரிய சாதனையைச் சாதித்துக்காட்டி, ஊரையே அசத்தி விட்டான்.

இவர்கள் கிணறு உப்புத் தண்ணீர். புஞ்சையே உவர் பொங்கிக் கிடக்கும். தண்ணீர் பாயப்பாய வெள்ளாமை தேய்பிறையாய்ச் சுருங்கும். மழை பெய்தால்தான் வெள்ளாமை.

உப்புத் தண்ணீர் பாய்ந்து உவர் பொங்கிய மண்ணில், நல்ல தண்ணீர் பாய்ந்தால்... பெரிய, உரம் போட்ட மாதிரி. திகிடு முகுடாக வெள்ளாமை விளையும்.

தூரத்தில்... முந்நூறு அடிக்குள் ஒரு கிணறு. நல்ல தண்ணீர். தேங்காய்ப்பால் மாதிரி தித்திப்பு.

இவன் ஊர் ஊராய் அலைந்து, விசாரித்து, சிரமப்பட்டு நானூறு அடி ரப்பர் டியூப் சுருளைச் சுமந்து கொண்டு வந்து, கிணற்றுக்காரரிடம் கெஞ்சிக் கூத்தாடி, மணிக்கு பதினைந்து ரூபாய் என்று வாடகை பேசி... அந்த நல்ல தண்ணீரைப் பருத்திப் புஞ்சைக்கு இன்றைக்குப் பாய்ச்சிவிட்டான். இது பெரிய சாதனை. துணிச்சலான சாகசம். பெரிய விஷயம்.

சிந்தாமணிக்கு றெக்கை முளைத்த மாதிரியிருக்கிறது. முகத்தில் ஒரு ஒளித்ததும்பல். பெருமிதப் பரவல்.

ஊர் அவனைப் பேசி பேசி மாய்கிறது. மூக்கில் விரலை வைத்து அசந்துபோகிறது. புருஷனை நினைக்க நினைக்க இவளுள் பூரிப்பு பரவசச் சிலிர்ப்பு. அவனுக்காகத்தான்... பறந்து பறந்து சமையல் செய்கிறாள். புகையோடு மல்லுக்கட்டுகிறாள். அவனுக்கு வாளைக் கருவாடு என்றால் உயிர். குடியிருந்து தின்பான். அதிலும் வெங்காயம், மிளகாய் போட்டு, எண்ணெய் ஊற்றி கருவாட்டுத் துண்டை வதக்கி வைத்துவிட்டால் போதும்.. சின்னப்பிள்ளை மாதிரி 'அய்ய்...'யென்று கும்மாளம் போடுவான். ரசித்து ரசித்து பாராட்டுவான்.

அவனிடம் குளிர்ச் சொல்லைக் கேட்கிற வேட்கையோடு, ரொம்பப் பக்குவமாய்... கண்ணும் கருத்துமாய்ச் சமையலை முடித்த கையோடு, மஞ்சளைப் பூசி குளித்து முடித்தாள். ஈரக்கூந்தலைத் தளரப் போட்டிருந்தாள்.

என்னமோ... இன்றைக்கு அவள் ரொம்பக் கனிந்து நெகிழ்ந் திருந்தாள். புருஷனை எப்படி பாராட்ட, எப்படிச் சீராட்ட என்கிற மனத்தத்தளிப்பு உள்ளுக்குள் ஓடிச் சிலிர்க்கிற பரவசம்.

இருட்டின பிறகுதான் வந்து சேர்ந்தான். வேகவேகமாய் வந்தான். பரபரப்பாக இருந்தான்.

"எங்கே பொறப்புட்டாச்சு?"

"ட்யூபைக் கொண்டு போய்ச் சேக்கணும்லே?"

"சாப்டுக்கிடுறீகளா?"

"ம்..."

அவசர அவசரமாய்க் கால் கையைக் கழுவிவிட்டு வட்டிலின் முன் நிமிர்ந்தான். பரபரவென்று அள்ளி விழுங்கினான்... யோசனை பூராவும் எங்கோ...

அவன் முகத்தையே பார்த்தாள்.

பரவச வார்த்தைகள் 'அய்ய்... வாளைக் கருவாடா? ரொம்ப மணமாயிருக்கே...' என்கிற குழந்தைத்தனமான சந்தோஷச் சொற்கள்... எதுவும் வரவேயில்லை.

சிந்தாமணிக்கு என்னவோ போலிருந்தது. குமரேசனையே அள்ளி விழுங்கியது அவளது பார்வை... "என்ன... வாளைக் கருவாடு எப்படியிருக்கு?" மெள்ள கிசுகிசுத்தாள். இப்படிக் கேட்பதே புதுசு. கேட்க வேண்டியதே நேராது. அவனே சொல்வான். கேட்க நேர்ந்ததில் அவளுள் ஒரு கூச்சம்... வெட்கத்தை விட்டுக் கேட்டது போலிருந்தது.

"ம்... ம் இருக்கு" என்று ஏதோ ஞாபகத்தில் சொன்னதுபோல பற்றில்லாமல் சொன்னான். சட்டென்று, ட்யூப் சுருளை எப்படிக் கொண்டுபோய் சேர்ப்பது என்பது பற்றி மளமளவென்று பேச ஆரம்பித்துவிட்டான்.

சிந்தாமணிக்குள் பகீர் என்றது. இப்போதும் அடுப்புப் புகைக்குள் அவஸ்தைப் படுகிற உணர்வு. கண்ணோரத்தில் நீர்க்கசிவு...

"என்னாச்சு.. இந்த ஆளுக்கு? எங்க போனாரு அந்த ஆளு?

'தாளிச்ச வாடை ஆளைத் தூக்குது' என்று பௌர்ணமி நிலாச் சந்தோஷமாய்... குழந்தைக் குதூகலமாய்ச் சொல்கிற அந்த ஆளு... எங்கே?"

சாப்பிட்டுக் கைகழுவிவிட்டு புறப்பட்ட குமரேசனைக் குழந்தைகள் மறித்தனர்.

"அய்யா, கதை சொல்லுங்கய்யா."

"கதையா? தலைக்கு மேலே வேலை கெடக்கு... உங்க அம்மா கதை போடுவா..."

சொன்ன சொல் உதட்டில் இருக்கும்போதே, ஆள் வெளியே போயாகிவிட்டது. பிள்ளைகளுக்கும் வியப்பான ஏமாற்றம். மலங்க மலங்க விழித்ததுகள். அம்மாவைப் பார்த்ததுகள்.

அவர்களின் விளையாட்டுப் பிள்ளையாக இருந்த அய்யாவைக் காணாமல், அதுகளின் தவிப்பு.

தன் பெண் ராஜியும் சீக்கிரத்திலேயே சடங்காயிடுவாள் என்கிற உண்மை தந்த மாற்றத்தில், லௌகீகம் தெரிந்த... அக்கறையுள்ள ஆளாகிவிட்ட குமரேசன் பௌர்ணமிக் குளிர்ச்சியைத் தொலைத்துவிட்டானா? மனுச ஈரத்தையும், குளிர்ச் சிரிப்பையும் மறந்துவிட்ட எந்திர மனுசனாகிவிட்டானா?

சிந்தாமணிக்குள் பீறிட்டுக் கொண்டிருந்த மகிழ்ச்சியையும், பரவசத்தையும், ஊமைச் சோகமாக நிறம் மாற்றிக் கொண்டிருந்தது வாழ்க்கை.

*1993, பிப்ரவரி – ஆனந்தவிகடன்*

# பூ

"**மா**சாத்தி மகள் மூலையில் உட்கார்ந்து விட்டாள்".

முந்தா நாளிலிருந்து ஊரில் இதே பேச்சுதான். ஊர்ப் பெண்கள் மூக்கில் விரலை வைத்தனர். வாயைப் பிளந்தனர்.

ஆச்சரியத்தில் மாய்ந்து போனார்கள். 'நிஜந்தானா' 'நிஜந்தானா' என்று ஒவ்வொரு பெண்ணும் திணறித் தவித்தார்கள்.

பூங்கோதைக்கும் ஆச்சரியம்தான். அத்துடன் கொஞ்சம் அதிர்ச்சியும்கூட. மனசுக்குள் மெல்லிய நெருடல். ஆழத்திற்குள் ஜில்லிட்டுப் பாய்கிற பயம்.

'அப்பவும் இப்படியா, அப்பவும் இப்படியா' என்று வாய்க்கும், கைக்குமாய் புலமபிக்கொண்டிருந்தாள்.

புருஷனுக்கும், பிள்ளைகளுக்கும் எல்லா வற்றையும் கவனித்து, சமாளித்து முடித்துவிட்டு, கூலி வேலைக்குக் கிளம்பினாள் பூங்கோதை. அவளுடன் வந்து சேர்ந்து கொண்டாள் மாடத்தி.

அவளிடமும் சொல்லிச் சொல்லி மாய்ந்தாள் பூங்கோதை. மாடத்திக்குப் பிடிக்கவில்லை. வெடுக் கென்று மறுத்துப் பேசினாள்.

"பொம்பளைப்புள்ளே சடங்காகுறது ஒரு அதிசயமா? இதுக்குப்போயா... இப்படி வாயாறிக்கிட்டிருக்கே?"

"அப்பவும் இப்பயா பதினோரு வயசுகூட ஆகலே. இன்னும் தாவணியும் போடலை. அதுக்குள்ளேயா? இதெல்லாம் காலக் கூத்துதான்."

"அதுக்கென்ன, கணக்கா இருக்கு? சில உடம்புவாகு அப்படி அதனாலே இருக்கும்லே?"

"என்ன உடம்போ...! நாங்க எல்லாம் சீலை கட்டுன முழுத்த பொம்பளைகளா ஆனப்பெறகுதான், மூலையிலே உக்காந்தோம். இப்ப என்னடான்னா... பால்குடி மறந்த புள்ளைககூட சமைஞ்சிருதுக".

"அதுக இச்சையிலா நடக்குது? அதுக்கு அந்தப் புள்ளைக என்ன செய்யும்?"

"நானும் அதுகளை குத்தம் சொல்லலை"

"நீ சொல்றதும் வாஸ்தவம்தான். முந்தி மாதிரி இல்லே. இப்ப. ரொம்பச் சின்னஞ் சிறுசுககூட 'பொசுக் பொசுக்'குன்னு பூத்துருதுக"

"மூலை மூலைக்கு நடக்குற சினிமா, டிவிகளைப் பாத்துப் பாத்து.. வர்ற சீரழிவு"

காலை வெயில் சுள்ளென்று தைக்கிறது. மாடத்தி நடையை எட்டிப் போட்டாள். இவளும் தொடர்ந்தாள்.

விலகி எங்கோ ஓடுகிற நினைவுகள்...

பூங்கோதை சின்னப் பிள்ளையாக, பாவாடை கட்டியிருந்த சமயம்...

சினிமா என்றால் அதிசயம். பார்க்கக் கிடைக்காத அபூர்வம். ஆசைப்பட்டவுடன் பார்த்துவிட முடியாது.

சினிமா என்றால், அப்போ திருவேங்கடம் போகணும். கெஞ்சிக் கூத்தாடி, அய்யா - அம்மாவிடம் வசவுகள் வாங்கி, அப்புறம் சம்மதம் வாங்கி...

பெரியாள்களுடன் ஈடுகொடுத்து, நாலரை மைல் நடந்து சாகணும்.

கண்மாய்க் கரையில் – காய்ந்து பொடிப் பொடியான கரிசல் கட்டிகள் நெரிஞ்சிமுள்ளாய் குத்தும். அதையும் தாங்கிக்கொண்டு 'லொக் லொக்' கென்று மூச்சிறைக்க ஓடணும்.

டூரிங் தியேட்டரில் மணலைக் கூட்டி, உட்கார்ந்து படம் பார்த்துவிட்டு.. மையிருட்டில், முள்ளுக் காட்டில் மறுபடியும் நடை.

வீடு வந்து சேர்வதற்குள், கோழி கூப்பிட்டு விடும் மறுநாள், எழுந்திருக்க முடியாது. அடித்துப் போட்ட மாதிரி உடம்பெல்லாம் வலியெடுக்கும். அப்புறம் ரொம்ப நாளைக்கு சினிமா ஆசையே வராது.

இப்போது... அப்படியா?

வாராவாரம் டி.வி.யில் சினிமா. டிவி. உள்ள புண்ணியவதிகள் வீட்டுக்குள் புளிச்சிப்பமாய் அடைந்து கிடந்து, சிறிசு, பெரிசுகள் எல்லாம் போய்ப் பார்த்து விடுகின்றன.

இதுவும் போதாதென்று, ஊர் மைதானத்தில் பத்து நாளைக்கு ஒரு தடவை 'டெக்'கும், டிவியும் வந்துவிடும் யாரோ சிலர் ஏற்பாடு செய்திருப்பார்கள். வீடு தேடி வந்து கதவைத் தட்டுகிற சனியன்கள்.

ஊரே திரண்டு, விடிய விடிய கண் கூசாமல் பார்க்கும். ஒரு ராத்திரிக்கு நாலு படங்கள்.

இப்போது வருகிற சினிமாக்கள், மனுச மக்கள் உட்கார்ந்து பாக்கிற மாதிரியாகவா இருக்கிறது? ஒரு கதை உண்டா? கருத்து உண்டா? ஒரு இழவும் இல்லை.

ஒரே ஆடுகாலித்தனம்தான். காமக்கூத்தும், அசிங்கமும்தான். டவுசர் போட்ட சின்னப் பையனும், பொண்ணும் காதலிக்க, தண்ணீரில் நனைய, தாவணியை உருவ...த்தூ! அசிங்கம்.

இந்தக் கூத்துக்களை மனம் கூசாமல் விடிய விடிய பார்த்து ரசிக்கிற சின்னதுகளும், பெரியதுகளும்...

பெரியதுகளாவது... காடு கரைகளில் இந்த அசிங்கங்களைப் பேசிச் சிரித்து கழித்து விடுவார்கள்.

பாவம் சின்னதுகள்...

உள்ளுக்குள்ளேயே பொத்தி, பொத்தி அடைகாத்து... ஒன்றுக்குப் பத்தாக யூகங்கள் பொறித்து...

தீயிலே பிடுங்கிப் போட்ட பிஞ்சுக் காய்களாக அதுகளே வெந்து வெடிச்சிருதுக...

இதை காலக் கூத்து என்பதா, சினிமா கூத்து என்பதா? ஹூம்... அடக் கூத்துவனே!...

"என்ன பூங்கோதை, சத்தத்தையே காணோம்?"

"ஒண்ணுமில்லே" என்றவள், பெருமூச்சுடன் வெளி உலகத்துக்கு வந்தாள். இழுத்துக் கொண்டு ஓடுகிற நினைவுகளை இழுத்துப் பிடித்தாள்.

"ராசாத்தி மகளைத்தான் நெனச்சுட்டு வாரீயா?"

"இல்லே. பொம்பளையா ஜென்மம் எடுக்குறதே ஒரு பாவம்தான்"

"ஆமா. அது நெசந்தா. பூக்குறநேரம் நல்லாயிருக்கணும். காலகாலத்துலே மாலை பூக்கணும். பூத்த மாலை வாடாம வாசமா வாழணும்".

"ம்ச்சூ.."

"இதெல்லாம் எங்க ஒழுங்கா நடக்குது? இந்தா, என்னைத்தான் பாரேன், புல்லு மொளைக்காத பொட்டக்காடா... எம் பொழப்பு"

சட்டென்று குலுங்கிப் போய் விட்டாள் பூங்கோதை. பக்க வாட்டில் திரும்பி அவள் முகத்தைப் பார்த்தாள். மாடத்தி முகத்தில் கனத்து நின்ற சோகம். கண்களின் ஆழத்தில் ஒரு வேதனை.

பார்க்கத் திராணியில்லாமல் பர்தையைப் பார்த்தாள் பூங்கோதை. மனசு கிடந்து அடித்துக் கொண்டது. பேச விஷயமே இல்லாமல் போய்விட்ட மாதிரி ஒரு வெறுமை.

அவர்களைச் சுமையாக அழுத்துகிற ஒரு மௌனம். ஆழ்ந்த துயரமான மௌனம்.

நல்ல வார்த்தை ஏதாச்சும் சொல்ல ஆசைப்பட்டாள். என்ன சொல்லித் தேற்றுவது?

சொல்லி ஆறுகிற சோகமா... மாடத்தி சோகம்?

எல்லாக் குமரிகளையும் போல, மாடத்தியும் நல்லபடியாக வளர்ந்தவள்தான். ஆட்டபாட்டமாய் கும்மாளம் போடுகிற புது வெள்ளமாய்... கனவுகளோடு பொங்கிச் சிரித்தவள்தான்.

நல்ல இடத்தில்தான் வாழ்க்கைப்பட்டு வெட்கச் சிரிப்போடு போனாள். இன்பத் ததும்பலில் முதல் வருஷத்திலேயே ஆண் பிள்ளை பிறந்தது. செத்தும்போனது.

அப்புறம், அவள் வாழ்க்கையில் ஒரே சூறாவளிமயம்தான். புருஷனுக்கு என்ன கேடு வந்ததோ... அவள் மேல் தீராத சந்தேகம்.

குற்றம் சொன்னால்... இல்லையென்று நிரூபிக்கலாம் கூறுகெட்ட குருட்டுச் சந்தேகத்திற்கு... ஏது வெளிச்சம்?

சீவி முடித்து பூ வைத்தால்... சந்தேகம்.

"எந்தப் புருஷனுக்காக?" என்று கத்திக்குத்து.

வருத்தத்தில் நொந்துபோய் எண்ணெய் தேயாமல் காய்ந்து கிடந்தால்... அந்நேரமும் ஈட்டிதான் நெஞ்சில் பாயும். "எந்தப் பயலை நினைச்சு?"

அனுதினமும் செத்துச் செத்து வாழ்ந்தாள்.

"அப்பன் சாயலுமில்லாம, ஆத்தா ஜாடையுமில்லாம புள்ளை பொறந்துருக்கு, பாரு எங்க கிடந்து பொறந்துச்சோ... இது"

பிறந்து செத்த பிள்ளை பற்றி ஒரு கிழவி வெள்ளைத்தனமாய் சொன்ன இந்த வார்த்தைதான், அவனுக்குள் விஷயமா இறங்கி, ரத்தமெல்லாம் பரவி, மூளையின் நிறமே நீலம் பாய்ந்து...

வாழ்க்கை செத்தது.

அடியும், உதையுமாய் அவள் உடம்பு ரணப்பட கொத்திப் பிடுங்குகிற பாம்புச் சொல்லில் மனசு நரகமாக...

அஞ்சு வருஷ இழுபறிக்குப் பிறகு ஒரேயடியாக துரத்தப்பட்டு...

வாழாவெட்டியாகி இங்கு வந்து விழுந்தவள்தான்.

ஆதரவாயிருந்த அம்மா என்கிற ஜீவனும் ஒடுங்கிப் போய்ச்சேர... ஒற்றைப் பனைமரமாய் இவள்.

காய் காய்க்காத வெற்று மரம்.

இதோ... சூன்யமே ஒரு விடுதலையாகத் தோன்ற.... பாதி ஆயுளைக் கரைத்துவிட்டாள்.

கோடைப் பருத்திச் செடி, நெஞ்சு உயரத்துக்கு இருந்தது. கால்வைத்து விலகிச் செல்ல முடியவில்லை. அத்தனை அடர்த்தி.

ஆனால், அவ்வளவாக காய்கள் இல்லை. இருக்கிற காய்களும் பூச்சி விழுந்து... சூத்தையாகி...

அங்கொன்றும் இங்கொன்றுமாய் பருத்திச் சுளைகள். நோயில் வெம்பி வெடித்ததைப் போல... குத்தலும், கருகலுமாய்...

ஓடி ஓடி பருத்தி எடுத்தாலும் மடி நிறைய மறுக்கிறது. மடியில் கிடக்கிற பருத்தியும் பங்கப்பட்டு மூளியான பெண் வாழ்க்கையைப் போல... கொத்தையும், கொதுக்கலுமாய்...

வாய்க்காலில் வரிசை வரிசையாக அகத்திகள் அதன் சிம்புகளில் சோற்றுத் தூக்குச் சட்டிகள்.

அவளைச் சுற்றிலும் பேச்சுச் சத்தம். ஊர்ப்புரணிகள், கேலி, கிண்டல், சிரிப்புச் சத்தங்கள், பூங்கோதை நிறைபிடித்து பருத்தி பொறுக்கினாள். கட்டை விரல் காந்துகிறது.

அவளுக்குப் பக்கத்து நிறையில பருத்தி எடுத்து வருகிறவள், சுந்தரி, ரொம்பப் பிந்திக் கிடந்தாள்.

"ஏன் சுந்தரி... கொமரிப்புள்ளே. இப்படிப் பிந்திக் கிடக்கே? விறுவிறுன்னு எடுத்து வாயேன்..."

"வந்துக்கிட்டுத்தான் இருக்கேன். மதினி. நீங்கதான் 'பொடு, பொடு'ன்னு போறீக?

... இவள் குமரியாகி ஏழெட்டு வருஷமாகிவிட்டது. கூடுதலாகக் கூட இருக்கும். இன்னும் இவளுக்கு மாலை பூக்கவேயில்லை.

இவளுக்குப் பிறகு ஊரில் பூத்த பெண்கள் எல்லாம், மாலை பூத்து. பிரசவம் முடித்து பிள்ளையும் கையுமாக மாறிவிட்டார்கள். இவளைச் சுற்றி கால வெள்ளம் இயல்பாய் கடந்து ஓட.... இவள் மட்டும் நாணலாய் நின்று கொண்டே இருக்கிறாள்.

பார்க்க லட்சணம்தான். மூக்கும் முழியுமாய் சிவந்த திரேகமுமாய் கட்டான அமைப்புதான், பார்த்த எவனும் சொக்கிப் போவான். அப்படியும்...

வந்த வரன்கள் எல்லாம் நகை பிடித்தால் பெண் பிடிக்கலே, பெண் பிடித்தால் நகை பத்தாது.

ஒவ்வொரு காரணம். வாய்ப்புகள் நழுவி ஓட.... இவள் பூத்த பூவாகவே காலமெல்லாம்...

இவளுக்கும் மனசு இருக்கு. ஆசை இருக்கு. சிலிர்ப்பு இருக்கு. உயிர் இருக்கு. ஆனாலும் மரக்கட்டையாக கிடந்து திரணும்.

இது என்ன கொடுமையோ...

இப்போதெல்லாம்–

ஊர்ப் பெண்கள் முதுகுக்குப்பின்னால் குசுகுசுக்க ஆரம்பித்து விட்டனர். "இவா பூத்த நேரம், தோஷமான நேரம்".

பாவம், இவள்! உள்ளுக்குள் எம்புட்டுரணப்படுகிறாளோ. சொல்லி அழமுடியாத அவமானத்திலும், அவஸ்தையிலும் தினம் தினம் நொந்து புழுங்கி...

வாழும் உயிரே சுமையாகி, வெதும்பி, வெந்து... வறண்டே போய்விடுவாள்.

இவளைப் பெற்று வளர்த்த வயிறு, என்னமாய் கொதிக்கும்? அடப் பாதரவே, இந்தக் கொடுமை எந்தப் பாதகத்திக்கும் வரக்கூடாதடியம்மா..

சாயங்காலம் பூங்கோதை மனசில் பிள்ளைகள். பள்ளியிலிருந்து வந்திருப்பார்கள். அடைத்த கதவில் வந்து முட்டியிருப்பார்கள். அம்மாவை ஆவலோடு தேடியிருப்பார்கள். மடியில்

விழுந்து, நடந்த விளையாட்டு, சண்டைகள் பற்றியெல்லாம் கெஞ்சல் கெஞ்சலாய் சொல்லி மகிழ ஆசைப்பட்டிருப்பார்கள்.

பாவம், அம்மாவைப் பார்க்காமல், அடைத்த கதவைப் பார்த்து ஏங்கிப் போயிருப்பார்கள்.

நினைக்க நினைக்க இவளுக்குள் தவிப்பு. மனசுக்குள் இந்த நினைப்பு பின்னிக்கொள்ள... வேலை, வெறும் பாரமாய்த் தோன்றியது.

மனம் பரபரக்கிறது. வீடு நோக்கி ஆலாய்ப் பறக்கிறது.

ஆயிற்று. விரிந்த சமுக்காளத்தில் கொட்டிய பருத்தியை பெரிய பொட்டலமாகக் கட்ட.. மாடத்தியும், பூங்கோதையும் நடையைக் கட்டினர்.

இப்போது –

பூங்கோதை நடையை எட்டிப் போட்டாள். பிள்ளைகள் மனசைச் சுண்டியிழுக்க, கால் தரை பாவாமல் துரிதப்பட்டது.

ஊருக்குள் பாய்ந்தாள். தெருவைக் கடந்தாள். வீடு இருக்கும் தெருமுனையைத் தொட்டுவிட்டாள். அதோ –

பூட்டிக்கிடக்கிற கூரை வீடு. வாசல் படியில் மூன்று பைக்கட்டுகள்

மற்ற இரண்டும் விளையாடப் போயிருக்குமோ...

வீட்டு வாசலில் மூத்தவள் மட்டும் சுருண்டு உட்கார்ந்திருக் கிறாள். ஏழாம் கிளாஸ் படிக்கிறாள். வெட்டுப்பட்ட கொடியாக வாடியும் போயிருக்கிறாளே, எதுக்கு?

முகம் வெளுத்துப் போய்... அப்படியென்ன வாட்டம்? அழுது கரைந்த மாதிரி, கண்களில் அப்படியென்ன சோர்வு? சுருண்டு கிடக்கிற அளவுக்கு அந்தச் சின்ன உடம்பில் என்ன தளர்வு?

பூங்கோதைக்குள் பகீரென்றது. அடிவயிற்றைக் கலக்கியது. மனசில் நெருடல். ஆழத்தில் ஜில்லிட்டுப் பாய்ந்த பயம். திகில்.

ஒருவேளை... பூத்து உக்காந்துட்டாளா? ஐயய்யோ... அதுக் குள்ளாகவா?... அடிப்பாதகத்தி!

இன்னும் பத்து எட்டுக்கள்தான். பூங்கோதைக்குள் பயத்தின் நடுக்கம். குப்பென்று உடம்பெல்லாம் வியர்க்கிறது.

மனசில் வியர்வைத் துளிகளாக... சுந்தரி, மாடத்தி.. ஒரு கணம் வந்து மறைய–

படபடப்பு. கால்கள் பரபரத்து பின்னலாட –

ஓடிப் பாய்ந்தாள். மனசெல்லாம் பதைத்துப் போக.... படபடத்துக் கேட்டாள்.

"என்னடி... என்னம்மா செய்யுது... என்னடி, சொல்லித் தொலையேண்டி"

"ஒண்ணுமில்லேம்மா..."

"பிறகு ஏன்? இப்படி வாடிப் போயிருக்கே?"

"மத்தியானத்துலேயிருந்து மண்டையடிக்கு"

"அம்புட்டுத்தானா?..."

அவளுக்கு அப்போதுதான் உயிரே வந்தது. மனசின் முறுக்கெல்லாம் தளர்ந்து, கால் தரையில் ஊன்றிவிட்ட மாதிரி ஒரு நிம்மதி.

பயத்தில் படபடத்த மனசு சற்று அடங்கியது. வியர்வையில் காற்றுப்பட்ட மாதிரி... மனசுக்குள் ஒரு குளிர்ச்சி.

கதவைத் திறந்தாள். மகளை ஆதரவோடு அணைத்துக் கொண்டே, உள்ளே வந்தாள். நடையில் உட்கார்ந்து சுவரில் சாய்ந்தாள்.

உஸ்ஸெஸன்று விட்ட பெருமூச்சில் உடம்பின் – மனசின் – அயற்சி முழுவதும் கரைய –

"குடிக்க கொஞ்சம் தண்ணீ குடு"

தண்ணீர்ச் செம்பை நீட்டிய மகளைப் பார்த்தாள், பூங்கோதை. உள்ளுக்குள் முள்முள்ளாய் உறுத்தல், மனுஷத்தனமான உறுத்தல்.

பயந்தது சரிதானா, தெளிந்ததும் சரிதானா?

புள்ளை வளர்றதை நெனச்சு சந்தோஷப்பட வேண்டிய பெத்தவள்... நா எதுக்குப் பயப்படணும்?

அவளுக்குள் வெட்கமான ஒரு வேதனை உணர்வு.

மறுபடியும் மனசுக்குள் மாடத்திகள்... சுந்தரிகள்...

"பொண்ணா ஜென்மமெடுத்தவளை கிழிச்சு கேவலப் படுத்துகிற ஊரு உலகத்துக்குப் பயந்து என்ன ஆகப்போறது? தும்பம் வந்தா செத்தாபோறோம்? மல்லுக்கட்டிப் புரளலியா? அப்படித்தான் இதுவும்."

அந்தப் பெற்ற மனுஷிக்குள் புதிய தெளிவு. துணிச்சலில் வந்த பாசப்பெருக்கோடு.

"இங்க வா... கண்ணு" என்று எல்லை மீறிய கனிவில் கூப்பிட்டாள்.

புரியாமையில் நெருங்கிய சிறுமியை பற்றி இழுத்து மடியில் போட்டு இறுகத் தழுவிக் கொண்டாள்.

அவளது பிஞ்சுக் கன்னத்தை வலது கையால் வருடி... நெகிழ்ந்து போன மனசோடு மகளின் நடு நெற்றியில் முத்தமிட்டாள், வாழ்த்துவதைப் போல!

குழைந்து மிருதுவாகிப் போயிருக்கும் அம்மாவின் உணர்வுகளை உள்வாங்க முடியாமல், மிரள மிரள விழித்தாள், அந்தச் சிறுமி.

பூங்கோதையின் கண்களில் ஏனோ ஈரக் கசிவு.

*– அக்டோபர் 1991 – இந்தியா டுடே*

## முக்காலும் காலுமாய்...

**வே**ணும் வேணும் என்று பூவனத்தின் மனம் ஏங்க, கைகள் மட்டும் குறுக்கே விழுந்து தடுத்தன. கைகளை பொருட்படுத்தாமல் அவன் ஆவேசமாக அள்ளி... அணைத்து... ஆக்கிரமித்துக் கொண்டிருந்தான்.

உணர்ச்சிகளின் வெறியாட்டம்; உக்ரமமான அலைகளின் தழுவல்கள். அவள் தேகமெல்லாம் சூடேறி நெகிழ்ந்துபோய்த் துவள.. மனசெல்லாம் ததும்பித் தவிக்க... அவள் திணறினாள். திணறல் இன்பமான திணறல்... மூச்சுமுட்டிய திணறல்... மயக்கமூட்டிய திணறல்.

கதவைத் தட்டுகிற கரடிச் சத்தம்...

உடம்பெல்லாம் எரிச்சல்பற்றி எரிய, புருஷனை உதறித்தள்ளிவிட்டு எழுந்தாள்...

...நிஜமாகவே எழுந்துவிட்டாள். திடுக்கிட்டுப் போய்ப்பார்த்தாள்.

புருஷனைக் காணோம். சற்றுத்தள்ளி மகள் ராஜிதான் படுத்திருந்தாள். சூழ்ந்த வெறுமை சுள்ளென்று சுட்டது. மனசின் சூன்யம் கண்களோரத்தில் துளிகளாக வியர்க்க... கனவின் உஷ்ணம் தேகமெல்லாம் தகித்தது. தாபத்திலும் சோகத்திலும் மனசு அவிந்தது.

நிஜமாகவே கதவு தட்டப்படுகிற சத்தம். இது கனா அல்ல... நிஜம். கதவை ஓரவிழியால் பார்த்தாள். பார்வையில் அம்புபட்ட கிரௌஞ்ச பட்சியின் வேதனை... விரக்தி. அயர்ச்சி...

"யம்மா...வ்" என்ற அழைப்புக் குரல்.

எழுந்து கொண்டாள். கதவைத் திறந்தாள்.

"என்னம்மா... வெள்ளனத்துலேயே ஒறங்கிட்டீகளா?"

"ஆமப்பா..." உணர்ச்சிகளை கசியவிட்டு விடக்கூடாதே என்கிற ஜாக்கிரதை யுணர்வில் வார்த்தைச் சிக்கனம்.

"இன்னிக்கு பொங்கல் சாட்டப்போறாக. எல்லாரையும் கோவிலுக்கு வரச்சொன்னாங்க. அதான்... வீடு வீடா சொல்லிக்கிட்டு வாரேம்மா".

"சரியப்பா"

போய்விட்டான்.

"ஐயாவை சீக்கிரமா வரச்சொல்லுங்கம்மா" என்று போன வருஷம் இதே நாவிதன் சொல்லிவிட்டுப் போனான். அந்த வார்த்தையை நாசூக்காக தவிர்த்துவிட்டுப் போகிறான். மனசறிந்த நாகரீகம்.

அந்தத் தவிர்ப்பு, ஒரு முழுச்சோகமாக நெஞ்சுக்குள் தாக்குகிறது. இழப்பின் பரிமாணம் கனத்துடன் அழுத்துகிறது.

வெடித்துச் சிதறுகிற அழுகையோடு கதவைச் சாத்தினாள்.

ஏதேதோ நினைவுகள். துண்டு துண்டாக, சம்பந்தா சம்பந்த மில்லாமல் நினைவுகள்... ஒன்றின் குறுக்காக ஒன்றாக நினைவுகள்...

அவர்... அவரது அன்பு... நெஞ்சைத் தொடுகிற எத்தனையோ அவரது நிகழ்ச்சிகள்... அவரது நேர்த்திகள்.

அவர் இருக்கிற வரைக்கும் அவரை நிம்மதியா இருக்க நான் விடலை... எந்நேரமும் கொத்திப்புடுங்கினேன். குதறியெடுத்தேன். நாறப் பொழப்பா வைச்சுக்கிட்டேன்.

ஒம்மாலே என்ன கண்டேன், ஏது கண்டேன்னு எந்நேரமும் அவரைத் தாளிச்சு எடுத்தேன். அத்தனைக்கும் பொறுமைதான். ஒரு நாளாச்சும் 'சீ கழுத'ன்னு சீறியிருப்பாரா? ம்ஹூம்... அதே சிரிப்பு... அச்சுப்பிறழாத அந்தச் சிரிப்புதான். 'இருக்குறப்ப புரிஞ்சுக்கிட மாட்டே என்னோட அருமையை...'ன்னு ரகசியத்தை பொதிஞ்சு வைச்ச பூடகமான சிரிப்பு.

பாயில் வந்து உட்கார்ந்தவளுக்கு கனா நினைவுக்கு வந்தது. உடம்பெல்லாம் உஷ்ணத்தின் பரவல். காய்ச்சல் கண்டதைப்போல ஒரு தகிப்பு. மனசுக்குள் ஒரு சூன்யத்தாக்குதல்.

தூக்கம் தூரமாயிற்று. மனசுக்குள் மருகி மருகி வருகிற நினைவுகள். இமை மூடிப் படுத்தாலும் எட்டிப்பார்க்கவிடாமல் உறக்கத்தைத் துரத்தியடிக்கிற எண்ணங்கள்... காட்சிகள்.... கற்பனைகள். உடம்பு தகிக்கிறது.

செப்புப் பானையில் இருந்த பச்சைத் தண்ணீரையள்ளி மேலுக்குக் குளித்தாள். கண்களில் பொங்கிவருகிற உஷ்ணக் கண்ணீரோடு குளித்து முடித்து, அதே சேலையை உடுத்திக்கொண்டாள்.

படுத்துக் கொண்டாள். போனவருஷம் பொங்கல் சாட்டியது ஞாபகத்திற்கு வந்தது. அன்று–

இவருதான் கட்டாயமாக சினிமா போடணும்னு ஒத்தைக்கால்லே நின்னார். அதுக்காக மடக்கு வரியா பத்து ரூபாய் மேற்கொண்டு போட்டு முடித்தார்கள்.

பட்டிக்காடா பட்டணமா படம் போட்டார். அடேயப்பா... அன்னிக்கு இந்த ஊரில் கொஞ்ச ஜனங்களா! சுத்துப்பட்டி பத்து ஊரு ஜனங்களும் வந்து சேர்ந்துட்டாகளே... உக்காரக்கூட இடமில்லியே... ஊரே திணறித் தவிச்சதே...

இவரு என்னமாய் ஓடியலைஞ்சார்... உள்ளுக்குள் பெருமிதத்தில் பொங்கி வழிந்தேனே... ஆனாலும், "ஊரு ஊருன்னு இப்படி ஓடியலைஞ்சு நமக்கென்ன ஆகப்போகுது?" என்று கோபித்துக் கொள்ளத்தானே செய்தேன்.

அதுக்கும் அதே சிரிப்புதான்! பூடகமான சிரிப்பு... எதையோ பொதிஞ்சு வைச்ச சிரிப்பு.

இந்த வருஷம், 'சினிமாபோடணும்'னு சொல்ல யாரு இருக்காக?

போனவருஷப் பொங்கலுக்கு ஆசை ஆசையாக அவரு எடுத்துக்கொடுத்த நைலக்ஸ் சேலை சாயம் போய்... அதோ கொடியில் கிடக்கு. அதை யாரு கட்ட! எடுத்துத்தந்த மனுசர், உடுத்த விடாத படிக்குப் போய்ச் சேர்ந்துட்டாரே...

மகளுக்கு மஞ்சள்லே பச்சைப் பூவிரிஞ்ச பாலியஸ்டர் துணியிலே 3.5 மீட்டர் வாங்கிட்டு வந்து, என்ன சந்தோஷமா காட்டுனாரு... "இது மட்டும் நூத்தியஞ்சு ரூவா" என்று முகமெல்லாம் பெருமையா பூரிக்கச் சொன்னாரு.

அந்நேரமாச்சும் இந்தப் பாதகத்தி வாயிலேயிருந்து நல்லவார்த்தை நாலு வநதுச்சா? இல்லே.

"பொட்டைக் கழுதைக்கெல்லாம்... இம்புட்டு ஒசத்தி துணி எதுக்கு? சீட்டித்துணி போதாது? துட்டை துட்டுன்னு நினைக்காம... இப்படிச் கரியாக்கிட்டு வந்து நிக்கீகளே... நீங்களெல்லாம் ஒரு ஆம்பளை தானா?"

பூவை எதிர்பார்த்த அவர், கத்திமாதிரி வார்த்தைகளை எறிந்த போதுகூட, அவரு முகம் சுருங்கவில்லை. அதே சிரிப்பு...

"போம்மா... ஒனக்கென்ன தெரியும்... இருக்கட்டும் இருக்கட்டும்" என்ற மழுப்பலோடு சிரிப்பு.

"ஆமா! இவருக்கு மட்டுந்தான் எல்லாம் தெரிஞ்ச மாதிரி" என்று ஒரு நொடிப்பு நொடித்து, முகத்தைகக்கோணியது... நேற்றுபோல இருக்கிறது. ஒரு வருஷம் மாயமாகிப்போச்சு.

நெசந்தான்... அவருக்கு ஏதோ தெரிஞ்சிருக்கு. அதான்... நாளா இருந்து செய்ய வேண்டியதை நாழிகையிலே செஞ்சிருக்காரு. இந்தப் பாவி முண்டைக்கு இது தெரியாமப் போச்சே. தெரிஞ்சிருந்தா... அவரை அப்படியா 'வெடுக், வெடுக்'குன்னு பேசியிருப்பேன்? கொத்தியா பிடுங்கியிருப்பேன்?

குளிர்ந்த வார்த்தை பேசியிருப்பேனே... சிரிச்ச முகத்தைக் காட்டியிருப்பேனே... கனிஞ்ச பார்வை பார்த்திருப்பேனே.... இந்தப் பாதகத்திக்கு இது தெரியாமப் போச்சே... எப்பப்பார்த்தாலும் நாகப்பாம்பா கொத்திக்கொத்திப் பிடுங்குனேனே... என்னோட பிடுங்கல் பொறுக்கமாட்டாமத்தான்... என்னை இப்படியாக்கிட்டு... அவரு போய்ச் சேர்ந்துட்டாரோ... ஐயோ'!

நினைக்க நினைக்க அவளுக்கு அழுகை அழுகை பொத்துக் கொண்டு வந்தது. கண்கள் குத்தலெடுத்தது. கதறி அழுதால்... அக்கம்பக்கம் எட்டிப்பார்க்கும். அடக்க அடக்க உணர்ச்சிகள் உள்ளுக்குள் குமைந்து குமைந்து பொங்கித் திமிறியது. வெடித்து விடுவதைப் போல நெஞ்சு விம்மியது.

அழுக்குச் சேலையை மூடிக்கொண்டு ஒருக்கழித்துப் படுத்திருந்த ராஜியைப் பார்த்தாள். தோளுக்கு வந்து விட்ட பிள்ளை. நெடு நெடுன்னு வளர்த்தி, சட்டையை முட்டிக்கொண்டு ரெண்டு முடிச்சு, தாவணி போடணும்

பாவாடை தாவணிக்கு எம்புட்டுக் குறைச்சுப்பார்த்தாலும் அம்பது ரூபா ஆகும். சின்னப்பயலுக்கு டவுஷர் சட்டைக்கு முப்பது

ரூபா ஆகும். பொங்கல் சாட்டிவிட்டால்... வீட்டுக்கு 40 ரூபா தலைக் கட்டு வரி போடுவாக. கோயில் காரியம், குடுக்காமப் போனா, குத்தம் வந்து சேரும். அதுவும் குடுத்தாகணும்.

இம்புட்டு ரூபாக்கு எங்குட்டுப் போவேன்? யாரு கிட்டே கேப்பேன்? கூலி வேலை பார்த்து கஞ்சி குடிக்குற இந்த முண்டச்சி (விதவை)யை நம்பி யாரு கடன் கொடுப்பாக...?

நேரம் கெட்ட நேரமாயிருக்கு. மார்கழியிலே பெய்யிற மழை பெய்யலை. கெணத்துகள்லே தண்ணி வரட்டிழுப்பு. இருக்குற தண்ணியை இறைக்குறதுக்கும் கரண்டுல்லே. மொளகாச்செடி காயும் பூவுமாயிருக்கு. களை வெட்டு வேலைக முடிஞ்சுபோச்சு. பழம் பொறுக்குற வேலை இன்னும் வரலை. பொம்பளைகளுக்கு ஒரு வேலை ஜோலியில்லே.

மழை ஒழுங்கா பேய்ஞ்சு, கண்மாய்க்காடு நெறைஞ்சிருந்தா... வயக்காடுக வெளைஞ்சுருக்கும். கதிரறுப்பு வேலையாச்சும் நடக்கும். அதுவும் இல்லை.

கொத்துவேலை கெடைக்காம, வீட்டுக்கும் வழிக்குமாய் வெறும் நடைநடந்துக்கிட்டு... கூரை நிழல்லே பேன் பாத்துக்கிட்டு இருக்குற இந்த நேரத்துலே, கஞ்சி குடிக்குறதே பெரும்பாடு. இதுலே இம்புட்டுச் செலவு வந்து சேர்ந்துருக்கு. என்ன செய்றது?

என்ன சந்தோஷத்துலே கோயில் திருவிழா கொண்டாட? என்ன குதூகலத்துலே புதுசு கட்டி, பலகாரம் சுட்டு, ஊர் மெய்க்க அலையுறது?

அப்படி நினைச்சி ஒதுங்கிடவும் முடியாதே... சந்தோஷமோ சங்கடமோ ...ஊர் வழமொறைக்கு ஒத்துப்போகணுமே... நாலு பேரைப்போல நாமும் இருந்தாகணுமே... இல்லேன்னா... சுத்தியுள்ள பொட்டச்சிக கை கொட்டிச் சிரிச்சிருவாளுகளே....

சரி.. நூத்தியம்பது ரூபாயாச்சும் வேணுமே. அம்புட்டுக்கு இப்ப எங்க போறது?

பூவனத்துக்கு கண்ணைக் கட்டி இருட்டுக்குள் விட்ட மாதிரியிருந்தது. நிற்கவும் முடியவில்லை. நடக்கவும் பாதை தெரியவில்லை.

போன வருஷம் இந்தக் கவலையை இவள் அறியவேயில்லை. இதைச்சமாளிக்க மல்லுக்கட்ட ஒரு மனுசர் இருந்தார். இந்த வருஷம்?

அடப்பாவிப்பய தெய்வமே. உனக்கு நா என்ன கொறை வைச்சேன்? என்னை எதுக்கு இப்படி கோலமழிச்சு கொடுமைப் படுத்திட்டே?

அவளுக்குள் நினைவுகள் 'நா முந்தி. நீ முந்தி' என்று ஓடிப்பிடித்து விளையாட. தூக்கம் கண்ணில் ஒட்டவில்லை. எங்கோ கோழி பீதியுடன் "கேர். கேர்" என்று கத்துகிற சத்தம். கூளம் தின்னுகிற காளைமாட்டின் கழுத்துமணியின் அசைவுச் சத்தம். ஆற்றோரப் பனந்தோப்பில் அடைந்திருக்கிற மயில்கள். எதையோ பார்த்து மிரண்டுபோய் கரகரத்த குரலில் கதறுகிற சத்தம். சுவர்க்கோழியின் 'ங் ங் ங் ஙீ' என்ற இரைச்சல்.

கவலைகளும், திகைப்புகளுமாய் மருகி மருகி மனசு. அழுகை அடங்கிய குழந்தையைப்போல அப்படியே உறங்கிப்போய்விட்டது.

காலையில் கண்விழித்த பூவனத்தின் முகத்தில் ஊரின் உல்லாசம் மோதியது.

அடுத்த செவ்வாய் கோவில் திருவிழாவாம். வீட்டுக்கு 45 ரூபாய்க்கு வரியாம். திருநெல்வேலி கரகாட்டக்காரி வருகிறாளாம். புல்வாய்ப்பட்டி கணேசன் மேளம், விளாத்திகுளம் வில்லடி. டெக் சினிமா போடுகிற பொறுப்பு ஒரு இளவட்டம் கையில், அவனால் வசூல் பண்ண முடிந்தால், சினிமா. இல்லேன்னா இல்லையாம்.

ஊரெல்லாம் திருவிழாப் பேச்சு. சேலை துணிமணிகள் பேச்சு. சொந்தபந்தத்துக்கு வரச்சொல்லி கடித அழைப்புகள், புதுசா. மகளைக் கட்டிக்கொடுத்த வீடுகளில், மருமகனுக்கு என்ன மாதிரியான வேட்டி சட்டை எடுப்பது என்பது பற்றிய பேச்சுக்கள்..

ஒவ்வொரு முகத்திலும் திருவிழா தீபங்கள் சுடர்விட்டுப் பிரகாசித்தன. பூவனம் முகம் மட்டும் வெட்டுப்பட்ட பூங்கொடியாக வாடிக்கிடந்தது. என்ன செய்றது. ஏது செய்றது என்ற கவலை மனசை அரித்துக்கொண்டிருந்தது.

பூவனம் ஒரு யோசனையோடு அக்காவீட்டுக்குப் போனாள். மச்சானிடமாச்சும் கடன் கேட்டுப்பார்க்கலாம்.

இப்ப இப்பவெல்லாம்.... அக்கா புருஷன் பார்வை சரியில்லை. ஒரு தினுசாக இருக்கிறது. கொழுந்தியாளை அன்போட பார்த்த பழைய பார்வை மாதிரியில்லே. உரியை பார்க்கிற கள்ளப்பூனை மாதிரி... ஒரு விதமான பார்வை.

இவுககிட்டே கேக்குறது இழிவுதான். அவளுக்கு சுத்தமாக சம்மதமில்லை.

என்ன செய்வது? இவர்களை விட்டால் வேறு சொந்தபந்தம் கிடையாதே.... வேற நாதியில்லே....

தெருவை அடைத்துக்கொண்டுவருகிற எருமைகளை விட்டு விலகி, மடத்துவாசலில் உட்கார்ந்திருக்கிற இளவட்டங்களுக்கு மறுபக்கமாய் முகம் திருப்பி, டீக்கடை அரட்டைக்கூட்டத்தைக் கடந்து... அக்கா வீட்டுக்குள் நுழைந்தாள்.

மச்சான்தான் திண்ணைத் தாழ்வாரத்தில் உட்கார்ந்து வெற்றிலை போட்டுக்கொண்டிருந்தார். அக்காள் மகள் தண்ணி சுமந்துகொண்டிருந்தாள். பூவனம் தாழ்வார நிழலோரம் ரொம்ப ஒதுங்கி – ஒடுக்கமாய் – நின்றாள்.

"என்ன பூவனம், அக்காளைப் பார்க்க வந்தியா?"

'ஆமா' என்று தலையாட்டிய அவள், ஏறிட்டுப் பார்க்கவில்லை. ஆனாலும் மச்சானின் பார்வை மேனியெங்கும் ஊர்வதை உணர்ந்தாள். உள்ளுக்குள் கூசினாள். தலைநிமிராமல் பேசினாள்.

"அவா... குட்டிகளுக்கு கொழை ஒடிக்கப் போயிருக்கா..."

"நா... உங்ககிட்டேதான் ஒரு விஷயமா வந்தேன்"

"என்ன பூவனம், சொல்லு"

"பொங்கச் சாட்டியிருக்காக"

"ஆமா..."

"எனக்கு வேலையுமில்லே ஜோலியுமில்லை. கைக்கும் மெய்க்கும் காசில்லே. புள்ளைகளுக்காச்சும் ரெண்டு புதுசு எடுத்துக் குடுக்கணும்".

"ஆமா, பூவனம், எனக்கும் அதுதான் கவலையாயிருக்கு. எங்க வீட்டுக்கும் எப்படி கொறைச்சுப் பாத்தாலும் ஐநூறு ரூவா ஆகும்"

"நீங்க எப்படியாச்சும் கடன்கிடன் வாங்குவீக"

"முடியலே, சங்கரன் கோயில் கமிஷன் கடைக்காரங்க மழை போற போக்கைப் பார்த்துட்டு, கடன் இல்லேன்னு கையா விரிச்சிட்டாக. மொளகாச்செடிக்கு ஒரம் போடக்கூட வழி தெரியலே. இந்த நெலையிலே இந்தச்செலவு. என்ன செய்யற துன்னும் ஒன்னும் வெளங்கலே... ஒரே முழிப்பாட்டமாயிருக்கு"

"நீங்கள் ஆம்பளை, நாலு எடத்துலே முட்டி மோதி, எங்கனாச்சும் கடன் வாங்குருவீக. நீங்க வாங்குறப்ப.. எனக்கும் சேத்து வாங்கிட்டீகன்னா..."

மௌனம் கால் நீட்டிப் படுத்துக்கிடந்தது. மச்சானிடமிருந்து பேச்சு மூச்சே வரவில்லை. ஒரு பெருமூச்சு விடுகிற சப்தம் மட்டும். அந்தப் பெருமூச்சின் சத்தத்தில் எத்தனையோ உணர்ச்சிகள்.. ஏதேதோ செய்திகள். மொழியில்லாத மனச்சபலங்கள்.

மனசுக்குள் மருண்டாள்.

பூவனம் மெல்ல நிமிர்ந்தாள். அவனது கண்கள் இவளது புஜத்தில் நங்கூரமிட்டிருந்தது. அசைவற்ற அந்தப் பார்வையில் ஆயிரமாய் மன அசைவுகள், நெளியும் புழுக்கள்.

மருட்சி நிஜமாயிற்று, படபடக்கும் மனசை கட்டுப்படுத்திக் கொண்டாள். இயல்பாய் இருக்க முயன்றாள்.

"என்ன மச்சா, பேச்சுமூச்சையே காணலே"

"சாணி வுழுந்தா மண்ணு ஒட்டும். ஒத்தாசைக்குப் பதிலா ஒரு புரயோசனம் இருக்கும். ஒனக்கு நா உதவி செய்ஞ்சா.. எனக்கு என்ன பலன்?"

அவளுக்குள் நறுக்கென்று முள் தைத்தது. தெருவில் நிர்வாண மாய் நிறுத்தப்பட்ட அவமான உணர்ச்சி அவளை வதைத்தது. மனசுக்குள் ரத்தம் வடிய... கண்ணுக்குள் குத்தலெடுத்தது.

"அவுக இருந்தா....நா வந்து இப்படி நிக்கவா செய்வேன்? அக்கா வீடு தவிர வேற யாருகிட்டே ஆதரவு தேடிப்போக முடியும்?"

"சரி சரி... கண்ணைக் கசக்காதே . சவடால் சங்கரன்கிட்டே கொஞ்ச ரூபா கேட்டிருந்தேன். இன்னிக்குத் தாரேன்னான். அதை வேணுமின்னா - ஒனக்குத்தாரேன். சாயங்காலமா நீ புல்லுக்கு வருவேயில்லை? நம்ம தெக்குக் கிணத்துப்பக்கமாக வா. ரூவா தாரேன். என்ன சரிதானே?"

அதிர்வோடு நிமிர்ந்து பார்த்தாள். மச்சான் முகத்தைத் தீர்க்கமாய்ப் பார்த்தாள். குத்துண்ட பறவையின் வேதனை அவள் கண்ணில். தலையசைத்துவிட்டு நகர்ந்துவிட்டாள்.

பூவனம் மனசுக்குள் முள்வனம்...

பணம் தர்றதுன்னா அக்கா மூலமா தரவேண்டியதுதானே..? தெக்குப் புஞ்சைக்கு வரச்சொல்றாரே? எதுக்கு அங்க? சாணி வுழுந்தா மண்ணு ஒட்டணும்னாரே... அப்படி மண்ணு ஒட்டுறதுக்கா?

மாட்டுக்காரன் கிட்டே விலைபேசி முடிச்சு, பணத்தையும், மாட்டையும் கை மாத்திவிடுகிற தரகன். நாப்பது ஐம்பது தரகு

வாங்குவான். இவரு சவடால்சங்கரன் கிட்டே பணம்வாங்கித் தர்றதுக்கு என்ன தரகு கேக்குறாரு? என் உடம்பையா? என்னோட மானம் மரியாதையையா? ச்சே!

பூவனத்துக்கு உடம்பெல்லாம் பற்றியெரிந்தது. ஏதோ அசிங்கத்தை முழுங்கி விட்டதைப் போல மனசெல்லாம் குமட்டியது. காறித் துப்பினாள். யார் மீதோ விழ வேண்டிய எச்சில், தெருப்புழுதியில் விழுந்தது.

அந்த மனுசர் இருந்தா... எனக்கு இந்தக் கேவலம் வருமா? நாந்தான் இப்படிப்போய் நிப்பேனா? இவருதான் இப்படிக் கேப்பாரா? அந்த ஒழக்கரிசி ஜீவன் இல்லாததாலே.... என் தரம் எவ்வளவு தாழ்ந்துபோயிருச்சு?

முன் எப்போதும் இல்லாத பிரம்மாண்டமாய் புருஷன் அவளுக்குள் எழுந்தான். இழப்பின் கனபரிமாணம் அவள் நெஞ்சை உறுத்தியது.

மனசுக்குள் நினைவுகளின் கோரத்தாண்டவங்கள். மனத்தெருவை புழுதிக்காடாக்குகிற மூர்த்தண்ய விளையாட்டுகள்.

எருமை மாட்டுக்கு பசும் புல்லையள்ளிப்போட்டுக் கொண் டிருந்த ராஜி, "எங்கம்மா போய்ட்டே?" என்றாள். அவசரப்பட்டு உணர்ச்சிகளை உள்ளடக்க பிரயத்தனப்பட்டாள், பூவனம்.

"பெரியம்மை வீட்டுக்குப் போயிருந்தேன்"

"ஏம்மா... ஒரு மாதிரியாயிருக்கே?"

"எனக்கு கொள்ளையா வந்துருக்கு? ஒன்னுமில்லே. நீ கஞ்சியைக் குடி" என்று எரிந்து விழுந்தாள். அம்மாவைப் புதிதாக – புதிராகப் – பார்த்தாள் ராஜி.

அரவமில்லாமல் நான்கு நாட்கள் ஓடிவிட்டன. சனிக்கிழமை வந்துவிட்டது. வர்ற செவ்வாய், கோயில் திருவிழா.

நாள் நெருங்க நெருங்க பூவனத்துக்குள் பதைப்பு.

கோயிலுக்கு வெள்ளையடித்து சாயக்கோடுகள் போட்டு விட்டார்கள். ஊர் முழுக்க புத்தம் புதிய உற்சாகத்தில் திளைத்துக் கொண்டிருந்தது. வருஷம் முச்சூடும் வாட்டுகிற வருத்தங்களை – வாழ்க்கைச் சுமைகளை – தாங்குகிற மனோ வீர்யத்தை இந்த ஒரு உல்லாசத்தில்தான் சேகரிப்பதாலோ... என்னவோ... ஜனங்கள் கண்மண் தெரியாத ஆவேத்தில் பரபரத்துத் திரிந்தனர்.

பூவனம் துணிமணிக்காக – கோயில் வரிக்காக எங்கெங்கோ

அலைந்தாள். அங்கு இங்கு என்று முட்டிப்பார்த்தாள். எந்த இடத்திலும் சல்லிக்காசு பெயரவில்லை. நேரம் அப்படி. கண்ணு முழி பிதுங்குகிற கோடை நேரம்.

போட்டிருந்த ஏலச்சீட்டையாச்சும் எடுத்துவிடலாம் என்று ஆனமட்டும் முயற்சித்தாள். போட்டி கடுமை. பலிக்கவில்லை. முட்டிய இடமெல்லாம் ஏமாற்றமும் வேதனையுமே பதிலாகக் கிடைத்து. மனசு அலுத்துப் போய்விட்டது.

ராஜியையும், முத்துவையும் பார்க்கப் பார்க்க மனசு ஏங்கித் தவித்தது. ஊர்முழுக்க பிள்ளைகளெல்லாம் புதுச்சட்டையும், புதுப்பாவாடையுமாய் ஓடித்திரிய... நான் பெத்த பூச்செண்டுக மட்டும் கசக்கி உடுத்துன பழந்துணியோட கொறைக்கோலமா நிக்குமே... அதுக மனது என்ன பாடுபடும்? ஊரே என்னைப்பாத்து கை கொட்டிச் சிரிச்சிருமே...

என்ன செய்றது? நினைக்க நினைக்க இருட்டிக் கொண்டுவந்தது.

தனிமையில் புழுங்கிப் புழுங்கி அழுதாள். அழுகையில் பொழுதெல்லாம் கரைந்தாள். தெக்குக் கிணத்துப் புஞ்சைக்கு வரச்சொன்ன மச்சானை நினைக்க நினைக்க மனசு கொதித்தது.

எவ்வளவு லேசா நெனைச்சுட்டாரு? வான்னா வர்ற தேவடியான்னு எம்புட்டு எளக்காரமா நெனச்சுட்டாரு? நா அந்த மாதிரி பல்லையிளிக்கிற பலவற்றையா? சரியான சாதிமான்கன்னு.

மச்சானைப் பற்றி அக்காளிடம் சொல்லிவிட்டால்... என்ன, அவர்களுக்குள் சண்டை சச்சரவு வருமோ?

வந்தா... வரட்டுமே. அப்பத்தானே அவருக்கும் நெஞ்சுலே பயம் இருக்கும்? பாக்குற பார்வையிலே சுத்தம் வரும்?

சொல்லிட வேண்டியதுதான்.

அக்காளைத் தேடி வீட்டுக்குப்போனாள்.

வாசலில் தேங்கினாள். தயங்கினாள். மச்சான் குரல் கேட்கிறது. ஏதோ சகஜமாய் – சந்தோஷமாய் பேசிக்கொண்டிருக்கின்றனர்.

இவளால் உள்ளே தலைகாட்டவும் முடியவில்லை. திருப்பிப் போகவும் மனமில்லை. திகைத்தாள், பூவனம்.

".... இந்தா .... இதெல்லாம் ஒப்புள்ளைகளுக்கு துணிகள். டெய்லர் கிட்டே தைக்கக் குடுத்துரு. இது ஒனக்குச்சேலை. இது சட்டைக்குத் துணி".

"நீங்க.. உங்களுக்கு எடுக்கலியா?"

"ஜனதா வேட்டிக்கும் துண்டுக்கும் சொல்லியிருக்கேன் போதும்"

"இது யாருக்கு?"

"இது ஒந்தங்கச்சி புள்ளைகளுக்கு. இதை நீயே போய் பூவனத்து கையிலே குடுத்துரு"

"ஏன், நீங்களே கொண்டு குடுத்துர வேண்டியதுதானே?"

"ம்ள்ச்சூ... நீயே குடுத்துரு"

"ஏன் உங்களுக்கென்ன?"

"என்னை அவா தப்பா நெனக்குறா"

"தப்பா? எப்படி தப்பா?"

"நமக்கு புஞ்சையிருக்கு. சில சமயம் வேலைக்கு ஆள் கிடைக்காம திண்டாடித் தெருவிலே திரியுதோம். அவா... யாரு புஞ்சைக்கோ கூலி வேலைக்குப் போறா. அது நம் புஞ்சைக்கு வரலாமில்லியா? வந்தா நமக்கு எம்புட்டுப் பிரயோஜனமாயிருக்கும்?"

"ம்.... நெஜந்தான்"

"அவளுக்கும் நம்மை விட்டா வேற யார் இருக்காக? இந்தச் சின்ன வயசுலே தாலியறுத்துட்டு நிக்குற அவளைப் பாக்குறப்போ... நமக்கும் சங்கடமாயிருக்கு. இதையெல்லாம் நெனச்சு... அன்னிக்கு ஒன்னாலே என்ன பிரயோஜனம்னு கேட்டேன். அதை அவா வேற அர்த்தத்துலே எடுத்துக்கிட்டா போலிருக்கு. முகம் வாடிப்போய் போய்ட்டா, எனக்கே சங்கடமாப் போச்சு. ம்ச்ள்ச் சூ! எதுக்கு வம்பு? நீயே போய் ஒந்தங்கச்சி கிட்டே இதைக் குடுத்துரு. கோயில் வரியும் குடுத்தாச்சுன்னு சொல்லிரு"

பூவனத்துக்குள் ஆயிரம் சாட்டையடிகள் சுளீரிட்டன.

வந்த சுவடு தெரியாமல் திரும்பிவிட்டாள். மனசுக்குள் வெட்கமும், வேதனையும் பிடுங்கித்தின்றன.

வீடு வந்து சேர்ந்தாள். ராஜி எங்கே? தண்ணீர் எடுக்கப் போய்விட்டாளோ, அடுப்பங்கரைக்குள் வந்தாள். அடுப்பில் சோளக்கழி "டிப், டிப், டிப்"பென்று சத்தமிட்டுக் கொண்டிருந்தது. துடுப்பை உள்ளே போட்டு மவித்தாள்.

மச்சானை நினைத்தாள். கோழிக்குஞ்சை கால்தவறி

மிதித்துவிட்டால் மனசுக்குள் ஒரு வேதனை வருமே... அந்த வேதனை பூவனத்துக்குள்.

நா ஒரு பாவி. சே! மச்சானை எம்புட்டு. மட்டமா நெனச்சுட்டேன்? தங்கமான மனுசரை தரகுகேக்குறவருன்னு நெனச்சுட்டேனே... அவருக்குள்ளே இருந்துருக்குற பாசத்தையும், கருணையையும், நல்ல எண்ணத்தையும் இந்தப்பாவி மனசு புரிஞ்சுக்கிடாமே இருந்துருச்சே...

அழுக்கு எம்மனசுலே தான் இருந்திருக்குமோ...

தன்னைத்தானே வைதுகொள்கிற மனப்புலம்பல். யோசனைகள்

சட்டென்று யோசனைகள் ஓரிடத்தில் தேங்கித்திகைக்க... மனசுக்குள் ஒரு நெருடல்.

சரி.... அக்காகிட்டே அவரு பேசிக்கிட்டிருந்தது நெஜந்தான். அவரோட பாசம், எரக்கம் எல்லாம் நெஜந்தான். ஆனா..

தெக்குப் புஞ்சைக்கு வரச்சொன்னாரே.... அதுவும நெஜந்தானே? பாக்குற பார்வையிலே ஒரு மோகம் இருந்துச்சே. கள்ளப்பூனைப் பார்வை பார்த்தாரே... அதுவும் நெஜந்தானே...

அக்காகிட்டே பேசுனது நெஜமா... பார்வையிலே பேசுனது நெஜமா? ரெண்டுமே நெஜந்தானோ? ஒன்னுக்குள்ளே ஒன்னு பின்னிக்கிடக்குதோ? பாசமும், மோகமும் முக்காலும், காலுமாய் சேர்ந்து கலந்து கிடக்குதோ..

அவளுக்குப் புரியவில்லை. ஏதோ புரிவது போலவுமிருந்தது.

நினைவுகளின் அயற்சியில் சோர்ந்துபோய், புருஷனை நினைத்துப் புலம்பி அழத் துவங்கினாள் பூவனம்.

*சிறுகதைக் களஞ்சியம் 1984*

# தாய்மதி

முப்பிடாதி தவிக்கிற தவிப்பைப் பார்க்கச் சகிக்கவில்லை. பார்க்கப் பார்க்கப் பாதரவாயிருக்கிறது. சொள்ளமுத்துவுக்கு.

நிமிர்ந்து உட்காரக்கூட முடியாமல், தத்தளித்து, அவள் படுகிற பாடு. உடம்பாலும், மனசாலும் அவளைக்கொன்று கொண்டிருப்பதாய்... ஒரு குற்ற உணர்வு. எல்லாவற்றுக்கும் இவன்தான் காரணம்.

புருசன் பூப்போல வைத்துக்கொண்டாட வேண்டியவன். கண்ணுக்குள் 'முழி'யாய்க் காப்பாற்ற வேண்டியவன். முடியவில்லை. அவள் படுகிற உடம்பின் அவஸ்தையாச்சும் இயற்கையானது. மன அவஸ்தை? மனக்கொந்தளிப்பு?....

இதை நினைக்கும்போதுதான், உள்ளுக்குள் சுரீரென்று குத்தும் முள்ளாய், குற்ற உணர்வு – அவளை ஏமாற்றி வஞ்சிப்பதாய் ஒரு மனத்தவிப்பு!...

குற்றம் செய்யாமலும் இருக்க முடியவில்லையே?....

வாழ்வின் வடிவமாய் நின்று சித்தி அச்சுறுத்துகிறாளே.. என்ன செய்றது?

அடடா... முப்பிடாதி, எம்புட்டு அழகாயிருப்பாள்!

சின்னஞ்சிறு தேவதை மாதிரியிருப்பாள், கைப்பிடியடக்கமாய் ஒல்லி, கச்சிதமான வீச்சரிவாள் மாதிரி உருவம். நல்ல சிவப்பு, மஞ்சள் கிழங்கு மாதிரி

உதடு, கண் எல்லாம் அளவெடுத்து வைத்த மாதிரி அத்தனை லட்சணம்.

மஞ்சள் பூசி குளித்து மொழுகி.... ஈரத்தளதளப்போடு வந்து நிற்பாள் பூங்கொடி மாதிரி பசேரென்று மின்னுவாள். அந்த முப்பிடாதியம்மனே இறங்கி வந்து நடமாடுகிற மாதிரி.

அழகின் அற்புதத்தில் மயங்கி மலைத்து நிற்கிற சொள்ள முத்துவின் கன்னத்தில் செல்லமாய் இடித்து பொய்க்கண்டிப்பாய் அதட்டுவாள்.

"இந்தா.... என்ன இப்படி முழிக்கே?"

"அடிப்பாவி மகளே, எம்புட்டு லட்சணமாயிருக்கே, தெரியுமா?"

"புதுமாப்பிள்ளை கணக்கா வாயைத்தொறக்காதே. ரெண்டு பொட்டைக இருக்கு, நமக்கு".

"ரெண்டு புள்ளை பெத்த பொம்பளை மாதிரியாயிருக்கே?"

"பெறகு?"

"இப்ப சடங்கான எளங்கொமரி கணக்கா இருக்கே?"

"ம்....?"

அவளது சின்ன உதடுகளில் பெருமிதத்தின் ஈரமின்னல். கண்களில் மனப்பூரிப்பின் மலர்ச்சி. அதை மறைக்கிற போலி முயற்சியே ஓர் அழகாய் – பௌர்ணமிக் குளிர்ச்சியாய்... நாண நளினமாய்.... செல்லச் சிணுங்கலாய் ஓரப்பார்வை பார்ப்பாள்.

"ரொம்பத் தாளிக்காதே. வந்து சாப்பிடு"

"புள்ளைக எங்க?"

"பள்ளிக்கோடம் போய்ட்டுவந்துட்டு, வெளயாடப் போயிருக்குது. தெருக்காட்லே திரியும்?"

அவ்வளவுதான்.அணை உடைந்த வெள்ளமாய்ப் பாய்ந்து, பின்பக்கமாய் அவளை அள்ளி அணைத்துக்கொள்வான். அவனுள் மூச்சு முட்டுகிற பரவசம், முறுக்கேறிய நரம்புகளில் ஓடிச் சிலிர்க்கிற உணர்ச்சித் தத்தளிப்பு.

குளித்த உடம்பின் ஈரக்குளிர்ச்சி, பூசிய மஞ்சளின் மிருதுவான வாசம் கைக்குள் அடக்கமாய் குழைகிற அவளது சிற்றுடம்பு.

அவனுள் மனப் பிரளயம்.

துள்ளித் துடிக்க மாட்டாள். பதற்றமில்லாத உறுதியாய் மீற முடியாத நிதானமான கண்டிப்பாய் அதட்டுவாள்.

"ஏய்... கையை எடு".

"மாட்டேன்"

"வெலகிப்போ"

"மாட்டேன்"

"மாட்டீயா? அப்ப, ஒங்கூட பேசமாட்டேன்"

"ராத்திரிக்கு?"

"எப்பவும்?"

"ஐயய்யோ..."

தேளை மிதித்தவனாய்த் துள்ளி விலகி, அசடு வழிகிற புருசனைப் பார்ப்பாள். குறும்பும், கேலியுமாய்ச் சிரிப்பாள். நெஞ்சுக்குள் இறங்கி உணர்வுகளைச் சீண்டுகிற சலங்கைச்சிரிப்பு. கண்ணாடி வளையல்களின் குலுங்கல் சிரிப்பு.

கிட்ட அவள் படுத்திருந்தால் அதுவே ஓர் அழகு. விரித்துப் போட்ட தலைவாழை இலை மாதிரி. இவனுக்குள் கூத்தாடுகிற உணர்வலைகள். ஆர்ப்பரிக்கிற பிரவாகம். இவனது உள்மனம் பரவசத்தால் நிரம்பித் ததும்பும்.

அப்பேர்ப்பட்ட லட்சணக்காரி, முப்பிடாதி...இப்போது?

ரத்தம் வற்றிப்போய் சாம்பல் பூத்த முகத்தில் வேதனையின் கருநிழல், வாடிக்கருகிப்போன சோளப் பயிராய் – உயிர்வற்றிப் போய் லட்சணமில்லாமல்...

வலியின் அவஸ்தை தாளாமல் கடித்துக் கடித்துக் கன்றிப் போன அடி உதடு. நிறைமாச வயிறு. தேர் மாதிரி உப்பி யிருக்கிறது. ஏற்றிக்கொண்டு நிமிர்ந்திருக்கிறது.. கவிழ்த்துப் போட்ட மொடாப்பானையாக, பெரிய வயிறு.

நிமிர்ந்து உட்காரக்கூட அவளால் முடியவில்லை. வயிற்றுப் பாரத்தின் ஒரு பக்கச் சாய்வு, இடது கையைப் பின்னால் ஊன்றி அதன் மேல் மல்லாக்கச் சாய்ந்து, வலது கையில் இடுப்புக்கு முட்டுக்கொடுக்கிறாள்.

சராசரி கர்ப்ப வயிற்றைவிட சற்றுப்பெரிதான வயிறு; "வவுறு பெருசாயிருந்தா...பொறக்குறது பொட்டைதான்".

அனுபவங்களின் அனுமானம், உள்ளுக்குள் "கரங் கரங்" கென்று அறுக்கிறது!

ஏழாவது மாச வயிறே சொல்லிவிட்டது... உள்ளே வள்ர்வது

பொட்டைதான் என்று! புருசனின் சித்தி 'கடுகடு'வென்றாகி விட்டாள். எலியைக் குறிவைக்கிற கடுவன் பூனைமாதிரி அவள் மூஞ்சி, புருஷனிடம் குசுகுசுவென்று நச்சரிக்க ஆரம்பித்து விட்டாள். அதை இதைச் சொல்லி பயமுறுத்துகிறாள். மீற முடியாமல் – சம்மதிக்கவும் முடியாமல் தத்தளிக்கிற புருசன். சொள்ளமுத்து.

பாவம், அவன்! ஈரமான தாய்ப்பாசத்தை உணராதவன். ஒரு வருசப் பிள்ளையாய் இவன் இருக்கும்போதே, ஓடிப்போன அம்மா. உயிரோடு தாயிருந்தும், பாசத்துக்கு ஏங்கி ஏங்கிக் காய்ந்து போனவன். மறுதாரமாய் வந்த சித்தியோ, மழலைப்பாக்கியம் இல்லாதவள். அவளது சபிக்கப்பட்ட வாழ்வின் வெளிப்பாடாய் வெறுப்பு – முள் முள்ளாய்க் குத்தும் போலிப்பாசம் – அப்புறம் 10 வருசத்திலேயே 'போய்'ச் சேர்ந்துவிட்ட ஐயா.

சித்தியின் நிழலில் வாழ்வு. அவளது நிழலாய்ப் படிந்த சுபாவம். நிழலடித்த செடியாய் – நிறம் மாறியே வளர்ந்த அப்புராணி.

பிறக்கப் போகிற பிள்ளை இருக்கக்கூடாது என்பது சித்தியின் நினைப்பு. 'மூன்றாவது பொட்டையையும் குடும்பம் தாங்காது. நசுங்கி நாசமாயிரும்' என்று அவளது பயம். பயமுறுத்தல், சித்தியை அரட்டுகிற ஊர் நடப்பு. உலக நடப்பு.

முப்பிடாதிக்குள் தீ. இழப்புத்தீ. இழப்பைத்தடுக்க முடியாத இயலாமைத் தீ. உயிர்க்குள் சுட்டுத்துடிக்க வைக்கிற பாசத்தீ.

'அடப்பாவி மக்கா... ஊர் ஒலகத்துக்கு இப்படியா புத்தி போகணும்? பொட்டைப் புள்ளைன்னா... மட்டமா? பாரமா? திங்குற வவுத்தோடயும், நகை நட்டு போடுற கழுத்து மூக்கோட மட்டுமா, பொண்ணு பொறக்கு? பாடு படுற கையோடயும், வலுவான மனசையும் சேர்த்துத்தானே வந்து பொறக்கு. பத்து வயசு வரைக்கும் வளர்த்து ஆளாக்கிட்டோம்னா.... அதது பாட்டை அதது பாத்துக்காதா? பாடுபட்டுக்கொள்ளாதா? வைர மனசோட வாழ்க்கையோட மல்லுக்கட்டிக் கொள்ளாதா? களை வெட்டி யாச்சும் பொழைச்சிக்கர்தா? அதைக்கொன்னு அந்தப்பாவத்தைச் சுமக்கணுமா? பெத்த புள்ளையைக்கொன்னுட்டு, வாழ்ற வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையா? ஈண்ட குட்டிகளை முழுங்கிட்டு நெளியுற பாம்பு மாதிரியா? பாம்பும் மனுசனும் ஒண்ணா...? அடப் பாதரவே...!'

குலுங்கிக் குலுங்கி அழுதாள், முப்பிடாதி. வெறுப்பும், கசப்புமாய் மனம் குமட்ட... வெடித்துக் கதறினாள். சுமந்து, ரத்தம்

தந்து, உயிர் கொடுத்து பெறப் போகிற மழலையை சாவின் கையில் ஒப்படைக்கப் போகிற அக்கிரமத்தை நினைக்க நினைக்க குலையே கொதிக்கிறது. மண்டைக்குள் ஏதோ பிறாண்டுகிறது. கிறுக்குப் பிடித்துவிடும் போலிருக்கிறது.

மதியக்கரண்டு. பருத்திப் புஞ்சையில் தண்ணீர் விட்டு வந்திருந்தான் சொள்ளமுத்து. மம்பட்டியைக் கதவுக்குப் பின்னால் போட்டான். அழுகையும், கண்ணீருமாய்... அறுத்துப் போட்ட கொடியாய் முப்பிடாதி...?

பதற்றத்தோடு கிட்டத்தில் வந்தான். கனிவும், மிருதுவுமாய் அவள் முகத்தை வருடி, தன் வயிற்றோடு சேர்த்து அணைத்துக் கொண்டான். அவனுள் பதைப்பு பாசப் பரிதவிப்பு. கொஞ்சலாய்க் கேட்டான்.

"ஏய் முப்பு, என்னம்மா இது?"

அவன் வயிற்று ரோமத்தில் அவள் கன்னம் உரச வெறுமையாய் நிமிர்ந்து அண்ணாந்தாள். விரிந்து மலர்ந்திருந்த கண்களில் குலைகொதிப்பு. குற்றச்சாட்டு முள். அட, கொலைகாரப் பாவி என்கிற சீற்றம்.

"வவுத்துப்புள்ளைக்காரி அழலாமா? ஒடம்பு என்னத்துக்காகும் முப்பு?"

"ஒடம்பா? அது இருந்தா என்ன, செத்தா என்ன?"

"ஏன் இப்படி 'வெடுக் வெடுக்'குன்னு பேசுதே, மூப்பு? நீயில்லாம என்னாலே உசுர் வைச்சிருக்க முடியுமா? தாயில்லாம ஏங்கித் திரிஞ்ச பய நா. தாயா வந்து பாசத்தைப் பொழிஞ்ச மகராசி, நீ...!"

"பாசம் பாசம்னு வாய்க்கு வாய் சொல்லுதியே? பெத்த புள்ளையைக் கொல்றது மட்டும் பாசமாக்கும்?"

"அறிவு கெட்டதனமாப் பேசாதே. புள்ளையை யாராச்சும் கொல்லுவாகளா? கொல்ல மனசு வருமா?"

"சும்மா பாவலா காட்டாதே! ஒஞ் சித்தியும், நீயும் 'குசு குசு'ன்னு பேசுறது எனக்குத் தெரியாதாக்கும்?"

அவனுள் பூரான் ஊர்கிற மாதிரியோர் உணர்வு. தன் உயிர்ப் பங்காளியிடமே பொய் சொல்லுகிற குற்ற உணர்ச்சி. சமாளித்துக் கொண்டு உதறிப் பேசினான்.

"அதெல்லாமில்லே. நீயாவே என்னத்தையாச்சும் நெனைச்சுக் கிட்டு ஒளராதே"

"யோவ்... இப்பச் சொல்லிட்டேன். நமக்கு ரெண்டு புள்ளைக இருக்கு. அதுக தழையணும். நம்ம குடும்பம் குத்தம் குறையில்லாம நிமிர்ந்து நிக்கணும். வவுத்துப் புள்ளையை கொன்னா...அந்தப் பாவம் சும்மா விடாதுய்யா. பெத்தவுக செய்யுற பாவ புண்ணியம், புள்ளைக தலையிலே விடியும்னு சொல்லுவாக. பாத்துக்கய்யா..."

"இங்க பாரு மூப்பு! மாத்தி மாத்தி அதையே சொல்லாதே. கண்டதை கழியதை நெனைச்சுக்கிட்டு, மனசைப் புண்ணாக்காதே... நிம்மதியாயிரு..."

அவள் நம்பவில்லை. நிம்மதியாகவில்லை சொள்ளமுத்துவுக்கு நன்றாகப் புரிகிறது. அவன் மனசுக்குள் ஒரு பிசைவு! அழுகையும், கண்ணீருமாய் கலைந்த தலையும், அலங்கோலமுமாய் பரிதவித்துப் புலம்புகிற முப்பிடாதி. தலை வாழை இலையாய் தளதளத்த மகராசி. மனசுக்குள் மனசை கரைத்து உயிர் கலந்த புண்ணியவதி. லட்சணக்காரி. வயிற்றைத் தள்ளிக் கொண்டு, லட்சணம் கெட்டுப் போய், கிழிந்துபோன மனசோடு கதறுகிற அவலம்!

பார்க்கச் சகிக்கவில்லை. இளகிக் கரைகிற இருதயம். "பொட்டப் புள்ளை பொறந்தா, பொறக்கட்டும் – அதையேன் சாகடிக்கணும்?" – இளகிய மனசின் ஈர உச்சரிப்பு.

அந்த உச்சரிப்பை எச்சில் துப்பி அழிக்கிற சித்தியின் குரல். 'சின்னராசு கதையை அயத்துராதே. அந்தக் கதி ஒனக்கும் வரணுமா?' இரக்கமற்ற உலக நடப்பின் ராட்சசக் குரல். பாம்புக் குரல்.

அவனுள் ஓடிச் சிலிர்க்கிற பய உணர்ச்சி?...

உழுதவன் கணக்குப் பார்த்தால், உழக்கும் மிஞ்சுவதில்லை. கலப்பையும் காணாமல் போயிடும். புதுப்புது வித்துக்கள். புதுப்புது விவசாய முறைகள். என்னத்தை வந்து என்ன செய்ய? புதுப்புது நோயும் வந்து சேர்கிறது. மருந்தடித்து, மருந்தடித்து, மனிதன் மாய வேண்டியிருக்கிறது.

விளைவதில்லை. விளைந்தாலும், வியாபாரிகளின் கொள்ளை. நாதியத்துப் போன சம்சாரித்தனம், நாசமாகி... பிழைப்பே இழுபறியாகி... வரட்டிழுப்பாகி...

சின்னராசுவும் ஒரு சின்னச் சம்சாரி. ஒற்றைப் பெண் பிள்ளை இருந்தால்கூட, அதைக் கரையேற்ற முடியாமல், கண் முழி பிதுங்கிப் போகிறான் சம்சாரி. சின்னராசுவுக்கு மூன்று பொட்டைகள்.

ரெண்டு பிள்ளைகளைக் கரையேற்றி முடிப்பதற்குள் 'ஆத்தாடி அம்மாடி' என்றாகிவிட்டது. காடுகரையெல்லாம் கைமாறி, காத்தாடிப் போனான்.

மூன்றாவது பெண்ணைக் கரை சேர்க்கத் தெம்பில்லை. அவனும் ஓடியாடிப் பார்த்தான். ஒரு வழியும் தட்டுப்படவில்லை.

குடும்பத்திற்குள் மூச்சு முட்டடல். குமைச்சல், ஓயாத சண்டை சச்சரவுகள். நச்சரிப்புகள். நிம்மதியில்லை.

பெண்ணுக்கு ஓர் இடம் அமைவதுபோல நெருங்கி வந்து, நழுவிப் போயிற்று. அது விஷயமாய், மீண்டும் சண்டைகள், கூச்சல் கூப்பாடுகள்.

ரெண்டு நாளாய் சின்னராசைக் காணோம். ஊரே பதறிப் போய்த் தேடியது. பனந்தோப்பில் பிரேதமாய் விறைத்துப் போய்க் கிடந்தான். பூச்சி மருந்தைக் குடித்திருந்தான். வாயில் தள்ளிய நுரை, உலர்ந்து கிடந்தது.

சின்னராசின் மனைவியும், மற்றப் பெண்களும் வாயிலும், வயிற்றிலும் அடித்துக் கொண்டு, கதறி அழுத காட்சி, பார்க்கப் பரிதாபமாயிருந்தது. மனசை நடுங்க வைக்கிற வங்கொடுமையாயிருந்தது. ஊரே கதிகலங்கிப் போய்ப் புலம்பியது.

காலும், கையும் விரித்துப் போட்டு, விறைத்த பிரேதமாய்ப் புல் மண்டிய செம்மண் தரையில் கிடந்த அலங்கோலம், மாறி மாறி மனசுக்குள் தெரிகிறது! சொள்ள முத்துவுக்குள் நடுக்கம்.

"அடேய், சின்னராசு கதி ஒனக்கும் வரணுமா?" என்று சித்தி கேட்கிறபோது, உள்ளுக்குள் உறைந்தே போகிறான்.

"பாவ புண்ணியத்தைப் பத்தி பயப்படாதே. நா மலட்டு ஜெம்மம். எங்கையாலே அந்தக் கொடுமையைச் செய்றேன். என்னை வேணும்னா பாவம் புடிச்சா, புடிச்சுட்டுப் போகட்டும். நீயும், ஒங்குடும்பமும் நல்லாயிருந்தா... அது எனக்குப் போதும்'.

பாசத்தில் சித்தி சொல்கிறாள், கொன்னுவிடணும் என்று! முப்பிடாதியும் பாசத்தில் கதறுகிறாள் 'கொல்லாதே' என்று! – இவனும் பாசமுள்ள மனுசன்தான்!...

என்ன செய்றது? என்ன செய்யாமலிருப்பது? ஒன்றும் புரியவில்லை. கண்ணைக் கட்டி காட்டில் விட்டமாதிரியிருக்கிறது.

முப்பிடாதியை நினைக்க நினைக்க மனம் கிடந்து அலைபாய்கிறது! ரணகளமாய்த் திணறுகிறது.

தவிப்பும், புலம்பலுமாய் மனம் கசந்த வெறுப்புமாய் கண்ணீரில் கரைகிற முப்பிடாதி... அட, கொடுமையே, அந்த மகராசிக்கா இந்தக் கதி?

அவள் அப்போதே மன்றாடினாளே?... மருகிக் கரைந்தாளே?...

மாதாந்திரத் தொல்லை வர வேண்டிய நாள் தப்பிப் போய்ப் பத்து நாளாயிற்று. காட்டுக்கும், வீட்டுக்குமாய் 'விண் விண்'ணென்று ஓடியாடித் திரிந்த முப்பிடாதி, ஈரத்துணியாய் துவண்டு துவண்டு விழுந்தாள். 'சொளுக், சொளுக்'கென்று படுத்தாள். நாக்கில் எந்நேரமும் வழுவழுப்பு – விளக்கெண்ணெய் குடித்த மாதிரி. சோறு தண்ணீர் ஒவ்வவில்லை. ஓங்கரிப்பும், குமட்டலுமாய் வாடிக் கிடந்தாள்.

அப்பவே... சொள்ளமுத்துவிடம் அழாத குறையாய் சொல்லிச் சொல்லி மன்றாடினாள்.

"இதைக் கலைச்சிருவம்"

"ம் ஹூம், இருக்கட்டும்"

"சொன்னாக் கேளு. ரெண்டு பொட்டைப்புள்ளைக இருக்கு. போதும். மூணாவதும்னா, வீடு தாங்காது!"

"எனக்கு ஆம்பளைப் புள்ளை வேணும். வம்சப் பேரு தொலங்குறதுக்கு ஒரு சிங்கம் வேணும்".

"எதுக்கு – தோளுக்கு மேலே வளந்த பெறகு, கை நீட்டி பெத்தவுகளை அடிக்குறதுக்கா? வாய் கூசாம நாக்கை நீட்டி வைய்றதுக்கா?"

"அதெல்லாம், நம்ம புள்ளை அப்படி வராது..."

"ஆமா. ஒம்புள்ளை மட்டும் தங்கப் புள்ளையா வருமாக்கும்?"

"ஆமா. தங்கந்தான். நீயும் நானும் தங்கம். நம்ம புள்ளையும் தங்கந்தான்..!"

"சரி... அப்படியே இருக்கட்டும். பொறக்குறதும் பொட்டையாய்ப் போச்சுன்னா...?"

"ஒரு நம்பிக்கையிலேதான் நாளும் பொழுதும் நகர்ந்துக் கிட்டிருக்கு. எதையெடுத்தாலும் சந்தேகப்பட்டா.. எப்படி? நாஞ் சொல்லுதேன்... நமக்கு ஆம்பளைப் புள்ளைதான். அது எனக்கு வேணும்!"

"இங்க பாரு. இப்பவே சொல்லிருதேன், பொறக்குறது ஆணா

இருந்தா இருக்கட்டும். நல்லதுதா. பொண்ணாப் போச்சுனா... நெல் உமி, எருக்கலம்பால்னு அலையக்கூடாது. ஆமா... அப்படி இப்படின்னு கமுக்கமாக ஏதாச்சும் செய்ஞ்சேன்னா, நா ரணகாளியா மாறிருவேன்...!"

சொள்ளமுத்துவுக்கு சுள்ளென்று கோபம் வந்தது. எரிச்சலாய் ஒரு சீறு சீறினான்:

"ஏய், இந்தா. அநாவசியமாய்ப் பேசாதே. எனக்கு ஆம்பளைப் புள்ளை வேணும். இஷ்டமிருந்தா, பெத்துக்குடு, இல்லேன்னா கழிச்சிடு".

சினந்து பேசிவிட்டு விருட்டென்று வெளியேறிப் போனது ஞாபகத்துக்கு வந்தது. அன்றைக்கே 'சரி'யென்று தலையாட்டியிருந்தால்... இன்றைக்கு இந்தச் சிக்கல் வந்து நிற்காது!

சிக்கல் என்றால், லேசுப்பட்ட சிக்கலா? சொள்ளமுத்துவுக்கு மீள முடியும் என்று தோன்றவில்லை. இருட்டிக் கொண்டு வந்தது.

சித்தியும், முப்பிடாதியும் எதிரும் புதிருமாய் ரெண்டு பக்கமாய் இழுக்கிறார்கள் – 'கொல்லணும்', 'கொல்லவிடாதே'.

எந்தப் பக்கம் சாய்வது? சாயாமல் இருப்பது? எந்தப் பக்கம் சாய்ந்தாலும் பாவம்தான். மன உளைச்சல்தான்.

"பாவம் என்னைப் பிடிச்சா பிடிக்கட்டும். நீ சும்மாயிரு" உலக நடப்பின் வடிவமாய் சித்தி.

இவனுக்குள் நெருக்கடி. சிக்கல். மனத்திணறல். நினைக்க நினைக்க ஏகமாய்க் கற்பனை. திகில். பீதி. விதம் விதமாக பயங்கரக் காட்சிகள்.

விறைத்துக் கிடக்கிற, சின்னராசின் பிரேதம்...?

வெள்ளிக்கிழமை பொழுதடைகிற நேரம். முப்பிடாதிக்கு குத்திப் பிடுங்குகிற மாதிரி வலி. இடுப்பை சுற்றி பின்னிப் பிசைகிற ரண வேதனை.

"ஆ... ஹம்மா!" என்று வீரிட்டாள், முப்பிடாதி.

வீடு பூராவிலும் பக்கத்து வீட்டுப் பெண்கள், ஈரமனத்துடிப் போடு பரபரத்துப் பக்குவம் செய்கிற பெண்கள்.

தெருவெல்லாம் செய்தி காட்டுத் தீயாய் பரவிற்று.

"சொள்ளமுத்து பொண்டாட்டிக்கு இடுப்பு வலி கண்டுடுச்சாம்".

"யாருக்கு, முப்பிடாதிக்கா?"

"ஆமா! என்ன புள்ளை பெறக்கப் போகுதோ, தெரியலை. வவுறு இருந்த இருப்பைப் பாத்தா... பொட்டைதா பெறக்கும்".

"அடக்கிரகசாரமே! சும்மாவே ரெண்டும் பொட்டைக!... மூணாவதும் அப்படியா? பாவம், நம்ம முப்பிடாதி!..."

"தலையெழுத்து அப்படியிருந்தா... அதை யாராலே மாத்த முடியும்?"

"ஏம் முடியாது? எருக்கலம் பால் இல்லே?"

"புள்ளையைச் சொமந்த கொடுமை வேற. கொல்ற பாவம் வேற. முப்பிடாதிக்கா... இந்தப் பாதரவு?"

"முப்பிடாதிக்கு மட்டுமா? பொம்பளை ஜெம்மமே பாவ ஜெம்மம்தான். அதுகளுக்கு எப்பவும் தும்பந்தான்".

தெருவெல்லாம் அங்கே இங்கே பெண்களின் கிசுகிசுவென்கிற பேச்சு. மனித ஈரமும் உலகச் சோகமுமாய்ப் பெருமூச்சுகள்.

நன்றாக இருட்டிவிட்டது. கருகருவென்று முன்னிருட்டு. நார்க்கட்டிலில் வேதனை தாளாமல் துடிக்கிற முப்பிடாதி. கத்தலும் கதறலுமாய் உடம்பை முறுக்கிக் கொண்டு தவிக்கிறாள். சுற்றிலும் மனத் தவிப்புகளோடு பரபரக்கிற பெண்கள். ஆறுதலும், அதட்டலுமாய்ச் சத்தம் கொடுக்கிற மூதாட்டிகள். வீடு பூராவும் மனிதக் கசகசப்பு.

ஏழு மணிக்கு மேல்... ஒரு புதிய ஜீவனின் முதல் வீறிடல்!...

அந்த வீரிடலைக் கேட்ட கணத்தில், அத்தனை கொடிய ரண வேதனையிலும், கழுத்தைச் சாய்த்துப் பிள்ளையைப் பார்த்தாள், முப்பிடாதி. பெண் குழந்தை!

அவளுக்குள் கத்தி செருகிய மாதிரியிருந்தது.

படபடப்பும் புழுக்கமுமாய் வந்தது. மல்லிக் காபி கொடுத்தார்கள். அதில் ஏதோ வேற்றுவாசம். எதையும் உணரும் நிலையில் முப்பிடாதி இல்லை. அவளுள் ஆழமாய்க் கத்தி..."

அவளுக்கு மல்லிக் காப்பியைப் புகட்டினார்கள். குடித்தாள். உறக்கம் கண்ணைச் சுழற்றிக் கொண்டு அமுக்கியது.

அவள் மனசுக்குள் ஒரு திமிறல். தவிப்பு. "ஐயோ, ஐயோ...!" என்கிற பதைப்பு.

ஐயோ... குழந்தை, வீறிடுகிற குழந்தை. எருக்கலம்பால்

புகட்டப்பட்ட குழந்தை. வீறிடலின் சுருதி குறைந்து, அடங்கிப் போகிற குழந்தை.

ஆங்காரமாய்க் கத்த வேண்டும் என்று ஆவேசமாய் வாயைத் திறக்கிறாள். ஆழ்மனக் கொதிப்போடு அலற முயல்கிறாள். வாய் வரவில்லை. சத்தம் தொண்டையை விட்டு வரமாட்டேன் என்கிறது. அவள் உயிர் துடிக்கத் துடிக்க, தவித்துத் தவித்து...

உடம்பு அப்படியே உறங்கிப் போயிற்று.

மறுநாள் விடியற்காலம். கட்டிலில் அடித்துப் போட்ட மாதிரி கிடக்கிறாள் முப்பிடாதி. கட்டிலின் சட்டத்தில் கலக்கத்தோடு சொள்ளமுத்து. வீடு முழுக்க பிரசவ நெடி.

அவள் முகத்தின் மேல் நங்கூரமிடுகிற அவன் பார்வை. அவனுள் பதைப்பு. குற்ற உணர்வு. பூரானாக ஊர்கிறது.

அவள் முகத்தில் மெல்லிசாய் ஒரு சலனம். உயிர்ச் சலனம். இன்னும் கண் விழிக்கவில்லை. வலது கை மட்டும் அசைகிறது. கட்டிலில் பரவி, எதையோ தேடுகிறது. கையின் வெறுமை. எதுவும் தட்டுப்படாத சூன்யம்.

படக்கென்று முழிக்கிறாள். விருட்டென்று எழுந்து உட்கார்ந்தாள். பதற்றத்தோடு பக்கத்தில் புருசன்.

"எங்க? எம் புள்ளை எங்க? எங்க?" வெறிபிடித்த கத்தலாய்க் கத்தினாள்.

"செத்துத்தான் பொறந்துச்சு..."

"பொய்யி... பொய்யி... புள்ளை அழுத சத்தம் எனக்குக் கேட்டுச்சு. காதுலே கேட்டேன். கொன்னுட்டீங்களா, கொன்னுட்டீங்களா...? எம் புள்ளையைக் கொன்னுட்டீங்களா?" ரணகாளியாய் கோபக் கதறலாய் – காட்டுக் கூப்பாடாய் வீறிட்டாள்.

அப்புறம் –

வேறு வார்த்தையேயில்லை. "கொன்னுட்டீங்களா, கொன்னுட்டீங்களா?" என்று திரும்பத் திரும்ப... சுருதி குறையக் குறைய... கடைசியில் முணுமுணுப்பாய்... அதே, 'கொன்னுட்டீங்களா' தான்...!

மாராப்புச் சேலை நழுவிக் கிடந்தது. பச்சை ஜாக்கெட்டில் மஞ்சள் திட்டுகள். அதை நனைத்துக்கொண்டு அமிர்தப்பால்.

மாராப்புச் சேலையை எடுத்துப் போட்டுக் கொள்ளவில்லை. போடணும் என்கிற உணர்வுமில்லை. உதடுகளின் ஒரு சீரான முணுமுணுப்பாய். அதே 'கொன்னுட்டீங்களா...!'

இப்போது–

பார்வை சம்பந்தமற்று எங்கோ வெறிக்கிறது.

"ஐயோ... முப்பிடாதிக்கு மூளை பிசகிருச்சா?"

அவளையே பயத்தோடும், பதைப்போடும் பார்த்துக் கொண்டிருந்த சொள்ளமுத்துவுக்குள் ஒரு திகில். உள்ளுக்குள் ஓடிய ஒரு கிலி உணர்ச்சி.

"முப்பிடாதி முப்பு... ஏய் முப்பு" உயிரில்லாமல் கூப்பிட்டுப் பார்த்தான். அவளுள் சலனமில்லை. அதே 'கொன்னுட்டீங்களா?' முணுமுணுப்பு. அதே வெறுப்பு.

"ஐயய்யோ... ஐயய்யோ... எம் முப்பிடாதியையும் சேத்துக் கொன்னுட்டீங்களே?... ஐயய்யோ... கொன்னு போட்டீகளே!..." என்று தலையிலும், நெஞ்சிலும் அடித்துக் கொண்டு கதறுகிற ஆத்மநாயகனை அதே மலர்ச் சிரிப்போடு வெறிக்கிறாள், முப்பிடாதி.

அவள் ஜாக்கெட்டில்–

சிந்துவாரில்லாமல் பரவி, நனைந்து, சொட்டடிக்கிறது அமிர்தப்பால் – வாழ்க்கையைப் போல!...

*1993 மே தமிழரசி*

*5000 பரிசும், எம்.ஜி.யார் உருவந் தாங்கிய டாலரும் பெற்ற கதை*

# கணக்கு

**வ**ண்டிக்காரத் தேவருக்கு வழக்கம் போலில்லை மனசு. இண்ட முள் செடியில் கால் வைத்த மாதிரி ஒரு காந்தல். பூ முட்கள் குத்தின வலி. தாங்க முடியாத வலி ஒன்றும் கிடையாது. ஆனால், மன நிம்மதியைக் கிழித்து நாசம் பண்ணுகிற வேதனை.

'இப்படியும் ஒரு பயலுக்குப் புத்தி போகுமா? இம்புட்டு அற்பத்தனம் இந்தப் பயகிட்டே இருந்துருக்கா...? ச்சே....'

குடிகாரன் வார்த்தை மாதிரி இந்த நினைப்பு திரும்பத் திரும்ப அவருள். புண்ணைச் சுற்றுகிற ஈ மாதிரி, சள்ளை பிடித்த இந்த நினைப்பிலிருந்து தப்பிக்கவும் முடியவில்லை வண்டிக்காரத் தேவருக்கு.

இந்நேரத்துக்கு ஒரு உறக்கம் போட்டு முழித் திருப்பார். இன்றைக்கு என்னடாவென்றால்... பொட்டென்று இமை மூடவில்லை. உறக்கம் கிட்டத்தில் அண்டவே மாட்டேனென்கிறது.

மாடுகள் தன்னடையாய் நடக்க, வண்டிப் பைதாவின் டொடக், டொடக் என்கிற ஒரே சத்தம். வண்டிச்சட்டத்தில் பருத்தி விதை மூட்டை. அதன் மேல் வைக்கோல் திணித்த சாக்கு மெத்து மெத்தென்று. அதில் படுத்திருக்கிற தேவருக்கு மேல் விரிந்துகிடக்கிற இருட்டு வானம். சிதறிக் கிடக்கிற நட்சத்திரப் பருக்கைகள். புகலிடமற்ற தூசி மேகங்கள்

கிழிந்து கிடக்கிற ஒளித்துணிகளாகத் திட்டுத் திட்டாய்...

எப்போதாவது கிச்சென்று அலறிக்கொண்டு பறக்கிற ராக்குருவி. சத்தமில்லாமல் கிட்டத்தில் வந்துவிட்டு பதற்றத்தோடு விர்ரென்று பறக்கிற குருட்டு வௌவால்.

பாரவண்டி. நீளவாக்கில் ரெண்டு தேக்குவாரிகள். அதன் குறுக்காக மூட்டைகள். அரிசி மூட்டை, புண்ணாக்கு மூட்டை, பலசரக்கு மூட்டைகள் எல்லாம். கீழ் வரிசையில் வெல்ல மூட்டைகள், பருத்தி விதை மூட்டைகள், தேங்காய் மூட்டைகள் எல்லாம் மேல் வரிசையில்போட்டு இறுக்கிக் கட்டப்பட்டிருந்த பாரக் கயிற்று இடைவெளியில் எண்ணெய் டின்கள், கூடைகள், பழத்தார், இன்னும் பொடி பொட்டுச் சாமான்கள்.

எல்லாச் சாமான்களையும் பாரமேற்றி, கட்டி முடித்து, அரிக்கேன் லெட்டை அடியில் கட்டி உண்டு முடித்துவிட்டு ராசபாளையத்தில் மாட்டைப் பூட்டினால்... வண்டி தன் போக்கில் நகரும். இவர் பாட்டுக்கு நீட்டி நிமிர்ந்து படுத்துவிடுவார். ஹெட்லைட் வெளிச்சத்துக்கு விலகி விலகி ரோடேறிக் கொள்கிற பழக்கம் மாடுகளுக்கு. தார் ரோட்டில் பைதா பதிகிற சத்தமும், டொடக், டொடக் என்கிற குடத்தின் சத்தமும் மாட்டுச் சலங்கைகளின் ஒரு சீரான சிரிப்பும், தார்ரோட்டில் மோதி எழுகிற மாட்டுக்குளம்புகளின் ஓசையும் ஒன்று கலந்து, பின்னிப்பிணைந்து சங்கீதமாய்க் கலவை பெற... அதன் மயக்கத்திலேயே மனுஷர் அம்சமாய் கண்ணயர்ந்து விடுவார். ரோடுகளில் ஓடியலைந்து மூட்டைசுமந்த அலுப்பு.

சத்திரப்பட்டிக்கு வந்து சேரவும், அவருக்கு விழிப்புத் தட்டிவிடும். வண்டியை ஓரமாய் நிறுத்திவிட்டு இறங்குவார். ராவுத்தர் கடையில் டீ சொல்வார். அதற்குள் ஒரு இனிப்புப் போண்டாவையும், முறுக்கையும் நொறுக்கி உள்ளே தள்ளிக் கொள்வார். வெத்தலை பாக்கு வாங்கிக் கொண்டு வண்டிச் சட்டத்தில் ஏறிக் கொள்வார். அவர் தம்ம் பிடித்து ஏறுகிற சத்தத்திலேயே மாடுகள் கிளம்பிவிடும்.

சங்கம்பட்டியைத் தாண்டுவதற்குள் உறங்கிவிடுவார். அப்புறம் கரிசல் குளம் வந்துதான் விழிப்பு. கண்மாய்ப் பட்டி வரைக்கும் பாதை மோசம். கிடங்குகளும் நொடிகளுமாய்க் கிடக்கும். கைக்குள் கயிறைவைத்துக்கொண்டு கண் விழிப்பாய் ஓட்டணும். கொஞ்சம் அசந்துவிட்டால் கூட குடைவண்டி தூக்கிப்போட்டுவிடும். கதை கந்தலாகிப்போகும்.

கண்மாய்ப்பட்டி கடந்துவிட்டால் ஊர் வரைக்கும் ஒரே தூக்கம்தான்.

அப்படித் தூங்குகிற தேவர்தான், இன்றைக்குக் கண்ணை மூடாமல் வண்டியில் கிடக்கிறார். பின்னோக்கி நகரும் நட்சத்திரங்களின் சிமிட்டல்களைக் கூட கவனிக்க முடியாமல், மனம் முழுக்க அந்தச் சனியன் பிடித்த நினைப்பு.

சின்னையாத்தேவர் நல்ல பாட்டாளி. மாடுவண்டி வைத்துச் சம்சாரித்தனம் செய்கிறவர். ரவ்வும்பகலுமாய் முரட்டுப்பாடாய் பாடுபடுகிறவர். வஞ்சனையில்லாமல் சாப்பிடுவார். கும்பா நிறைய கட்டிக் கம்பஞ்சோற்றை வைத்துக்கொண்டு பிய்த்து உருட்டி விழுங்குவார். அப்புறம் ஒரு கும்பா கரைசலாய்க் கரைத்துக் குடிப்பார். நல்ல விரிந்த தேகக் கட்டு. அகல முதுகு. எலும்பு தெரியாத சதைத்திரட்சி. சதையும் வைரம் பாய்ந்து உருளைக்கட்டையாய் நகர்ந்தலையும்.

காடுகரை உண்டு, பாடு ஜோலி உண்டு என்று கிடந்த சின்னையாத்தேவர் வேறு எங்கும் போனதேயில்லை. வருஷத்துக்கொரு தடவை மிளகாய் வத்தல் விற்கப்போய் வருகிற சங்கரன் கோவில், அவரைப் பொறுத்தமட்டில் வேறொர் உலகம்.

அப்படி... குண்டுச்சட்டிக்குள் குதிரை ஓட்டிக் கொண்டிருந்த சின்னையாத்தேவரை உள்ளூர்க் கடைக்காரன் ராமசாமிதான் மெள்ளச் சிம்பிவிட்டான்...

"அண்ணாச்சி... ராசபாளையத்துக்கு வண்டி போடுதீகளா?"

"எதுக்கு?"

"கடைப்பாரத்துக்கு..."

"வேண்டாமய்யா. உண்டான பாடு சோலிகளைப் பாத்துக்கிட்டுக் காட்டைக் காத்துக்கிடந்தா... போதும்"

"உண்டான பாடுசோலிகளை யாருவிடச் சொன்னது? பாருங்க... வாரத்துக்கு ஒரு நா மட்டும் வண்டியைப் போடுங்க. வர்ற வாடகை வெவசாயச் செலவுக்கு ஆகும்லே?"

"அம்புட்டு வாடகைக்கு... பாரம் கெடைக்காதுப்பா.."

"என்னண்ணாச்சி அப்படிச் சொல்லிட்டீக? நம்மூர்லே ஆறு கடைக்காரங்க இருக்காங்க. ராசபாளையம் சந்தைக்கு வருவாக. பாரம் போடாம எப்படிக் கொண்டாந்துர முடியும்?"

"அவுகளைத் தொண்ணாந்துக்கிட்டுத்தானே திரியணும்? அந்தப் பொழைப்பு நமக்கு வேண்டாமப்பா..."

"அதென்ன அப்பபடிச் சொல்லுதிக? கடைக்காரங்க வாங்குன சரக்கை ஊருகொண்டு வந்து சேக்க வழியில்லாம முழிச்சிக்கிட்டிருக்காங்க. அவங்கதான் உங்களை தொண்ணாந்துக்கிட்டு அலையணும்..."

"அப்படியா சொல்றே? வண்டியடிக்கலாம்ங்குறீயா?"

"நானாச்சு. என்னை நம்பி வண்டி போடுங்க. மத்ததை நா பாத்துக்கிடுதேன்..."

அப்படி வண்டி போட்டவர்தான் சின்னையாத்தேவர். மழைக்காலம், பனிக்காலம் எதுவானாலும் சரி... தவறாமல் பதிவாய் வண்டியடித்தார். வாராவாரம் வியாழக்கிழமை வரத் தவறினாலும் தவறிப் போய்விடும். இவரது வண்டி ராசபாளையம் சந்தைக்கு வருவது தவறுவதேயில்லை.

நாளாவட்டத்தில் சின்னையாத்தேவர் என்கிற அம்மா அய்யா வைத்த பெயர் மறந்துபோய்... அவரே உண்டாக்கிக் கொண்ட வண்டிக்காரத்தேவர் என்கிற பெயரே நிலைத்துப் போய்விட்டது.

எல்லாக் கடைக்காரர்களும் சரக்குகளை வாங்கி வண்டிக் கருகில் கொண்டு வந்து சேர்த்துவிட வேண்டும். ராமசாமிக்கு மட்டும் தனிச்சலுகை. பாதை போட்டுக் காட்டியவனல்லவா!

ராமசாமி என்றால் இவருக்குத் தனிப்பாசம். வயசில் சின்னவன்தான். முப்பது முப்பத்தொன்றுதான் இருக்கும். நல்ல விவரக்காரன். நல்ல மனசுக்காரன். ஏவாரிக்குரிய கள்ளத்தனம், கபடுசூது இருக்காது.

ஊரிலிருந்து கலிங்கப்பட்டி ரெண்டரை மைல். சைக்கிளை அங்கே நம்பிக்கையாக ஓரிடத்தில் போட்டு விட்டு பஸ் ஏறி ராசபாளையம் வரணும். வந்து சேர்ந்து விட்டால் போதும், சாக்குக் கட்டும் டின்னுமாய் அவன் பின்னாலேயே லொக் லொக்கென்று அலைவார்.

வெல்லக்கடையில் விலை திகைந்தவுடன் அவர்தான் சாக்குப் பிடிப்பார். பலசரக்குக் கடையில் இவன் சிட்டை சொல்லிவிட்டு போய் விட வேண்டியது. அவர்தான் கடுகு, சீரகம், பருப்பு அயிட்டம் எல்லாத்துக்கும் பை பிடித்து, கழுத்துக்கட்டு கட்டி, மூட்டையாக்கி தைத்தும் போடுவார். எல்லா மூட்டைகளையும் இவரே தூக்கிக் கொண்டு வந்து வண்டி சேர்த்துவிடுவார். தூக்குக் கூலி என்று அஞ்சுபைசா செலவுக்குக் கூட வழி வைக்க மாட்டார்.

அவன் வந்து விட்டால்... இவருக்கும் சல்லிக்காசு

செலவிருக்காது. டீ, வெத்தலை பாக்கு எல்லாம் அவனே வாங்கிக் கொடுத்து விடுவான். மதியச் சாப்பாடு சிங்கவிலாஸ் கிளப் கடையில் முட்டை, மீனோடு வயிறுமுட்ட. ரெண்டு கும்பா கம்பஞ்சோற்றை விழுங்குகிற தேவருக்கு, இந்தச் சிங்கவிலாஸ் சாப்பாடும், பொரிக்கறி வகைகளும், மீன் ருசியும் தேவாமிர்தமா யிருக்கும். சோற்றைக் கொண்டா, கொண்டா என்று இழுக்கும். எல்லாம் அவன் செலவுதான்.

அவன் துட்டு விஷயத்துலே கணக்கு வழக்கே பாக்கமாட்டான். செலவழிக்கிறப்பவும் இம்புட்டுக் காசு பணம் கரையுதேன்னு நினைக்க மாட்டான். மனுசத் தரத்தை மட்டும்தான் மதிப்பான்.

இதுதான் வண்டிக்காரத் தேவரின் மனசுக்குள் உட்கார்ந்திருக்கிற மதிப்பு. ராமசாமி மீது இவருக்குத் தனிப்பாசம் வருவதே இதனால்தான்.

"இந்த உலகத்துலே மனுசனை மனுஷனா எவன் மதிக்கான்? அணா பைசாவா – கூலிக்காரனா – கால்லே ஒட்டுன தூசி துரும்பாத்தானே நெனைக்கான்? அம்புட்டுத் தூரத்துக்கு எல்லாப் பயலுக மனசும் காய்ஞ்சு கனல் பறந்து போய்த்தானே கெடக்கு! மனுஷனை மனுஷத்தரத்தோட மதிக்கிறதுக்கு மனசிலே ஈரம் இருக்கணும்லே? ஏவாரியாயிருந்தாலும் ராமசாமிகிட்டே அந்த ஈரம் இருக்குல்லே..." என்று தேவர் சத்தம் உயர்த்திக் கேட்கிறபோது, அவரது நெஞ்சு உடைந்து, சத்தம் நெகிழ்ந்து கரகரத்துவிடும். கண்ணோரங்களில் மனநெகிழ்வு நீர்த்துளியாய் முகம் காட்டும். தார்ப்பாய்ச்சி வேட்டி கட்டிய வெற்றுடம்பில் ரோமங்கள் சிலிர்த்து அடங்குகிற உணர்ச்சிப் பரவசம் மின்னி மறையும்.

மற்ற கடைகளில் மூட்டைகளை இறக்கிப் போட்ட கையோடு வாடகையைக் கணக்குப் பார்ப்பார். கசறுவார். 'அம்புட்டு இம்புட்டு' என்று அழிச்சாட்டியம் பண்ணுவார்.

"இப்படித்தான் ராமசாமி கடையிலேயும் செய்வீரா?"

"அது கதையே வேற. நீ ஒங்கணக்கைப் பாரு" என்பார் கட்டன்ரைட்டாக.

ராமசாமி கடைக்குப் போனால்... நிஜமாகவே கதை வேறுதான். மூட்டைகளை இறக்குவார். பாரக்கயிற்றைச் சுருட்டுவார். அப்போதே ராமசாமி கலர் உடைத்துக் கொடுப்பான்.

"குடிங்க அண்ணாச்சி...".

"ம்..."

"இந்தாங்க. வாடகை ரூவா"

"சரி"

அப்படியே சுருட்டிய நிலையில் மடிக்குள் சொருகுவார்.

"எம்புட்டுன்னு எண்ணிப் பாருங்க"

"என்னத்துக்கு அதெல்லாம்?"

கணக்கே பார்க்கமாட்டார். கணக்குப் பார்ப்பது அவன் மனசை இழிவுபடுத்துவது போல், அந்த உறவைக் காறித்துப்புவது போல. அப்படித்தான் தேவர் நினைப்பார்.

அது மட்டுமல்ல... அந்தக் கடையே தன் கடை போல நினைப்பார். ஊருக்குச் சாமி கும்பிட வெளியூர்க் கூட்டம் வரும். அதை நைஸ் பண்ணிப் பேசி, ராமசாமி கடைக்கு கொண்டு வந்துவிடுவார், சாமான்கள் வாங்க.

கல்யாணம், சடங்கு போன்ற நல்லது நடத்துகிற குடும்பத்தாட்களிடமும் ராமசாமி பெருமை பேசி, குழையடித்து... ராமசாமி கடையிலேயே சரக்கு வாங்கி விடச்செய்வார். மூட்டைகளைத் தூக்கிப் போடுவது போன்ற முரட்டு வேலைகளில் கணக்கு வழக்கில்லாமல் உதவி செய்வார்.

இவரது சொந்தக்காரர்கள் தேவரை ரொம்ப இளப்பமாய் நினைத்துக் கேலி பண்ணுவார்கள்.

"இந்தா, ஒனக்கென்ன கோட்டியா? இப்படி ராமசாமி கிறுக்குப் பிடிச்சுப் போய் திரியுதியே, என்ன சோலிக்கு? கடைவெச்சுக் கொள்ளையடிக்கிற ஏவாரி. அவனுக்கு நீயென்ன சப்போர்ட்டு?"

அவர்களை அலட்சியமாய்ப் பார்ப்பார். கிணற்றுத் தவளைகளாய்க் கிடந்து பழமையில் ஊறிக் கிடக்கிறீர்களே... என்கிற பரிகாசத் தொனியில் பார்ப்பார். அதே பரிகாசத்தோடு ஒரு சிரிப்பு வேறு.

"அண்ணன் தம்பிகளுக்குள்ளேயே ஆயிரம் சண்டைச் சத்தம், பங்காளிக் காய்ச்சல். வெட்டுக்குத்து வெவகாரங்க. இப்பேர்ப்பட்ட ஒலகத்துலே ஒத்துமையும் பாசமும் எங்கிட்டு இருந்து வந்துரும்? சொல்லுங்க" என்று ஆவேசமாய் கேள்வி கேட்கிற தேவர், சட்டென்று குரலை மிருதுவாக்கித் தணிந்த கனிவோடு சொல்வார்.

"அவன் ஏவாரிதான். ஆனா, கணக்குப் பாக்காத பாசக்காரன். மனுசனை மனுசனா மதிக்கிற மனுசன். அதுதானய்யா முக்கியம்.

பெருசா பேச வந்துட்டாக... போங்கய்யா" என்று பரிகாச உச்சமான சிரிப்போடு முடிப்பார்.

அப்படிச் சொல்கிறபோது அவரது நெஞ்சு ரொம்பக் கம்பீரமாய் நிமிரும். வெற்றிலைக் காவியேறிய உதடுகளில் பெருமிதப் புன்னகை ஒளிவீசும். கண்களில் ஒரு புதிய உலகை – உறவைக் கண்டுவிட்ட பூரிப்பு....

எல்லாவற்றையும் பொய்யாக்கி விட்டானே பாவி ராமசாமி... இதை நினைக்க நினைக்க வண்டிக்காரத் தேவருக்குள் பூ முள்ளின் நறுக், நறுக்.

வண்டி சத்திரப்பட்டிக்கு வந்தது. வழக்கம்போல மாடுகளே ஓரங்கட்டி நின்றன. தேவருக்கு மனநிலை சரியில்லை. டீ குடிக்க விருப்பமில்லை.

வலத்து மாட்டைச் சுண்டிப் பிடித்து இடத்து மாட்டைப் பத்தினார். மாடுகள் புரியா தன்மையோடு வாலைச் சுழற்றிக் கொண்டு அரை மனசாய்த் தார் ரோட்டில் கால் வைத்து நடந்தன. ராவுத்தர் கடையைத் தாண்டி வண்டிப் பைதாக்கள் நெறு நெறுப்பாய் உருண்டன.

சரக்குகளையெல்லாம் வாங்கி முடித்து கணக்கு வழக்குகளைக் கண்டுகழித்து கச்சாத்துச் சிட்டைகளைத் தேவரிடம் ஒப்படைத்து விட்டு ராமசாமி பஸ் ஸ்டாண்டுக்குப் போய்விட்டான்... நாலு மணி பஸ்ஸுக்கு.

ராமசாமி போன பிறகு கொஞ்ச நேரம் கழித்துத்தான் தேவர் தேடிப் பார்த்தார். பருத்தி விதை மூட்டைகளுக்கான கச்சாத்துச் சிட்டை இல்லை. பச்சை மையில் அச்சடித்த பில்தான் விதைக்கடை பில்.

"அட இழவே. சிட்டை இல்லாம வெதை மூட்டைகளைத் தூக்க விடமாட்டானே வெதைக் கடைக்காரன். இப்ப என்ன செய்ய?" என்று ஒரேயடியாகப் பரபரத்தார். வேறு வழியில்லை. லொக் லொக்கென்று ஓட்டமும் நடையுமாய் பஸ் ஸ்டாண்டை நோக்கிப் பாய்ந்தார். சந்தைக் கூட்டம். கூடுதலான ஜனசந்தடி. கடந்து போவதே பெரும்பாடு.

பஸ் புறப்படுவதற்குள் போய் ராமசாமியைப் பிடிச்சாகணுமே. நடையை எட்டிப் போட்டார். தார்ப்பாய்ச்சிய வேட்டி. தலையில் வட்டக்கட்டாகத் துண்டு. வெற்றுடம்பில் வியர்வை வரிகள். தோளிலும் முதுகிலும் அப்பிக் கிடக்கிற சாக்குத் தூசிகளான மெல்லிய சணல் புள்ளிகள்.

நல்லவேளை... அந்த பஸ் நிற்கிறது. உள்ளே நிறைய ஆட்கள். கண்டக்டர் டிக்கெட் அடித்துக் கொண்டிருந்தார். பஸ்ஸுக்குள் ஏறிப் பார்த்தார். ராமசாமி மண்டையைக் காணோம்.

பஸ்ஸுக்கு வலதுபுறம் ராமசாமி பேசுகிற சத்தம். இறங்கி பஸ்ஸைச் சுற்றிப் போனபோது...

வண்டிக்காரத் தேவரைப் பற்றிய பேச்சு. சட்டென்று இவருள் ஒரு நிதானம். உள்ளுக்குள் ஆர்வக் குறுகுறுப்பு... நின்று உன்னிப்பானார்.

"வண்டிக்காரத் தேவருக்கு நீ பாட்டுக்குச் செலவு பண்ணுதே... காபி, வெத்தலை, மீனோட சாப்பாடுன்னு திகிடு முகிடா செலவு பண்ணுதே... நாம பண்ற சில்லறை ஏவாரத்துக்கு இந்தச் செலவெல்லாம் கட்டுப்படியாகுமா? ரொம்ப இளிச்சவாயத்தனமா இருக்கீயோன்னு நெனைக்கேன்..."

இது மேலத்தெரு கடைக்காரன். அவருக்குள் பக் பக்கென்கிற ஆவல் பரபரப்பு. என்ன பதில் சொல்வானோ என்கிற பதைப்பு...

"யாருக்கு எப்படியோ... தேவரு என்னைப் பொறுத்தவரைக்கும் தங்கமான மனுசரு. அவரு வண்டி போடலேன்னா... நாம சரக்குகளைக் கடைக்குக் கொண்டு போக முடியுமா? ரொம்பச் சிரமமாப் போயிருமே."

"அதுக்காக... இம்புட்டுச் செலவா? கட்டுப்படியாகுமா?"

"கட்டுப்படியாகாம போவாது. நானும் நீ நெனைக்கிற மாதிரி இளிச்சவாயன் கிடையாது. காரியத்தோடதான் நா பழக்கவழக்கம் வெச்சிருக்கேன்"

"என்ன காரியம்? என்ன கணக்கு?"

"நா போடுற மூட்டை முடிச்சுகளுக்குத் தூக்குக் கூலி கொடுத்து வண்டிக்குக் கொண்ணாந்தா எம்புட்டுச் செலவாகும்? தேவருக்குச் செலவழிக்கிறதை விட கூலி ரொம்பப் போயிரும்லே?"

"அப்போ... ஒங்குடுமி ஆடுதுன்னா சும்மா ஆடலை? பாசத்துலே ஆடலே? காரியத்தோட, கணக்கோடதான் ஆடுது?"

"நா ஒண்ணும் கூறு கெட்டவனில்லை... விவரமானவன்தான்" என்கிற சுயதம்பட்டமாய் ராமசாமி சொன்ன சொற்கள்... தேவருக்குள் நறுக் நறுக்கென்று இறங்கின. இண்ட முள் செடியில் கால் வைத்துவிட்ட மாதிரி திடுக்கிடலாய் வலியை உணர்ந்தார்.

பாசமும் உறவுமாய், குழைந்து கனிந்து அவருள் பிரம்மாண்டமாய்க் கொலுவிருந்த ஒரு மாய பிம்பம் உடைந்து... நொறுங்கி... தூசிக்காடாய்...

மனுசப் பயலோட மறுபக்கம் இம்புட்டு இருட்டா? இருண்ட வனமா? நரிகளும் ஒநாய்களும், காகங்களும் ஓலமிடுகிற தந்திர பூமியா? மனுசன் இம்புட்டு சூட்சுமமா? ச்சே!

அவரது முட்டாள்தனமே அவரைப் பரிகசிக்கிற மாதிரி... அவரது அறியாமையே அவர் முன் நின்று கொண்டு திங்குபுங் கென்று ஆடுகிற மாதிரி... அவரே அவரை உணர்ந்த வேதனை உணர்ச்சி.

ஒரு சின்னப் பயலைப் பத்திக்கூட எடை போடத் தெரியாத கோணத்தரராசா இருந்துட்டமே...' என்கிற சுய பச்சாதாபம்.

எப்படித்தான் போய் ராமசாமியைப் பார்த்தாரோ... சிட்டையை வாங்கினாரோ... அவருக்கே தெரியாது. அவர் முகத்தில் ஒரு சவக்களை.

கணக்குக்குள் பிடிபடாத மாய உறவு என்று நம்பியிருந்தாரே... அவன் கணக்கோடுதான் இருந்திருக்கிறான். லாப நஷ்டம் கூட்டி பார்க்கிற தன்மைக்கேற்ற உறவாகத்தான் வைத்திருக்கிறான்... கணக்குப் பார்க்கிற இடத்தில் உறவுக்கு என்ன அர்த்தம்?

நாம்தான் பேய்த்தனமா... இளிச்சவாய் தனமாய் இருந்திருக்கிறோம். கணக்கு வழக்குப் பார்க்காத பாசத்தோடு பாடுபட்டிருக்கிறோம். உறவு உறவு என்று ஏமாளித்தனமாய் உருகி வழிந்திருக்கிறோம்... அடச்சே!

கீழராஜகுலராமனை வண்டி தாண்டிவிட்டது. அந்த இருட்டிலும் தெரிகிற சிமிண்டாலைக் குழாய். பிரம்மாண்ட ராட்சஸ உலக்கையாய் வானைத் தொடுகிற குழாயில் புகைத் தொடர்கள். மேகச்சங்கிலிக் கோர்வையாய்ப் புகைப்பயணம். நட்சத்திர வெளிச்சத்தில் கரும்பழுப்பாய் தெரிகிறது. கன்னி மூலைக்காற்று, புகையை வடகிழக்காய் தள்ளுகிறது.

தேவர் ஆழ்ந்த பெருமூச்சு விட்டார். மனசின் ரணத்தை உரசிவந்த பெருமூச்சு. பூ முள்ளின் நமைச்சல். சள்ளை பிடித்த அதே நினைப்பு.

'சரி... விட்டுத்தள்ளு... இல்லைன்னு தெளிவாயிருச்சு. இனி உறவு, பாசம்னு நெனைக்குறதுலே என்ன அர்த்தம். இருக்கு? ரெண்டு கை தட்டுனாத்தானே சத்தம்? ஒரு கையிலே என்ன வரும்? அவன்

கணக்கைப் பார்த்தான்னா.... நாமளும் பாத்துட்டுப் போக வேண்டியதுதான். தாயும் பிள்ளையும்னாலும் வாயும் வயிறும் வேற வேறன்னு சும்மாவா சொன்னாக? அனுபவிச்சுத்தான் சொலவடை சொல்லியிருக்காக... நாம அனுபவிச்சுத் தெரிஞ்சுக்கிட அம்பத்தஞ்சு வயசாயிருக்கு...

அவரே அவருக்குள், ஆறுதலாய் நினைத்துக் கொண்டார். அதையும் மீறிக் கொண்டு முகம் காட்டுகிற கோபம்.

ரைட்... நாமளும் கணக்குப் பாத்துர வேண்டியதுதான். மனசுக்கு மனசு... பாசத்துக்குப் பாசம்... கணக்குக்கு கணக்கு. அவன் விதைச்சதை அவனே அறுத்துக்கிடட்டும்.

மூட்டைகளை இறக்கி முடித்துவிட்டு, என்றைக்குமில்லாத புதிசாய் "கணக்குப் பாரு" என்று சொன்னால் அவன் முகம் எப்படிப் போகும்? பேயறைஞ்ச முகமாய் எப்படி மாறும்? அதை நினைக்க நினைக்க அவருக்குள் திருப்தி.

கணக்குப் பார்க்கிற அற்பத்தனத்தைப் பழிவாங்கி விட்ட நிம்மதி. மனிதன் போல வேஷம் போட்ட வியாபாரிக் குணத்தைக் குத்திக் காட்டிவிட்ட திருப்தி.

டீ, காபி வாங்கித் தந்தால் வேண்டாம் என்று சொல்லிவிட வேண்டியதுதான். சிங்கவிலாஸ் சாப்பாடும் வேண்டாம்... அவனும் தூக்குக்கூலி கொடுத்து மூட்டைகளை வண்டிக்குக் கொண்டு வரட்டும். அவனுக்கென்ன தனிச் சலுகை? ஏவாரிக்கு என்னத்துக்குப் பாசம்? கணக்கைக் கட்டிக்கிட்டு அவனே மாரடிக்கட்டும்...

கோபம் கோபமாகச் சீறுகிற நினைவுகள்... மாறி மாறி நினைத்து... நினைத்து... மனசுக்குள்ளேயே பழி வாங்குவதில் ஒரு சந்தோஷம்... ஆறுதல்.

எல்லாக் கடைகளிலும் பாரம் இறக்கிப் போட்டுவிட்டு ராமசாமி கடைக்கு வண்டி வந்து சேர்ந்தது.

தேவரைப் பார்த்தவுடன் கடையை விட்டு வெளியே வந்த ராமசாமியிடம் வழக்கமான மலர்ச்சி இல்லை.

"வண்டி வந்துருச்சா?" என்று கேட்கிற துள்ளல் இல்லை... அவன் முகம் வாடிக் கிடந்தது.

அவன் பேசியதை இவர் கேட்டுவிட்டார் என்பதை அவனும் உணர்ந்து கொண்டானோ...? வாடட்டும். உப்புத் தின்றவன் தண்ணீர் குடிச்சாகணும். மூட்டைகளை நிமிர்த்தி வண்டி

நுனியில் நிறுத்தினார். முதுகைக் கொடுத்து ஏந்தி இழுத்தார். குவிண்டால் மூட்டையைத் திணுங்காமல் சுமந்து கொண்டு போய், உரிய இடத்தில் போட்டார்.

ஒன்றும் பேச்சில்லை. மன ஆழத்தின் உளைச்சல் மௌனமாய் அங்கே கால் நீட்டிப் படுத்திருந்தது.

பாரம் இறங்கி முடித்தவுடன் கலர் உடைத்துக் கொடுப்பான். மூஞ்சியில் அடித்த மாதிரி வேண்டாம் என்று மறுத்துவிட வேண்டும். அதில் வைராக்கியமாய் இருந்தார். அந்த மாற்றத் திலேயே இவரது கோபத்தை அவன் புரிந்து கொள்ள வேண்டும்.

அரிசி மூட்டைகள் இறக்கிய பிறகு, வெல்ல மூட்டைகள், அப்புறம் விதை மூட்டைகள்...

கடை வாசலில் ராமசாமி மகனின் சிணுங்கல்.

"ஸ்கூலுக்கு நேரமாச்சுப்பா... நோட்டு வேணும்பா"

"அம்மாகிட்டே வாங்கிக்கடா..."

"நீங்க சொன்னாத்தான் தருவாகளாம்பா"

"குடுத்துரம்மா... நோட்டைக் குடுத்துட்டு வீட்டுச் செலவுன்னு ஒரு லிஸ்ட் இருக்கே. அதுலே கணக்கை எழுதி வெச்சிரு..."

தேவர் அதிர்ந்து போனார். பெற்ற பிள்ளைக்கு நோட்டு கொடுத்தால்... அதற்கும் கணக்கா? வீட்டுக்கு எடுக்கிற சாமான் களுக்கும் தனிக்கணக்கா?

விதை மூட்டைக்கு முதுகைக் கொடுத்துக்கொண்டே ராமசாமியைப் பார்த்தார்.

இவன்... மனுசன்தான். ஏவாரி மனுசன். ஏவாரிக் கொணம் மட்டுமில்லே, அதோட சேர்ந்து மனுசக் கொணமும் உள்ளவன். வண்டிக்காரனை மனுசனா நெனக்குற மனுசன்.

"யாருக்கு எப்படியோ... தேவரு என்னைப் பொறுத்தவரைக்கும் தங்கமான மனுசரு..." அவன் சொன்ன குரல்... தங்கத்தின் அருமையை உணர்ந்திருக்கிறவன்தான்.

அவருள் நெருக்கடியான ஊசலாட்டம். சட்டென்று முடிவுக்கு வர முடியவில்லை. ஆனால், சட்டென்று முடிவுக்கு வந்தாக வேண்டிய நிலை.

கணக்கை நம்பிப் பொழைக்குற ஏவாரிப் பொழைப்பு அவன் தொழில். அவன் இப்படித்தான் இருப்பான். இருக்க முடியும்.

அவனை மாதிரியே நாமும் இருந்தா எப்படி? உழைப்பை நம்பி வாழ்றவனும், கணக்கை நம்பிப் பொழைக்கிறவனும் சமமா? ஒண்ணா? உழைப்பு சூரியனைப் போல நிரந்தரமானது. கணக்கு நிலாவைப் போல தேயும்... மறையும்...

வயசுலே மட்டுமில்லே... தொழில்லேயும் நாம அவனை விட ஒசந்துருக்கோம். அந்த ஒசத்தி, நடத்தயிலே தெரியவேண்டாமா...?

அவருள் ஆழம் ஆழமாய் ஓடுகிற நினைவுகள். ஆணி வேரைப் போல் உள் பாய்ந்து வலிமை சேர்க்கிற நினைவுகள்.

மூட்டைகளை இறக்கி முடித்துவிட்டு... பாரக் கயிற்றைச் சுருட்டினார் வண்டிக்காரத் தேவர். கல்ரை உடைத்துக் கொண்டு வந்தான் ராமசாமி. அவனுக்குள் சஞ்சலம்... வாடிக்கிடக்கிற முகம்... குற்ற உணர்வில் நிலையற்றுப் பாய்கிற பார்வை.

வாங்கிக் கொண்டார் தேவர்... கலருக்குள் வளர்கிற வெண்ணுரை... நுரையைப் பார்த்த கண்ணோடு ஒரு குளிர்ச்சியில் மிருதுவோடு அவனைப் பார்த்தார்.

அவன் கண்களிலும் அதே குளிர்ச்சி. மனுசத்துவ உணர்வின் மலர்ச்சி. வானுக்கும் பூமிக்குமாய் விஸ்வரூபமாய் தெரிந்தார் வண்டிக்காரத் தேவர் உழைப்பைப் போல. அவன் பாச நெகிழ்வோடு தேவரைப் பார்த்தான்.

*ஆனந்த விகடன் – அக்டோபர் 1993*

# காட்டு ருசி

*அன்றைக்குக் கடைசி ஆடி. ஊர் முழுக்க தோசை வாசனை கம்ம்மென்று முறுகல் மணம். ஆட்டுரல் களில் சட்னி ஆட்டுகிற கடகடா சப்தம்.*

*வழக்கத்துக்கு மாறாக... காலில் சக்கரம் கட்டிக் கொண்டு பறக்கிறான். சீனிவாசன். ஒரே பரபரப்பு. அங்கேயும் இங்கேயுமாய்ப் பாய்கிறான். ஆளைக் கையில் பிடிக்க முடியவில்லை. மூக்கின் மேல் நின்ற கோபம், நாலா பக்கமும் சிதறித் தெறிக்கிறது. இன்னார் மீது என்று கணக்கில்லை. சகட்டு மேனிக்கு 'சள் சள்'ளென்று சிறுகிறான்.*

*மண்ணடிக்க டக்கர் போயிருக்கிறது. வேலை செய்யாமல் கூலியாட்கள் ஏய்த்து விடுவார்களே என்கிற பதற்றம், அவனுக்குள். சம்பளம் வாங்கத் தீயாய் வருகிற ஆட்கள். பாடுபடாமல் தேங்கின தண்ணீராகத் தேய்ந்து போகிற வஞ்சகம். ச்சே! நினைத்தாலே மனசு கிடந்து கொதிக்கிறது.*

*என்றைக்குமில்லாத அதிசயமாக விடிவதற்கு முன்பே விழித்துவிட்டான் சீனிவாசன். டீக்கடை போய், ஓடைக்குப் போய், பல்லையும் தேய்த்துவிட்டு –*

*"என்ன ரெடியா?" என்று காலில் கொதி நீரை ஊற்றிக் கொண்டு நிற்கிறான்.*

*வேணித்தாய்க்கு எரிச்சலாக இருக்கிறது.*

... வழக்கம் இப்படியல்ல. இந்நேரம் படுத்துக் கிடப்பார். நீட்டி நிமிர்ந்து எழுந்து டீக்கடைக்குப் போனால், ரெண்டு டீக் கடைகளிலும் டீ குடித்து, பேப்பர் பார்த்து, ஊர்க்கதைகள் பேசி...

ஆள் தட்டுப்படவே மாட்டார், ஒன்பது மணி வரைக்கும்.

இன்றைக்கு என்ன அதிசயமோ... சரியாய் விடிவதற்குள் 'ரெடியா' என்கிறான். என்ன கூத்தோ...? கேட்க முடியாது. கேட்டால், வள்ளென்று விழுவான்.

இப்போதுதான் முற்றம் தெளித்திருக்கிறாள். வெல்லம், தேயிலை போட்டு, காப்பி போட்டுவிட்டு... அடுப்பில் இட்லிச் சட்டியை தூக்கி வைத்திருக்கிறாள்.

வழக்கம் போல... சோறு என்றாலாவது, சட்டு புட்டென்று வேலை முடியும். கடைசி ஆடி. ஊரெல்லாம் தோசை விசேஷம்.

தோசை என்றாலாவது... சட்டி காய்ந்தவுடன் மாவை சர்ர் சர்ரென்று ஊற்றிப் புரட்டி எடுத்து விடலாம்.

இந்த ராசாவுக்குத் தோசை என்றால் தொண்டையில் இறங்காது. ஆவியே ஆகாது என்பார். தோசையில் எண்ணெய் வாடை வருமாம். சாப்பிட்டால்... நாவறட்சி எடுக்குமாம். நெஞ்சுக் கரிப்பு ஆளைக் கொல்லும் என்று பயப்படுவார். தோசை என்றால், மூஞ்சி முந்நூறு கோணலாகும்.

இட்லிக்கு மாவை ஊற்றி வைத்தால்... வெந்து முடிய ரொம்ப நேரமாகும். சொய்ங்யென்று விசிலடிக்கிற புகைச் சிறல், வேணித்தாய்க்கு எரிச்சல் எரிச்சலாய் வரும்.

அவசர அவசரமாய் அம்மியில் சட்னிக்கு அரைத்தாள்.

சீனிவாசன் பறந்து கொண்டு வருகிறான்.

"சாப்புடலாமா?"

"சித்தெ பொறுங்க"

"டக்கர் போயிருச்சு. மண்ணடிக்க..."

"ஆளுக போய்ட்டாகளா?"

"ம்"

"மண்ணை புஞ்சைக்குள்ளே தட்டவா, வெளியே தட்டவா?"

"புஞ்சைக்குள்ளேதான்"

"சக்கரை தேயிலை வாங்கிக் குடுத்தனுப்பிச்சிட்டீகளா?"

"ம். தண்ணிக்கொடம். காப்பிச்சட்டி. கிளாஸ் எல்லாம் குடுத்தனுப்பியாச்சு"

"கலிங்கப்பட்டி கம்மாயிலே தண்ணில்லியா?"

"ம்"

"பாதை நல்லாயிருக்கா?"

"என்ன... தொணதொணன்னு பேசியே உயிரை வாங்குறே?"

சிரித்தாள் வேணி. காத்திருத்தலைத் தோன்றவிடாமல் மறக்கடிக்கத்தான் பேச்சை ரப்பராய் இழுத்தாள்.

"என்ன சிரிப்பாணி?"

"கேக்குறதுமா குத்தம்?"

"அப்படியில்லே. டக்கருக்கு நானூத்தைம்பது ரூவா வாடகை. கூலியாளுக்கு எறநூத்தம்பது. இம்புட்டு செலவழிச்சு மண்ணடிக்கிறப்ப. நா போய் நிக்க வேண்டாமா? ரெண்டு நடை மண்ணு கொறைஞ்சிட்டாக்கூட... நூற்றி நாப்பது வட்டம் வரும்".

"இப்ப யாரு... உங்களைப் போக வேண்டாம்னது?"

"சாப்புடாம எப்படிப் போக?"

"உக்காருங்க. இதோ – சட்னியைத் தாளிச்சிடுறேன்"

'அந்தா. இந்தா'வென்று கால்மணி நேரம் ஆகிவிட்டது.

முள்ளின் மேல் நிற்பவனைப்போல் பொறுமையற்று நெளிந்து கொண்டு உட்கார்ந்திருக்கிற சீனிவாசன் முன்னால்.... வட்டில். ஆவிபறக்க இட்லிகள். கருகிப்போன கடுகும். கருவேப்பிலையும் சட்னிக்கு ஒரு லட்சணத்தையும் வாசத்தையும் தந்தது.

பறக்கப் பறக்க சாப்பிடுகிறான்.

"சட்னி இன்னைக்கு அம்சமா அமைஞ்சிருக்கு. தாளிச்ச வாசம் ஆளைத் தூக்குது".

நிலாக்குளிர்ச்சியான அந்தப் பனிப் பூ வார்த்தையில் வேணியின் எரிச்சல். கோபம் எல்லாம் மாயமாகி மறைகிறது. வியர்வைக்குரிய கிரீடம் கிட்டிவிட்ட மனத்ததும்பல் அவளுக்கு. அவள் குரலில் ஒரு மென்மையும் குழைவும்...

"நல்லாவாயிருக்கு? அவசர அவசரமா அரைச்சேன்... உப்புக்கூடப் பாக்கலே".

"கச்சிதமாயிருக்கு வேணி. நெசந்தா."

"இன்னும் ரெண்டு இட்லி போட்டுக்கங்க".

அந்தக் கணத்தில்

அவள் அவளாகியிருக்கிறாள். உள்ளும் புறமும் மிருதுவாகி, அன்பால் நெஞ்சு ததும்ப.... புருஷனை புதிய வாஞ்சையோடு பார்க்கிறாள். உள்ளுக்குள் உவகைப் பெருக்கு. பீறிடுகிற பரிவுணர்ச்சி. கண்ணோரங்களில் நீர்த்துளிகளாய் மனப்பரவசம்.

காய்ந்து கனல் பறக்கிற லௌகிக வாழ்வை ஜீவிதப் படுத்துகிற மனச்சங்கமம். மானுட ஈரத்தில் வேர் விட்டு உயிர் வளர்கிற – முகம் கழுவிக் கொள்கிற – புது வாழ்க்கையின் கணங்கள்.

கையை கழுவினான். சட்டையை மாட்டிக்கொண்டான். சிகரெட், தீப்பெட்டி, செருப்பு, பரபரப்பு,

"வேணி, நீ புஞ்சைக்குப் போவணுமா?"

"மேலப் புஞ்சையிலே பருத்தி வெடிச்சு பூத்துக்கெடக்கு".

"போ, சரி.... மதியத்துக்கு?"

"கம்மாயிலேதானே இருப்பீக?"

"ம். சின்னவன் கிட்டே குடுத்து.தெக்குப்புஞ்சைக்கு அனுப்பிவை. மண்ணைத் தட்ட வர்ற டக்கர்லே கம்மாய்க்கு வந்துருவான்".

"ஆட்டும்..."

"என்ன குடுத்துவிடப் போறே மதியம்? தோசை தானே சுடுவே?"

"உங்களுக்குத்தான் தோசை ஒவ்வாதுல்லே? அவிக்கிற இட்லியிலே மிச்சம் வச்சிருந்து... புதுசட்னியோட குடுத்துவுடட்டா?"

"ம்."

"ஆறின இட்லின்னு கோவிக்கக்கூடாது?"

"ம்"

அவன் முகத்தில் மெல்லிய பூஞ் சிரிப்பு. உள்ளுக்குள் பௌர்ணமி வெளிச்ச மகிழ்ச்சி. இங்கிதம் அறிந்துபேசுகிற வேணியின் மன அண்மையில் விளைந்த தன்மை.

தெருவில் இறங்கினான்.

சீனிவாசன் ஓடியாடிப் பாடுபடுகிறவனில்லை. ப்ளஸ் டூ முடித்து. கல்லூரியிலும் ரெண்டு வருஷம் குப்பை கொட்டினான். பாதியில் படிப்பை நிறுத்திவிட்டு, விவசாயத்தைக் கவனிக்க வேண்டிய நிர்ப்பந்தம்.

நாலா பக்கமும் காடுகரைகள். இறவைத்தோட்டங்கள், மானாவாரிக் கரிசல்காடு. கண்மாய்ப் பாசனத்தில் கொஞ்சம் வயல்காடு. பெரிய பண்ணைப் பிரபு கிடையாது. மத்திய தர விவசாயி.

வரவு செலவு வருஷா வருஷம் இழுபறிதான். விளைச்சல் சரியாக இருக்காது. விளைந்த வருஷத்தில் விலை கிடைக்காது. ரெண்டும் கைகூடி வருகிற மாதிரியிருந்தால்.... கல் மழை மாதிரி இயற்கை உற்பாதம் வந்து நாசக்காடு பண்ணிவிடும்.

விரல் நகத்தில் அழுக்குப்படாமல் மேற்பார்வை பார்ப்பான். உடலுழைப்புக்கு இயலாது. சில்லான் மாதிரி ஒல்லியான உடம்பு. மம்பட்டி பிடித்து ஒரு வாய்க்கால் வரப்பைக்கூட செதுக்க முடியாது.

எல்லாவற்றுக்கும் சம்பள ஆள்தான். தண்ணீர் பாய்ச்ச, பாத்திகட்ட, மூலை முக்கு கொத்த.... எல்லாமே கூலியாட்கள்தான்.

வேணித்தாய் ஓயாமல் பொருமுவாள்.

"வெளையுற வெள்ளாமை சம்பளம் குடுத்தே சாம்பலாயிரும்".

"அதுக்கு என்ன செய்யச்சொல்றே ?"

"உங்களாலே தண்ணி பாய்ச்சவுமா முடியாது பொம்பளைகூட பாய்ச்சுதாளே?"

"நமக்கு அதெல்லாம் சரிப்பட்டுவராது".

"படிப்பு படிச்சவுகளாம்! படிச்சிருந்தா... மம்பட்டியை தொடக்கூடாதுன்னு சட்டமா? கிரீடம் எறங்கிருமாக்கும்?"

"நொய் நொய்ன்னு நச்சரியாதே..."

"வேர்வை சிந்தப் பாடுபட்டாத்தான்... அதோட அருமையும் அழகும் தெரியும்."

"ஒழைக்கிறதுலே என்ன அழகு இருக்கு?"

"ஒழைச்சுப் பாத்தாத் தெரியும். பசியெடுக்கும். கல்லை முழுங்கினாலும் செமிக்கும். ஒடம்பு வ்லுப்படும். மனசுலே ஒரு தைர்யம் வரும். வேர்வை சிந்தி ஒழைச்சுப் பார்த்தாத்தான்... மனுசருக்கு மனுசக்குணமே வரும்."

"வேணி... அஞ்சுலே வளையாத ஒடம்பு. முப்பத்தைஞ்சுலே வளைக்கணும்னு ஆசைப்படாதே".

"இதுலே ஒரு பெருமையாக்கும்?"

விளையாட்டான வெறுப்பாக உதட்டைப் பிதுக்கினாள் வேணி. ஆனாலும் விளையாட்டல்ல. வெளிப்படுகிற ஏளனம். ரொம்ப ஆழத்திலிருந்து கூர்மையாக வருவதாய்... உணர்வான். ஆயினும் சீனிவாசன் அசையவில்லை. அப்படியேதான் இருந்தான்.

புஞ்சையில் கூலியாட்கள் பாத்தி கட்டிக்கொண்டிருந்தால்... அவன் பாட்டுக்கு, டீக்கடையில் பேப்பர் பார்த்துக் கொண்டிருப்பான். சாயங்காலம் போய்ப்பார்த்துவிட்டு வயிறெரிவான். காட்டுக்கத்தலாய்க் கத்துவான்.

"வாங்குற காசுக்கு வஞ்சகமில்லாம ஒழைக்க வேண்டாம்? ஆள் இருந்தா, ஒரு மாதிரி, இல்லேன்னா ஒரு மாதிரி. மோசக்காரப் பாவிக. பாத்தி கட்டியிருக்குற லட்சணமா, இது? வரட்டும், பேசிக்கிடுதேன்."

சம்பளம் வாங்க வருகிறவர்களிடம் ஒரே சண்டைக்காடுதான். வருஷம் பூராவும் வம்பு வழக்குதான். தகராறுகள். கூலியாட்களைக் குறை சொல்லிச்சண்டை போடுவது... அவனது சுபாவமாகிவிட்டது.

வேலைத் தளத்துக்குப் போக முடியாமலும் ஜோலிகள் வந்துவிடும். மேற்பார்வை ஜோலிகள், பேங்குக்கு நகை அடகுவைக்க, கடன் வாங்க, கொடுக்க, உரம் வாங்க... பூச்சி மருந்து வாங்க என்று ஜோலிகள்.

.... போன வருஷம் மண்ணடிக்கிறபோது இப்படித்தான். எல்லா சம்சாரிக்கும் டக்கர் பன்னிரண்டு நடைகொண்டுவந்து கொட்டியது. இவனுக்குப் பத்துநடை மட்டும்.

கேட்டால்.... கண்மாயிலிருந்து புஞ்சை ரொம்பத்தூரம் என்கிற சால்ஜாப்பு. ஏமாளியாகிப் போய்ட்டோமே என்கிற மனக்கொதிப்பு, ரொம்ப நாளைக்கிருந்தது.

இந்தத்தடவை விடக்கூடாது என்ற முடிவு. கண்மாயிலிருந்து கடைசிவரைக்கும் வேலை நடக்கிற லட்சணத்தைக் கண்காணிப்பது என்கிற வைராக்யம்.

....வந்தாயிற்று, தெற்குப் புஞ்சை. அதோ.... தூரத்தில் சிவப்பாய் வருகிற டக்கர். கோபுரங்குத்தியாய் மண். நல்ல வண்டல். புஞ்சைக்குள் ரெண்டாவது குமி தட்டி முடித்துவிட்டுத் திரும்பிய டக்கரில் ஏறிக்கொண்டான். வெறும் டிரெய்லர், லோடு இல்லாமல், வண்டி போகிற வேகத்துக்கு 'பேய்க்குதி' குதித்து அதிர்ந்தது. தடதட சத்தம் காதைக்குடைந்தது. பேய்க்கூப்பாடு.

கலிங்கப்பட்டியை தாண்டிப்போகணும். இங்கிருந்து கண்மாய் மூன்று மைல் இருக்கும். கண்மாயின் உள்வாய்ப் பகுதி முழுக்க கருவேல மரங்கள். ஒன்றையொன்று உரசிக்கொண்டு, பின்னிக்கொண்டு, அடர்த்தி என்றால் அடர்த்தி, கற்றை அடர்த்தி, ஆள்போக முடியாது.

கரையை ஒட்டிய மடைகள், மடைகள் இருக்கிற உட்பகுதிகளில் கொஞ்சதூரம் மரங்களில்லை. கன்னங்கரேலென்று இருள் மாதிரியான கரிசல் மண். ஈரல் கட்டி மாதிரி. ஆள் உயரத்திற்கு வெட்டுக் கிடங்குகள். அங்குதான் கூலியாட்கள்.

டக்கர் போய் வட்டமடித்து நின்றவுடன்....

அள்ளி வைத்திருந்த அறுபது கூடை மண்ணையும் சடபுடவென்று தூக்கித் தட்டினார்கள். அள்ளிவிட, தூக்கிவிட என்று புயல் சுறுசுறுப்பாய் வேலைகள், பரஸ்பரம் அதட்டுகிற.... ஏவுகிற... உசுப்புகிற சப்த அதிர்வுகள்.

"மம்பட்டியை ஓங்கிப்போடு!"

"கூடையை விருட்டுன்னு தூக்கிப்போடு"

"நடுவுலே எட்டி எறி"

"வெட்டி அள்ளு"

"ஏய், கையிலே உசுர் இல்லியா? ஓங்கிக் குத்து"

கண்மூடி முழிப்பதற்குள் வண்டி லோடாகிவிட, பீடியை சுண்டியெறிந்துவிட்டு டிரைவர் ஏறி.... டக்கரை உயிர்ப்பித்தார்.

வண்டி போனவுடன் அவரவர் மரத்தடிகளில் போய்ச்சாய வில்லை. மாறாக. வேலைகள். சுறுசுறுப்புக் குன்றாத வேக வேலைகள். கடப்பாறையில் ஓங்கி ஓங்கிக் குத்தி மண்ணை நெகிழ்ந்து விடுகிற இருவர். நெகிழ்ந்து புரளும் கட்டிகளை உடைத்து இழுத்துக் குவியலாக்குகிற நால்வர். அறுபது கூடைகளிலும் மண்ணை அள்ளி அடுக்குகிற நால்வர். ரெக்கை கட்டிப்பறக்கிற வேலைகள்.

வியர்வை வரி வரியாய். துடைக்க நேரமில்லை. கரிசல் மண்ணைப்போல கறுத்த உடம்புகளில் வியர்வைக் கசகசப்பில் அடை அடையாய் கரிசல் தூசி.

கருவேல மரத்தடி நிழலில் உட்கார்ந்தான், சீனிவாசன். நிழலும் பொய் நிழல், வெக்கையான நிழல், செருப்பைப்போட்டு அதன் மேல்தான் உட்கார முடிகிறது.

வெயில் என்றால் வெயில். அப்படி வெயில். தீ வெயில். நிமிர்ந்து பார்க்க முடியவில்லை. கண்ணெல்லாம் காந்துகிறது. அலை அலையாய் அந்தரத்தில் நெளிந்தோடுகிற கானற் சங்கிலிகள்.

சீனிவாசனைப் பார்த்து அன்போடு சொன்னார்கள்.

"நீங்க எதுக்கு வெயில்லே சிரழியணும்? வீட்டைப் பார்த்துப் போங்க."

"எள்ளு காஞ்சதுன்னு... கூடவே எலிப் புழுக்கையும் காய்ஞ்சதாம்..."

"அதானே? நாங்க காய்றது சரிதான். தலைவிதி. வயித்துப்பாடு. நீங்க எதுக்குக் காயணும்?"

எல்லோருக்கும் பொதுவாக மெல்லிசாகச் சிரித்துப் பதில் சொன்னான். "இல்லே... நா இருக்கேன்".

"அப்ப... இருங்க. எங்க தோள்லேயா இருக்கிக? ராசாப்போல இருங்க".

வியர்வையைப் போலவே அவர்களுக்குள் வற்றாத கேலிகள், கிண்டல்கள், பரஸ்பர நையாண்டிகள், தாறுமாறான கெட்ட வார்த்தை வசவுகள். சண்டை போடுகிற மாதிரி காட்டமான கோபப் பேச்சுகள். எல்லாமே வேடிக்கை விளையாட்டுகள்தான். அலுப்புத் தெரியாமலிருக்க உணர்ச்சி வடிகால்கள்.

பேச்சு பேச்சாக இருந்தாலும்... சீனிவாசன் அடிக்கடி மணியைப் பார்த்தான். போயிருக்கிற நடைகளை எண்ணி மனசுக்குள் கணக்குப்போட்டான். பத்து நடைபோய்ச்சேருமா என்பதே சந்தேகம்தான்.

அவர்கள் சொல்லச் சொல்லக் கேட்காமல்.... அவனும் 'கூடமாட' வேலைகள் செய்கிறான். சும்மாவே இருப்பதில் ஒரு குற்ற உணர்வு. உள் உறுத்தல். அதற்காகவே அவனும் உழைப்பில் பங்கெடுத்துக் கொண்டான்.

கடப்பாரையால் ஓங்கி ஓங்கிப் போட்டு அசைத்தான். மண் உருண்டைகளைப் பெயர்த்து உருட்டினான். கருவேலச் சல்லி வேர்களை அறுத்துக்கொண்டு மண் பெயர்கிறபோது... இவனுள் மழலைத்தனமான மகிழ்ச்சி. வெற்றி கண்ட மனப்பூரிப்பு. உழைப்பின் விளைவாய் நிகழும் மாறுதல்கள், அவனுள் ஒரு லாகிரியாய்....

நிழல் காலடியில் சுருண்டது. மதியமாகிவிட்டது. டக்கர் வந்து லோடு ஏற்றிப்போனவுடன்... லேசுமாசாய் கையைக் கழுவினர். தூக்குச்சட்டிகளை எடுத்து, வெட்ட வெயிலில் வட்டமாய் உட்கார்ந்தனர். திறந்தால்... ஒவ்வொரு சட்டியிலும் பத்துத் தோசை... பனிரெண்டு தோசை. சட்னியில் நனைந்துகிடந்தது.

சீனிவாசன் அசந்து போனான். ஒரு மனுசனுக்கு இம்புட்டுத் தோசையா! சாப்பிட முடியுமா? அதுவும் தோசையா!

இவனையும் சாப்பிடச் சொல்லி ஆள் ஆளுக்கு உபசரித்தனர். மறுத்துவிட்டான். "தோசை உடம்புக்கு ஒத்துக்காது".

அவர்கள் சாப்பிட்ட வேகம். மறைத்துக் கொள்ளாத ஆசையோடு தின்கிற ஆர்வம். ருசி பற்றிய பேச்சுக்கள், அதிலேயே கேலிகளும், கிண்டல்களும்... வாழ்வின் அவலமும்...

"தின்னுங்க தோசையை... விடாதீக".

"ஆமா... நாளையிலேருந்து புளிச்ச கஞ்சிதான்".

"ஆம்ப்பா... புரட்டாசி மொதச் சனிக்குத்தான் தோசையைக் கண்ணாலே பாக்கமுடியும் நம்மாலே!"

"கூலிக்காரன் தெனம் தோசைக்கு ஆசைப்பட முடியுமா?"

"நடக்குற காரியமா?"

"துட்டுக்காரன் வீட்லே தெனம் தெனம் கடைசி ஆடிதான். தோசை மணந்தான்".

"தோசைன்னா... தனி ருசிதான்".

"ஆசைதோசை, அப்பள வடைன்னு சும்மாவா சொல்லுதாக"

"அதுலேயும் காட்டு ருசியிருக்கே... அது ஒரு தனி ருசி".

"கஞ்சின்னா... குடிச்ச மாத்திரத்துலே பசிச்சிரும். தோசைன்னா... கம்முன்னு கெடக்கும்".

"கல்லு மாதிரி."

வினோதப் பிறவிகளைப் பார்க்கிற மாதிரி ஆச்சர்யமாய்ப் பார்த்தான், சீனிவாசன்.

"ராட்சஸங்கதான். தோசையையே இந்தப்போடு போடுறாங்களே, பாவிக, நம்மாலே ரெண்டு தோசையைக்கூட சாப்பிட முடியாதே!"

இவனுக்கு இது ரொம்பப் புதுசு. ஆச்சர்ய அனுபவம்,

இவனுக்குள் சம்மணம் போட்டு உட்கார்ந்துகொண்ட மலைப்பும், வியப்பும்.

பசி லேசாக வயிற்றைக் கிள்ளியது.

வேலையால் வழிகிற வியர்வை, சட்டையைக்கழற்றி வைத்துவிட்டான்.

தடதடவென்று பேயிரைச்சலாய்த் திரும்ப வந்த டக்கரில் சின்னவன் உட்கார்ந்திருப்பது தெரிகிறது. அவன் கையில் எவர்சில்வர் தூக்குச்சட்டி. அந்தரத்தில் ஏந்திப்பிடித்திருந்தான். குலுங்காமலிருப்பதற்காக.

கடப்பாரையை மண்ணில் குத்தி நிறுத்தினான். உள்ளங் கைகளைப் பார்த்தான். பிசுபிசுத்த கரம்பைமண். அதையும் தாண்டித்தெரிகிற கன்றிப்போன சிவப்பு. காந்தலான வலி.

குடத்துத்தண்ணீரில் கையை லேசாகக் கழுவினான்.

ஆட்கள் டக்கருக்கு நிமிஷத்தில் லோடு பண்ணி முடித்தார்கள். திரும்பிப்போன டக்கரில் கோபுரங்குத்தியாக மண். தேர் அசைந்து நகர்கிற மாதிரியான தோற்றம்.

மரத்தடிக்கு வந்தான். அடர்த்தியான பெருமூச்சு. உட்கார்ந்தான்.

"என்னடா... அம்மா குடுத்துவிட்டாளா?"

"ஆம்ப்பா.."

"நீ சாப்பிட்டுட்டியாடா?"

"சாப்ட்டுட்டேன்ப்பா?"

"இங்கேயும் சாப்புடுதியா?"

"வேண்டாம்ப்பா".

"அம்மா இட்லிதா குடுத்துவிட்டாளா?"

"இல்லேப்பா..."

சின்னவன் குரலில் மெல்லியஅச்சம். பூகம்பத்தை முன்னுணர்ந்த நடுக்கம்.

சீனிவாசனுக்குள் சுள்ளென்று வருகிற கோபம்.

"பெறகு?"

"தோசை"

சட்டென்று நிமிர்கிற சீனிவாசன். விரிகிற கண்களில் ஒருவிறைப்பு. மூக்கு நுனியில் மெல்லிய துடிப்பு. கன்னக் கதுப்புகளில் பற்கடிப்பின் படைப்பு.

"தோ..சை...யா?"

அவனுள் சண்டாளமாய்ப் பீறிட்ட வெறி. பிடிக்காது என்று தெரிந்தும் தோசை கொடுத்தனுப்பினால்... அத்தனை அலட்சியமா? சின்னவன் முகத்தில் ஒரு மிரட்சி.

"இல்லேப்பா... காலையிலே ஒரு விருந்தாளி வந்திருச்சு. எடுத்து வைச்சிருந்த இட்லியை அவுகளுக்கு அம்மா வைச்சிட்டாக..."

"ம்" அதில் ஒரு இறுக்கம்.

"தோசையை குடுத்தனுப்புறப்பவே... அம்மா சொன்னாக"

"என்னன்னு?"

"உங்கப்பா என்னை வையத்தான் போறாரு. வாங்கிக் கட்டிக்கிட வேண்டியதுதான்னு சொன்னாக".

வேணித்தாய் சொன்ன சொற்கள் குளிர் நீராய் கொதித்துக் கொண்டிருந்த அவன் மனசை ஆசுவாசப்படுத்தியது. சமாதானப்படுத்தியது.

அலட்சியம் செய்யவில்லை. மதிக்கிறாள் என்பதை உணர்ந்த மனத்திருப்தி. உள்ளே புதைந்து கிடந்த பெருந்தன்மையுணர்ச்சியை உசுப்பிவிட்டது.

பெருமூச்சோடு சட்டியைத் திறந்தான். நாலு தோசை. ஒரு கிண்ணத்தில் சட்னி, அலம்பி விழுந்து தோசை நனைந்திருந்தது.

ஒரு தோசையை மட்டும் சாப்பிடுவது என்று உள்ளுக்குள் வைராக்யமான முடிவு. சகிப்புத்தன்மையை மீறிக்கொண்டு கசிகிற முணுமுணுப்போடு சாப்பிட்டான்.

சின்னவன் அவனது அம்மாவைப்போல, ரொம்பத் துறுதுறுப்பு. ஓடியாடி வேலை செய்கிற ஆர்வம், உழைப்பின் நாட்டம் ஓடி ஓடி மண்கட்டிகளைத் தூக்கிக் கூடைகளில் வைத்தான். பெரிய பெரிய கட்டிகளாய்க்கிடந்ததை மம்பட்டியால் உடைத்தான். ஓங்கி ஓங்கிப்போட்டான்.

அந்தப் பிஞ்சுப்பயல் வேலை செய்கிற நேர்த்தியை – அழகை – சுறுசுறுப்பையே பார்த்துக் கொண்டிருந்த சீனிவாசன்.

குனிந்து தூக்குச் சட்டியைப் பார்த்தான். அதிர்ந்தே போனான்.

நாலு தோசையும் காலி. நான்தான் சாப்பிட்டேனா என்கிற மலைப்பு. ஆச்சர்யம். இன்னும்கூட ஒரு தோசை சாப்பிடலாம் போல வயிற்றுக்குள் இடம்.

எண்ணெய் வாடை ஒத்துக்கொள்ளாது. நிஜம்தான். ஆனால், இப்போது ருசியாகவே இருந்ததாய் நினைவு. எப்படி? நாலு தோசை விழுங்க முடிந்ததே... அது எப்படி?

காட்டு ருசியே தனிருசி என்பது இதுதானா? காட்டு ருசி என்றால் .... உழைப்புக்குப் பிறகு வருகிற பசியா?

"வியர்வை சிந்தப் பாடுபட்டாத்தான்... அதோட அருமையும் அழகும் தெரியும்".

"ஒழைச்சுப் பாத்தாத் தெரியும். பசியெடுக்கும். கல்லை முழுங்கினாலும் செமிக்கும்.".

வேணி அடிக்கடி சொல்கிற வேதம். நிஜம்தானோ?

ராட்சஸமாய் உழைப்பதால்தான்... இவர்கள் பத்துத்தோசை என்று ராட்சஸதனமாய்ச் சாப்பிடுகிறார்களோ...

அவனுக்குள் ஆச்சர்யமான வெளிச்சம். சுபாவத்தையே அலசிக் காயப்போடுகிற அனுபவ வெளிச்சம். உள்ளுக்குள் துருவேறிக்கிடந்த சாளரங்கள் திறந்துகொண்ட உணர்வு.

சாயங்காலம்....

சம்பளம், வாங்க வந்த கூலிக்காரர்களோடு சண்டை போடவில்லை, சீனிவாசன். அன்றைக்கு மட்டுமல்ல....

*கல்கி, 20.2.1994*

# விரல்

**வெ**ள்ளைய நாயக்கர் ஈரத்துணியாய் துவண்டு விட்டார். கிழிந்த கந்தல் துணியாக, கிறுக்குப் பிடித்த வரைப் போல காற்றில் அலைந்து கொண்டிருந்தார். ரொம்பக் கிழடு தட்டிவிட்டது. வயது அறுபதுக்கும் மேலே, சாவு வரமாட்டேங்குதே என்று ஏங்கித் தவிக்கிற அளவுக்கு நரக அவஸ்தையாகிப்போன முதுமை.

கட்டிலில் 'சட்டடியாய்' படுத்துவிட்டார்.

மல்லாக்கப் படுத்துக்கொண்டு, பானைபோல உப்பிப்போயிருந்த தன் வயிற்றையே உற்றுப்பார்த்தார்.

அப்பவும்... ஆம்பளைக்குக் கர்ப்பமாகுமா என்ற சந்தேக நினைப்பே வரவில்லை அவருக்கு. இத்தனை வயசுக்குப் பிறகு, கிழட்டுக் கழுதைக்குக் கர்ப்பம் தரித்துவிட்டதே என்ற வெட்கக்கேடுதான் அவரைப் போட்டுக் குழப்பி வாட்டி வதைத்தது. வெளியே தலைகாட்ட முடியாத கேவலக்கூத்து. பிடுங்கித் தின்கின்ற அவமான அவஸ்தை.

இன்றைக்கு என்னடாவென்றால்... கர்ப்ப வயிறு தாறுமாறாக உப்பிக்கொண்டே போகிறது: காற்றடிக்கிற கார் டியூப் மாதிரி. விம்மி விம்மி உப்புகிற - ரோமம் படர்ந்த - வயிற்றைப் பார்க்க பார்க்க அவருக்குள் 'திக், திக்'கென்கிறது. பயத்தில் மூச்சுப் பிரிய மறுக்கிறது. மனத்திணறல், கண்களில் வந்து அப்பியிருக்கிற பீதி.

வெடித்துவிடுமோ என்ற நினைப்பு. திடுதிப்பென்று! "வகுறு வெடிச்சுச் செத்த நாயக்கர்" என்று ஏழேழு தலைமுறைக்கும் நையாண்டி பண்ணிச் சிரிக்கிற கேலிக்கூத்தாகிவிடுமோ என்ற பயம்.

பக்கத்தில் யாரோ நடந்து வருகிற உணர்வு. அழுத்தமாய் தடம் பதித்து வன்ம உணர்வோடு நெருங்குகிற பாதங்கள். கடைக் கண்ணால் மெல்லப் பார்த்தார். ஓங்குதாங்கான ஆண் திரேகம். உடம்பு பூராவும் ரோம அடர்த்தி. வைரம் பாய்ந்த ஆண் உடற்கட்டு. கழுத்துக்கு மேல் மட்டும் பெண் முகம். வெறி கொண் டலைகிற பேய்க்கண்கள். பெண் முகம் முழுக்க வன்ம வெறி. விரிந்து கிடக்கிற ஈரக்கூந்தல். ஈரச் சொட்டடிக்கிற கூந்தல் நுனி.

ரோமம் அடர்ந்த ஆண் கையில் நீளமான 'வீச்சரிவாள். பளபளவென்று.

வெள்ளைய நாயக்கருக்குள் குலை நடுக்கம். வயிற்றை வெட்டி வகிர்கிற குரூரம் நிகழப் போகுதோ என்ற பதற்றம். மனசுக்குள் வியர்வை. தேகம் பூராவும் புல்லரித்தோடிப் பரவுகிற மரண பயம்.

பழிவெறி கொண்ட அந்தப் பெண் முகத்தின் பேய்க்கண்கள். தலைக்கு மேல் நிதானமாக ஓங்குகிற அரிவாள்.

"ஐயய்யோ... என்னைக் காப்பாத்த ஒரு நாதியில்லையா?" அலற நினைத்தார். வாய் வரவில்லை. நெஞ்சுக்குள் உயிர்ப்பறவையின் தவிப்பு.

அதற்குள்...

சதக்கென்று விழுகிற வெட்டு. நாலாபக்கமும் சள்ளென்று தெறிக்கிற ரத்தம். பிளந்த வயிற்றிலிருந்து பொதுக்கென்று சரிகிற ஈரக்குடல்.

'செத்தேனே' என்ற பீதியில் நனைந்த அவல நினைப்பில் சரிந்த குடலை அள்ள வலது கையால் துழாவ... அது நாலாபக்கமும் வழிந்தோடும் நீராக மாயம் காட்ட...

## 2

"**ஆ**ஹ்...ஹ்...ஹ்... ஹய்யய்யோ... ஹ்..." என்ற குழப்பமான கதறலோடு பதறிப்போய் கண்விழித்தார், வெள்ளைய நாயக்கர். சட்டென்று பதைப்போடு வயிறைப் பார்த்தார். நல்லவேளை

சேதாரமில்லாமல் ஒட்டிக் கிடந்தது. வெடித்து விடுவதைப் போல நெஞ்சு திக்திக்கென்று அடித்துக்கொண்டது. பயத்தில். உடம்பெல்லாம் வியர்த்துக்கொட்டியது. இன்னும் விலகாத மனப்படப்படப்பு. தேகமெல்லாம் நடுக்கச் சிலிர்ப்பு.

"ச்சே! எம்புட்டுப் பயங்கரமான கனா. நெனைச்சாலே குலை பதறிக்கிட்டு வருதே!" வாய்விட்டு முணுமுணுத்துக் கொண்ட வெள்ளையநாயக்கர், கண்ட கனாவை மறுபடியும் நினைத்துப் பார்க்க முயன்றார். தெளிவாகத் தெரியவில்லை. ஞாபகத்தில் பிடிபடாமல் நழுவிக் கொண்டோடியது. மங்கலாகத் தெரிந்த ஒரே காட்சி! விரிந்த ஈரக்கூந்தலோடு பழிவெறி கொண்ட ஒரு பெண் முகம்.

சுற்றுமுற்றும் பார்த்தார். கனத்த இருட்டு. சுவர்க்கோழியின் ரீங்கரிப்பு 'ஙய்ய்ய்' யென்று உள் மனசின் மூலைகளிலும் 'ஙய்ய்ய்'யென்கிற இரைச்சல். மனசாட்சியின் சுயகுரல். 'என்ன இது...? தெனந்தெனம் இப்படி கெட்ட கெட்ட கனாவா வருது? செத்துச் செத்துப் பெழைச்ச பெழைப்பாய்ப் போச்சே... இந்த நரகத்துலே கெடந்து சீரழியுறதை விட, ஒரேயடியா செத்துத் தொலைஞ்சிட்டா... நிம்மதியாய்ப் போயிடுமே.'

மன உளைச்சல். நச்சரிப்பான சுயபரிதாப நினைவுகள். காரணம்புரியாத மனப்புழுக்கம்.

மனசின் ஆழத்துக்குள் புதையுண்டு மக்கிப்போன ஞாபக நெடிகள். பழைய ஞாபகங்களின் உயிர்ப்பு. உளைச்சல். இவரது வக்ர மனசின் குரூரத்துக்கும், குரோதத்துக்கும் இரையாகி மடிந்த உயிர்களின் உக்ரப் பாய்ச்சல்கள்.

## 3

கிராமத்தில் விளிம்பைத் தழுவிக்கொண்டு வளைந்து கிடக்கிற ஓடை. நீர்ப்பிறப்பே கிடையாது. மூஞ்சி சிதைந்த பாறைக்காடு. ஓடை முழுக்க துருத்திக் கொண்டு நிற்கும் அடர்த்தியான வேலிமரக்காடு. அதைக்கடந்து...

ரெண்டு புஞ்சை தாண்டினால்... சேரி. பத்து நாற்பது கூரைக்குடிசைகள். கட்டை மண் சுவர்கள். வாலையாட்டிக் கொண்டு 'உர்ர், உர்ர்'ரென்று உலாவும் பன்றிகள். கொடிகட்டி காயப்போட்டிருக்கிற மாட்டுச் சவ்வுகளின் வீச்சம்.

வெள்ளைய நாயக்கர் மட்டுமல்ல, மொத்த ஊர்ஜனமே இதைச் 'சேரி' என்றெல்லாம் சொல்லமாட்டார்கள். 'தெற்குத் தெரு' என்பதுவும் கௌரவமாகிவிடுமே என்று நினைப்பார்கள். வாய் கூசாமல் 'சக்கிலியக்குடி' என்று மூஞ்சியில் அடித்த மாதிரிச் சொல்வார்கள்.

சக்கிலியக்குடி ஜனம் என்றாலே ஊர் ஜனத்துக்கு இளப்பம் தான். மனுச மக்களைப்போல சமதையாக நினைக்கமாட்டார்கள். பன்றிகளை நடத்துகிற மாதிரித்தான். அண்டவிடமாட்டார்கள். தூரமாய் தள்ளிவைத்தே பேச்சு, காரியம் எல்லாம்.

வெள்ளைய் நாயக்கர் இதில் பல படிகள் உசத்தி. அவருக்கு இளப்பம் மட்டுமல்ல, எரிச்சலே வரும். கிட்டத்தில் நெருங்கவிட மாட்டார். பகையாளிகளைக் கண்ட மாதிரி இவருக்குள் ஒரு குலை நடுக்கம். ரொம்பப் பயப்படுவார். அந்தப் பயம்தான், வெறுப்பாக –குரோதமாக – வெளிமுகம் காட்டும்.

அதுக்கும் காரணம் இருக்கிறது.

சேரியை ஒட்டித்தான் அவரது புஞ்சை. சக்கிலியக் குடியின் தலைமாட்டில் புஞ்சை. நற்சதுக்கமாய் நாலு குறுக்கம். கிணறு, பம்ப் ஷெட் மோட்டார், சரளைக் கற்குவியல், தோட்டத்தில் எல்லாக்காலத்திலும் வேறு வேறு வெள்ளாமைகள்.

சக்கிலியக்குடி ஜனத்தை அண்டிப் பழகவிட்டால், புஞ்சையில் அழிமானம் உண்டாகும் என்ற பயம், வெள்ளைய நாயக்கருக்கு. பயத்திலேயே அவர்களைப் பயமுறுத்தி வைப்பார். குரூரமான காரியங்களை நிறையச் செய்து அச்சுறுத்துவார்.

புஞ்சைப் பொழிகளில் விஷம் குழப்பிய கடலைப் புண்ணாக்கைப் போட்டுவைப்பார். புண்ணாக்குவாசத்தில் ஈர்க்கப்படுகிற பன்றிகள் அதைத் தின்றுவிட்டு மல்லாந்துவிடும்.

பன்றிகள் அவர்களுக்கு ஜீவனப்பிராணி. பணம் பெற்ற பன்றிகள் செத்துக்கிடக்கிற பாதரவைப் பார்த்து அந்த ஜனங்கள் வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு அழுத அழுகைகள், கதறிய கதறல்கள், கொதித்த மனசிலிருந்து பீறிட்ட சாபங்கள், வேறு என்ன செய்திட முடியும்?

பொழி ஓரங்களில் ஊன்றப்பட்டு, காய்ந்த முள் வேலியில் படர்ந்த கொடிகளில் வெளியே தொங்குகிற பீர்க்கை, சுரைக்காய்கள், பார்க்கிற யாருக்கும் எச்சில் ஊறவைக்கும். ஒரு சில சிறுமிகள் குழம்புக்கு ஆசைப்பட்டு பிடுங்கிவிடுவார்கள்.

அம்புட்டுத்தான். வெள்ளைய நாயக்கருக்கு மிளகாயை அரைத்து அப்பிய மாதிரி பற்றிக்கொண்டு வரும். விசாரித்து அந்தச் சிறுமிகளைத் தேடிக் கண்டுபிடித்து சகட்டுமேனிக்கு அடித்துப் போடுவார். தாட்சண்யமில்லாமல் பின்னி எடுத்து விடுவார். வாய் கூசாமல் மானக்கேடாகக் கேட்பார்.

"உங்க ஆத்தா எனக்கு முந்தி விரிச்சா ஒன்னைப் பெத்தா? என்ன தைரியத்துலே காய்கனி மேலே கைவைச்சே? சின்னச்சாதி நாயே."

அடிபட்ட பிள்ளைகள் பயத்தில் பாவாடையை நனைத்துவிடும். அழுகையில் துடித்தவனும், சகிக்கமாட்டாமல் சில தகப்பன் மார்கள் பணிவு குறையாமல் கொதிப்பார்கள். "மாட்டை அடிச்ச மாதிரி பச்சை மண்ணை அடிச்சிருக்கீகளே.... சாமி, இது ஞாயமா?"

"களவாண்ட சிறுக்கிக்கு முத்தமா குடுப்பாக?"

"சின்னஞ்சிறுசுக தெரிஞ்சும் தெரியாம செய்ஞ்ச தப்புக்கு, எல்லாந்தெரிஞ்ச பெரியாள் நீங்க... இம்புட்டுப் பெரிய வார்த்தை பேசலாமா... சாமி?"

"ஏலேய் சக்கிலியப் பயலே... செய்றதையும் செய்ஞ்சுட்டு பேச்சுமா பேசுறே? ஊரு சரியில்லே... அதான் இந்தக் குதி குதிக்கீக? படுவா ராஸ்கல்... இப்படிக் களவாண்டு திங்கணுமோ? நாக்கு கேக்குதோ? ஓம் பொண்டாட்டியை 'கூட்டிவிட்டு' வாங்கித் திங்கலாம்லே?"

இப்படித்தான் வெள்ளையநாயக்கர் மூர்க்கமாக நடந்து கொள்வார். நா கூசாமல் நரகல் வார்த்தைகளை வீசுவார். அந்த ஊமை மக்களின் தன்மானத்தை தாட்சண்யமில்லாமல் கிழித்துப்போட்டு, காலால் மிதிப்பார்.

அவ்வப்போது உறுத்துகிற மனசாட்சிக்கு நியாயப்படுத்தி முணுமுணுத்துக் கொள்வார். "இந்தக் கழுதைகளை இப்படி அரட்டி மிரட்டி 'வைக்கிற இடத்துலே' வைச்சாத்தான்... வசங்கியிருப்பாக. மிஞ்சவுட்டுட்டா... தோள்லே ஏறி காதைக் கடிக்க ஆரம்பிச்சுடுவாக."

## 4

இளவட்டமாக இருந்த நாளில் இவர் இம்புட்டு சாதி வித்தியாசம் பாராட்டவில்லை. தெரு ஜனத்தோடு ரொம்பச் சரசம். கூனைத்

தோல் தைக்க, செருப்பு தைக்க, களத்து வேலைக்கு ஆள் சொல்ல, என்று வருகிற நேரங்களில் மட்டுமல்ல... எல்லா நேரங்களிலும் அங்கேயே கிடையாய் கிடப்பார்.

வாலிப முறுக்கு. கறித்திமிர். வயசுக் கோளாறு. தெருப்பெண்டு களோடு இளித்து இளித்துப் பேசுவார். குழைந்து குழைந்து பழகுவார். இசகுபிசகாக நடந்து கொள்வார்.

செக்கைக் கண்டதா, சிவலிங்கம் என்று கண்டதா... தெரு நாய்? அவரும் அப்படித்தான். வயசு வரைமுறையே கிடையாது. நடு வயசைத் தாண்டிய பெண்டுகளோடு கூடச் சகவாசம். அந்தத் தெருவில் இவர் ஜாடையில் ஒன்றிரண்டு பிள்ளைகள் உண்டு என்று ஊருக்குள் ஒரு பேச்சு.

இப்படியான சமயத்தில்தான்....

வருச நாட்டிலிருந்து வாழ்க்கைப்பட்டு வந்து இருந்தது ஒரு சிட்டு. ரொம்ப இளசு. தெருவுக்குப் பொருந்தாத அழகு. வீச்சரிவாள் மாதிரி கச்சிதமான திரேகக்கட்டு, மஞ்சள் கிழங்கு நிறம். சீலைக்கட்டும், சிங்காரிப்பும் நாகரீகப் பாங்காக...

மனிதர்கிறுகிறுத்துப் போனார். ஆணியடித்த பார்வையாக பார்த்தார். நஞ்சடித்த கெண்டையாக சுற்றிச் சுற்றி வட்டமடித்தார். கிழடுகட்டைகளை கைக்குள் போட்டுக்கொண்டு தூதுவிட்டுப் பார்த்தார். கதையாகிற மாதிரித் தெரியவில்லை.

மோகத்தீ திகுதிகுவென்று தகித்து அவரைத் தாறுமாறாக்கியது.

ஒருநாள் நடுச்சாமத்தில்...

வீட்டுக்குள் நுழைந்துவிட்டார், புருஷன் ஊரில் இல்லை என்ற தைரியத்தில். இருந்திருக்கிறான். காரியம் கைமீறிப் போயிற்று.

அன்றைக்கு, அவருக்கு மூச்சுமுட்டச் 'சாப்பாடு'. வீட்டுக் குள்ளேயே போட்டு புருஷனும் பெண்டாட்டியும் சேர்ந்து 'மிதி, மிதி' என்று மிதித்து, கந்தல்கோலமாய் கிழித்துப் போட்டுவிட்டனர்.

இவரால் வாய்விட்டுக் கத்தவும் வழியில்லை. ஊமை கண்ட கனா.

வருசநாட்டுக்காரி அத்தோடு விடவில்லை. விடிந்தவுடன் ஊர் நாட்டாண்மையிடம் பஞ்சாயத்துக்கு கொண்டு வந்துவிட்டாள். வெள்ளைய நாயக்கரின் மானம் அன்றைக்குக் கன்னங்கரே லென்று கறுத்துப் போயிற்று.

'சாமி, சாமி' என்று சொல்லிக்கொண்டு, அவ்வப்போது

ரெண்டும் மூன்றுமாக ரூபாய் கறந்து கொண்டு, காலைச் சுற்றிக் கொண்டு, அந்தரங்கமாய் கிசுகிசுத்துக் கொண்டிருந்த கிழடு கட்டைகளெல்லாம் பஞ்சாயத்தில் இவருக்கு எதிராக சாட்சி சொல்ல...

மனிதர் ஆழமாய் அதிர்ந்து போய்விட்டார்.

அந்த அதிர்வே ஓர் அனுபவத் தழும்பாக... அத்தோடு சமூகக் கசடும் அவருள் ஒரு குணமாகப் படிய... அவரைச் சாதிவெறி கவ்விக்கொண்டது.

காலைப் பிடிக்கிற இதுகளை நம்பிவிடக்கூடாது. அசந்தால்... கழுத்தை பிடித்துவிடுவார்கள் என்கிற பயமே... அவருள் நிரந்தர உணர்வாக...

பயம் என்பதே ஒரு புதர்தானே! அதில் வக்ர நாகங்களும், வெறுப்பு விஷ ஜந்துகளும்தானே அடையும்!

## 5

வெள்ளைய நாயக்கருக்கு வயசு அம்பது இருக்கும். பெண் பிள்ளைகளையெல்லாம் கட்டிக்கொடுத்துவிட்டார். மகனுக்கும் கல்யாணம் 'மூய்த்து' வைத்துவிட்டார். அப்போது...

ஊருக்குள் கரண்டு வந்த புதுசு. வரிசை வரிசையாக மின்கம்பங்கள், ஆகாய வலைப்பின்னல்களாக குறுக்கு நெடுக்காக ஓடும் ஒயர்கள்.

கமலை, கூனை, உருளை எல்லாம் மூலை சேர்ந்துவிட்டன. புஞ்சைக்கு பம்ப் ஷெட் மோட்டார். அந்த இரும்பு ஜென்மம் கிணற்றுத் தண்ணீரை அள்ளி ஊற்றுகிற மாய மந்திரத்தில் ஜனங்கள் அசந்து போய் நின்றனர்.

அள்ளி ஊற்றுகிற நீரும் சாதாரண வேகமா? தலையந்து போகிற ஸ்பீடு. உருக்கி வார்த்த வெள்ளிக்கற்றையாய்...

அதில் குளிப்பது என்றால்... ஊர் ஜனத்துக்கு ஒரே குஷி. இமயமலையை எட்டிப்பிடித்த சந்தோஷம். ஆனந்தப் பரவசம்.

"மோட்டார்லே தலையை குடுத்து குளிச்சிட்டா... அந்தச் சொகமே தனிதானப்பா. ச்சே! என்ன வேகம்! சப்சப்புன்னு அறையுதே... குத்தாலமெல்லாம் பிச்சை வாங்கணும்."

ஊர் ஜனத்தின் இந்த உல்லாசப் பேச்சுக்களை சக்கிலியக்குடி

ஜனம் ஆச்சரியமாகக் கேட்பார்கள். மிட்டாய்க் கடையைப் பார்க்கும் ஏழைப் பையன்கள் மாதிரி ஏங்கித் தவித்துக் கேட்பார்கள். வேறு என்ன செய்ய?

மேல்சாதிக்காரர்களின் பம்ப்ஷெட் மோட்டாரில் போய் சக்கிலியன் குளித்துவிட முடியுமா? 'தொட்டிக்குள் இறங்கி நீர்க்கற்றையில் தலையைக் கொடுத்துவிட முடியுமா? தொலியை உரித்து உப்பு தடவி விடமாட்டார்களா... என்ன!'

அப்பத்தான்... ஒரு நாள்...

வெள்ளைய நாயக்கரின் பம்ப்ஷெட் மோட்டார் இரைச்சலுடன் இயங்கிக் கொண்டிருந்தது. வாய்க்கால் ததும்ப ஓடிய தண்ணீர், மிளகாய்த் தோட்டத்துக்குப் போய்க்கொண்டிருந்தது.

மிளகாய்ச் செடி அந்த வருஷம் திகிடு முகிடான வளர்ச்சி. இடுப்பு உயரத்துக்குச் செடிகள், கொம்பும் கொழையுமாக. பச்சைப் பசேரென்று கடலாய் அடர்ந்த செடிகள். வெள்ளி மூக்குத்திகளை அள்ளிச் சிதறின மாதிரி பூக்கள். நிறைமாசக் கர்ப்பிணியாக காயும் பூவுமாகத் ததும்பி நின்ற வெள்ளாமை.

மகன்தான் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்தான், தூரத்தில். நடுவில் சோளப்பயிர். கரும்புத் தோட்டம் மாதிரி. மகன் நிற்கிற இடத்திலிருந்து பார்த்தால் பம்ப் ஷெட் தெரியாது.

வெள்ளாமைகளைப் பார்த்துக் கொண்டே பொழியில் நடந்து வந்தார், வெள்ளைய நாயக்கர்.

கன்னிப்பெண்ணாக திமிறிக் கொண்டு வளர்ந்திருந்தது சோளப்பயிர். அகலத் தோகைகளில் காற்றின் மெல்லிய உரசல். சலங்கை சிணுங்குகிற சங்கீதச் சப்தம். பால் பிடிக்கிற பருவம். சோளப்பாலின் மிருதுவான லாகிரிவாசம்.

வாய்க்கால் தண்ணீருக்குள் அவர் நடக்கிற போது... 'சளப், சளப்'பென்று ஒரு சுகமான சப்தம். தற்செயலாக அவரது பார்வை பம்ப்ஷெட்டை ஏறிட்டுப் பார்த்தது. தொட்டியில் யாரோ குளிக்கிற மாதிரி தோற்றம். நாலாபக்கமும் சிதறித் தெறிக்கிற நீர்த் திவலைகள்.

பார்த்தால்... ஒரு பெண் போலத் தெரிகிறது. இன்னாரென்று பிடிபடவில்லை. வயதாகிவிட்டது. கண் பற்றவில்லை. சாயங்காலச் சூரியன் வேறு, கண்ணைக் குத்திக் கூசவைக்கிறது. நெற்றிக்குக்கீழே கண்ணுக்குக் குடையாக உள்ளங்கையை வைத்து... உற்றுப்பார்த்தால்...

குளிப்பது ஒரு பெண்தான். நிறைமாதக் கர்ப்பிணி. ஈரச்சேலை படிந்த உப்பிய வயிறு. சக்கிலியக்குடிப் பெண் போல ஒரு தோற்றம்.

அவருக்குள் குப்பென்று பற்றிக்கொண்ட ஒரு தீ. கண் மூக்கு தெரியாத கோபவெறி.

ஓர் ஈக்குஞ்சைக்கூட அண்டவிடாமல் அதட்டி வைத்திருக்கிறார். வேலி போட்டிருக்கிறார். சின்னஞ்சிறுசுகளைக்கூட நெருங்க விடாமல் அடி பின்னியெடுத்திருக்கிறார். பன்றிகளைக் கொன்றிருக்கிறார்.

இத்தனையையும் மீறிக்கொண்டு ஒரு பொட்டச்சி நுழைந்து விட்டாளா? அவளுக்கு அம்புட்டுத் திமிரா? பயமற்றுப் போயிற்றா? ஒரு சக்கிலிச்சி வந்து குளிக்கிற அளவுக்கு... தன் கிணறு இளப்பமாகிவிட்டதா?

அவருக்குள் ஒரு தகிப்பு. தாங்கமுடியாத ஆத்திரத்தில் மட்டியைக் கடித்தார். வேரோடு ஒரு சோளத்தட்டையை விருட்டென்று பிடுங்கினார். மளமளவென்று நெருங்கினார். அவரை முந்திக்கொண்டு அவரது கோபவெறி...

இவரை அவள் கவனிக்கவில்லை.

சக்கிலியருக்கு எட்டாக்கனியான மோட்டார் குளிப்பு. கர்ப்பிணிக்குரிய ஆசைவெறியில் வந்துவிட்டவள். நியாயமான ஆசை. குற்றமில்லாத ஆசை.

ஆசைதீரக் குளித்தாள். காணாததைக் கண்டுவிட்ட பரவசத்தில் மூழ்கித் திளைத்துக் குளிக்கிற குளிப்பு. மனசும் சேர்ந்து குளிக்கிற குளிப்பு. ஆசைப்புருஷனோடு பின்னிக்கிடக்கிற சுகமயக்கத்தில் லயித்துப் போய்... 'தன்னை மறந்து அனுபவித்து' குளித்துக் கொண்டிருந்தாள்.

கிட்டத்தில் போய்ப் பார்த்தார். அவருள் பற்றிய தீ... கற்றை கற்றையாய் ஜூவாலை நீட்டியது. அவரது சாதி வெறி, சொந்த வன்மமாயிற்று.

வருசநாட்டுக்காரியின் மகள். இருட்டு வீட்டுக்குள் தன்னைப் போட்டு மிதிமிதியென்று துவைத்தெடுத்தவளின் ரத்தத் தொடர்ச்சி.

அடிவாங்கிய அந்த வலி, கேவலப்பட்ட அந்த அவமானம், சாதிவெறி எல்லாம் கூடிக் கலந்து அவருள் ஒரு பிசாசாக இறங்க...

சாட்டைப் போன்ற பச்சைச் சோளத்தட்டையால் ஓங்கிய கை மாறாமல் அடித்தார். சுளீரென்று விழுந்த ஈரத்தட்டையடியின் உக்கிரம்.

பின்னிக்கிடந்த மயக்க சுகத்தில் திளைத்துக் கொண்டிருந்த அந்தக் கர்ப்பிணிப் பெண், இந்த அடியின் சுழற்சியில் மனசின் ஆணிவேர் வரை அதிர்ந்துபோனாள். அவளைத் தூக்கிச் சுழற்றிப் போட்ட மாதிரி தோன்றியது. நடுங்கிப்போய் நிமிர்ந்து பார்த்தாள்.

பிசாசாக இவர். மாறி மாறி சோளத்தட்டையைச் சுழற்றினார். பளிச்பளிச்சென்று மின்னலாய் வெட்டிய அடிகள், தட்டை பிய்த்து நார் நாராகச் சிதைக்கிற வரைக்கும்!

அவள் கத்தவில்லை. கதறவில்லை. வாங்கிய அடியையெல்லாம் தின்று செத்தவள் மாதிரி, பயத்தில் அப்படியே உறைந்துபோய் இவரைப் பார்த்தாள். மிரட்சியான பார்வை. வெலவெலத்துப் போன பார்வை. பேயடித்த மாதிரியோர் உயிரற்ற பார்வை!

நடக்கமாட்டாமல் நடந்து போய் குடிசையில் விழுந்தாள். ராத்திரியே அவளுக்குக் காய்ச்சல். குக்கிராமம். சக்கிலியக்குடி ஜனம். ஏழ்மையோடு பின்னிய அறியாமை. நடந்ததை யாரிடமும் சொல்ல அவளுக்கு மதியில்லை.

'பச்சைத் தண்ணீரில் குளித்ததால்தான் காய்ச்சலாக்கும்' என்று நினைத்து கசாயம் போட்டுக் கொடுத்தனர். கைப்பக்குவம் செய்தனர்.

மறுநாள் குளிர்காய்ச்சல். உணர்வு தப்பிய புலம்பல். பயந்து பயந்து அலறிய காட்டுக்கத்தல்.

'பேய்பிடித்துவிட்டதோ... காற்று கறுப்பு அடித்துவிட்டதோ' என்ற நினைப்பில் திருநீறு பூசினர். சாமியாடியை வரவழைத்தனர். மந்திரித்தனர்.

மூன்றாவது நாள். செத்தே போனாள்!

## 6

'நிறைமாத கர்ப்பிணியின் சாவு' என்பது சக்கிலியக் குடியை மட்டுமல்ல... சாதி கடந்த மனிதநேயத்தில் மொத்த ஊரையே ஒரு குலுக்கு குலுக்கிவிட்டது. "ஐயய்யோ பாதரவே" என்று சகல சனமும் அங்கலாய்த்தனர்.

வேலை ஜோலியையெல்லாம் நினைத்துக்கூடப் பார்க்காமல்... சகல சாதி ஜனமும் சேரிக்குள் வந்துவிட்டனர். "ஐயோ கொடுமையே, இப்படியுமா ஒரு சாவு வரணும்" என்று ஆளாளுக்குப் புலம்பினர். கூடிக்கூடி மனம் புழுங்கினர். அடிவயிறு பிசைய கண்கலங்கித் திகைத்தனர்.

சாவின் குரூரம் சாதியைப் பொய்யாக்கி, மானுடத்தை சத்தியமாக்கிவிட்ட அதிசயம்...

சடபுடவென்று காரியம் செய்து புதைக்கவோ... எரிக்கவோ முடியாது. நிறைமாதக் கர்ப்பிணி. வயிற்றில் முழுக் குழந்தை. அப்படியே புதைத்தால் ஊருக்கு ஆகாது. ஊரே நாசக் காடாகிவிடும் என்றொரு ஐதீகம்.

வயிற்றில் கிடக்கும் குழந்தையை எடுத்து தனித்தனியாகத்தான் புதைக்க வேண்டும். பேய்பூத நம்பிக்கை நிறைந்த கிராமம். செத்துப்போன பிரேதத்தின் வயிற்றைக் கிறிக் கிழித்து, குழந்தையை எடுக்கிற தைரியம் யாருக்கு வரும்?

என்ன செய்ய? எல்லா ஜனமும் கண்ணீரும் கம்பலையுமாய் பதைத்தனர். ஊர் ஜனம் பூராவும் வழி தொகை தெரியாமல் திகைத்துப்புலம்ப... சுற்றுபட்டி பத்து ஊருக்கும் ஆட்கள் பறந்தனர், 'அப்படி தைரியமான ஆள் கிடைப்பானா' என்று.

கடைசியில் ஒருத்தன் அகப்பட்டான். அவன் வந்துசேரச் சாயங்காலமாகிவிட்டது. அவனும் மூக்குமுட்ட சாராயம் குடித்துவிட்டு... அந்த போதைத் தைரியத்தில்தான் 'தன்னை மறந்து' அந்த 'அறுப்புக் காரியத்தை' முடித்தான்.

மயானக்கரை வேலைகள் முடிந்து... எல்லா சாதி ஜனமும் வீடு திரும்ப பொழுது இருட்டிவிட்டது. யாருக்கும் பசி ஞாபகமில்லை. எதுவும் பேசத் தோன்றவில்லை. கற்றைச்சோகம், துயரமிக்க மன இறுக்கம், 'இப்படியொரு சாவா' என்ற அதிர்விலிருந்து மீளமுடியாத வருத்தம், கலக்கம்.

ஆனால்...

'இது ஒரு சாவு இல்லை, கொலை' என்பது வெள்ளைய நாயக்கருக்கு மட்டுமே தெரியும். இவர் அடித்த சோளத்தட்டையடியில் பதறிப் போய்த்தான்... அந்த மன அதிர்வில்தான்... இந்தக் கொலை பாதகம் என்ற சேதி, வேறு ஒரு சுடுகுஞ்சுக்குக்கூடத் தெரியாது.

'நீ ஒரு கொலைகாரன்' என்று யாரும் விரல் நீட்டிக் குற்றம் சொல்ல வழியில்லை. விரலை நீட்டவுமில்லை. ஆனால்...

இவருக்குள் ஒரு விரல். கத்தியாக நீண்டு உள்ளுக்குள் உறுத்துகிற விரல். குத்திக் குடைகிற விரல். மிச்ச ஆயுள் பூராவையும் நரகமாக்கி அவஸ்தைப்படுத்துகிற சுயவிரல். ரவ்வும் பகலும் ரணமாக்கி வாட்டி வதைக்கிற விரல்.

பிறகென்ன?

(முதல் அத்தியாயத்தை மீண்டும் படித்தால் புரியும்!)

*– இதயம் பேசுகிறது, 20.11.94*
*வன்முறை எதிர்ப்புச் சிறுகதைப் போட்டியில்*
*முதல் பரிசாக ரூ.5000 பெற்ற கதை.*

# வேறுவேறு

உச்சியிலிருந்து மேற்கில் சரிந்துவிட்டது பொழுதுக்கால். நிழல்கள் கிழக்கில் நீளநீளமாய் நகர்ந்தன. அப்போதுதான் வீடு வந்து சேர்ந் திருந்தாள் பூவனம்.

காலையில் எட்டு மணிக்கு கூலி வேலைக்குப் போனவள். ஊர்ப்பட்ட வெயில் பூராவும் அவள் தலையில்தான். மிளகாய்ச் செடிக்குள் குனிந்து குனிந்து ஓடி ஓடி களை வெட்டியது. குறுக்கெலும்பு எல்லாம் குடைச்சலெடுக்கிற வலி. உடம்பின் ஒவ்வொரு இணுக்கும் 'உட்காரு உட்காரு' என்று கெஞ்சிக் கூத்தாடியது.

வயிறுமுட்ட ஒரு செம்புத் தண்ணீரை குடித்து விட்டு முந்தியை விரித்து அப்படியே சாயலாம் போலி ருந்தது. சாயப்போனவள் மனசுக்குள் பிள்ளைகள். பள்ளிக்கூடம் போயிருக்கிறதுகள். வருகிற நேரம் தான். அம்மா மடியில் விழுகிற ஆசையில் சிட்டாய்ப் பறந்து வரும். பார்த்துவிட்டால் போதும்... ரெண்டும் கும்மாளம் போடும். "யம்மா... யம்மா" என்று ஒரே குதூகலக் கொஞ்சல்தான்.

“காப்பியிருக்காம்மா? போட்டுட்டீயாம்மா?” என்று பறப்பெடுத்துப் போய்க் கேட்பான் முத்துப் பயல்.

"திங்குறதுக்கு ஏதாச்சும் இருக்காம்மா?" என்று அமுங்கிய குரலில் ஆவலாய்க் கேட்பாள் மூத்தவள் ராஜி.

"திங்குறதுக்கா? உங்க ஆத்தாதான் இருக்கேன். பிய்ச்சுத் தின்னுங்க" என்று அலுப்பில் எரிந்து விழுந்தால்... அந்தப் பூச்செண்டுகள் வாடிப் போகும். அரண்டு போகும். அடிபட்ட அதிர்வில் வேதனையோடு பார்க்கும் பச்சைப் பிள்ளைகள். பாவம்.

இந்தக் கொடுமையை கண்கொண்டு பார்க்கவா பெத்தவள்னு சொல்லிக்கிட்டு இந்தப் பாதகத்தி உசுரோட இருக்கணும்?

அலுப்பையும் ஆயாசத்தையும் மறந்துவிட்டு, பாசமும், பதைப்புமாய் புறப்பட்டாள் பூவனம். கட்கத்தில் சின்னப் பெட்டி. கதவைச் சாத்திவிட்டு தெருவில் இறங்கினாள்.

புஞ்சைக்காரியிடம் சம்பளம் வாங்கப் போனாள். அவள் ஏகமாய் முக்கி முனங்கினாள்.

"கால்லே தீயை வைச்சுக்கிட்டுத்தான் திரியுதிக, கூலி கூலின்னு. கூலியாளுக சம்பளம் குடுத்தே வருச வெள்ளாமை கரைஞ்சு போகுது".

சலித்துப் புளித்துப் போய் சம்பளம் தந்தாள் புஞ்சைக்காரி. பதினைந்து ரூபாய். முகத்தில் பதினைந்து கோணல். பிச்சை வாங்குவதைப் போல அவமானமாய் உணர்ந்தாள் பூவனம். மனசு கிடந்து தகித்தது.

'ஒழைச்ச காசை தர்றதுக்கு இம்புட்டு வருத்தமா? தானமாவா தர்றாக? வருச வெள்ளாமை எங்கேயிருந்து வெளையுமாம்! கூலிசனங்க கால் படலேன்னா புஞ்சை வெறும் மண்ணுதானே?'

கொதிபானைச் சோறாய் தளதளத்துத் தகிக்கிற நினைவுகள்.

தகிப்பைக் காட்ட முடியாது. புஞ்சைக்காரர்களை பகைத்துக் கொள்ளவும் முடியாது. வயித்துப் பாட்டுக்கு அவர்களிடம் கால் வைத்தாகணும். சாயங்காலம் கையேந்தியாகணும். வேறு புகல்?

பலசரக்குக் கடையில் ஏகக் கூட்டம். நெரிபுரியாய் சாயங்கால வியாபாரம். 'கச கச'வென்று பெண்கள். 'எனக்குக் குடு ஒனக்குக் குடு' என்று சலசலத்த கூச்சல்.

எல்லாரும் இவளைப் போலத்தான். வேலைக்குப் போய்வந்த ஆட்கள். வீட்டு வேலைகள் முடித்தாக வேண்டிய அவசரம். 'புருஷன் வந்துருவானே', 'புள்ளைக வந்துருமே' என்கிற பதற்றம்

கடைக்காரருக்கும் பத்து கையா இருக்கிறது? பாவம். அவரும் பறந்து பறந்துதான் சரக்கு கொடுத்தார். வேர்வை துடைக்க நேரமில்லாமல் கணக்குப் பார்த்தார்.

"ம்... வேற...ம், வேற... ம், வேற..." என்ற ஒரே ஸ்தாயியில் கடைக் காரரின் விறுவிறுப்பு.

பூவனம் கடைக்குள் பார்த்தாள். தட்டில் கத்தரிக்காய். பச்சைப்பசே லென்று கண்ணுக்குக் குளிர்ச்சியாய். பார்க்கிற ஆளுடன் பேசும்.

முத்துப் பயல் கத்திரிக்காய் என்றால்... குடியிருந்து தின்பான். ராஜி வட்டிலில் விழுந்த காய்த் துண்டுகளையும் பொறுக்கி வாயில் போட்டுக் கொள்வான். அதுக்கொரு வாய்ச்சண்டை நடக்கும். அக்கா தம்பிக்குள். பார்க்கப் பார்க்க சிரிப்பு வரும்.

இவளும் சரக்கு வாங்கினாள். அரிசி, கத்தரிக்காய், வெல்லம், தேயிலை, அரைசாமான், நாலு முறுக்கு, ஐம்பது கிராம் காராச்சேவு...

"எம்புட்டாச்சு கணக்கு?"

"பதினாறு ரூவா அறுவது காசு"

"அடியாத்தி. அம்புட்டா ஆச்சு?"

"ம்"

"கத்தரிக்காய் என்ன வெலை?"

"நூறு கிராம் ஒரு ரூவா இருவது பைசா"

அவளுக்குள் அதிர்வின் பரவல். "அட கிரகசாரமே... கத்தரிக்காய்க்கா இந்தத் தீ வெலை?"

அவளுக்கு மிளகாயை கடித்த மாதிரியிருந்தது. கடைக்காரர் உதட்டில் ஏளனப் புன்னகை.

"என்னம்மா?"

"வெலைவாசியை நெனைச்சா... நெஞ்சுலே 'பக்'குன்னு திப்பிடிக்கு".

"காலமாச்சும் நின்னு நிதானிச்சு ஓடும். நிதானங்கெட்ட வேகத்துலே ஓடுறது வெலைவாசி ஒண்ணுதான்".

"சம்பளம் ஆணியடிச்சு அறைஞ்ச மாதிரி... பானைஞ்சுலேயே தானே நிக்குது?"

"நீங்க வாயைத் தொறந்து கேக்கணும்"

"உள்ள சம்பளத்தை குடுக்கிறதுக்கே ஏழு பேச்சு பேசுதாக. ம்... என்னத்தைக் கேக்க? கூலி சனங்க பாடு பெருந்தும்பம்தான்".

பதினாலு ரூபாய் தந்தாள். ஒரு ரூபாய் பாலுக்கு வேணும்.

சகஜத்தன்மை சட்டென்று காணாமல் போயிற்று. கடைக்காரர் கண்ணில் ஓர் எரிச்சல். துல்லியமான வெறுப்பு.

"சொச்சம்?...."

"பாக்கியிலே சேத்துக்கங்க".

"பாக்கியிலா? ஏற்கெனவே ரொம்ப இருக்கு".

"சீட்டுவுழுந்தா கடனை குடுத்துருதேன்"

"சீக்கிரமா கடனை குடுக்குறதுக்கு வழியைப் பாரு"

"ம்"

"மேலும் கடன் ஏறாமலாச்சும் பாத்துக்க"

"ஆட்டும்"

பூவனத்துக்கு முள் சொருகின மாதிரி நறுக்கென்றது. கடைக்காரரின் வெறுப்பும், சிடுசிடுப்பும் இவளுக்குள் அவமானமாய் உணர வைத்தது.

"கத்தரிக்காய் வாங்காம இருந்துருந்தா இன்னிக்கு கடன் இல்லாம தப்பிச்சிருக்கலாம்..." என்ற வருத்தமான முணுமுணுப் போடு கடையை விட்டு நகர்ந்தாள்.

முத்து முகம் மனசுக்குள். "அய்ய... கத்தரிக்காய்" என்று முகமெல் லாம் பூத்துச் சிரிக்கிற முகம். கண்ணில் தெறிக்கிற மின்னல். குதூகலக் கும்மாளம்.

முள் குத்தலைப் பிடுங்கி மென்மையாய் மருந்து போட்டது மகனின் பூச்சிரிப்பு.

தெருவை அடைத்துக்கொண்டு தடதடத்த பேயிரைச்சலாய் வருகிற டக்கர் (டிராக்டர்) சத்தம்.

வீடு வந்து சேருவதற்குள் மூன்று டக்கர்களுக்கு விலகி வழிவிடவேண்டியிருந்தது பூவனத்துக்கு.

கதவைச் சாத்திவிட்டு பால் வாங்க ஓடினாள். பால் சொசைட்டிக்கு. சொசைட்டியில் க்யூ வரிசை. பால் ஊற்றவும் வரிசை. வாங்கவும் வரிசை.

இதெல்லாம்... இப்ப வந்த புதுக்கூத்து.

பால் சொசைட்டி வந்த பிறகு... பால்மாடு ஒரு தொழிலாகி விட்டது. வீடு தப்பாமல் மோர் கடைவார்கள் முன்பு. ஓசி மோர் அட்டியில்லாமல் உரிமையோடு வாங்கிக் கொள்ளலாம் எந்த வீட்டிலும். தாய்ப்பால்காரிக்கு தட்டுப்பாடு என்றால்...

பிள்ளைப்பால் வாங்கிக் கொள்ளலாம் ஓசியாக. மனுச மக்களுக்குள் அப்படியோர் பின்னல்.

போச்சு. அந்த வழமுறையெல்லாம் கொள்ளை போச்சு. அந்த அந்நியோன்யம், பந்தமெல்லாம் பறிபோச்சு.

பால்மாட்டுக்காரிக்கே பாலில்லை. பீச்சிய பாலையெல்லாம் சொசைட்டியில் ஊற்றிவிட்டு, சட்டியில் ஒட்டியிருக்கும் நுரைதான் வீட்டுக் காப்பிக்கு.

அதோ... மஞ்சள் பூதமாய் பால் லாரி வருகிறது. கொள்ளையடிக்க வருகிற மூர்க்க வேகத்தில்.

காத்திருந்து பாலை வாங்கிக் கொண்டு வந்தாள் பூவனம். அவசர அவசரமாய் அடுப்பை மூட்டினாள். பய வந்துருவான். வெல்லம் தேயிலையைப் போட்டு கொதிக்க வைத்தாள். அரிசியை கல்பார்த்து அலசிப் பிசைந்தாள். வேலை தன் போக்கில் நடந்தது... யந்திரமாய்.

மனசு வேறு எங்கோ அலைந்து கொண்டிருந்தது. ஆறு மாசத்துக்கு முந்தித்தான் 'போய்ச்' சேர்ந்த புருஷன்.

அந்த ஆள் இருக்கிறவரைக்கும் பிழைப்பில் இந்த மூச்சு முட்டல் இல்லை. ரெண்டாள் சம்பளம். வயிற்றுப்பாடு சிரமமில்லாமல் கழிந்தது. நல்லது பொல்லது செய்ய கையில் சில்லறை இருந்தது.

இப்போது... அன்றாடப் பிழைப்பே திண்டாட்டம். ஒரு மனுஷி வியர்வையில் மூன்று வயிறுகள் நனையனும். தகப்பன் இழப்பை உணரவிடாமல் பிள்ளைகளை வளர்க்கனும். முகவாட்டம் வந்து விடாமல் – ஏங்கவிடாமல் – பார்த்துக் கொள்ளனும்.

பூவனம் அழ நினைக்கவில்லை. நினைவு உள்ளுக்குள் பின்னிப் பின்னி எங்கெங்கோ, அலைய. கண்ணில் நீரின் உறுத்தல். கன்னத்தில் சரமாய் இறங்கிச் சரிகிற கண்ணீர்.

ஏனோ தெரியவில்லை. கடைக்காரர் நினைவுப் பின்னலுக்குள் சிக்கினார். பாக்கி ஏறவிடாம பாத்துக்க என்று அதட்டலாய் வந்த குரல்.

இனிமே பாக்கி வாங்கப் போனா மானக்கேடா பேசிருவாரோ...! மனசுக்குள் வந்த பயப் படபடப்பு. வயிற்றைக் கலக்குகிற கிலி.

இனிமேல் கடன் வாங்கக்கூடாது. கடனைக் குடுத்து கணக்கு முடிக்காட்டாலும் மேற்கொண்டு கடன் ஏறாமப் பாத்துக்கனும். அதுதான் மரியாதை.

இன்னிக்கு கத்தரிக்காய் வாங்குனது தப்பு. வாங்கியிருக்கக்கூடாது. சின்னவன் ஆசைப்படுவானேன்னு நெனச்சது தப்பாப் போச்சு...

நெஞ்சுக்குள் சப்பென்று அறைகிற வாழ்வின் அவலம். உடைப்பெடுத்து மீறிக்கொண்டு சீறுகிற அழுகை.

பச்சைப் பிள்ளையோட சின்ன ஆசையை மதிக்கிறதுக்குக்கூட தாய் மனசுக்கு இம்புட்டுத் தடங்கலா...

"ஐயோ, பாதரவே" என்று வாய்விட்டுக் கதறினாள். மடேர் மடேரென்று தலையில் அடித்துக் கொண்டு அழுதாள்.

"ஏ... சீமைராசா, ஒழக்கரிசி ஜீவன். நீங்க இல்லாமப் போகப்போய், உங்க புள்ளைக இப்படி அலையனுமா? நாக்கு ருசிக்கு வழியத்துப் போய் அலமந்து திரியனுமா?"

கதறலோடு சேர்ந்து கசிகிற வார்த்தைகள். புலம்பிச் சிதறுகிற சோகச் சொற்கள். அடுப்பு வெக்கை அலை அலையாய் வந்து காலில் மோதுகிறது.

"யம்மாய்... யம்மா..ய்"

முத்துப் பயல். அவனுக்கு முந்திக்கொண்டு வருகிற அவனது காலடிச் சத்தம். பைக்கட்டை தொப்பென்று போட்ட வேகத்தில் அம்மாவிடம் பாய்ந்து தாவுகிற வேகம்.

காலடிச் சத்தத்திலேயே மகனை உணர்ந்து கொண்ட பூவனம் சுதாரித்துக் கொண்டாள்.

முந்திச் சேலையில் முகத்தையும், அழுகையையும் துடைத்துக் கொண்டாள். மூக்கைச் சீறி, மனசைச் சமனப்படுத்திக் கொண்டாள்.

"யம்மா..ய்"

"வாடா ராசா, ஏஞ்செல்லம்"

"வேலை முடிஞ்சு வந்துட்டீயாம்மா?"

"வந்துட்டேங்கண்ணு"

"காப்பி போட்டாச்சா?"

"ஆச்சு ராசா"

அவன் பிஞ்சுக் காலெல்லாம் விளையாட்டுப் புழுதி. ஓடி வந்த மூச்சிறைப்பு. அவனாகவே ஒரு கிளாஸ் தண்ணீரை முகர்ந்து 'மடக் மடக்'கென்று குடித்தான். வாய்க்கடை வழியாக இருபுறமும் இறங்கும் நீர்க்கோடுகள்.

"சேவு வேணுமா... முறுக்கு வேணுமாடா?"

"ரெண்டும்"

"அக்காளுக்கு?"

"ரெண்டுலேயும் ஆளுக்குப் பாதி"

"கூருக்கார (கூர்மையான) ராசா. எங்க அண்ணன் மாதிரி"

அம்மாவின் மெச்சுதல் பிச்சுப் பூக்களாய் விழ, அந்த மூன்றாம் கிளாஸ் சிறுவன் கூச்சமாய் குறுநகை செய்தான். மேல்ச் சட்டையின் முன் பக்கத்தை மடியாக ஏந்த, அதில் சேவும் முறுக்கும்.

"யம்மா நீ கையை நீட்டு"

"எதுக்குடா?"

"நீட்டேன்"

"சரி கையை நீட்டியாச்சு"

தன் பங்கிலிருந்து கொஞ்சம் சேவு அள்ளி அம்மாவின் உள்ளங் கையில் வைத்தான். அவனும் ஆசை ஆசையாக தின்றான். 'நறுக் நறுக்' சத்தத்துக்கிடையில் 'நீயும் தின்னும்மா. நல்லாருக்கும்மா' என்று மழலைக் குளிர்ச்சி காட்டி தலையையாட்டினான்.

அவள் கையில் நடுக்கம். அவளுக்குள் எங்கோ ஓர் உடைவு. உடைந்து நொறுங்கி, நெகிழ்ந்து பாகாய்க் கரைந்த மனசு. குத்தலெடுக்கிற கண்கள். குபுக்கென்று வழிகிற கண்ணீர். பாசத்தின் கற்றையான தாக்குதல்.

நெகிழ்ந்து மிருதுவான குரல். அழுகையில் நனைந்த குரல்.

"எனக்கெதுக்குடா... இதெல்லாம்?"

"சும்மா தின்னும்மா, சேவு நல்லாருக்கு" – அவன் சொல்லில் ததும்புகிற கொஞ்சல்.

சின்னக் கண்ணில் பரிவின் மின்னல்.

அந்தப் பூச்செண்டின் பாசத்தை அவளால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. அந்தப் பிஞ்சின் வெள்ளையான கருணை... ஈர மனசு. மனுச ஈரம்.

வெடித்து அழுதுவிட்டாள். அம்மாவின் அழுகை அவனுக்குப் புரியவில்லை. இருந்தாலும் பதறவில்லை. இது சந்தோஷ அழுகைதான்.

தின்று முடித்து காப்பியைக் குடித்தான். காப்பியைக் குடிக்கிற

போது ஓர் அவசரம். மடக் மடக்கென்று ஆவியோடு முழுங்கிய வேகம். மகனையே பெருமிதமாய் பார்த்துக் கொண்டிருந்த பூவனம். அந்த மெல்லிய பதற்றத்தைக் கவனித்தாள்.

"என்ன... கண்ணு?"

"வெளையாடப் போவணும். அர்ஜெண்ட்"

"எங்கடா?"

"களத்துக்கு"

"போய்ட்டு சீக்கிரமா வந்துரு. சாப்புடணும்"

"ம். என்ன கொழம்பும்மா?"

"கத்தரிக்காய்"

"அய்ய்... சக்கை. கத்தரிக்காயா" – அந்தச் சின்ன முகமே அகலமாகிப் போன மாதிரியிருந்தது. ஒளிச்சிரிப்பு. முகமெல்லாம் மனசின் வெளிச்சம்.

"அப்ப... நா வெளையாடப் போவலை".

முத்துவின் குஷி. அடித்த பல்டி. வாசத்தை மறைத்துக் கொள்ளத் தெரியாத பூவின் வெள்ளைக் குணம்.

பூவனத்துக்கு சிரிப்பாணி பொத்துக்கொண்டு வந்தது.

"ஏலேய்... கொழம்பு ஓடியா போயிரும்?" என்று சொல்லிக் கொண்டே சின்னப் பிள்ளை மாதிரி விழுந்து விழுந்து சிரித்தாள் பூவனமாய்ச் சிரித்து ஒளிர்கிற பூவனம்.

முத்து கூச்சத்தில் வெட்கப்பட்டுப் போய் நெளிய... ராஜி வந்துவிட்டாள். அந்த மகிழ்ச்சி சூழலில் கலந்து கொள்கிற ஆவல் பரபரப்பில் நச்சரித்தாள்.

"யம்மா... என்னம்மா சிரிக்கே? தம்பி என்ன செய்ஞ்சாம்மா?"

ராஜியிடம் வாய் கொடுத்துக் கொண்டே அரிவாள் மனையில் கத்தரிக்காயை நறுக்கத் துவங்கினாள்.

கத்தரிக்காய்ப் பிரியத்தில் முத்துப் பயல் பூவனத்தின் அச்சு. அவளுக்கும் கத்தரிக்காயென்றால் போதும்... வாயில் எச்சில் ஊறும். அதிலும் வறுத்த கத்திரி வத்தல் என்றால்... தின்பண்டம் போல ஆவலாய்த் தின்பாள்.

முன்பெல்லாம்...

எண்ணெய் ஊற்றி வத்தலை வறுத்து வைத்துக் கொண்டு. ஓசி

மோரில் கரைத்த சோளக்கஞ்சியை குடித்தால்... அதன் வாசமே தனி...! கஞ்சியை கொண்டா கொண்டா என்று கேட்கும்.

ஒவ்வொரு மொடாப்பானையிலும் வகை வகையாய் வத்தல். கத்தரி வத்தல். சீனியவரைக்காய், வெண்டை வத்தல். துண்டு துண்டாய் அறுத்து, உப்பு போட்டு வேகவைத்து காயப்போட்டு அள்ளி வைத்த வத்தல்.

வேலைக்குப் போன புஞ்சைகளில், வரப்புப் பயிராக உள்ள காய்கனிகளை உரிமையோடு பொறுக்கிக் கொள்ளலாம். மார்கழி, தை மாசி மாசங்களில் சேர்ந்த காய்கனிகள் வத்தலாகி சித்திரை, வைகாசி கோடை பூராத்துக்கும் வாசமான கடிச்சிக்கிடையாகும்.

காய்கனியை பறிக்காதே என்று எந்தப் புஞ்சைக் காரி மகராசியும் சொல்லமாட்டாள். "தாயீ ரெண்டு காயை பறிச்சு மடியிலே போட்டுக்கிட்டுப் போ. புள்ளைக்காகும்" என்பார்கள்.

"உனக்கு நான், எனக்கு நீ வேணும்" என்கிற மாதிரியான பிணைப்பு கிராமத்து வாழ்வில். புஞ்சைக்காரிக்கும் கூலி சனத்துக்கும் இடையிலிருந்த பொருளாதார வித்தியாசங்களை மூடி மறைக்கிற படுதாக்களாய்... சில சில ஈர உறவுகள். தாயாய் பிள்ளையாய் பந்தம். அலையடிச்சு அலைவில்காத உள் பின்னலான உறவுகள். பரஸ்பர பாச நெருக்கம்.

அந்த ஈர நாட்களெல்லாம் கடந்து ஓடியே போய்விட்டது. கரண்டு, டக்கர், டீசல் வெக்கையில் எல்லா உறவும் வற்றி உலர்ந்து விரிசலாயிற்று. தாயானாலும், பிள்ளையானாலும் வாயும் வயிறும் வேறு வேறு என்ற கசப்பான நிஜம். எல்லாமே துட்டு. கூலி பதினைந்து ரூபாய் என்கிற நாணய பந்தம் மட்டும்தான். வேறு ஒட்டுமில்லை, உறவுமில்லை. அம்மணமான பைசா உறவு.

ஓசி கொடுத்தால் வாங்க மறுக்கிற பூசணிக்காய், சுரைக்காய் கூட இப்போது துட்டாகி விடுகிறது. இந்தக் கூத்தில் கத்தரி வத்தலை நினைத்தாவது பார்க்க முடியுமா? நடக்கிற காரியமா?

பூவனம் மனசுக்குள் பழைய நினைவுகள். வத்தல் வத்தலாய் வாச நினைவுகள். கசப்பான நிகழ்நாளில் வந்து முட்டியவுடன்... உள்ளுக்குள் துயரமாய் வந்து உட்கார்கிற ஏக்க உணர்வுகள்.

மறுநாள்.

பூவனத்துக்கு மாரியம்மாள் அத்தை புஞ்சையில் வேலை. மிளகாய்ச் செடிக்கு தூருக்கு தூர் உரஉப்பு வைக்கிற வேலை. நாலைந்து நாட்களாய் அத்தை இவளைக் கூப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

போக வழியில்லை. ஆள் கிராக்கியான நேரம்.

நேற்று ராத்திரி வந்து அத்தை மன்றாடினாள். கெஞ்சிக் கூத்தாடினாள். நாடியை பிடிக்காதது ஒன்றுதான் குறை. பூவனம் சரியென்ற பிறகுதான் அத்தை முகம் முகமாயிற்று.

கூட ரெண்டு பெண்கள். பெட்டியில் உரஉப்பை வைத்துக் கொண்டு ஓடி ஓடிக் குனிந்தாள். ஊர்ப்புரணியும் வேலையும் பொழுதைப்போல நகர்ந்தன.

புஞ்சைக்குள் ரெண்டு வரப்பில் நெடுக கத்தரிச் செடிகள். பொசுபொசுவென்று முரட்டு இலைகள், நாய்க்காது மாதிரி. டிசம்பர் பூ நிறத்தில் ஜில்லென்று சிரிக்கிற கத்தரிக்காய், பூ இலைகளை விலக்கிப் பார்த்தால் பச்சைப் பசேலென்று காய்கள், கோழிமுட்டை மாதிரி. பார்க்கப் பார்க்க லட்சணம். கடித்துத் திங்கலாம் போலிருந்தது.

'வேலை முடிஞ்சு போறப்ப... நாலைஞ்சு காய்க பறிச்சிட்டுப் போகணும். முத்துப் பயல் கூத்தாடி கொண்டாடுவான். கடையிலேயும் பர்க்கி ஏறாமப் பாத்துக்கிடலாம்...'

உள்ளுக்குள் வலை பின்னுகிற ஆசைகள். பின்னப் பின்ன ஆசை. வெயில் பட்டால் சிலந்தி வலை மின்னுகிற மாதிரி... சின்னவனின் மின்னல் சிரிப்பு...

சாயங்காலம்.

மாரியம்மா அத்தை வீட்டுக்குச் சம்பளம் வாங்கப் போயிருந்தாள் பூவனம். சிரித்துக் கொண்டே பதினைந்து ரூபாயைத் தந்தாள்.

அத்தை உதட்டில் சிரிப்பு சிரிப்பாக இருக்க, பொத்தாம் பொதுவாகச் சொல்கிற மாதிரி அங்கலாய்த்தாள்.

"அஞ்சு பைசா குறையாம சம்பளம் வேணும்ங்காக. அடிச்சு வாங்குற மாதிரி புடுங்கிட்டுப் போறாக அதுக்கும் மேலே புஞ்சையிலே காய்கனியை கை வைக்காக. என்ன ஞாயம் இது?"

சிரித்துக் கொண்டே செருப்பால் அடிக்க முடியுமா?

பூவனத்துக்குள் ஆழத்தில் வெட்டுகிற வேதனை நறுக்கிடுகிற அவமான வலி.

சிரிப்பால் மழுப்பப் பார்த்தாள்.

"அதுக்கென்ன அத்தை? கூலியாளுக இல்லாட்டா புஞ்சை வெறும் மண்ணுதானே? வெளைஞ்சதுலே ரெண்டு பறிச்சா கொறைஞ்சா போகும்?"

"சும்மாவா வெளையுது? உரம் போடாம, செலவழிக்காம வெளையுமா? காய்கனியும் இப்ப துட்டுதானே? துட்டை எடுத்தா களவாணித்தனமில்லையா?"

பூவனத்துக்கு செத்துப் போகலாம் போலிருந்தது. தாட்சண்ய மில்லாமல் மூஞ்சியில் விழுந்த அடி, உயிர் நரம்புகளையே சுண்டி அதிரவைக்கிற அடி.

பள்ளிக்கூடம் விட்டு வந்து, காபியை குடித்து விட்டு விளையாடப் போன முத்து, போன வேகத்தில் அம்பாய்ப் பாய்ந்து வந்தான். "யம்மா... யம்மா..."

உயிரில்லாமல் 'ம்' கொட்டினாள் பூவனம்.

"கத்தரிக்காய் நெறைய நம்ம குப்பையிலே கெடக்கும்மா. ஏம்மா, நீ போட்டீயா? எதுக்கும்மா?"

திரும்பிக் கூட பார்க்கவில்லை அம்மா. அடுப்பில் எரியும் தீயையே வெறித்தாள். "அது நம்ம வழமுறைடா".

சம்பந்தமற்ற பதில். அந்தச் சின்ன முகத்தில் இருட்டாய் ஒரு திகைப்பு.

"நல்ல நல்ல காய்க. பாக்கப் பாக்க ஆசையாயிருக்கு. எடுத்துட்டு வரட்டா.. ம்மா?

அம்மா பார்த்தாள். அறுபட்ட பல்லி வாலின் மெல்லிய துடிப்பாய் ஒரு வலி பார்வையில்.

"குப்பையிலேயும் மயானத்துலேயும் போட்டதை எடுத்துட்டு வரக்கூடாதுப்பா... அது மனுசத் தன்மையில்லே"

"கத்தரிக்காய் வெயில்லே கெடந்து வீணாய்ப் போகும்மா..."

"நாம ஒண்ணும் சூத்தைக் கத்தரிக்காய் இல்லேடா. நம்ம மாதிரி ஏழை பாழைகளுக்கு சூடு சொரணைதான் சொத்து"

மகன் முகத்தைப் பார்க்கிற சக்தியில்லாமல் அடுப்பைப் பார்த்தாள் பூவனம். அவளுக்குள் தீ வனம்.

தொடர்பற்ற பேச்சின் அர்த்தமும் புரியவில்லை முத்துப் பயலுக்கு. அம்மாவும் புதிராகத் தோன்றினாள். புரியாமையும் திகைப்பும் இருட்டாக அந்தப் பிஞ்சை சூழ்ந்து கொண்டது. வாழ்க்கையைப் போல.

*இந்தியா டுடே இலக்கிய ஆண்டு மலர், 1994 – 95*

# உயிர்க்காற்று

**ப**ழனிச்சாமிக்கு தலைகால் புரியாத சந்தோஷம். அந்த ஓட்டு வீடே ததும்பிக் கொண்டிருந்தது. மகிழ்ச்சிப் பரபரப்பில். வீடு கட்ட லோன் கிடைத்து விடக் கூடிய வாய்ப்பு, ரொம்ப நெருக்கத்தில்.

பிளானை நீட்டினால்... உடனே ஸாங்சன் என்ற அளவில் பக்குவ நிலை.

இவனுக்கு இன்னும் நாற்பது வயதுகூட ஆகவில்லை. அதற்குள் பக்காவான காரைக் கட்டிட மாக்கப்போகிறான். பெருமைப் பூரிப்பில் பழனிச்சாமி ஒரு சுற்று பெருத்துவிட்டான். முகத்தில் ஒரு தேஜஸ். கண்களில் கனவு மின்னல்கள்.

அவன் மனசு பூராவும் 'வீடு. வீடுதான். வாயைத் திறந்தாலே... செங்கல், இரும்பு, சிமெண்ட், பலகை இந்தப் பேச்சுத்தான். எட்டுக்கு எட்டு... பத்துக்குப் பத்து.. லாப் அலமாரி' என்கிற சிந்தனைதான்.

பிரசவத்துக்கு அம்மா வீட்டுக்குப் போயிருக்கிற தேவானையைப் பற்றி யோசிக்கக்கூட நேரமில்லை. யோசனைகள் முழுவதையும் கட்டிடக்கனவே விழுங்கித் தீர்த்தது.

இந்த வீட்டுக் கனவுதான்... இந்த வேப்பமரத்துக்கு மரணமாக வந்து நிற்கிறது. என்ன செய்ய?

சாயங்காலம். சைக்கிளில் வந்து இறங்கினான்

பழனிச்சாமி. மூன்றாவது மைலில் இருக்கிற ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் உத்தியோகம். சைக்கிள் மிதித்த வேகத்தில் உடம்பெல்லாம் குப்பென்று வியர்வை. பனியனுக்குள் நெருஞ்சி முள்ளாக உறுத்துகிற ஈர நசநசப்பு.

பேண்ட், சட்டை, பனியனை எல்லாம் கழற்றி... கைலிக்கு மாறினான். தொட்டித் தண்ணீரில் நெஞ்சு, முதுகு, முகமெல்லாம் கழுவித் துடைத்தான். அழுக்கோடு சேர்த்து அலுப்பையும் இறக்கி வைத்த ஆசுவாசம். திரேகமே புடைத்தெடுத்த மாதிரி சுகமாக இருந்தது. வீட்டுத் தாழ்வாரத் திண்ணையில் வந்து உட்கார்ந்தான். கண் நிறைய வேப்ப மரம். கண்ணுக்குக் குளிர்ச்சியான கனிந்த பச்சை நிறம்.

வேப்ப மரத்தின் செல்லச் சிணுங்கலான சிரிப்பில் வந்த மென் காற்று. மழலையின் பிஞ்சு விரல்களாக நெஞ்சு ரோமங்களுக்குள் பரவிப் படர்ந்து புல்லரிக்க வைக்கிற காற்றின் சுகம். உயிரைத் தழுவும் உயிர்க் காற்று. அக்கணத்தில் –

பரவச உச்சத்தில் அவன். கிளுகிளுப்பில் கண்களை மூடினான். மூடிய கண்ணுக்குள்ளும் நிறைந்து பரவிய வேப்பமரம்.

"டேய் பழனி... டீ தரட்டா...டா?"

"ரெடியாயிருக்கா அய்யா?"

"ம்ம்"

"சமையலுக்கு நானும் கூடமாட ஹெல்ப் பண்ணட்டுமா, அய்யா?"

"வேண்டாம்பா... எல்லாம் முடிஞ்சது"

பேச்சு இங்கேயிருந்தாலும், மனசும் கண்ணும் வேப்ப மரத்தில்தான். டீயை தந்த அய்யா, வாசல் திண்ணையின் எதிர்ப்புறத்தில் துண்டைப் போட்டு உட்கார்ந்தார்.

"மரம் வெட்டுற மாரிக்காளை வந்திருந்தான்"

"அப்படியா..."

"நான்தான் அவனை வரச் சொன்னேன்"

"என்னத்துக்குய்யா?"

"வேப்பமரத்த வெட்டத்தான்."

உள் உலகத்திலிருந்து தூக்கியெறியப்பட்டவனாய் உணர்வு பெற்றான். துணுக்குற்றுப்போய்... அய்யா முகத்தை 'விலுக், விலுக்'

கென்று பார்த்தான். அவன் முகத்தில் திகைப்பும், குழப்பமும்.

"இந்த மரத்தையா? இந்த மரத்தை வெட்டுறதுக்கா?"

அதிர்வின் உறைவிலிருந்து விலகாத அவனது மயக்கக் குரல்.

"ஆமா..." என்று வெகு சாதாரணமாக தலையசைக்கிற அய்யா.

"டேய் பழனி, பாசம், பிரியம், சாமி, சடங்குன்னு இருக்கிறதெல் லாமே நம்ம வசதிக்குத்தான். முன்னேற்றத்துக்குத்தான். அதுவே... குறுக்கே மறிச்சுக்கிட்டு நிக்கக்கூடாது. புரியுதா? அதோட... இந்த மரத்தை வெட்டியே ஆகணும்ங்கிற கட்டாயமாயிருச்சு... இப்ப"

அய்யா பேச்சில் உலர்ந்த காரியார்த்தம். உணர்ச்சி மயக்கத்தைத் தாண்டிய புறநிலை யதார்த்தம்.

வீடு கட்டுவதற்குத் தேவையான மரம், பலகை எடுப்பதில் ஏழாயிரம் ரூபாய் மிச்சமாகும். இந்த மரத்தை வெட்டி ஆறப் போட்டு அறுத்தால்.

இந்த மரம் இருக்கிற இடமும் சேர்ந்தால்தான், வீட்டுக்கான பிளான் முழுமையடையும். மரம் இருக்கிற இந்த இடத்தில்தான்... அநேகமாய் பாத்ரூமும் லெட்ரீனும் வரும்.

ஆனால்...

அதுக்காக இந்த மரத்தை வெட்டுறதா? இந்த மரத்தையா?

... பழனிச்சாமி டவுசரும் சட்டையுமாக அலைந்த அந்த விடலை நாட்கள். டென்த் படித்துக் கொண்டிருந்தான். வகுப்புத் தோஸ்து களோடு சேர்ந்து சாயங்காலம் பூராவும் காடுகரைகளில்தான். லீவ் நாட்களில் சொல்லவே வேண்டாம். பொந்தும், புதர்க்காடுமாய் சுற்றுவான். மயில் முட்டைகளை பொறுக்கி பொரித்துத் தின்பார்கள். காடைகளை கதிகலங்க விரட்டி கும்மாளிப்பார்கள். கிணற்று உள்சுவர் பொந்துகளில் தலைகீழாகத் தொங்கி கைவிடுவான். புறா முட்டைகளை அள்ளுவான். சில சமயம் புறாக்களே பிடிபடும்.

அப்படிச் சுற்றுகிறபோதுதான்...

ஒரு மஞ்சனத்தி மரத்து நிழலில் அணிலுக்கு குறி வைத்துப் பதுங்கியிருந்தபோது –

காலடியில் நிறைய கொறண்டிச் செடிகள். முள் முள்ளாக நாயுருவிச் செடிகள். காய்ந்து மாராகிப்போன துளசிச் செடிகள். இதுகளின் உலர்ந்துபோன வறண்ட மேக நிறத்துக்குள் ஒரு பசிய ஒளித்துளியாக... அந்த வேப்பங்கன்று. சுண்டுவிரல் உயரம் கூட

இருக்காது. ஈர்க்குச்சி மாதிரி. சின்னச்சிறு பிஞ்சுத் தாவர உயிர். பார்க்க லட்சணமாக இருந்தது. பழனிக்குள் ஏதோ ஒரு மாயாஜாலம். ஆர்வப்புடைப்பு.

அந்தக் கன்றை பதனமாய்ப் பிடுங்கி... அதன் வேரில் வெயில் பட்டுவிடாமல் ஈர மண்ணை அப்பி... குருவிக் குஞ்சைக் கொண்டு வருகிற பதனப் பாதுகாப்போடு வீட்டுக்கு வந்து –

கூரை வீட்டுக்கு முன்னால்.... விரிந்த முற்றம். தினசரியான சாணப் பாலில் நிறம் மாறி இறுகிப்போன முற்றம். அதன் மாரி மூலையில் வெளிப்பானை. நாலைந்து பானைகளில் தண்ணீர். சிமிண்டுத் தொட்டி. அதைச் சுற்றி எந்நேரமும் ஈரதப்பதம். பாசி பிடித்துப்போன சகதி. சுவர்க் கோழியின் இரைச்சல் எந்நேரமும் 'ங்ங்ங்ய்ய்'யென்று.

அங்கே வந்து அதை ஊன்றினான். உயிர் பிழைத்து விடுமா? வேர் அழுகிப் போகுமா? அவனுக்குள் ஒரே சஞ்சலம்.

ரெண்டு நாளாக அதே நினைப்பு. கலக்கம். சாமக்காட்டில் 'ஒண்ணுக்கிருக்க' வரும்போதுகூட.... நட்சத்திர வெளிச்சத்தில் 'அது இருக்குதா' என்று பார்த்துவிட்டுத்தான் படுப்பான். உயிரில் கலந்து உயிராகி... உயிரை அலைக்கழிக்கிற விஷயமாகிவிட்டது.

நாலாவது நாளில் –

அதன் 'இத்துனூண்டு' இலைகள் நான்கும் பழுத்து உதிர்ந்து போயிற்று. இவனுக்கு ரொம்பக் கவலையாகப் போயிற்று. வேர் அழுகிப் போயிருக்குமோ' என்று பதறிப் பதைத்தான்.

ஆறாவது நாளில் அந்த ஈர்க்குச்சியின் உச்சியில் ரெண்டு புதிய பசிய ஒளிப்புள்ளிகள். தளிர்கள். அதற்குப் பிறகுதான், அவனுக்கு உயிரே வந்தது.

அடுத்த வருஷமே ஆள் உயரத்துக்கு வளர்ந்துவிட்டது. குடைமாதிரி விரிந்து கவிழ்ந்த பச்சைத் தலை. ஆனால்... அதுவரை பழனி பட்டபாடுகள்...

தூண்டில் போடுகிறவர்கள் மண் புழு தோண்ட இந்த மாதிரியான "வெளிப்பானை"க்குத்தான் வருவார்கள். அப்படி சுரண்டியோடு வருகிற எவரையும் கண்ணில் படவிடமாட்டான். சண்டை போட்டு விரட்டி விடுவான். கோழிக் குஞ்சுகளைக் கூட கிண்ட விடாமல் பற்றிவிடுவான். ஆடு குட்டிகளை அந்த ஏரியா பக்கமே அண்டவிடமாட்டான். 'விர்... விர்'ரென்று கற்கள் பறந்து பாயும். காரணமில்லாமல் வைவான், ஆடு குட்டிகளை.

அவன் இந்தக் கன்றின் மீது உயிரையே வைத்திருந்தான். பழனி யின் தங்கச்சி அதைச் சொல்லிச் சொல்லி கேலி பண்ணுவாள்.

விளையாட்டுச் சண்டை வருகிற போதெல்லாம்... "அந்த வேப்பங்கன்னை பிடுங்கிப் போட்டுடுவேன்" என்று பயமுறுத்தி, போக்குக் காட்டுவாள். அவனுக்குச் சண்டாளமாய் கோபம் வரும். தங்கச்சியைப் போட்டுச் சாத்துவான், மொத்து மொத்தென்று.

தங்கச்சியை அடித்ததற்காக அய்யாவிடம் வசவையும், அடியையும் வாங்கிக் கட்டிக் கொள்வான். நிறைய்ய தடவைகள்... வேப்பங்காய்க் கொத்துக்களைப் போல.

அந்த மரம்தான்.... இருபது வயது மரமாகி, ஒரு கோபுரக் கூடாரம் போல உயர்ந்து படர்ந்து பிரம்மாண்டமாகிக் கிடக்கிறது, ஒரு கோயிலைப் போல.

நாளாக... நாளாக... விபரம் தெரிந்த பிறகு, உயிராக இருந்த வேம்பு, பழனிக்கு வெறும் மரம் என்றானதும், பிடுங்கிப் போடுவ தாக மிரட்டிய தங்கச்சிக்கு அதுவே கோயிலானதும்... தனிக்கதை.

அந்தக் கோயிலைத்தான் அய்யா வெட்டணும் என்கிறார். அய்யா சொல்கிற தர்க்கரீதியான காரணங்களைக் கேட்டால்... அதுவும் சரியென்றே படுகிறது. மறுக்க இடமில்லை. ஆனாலும் –

இவனுக்குள் ஏதோ ஒரு நெருடல். இனம்புரியாத பயம். மயக்கம். தடம் தெரியாத தயக்கம்.

வாசல் திண்ணையிலேயே துண்டை விரித்துச் சாய்ந்தான். சுவரில் தலையைச் சாய்த்து, தாழ்வாரத் தூணில் பாதங்களை வைத்தான். ஒரு மயக்கத்தோடு மரத்தைப் பார்த்தான்.

சாயங்காலத் தங்க வெயில், வேப்பமரத்து பச்சை இலைகளில் தழுவிக் கிடக்கிறது. எண்ணெய் தேய்த்துக் கொண்டதைப் போல பசிய இலைகள் ஒளிஜாலம் செய்கின்றன. அதன் நிழல், கிழ்த்திசையில் நீளமாய் விழுந்து கிடக்கிறது.

மெல்லிசான உப்பாங்காற்றுக்குச் சலனமடைகிற வேப்பமரம். மரணத்தை முன்னுணர்ந்து அழுது சிணுங்குகிற இலைகள். தாய்க்கோழியை இழந்து தவிக்கும் குஞ்சுகளைப் போல.

இவனுக்குள் ஏதேதோ யோசனைகள். வேதனையும், குழப்பமுமாய் வாட்டுகிற நினைவுகள், நினைவுகள்.... நினைவுகள்... மூடிய கண்களுக்குள்ளும் அவலச் சோகமாக ஆடிக் குலுக்குகிற வேப்ப மரம்.

... அலுவலகம் முடிந்து அயர்ச்சியோடு வந்து கொண்டிருக்கிறான் பழனிச்சாமி. ப்ரிவீல் இரைச்சலோடு சைக்கிள் தெருவுக்குள் நுழைகிறபோது, ஏதோ ஒரு புதிய வெறுமையை உணர்ந்தான். 'என்னவோ... வெறிச்சின்று தெரியுதே... என்னது?' என்கிற எண்ணக் குறுகுறுப்பு.

வீட்டை நெருங்குகிறபோது, வீடே வழக்கமான அடையாளம் இழந்து வேற்று வீடாகத் தோன்றியது. பகீரென்றது.

கோயிலைக் காணோம். பச்சைக் கோபுரக் கூடாரத்தைக் காணோம். கொப்பும், கொழையுமாக நாலாதிசையும் ஓடிப் படர்ந்திருந்த பச்சைப் பேரழகைக் காணோம்.

அய்யா மரத்தை வெட்டிட்டாரா?

குப்பென்று அவனுக்குள் வியர்வை, பயப்படபடப்பு. வியர்த்த பாதம் பெடலில் வழுக்கியது. ஏதோ ஒரு பயங்கரத்தை எதிர் கொள்கிற வேதனை. திகில். வீட்டு முற்றமே கொலைக்களமாகிக் கிடந்தது. புழுதியும் உதிர்ந்த இலைகளுமாய். மரம் இருந்த இடத்தில் குடைந்து தோண்டிய கிடங்கு மட்டும். கத்தரிக்கப்பட்ட வேர்கள். அந்த மண்ணுக்குள் வெட்டுண்ட கைகளாய்த் துடித்தன. முற்றத்தின் மூலையில் வெட்டி ஒதுக்கப்பட்ட கிளைகள். தடித் தடியான கிளைகள். அதற்கும் அப்பால் அம்பாரமாய் குச்சிகளும், கொழைகளும், கொழைமலை. பருத்து உருண்ட நீண்ட தூர், ஒரு ராட்சஸ மனிதனைப் போல கீழே கிடந்தது. கோடாரியும், அரிவாளும் பட்ட இடமெல்லாம்... மஞ்சள் சதையும், சந்தன ரத்தமுமாய் குதறிப் போயிருந்தது.

பார்க்கப் பார்க்க அவனுள் எரிந்தது. அழுகை அழுகையாய் வந்தது. அய்யாவுடன் சண்டை போடணும் போல ஒரு மனத் திமிறல். கெட்ட வார்த்தைகளுடன் பீறிட்ட உணர்ச்சித் திரள்.

வீட்டில் அய்யாவைக் காணோம். துணிமணியை மாற்றினான். உடம்பைக் கழுவத் தோன்றவில்லை. மனதுக்குள் இனம் புரியாத விசனம். பொங்கிப் பொங்கிக் குமைந்த துக்கம்.

வாசல் நிலையைப் பற்றியவாறு நின்று வெறித்தான். முற்றம் முழுக்க சதைச் சிதறலாய், சிறாய்கள், மஞ்சள் சதைத் துண்டுகள் இருபது வயது வாலிபனை வெட்டிக் கூறு போட்ட மாதிரி. தேவானை வந்து இதைப் பார்த்தால்... பொறுப்பாளா? கண்ணகியாய் நின்று கொதிப்பாளே... வந்து நின்று, முகத்துக்கு முகமாய் பார்த்துக் கேட்டால்... என்ன பதில் சொல்ல?

"ஏங்க... என் மாரித்தாயை எங்க? அவளை வெட்டிச் சாய்ச்சிட்டுத்தானா... நாம வீடு கட்டணும்?" என்றெல்லாம் ஆங்காரமாய் கதறுவாளே.

அவளுக்கு என்ன பதில் சொல்லிச் சமாளிக்க? எப்படிச் சமாதானம் சொல்ல? சொல்லி ஆறுகிற கொதிப்பா... அது?

பழனிச்சாமி - தேவானை தம்பதிக்குக் கல்யாணமாகி ஆறு வருஷமாயிற்று. ரெண்டு தடவை 'தங்கி'யிருந்து கழிந்து போயிற்று. இன்னும் குழந்தை பிறக்கவேயில்லை. பிறக்கும் என்கிற அறிகுறியும் தென்படவில்லை.

கல்யாணம் முடிந்த மறுவருஷமே பிள்ளையோடு ஊர் திரும்புகிற பெண்களைப் பார்க்கும்போதெல்லாம், இவளுக்குள் எத்னையோ பிசாசுகளும், வேதாளங்களும் ஆட்டம் போடும். நாளாக நாளாக நம்பிக்கைகள் சிதைந்து... ஒரு தாழ்மையுணர்ச்சிக்கும், குற்ற உணர்ச்சிக்கும் ஆளாகிவிட்டாள், தேவானை. கண்ணில் தென்படும் எல்லாப் பெண்களுமே இவளை மலடி என்று இழிவாக நினைப்பதாக ஒரு பயம். ஒரு மிரட்சி.

குழாயடிக்குப் போய்விட்டு வந்தால்... அழுகையும், விசும்பலுமாய் வருவாள். நல்லது - பொல்லது என்று பிற வீடுகளுக்குப் போய்விட்டு வந்தாலும்... அங்கலாய்ப்பும், புலம்பலும்தான்.

மலடி என்று அவள் பேசினாள், இவள் பேசினாள் என்ற குமுறல் மயம்தான். அவள் குத்திக் காட்டினாள் - இவள் குசுகுசுவென்று பேசினாள் என்று குருட்டாம்போக்கிலான சகட்டு மேனியான குற்றச்சாட்டுகள்தான்.

இதமாய் - பதமாய் - கனிவாய் எவ்வளவோ சமாதானம் சொல்லிப் பார்த்தான், பழனிச்சாமி. போகப்போக அவனுக்கே சலித்துப் போயிற்று. அடைக்கோழி மாதிரி அவள் அங்கலாப்பதே இவனுக்கு சள்ளையாகிவிட்டது. ச்சியென்றாகிவிட்டது.

"ஆமா... ஒன்னோட இதே தொல்லைதான். எப்பப்பாரு... இதே நச்சரிப்பு. ச்சேய்! நாறவாய்லே குடியிருந்தாலும், நச்சரிப்புலே குடியிருக்க முடியுமா... மனுஷன்?"

சள்ளென்று எரிந்து விழுவான். அப்புறம்... வீடே அழுகை மயம்தான். விசும்பலும், மூக்குச் சிறலும்தான். அய்யா தலையிட்டு நாலு வார்த்தை சொன்ன பிறகுதான்... சகஜ நிலைமை திரும்பும்.

இந்தத் தொல்லைகளுக்கிடையில்... தங்கச்சியின் கல்யாணப் பிரச்சனை. வரன்கள் வந்து வந்து நழுவிப் போகிற கொடுமை.

மன உளைச்சல்கள். நகைப் பிரச்சனை. பணப் பிரச்சனை. கொசுக் கூட்டமாய் வந்து மொய்க்கிற ரணங்கள். இச்சிலாத்திகள்.

எப்படியோ ஒரு வரன் அமைந்து. நல்லபடியாக முடிந்தது.

மறுவீட்டுக்குப் புறப்படுகிறபோது –

மதினியின் ரெண்டு கைகளையும் பற்றிக் கொண்டாள். கண் கலங்கினாள். தொண்டை கரகரத்தது. அந்த உணர்ச்சி மோதலுக்கு நடுவில் –

"மயினி, வயசுலே சின்னவா... நா. எஞ்சொல்லைக் கேப்பீகளா?"

"சொல்லும்மா?"

"எனக்குக் கல்யாணம் ஆகுமோ ஆகாதோன்னு நம்ம வீடே பதறிப் போயிருந்துச்சு. அதுவே ஒரு கவலையாயிருந்துச்சு. எங்க அண்ணன் எனக்காக பட்டபாடுகளை நா மறக்கலே. ஓடி ஓடி ஒழைச்சான். ஓய்வில்லாம அலைஞ்சான். ஆனா... எனக்கும் இந்தக் காரியம் கைகூடி வந்துருக்குன்னா... அதுக்குக் காரணம் இந்த மரம்தான்... மயினி"

"ன்னம்மா சொல்லுதே?"

"ஆமா மயினி, யாருக்கும் தெரியாம இந்த மரத்தை மாரியாத்தாளா நெனைச்சு, வெள்ளி, செவ்வாய் தவறாம கும்புட்டு வந்தேன். அதனாலேதா... எனக்கு மாலை பூத்துச்சு".

"ம்"

"மயினி, நீங்களும் இதை மாரித்தாயா நெனைச்சு கையெடுத்துக் கும்புட்டு வாங்க. நம்பிக் கும்புட்டா... நல்லது நடக்கும் மயினி. இந்த வீட்லேயும் ஒரு கொழந்தை தவண்டு வெளையாடும்".

இதை அவள் சொல்லும் கணத்தில், தேவானை பற்றியிருந்த நாத்தனார் கையை இறுக்கினாள். அந்த இறுக்கத்தில் தெரிந்த தேவானையின் மனத்தாபம். உயிர்த் தவிப்பு.

அவ்வளவுதான்.

ஓர் ஆள் சேர்ந்து கட்டக்கூடிய பருமனிலிருந்த அந்த மரத்தில், முண்டு மாதிரி ஒரு திரடு. அது சின்னக்கன்றாக இருந்தபோது ஒரு கிளை ஒடிக்கப்பட்ட காயம். அதன் தழும்பு. அந்தத் திரடையே மாரித்தாயின் முகமாகக் கருதி... தேவானை மறு வெள்ளியே மாலை போட்டாள். மஞ்சளும், சந்தனமும் பூசினாள். குங்குமம் வைத்தாள். வலம் வந்து விழுந்து வணங்குவாள். ஒவ்வொரு வெள்ளி,செவ்வாயும்.

அவளைப் பொறுத்தவரையில் –

அது மரமில்லை. மரம் மட்டுமில்லை.

பழனிச்சாமி பழுத்த ஆத்திகனுமில்லை, பக்கா நாத்திகனுமில்லை. சராசரியான லௌகிகவாதி.

இவன் கன்று வைத்து வளர்த்த மரத்தையே கடவுளாக நினைப்பதையும், அதுவே குழந்தைப் பாக்கியத்தை வழங்கிவிடும் என்று நம்புவதையும் அவனால் ஜீரணிக்கவே முடியவில்லை.

தங்கை இல்லாத தைர்யம். கூச்சமில்லாமல் தேவானையைக் கேலி பண்ணி விளையாடுவான்.

"ஏய்... இதென்ன வேம்புத்தாயா, மரச்சாமியா? புதுச்சாமிகளை பொம்பளைக உருவாக்கிடுதிகளே..."

"உங்க ஜோலியைப் பார்த்துக்கிட்டுப் போங்க. எனக்கு இதான்... மாரித்தாய். சாமி... ஏங் கொல தெய்வம்"

"மாரித்தாய் மழையைத் தரும். மழலையுமா தரும்?"

"இங்க பாருங்க. ஏ வழியிலே குறுக்கே வராதிக. வந்தா... எனக்குக் கெட்ட கோவம் வந்துரும்"

"வந்தா... என்ன செய்வே?"

"வாய்க்கு வந்தபடி வைவேன்"

"வைவீயா? என்னையா?"

"ஆமா, நீங்க என்ன பெரிய கொம்பா? நாலு பேரு கூடுன இடமெல்லாம் முள்ளு குத்துன மாதிரி, வார்த்தை கேட்டவளுக் குல்லே...வலி தெரியும்?"

இவன் சிரிப்பான்.

இப்படிப் பேச்சு, அந்த வீட்டில் அடிக்கடி நடக்கும்.

வயசுக்கு வந்த பருவப் பெண்ணான தங்கச்சி, வாழ்க்கைப் பட்டுப் போய்விட்டாள். அவள் இல்லாத சுதந்திரம். கூச்சநாச்ச மில்லாத கேலிகள். கிண்டல்கள், ஆசையும் மோகமுமான கொஞ்சல்கள். மயக்கச் சிரிப்புகள் உச்சத்தைத் தொட்டுக் கிறங்கிய போதை முனகல்கள். தழுவல்கள், விளையாட்டு மும்முரங்கள். மனசும் உடலும் கலந்து, கரைந்த போகப் பொழுதுகள்.

நிஜமாகவே... கர்ப்பமாகிவிட்டாள். அவளுக்கு மரம், மாரித் தாயாகவே ஆகிவிட்டாள். குலதெய்வமாகவே நம்பி... பூஜையும், புனஸ்காரமும் செய்து தடபுடல் பண்ணினாள்.

அந்த மரத்தைத்தான் - மாரித்தாயை - அய்யா வெட்டிச் சாய்த்திருக்கிறார்.

நிறைமாசக் கர்ப்பிணியாக அம்மா வீட்டுக்குப் போயிருக்கிற தேவானைக்கு பிரசவத்தில் ஏதாச்சும் சிரமம் ஏற்பட்டு விட்டால்? ஏதேனும் விபத்து நிகழ்ந்து விட்டால்? நடக்கக்கூடாதது நடந்து விட்டால்? ஐயோ! அதை என்னால் தாங்க முடியுமா? பழனிச்சாமிக் குள் பதற்றம். அடிமனசின் ஆழத்தில் பதைப்பும், பயப் படபடப்பும்.

தேவானையை நினைத்தாலே, மனசுக்குள் பகீர் பகீரென்கிறது.

"என்னை நீங்க மனுசியாக்கூட மதிக்கலியா? நா சாமின்னு நெனச்சு கும்புட்ட மரத்தை வெட்டுறதுக்கு முந்தி, ஏங்கிட்ட ஒரு வார்த்தையாச்சும் கேட்டீங்களா? கேக்க வேண்டாமா?" என்று விரல் நீட்டிக் கேட்டால்... அது நியாயம்தானே? அந்த விரலை எப்படி மடக்க? என்ன சொல்லிச் சமாளிக்க? நம்ம பக்கம் என்ன நியாயம் இருக்கு? வாய் திறந்து பேசுவதற்கு என்ன யோக்கியதை இருக்கு?

பழனிச்சாமி வாசலில் நின்றான். மனசுக்குள் அலை அலையாக ரசாயன நினைவுகள். மனக்கரையில் மோதி மோதி நிறம் மாற்றுகிற நினைவுகள். ரணப்படுத்துகிற நினைவுகள்.

முற்றத்தில் யாரோ வருகிற அரவம். அய்யாவா? இல்லை. தபால் காரர். தந்தி வந்தது. தந்தி என்றவுடனே அவனுக்குள் குப்பென்று பற்றிய தீ. அச்ச நடுக்கம். மனம், திரேகமெல்லாம் பற்றிப் படர்ந்த படபடப்பு. தேவானை பற்றி நினைத்து... ஒரு நிமிடம்கூட ஆகவில்லை. அது சம்பந்தமாகத்ததான் தந்தியா? ஏதாச்சும் ஆகிப் போச்சா? அபசகுனமாய் நினைப்புகள்.

கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. கையெழுத்து போட்டு முடிப்பதற்குள் பலவிதமான தீ நினைப்புகள்.

தந்தியைப் பிரித்தான். அப்பா...டா! நல்ல வேளை! "காலையில் 9.30க்கு பிரசவம். ஆண் பிள்ளை. தாயும் சேயும் நலம்"

அவன் தன்னிலைக்கு வரவே கொஞ்ச நேரமாயிற்று. இருதயம் சீரான நிலையில் ஓடி, உயிர் திரும்பிவந்தது. ஆசுவாசமாக மூச்சுவிட்டான்.

தந்தியை நூறு தடவைக்கு மேல் படித்து விட்டான். திடுமென்று அவனுள் மின்னலாய்... ஒரு நினைப்பு.

மரத்தை எந்நேரம் வெட்ட ஆரம்பிச்சிருப்பாங்க? ஒம்பதரைக்குத்தான் வெட்டத் துவங்கியிருப்பாங்க. அதே

நேரத்துலே அங்க ஆண் குழந்தை பொறந்துருக்கு. சுகப்பிரசவம்.

இந்த நினைப்பில் ஏதோ ஒரு வினோதம் ஒளிந்திருப்பதாக அவனுக்குள் ஒரு பிரமை. மர்மமான மயக்கம்.

சாய்ந்து கிடந்த மரத்தூரைப் பார்த்தான். மாரித்தாய் முகமாக தேவானை நினைத்த அந்தத் திரடு. குப்புறக் கிடந்தது. தரையைக் குத்திக் கிடந்தது.

'முகம் வலிக்குமோ... அந்த மரத்தூரை புரட்டிப் போடலாமா' என்று யோசித்தான். மறுகணமே விழித்துக் கொண்டான். யோசித்த யோசனையிலுள்ள பலவீனத்தையும், மூடத்தனத்தையும் எண்ணி, அவனே ஏளமாகச் சிரித்துக் கொண்டான்.

அந்த யோசனையின் மின்னல் வெளிச்சம், அவனுக்குள் கிடந்த ஆழங்களை அவனுக்கே உணர்த்தியது. நிஜந்தான். இந்த மரம், தேவானைக்கு மட்டுமா மாரித்தாய்? இவனுக்கும்கூட அது வெறும் மரமாகவா இருந்திருக்கிறது?

அம்மா செத்திருந்த துக்கமான நாட்களில் – அந்த இழப்புச் சோகத்தின் அடர்த்தியால் ஏற்பட்டிருந்த மனப்பாரத்தை இறக்கி வைக்க இடமில்லாமல் அந்தரங்கமாய் திணறித் தவித்தபோது, இந்த மரத்து நிழலில்தான் துண்டு விரித்து மல்லாக்கப் படுப்பான். மரத்தின் இலைகளுக்குள் சிந்தனையும் பார்வையும் பதியும்.

அசைகிற இலைகளுக்கு நடுநடுவில் ஆடுகிற ஒளிப்புள்ளிகள். லட்சக்கணக்கில் வெட்ட வெளித்துளிகள். உற்று உற்றுப் பார்க்க, பார்வையில் மனம் மயங்க.... இலைகளா, வெளித்துளிகளா... எது பருப்பொருள் என்கிற இனிய குழப்பத்தில் அறிவு மயங்கித் திளைக்க.. மாய நினைப்பில் மனசு பிரமை கொள்ள...

இப்படியே நீள்கிற நேரங்களில். அவனது மனப்பாரம் கரைய, அந்த மரமே அம்மாவாக நின்று ஆறுதலாய் வருடிய கணங்கள்.

தங்கச்சிக்கு வந்த வரன்கள் நழுவிப் போகிற நாட்களின் கவலைகளை – குமைச்சல்களை – குழப்பங்களையெல்லாம் இந்த மரத்தோழனின் முகம் பார்த்தே தணித்துக் கொண்ட நிமிடங்கள்.

இந்த மரச்சகோதரனின் ஆதரவான அன்புக் காற்றின் தழுவல்களில் தைரியம் பெற்ற நேரங்கள். ஆம்... இந்த மரம், இவனுக்கும் மரமாக மட்டும் இருந்ததில்லை. ஆத்ம மடிப்புகளை நீவிவிட்டு நேராக்கிய ஆத்ம தோழமையாகவும் இருந்திருக்கிறது. அதனால்தான் –

மரம் வெட்டுப்பட்டுக் கிடப்பதைக் கண்டவுடன் இவனுள் அத்தனை கலக்கமும், அவஸ்தையும் ஏற்பட்டதா?

யோசிப்பின் தீவிரம், அவனை அவனுக்குள் ஆழ ஆழமாய் கொண்டு சென்றது.

வீடு கட்டி, ஃபேன் மாட்டி செயற்கையான முறையில் வசதி பெறுவதற்காக... காற்றை (பிராண வாயு) உயிர்க்காற்றாக மாற்றித் தருகிற இயற்கைத் தாவரங்களை வெட்டுவது என்ன புத்திசாலித்தனம்? சுற்றுச்சூழலை நரகமாக்கிவிட்டு, இயற்கைத் தாவரங்களை வெட்டி வீழ்த்திவிட்டு... மனிதன் எப்படி வாழ? உயிர்க்காற்று இல்லாமல் எப்படி உயிர் வாழ? பிராண வாயு ஷாப்பில் போய் உயிர்க்காற்று வாங்க முடியுமா?

உயிர்க்காற்று அற்றுப் போகிற சுற்றுச்சூழலை நினைத்தாலே, பயத்தில் மனம் பதறிப் பதைக்கிறது.

முற்றத்தில் –

கையில் குழந்தையுடன் தேவானை, தேவானையின் முதற் பார்வையே சாய்ந்து கிடக்கும் மரத்தூரின் மேல்த்தான். அவள் கண்ணில் பாம்பைக் கண்ட அதிர்ச்சியும், பய உணர்வும்.

"ஏங்க... இதை வெட்டுனீக? என்னோட மாரித்தாயை எதுக்காக வெட்டுனீக? சொல்லுங்க".

பழனிச்சாமிக்கு ஒன்றும் பதில் பேச வழியில்லை. பிடிபட்ட கள்வனைப் போல் தட்டுத் தடுமாறினான்.

"இல்லே... வந்து... அய்யாதான்".

"ஏங்க... மலடியாயிருந்து சீரழிஞ்ச என்னை தாயாக்குன மாரித் தாயை வெட்டிட்டீகளே... இது ஞாயமா? இந்த வங்கொடுமையை யாராச்சும் செய்வாகளா? நீங்க ஒரு மனுசன்தானா? நாளைக்கு நம்ம புள்ளைக்கு தெய்வ குத்தம் நேராதா? ஏதாச்சும் ஆகாதா? அப்படி ஆச்சுன்னா... நா உசுர் வச்சி மண்ணுலே இருப்பேனா? சொல்லுங்க... சொல்லுங்க".

கோபமும் குலைகொதிப்புமாய் சீறுகிற தேவானை. பதில் சொல்ல முடியாமல் தத்தளிக்கிற பழனிச்சாமி. குற்ற உணர்வின் பாரம் தாளாமல் தடுமாறுகிற அவன். பேச நா எழாமல் – அவள் கண்களைக் கூட நிமிர்ந்து பார்க்கத் தெம்பில்லாமல்...

"என்னோட மாரித்தாயை என்னத்துக்காக வெட்டுனீக?" கோபமும், சீற்றமுமாய் பத்ரகாளியாகக் கதறுகிற தேவானை.

உணர்ச்சியின் உக்கிரமத்தில் கொதி நிலையாக அவள். அவனது ஆத்மாவையே பற்றி உலுக்குகிற ரௌத்ரக் குரல்.

"எதுக்கு வெட்டுனீக..? எதுக்கு வெட்டுனீக? சொல்லுங்க... வாயைத் தொறந்து சொல்லுங்க..."

"வெட்டலை... வெட்டலை... மரத்தை நா வெட்டலை" என்று உறக்கத்திலேயே பதறிப் பதறிப் புலம்புகிற பழனிச்சாமி. சத்தம் கேட்டு எட்டிப்பார்த்த அய்யா, அவனை அதட்டி எழுப்பினார்.

"டேய் பழனி, ஏண்டா பொலம்புறே?"

தாழ்வாரத் தூணில் வைத்திருந்த பாதத்தை எடுத்துவிட்டு, விருட்டென்று எழுந்தான் பழனிச்சாமி. சுற்று முற்றும் பார்த்தான். திகைப்பும் குழப்பமுமாய் அய்யாவைப் பார்த்தான். சுவரில் அண்டக்கொடுத்த தலை. பின்னங்கழுத்து முழுக்க வலித்தது.

தேவானையைக் காணோம்.

சட்டென்று எதிரில் பார்த்தான். வெட்டுப்படாமல் மரம் முழுசாக நின்றது. தங்க வெயில் மறைந்த அந்தி. மரத்திற்குள் வந்து அடைந்திருந்த மைனாக்களின் சத்தமும், இருட்டும்.

"என்னடா... பழனி..." என்ற கேள்வியோடு நிற்கிற அய்யாவைப் பார்த்தான்.

"அய்யா... வேப்பமரத்தை வெட்டாமலேயே வீட்டைக் கட்டு வோம்யா மரத்தை வெட்ட வேண்டாம்" என்று தெள்ளத் தெளிவான வைராக்யத்தோடு சொன்ன பழனிக்குள்... அரை குறையாக முகம் காட்டிய அந்தக் கனா.

மகன்ன புரியாமையோடும், சூட்சுமமாகவும் பார்த்தார் அய்யா, லௌகிக வாழ்க்கையைப் போல.

*நவம்பர் 1995, வாசுகி*

## பூமிக்குப் பொறுக்காது

"ஏய், இந்தா... காயிதம் போட்டுருக்குற புள்ளைக்கு ரூவா அனுப்பப் போறீயா.. இல்லியா?"

கோபமும் குமுறலுமாய் கொந்தளிக்கிற பெண்டாட்டியை எரிச்சலாய்ப் பார்த்தான், சங்காண்டி. "ரூவா யாருகிட்டே கொட்டிக்கெடக்கு? என்னத்தை வைச்சு அனுப்ப? நாயி வாயைப் பொத்திக்கிட்டு சும்மா கெடையேன்...?"

"தூரந்தொலையிலே ஓசிச்சோத்தை துன்னுக் கிட்டு நாதியத்தவன்போல என் புள்ள படிக்குது. செலவுக்குமா அனுப்பக்கூடாது, துட்டு? நீயெல்லாம்... ஒரு அப்பனா?த்தூ!

"ஆமடி... எளிய சாதிப்பய புள்ளே படிச்சு, சர்க்காரு நடத்தப் போகுதாக்கும்? படிச்சு, என்னத்தைக் கிழிக்கப் போறான்? வரச்சொல்லு, நாலு பன்னியை பத்திக்கிட்டுத் திரியட்டும்."

இன்னும் வாயைத் திறக்கிறாள்... மல்லுக்கு நிற்பாள்... நச்சரிப்பு கேஸ். தப்பித்து விட வேண்டியதுதான்.

துண்டைத் தூக்கித் தோளில் போட்டுக்கொண்டு வெளியேறி விட்டான் சங்காண்டி. அவனும் ஏதோ முணங்கினான், எரிச்சலில்.

"சாராயத் தண்ணிக்கே வழியில்லே... இவ...

என்னமோ 'புள்ளை, புள்ளை'ன்னு கெடந்து சாகுதா, அறிவு கெட்ட கழுதை, ஆஸ்டல்லே சோத்தைத் துன்னுட்டு படிக்குற பயலுக்கு, துட்டு எதுக்கு? பெரீய்ய சீமான் மகனாக்கும்?"

'உர்ர், உர்ர்ர்'ரென்று வாலையாட்டிக் கொண்டு திரிகிற பன்றிகளைக் கடந்து வந்தான் சங்காண்டி. மாட்டுத் தோலும் ஜவ்வுகளும் காய்ந்து கொண்டிருக்கிற நூல் கயிற்றுக் கொடிக்குத் தலைகுனிந்து வந்தவனை, முத்தாண்டி வந்து மோதினான். ஓடி வந்திருக்கிறான். 'தஸ்ஸு புஸ்ஸு'யென்று இளைத்தான். நெஞ்சுக் கூட்டில் துடிப்பும், வேர்வைக் கசிவும்.

"என்னலே... எழவெடுத்த நாயி. என்ன இப்படி வாரே?"

"எழவுதான்"

"என்னலே சொல்லுதே?"

"பெரிய வீட்டுச் சாமியவுக செத்துட்டாரு"

"போயிட்டாரா...? ச்சேய், இன்னைக்கும் சுடுகாட்டு ஜோலி தானா?" அவனுக்குள் அடர்த்தியான சோர்வும், அயற்சியும், பொண்டாட்டியிடம் எகிறிக்குதித்த கோப உணர்ச்சி, கல்லைக் கண்ட நாயாக வாலைக் காலிடுக்கில் இடுக்கிக்கொண்டு பம்மியது. நெஞ்சுக்குள் ஒரு கனம், பாரஅழுத்தம். சட்டென்று மாறிப் புரண்ட உணர்வுகளின் தடப்பதிவு.

உள் ஒடுங்கிய கோபக் கொந்தளிப்பு, ஒரு சோர்ந்த பெருமூச்சாக நிறம்மாறி வெளிப்பட்டது.

'பெரிய வீட்டுச் சாமியவுக' ஊரிலேயே பெரிய கை. சம்சாரிச் சாதி பெருத்த ஊர். ஒரே சாதி, மூர்க்கக்குணம். 'ஏலேய்' என்று வயசான கிழவனையும் சொடக்குப்போட்டுக் கூப்பிடுகிற அதிகாரக்குணம், ரொம்ப சகஜம் என்று நினைக்கிற ஊர். ஊருக்கே நாட்டாண்மை, பெரிய வீடு, சமுத்திரமாய் காடு, கரைகள், நாலா திசைகளிலும் ஏகப்பட்ட பம்ப்செட்கள், வட்டிக் கொடை வாங்கல், "ஏழு தலைமுறைக்கு இருந்து தின்றாலும்... தீராத சம்பாத்தியம். சமுத்திர சம்பாத்தியம்".

அப்பேர்ப்பட்ட சீமான் செத்திருக்கிறார். ஊரே திரண்டு அலைமோதும். போட்டி போட்டுக்கொண்டு ஓடியாடி வேலை செய்வார்கள். கொஞ்ச நேரம் தாமதமாகப் போனாலும் வசவு நாறிப்போகும். ஆள் ஆளுக்கு ஏகமாய் எகிறுவார்கள்.

"எளிய ஜாதிப் பயலுகளுக்கு இப்ப இப்ப ரொம்பத் திமிரு. ஊர்க்காரியம் செய்யணும்னா... ஒடம்பு வளையமாட்டேங்குது..."

சங்காண்டிக்குள் கசப்பலைகள். வேப்பங் கசாயம் குடிக்கிற மாதிரியோர். மனக்குமட்டல். அடிபட்டுச் சோர்ந்த முகம். கிள்ளிப் போட்ட தளிராகப் துவண்ட மனம். முத்தாண்டியை ஒரு மெல்லிய சோகத்துடன் ஏறிட்டான்.

"ஹூம்.. சரி வாலே, போவம்" காலை வெய்யிலே சுள்ளென்று தொட்டது.

டயர் செருப்பு 'லடப் லடப்'பென அடிக்க, ஊர் ஊராய் அலைச்சல். 'பெரிய வீட்டு' உறவுக்காரர்களைத் தேடித் தேடி.... வீடு வீடாய்... துட்டி சொல்ல... வந்த வருமானம் ஆறுபடி தவசமும் (தானியம்) 12 ரூபாய் பணமும். அதை வீட்டில் கொடுத்துவிட்டு... அவசர அவசரமாகப் புறப்பட்டான், சங்காண்டி.... 'லொக், லொக்' என்று ஓட்டமாய் மயானக்கரை வந்து சேர்ந்தான்.

முத்தாண்டி விறகுப் பாரத்துடன் டக்கரில் வருவான்.

ஊரின் மாரி மூலையில் சுடுகாடு. ஓடையைத் தாண்டிக் கரையேறினால்... மயானம். கூடாரம் எதுவுமில்லை. வெறும் வெம்பரப்பு. நிழல்தர முடியாத வேலிக்கருவைக்குட்டிகள்.

வெக்கரித்த வெயில். சித்திரை மாசத்து வெயில் காலத்திலும், கோடையிலும் மழையில்லாக் கொடுமை. பூமியே கொதித்துப் போய் அனலைக் கக்குகிறது. பொறுமை மாதாவான தரையே, கால் வைக்கவிடாமல் சுட்டுப்பொசுக்குகிறது.

பொழுதுக் காலைப் பார்த்தான். மணி மூன்றிருக்கும். கன்னக் கதுப்புகளிலும், முதுகுத்தோலும் தகிக்கிறது. 'தீ வெயிலாயிருக்கே' என்று முணங்கிக்கொண்டான்.

முந்தாநாள் எரிந்த கிழவியின் திரேகச் சாம்பல். 'பொது, பொது'வென்று கிடக்கிற கடுஞ்சாம்பல். சங்காண்டிக்குள் கற்றைக் கற்றையாய் அந்தக் கிழவியின் நினைவுகள்.

மூன்று ஆண் சிங்கங்களைப் பெற்றவள். புருஷனைப் பறிகொடுத்துவிட்டு வறுமையோடு மல்லுக்கட்டிப் பிள்ளைகளை வளர்த்தவள். எல்லாம் கல்யாணமாகி, மருமகள்களின் முந்தானை களில். தொலைதூர டவுனில் ஆளுக்கொரு உத்தியோகம். ஆத்தாளை நாதியத்தவளாக்கிவிட்டனர்.

அனாதைப் பொணமா செத்துக்கிடந்த கிழவி, ஊர்ச் செலவில் மயானம். விறகுகூடப் பற்றாக்குறை. சாராயம் வாங்கித்தரக்கூட ஆளில்லை. சாமக்காட்டில் ஏதோ பயங்கரச் சத்த அதிர்வில் முழித்தான். "டப்..டப்..டபீ..ர்"ரென்ற பயங்கரச் சத்தம்.

சிதையில் பிரேதத்தைக் காணோம். வெறும் தீ. பதறிப்போய்ப் பார்த்தான். சற்றுத்தள்ளி கரிக்கட்டையாய் பிரேதம் ஆடிக் கொண்டிருந்தது. ஒரு காலை மண்டிபோட்டு, தலைகுனிந்து வணங்குகிற நிலையில் கரும்பிரேதம். நெஞ்சுக்கூடு வெந்து எரிகிற போது, திரேக நரம்புக்கொடிகள் முழுவதும் திரவம் கசிய முறுகி விறைக்கும், விடைத்து நிமிரும். அப்போது... விறகுக்கனம் இல்லாவிட்டால்... பிரேதம் இப்படித் துள்ளிக் குதித்துவிடும்.

சிதையின் நெருப்பு வெளிச்சத்தில் படுபயங்கரமாக அந்தப் பிரேதக் கரிக்கட்டை. சங்காண்டிக்குள் நையாண்டிச் சிரிப்பு, மெல்லிசாக வெடித்தது. "இம்புட்டுச் சீரழிஞ்ச பெறகும்... கெழவிக்குச் சாகப் பிடிக்கலியா? வாழ்றதுலே இம்புட்டு வெறியா? கசிந்துருகுகிற மிச்ச உயிர்ப் பலத்துலே துள்ளிக்குதிச்சு வெளியேறிட்டீயே..."

பொதுவாக, இப்படியான சமயத்தில், பிரேதத்தைக் கவட்டைக் கம்பால் 'நாயறை, பேயறை'யாக அடித்து, நொறுக்கி, அள்ளிச் சிதைக்குள் போட்டுவிடுவதுதான் வழக்கம்.

ஆனால்... இதை அப்படி அடிக்க மனசு வரவில்லை. அநியாய மாக ஆயுள் பூராவும் வாழ்க்கையால் மிதிபட்டவள். 'நாமளும் போட்டு அடிச்சு நொறுக்கவா? பாவமில்லையா?'

முத்தாண்டியையும் எழுப்பி, அதட்டி, இரண்டு பேருமாய் கவட்டைக் கம்பால் தூக்கி, சிதையில் போட்டு நிமிர்த்திப்படுக்க வைத்து, நெஞ்சுக்கூட்டில் கருங்கல்லைத் தூக்கி வைத்தான்...

இன்றைக்குப் பெரிய வீட்டுச் சாமியவுக, விறகுத்தட்டுப்பாடு இருக்காது. சீமான் சாவு. இழவிலும் கூட 'ஜேஜே' என்றுதானி ருக்கும். ரூபாய் நோட்டுகளைப் போட்டே கூடப் பிரேதத்தை எரிக்கச் சொன்னாலும் சொல்வார்கள். துள்ளாமல் துடிக்காமல் பஸ்பமாகிற மாதிரி 'வசதி' பண்ணித் தருவார்கள். எல்லாம்... செய்வார்கள். விடிய விடிய பாம்பு, பேய் பயமில்லாமல், மயானம் காக்கிற சங்காண்டிக்குச் சம்பளம் தரமட்டும்... நூறு அழிச் சாட்டியம் பண்ணுவார்கள். இன்னைக்காச்சும் சாராயத் தண்ணிக்கு வழி பண்ணுவார்களா...? பார்ப்போம்.

சாம்பலுக்குள் கிடந்த கருங்கல்லைத் தூக்கி வெளியே போட்டான். காலால் சாம்பலை எற்றித்தள்ளி ஒதுக்கினான். 'குப், குப்'பென்று எழுகிற சாம்பல் தூசி. வியர்த்துக்கொட்டுகிற உடம் பெல்லாம் வந்து அப்பிக்கொள்கிற மனிதச் சாம்பல். எரியாமல் கிடந்த கால் மூட்டு எலும்புகளைப் பொறுக்கி வெளியே எறிந்தான்.

திரேக ரோமங்களெல்லாம் அப்பியிருக்கிற கருஞ்சாம்பல்.

பருத்தி மார்க்குச்சிகளை கூட்டிப்பிடித்துக்கொண்டு, தூசி துப்பட்டைகளைப் பெருக்கித் தள்ளினான்.

கொளுத்துகிற வெயில், நிமிர முடியவில்லை. கண்ணிமை முழுவதும் காந்துகிறது. கண்ணே திறக்கமுடியவில்லை. எரிக்கிற வெயிலில், மிதக்கிற கானல் அலைகள். முத்தாண்டி இருந்தாலும் வாய்க்குத் துணையாயிருப்பான். மனசின் கசப்புகளை பேசியாச்சும் தீர்க்கலாம்.

சூழ்ந்து நெருக்குகிற சூன்ய உணர்ச்சி. உள்ளுக்குள் முட்டி மோதித் தத்தளிக்கிற தனிமைத்தீ.

டிராக்டர் வருகிற சத்தம். நிமிர்ந்து பார்த்தான். டிரெய்லர் நிறைய அம்பாரமாய்... விறகு. அதன் மேல், முத்தாண்டி உட்கார்ந்திருக்கிறான்.

வட்டமடித்துத் திரும்பிய டிராக்டரிலிருந்து குதித்தான் முத்தாண்டி. அரைச் சாக்கு மூட்டையைத் தூக்கிப்போட்டான். சளபளவென்று சத்தம், விறகுகளை இறக்கிப்போட்டனர்.

"என்னதுடா... சாக்குலே?"

"தேங்காய்களும், ஆமணக்குமுத்துவும்"

டிரைவர் பக்கத்தில் போய் தலையைச் சொரிந்தான். சங்காண்டி முகத்தில் ஒரு குழைவு.

"என்ன சங்கா..."

"வேணாக் கொதிக்குற வெயில்லே கெடந்து வெந்து செத்துக்கிட்டிருக்கேன். என்னமாச்சும் கவனிக்கக் கூடாதா?"

"என்னது? தண்ணியா?"

"உம்.. உத்தரவாகட்டும்"

டிரைவர் உதடுகளில் ஏளனச் சிரிப்பு.

"ஒன்னைப் பத்தித் தெரியாதா? இந்தா... ஒரு பாட்லு"

"ரெண்டு பேருக்குமா?"

"ஆமா. சங்கா. இதை இப்ப அடிச்சுட்டு 'சடபுடா'ன்னு வேலையைப் பாருங்க. ராத்திரிக் காவலுக்கு பிராந்திப் பாட்டில் ஏற்பாடு பண்றோம்."

"அப்படியா.... சாமி"

சங்காண்டிக்குள் குற்றால அருவி. ஜில்லென்று மகிழ்ச்சியின் குளிராட்டம். பிராந்திப் பரவசம். குழந்தை மனசாகக் கும்மாளமிடுகிற மனசு. குதூகலத்தில் நனைந்து பீறிடுகிற பரவச வார்த்தைகள்.

"ஏதோ... ஒங்க புண்ணியம். பெரிய உசுரு. மணக்க மணக்க வாழ்ந்த சாமி. கொடிகட்டி அரசாண்ட தர்மதுரை. அவுக சாவுலே... எங்களுக்கு இந்த ருசியாச்சும் கெடைக்கட்டும்."

"சங்கா... மண்ணைக் கொத்தி கொழைச்சுவை. செதை பூராவும் பூசி மெழுகணும். ஜோலிகளை நல்லாப் பாருங்க. தீ வைச்ச பெறகு... ஆளுக்கொரு குவார்ட்டர். சர்த்தானே?"

"சந்தோஷம் சாமி... தர்மதுரையைப் பூசி மெழுகி... பத்திரமா சாம்பலாக்கித்தாரேன்."

டிராக்டர் தடதடத்துப்போனது. ஊருக்குள் மனித சத்தம். பெரும் கூட்டமாய் இரைச்சலிடுகிற சத்தம். டங்கா மேளத்தின் அதிர்வோசைகள். நாதஸ்வர வாசிப்புச் சத்தம். சத்தங்களில் வடிவமாகிற ஊர். இழவுக்கோலாகலம். ராஜ இழவுக் கொண்டாட்டம்.

முத்தாண்டி வேலித் தூர்களைப் புரட்டி சிதையில் வைத்தான். சங்காண்டி விறகுக் குச்சிகளை அடுக்கினான். தேங்காய்களை உடைத்து, சில்லு சில்லாக்கி உள்ளே போட்டான். ஆமணக்கு முத்துக்களையும் பரவலாகத் துவினான். ரெண்டுமே எண்ணெய்ச் சத்து, தீயை அணையவிடாமல் பார்த்துக்கொள்ளும். ஈரமண்ணால் சிதையை மெழுகிப் பூசி விட்டாலும்... உள்ளேயே தீயை எரியவைத்து, பிரேதத்தை அஸ்தியாக்கிவிடும்.

வேலை வேலையாக இருக்க... சங்காண்டிக்குள் எறும்பு ஊர்கிற மாதிரியான ஒரு நினைவு.

"மணக்க மணக்க வாழ்ந்த சாமி. கொடிகட்டி அரசாண்ட தர்மதுரை..."

பிராந்திப் பரவசத்தில் நிதானம் தப்பிப்பேசிவிட்ட வார்த்தை.

சங்காண்டிக்குள் கரிசல்காடு ஞாபகத்தை உழுதது.

ஊருக்குத் தெற்கே உப்பு மூலையில் நாலு குறுக்கம் கரிசல் காடு. நற்சதுரமான காடு, நல்லமண் கண்டம். உழுதுபோட்டால், ஈரல்கறி மாதிரி மினுமினுக்கும். சொல்லி வைத்த மாதிரி விளையும். காணப்பயறு, தட்டைப்பயறு, எள், நாற்றுச்சோளம் எது போட்டாலும் ஒன்றுக்கு நூறாக விளைச்சல் காட்டும்.

தாத்தன்காலத்துச் சொத்து. வம்ச சொத்து.

பெரிய வீட்டுச் சாமியிடம் ஒரு பிரசவச் செலவுக்காக கைநாட்டு வைத்து, முன்னூறு ரூபாய் வாங்கினான். அந்த ரூபாய்க்காக ஒன்றரை வருஷம் அவர் வீட்டில் பாடுபட்டான். மாடு மாதிரியான பாடு.

அவரும் கடனைக் கேட்கவில்லை. இவனும் ஒன்றரை வருஷச் சம்பளத்தில் கடன் அடைபட்டுப்போயிற்று என்று நினைத்துக் கொண்டான், ஏழெட்டு வருஷமாய்க் கடனைக் கேட்கவேயில்லை.

அதிசயமாய் ஆடிப்பட்ட மழை, கனத்த மழை. ராத்திரி பிடித்த மழை, கோழி கூப்பிடத்தான் ஓய்ந்தது. வாடகை ஏரைக்கூட்டிக் கொண்டு, விதைப்பண்டங்களோடு போய்ப் பார்த்தால்...

நெஞ்சில் அரிவாள் வெட்டு விழுந்த மாதிரியிருந்தது.

உழுது விதைத்துவிட்டு, பெரிய வீட்டு டிராக்டர் போய்க் கொண்டிருந்தது. குலையே கிடந்து கொதித்தது. அந்தக் கொதிப்போடு 'வேகு, வேகு' என்று வந்தான் சாமியவுகளைக் கடித்துக் குதறிவிட வேண்டும் போல.. வெறி.

வீட்டில் இருந்தார். கோபமாய் திமிறிக்கொண்டு வந்த சங்காண்டி..

"என்னலே?"

"ஏம் புஞ்சையிலே உங்க பண்ணையாளுக வெதைச்சிருக்காக?"

"அதுக்கென்ன? அது இப்ப எங்க புஞ்சை?"

"இது என்ன சாமி... அநியாயம்? அடுக்குமா?

"வாங்குன முன்னூறுக்கு வட்டி போட்டுப்பாரு. ஏழு வருஷ வட்டி."

"ஒன்றரை வருஷம் பாடுபட்டேனே... சாமி"

"ஏலேய்... ஒனக்கென்ன திமிரா? கும்பா கும்பாவா கஞ்சியைக் குடிச்சுட்டு, தொழுவத்துலே ரெண்டு சாணி சகதி அள்ளுனியே... அந்த ஒத்துழைப்புக்கா சம்பளம் போடச்சொல்லுதே?"

தன் காலடித்தரை உருவுகிறது. ஒரேடியாக அடித்துவிட்டார். அவனுக்குள் வியர்த்தது. அடிவயிற்றில் 'பகீர்' என்கிற சூன்யம். மனசில் கலக்கம். உடைகிற குரல். தோல்வி நெருங்குவதை முன்னுணர்ந்த மன அதிர்வு.

"சாமி... எங்க வம்சச் சொத்தே... இந்த மண்ணுதான் சாமி..."

"அதுக்கு நா என்ன செய்ய? உங்க தாத்தன் ஐயாயிரம், பத்தாயிரம் போட்டா, புஞ்சை வாங்கினான்? மூனு மரக்கா தவசத்துக்கு கைமாறுன நெலம்தானே?"

"சாமி... இந்தக் கொடுமையை பூமியே பொறுக்குமா?"

"பொளந்து முழுங்கிட்டுப் போவட்டும். நீ ஒண்ணும் எங்களைக் காப்பாத்த வேண்டாம்."

"ஏழை எளியதுக நெஞ்சு கொதிச்சா... நீங்க நாசமாய்ப் போயிருவீக".

"ஏலேய்..." என்று வீடே அதிர்கிறமாதிரி, கத்தினார்.

"நிதானம் தப்பிப் பேசாதே. நீ என்ன சாதி, இது என்ன ஊருன்னு ஞாபகத்துலே வைச்சுப் பேசு. தூண்லே கட்டி வைச்சு, தொலியை உரிச்சுப்போடுவேன், ராஸ்கல். என்ன நெனைச்சுக் கிட்டுருக்கே? படுவா, தொலைச்சுப் போடுவேன்... தொலைச்சு. போடா நாய்."

சங்காண்டி அரண்டு போனான். அவர் முழித்த முழி. அதிலிருந்த உக்கிரம், முகத்தின் குரூரம். கழுத்துக்குமேல் ஓநாய்த்தலை இருப்பதுபோல ஒரு மருட்சி.

நாட்டாண்மை. ஊரில் மேல்க்கை. சாதியைச் சொல்லி உசுப்பி விட்டால். திரண்டுவரப்போகிற படைபட்டாளம்.

இவனைக்கொன்று பொசுக்கினால்கூட... ஏன் என்று எதிர்த்துக் கேட்க ஒரு சுடுகுஞ்சு கூடக் கிடையாது. வாயடைத்துப்போய் வெளி யேறினான், சங்காண்டி. போக்கிடமின்றி உள்ளுக்குள் முட்டுகிற ரௌத்ரம்.

அதே கரிசல்காடு, இப்போது தோட்டமாகி, கிணறு வெட்டி, பம்ப்ஷெட்மோட்டார் மாட்டி, பெரீய்ய கொய்யாத் தோப்பாகிவிட்டது.

அந்தப் புஞ்சையைப் பார்க்கிறபோதெல்லாம், இவன் மனசு கிடந்து தகிக்கும்.வம்சப் பறிமுதல். ரத்தமே கொதிக்கும். கொதித்து என்ன செய்ய?

"கோயிந்தா... கோயிந்தா... கோயிந்தா"

பொழுது சாய்ந்த அந்தி வெளிச்சத்தில் பூப்பல்லக்கில் பிரேதம் வந்தது. ராஜபிரேதம். ராஜ ஈமச்சடங்கு. சுத்துப்பட்டி பத்து ஊர் ஜனமும் திரண்டு வந்திருந்தது. வெள்ளையும் சொள்ளை யுமாய். 'ஜேஜே' என்று வந்திருந்த பெருங்கூட்டம், பெரிய பெரிய பணக்கார மகாராசாக்களெல்லாம் தூய வெள்ளையாய் வந்திருந்தனர்.

சாஸ்திரங்கள் நடந்தன. பிரேதம் சிதையில் பதனமாக வைக்கப் பட்டது. அலுங்காமல், கதர்வேட்டி, கதர்சட்டை மீசையில்லாமல், மழுங்கச் சிரைத்த கனிந்த முகம். கண்ணியமான முகம்.

எருக்கள் அடுக்கப்பட்டன. நாவிதர் சாஸ்திரங்கள் செய்தார். சங்காண்டி குழைத்து வைத்திருந்த ஈரமண்ணால் சிதையைப் பூசினான். முத்தாண்டியும் பூசினான். துரிதகதி.

சடங்குகளெல்லாம் முடிந்து, சிதைக்குத் தீ வைத்துவிட்டு, எல்லா ஜனமும் போய்விட்டனர். வெள்ளம் வடிந்துபோன மாதிரி.

சங்காண்டியும், முத்தாண்டியும் சுடுகாடும் மட்டுமே மிஞ்சி நின்றனர். சொன்னபடியே ஆளுக்கொரு குவார்ட்டர் பாட்டில். சப்பட்டையான பாட்டில்.

ஈரமண் பூசிவிட்டதால்... தீச்சுடர் வெளியே தெரியாது. விறகுக்குள் தேங்காயும் ஆமணக்கு முத்தும் எண்ணெயாகக் கசிய உள்ளேயே எரியும் தீ, சத்தமில்லாமல் சாம்பலாகும் பிரேதம்.

இவர்களுக்கு வேலையே இருக்காது. சும்மாவே காவல் காத்துக் கிடக்க வேண்டியதுதான். அரிக்கேன் லைட்டின் வெளிச்சம். சுற்றிலும் இருட்டு. கனத்த இருட்டு.

லைட் வெளிச்சத்தில் பாட்டிலைப் பார்த்தான், சங்காண்டி.

உறைந்த ரத்த நிறமாய், பாட்டில் திரவம். இது இவன் ரத்தம். அப்பன் ரத்தம். தாத்தனின் ரத்தம். வம்ச ரத்தம்.

"தூண்லே கட்டி வைச்சு, தொலியை உரிச்சுப்போடுவேன், ராஸ்கல்..." கொடிகட்டி அரசாண்ட தர்மதுரையின் மிரட்டல். ஈரக்குலையை நடுங்க வைத்த மிரட்டல். இன்னும் நெஞ்சுக்குள் அச்சுறுத்துகிற அந்த மிரட்டல் குரல்.

நற்சதுக்கமான கரிசல்காடு. தாத்தனின் வியர்வைச் சம்பாத்தியம். அப்பன் ஆத்தாளின் காலடிபட்ட மண். என் பிள்ளைகளிடம் ஒப்படைத்திருக்க வேண்டிய வம்சச் சொத்து. பறிபோய்விட்ட தர்மம். தட்டிப்பறித்த அதர்மம். நியாயம் கேட்கப் போன என் தொலியை உரிக்கப்போவதாய் மிரட்டிய அநியாயத் துரியோதனன்.

அவன் மனசு கிடந்து கொதித்தது. மதியம் குடித்த கஞ்சி. வெறும் வயிற்றில் தீப்பசி. சாயங்காலம் குடித்த சாராயம். அதன் காந்தல்.

பிரேதம் எரிகிற சிதைத்திரடையே வெறிக்கிற சங்காண்டி. அவனுக்குள் கொதி உலையாய் தளதளக்கிற நினைவுகள். உஷ்ண நினைவுகள்.

குவார்ட்டரையும் காலி பண்ணினான். அதன் ருசி. சாராயத்திலிருக்கிற காந்தலில்லாத மென்மைச் சுவை. ஒரு பூவை விழுங்குகிற சுகம்.

அவனுக்குள் ஜ்வாலை விடுகிற நினைவுகள். ஒரே திசையில் உக்கிரமமாகிற நினைவுகள். ஒருப்போக்காய்ப் பாய்கிற போர்க்குணத் தீவிரம்.

துரியோதனன்... இப்ப இவன் ராஜ்யத்தில். இங்க இவன்தான் ராஜா. நீதிபதி. இவன் செய்வதுதான் சட்டம்.

சிதையை உடைச்சு... பிரேதத்தை எடுத்து... மாட்டுத் தொலியை உரிக்கிற மாதிரி, இவன் தொலியையும் உரிச்சு... தனித்தனியா வேகவைச்சா... என்ன!

அவனுக்குள் முளைவிடுகிற குரூரம். முளைத்த கணத்தில் விருட்சகமாகிற உணர்ச்சி உன்மத்தம். போதையில் அவன், அவனாகிறான்.

ஊர்... ஜாதி... ஊர்க்கட்டுமானம்... ஜாதியாதிக்கம்... அடிமைப் பட்ட நிலை எல்லாம் மறந்த சுயநிலை. அவன், அவனாகவே...

கவட்டைக் கம்பைத் தூக்கினான். ஓங்கிவிட்டான். முத்தாண்டி வந்து சிக்கென்று பிடித்துக்கொண்டான்.

"என்ன செய்யப்போறே?"

"இதை உடைக்கப் போறேன்."

"எதுக்கு?"

"தொலியை உரிக்கணும்."

"புத்திகெட்டுப் போச்சா... ஒனக்கு?"

அவன் கவட்டைக் கம்பைப் பிடுங்கிக்கொண்ட முத்தாண்டி.

கோபமும், கொந்தளிப்புமாய் அவனிடம் சீறிப்பாய்ந்தான், சங்காண்டி. எகிறிக் குதித்தான்.

"இது யாரு தெரியுமாடா? தருமதொரையில்லேடா, பாவி, மகா பாவி. கேடுகெட்ட நாய். எம் புஞ்சையை நக்கித்தின்ன நாயி..."

போக்கிடமற்று உள்ளேயே முட்டி மோதிக்கொண்டிருந்த கோப உணர்ச்சியெல்லாம் வசவுகளும் சாபங்களுமாய், முடிவேயில்லாத வசவுகள். இன்னும் கெட்ட வார்த்தைகள். தூஷ்ண வசவுகள்.

உடைந்த ரிக்கார்டாய்... போதையில் சொன்னதையே சொல்லிக்கொண்டே... கொதி உணர்ச்சி மாறாமல்... வசவுமேல் வசவுகளாய்... நாற வசவுகளாய், தூஷ்ண வசவுகளாய்.

ரொம்ப நேரம் கழித்துத்தான்... உறங்கினான்.

விடிந்து நேரமாகிவிட்டது. ஏழு மணியிருக்கும். மஞ்சள் வெயில் முகத்தில் உரசியது. முழித்துக்கொண்டனர். அரிக்கேன் விளக்கு எண்ணெய் வற்றி அணைந்திருந்தது. சிமினியெல்லாம் புகை இருட்டு.

சிதை நன்கு எரிந்து சாம்பலாகிவிட்டது. கருப்பு கருப்பாய் உலர்ந்து வெடித்துக்கிடந்த மண் தகடுகள். புறப்பட்டனர். ஊரை நெருங்கும்போது–

"சாமியவுக மூத்த மகன் ஒன்னைக் கூட்டிட்டு வரச் சொன்னாக."

"எங்க இருக்காக? வீட்லேயா?"

"இல்லே தொழுவத்துலே?"

இவனுக்குள் திக்கென்றது. முத்தாண்டியை வெலவெலத்துப் போய் பார்த்தான். அவன் முகத்திலும் மருட்சி. கிலி, திகைப்பு.

மயானத்திற்குப் பக்கத்தில் கிடந்த கிடையும், கிடைகாவல்காரர் விடிய விடிய முழித்திருந்ததும், அவருக்கு எல்லாச் சத்தமும் கேட்டது என்பதுவும் இவர்கள் அறியாத விஷயம்.

விடிவதற்கு முன்பே மயான சமாச்சாரம் பெரிய வீடு போய்ச் சேர்ந்துவிட்டது என்பதுவும் இவர்களுக்குச் சுத்தமாய் தெரியாது.

குழப்பமும், கிலியுமாய் அவனுக்குள் பிசைவு. நிஜ உலகத்தின் குரூரமுகம். நிஜத்தை, நிஜ உணர்ச்சியை, நிர்த்தாட்சண்யமாக நசுக்குகிற உலகம்.

அவன் கால்கள் பின்னித் துவண்டன. மனசைப் போல.

தொழுவத்துக்குள் போன சங்காண்டி. அரை மணி நேர மாயிற்று. முத்தாண்டி பதற்றமும் பதைப்புமாய்க் காத்திருந்தான்.

சங்காண்டி வந்தான். கிழிந்த கந்தல்த் துணியாக, உடம் பெல்லாம் ரத்தக் கீறல்கள். பெல்ட்டின் தடங்கள். அகல அகல தடிப்புகள்.

சாகப் போகிறவனைப் போல் துவண்டு கிடந்தான்.

பதைப்போடு கேட்டான் முத்தாண்டி.

"என்னண்ணே... இந்தக் கொடுமை?"

"எளியவங்க அடிபட்டாலும் கோபப்படலாமா? குமுறிப் புலம்பலாமா? அதுக்குத்தான்... இது."

*அவனைத் தாங்கிப் பிடித்துக்கொண்டான். சங்காண்டியால் நடக்கக்கூட முடியவில்லை. முத்தாண்டிக்கு அழுகை அழுகையாய் வந்தது.*

*"இது... சாமிக்கே பொறுக்காது."*

*"பூமிக்குப் பொறுக்குதே... என்ன செய்ய?"*

*கசந்த குரல். விரக்தியின் விளிம்பில் உடைந்து கசியும் குரல். தலைமுறை தலைமுறையான நூற்றாண்டு காலக் கசப்புக்குரல்.*

*மெல்ல மெல்ல நடந்தான், சங்காண்டி. கைத்தாங்கலாய் பிடித்துத் தாங்கிக் கொண்டு முத்தாண்டி. சங்காண்டியின் உடல் நடுக்கம்.*

*"நம்ம தலைமுறையோட மயானக்கரை வேலையைத் தலைமொழுகிறணும்டா. என்னத்துக்கு இந்த அடிமைச் சோலி?"*

*சங்காண்டி நைந்த குரலில் கசிந்தான்.*

*ஆனால்... மனசுக்குள் இறுகிப்போன வன்ம வைராக்கியமாய் ஒரு நினைவு. "படிக்குற புள்ளைக்கு மொதல்லே ரூபா அனுப்பி வைக்கணும்!"*

*மே 1996, தமிழன் எக்ஸ்பிரஸ்*

# புது ஐயா

**வீ**ட்டுக்குப் போகவே மனசில்லை பாண்டிக்கு. 'எப்படிப் போக' என்று தயக்கம்... தடுமாற்றம்... 'புது ஐயா இருப்பானே' என்கிற கசப்பு. எந்தக் காட்டுப் பயலோ... அவன் மூஞ்சியும் மொகரையும். நினைத்தாலே வேப்பங்காயாகக் கசக்குது.

பொழுதடைந்துவிட்டது. மேகத்து வெளிச்சம் மட்டும் மிச்சமாக இருக்கிறது. தவிட்டு நிறம். விளையாட்டு முடிந்து போகுமோ என்று பயமாக இருக்கிறது. தெருப்புழுதியில் தாறுமாறாய் ஓடிப்பிடித்து விளையாடுகிற பொடுசுகளின் முகம் மங்குகிறது.

பாண்டிக்கு விளையாட விளையாட ஆசையா யிருக்கிறது. ஓட ஓட விளையாட்டு. ஓடி ஓடி இளைக்கிற டவுசர் பையன்கள். மனசு கிடந்து கூத்தாடுகிறது. கேது கேது என்று இளைத்தாலும்... கும்மாளக் குதூகலிப்பில் திளைக்கிற மனசு. இன்னும் இன்னும் என்று மனசு ஏங்கித் தவிக்கிறது. தெருப்புழுதியின் மென்மைக் கதகதப்பு. தாய் மடியைவிடச் சுகமாய்... பரவசமாய்.. இதுவே உலகமாய்... விட்டுச் செல்ல மனசே வரமாட்டேன் என்கிறது.

"எழவெடுத்துப் போற சனியனே, இம்புட்டு நேரமா எங்கே போய்த் தொலைஞ்சே? வாய்லே அள்ளிப் போடுறதுக்கும் ஒன்னைத் தேடணுமோ?"

என்று அம்மா இழுத்துப் போட்டுச் சாத்துவாளே என்ற பயம். எறும்புக் கடியாகப் பையன்கள் மனசுக்குள். வீட்டுக்குப் போயாகணுமே என்கிற சலிப்பு. வேறுவழி இல்லை பையன்களுக்கு.

"அவரவரு வூட்டுக்கு அவரைக் கஞ்சி குடிக்கப் போகலாம்" என்ற ராகப் பாட்டு. கோரஸ் கோரஸாக ராக இழுப்புகள். விளையாட்டுக்கு ஜன கண மன போட்டுவிட்டு... சிட்டாய்ப் பறக்கிற சிறுவர்கள். ஓடுகிற வேகக் காற்றில் உப்புகிற முதுகுச் சட்டை. அந்தப் புடைப்புச் சந்தோஷத்துக்காவே இன்னும் வேகமாய் ஓட்டம்.

ஓடுகிற வேகத்திலும் விளையாட்டு. காராக நினைத்துக் கொள்கிற கற்பனை. வாயிலிருந்து லயம் தவறாத சப்த கிறல். "ட்ர்ர்ர்... ட்ர்ர்ர்ரூஊ...ஊ..."

செட் செட்டாய் பறந்து போய்விட்ட சிட்டுக் குருவிகள். ஒற்றைக் குருவியாக நிற்கிற பாண்டி.

இவனுக்கு இருக்கிற கூடு சரியில்லை. கூட்டுக்குள் ஒரு வேற்றுக் குருவி. ஐயா என்று உரிமையை எடுத்துக் கொண்டு அழிச் சாட்டியம் பண்ணுகிற அந்நியக் குருவி அம்மாக் குருவியை நினைத்தால் அழுகை அழுகையாக வருகிறது பாண்டிக்கு.

எம்புட்டு நேரம் தெருவில் நிற்க? சப்பென்று அறைகிற தனிமை உணர்ச்சி. வந்து சூழ்ந்துகொண்ட வெறுமையின் உறுத்தல். நாதியற்றுப் போய்விட்டோமே என்கிற சோகப்பாரம். அதன் அழுத்தம்.

பாண்டி தெருப்புழுதியை வெறித்தான். தெருவிளக்கு வெளிச் சத்தில் நிறம் மாறித் தெரிகிற புழுதி. நொறுங்கிச் சிதறிக்கிடக்கிற சருகுகள். ஓடிப்பிடித்து விளையாடிய பிஞ்சுத் தடங்கள்.

வீசுகிற ஊளைக்காற்று... கூதலடிக்கிறது.

இடுப்பில் துண்டைக் கட்டிக்கொண்டு, இடுப்பு வேட்டியை உடம்பில் போர்த்திக் கொண்டு ஒரு பெரிசு.

"என்னலே பாண்டி, ஒத்தையிலே நிக்கை?"

"சும்மாதா..."

"வீட்டைப் பாத்துப் போடா. ஒங்க ஆத்தாக்காரி தேடியலையப் போறா.. போ..."

கண்டித்து விட்டுக் கடந்து போகிற பெரிசு. போகிற போக்கில் மட்டப் பொடியை வாயில் இழுவிக்கொண்டு வப்பூ... என்று ஊதிக் கொள்கிற தாத்தா.

அடிமனசில் ரணம். நிர்ப்பந்தமாய் வீட்டை நோக்கி நகர்கிற பாண்டி. மனசில்லாத மனசின் நடை... தயக்கமும் சோர்வுமாகப் பின்னிக் கொள்கிற பிஞ்சுக் கால்கள்.

புது ஐயா வீட்டிலிருப்பான். அவன் இவனைப் பார்த்ததும் கொஞ்சுவான். "ஏலேய் பாண்டி... ஏலேய் பாண்டி" என்று குழைவான். இவனுக்கு அவனைக் கண்டாலே பற்றிக் கொண்டு வரும். "இந்தாடா... கடையிலே ஏதாச்சும் வாங்கித் தின்னுக்கோ" என்று கால்ரூபாயை நீட்டுவான்.

பாண்டி வாங்கவே மாட்டான். "எனக்கு வேண்டாம்" என்று வெடுக்கென்று சொல்லிவிட்டு, வேறு பக்கம் திரும்பிக் கொள்வான்.

அம்மாவுக்கும் இப்ப இப்ப அறிவே இல்லாமப் போச்சு. வெக்க மானத்தை உதுத்துட்டா. 'நெறையக் குளிச்சா கூதல் இல்லே'னு துணிஞ்சிட்டா.

எந்தக் காட்டுப் பயலோ அவன். "வாய்யா.. சாப்புடுதியா?"ன்னு அவனைக் கூப்புட்டு வெச்சு சோறு போடுதா. அவன் திங்குற அழகை, பக்கத்துலே உக்காந்து ரசிக்கா... புதுப்பொண்ணு போல சிரிப்பு வேற. வெக்கக் கேடு!

பாண்டிக்கு எரிச்சல் எரிச்சலாய் வருது.

தெருவை அடைத்துக் கொண்டு நெருக்கியடித்து நகர்கிற செம்மறியாடுகள்... புழுதி கிளம்புகிறது. தூசிப் புகையா எழுந்து, தெருவிளக்கு வெளிச்சத்தில் வெள்ளைப் படுதாவாக நெளிகிறது.

ஆடுகள் கடந்து போன பிறகும் ஒதுங்கியே நிற்கிற பாண்டி. கிராமத்து ராத்திரியின் மழலைப் பருவம். எருமைகளும், வெள்ளாடுகளும், மனிதர்களுமாய்த் தெருவில்.

வீட்டுக்கு வீடு சத்தம். வாசல் அளவுக்கு வெட்டியெடுத்த வெளிச்சத் துண்டமாய் முற்றத்தில். சாப்பாடு நடக்கிறது. பிள்ளை களை அதட்டுகிற அம்மாக்கள். போதை வெறியில் தள்ளாடித் தடுமாறி, 'காச் மூச்'சென்று சவடால் பண்ணுகிற ஆண்குரல்கள்.

"அட... நீ வேற இச்சிலாத்தி! ஆட்டம் போட்டுப் போதையைக் காட்டுத்தியாக்கும்? வாயைப் பொத்திக்கிட்டு சும்ம கிட" என்று பயமில்லாத... அலட்சியமாய் அதட்டுகிற பெண் குரல்கள்.

தெருப்புழுதியைப் பிஞ்சுப் பாதங்கள் எற்றியெறிய... மெதுநடையாய் நடக்கும் பாண்டி.

அவனுக்குள்...

அவனது ஐயா.. வயது நாற்பது இருக்கும். காதோரம் ஒன்று ரெண்டு நரை. அழுக்கு வேட்டியும் அழுக்குத் துண்டுமாய் ஐயா. ரத்தச் சிவப்பாய் கண்கள். எந்நேரமும் போதையில்தான். கிட்ட வந்தாலே... அழுக்கு நாற்றமும், சாராய நெடியும் குப்.. குப்..பென்று வீச்சமெடுக்கும். கறுத்துச் சொரசொரத்த ஒடம்பு. விறகு வெட்டி வெட்டிக் கை காய்த்து மரத்துப் போயிருக்கும்.

அப்பனுக்குரிய ஆசையோட, பாசத்தோட ஒருநாளும் சிரித்தது மில்லை. கனிந்த பேச்சு பேசியதுமில்லே. பாண்டி மொகம் பார்த்தாலே, அவன் மொகம் ஏழு கோணலா கோணிக்கொண்டு போகும். வெறுப்பும் அசூயையுமாய்ச் சீறுவான்.

கண்ணில் காணவிடமாட்டான். சும்மா நின்றால் கூடச் சுள்ளென்று அடிப்பான். "என்னலே வெறகுக் கட்டையா நிக்கே? ஓடுறா அங்குட்டு" என்று துரத்துவான்.

"இந்தாடா காசுவா. கடையிலே ஏதாச்சும் தீம்பண்டம் வாங்கிக்கோ" என்று ஒருநாள்கூட நீட்டியதுமில்லை. இவனும் கையேந்தி வாங்கியதுமில்லை. இவனைப் பார்த்தாலே தீயாய்ச் சீறி விழுவான்.

"எவனுக்கோ பொறந்த ஈனப்பய. ஏந்தலையிலே ஏம் புள்ளைன்னு... த்தூ" என்று அடிக்கடி கசந்த குரலில் காறித் துப்புவான்.

பாண்டிக்கு அந்த வார்த்தையின் அர்த்தம் புரியாது. ஆனால், ஐயா முகத்தில் நெளியும் அசூயைச் சுருக்கங்கள் தெரியும். மனசுக்குள் இனம் புரியாத ஒன்று, இடறலாய் தட்டுப்படும்.

ஒரு நாள் –

நாலாப்பு வாத்தியார் பள்ளிக்கூடத்தில் அதட்டலாய்க் கேட்டார். அவர் கத்திய கத்தலில் கதிகலங்கிப் போனான் பாண்டி.

"எவண்டா... பாண்டியராசுங்குறது?"

"என்ன சார்?" என்று நடுங்கிப் போய் எழுந்து நின்றான். மழையில் நனைந்த கோழிக்குஞ்சின் நடுக்கம்.

"நீதான்... பாண்டியராசா?"

"ஆமா... சார்"

அவனது அரைகுயர் நோட்டு, அவரது கையில் "ஏண்டா...

பேருக்கு முன்னாடி இன்ஷியல் போடவே மாட்டேங்குறீயே... ஏம்லே?"

"சும்மாதா... சார்..."

"என்ன சும்மா? அப்பன் இல்லாம... ஆகாசத்துலேயிருந்தா குதிச்சிட்டே? இனிமே எழுதறப்ப பேருக்கு முன்னாடி இன்ஷியல் போட்டு எழுது...ம்?"

"ஆட்டும் சார்..."

தலையையாட்டுவான். ஆனாலும் இன்ஷியல் போட மனசே வராது. அப்பனாயில்லாத ஒரு ஜென்மத்தை அப்பன் என்று எப்படி ஒப்புக்கொள்ள?

வாத்தியாருக்குப் பயந்து இன்ஷியல் போட அரை மனசாய் முயன்றால், அப்போது பார்த்துத்தான், பேனா சண்டித்தனம் பண்ணும், விட்டு விட்டு எழுதும்.

ஐயாவை நினைத்தாலே மனசு கிடந்து நடுங்கும்.

அம்மாவையும் இப்படித்தான். ஒரு நிமிஷம்கூடச் சிரிக்க விட்டதேயில்லை. அம்மா சிரிச்சு பாண்டி பாத்ததேயில்லை. அறுத்துப் போட்ட கீரைத்தண்டா அம்மா வாடிப் போய்க் கிடப்பாள். அருள்கெட்ட முகம். எந்நேரமும் அழுகையும் புலம்பலும் தான். காய்ந்த முடிக்கற்றை ரெண்டு பக்கமும் தொங்கும். உசுரில்லாத கண்கள். ஒளியில்லாத மொகம். கிழிஞ்சு நைஞ்ச சித்திரமாய்...

ஐயா, அம்மாவை அடிக்கும்... கணக்கு வழக்கு இல்லாமல். காய்ஞ்ச தலை முடியைக் கொத்தா பத்திக்கிட்டு... ஒரு சுண்டு சுண்டி இழுத்துப் போட்டு மிதிக்கிற கொடுமை. நாளெல்லாம் பார்த்த நரகக் கொடுமை. வாய்க்கு வாய் வசவுகள்தான். நாற வசவு. வார்த்தைக்கு வார்த்தை காறித் துப்புவான்.

பாண்டிக்கு அழுது அழுது அலுத்துப் போச்சு. பதறிப் பதறி மனசே மரத்துப் போச்சு.

இம்புட்டு நடந்தாலும் அம்மா "அடப்பாவி மனுசா... இப்புடிப் போட்டு கொல்லுதீயே..."னு அழத்தான் செய்வா. கதறிப் பொலம்பத்தான் செய்வா. அம்மா கோபப்படவே மாட்டா. ஆனா, பாண்டிக்கு அம்மா மேலே கோபம் கோபமா வரும்.

அம்மா எதுக்கு இம்புட்டுப் பொறுத்துப் பொறுத்துப் போறா? சூடு சொரணை அத்துப்போச்சா? "போடா நாயே"னு விளக்கு மாறால் அடித்தால் என்ன? ஏன் அடிக்க மாட்டேங்குறா?

என்னத்துக்கு? எதுக்காக?

குடிகார நாயாயிருந்தாலும் புருஷன்னு மதிக்கணும்குறதுக் காகவா? என்னத்துக்கு மதிக்கணும்? வாலைச் சுழட்டிக்கிட்டு காலைச்சுத்துற நாய்க்கு வெறி புடிச்சுட்டா... அடிச்சுக் கொல்லுற தில்லையா?

இந்த வெறி நாயை மட்டும் அம்மா இப்படி அதிகாரத்தோட – உரிமையோட எதுக்கு அலையவிட்டுருக்கா? கடிபட்டுக் கடிபட்டு ரத்தத்தையும், கண்ணீரையும் வடிச்சிக்கிட்டிருக்கா? ச்சேய்!

ஐயா பொண்ணு கேட்கிற காலத்துலே, அம்மா சம்மதிக்கலி யாம். 'மாட்டேன்'னாளாம். பெரியாள்க தலையிட்டுப் பேசி, அம்மாவுக்குப் புத்திமதி சொல்லி... கல்யாணத்தை 'மூய்ச்சி' வெச்சாகளாம்.

அதுவே ஐயா மனசுக்குள்ளே வன்மம்... வெறி... தாலி கட்டுன நாளிலிருந்தே ஐயாவுக்கு ஆத்திரம். நாளாக நாளாக அதுவே ஐயாவுக்குச் சுபாவமாயிருச்சு.

ஒன்னோட மூஞ்சி மொகரைக்கு நா எளப்பமாயிட்டேனாக்கும்? நீ பெரீய்ய ரதியா? பழம் தின்னு, பால்லே கைகழுவுற சீமாட்டியா? எச்சிக்கலை நாயே எவனையாச்சும் மனசுலே நெனைச்சிருந்தியா? இல்லை... எவன் கூடயாச்சும் தொடுப்பு வெச்சிருந்தியா?" என்று நாக்கில் நரம்பில்லாமல், கத்தி வீச்சாகக் கேள்வி கேட்பானாம். அம்மாவைத் துன்பப்படுத்தி, துயரப்படுத்தி ரசிப்பானாம். அதுவே அவனுக்கொரு சந்தோஷம். ஆம்பளைங்குற வெற்றிக்கொடியை நட்டிவிட்ட மகிழ்ச்சி. குரூர மகிழ்ச்சி.

தலைப்பிள்ளையே பாண்டிதான். அதுவும் கல்யாணமான பதினோராவது மாதத்திலேயே அவசரமாய்ப் பிறந்துவிட்டான். அம்புட்டுத்தான்.

அவனது வன்மத்துக்கு அவனளவில் நியாயம் தோன்றிவிட்டது. 'எவனுக்கோ பொறந்த ஈனப்பய' என்கிற ஆத்திரப் பாட்டு. குரூரக் கூத்தாட்டம். ஓநாயின் ஊளைப்பாட்டு. பாட்டுக்கள்...

அன்றைக்கு –

பாண்டிக்குக் காய்ச்சல். வகுப்பிலேயே வாந்தியெடுத்து விட்டான். நாலாப்பு வாத்தியார் அவனை வீட்டுக்குப் போகச் சொல்லிவிட்டார். கூலிவேலைக்குப் போயிருந்த அம்மா வரும் வரைக்கும் வாசலில் கிறங்கிப் போய்க் கிடந்தான்.

வந்து பார்த்த அம்மாவுக்குக் குலை பதறியது. தலையில் தலையில் அடித்துக் கொண்டு அழுதாள். சாமியைச் சபித்துக் கொண்டே கசாயம் போட்டுக் கொடுத்தாள்... பத்து அரைத்துப் போட்டாள்.

"எம்புள்ளைக்கா... இந்தக் கதி வரணும்? அடக்கூத்துவனே, தாயத்த புள்ளே மாதிரி வாசப்படியிலே கெடந்துருக்கானே" என்று புலம்பிப் புலம்பி மருகினாள்.

காய்ச்சல் விடவில்லை பாண்டிக்கு. மண்டைக் குத்து வேறு. நெற்றிப் பொட்டில் கோழி கொத்துகிற மாதிரி வலி. ரண வேதனை. ஒறக்கம் வரவில்லை. கெட்ட கெட்ட கனாக்கள் வந்தன. அம்மிக்குழவியைத் தூக்கி ஐயா மண்டையில் போடுகிற மாதிரியான கனா. உடைந்த முட்டைக்கூடாக... ஐய்யாமுகம் சப்பளிஞ்சு போன மாதிரி பயங்கரக் கனா.

ஐயா ராத்திரி, நேரம் கெட்ட நேரத்தில்... வழக்கத்தைவிடக் கூடுதலான போதையில் வந்தார். நிலைகொள்ள முடியாத போதை. நிற்கமாட்டாமல் தடுமாற வைக்கிற போதை. அத்துடன் உன்மத்தம் வேறு.

'சாப்புடுதியா?'னு கேட்ட அம்மாவின் முந்திச் சேலையை உருவிய ஐயா 'புள்ளை இப்படிக் கண்ணு முழியாத காய்ச்சல்ல கெடக்குதே' என்கிற குலைக்கொதிப்பிலிருந்த அம்மா.

"ஏய்... என்ன செய்தே?"

"வாடி, தாலி கட்ன புருஷன்தானே? வந்து படு..."

"புள்ளை முழிச்சுக்கிடக்குதுய்யா..."

பதறிப் பதைக்கிற குரலில் அம்மா. முந்திச் சேலையைப் பற்றிப் பிடித்துக் கொண்டு, விலகுகிற யத்தனிப்பில் அவள்.

"அவரு முழிச்சுக் கெடந்தா... நா ஒறங்கணுமோ? அவன் கிடக்கட்டும்... நீ வாடி..."

"பாண்டி பாவம்யா. காய்ச்சல்லே அணத்திக்கிட்டுருக்கான்" கருணையை எதிர்பார்க்கிற பிச்சைக் குரல். மனித மனசை அதிர வைக்கக்கடிய அவலக் குரல். சோகம் அடர்ந்த ஹீனக்குரல்.

"காய்ச்சலா? அவனுக்கா? நல்லவேளை, செத்துத் தொலையட்டும். சனியனைத் தலைமுழுகிறலாம்"

அப்பத்தான் –

அம்மா, அம்மாவானாள். கொதித்துப் போனாள். காலம் பூராவும் தேக்கி வைத்திருந்த வெக்கையையெல்லாம் கூட்டிச் சேர்த்து... கற்றைத் தியாகச் சீறினாள். பாச ஈரம், கோபாக்கினியாய் வெடித்தது!

பத்ரகாளியாகிப் போன அம்மா... ஓடிப்போய் அடுப்பில் கிடந்த கொள்ளிக் கட்டையைத் தூக்கி, ஐயா முகத்துக்கு நேராக நீட்டி – தெருவே அதிர்கிற மாதிரி பேய்க் கத்தலாய்க் கத்தினாள்.

"போடா வெளியே... மிருகமே!"

தெரு கூடிவிட்டது.

மறுநாளே, ஊர்க்கூட்டத்தைக் கூட்டினாள் அம்மா. "இவனோட இனி நா வாழவே மாட்டேன். பட்டதெல்லாம் போதும். என்னை அத்துவிட்டுருங்க" என்று ஒற்றைக்காலில் நின்றாள். பெரியவர்கள் சொன்ன வார்த்தைகள் எதற்கும் செவிசாய்க்க மறுத்துவிட்டாள்.

ஐயா போட்டிருந்த பரிசப்பணம் 250 ரூபாய். அம்மா 500 ரூபாயைப் பஞ்சாயத்தில் கட்டினாள், சாதி வழமைப்படி, ஊர்ப் பெரியவர்கள் அவர்களது கல்யாண உறவை தீர்த்து விட்டார்கள்.

அதற்குப் பிறகுதான் அம்மா ஒரு புது மனுஷியாக மலர்ந்தாள். அம்மா முகத்தில் ஒரு உயிர்க்களையே வந்தது. கண்ணில் ஒரு மின்னல் தெறித்தது. பாண்டிக்கு அம்மாவைப் பார்க்கப் பார்க்கச் சந்தோஷமாயிருந்தது. விட்டு விடுதலையான சிட்டுக்குருவியாய் அம்மா சுற்றிச் சுற்றி வந்தாள். நாலு வயசு குறைந்த மாதிரி துள்ளித் துள்ளி வந்தாள். கண்ணில் ஒரு உயிரொளி சுடர் விட்டது.

பாண்டிக்கு றெக்கை முளைத்த மாதிரி இருந்தது. 'ஜிவ்' வென்று ஆகாசத்தில் பறக்கிற பரவசம்.

அந்தப் பவரசம் ஆறு மாதத்துக்கு மேல் நீடிக்கவில்லை.

விறகு வெட்டுகிற இடத்துக்கு முள் நறுக்குகிற கூலி வேலைக்குப் போய்க் கொண்டிருந்தாள் அம்மா!

ஒருநாள் –

அம்மா... நல்ல புதுச்சேலை கட்டினாள். பூ வைத்து அலங்கரித் துக் கொண்டாள். பார்க்க ரொம்ப அழகாக இருந்தாள். கண்ணுக் குக் குளிர்ச்சியாய்... லட்சணமாய்... உயிர் வெளிச்சமாய்... நிறைவு செய்கிற பந்தத்தில் பிணைந்து கொள்ளப் போகிற வெட்கையாய்...

வெறும் பீடத்தில், வெயிலில் உட்கார்ந்திருந்த அருவாச் சாமியின் முன்னால்... நாலைந்து பெரியவர்கள் அம்மா. இந்தப்

புது ஐயா, அம்மா கழுத்தில் ஒரு மஞ்சக் கயிறைக் கட்ட... சுற்றி யிருந்த ஏழெட்டுப் பெண்கள்... குலவையிட்டனர், மூணு தடவை.

பாண்டிக்கு ஒண்ணும் புரியவில்லை. கண்ணைக் கட்டிக் காட்டில் விட்ட மாதிரியிருந்தது. பழைய சாபத்திலிருந்து விடு பட்டு, புதிய மன உறவில் கரைந்த அம்மாவின் மகிழ்ச்சியைக்கூட இவனால் ரசிக்க முடியவில்லை.

எங்கிருந்தோ வந்து முளைத்த இந்தப் புது மனிதன். வீட்டுக்குள் உரிமையோடு உலவுகிறவன். இவனிடம் கொஞ்சுகிற நடிப்புக் காரன்!

அம்மாவின் தோளில் ரொம்ப சகஜமாகக் கை வைக்கிற அத்து மீறல். கன்னத்தைக் கிள்ளி, நாசி நிமுண்டுகிற திமிர். அம்மாவும் செல்லச் சிணுங்கலாய்ச் சிணுங்கி... புதுப் பொண்ணாக நெளிகிற குழைவு.

பாண்டிக்கு இதைத் தாங்கவே முடியவில்லை. சகித்துக் கொள்ளவும் முடியவில்லை. அம்மாவிடம் சொல்லலாமா? எப்படிச் சொல்ல? "நீ நிம்மதியா சந்தோஷமாயிருக்குறது எனக்குப் பிடிக்கலே"ன்னு சொல்லவா? அது பாவமில்லையா?

பாண்டியின் பூ மனசுக்கு அதுவும் முடியவில்லை. என்ன செய்ய? இந்த புது ஐயாவை எப்படிச் சகிக்க? தனது அம்மாவை வேறு எவனோ பறித்துக் கொண்டிருப்பதை எப்படிப் பொறுக்க?

பாண்டிக்கு ஒன்றும் புரியவில்லை. வீட்டுக்குப் போகவே முடியவில்லை. பிஞ்சுக் கால்களில் இரும்புக் குண்டு போட்ட மாதிரியிருந்தது.

தெருவிளக்கு வெளிச்சத்தின் எல்லை முடிகிற இடத்தில், ஒரு சந்து. கண்ணைப் பொய்யாக்குகிற கனத்த இருட்டு. பழகிய தடத்தில் பாதங்கள் நகர –

'தக், தக், தக்'கென்று யாரோ நடந்து வருகிற அரவம். அதிர்வும் தவிப்புமாய் அலை மோதுகிற நடையின் உக்கிரம்.

'அம்மாவா...?'

பாண்டிக்குள் ஒரு சின்னச் சலனச் சந்தேகம்.

"யா..ரு..?"

"என்னம்மா?"

"ஏ ராசா... பாண்டி... எங்கடா போயிருந்தே...?"

தேடிய புதையலைப் பார்த்துவிட்ட பரவசக் கதறலாய் அம்மா. தவித்த மனசின் ஆறுதலாய்.. உணர்ச்சித் தத்தளிப்பு.

"வெளையாடப் போயிருந்தேம்மா..."

"ஒன்னைக் காணாம ஊரெல்லாம் தேடித் திரிஞ்சேனடா... ஏங்கண்ணு... ஏஞ்செல்லம் சாப்பட வேண்டாமா?"

சாப்பிட்டான். சாப்பிடுவதையே அழகு பார்த்தாள் அம்மா. கொஞ்ச நேரமாயிற்று. எங்கோ மயில் கத்துகிற சத்தம்!

"படுப்பமா? கதவைப் பூட்டுடா..."

கதவருகில் போய்... சில கணம் தயங்கினான்.

"பூட்டுப்பா..."

"அந்த... ஐயா?"

'அந்த'வில் துல்லியமாய் நின்ற அந்நியம். அம்மா சிரித்தாள். "அது உள்ளே படுக்கமாட்டேன்னு சொல்லியிருச்சு. இன்னிக்கு மட்டும்.."

"ஏம்மா?"

"வெறகு வெட்டுன அலுப்பு. கொஞ்சம் குடிச்சிருக்கு. அதான்... திண்ணையிலே படுத்துக்கிடுதேன்னு சொல்லி படுத்து ஒறங்கிடுச்சு..."

அவனுக்குள் ஏதோ ஒரு கதவு திறந்த மாதிரி... குப்பென்று கற்றை வெளிச்சம் வந்து நுழைந்த மாதிரி... புழுக்க நெடியையெல்லாம் அடித்துச் செல்லும் காற்று புகுந்து பரவிய மாதிரி...

வெளித்திண்ணையை எட்டிப் பார்த்தான். மங்கலான வெளிச்சத்தில் உற்றுப் பார்த்தான். ஓர் ஆள் குண்டக்க, மண்டக்கப் படுத்திருக்கிற இருட்டு வடிவம்.

சாராய நெடியும், அழுக்கு வாடையுமாய் மூர்க்கமாய் ஐயா ஆடிய ஆட்டங்கள். அம்மாவை அடித்து மிதித்து, நாற வசவுகளாய் ஆர்ப்பரித்த பயங்கரங்கள். பயந்து பயந்து இவன் செத்த அந்த நாட்கள்... நரக நாட்கள்...

'குடிச்சிருக்கேன். வெளியே படுத்துக்கிடுதேன்' என்று ஒதுங்கிக் கொண்ட புது ஐயா. இதில் தட்டுப்பட்ட இனம்புரியாத ஏதோ ஒரு பண்பு. மனுசமனசக் கீறி விடக்கூடாதே என்கிற மனுசத்தனமான பண்பு... பாசப் பண்பு...

பாண்டிக்குள் அலைமோதுகிற பலவித உணர்வுகள்.

*அடர்த்தியான பெருமூச்சு விட்டான்.*

*காலையில் –*

*இந்தப் புது ஐயா சிரித்தால்... முகம் கொடுத்துச் சிரிக்கணும். வாங்கித் திங்க காசு கொடுத்தால்... ஆசையோட வாங்கிக்கிடணும்!*

*9.6.96 ஆனந்தவிகடன்*

*இலக்கியச்சிந்தனை பரிசு பெற்றது.*

# என் கனா

***நா****ன் இல்லாவிட்டால், என் நாயகன் வர மாட்டானே... மழையில்லாவிட்டால் . மண் என்னாகும்...? மனிதன் என்னாவான்...? மரங்கள் இல்லாத உலகத்தில் சுத்தமான காற்றே இருக்காதே... காற்று இல்லாமல் மனிதன் எதைச் சுவாசிக்க...? எப்படி உயிர் வாழ...?*

*சட்டென்று கண்ணை மூடிக் கொண்ட சாயங்கால வெயில். வெள்ளி நிற மேகமெல்லாம் கூடிக் குழைந்து கர்ப்ப வேதனையில் முகம் கறுத்தன. அதன் கோபத்தில் சூரியன் மறைந்துகொண்டது. தரையில் மேக நிழல்களாகக் கனத்த இருட்டு!*

*எனக்கு ஒரே புழுக்கம். நசநசப்பு. மூச்சே போகவில்லை. மயக்கப் படபடப்பில் மனத் திணறல். ஆனாலும், மனசின் ஒரு மூலையில் முகம் தெரியாத மகிழ்ச்சி! 'எனக்குப் பிரியமான மழைக் காதலன் வரப்போறானோ...?'*

*ஒரு மாயத் தோழி பிசாசாக வந்து மோதினாள். "அடியே, ஒன்னோட ஆள் ஆசையோட வாராண்டி" என்று கேலியும் கிண்டலுமாக உடம்பெல்லாம் கிச்சலம் காட்டினாள்! வெட்கத்திணறலோடு தவித்த என் திரேகத்துக்குள் அவளது விளையாட்டுச் சேட்டைகள்!*

*என் பச்சையாடைக்குள் புகுந்துகொண்டு செய்த*

அலைக்கழிப்புகள். அவளது மூர்க்க விளையாட்டில் எனது மஞ்சள் மேலாடைகள் நழுவி உதிர்ந்தன! பரவசம் தாளாமல் தோழியின் குதூகலத்தில் கூத்தாடினேன்!

"ச்சீ... போடி" என்ற என் போலிச் சிணுங்கல், "ஊய்ய்... ஊய்ய்..."யென்று பேரோசைகளாகச் சீறியது.

"வந்துட்டாண்டி" என்ற கூச்சலோடு விட்டு விலகிப் போன தோழி. அவளது சட்டென்ற விலகலில் திகைத்துப்போன நான். 'எங்க போய்ட்டா இந்தச் சிறுக்கி?' என்ற திகைப்பில் ஸ்தம்பித்துப் போனேன். என்னைப் பிடித்துக் கொண்ட தனிமை... பரவசத் தனிமை... காதலன் முன்னால் தனித்துவிடப்பட்டோமே என்கிற இன்பத் திணறல்!

ஒரு சுகச்சூன்யத்தில் திகைத்துக் கிடந்த என்மேல் பொட்டென்று விழுந்த முதற் துளி. என் மழை நாயகனின் ஈர ஸ்பரிசம்! என்னுள் புல்லரிப்பு. என் நரம்பெல்லாம் பாய்ந்து பரவிய இன்பச் சிலிர்ப்பு! என் திரேகமே குழைந்து... விறைத்து... தடுமாறித் தத்தளித்து...

என் காதலனின் மழைத்துளி முத்தங்கள், முத்தங்கள். கிறுகிறுத்துப் போய்க் கண்ணை மூடிய என் உடம்பெல்லாம் ஈரமாக்கும் மேக முத்தங்கள்.

என் காதலனின் மோகக் கொஞ்சல்கள்! ஆசை மிழற்றல்கள், காதுக்குள் இறங்கிய முழக்கங்கள். குமுறிக் குமுறி முழக்கங்கள்! மூடிய கண்ணுக்குள்ளும் என் நாயகனின் மின்னல் புன்னகைக் குறும்புகள், ஒளிக்கோலமாக ஊடுருவிப் பாய்ந்தன. எனக்குள்ளும் மோகவெறி!

வெக்கரித்த வெயிலிலும்... அழுக்கான தூசியிலும் திணறிப் போய் விரகதாபப்பட்டுக் கிடந்த என் நெருப்பு முழுவதையும் அணைத்து, சாம்பல் தண்ணீராகக் கரைத்துக் கழுவிய என் நாயகனின் மூர்க்கத் தழுவல்கள்! தரையெல்லாம் தண்ணீர்க் காடு. என் உடம்பெல்லாம் என் நாயகனின் நீர்க்கோடுகள்! மழையின் முரட்டுக் காதல்!

இன்பச் சுமையின் ஈரத் ததும்பல். மூழ்கிக் களைத்த ஆசை மயக்கம். துவண்டு, கிறங்கிக் கிடந்த என்னைவிட்டு விலகிய என் காதலன். கண்ணைத் திறக்க முடியாமல் பரவசத்தில் கிடந்த என்னுடன் இன்னும் சரச விளையாட்டுப் பேச்சில் சிணு சிணுக்கிற சிறு தூறல்கள். பிரிய மனமில்லாமல், விட்டுவிட்டு ஓடிவந்து தழுவிக் கொள்கிற தூவானம்!

காதலன் போய்விட்டான். அவனது ஈரச்சுவடுகளை இழக்க விரும்பாமல் இன்னும் என் இலைகளில் ஏந்திக் கிடக்கிறேன். அவன் முத்து முத்தான முத்தங்கள், என் இலைகளில் ஈர ஒளித்துளிகளாக இன்னும் தொங்கி நிற்கின்றன! அசையக் கூட விரும்பாமல்... அப்படியே அடித்துப் போட்ட மாதிரி சலனமற்று மயங்கிக் கிடந்தேன்!

வந்து நின்ற தென்றல் தோழியின் குறும்புச் சீண்டல். அந்தக் குளிர்ச் சீண்டலின் மென்மையான கேலியில் அதிர்ந்து போனேன்! அந்தத் திடுக்கிடலில் ஆடைகளைச் சுருட்டிக் கொண்டு பதறிப் பதைத்து எழ முயன்றபோது –

பொல பொலவென்று உதிர்ந்த என் நாயக ஈரச் சுமைகள்... ஒளித்துளிகள்!

என் காதலனின் வெறியாட்டத்தில் அரண்டு போய் வீடுகளுக்குள்ளும், தாழ்வாரங்களிலும் ஒதுங்கி நின்ற மனிதர்கள் வெளியே வந்தார்கள்!

பெய்த மழையில் திரண்டோடிய தெருத்தண்ணீர் ஊர்ப் புழுதியின் எல்லாச் சுவடுகளையும் கழுவித் துடைத்திருந்தது. ஈர நெகிழ்வில் குழைந்திருந்தது!

அழுக்கு உடைகளும் சவரம் செய்யாத முகமுமாகத் தலையில் துண்டைப் போட்டு மூடிக் கொண்டு வந்த கிராமத்தாட்கள்! தெருவில் புதுத்தடங்கள். அவர்கள் பாதம் பதிய, விரலிடுக்குகளில் பிதுங்கி வழியும் சகதி!

உற்சாகமும் மகிழ்ச்சியுமாக அவர்கள் குரல், புதுமுகம் காட்டியது.

“கோடை மழைங்கற கொணத்தைக் காட்டிருச்சே. திடுதிப்புனு வந்து பெரும் போடாப் போட்டுருச்சே...!”

"ஆமா... சமயத்துக்கு கை குடுத்த மழை. தவிச்ச வாய்க்குத் தண்ணி ஊத்துன புண்ணிய மழை!"

"கோடை வெள்ளாமை குதி போட்டு வரும். இனிமே. கெணத்துக் காட்டுகள்லேயும் நீர்க்கண் தெறக்கும்".

"ஆமா... வறட்டிழுப்பா இழுத்த கெணறுகள்லே இனிமே தண்ணி ‘கெத்து, கெத்து’னு கெடக்கும்."

"அதைவிட முக்கியம்... வாயில்லாச் சீவனுக மாடு – கன்னுகளுக்குக் குடிதண்ணிப் பஞ்சம் இருக்காதே..."

"ஆமா. நமக்கும்தான்..."

– அந்தக் குரல்களின் புதிய உணர்வு முகம். அவர்கள் மனசுகளில் மகிழ்ச்சித் ததும்பல். எனக்குச் சந்தோஷமாக இருந்தது! என்னைப் பார்க்க என் காதலன் வந்தால்... அந்த வருகை, எத்தனை உயிர்களுக்கு உற்சாகம்! பூமிக்கே புதுமிருது! பயிர் பச்சைகளுக்குப் புதிய வெளிச்சம்!

எனக்குள் பெருமிதம்... பூரிப்பு..! அதிலும் மனுஷங்களுக்கு நன்மைன்னா... எனக்கு ரொம்பப் பெருமை. பிறந்த வீட்டுக்கு ஒரு நன்மை என்றால்... மகளுக்கு ரொம்பச் சந்தோஷமாகத்தானே இருக்கும்?

இன்னும் நாலைந்து பேர் என்னைக் கடந்தனர். அவர்களை எதிர்ப்பட்ட ஒருவன், வேகமும் பதைப்புமாக வந்தவன்....

"ஒங்களுக்கு வெஷயம் தெரியாதா?"

"என்ன வெசயம்?"

"நம்ம சின்னக்கனி நாடாரு மண்டையைப் போட்டுட்டாரு!"

"அடப்பாவமே... அதுவும் அப்புடியா? பத்து நாளா சட்டடியா படுத்துக் கெடந்தாரு. போய்ச் சேர்ந்துட்டாரா?"

"ஆமா..."

எனக்குள் அதிர்வு! என் நாடி நரம்பு எல்லாம் அதிர்ந்து நடுங்கியது. அந்த நடுக்கத்தில் என் பச்சையாடைகளில் மிச்சம் மீதியாக ஒட்டியிருந்த நீர்த்துளிகள், கண்ணீர்ச் சிதறலாய் சோக மௌனமாய் உதிர்ந்தன!

அடப்பாதரவே... அவரு செத்துப் போய்ட்டாரா? – எனக்குள் நம்ப முடியாமல் ஓடிய ஒரு நினைவு. நம்பித்தான் ஆக வேண்டும்.

அவர்தான் என்னை இந்த இடத்தில் ஊன்றியவர். குழிதோண்டி... கரிசல் மண் போட்டு... சாணமும் போட்டு... என்னை நட்டார். என் பாதுகாப்புக்காக வட்டமாக முள்வேலி போட்டார். தினம் தினம் வந்து பார்ப்பார், பாசத்தோடு. என் வளர்ச்சியின் ஒவ்வொரு அணுவிலும் மகிழ்வார்! ஒரு ஆடு குட்டியை நெருங்க விடமாட்டார்!

என்னைக் கண்ணுக்குள் வைத்து, பிள்ளை மாதிரிக் காப்பாற்றினார். அவர் போய்ட்டாரா...? செத்துப் போய்ட்டாரா? இனி என்னைக் காப்பத்தறது யாரு? எனக்கு யாரு நாதி? நா நாதியத்துப் போய்ட்டேனா...?

எனக்கு அழுகை அழுகையாக வந்தது. தலைவிரி கோலமாக நெஞ்சில் அடித்துக் கொண்டு கதறணும் போலிருந்தது. துக்கம் துக்கமாக வந்தது.

ரூல் தடியளவுதான் அப்ப என் கால். ஒரு குடையளவுக்குத்தான் என் உடம்பு... அப்ப நான் பூக்கக்கூட செய்யவில்லை.

அப்ப வந்து ஒருவன் என் பிஞ்சு விரல்களை ஒடிக்க நினைத்து... என்னை வளைத்தான்.

"அது எவண்டா... மரத்தை வளைக்குறது?" – அதட்டலாக சின்னக்கனி நாடார். அவர் முகமெல்லாம் கோபக் கடுப்பு.

"சும்மாதான்... பல்குச்சி ஒடிக்கணும்..."

"பல்குச்சியா? மடையா... இந்தச் சின்னக் கன்னுலே போயா ஒடிக்கிறது? பச்சைப்புள்ளே விரலை ஒடிக்கிறததுக்கு ஒனக்கு எப்படிடா மனசு வர்றது?"

"என்ன மாமா... பல்குச்சி ஒடிக்கிற சின்ன விஷயத்துக்குப் பெரிய பெரிய வார்த்தைப் பேசுறீரு!"

"பெரிய வேப்ப மரத்துலே போய் ஒடி. யாரு வேண்டாம்னு சொன்னாக...? இதுலே ஒடிக்கக்கூடாது. சின்னக் கன்னு..."

சின்னக்கனி நாடார் எனக்கு அடிக்கடி தண்ணீர் ஊற்றுவார். அவ்வப்போது வந்து என்னைத் தடவிப் பார்ப்பார்! என் சொற சொறப்பான திரேகத்தில் அவரது மென்மையான ஸ்பரிசம். எனக்கு ஒரே குதூகலம்... சந்தோஷம்! தினம் தினம் வருடமாட்டாரா என்று ஏங்குகிற அளவுக்கு சுகமான தடவல்!

அவரது பார்வை பிடிக்கும்... பாசம் பிடிக்கும்... அன்பு பிடிக்கும்... அவரை மாதிரியான மனிதர்கள் எல்லோருமே எனக்குப் பிடிக்கும். மனிதர்கள்தான் என்னைப் பயன்படுத்தி, என் பிறவிப் பயனையே எனக்கு உணர்த்துகிறார்கள்!

அப்ப நான் கொஞ்சம் வளர்ந்துவிட்டேன். மார்கழி, தை மாசம் எனக்குக் குதூகலமான மாசங்கள். நிறையக் கொழுந்துகள் கண்விழிக்கும். பங்குனி பிறந்துவிட்டால், கொத்துக் கொத்தாகப் பூப்பேன்; என் பூவாசம் கம்மென்றும் பரவும். பூப்பூத்துவிட்டால் போதும்... எங்கிருந்துதான் வருமோ... சிற்றெறும்பு, கூட்டம் கூட்டமாக வரும். அதுகளுக்கு என் பூ மேல் ஒரு மயக்கம்! என் காயைத்தான் யாரும் சீந்தமாட்டார்கள்! கசப்புக்கே என் காய்தான் உதாரணம். என் காயையும் சில சிறுமிகள் பறிப்பார்கள்! காயின் தோலை விரல் நகத்தால் கிழிப்பார்கள். உள்ளிருக்கும் திரவத்தில்

ஊசி மாதிரியான குச்சியால் தொட்டுத் தொட்டு அவர்களது சின்னக் கைகளில் பெயர் எழுதுவார்கள்.

"அய்ய்... பச்சை குத்திட்டேன்" என்று சிறுமிகளின் குதூகலம் என்னையும் பற்றிக் கொள்ளும்!

இப்ப எனக்கு இருபது வயதாயிற்று. என் பிரமாண்டமே எனது அழகு. எல்லாமே அண்ணாந்து பார்ப்பார்கள்!

"பெரிய மரமாயிருக்கே... ஒரு கொழையோ குச்சியோ ஒடிக்கலே போலிருக்கு. படு லட்சணமாக இருக்கே..."

"சின்னக்கனி நாடாரு கவனிப்பு. யாரும் கை வெச்சிர முடியாது".

"தூர் ரொம்ப அகலமாயிருக்கே. ஓர் ஆள் சேர்ந்து கட்டினாலும், கட்ட முடியாது போலிருக்கு"

"ஆமா... அவரு ஆள் முறுக்காயிருந்து வெவசாயம் பண்ணுன காலத்துலே வெச்ச மரம். இப்ப ஆள் தளர்ந்துட்டாரு. காடு – கரை, மாடு – கன்னு எல்லாத்தையும் மகன்கிட்டே ஒப்படைச்சுட்டு ஒய்ஞ்சி உக்காந்துட்டாரு. அந்தா, இந்தானு இருவது வருஷம் இருக்கும்லே?"

"ஒரு கோணல்மாணல் இல்லாம, நேரா நிமிர்ந்து நிக்குது... தூரு வெட்டி ஆறப்போட்டு... பலகையா அறுக்கறதுக்குத் தோதான மரம்..."

என் அழகே எனக்கு எமன். பார்க்கிறவர்களுக்கெல்லாம் வாயில் எச்சில் ஊறியது. "வெட்டணும், வெட்டிரணும்" என்று அலை பாய்ந்தார்கள். எனக்குள் நடுக்கம். மரண நிழலின் பயங்கரம்.

ரெண்டு தடவை எனக்கு விலை பேசிவிட்டார்கள். கோடாரி, கடப்பாரைகளோடு எமன், காலன், தூதன்களாக வந்து விட்டார்கள். நல்லவேளை! சின்னக்கனி நாடார் வந்து என்னை சேர்த்துக் கட்டிக்கொண்டார்.

"என்னை வெட்டிட்டு இந்த மரத்தை வெட்டுங்க..." என்று வைராக்கியமாகப் போராடினார். அவர் மகனுக்கு, அய்யாமேல் எரிச்சல் என்றால்.. மகா எரிச்சல்.

"பாடு பட்டுச் சம்பாரிச்ச சொத்து பத்தெல்லாம் வுட்டுக் குடுத்தீரே... இந்த வேப்பமரத்தை மட்டும் தரமாட்டேங்கிறீரே... ஏன்ய்யா...?"

"ஏலேய்... நாங்குடுத்த மாடு – கன்னு, காடு – கரை நல்லா

இருக்கணும்னா... மழை தண்ணி வேணும்டா... மழை தண்ணி வேணும்னா... மரம், கன்னுக இருக்கணும். மாரித்தாய்க்குப் பிடிச்ச மரம்டா இது... மாரித்தாய்ன்னா யாரு...? மழைதாண்டா..."

சோகமும் கொதிப்புமாக மல்லுக்கு நின்று ஜெயித்துவிட்டார். நான் உயிர் தப்பிவிட்டேன்.

மைனாக்கள், கிளிகள், காகங்களுக்கு நான்தான் புகலிடம். நானே அதன் உலகம். நிழலும் உணவும் தருகிற உலகம். மைனாக்களின் பொய்ச் சண்டைகள் எனக்கு ரொம்பப் பிடிக்கும். நல்ல கூத்து மாதிரியிருக்கும். அதன் கீச்சுமூச்சு என்ற கத்தல்.... நல்ல சங்கீதம். கேட்கச் சுகமாக இருக்கும்.

என் காலடியில் குழந்தைகள் விளையாடும். கிழடுகட்டைகள் காலை நீட்டி உட்கார்ந்து, ஊர்ப்புரணிகள் பேசும். உழைத்துக் களைத்தவர்கள் துண்டை விரித்துக் குறட்டை போடுவார்கள்.

ஊரில் யாருக்காச்சும் ஜன்னிக் கோளாறு என்றால், என் பட்டைகளை உரித்துப் புகை போடுவார்கள். குடல் புண் என்றால்... என் கொழுந்துகளை அரைத்துக் குடிப்பார்கள். படையே நடுங்கும் பாம்பைக் கண்டு.... அந்தப் பாம்பின் விஷம் என்னைக் கண்டால் பயந்தோடும். வைசூரி, அம்மைக்கட்டு, பல்வலி என்றால்... நான்தான் மருந்து.

இதில் எனக்கு ஏகப்பெருமை. மாரியாத்தா கோவில் திருவிழா என்றால்... எனக்கு ஏகப்பட்ட மரியாதை. மஞ்சள், குங்குமம் வைத்து என்னைக் கும்பிடுவார்கள். ஆடு மேய்ப்பவர்களுக்கு நான்தான் குலதெய்வம் மாதிரி.

என் காலடி நிழலில் பொங்கல் வைத்து எனக்கு மரியாதை செய்வார்கள்.

எல்லாம் போய்விடும். இனி எனக்கு நாதியில்லை. என்னைப் பிள்ளை மாதிரி அணைத்துக்கொண்டு.... "வெட்டாதிங்கடா" என்று மல்லுக்கட்ட சின்னக்கனி நாடார் இல்லை. என்னை உயிரென நினைத்துத் துடிக்கிற இதயம் நின்று போயிற்று. என்னைக் காப்பாற்ற ஆளில்லை.

என்னை விற்றுவிடுவார்கள். வெட்டி ஆறப்போட்டுப் பலகை பலகையாக அறுத்துப்போட ஆள் தயார். எமன் ரெடி. நான் என்ன செய்ய...?

நான் இல்லாவிட்டால், என் நாயகன் வரமாட்டானே... மழையில்லாவிட்டால் மண் என்னாகும்...? மனிதன்

என்னாவான்...? மரங்கள் இல்லாத உலகத்தில் சுத்தமான காற்றே இருக்காதே... காற்று இல்லாமல் மனிதன் எதைச் சுவாசிக்க....? எப்படி உயிர் வாழ...?

எனக்குள் பயம். வேரின் நுனிவரை அச்சநடுக்கம். பயத்தின் படபடப்பில் என் பூக்களெல்லாம் உதிர்ந்தன. என் கண்ணீராக... துருத்தி நின்ற பிசின்.

... என்னைச் சுற்றி வட்டமாகக் குழி தோண்டுகிறார்கள். முழங்கால் உயரத்துக்கும் மேலான ஆழக்குழி. குழிக்குள் நின்று... எனது கணுக்காலைப் பார்க்கிறார்கள். ஆணிவேர் முடிச்சு. அதுதான் என் உயிர் முடிச்சு.

அங்கே கோடாரியால் போடுகிறார்கள். டங்...டங்...டங்...கென்று. அலறித் துடிக்கிற உயிர். என் ரத்தச் சதைகளாகத் தெறிக்கிற சந்தன நிறச் சிராய். ஈர ரத்தம் மின்னுகிற சிராய்த் துண்டுகள். உயிர்த்துளிகள். சதைச் சிதறல்கள். கூடார வீடு போன்ற என் திரேகமே நடுங்கிக் குலுங்குகிறது. என் மனம் மரண வேதனையில் தவிக்கிறது.

எனக்காக அல்ல... என்னைப் படைத்த மனிதர்களுக்காக. என் பிறவிப் பயனை எனக்கே உணர்த்திய என் ஞானத்தந்தை களுக்காக. நீரும் பாதுகாப்பும் தந்து உயிர் வளர்த்த ஆத்மாவுக்காக. ஆசையும் பாசமுமாக என்னைப் பார்த்து, தொட்டு வருடிய இதயங்களுக்காக.

"மழையில்லாம நீங்க தவிக்கக்கூடாதே... என்னைப் பெத்த அய்யாமார்களே... நல்ல காத்து இல்லாம நீங்க நாசமாயிடக் கூடாதே.... மரங்களை வெட்டி நாசமாக்கிட்டா, மரங்களுக்கு நட்டமில்லே.... உங்களுக்குத்தான் நட்டம். உங்க உசுருக்கு நட்டம், உடம்புக்கு நட்டம். எதிர்கால வாழ்வுக்கு நட்டம். அய்யாமாரே... என்னைக் காப்பாத்துங்க. என் மூலமா உங்களையும் காப்பாத்திக் கோங்க.... அய்யாமாரே... அப்பன்மாரே... என்னைப்பெத்த தங்கப் பெட்டிகளா..."

என் அலறல் யாருக்கும் கேட்கவில்லையே... ஐயோ... என் ஆத்மத் துடிப்பு, காலத்தின் குரல் என்று புரியவில்லையே... ஐயையோ.... கோடாரி வெட்டு மாறி மாறி விழுதே...

ஒரு சங்கு ஊதுகிற சத்தம்..... திடுக்கிட்டு விழித்துவிட்டேன். என்னைச் சுற்றிக் குழி வெட்டவில்லை. கோடாரி வெட்டும் விழவில்லை. "சின்னக்கனி நாடார் செத்துப்போனாரே...' என்ற பயத்தில் வந்த கெட்ட கனா...

சங்குச்சத்தம் தொடர்ந்து, இளவட்டங்களின் ஆரவாரக் கூச்சல். அலங்கரிக்கப்பட்ட தேரில் சின்னக்கனி நாடாரை வைத்துத் தூக்கி வருகிறார்கள். அவரது கடைசிப் பயணம்.

என்னைக் கடக்கிற ஊர்வலம். நாடிக் கட்டோடு உட்கார்ந்திருக்கிற நாடார். அழுது கதறுகிற என்னை ஏக்கமாகத் திரும்பிப் பார்ப்பதைப் போல ஒரு பிரமை.

என்னால் தாங்கமுடியவில்லை. என் கிளைக் கைகளும் இலையாடைகளும் வாடைக்காற்றுக்குக் கூத்தாட... மாரடித்துக் கதறினேன். 'ஐயோ.... என் ராசாவே... என் அய்யாவே...'

* * *

ஒருவாரம் ஆயிற்று. மண்வெட்டி, கடப்பாரை, கோடாரியோடு நாலு பேர் வந்தனர் என்னிடம். என்னுள் படபடப்பு.... பயப்படபடப்பு. என் கடைசி நேரம் நெருங்கிவிட்டது. மரண தேவனின் சுவாச உஷ்ணம், என்னைத் தகித்தது.

என்னைக் காப்பாற்ற நாடார் இல்லை. கட்டிச் சேர்த்துப் போராட ஆத்மா இல்லாத சூன்யச் சூடு. வெறுமைப் பகீர்...

அப்போது–

மொட்டையடித்த தலையோடு அவரது மகன். அண்ணாந்து என்னைச் சோகம் ததும்பப் பார்த்தான். கண்ணில் ஒரு நீர்க்கசிவு. அய்யாவையே என்னில் பார்த்தானோ...

"மரத்தை வெட்ட வேணாம்..."

"எதுக்கு....?"

"காடுகரை குடுத்த எங்க அய்யாவைக் கடைசிக்காலத்துல நானும் புள்ளைகளும் நல்லபடியா நடத்தலே... புத்தியைக் கடன்குடுத்துட்டேன். அவரைத்தான் கௌரவமா காப்பாத்த முடியலே... அவரு உயிரா நெனச்ச இந்த மரத்தையாச்சும் காப்பாத்தணும். ஏன்னா, இது அவரோட உயிர். இது, அவரேதான்...."

"நாங்க குடுத்த அட்வான்ஸ்....?"

"பத்து நாள்ல திருப்பித் தர்றேன்..."

எனக்குள் பரவசம். மழை நாயகன் வந்து தழுவிய மாதிரி இன்பப் பரவசம். சின்னக்கனி சாகவில்லை; சாகமாட்டார்.

*20.4.1997, ஆனந்தவிகடன்*

# மரணம்

**அ**ய்யாவுக்கு கட்டிலைவிட்டு எழுந்திருக்க முடியவில்லை. இன்றைக்கு, நார்க்கட்டில், நாள்பட்ட கட்டில், நார்ப்பின்னல் துவண்டு ஊடு பள்ளம் விழுந்திருந்தது தொட்டிலைப்போல.

நாள்பட்ட சீக்கு – க்ஷயரோகம். இளைப்பும், தகையுமாக சருமம் விம்மி விம்மித் தணியும் நெஞ்சுக் கூட்டுக்குள் சலங்கை குலுங்குகிற மாதிரி 'கொல கொல'வென்று இரைச்சல் போடுகிற சளி. இருமல் வந்தால், சூறாவளி மாதிரிதான். வாடிப்போன சோளப்பயிரை சுழற்றியாட்டுகிற மாதிரி ஓர் உலுக்கு உலுக்கியெடுத்துவிடும் அய்யாவை.

கட்டிலைச் சுற்றி ரொம்ப நாளாக ஒருவீச்சம். துப்பிய சளியின் துர்நாற்றம். நிரந்தர ஈர மொய்ப்பு. மணல் நிறைந்த சிரட்டை பூராவும் சளியின் கருமை.

எலும்புக்கூட்டு மேலே நனைந்த காகிதம் போல படிந்திருந்தது வெளுத்த சருமம். நிறைய நரைத்த ரோமங்களும், சுருக்கங்களும், அதில்.

குத்துக்கால் வைத்து உட்கார்ந்தால்.... முழங்கால் உயரத்திற்குள் மொத்த உடலே முடங்கிக்கிடக்கும். தசையில் அசையும்போதுதான் உயிர் இருப்பதே தெரியும்.

"தாயீ... சுடு தண்ணியிருந்தா... ஒரு டம்ளர் குடேன்" என்று கேட்பதற்குள், ஒரு மலையில் ஏறி இறங்கிய

இளைப்பு. களைப்பு. அயற்சியில் சொருகிக்கொள்கிற கண்கள்.

ஆனாலும்... லேசுமாசான நடமாட்டம். வீட்டுக்கும் வெளிக்குமான நிதான நடை. ஓடைக்குக்கூட போய் விட்டுவந்து விடுவார். சீக்காளிக்குரிய நிரந்தர முணுமுணுப்பு. புலம்பல். முடங்கிக் கிடக்கமாட்டாத நடை. சலன நடை. எங்காவது நகர்ந்து கொண்டேயிருப்பார்.

"ஓடித்தவிச்ச நாய் கணக்கா தகைக்குது. எளைக்குது. பேசாம.... கட்லே கெடந்தா என்ன?"

சலிப்பும் கோபமுமாய் கண்டிக்கிற அம்மாவை கோபமும் குமுறலுமாய் விறைப்பாக திரும்பிப் பார்ப்பார் அய்யா. நோயில் விழுந்த சிங்கம். கிழட்டு வேங்கை.

"நடக்கவும் வேண்டாங்கியா? கட்லேயே போட்டு பொதைச் சிரணும்னு திட்டமா?"

அய்யாவின் முதுமைக் கர்ஜனை. ஹீனமான உறுமல்.

அப்பேர்ப்பட்ட அய்யா, இன்றைக்குத்தான் எழ முடியவில்லை. தூக்கி உட்காரவைத்தாலும் முடியவில்லை.

இடுப்பு தாங்கவில்லை. சட்டடியாகப் படுத்துவிட்டார். வீடு முழுக்க மரணவாசம் மூச்சுமுட்டியது.

ராசாத்தி இரண்டு குடத்தைத் தூக்கிக்கொண்டு அவசரப் பரபரப்பாக வெளியே ஓடினாள். "தண்ணி வந்திரிச்சு.... தண்ணி வந்திரிச்சு" என்று தெருவில் பிள்ளைக்காடுகளின் கூப்பாடு.

சாட்டடியாய் விழுந்த காளைமாடு மாதிரி துள்ளத்துடிக்க எழுந்தாள். குடங்களைக் கவ்விக்கொண்டு பாய்ந்தாள். மின்னல் பாய்ச்சல்!

சட்டடியாய் விழுந்து கிடக்கிற அய்யாவை, ஓரப்பார்வை பார்த்தாள். அந்தப் பரபரப்பிலும்.

தெருவில் இவளை மாதிரியே மின்னல் பாய்ச்சலாக ஓடுகிற பெண்கள். இவர்களின் 'தக்...தக்...தக்' நடை தரை அதிர்வு. ரப்பர் குடங்களில் உராய்வுச் சத்தம்.

இவளும் தண்ணீர் குழாய் நோக்கி ஓடினாள். மதிய நேரம், அவ்வளவாக பெண்கள் கூட்டம் இல்லை. நெரிசல் இல்லை.

மளமளவென்று தண்ணீர் எடுத்தாள். பாவாடை நனைந்து, இடது காலோடு அப்பியது. இடுப்பு தாவணியிலும் நனைவின் சொதசொதப்பு!

மனசுக்குள் அய்யா. சாட்டடியாக விழுந்துகிடக்கிற ஐயா. கண்ணுக்குள் மட்டும் உயிர்ச்சுடர் துடிக்கிறது.

'இருக்கட்டா, அணையட்டா' என்று அலைபாய்ந்து தவிக்கிறது. மொய்க்கிற ஈக்களுக்கு மத்தியில் கட்டிலோரம் தரையில் உட்கார்ந்திருக்கிற அம்மா, 'பூவும் பொட்டும் போய்விடுமோ' என்ற மனபாரத்தில் அவள், சுவரில் சாய்ந்து கிடக்கிறாள்.

நெகிழ்ந்து அவிழ்ந்த தலைமுடி வலது தோளில் குலைந்துகிடக்கிறது. உலர்ந்த உதடுகள், சோகத்தில் கறுத்தமுகம். திரைவிழுந்த புருஷனின் கண்ணிலேயே கண்பொருந்திய நங்கூர நிலை. திகில் கடந்த இறுக்கம். முடிவறிந்துவிட்ட மனசின் கனம். கண்ணோரங்களில் நீர்த்திரளாக நின்று துடிக்கிற மனம்.

நல்லியிலிருந்து சிறிச்சினந்து தெறிக்கிற தண்ணீர். வெள்ளிக் கற்றையாகப் பாய்கிற தண்ணீர். குடத்தின் மீது குடமாக வைக்கிறாள். நிறைந்த குடத்தை ஒரு லாத்து லாத்தி... தூக்கி.... இடுப்பில் வைத்து.... அதன் கழுத்தை இடதுகையால் வளைத்து.... ஒரு சாய்வான நிலையில் நடந்துவருகிறாள் ராசாத்தி. நனைந்த பாவாடை, கால்களுக்கிடையில் 'லடப், தடப்' என்று சத்தம் போடுகிறது.

அவளுக்குள் பழைய அய்யாக்கள். திடமாய் நடந்து திரிந்த அய்யா. க்ஷயரோகம் முகம் காட்டாத பழைய அய்யா. ஓங்கு தாங்கான திரேகத்தோடு தாட்டியமாய் நடந்து அலைந்த அய்யா. முரட்டு அய்யா. மூர்க்கமான ஐயா.

அவர் தெருவில் நடந்தாலே, வீட்டுக்குள் ஒரு நடுக்க அலை பரவும். தோல் செருப்புதான் அணிவார். கனத்த செருப்பு. நாலு விரல் கனம். அடிப்பாகத்தில் நிறைய ஆணிகள். குமிழ் ஆணிகள். மண் தரையில் எட்டுமேல் எட்டுவைத்து நடந்து வந்தால் ஆணிகள் நெறுநெறுக்கும். "சர்ர்ருக் சர்ர்ருக்..." என்று கர்ஜிக்கும். அந்தக் கர்ஜனையின் கம்பீரத்தில் அடிவயிறு கலங்கும். பயத்தில் பதைக்கும்.

கோபத்தில் அய்யா முழித்தால், அய்யனார்சாமி கண்ணைப் போல, அகன்றிருக்கும். தெறித்து விடுவதைப் போல கருமணிகள் புடைக்கும். சிவப்பு நரம்புகளில் இரத்தச் கிறல்கள் தெரியும்.

பார்த்தாலே குடலைப் புரட்டிக்கொண்டு வரும். மனசு கிடந்து படபடக்கும்.

எந்நேரமும், வேலை, வேலை என்றுதான் பறப்பார். காட்டில்

வேலை, வீட்டில் வேலை, தொழுவத்தில் வேலை... ஒன்றும் ஜோலியில்லையென்றால், மாட்டைப் பத்திக்கொண்டு மேய்க்கப் போய்விடுவார்.

'இரண்டு கட்டு வைக்கோலாச்சும் மிஞ்சுமே' என்ற நினைப்பு. வியர்வை வழிந்துகொண்டே இருக்கும். அதற்காகவே ஜென்மம் எடுத்தவர் போல பாடுபடுவார்.

அவர் உழவு என்றால், ஊர் மெச்சும். மேழியை அழுந்தப் பிடிப்பார். உடம்பின் பாரம் முழுவதையும் மேழியில் இறக்குவார். கொழுமுனை, நிலத்தின் இறுக்கத்தைப் பிளந்து வகிர்ந்து கொண்டே முன் நகரும்.

அருகு வேர்களெல்லாம் 'மடேர் மடே'ரென்று அறுபடுகிற சத்தம் கேட்கும். உடைந்து நெளிந்து விலகிச் சரிகிற மண்ணின் மிருதுவும் குளிர்மையும் பாதத்தில் முத்தமிடும்.

அப்பேர்ப்பட்ட பாட்டாளி. ஆனால்....

சிரிக்கவே மாட்டார். அவர் சிரித்து அமமா கூடப் பார்த்திருக்கிறாளோ என்னவோ தெரியவில்லை. ராசாத்தி பார்த்ததேயில்லை. அய்யாவின் போட்டோ ஒன்றேயொன்று புகைபடிந்த பழுப்பு நிறத்தில் சுவரில் தொங்கும். அதில்கூட முறைத்துக்கொண்டும், விறைத்துக்கொண்டும்தான் இருக்கிறார். சிரிப்பு என்கிற வாடையே கிடையாது.

மனசின் அழகுகளையெல்லாம், மலர் இதழ்களையெல்லாம் வியர்வையாகவே கொட்டிவிடுகிறாரோ என்னவோ... வீட்டுக்குள் இருக்கும்போதெல்லாம் கோபமும், சிடுசிடுப்பும்தான். முறைப்பும், அனல் முழிப்பும், எரிச்சலான அதட்டல்களும்தான்.

அய்யா என்றாலே அதட்டல், மிரட்டல், அச்சுறுத்தல்தாம்... புலியின் உறுமலும், சிங்கத்தின் கர்ஜனையும்தான்.

மதிய வெயிலின் உக்கிரம். தெருப்புழுதியே வெள்ளிக்கடலாய் ஜொலித்தது. ஈரக்கால்களில் அப்புகிற சுடு புழுதி. சுகமான வெது வெதுப்பாகி விடுகிற மறுகணம். ராசாத்தி அதையும் உணர்ந்தாள்.

ஈரப்புழுதியோடு சேர்ந்து ஒட்டிய நீளமான சருகு. காய்ந்து உலர்ந்த சோளப்பயிர்த் தோகை. வலது காலில் ஒட்டிய சருகு, வலது கெண்டைக்காலையும் வருடியது. உரசியது. காந்தலான கூச்சம்.

குடத்துடன் நின்றாள். சற்றே குனிந்து, அந்தச் சருகை எடுத்துக் காற்றில்விட்டாள். அந்நேரம் நிமிர்ந்த அவள் பார்வை. அவள்

பார்வை மோதிய அந்த வீடு. மின்னல் சொடுக்குகிற ஒரு கணம். அக்கணத்தில் கண்ணுக்குள் விழுந்த அந்தப் பரவசம். மனசையே குளுமையாக்குகிற வசந்தப் பசுமை. தளிரின் புதுமைப் பேரொளி.

அந்த வீட்டில்...

வாசலை ஒட்டிய நடையில்...

கைலி மட்டுமே உடுத்தியிருந்த ஆண்மகன். ரோமம் நிறைந்த வெற்றுடம்போடு மல்லாக்கப் படுத்திருக்கிற அவன். அவனது நெஞ்சில் அஞ்சு வயசுச் சிறுமி. அவன் ஏதோ விளையாட்டு காட்டு கிறான். கிசுகிசு மூட்டுகிறான் போலும். அந்தச் சிறுமி குலுங்கிக் குலுங்கிச் சிரிக்கிறாள். சலங்கைச் சிரிப்பு. சிரிப்ப(ா)ணி. எச்சில் வழிய வழிய சிரிப்பு. வழிகிற எச்சில், கண்ணாடி நூலாக.... அவன் மார்பு ரோமங்களில் படர்கிறது.

அந்தத் தம்பலப் (வண்ணத்து) பூச்சியின் சிறகடிப்புச் சிரிப்பு. சிரிப்பு வர்ணங்கள். வர்ணப் பேரொளியின் அலையடிப்புகள். அந்தச் சிறுமியின் பிஞ்சுப் பாதங்கள் அவன் தாடையில் உதைக்கின்றன. உதையின் மகிழ்ச்சியில் சுகவேதனைப்படுகிற அவன். அந்த அப்பன். கொந்தளித்துச் சிரிக்கிற பாசத் தகப்பன்.

மின்னலாய் அவளுக்குள் பாய்ந்த அந்தக் காட்சி. அந்தக் காட்சியின் இன்பத் ததும்பல். அதன் நுரைவழிவுகள்.

ராசாத்தியால் இயல்பான வேகத்தில் நடக்க முடியவில்லை. மனமயக்கத்தில் அவள். கனவில் நடப்பவளைப் போல.... மெதுநடை. பிரக்ஞையிழந்த நடை.

வீட்டுப்படியில் ஏறினாள். வட்டத் தொட்டியின் விளிம்பில் குடத்தை வைத்துச் சாய்த்தாள். தளர்வான பாரத்தோடு சரிகிற 'பொத், பொத்' சத்தம். ஊற்றிக் கொண்டே கழுத்தைச் சாய்த்து உள்ளுக்குள் பார்த்தாள்.

உயிர் கழன்று திருகுகிற 'கொரட், கொரட்' டென்கிற இழுவைச் சத்தம். அசைவற்ற அய்யாவின் எலும்புக்கூடு. மொய்க்கிற ஈக்கள். உட்காருவதும் - பறப்பதுமான கறுப்பு ஈக்கள். சோகத்தில் உறைந்து போனவளாக அம்மா. சுவரில் சாய்ந்த தலையோடு கவலைகள் குவிந்த கண்ணின் நிலைத்த பார்வையோடு...

வெற்றுக்குடம் இடுப்பையும், ஈரப் பாவாடை காலையும் கவ்விப்பிடிக்க.... ராசாத்தி தெருவுக்குள் இறங்கினாள். அவள் அவளுக்குள் இறங்கிப் பறந்தாள்.

அப்ப ஏழு வயசிருக்கும். ராசாத்திக்கு, பூப்போட்ட கவுனும், ஜட்டியும் போட்டிருப்பாள். தலைமுடியைச் சீவி இழுத்து, உச்சியில் ரப்பர் போட்டு, பூ வைத்திருப்பாள் அம்மா. குளிப்பாட்டி சீவிச் சிங்காரித்தாலும்... அடுத்த நிமிஷமே தெருப்புழுதிக்குப் போய்விடுவாள். சிட்டாய்ப் பறந்துவிடுவாள்.

அவளுக்கு தெருப்புழுதி என்றால் உயிர். சுகமாக இருக்கும். அதன் 'மெத்... மெத்....' என்கிற குழைவு; பாத விரல்களுக்கிடையில் பிதுங்கிப் புகையாகிற அந்த அழகு. உட்கார்ந்தால் தாய் மடி மாதிரி சந்தோஷமாக இருக்கும்.

குதூகலத்தில் மனசு சிட்டுக் குருவியாகச் சிறகடிக்கும்.

புழுதியில்தான் பொழுதுக்கும் விளையாட்டு. புழுதி என்றால் ராசாத்திக்கு ரொம்பப் பிடிக்கும். விளையாட மட்டுமல்ல, திங்கவும் ரொம்ப ருசியாக இருக்கும்.

கைநிறைய புழுதியை, அள்ளுவாள். உள்ளங்கையே சொளகு மாதிரி புழுதி மண்ணைப் புடைக்கும். தெள்ளித்தெள்ளி... குறுமணலை நீக்கிவிட்டால்... மாவுப் புழுதி மட்டுமே மிஞ்சும். அதை அப்படியே வாயைத் திறந்துகொட்டினால்....

அந்த வாசமே மனசை மயக்கும். அந்த ருசிவேறு. வாயின் ஈரம் முழுவதிலும் 'கப்'பென்று போய் அப்பிக்கொள்கிற அந்த உஷ்ண வாசம். புழுதி ருசி. உள்நாக்கெல்லாம் மணக்கும்!

அன்றைக்கும் அப்படித்தான்.

தெருப் புழுதியில் கால்களை அகட்டி உட்கார்ந்திருந்தாள். புழுதியிலேயே உயிர் கலந்துகிடந்தாள்.

சுற்றிச் சுழலும் மொத்தப் பிரபஞ்சத்தையே மறந்துவிட்டாள். அவளது உள்ளங்கையே உலகம். அதில் மாவுப்புழுதி. மனசையே கிறங்கடிக்கிற போதைப் புழுதி. உயிர் முழுவதும் உள்ளங்கைப் புழுதிக்குள் மயங்கித் திளைத்த தருணத்தில்...

உச்சி மயிரை யாரோ பற்றுகிற உணர்வு. உச்சிமண்டையில் தீ வைத்த மாதிரி காந்தல். நிமிர்ந்து பார்த்தால்.... பேய் முகம். கோபமும், ஆத்திரமுமாக கனல்கிற கண்கள். அய்யாவின் முகப் பயங்கரம்.

திடுக்கிடுவதற்குள் – அசட்டுச்சிரிப்பு சிரிக்க முயல்வதற்குள்... அந்தப் பிஞ்சுக் கன்னத்தில் தீக்கங்கு வைத்த மாதிரி, அய்யாவின் அடி. கலப்பை பிடித்து மரத்துப்போன முரட்டுக்கையின் மூர்க்கம்.

'பளார், பளார்' என்ற மின்னல்கள். பூங்கன்னத்தில் தீச்சூடுகள். வீறிட்டலறித் துடித்த அந்த மொட்டு.

கோபத்தில் கனன்ற அய்யா முகம். தீக்கண்ணின் உக்கிரம்.

"இனிமே.... மண்ணைத் திம்பீயா? திம்பீயா? தின்னே... ஒன்னக் கொன்னே போடுவேன்... ராஸ்கல்"

பதறித் துடித்துப்போன ராசாத்தி. ஜட்டி பூராவும் அச்ச மூத்திரம். நாற்ற நனைவு. அன்றைக்குப் பூராவும் அழுதாள். உறங்கும்போது கூட விசும்பினாள். நெஞ்சு வெடிக்கிற விசும்பல். பதறிப் பதறி விழித்தாள்.

மறுநாள் காய்ச்சல் வந்துவிட்டது. பயத்தில்.

தண்ணீர் எடுக்கிற வேலை முடிந்தது. அய்யாவை எட்டிப் பார்த்த ராசாத்தி, சுவரில் சாய்ந்துகிடந்த அம்மா முகத்தையும் பார்த்தாள். அதே நிலைத்த பார்வை. மௌனஅடர்த்தி, மரண மௌனம்.

அம்மா ஏறிட்டுப் பார்க்கவேயில்லை. இவளை. எந்தச் சமிக்ஞையும் காட்டவில்லை.

இவளாகவே அடுப்பங்கரைக்குள் போனாள். அம்மா செய்யக் கூடிய வேலைகளை ஆரம்பித்தாள். அடுப்பைப் பற்றவைத்தாள், ராசாத்தி.

அடுப்பில் எரியும் ஜுவாலையையே பார்த்தாள். அதன் செந்நிறமும் நீலநிறமுமான அலைவு...

.....ஆறாப்பு படித்துக்கொண்டிருந்த நேரம். ஆண்டுவிழா விளையாட்டுப் போட்டியில் இவளுக்கு ஒரு பரிசு. பிளாஸ்டிக் தட்டு. ரோஸ்கலர் பூப்போட்ட தட்டு.

உலகமே உள்ளங்கைக்குள் வந்துவிட்ட மாதிரியோர் பரவசம். சிறுமி ராசாத்திக்கு.

அந்தப் பட்டாம்பூச்சிக்குள் விசிலடிக்கிற மனசு, மென் சிறகடிப்புகள். கொந்தளிக்கிற மனஉல்லாசம். தரையில் கால் பாவாத உற்சாகப் பெருக்கு.

விழாவில் வாங்கிய பரிசுத் தட்டுடன் தெருவே தூள்பறக்கு ஓடிவந்தாள். ராசாத்தி, நீலக்கலர் பாவாடை கல்லெறிபட்ட தெருக்கோழியாக பதறியடித்தது. அவளுக்கு முந்திக்கொண்டு ஓடுகிற மனசு...

..... அம்மாவிடம் போய்க் காட்டணும். ஆனந்தக் கூத்தாடணும்.

கூத்தாடிக் கொண்டாடணும். அந்தப் புறாக்குஞ்சுக்குள் ஆவல்பறப்பு, கனவுச்சிறகுகள்.

"எம்மா... எம்மா"

"என்னடி?"

"இந்தா... பாரு"

"என்னடி இது, தட்டு?"

"எனக்குத்தான் பரிசு. ஓட்டப் போட்டியிலே நாந்தான் பஸ்ட்"

"அப்படியா கண்ணு"

"ஆமாம்மா... எல்லாரும் பாராட்டுனாங்க... எட்டாப்பு சாருக 'வெரிகுட்'னு தட்டிக்குடுத்தாரும்மா"

"அடியாத்தி ... நெசம்தானா? எங் கண்ணு... ஏஞ்செல்லம்.. எங் தங்கப்பெட்டி.... என் ராசாத்தி.."

அம்மாவையும் தொற்றிக்கொண்ட இவளது சந்தோஷம். அம்மாவின் முகப் பூரிப்பு. கன்னக்கதுப்பெல்லாம் பூப்பிரகாசம். கண்ணில் ஒரு மின்னல். அவளின் சீராட்டு மழையில், கொஞ்சல் நதியில்..... நனைகிற மனப் பரவசம். நனையப் போகிற பரவசம்.

இன்னும் தெருப்புழுதியில் பறந்துவருகிற ராசாத்தி. வீட்டுக்குள் போனவுடன் நடக்கப்போகிற கூத்தாட்டமும், கொண்டாட்டமும்.

இப்போதே அவள் மனசுக்குள் மின்னுகிற ஒளி முகங்கள்.

ஆவல்நதியாக உருண்டோடி வருகிற ராசாத்தி, வாசல்படியில் 'தக்'கென்று அதிர்ந்து வைக்கிற பிஞ்சுப் பாதம். ஒரு குதி குதித்தாள்.

உள்ளே.. அய்யா. காட்டுக்கத்தலான அய்யாவின் கோபச் சத்தம். சிடுசிடுத்த முகம். கோப விறைப்பில் இவளைப் பார்க்கிற கடுகடுப்பான கண்கள். ஆத்திர ரூபமாய் அவர்.

பக்கென்றது இவளுக்குள். விம்மி ஊதிப்பருத்த பலூன் 'டொப்' பென்று வெடித்த மாதிரியிருந்தது, ராசாத்திக்கு.

எரிச்சலாகக் கேட்கிற அய்யா.

"என்ன? என்னத்துக்கு இப்புடி ஓடியார்றே? கொள்ளையா போவுது?"

பதறி நடுங்குகிற பிஞ்சுமனம். மழையில் நனைந்த கோழிக்குஞ்சு.

"பரிசு ... இந்தத் தட்டு... பஸ்ட்"

அவளுக்குள் நாத் தடுமாற்றம். உலர்ந்துபோன நாக்கு. பிடிபட்ட சிட்டுக்குருவியாக முழித்தாள்.

"என்னன்னு கேக்கேன் இல்லே?" அதட்டலில் உயர்கிற குரல்.

"ஓட்டப்போட்டி... பள்ளிக்கோடத்துலே... பரிசு"

"பள்ளிக்கோடத்திலியா? படிக்குற சோலியில்லியா? ஓடுறதுக்கும் ஆடுறதுக்கும்தான் பள்ளிக்கோடமா? ஆடுகாலிக் கழுதை. கொண்டா"

வெடுக்கென்று பிடுங்கப்படுகிற தட்டு. கண்டிப்பும், மிரட்டலுமாய் குரல். அனல் பறக்கிற முகம்.

"உப்புக்கல்லுக்குக்கூடப் பெறாத தட்டு... இது என்னத்துக்கு? ச்சேய்.."

ஆத்திரமும், எரிச்சலுமாய் தூக்கியெறியப்பட்ட தட்டு. உருண்டு, சுவரில் மோதி, அங்கே கிடந்த கோழிப்பீயில் சாய்கிற ராசாத்தி மனசு. வெட்டுக்காய இரத்தமாய் பூஞ்சிறகின் கண்ணீர்.

நடுங்கிக் குலைந்துபோய் வெடவெடத்தாள்.

அய்யா போனபிறகு.....

அம்மா மடியில் ஓடிப்போய் விழுந்த ராசாத்தி. அடிபட்ட பூச்செண்டாக மடியில் குலுங்குகிற மகளின் சின்னமுதுகு.

அழுகைக் குழைவும், பாசக்கனிவுமாக பூஞ்சிட்டை வாரியணைத்து, அழுதுவெடித்த அம்மா. கசந்த மனசிலிருந்து கசிந்து வருகிற ஊமைக்கண்ணீர். ராசாத்தியின் செவிமடலில் விழுந்து... சுடுகிறது.

இப்படியே ராசாத்தி அனுபவங்கள், மனசைக்கிறிய சம்பவங்கள். கிறிய காயத்தில் உப்பை அப்புகிற காந்தலான அனுபவங்கள். அனுபவ வரிசைகள்.

இதுதான் அய்யா. கொதிக்கிற மதிய வெயிலாகவே அய்யா. பாசநிலாக் குளுமையேயில்லாத அய்யா. உலர்ந்த அய்யா. அன்பேயில்லாத அய்யா. அய்யாவாக இல்லாத அய்யா.

அவள் பார்த்தறிந்த அய்யா... எல்லா வருசங்களிலும் இப்படித்தான். மகளைப் பார்த்துச்சிரித்த முகம்? பாசக் கொஞ்சலான சிரிப்பு? பூச்சிந்தலான கண்கள்? குழைந்த பார்வை?

ஊஹூம்....ஜென்மத்திலேயேயில்லை.

அய்யா மட்டும் ஏனிப்படி? ஆசையும், பாசமுமாய் கனிந்து

எல்லா அய்யாக்களும் நெகிழ்ந்து போயிருக்க... இவர் மட்டும் எதற்காக இப்படி? எரிக்கும் சூரியனாக.... தகிக்கும் தீயாக....

எதனாலே? ஏன்?.....

இருட்டுக்குள் பறக்கிற குருட்டு ஈயாக முட்டி மோதிக்குழம்புகிற ராசாத்தியின் பிஞ்சுமனசு.

அந்திமரணத்தில் ரெக்கை விரித்து அமுக்கிக்கொண்டு வருகிற இருள். பொழுதடைந்து கொஞ்ச நேரமாயிற்று.

விளையாடிக் கொண்டிருந்த சின்னச்சிட்டுகளுக்கெல்லாம் முகம் மறைத்து, உறுத்துகிற இருள்.

'கேஸ்... பூஸ்'ஸென்று இளைத்தாலும்.... விளையாட விளையாட ஆசையாகத்தானிருந்தது. ஆர்வம் பொங்கத்தான் செய்தது.

அதையும் மீறிக்கொண்டு இருளோடு சேர்ந்து மனசுக்குள் பரவுகிற சலிப்பு. பயம். பசியின் இலேசான கிள்ளல்.

"அவரவரு வூட்டுக்கு அவரைக்கஞ்சி குடிக்கப்போங்க" என்ற ராகப்பாட்டோடு சிறுமிகள் கூட்டம் கலைந்தது. சிட்டாய்ப் பறந்து விட்டனர். ராசாத்தி மட்டும் ஒற்றையில் நிற்க முடியுமா? எவ்வளவு நேரத்துக்கு? வேறு வழியில்லை.

வீடு வந்தாள். வீட்டு முற்றத்தில் நின்ற நிலையில் அம்மா இன்னொரு பெண்ணுடன் பேசிக்கொண்டிருக்கிறாள். ரொம்ப நேரமாய் நிகழ்கிற பேச்சு, கையை நீட்டுவதும், ஆட்டுவதும், நாடியில் கைவைத்து நொடிப்பதும் போன்ற பேச்சுப் பாவனைகள். அண்ணாந்து பார்க்கிற சிறுமி ராசாத்தி.

'ம்' கொட்டிக்கொள்கிற அம்மா. கோபத்தையும், சோகத்தையும் பேசித் தீர்த்துக்கொள்கிறார்கள். பகிர்ந்து ரணத்தை ஆற்றிக் கொள்கிறார்கள்.

முழங்காலைக் கட்டிக்கொண்டு முகம் பதிக்கிற மகளைக்கூட முழுசாகக் கவனிக்கவில்லை அம்மா. அம்மா முகத்தையே அண்ணாந்து நோக்குகிற ராசாத்தி.

"அவரு கொணமே அப்புடித்தான். பெறவிக்கொணத்துக்கு மட்டை வைச்சுக் கட்ட முடியுமா? என்ன செய்றது? நம்ம தலையெழுத்து கோண எழுத்துன்னா... அதுக்கு யாரு என்ன செய்ய முடியும்? பொம்பளைச்செம்மமே இப்புடித்தான். நொம்பலம் நொம்பலமா வந்து குமிஞ்சாலும், சொமந்துதான் தீக்கணும்".

"ம்...ம்...ஆம தாயீ.... நீ சொல்றதும் வாஸ்தவம்தான்".

"தலைப்புள்ளை பெத்தெடுக்குறதுன்னா... பொம்பளைக்கு எம்புட்டுத்தும்பம்? ரணம்? பயம்? நீயும் பெத்தெடுத்தவள்தானே? ஒனக்குத் தெரியும்லே?"

"ஆமாமா... அந்த ரணத்தை இப்ப நெனைச்சாலும் நெஞ்சு கெடந்து பதறுது".

அந்தப்பெண்ணின் ஆமோதிப்பு, சன்னமான அலறல்.

அம்மாவின் குரலின் சோகம் தொடர்கிறது. நாள்பட்ட காயத்தின் வலியில் கனத்துப் போகிற அம்மாவின் குரல்.

"நா இவளைப் பெத்துருக்கேன். தலைப்புள்ளை. செத்துப் பொழைச்ச மாதிரியிருக்கு. சாவையும் நரகத்தையும் பாத்துட்டுத் திரும்புன மாதிரியிருக்கு. எப்புடியோ... வவுத்துப்பாரம் கழிஞ்ச ரணத்துலே கெடக்கேன். எங்கம்மா வூட்லே இருக்குற என்னைப் பாக்க வாராரு. எங்க வூட்டு ஆம்பளை. செத்துப் பொழைச்சிருக்குற பொண்டாட்டியை பாக்க வாராரு. வந்து அவரு கட்டுன கூத்தைப் பாக்கணும்...."

"என்ன கூத்து பண்ணுனாரு?"

"'என்ன செய்யுது, ஏது செய்யுது, நல்லாயிருக்கியா'ன்னு அக்கறையா பதறிக் கேக்கணும்லே?"

"ம்?"

"வந்தாரு, பாத்தாரு. பொறந்துருக்குறது பொட்டைன்னு தெரிஞ்சவுடனே 'காச்சு, மூச்சு'ன்னு கத்த ஆரம்பிச்சுட்டாரு. 'ஏன் பெத்தே, எதுக்குப் பெத்தே'ன்னு கூவக்காடு போடுதாரு. தரைக்கும் கூரைக்குமா 'தங்கு, பொங்கு'ன்னு குதிக்காரு.

"ஐயயோ.. அடப்பாதரவே! இப்புடியும் ஒரு மனுசரா?

"நாம என்ன ஆசைப்பட்டா... பொண்ணைப் பெத்தோம்? அதுவா பொறந்தா, அதுக்கு நா என்ன செய்ய? இவரு என்னடான்னா கோபம் கோபமாப் பேசுறாரு. குடி முழுகிப் போன மாதிரி கூப்பாடு போடுதாரு. கேவலப்படுத்துனாரு. ஆசையையும், அன்பையும் எதிர்பார்த்தா... ஏறுக்கு மாறா அவமானப் படுத்துனாரு. குன்னிப்போய்ட்டேன். என்னைப் பாடாய் படுத்தி அழுகவைச்சு அழுக வைச்சு தும்பப் படுத்துனாரு. இந்தக் கூறுகெட்ட ஆளு. இந்த ஆளைக் கட்டிக்கிட்ட நாள்லேயிருந்து மாரடிச்ச பொழைப்புதான். என்ன செய்றது? ஒரலுக்குள்ளே தலையைக் குடுத்துட்டு, ஒலக்கைக்குப் பயந்தா.... தப்பிச்சிர முடியுமா?"

"அதானே?"

அவளது ஆமோதிப்புச் சத்தத்தையும் தாண்டிக்கேட்கிற அம்மாவின் விசும்பல். பழைய காயத்தின் ரணம்.

இன்னும் அம்மா விசும்பலோடு பேசிக்கொண்டிருக்கிறாள்.

ஆனால், ராசாத்திக்குத்தான் கேட்கமுடியவில்லை. கேட்க மனசில் தெம்பில்லை. பூவின் தலையில் தீப்பந்தம் போட்ட மாதிரி, அந்தச் சிறுமிக்குள் ஓர் அதிர்வு. அதிர்வின் பரவல்.

கொஞ்ச நேரம் ஒன்றுமே நினைக்கக்கூட முடியவில்லை. அதிர்வில் உறைந்துபோனாள். அவளுக்குள் ஒரு திணறல், தவிப்பு, கழுத்தை யாரோ திருகுகிற மாதிரியோர் கிலி.

'மண்ணுலே பொறந்து பூமிக்காத்தை வாங்குன நிமிஷத்துலேயே... அய்யா அவமதிச்சிருக்காரு. 'ஏன் இந்தச் சனியன் பொறந்துச்சு'ன்னு கூச்சல் போட்டுருக்காரு. எம் மேலே காறித் துப்பியிருக்காரு. எம் பொறப்பையே சபிச்சிருக்காரு அய்யா...'

அவளுக்குள் இருட்பூச்சிகள் பறந்தன. இனம் தெரியாத இருட்டு நினைவுகள். முகம் தெரியாக மூர்க்கம்.

'பெத்தெடுத்த ரணம் அம்மாவுக்கு. சொமந்த பாரம் வேற. பெத்தெடுத்த பின்னாலேயும் அம்மாவை அழுக வைச்சிருக்காரு. 'ஏன் பெத்தே'ன்னு கொத்திக் குதறியிருக்காரு....'

ராசாத்திக்குள் பயங்கரம் பயங்கரமான எண்ணங்கள். இவளுக்குள் விசுவரூபமாய் ஒரு ரண காளி. சூலாயுதத்தோடு கோபாவேசமாய் ஒரு பத்ரகாளி. அய்யாவை ஒரே குத்தாகக் குத்தி... அப்படியே தூக்கி சூலாயுதத்தை மாற்றி மல்லாக்க நிறுத்தி.... ருத்ர தாண்டவமாடுகிறபோது.... தலைக்கு மேல் சூழல்கிற சூலாயுதப் பிரேதம்...

....வீட்டிற்குள் அந்நியக்குரல்கள். அடுப்பங்கரையை வீட்டு வெளியே வந்து பார்த்தாள், ராசாத்தி.

சாகக்கிடக்கிற அய்யாவைப் பார்க்க வருகிற கிராமத்துப் பெண்கள். காய்ந்த கூந்தலும் துவண்ட உடலுமாய் கிடக்கிற அம்மாவின் தோளைத் தொட்டு உணர்விலேயே துக்கத்தைப் பகிர்ந்து... ஆறுதல் வழங்கிவிட்டுச் செல்கிற பக்கத்து வீட்டுப் பெண்கள்.

நத்தையாக உள்ளுக்குள் தலையை இழுத்துக்கொண்டாள் ராசாத்தி.

"அப்போது ராசாத்தி ஆறாப்பு. அரைப்பரீட்சை லீவ். தெருவில் விளையாடப் போயிருந்தவள். விடுபட்ட அம்பு மாதிரி ஓட்டமாய் ஓடிவந்தாள். யாராலோ துரத்தப்பட்டு ஓடிவருகிற மாதிரியான பாய்ச்சலோட்டம். தப்பு செய்துவிட்டுத் தப்பித்து வருகிற மாதிரி... திருப்பித் திரும்பி கள்ளப்பார்வை பார்த்துக்கொண்டே ஓடிவந்தாள். பயத்தில் பறவையாடுகிற சின்னவிழிகள்.

வீட்டு வாசலில் அம்மா.

"ஏண்டி இப்புடி ஓடியார்றே?"

ஓட்டமாய் ஓடிவந்து, அம்மாவைக் கடந்து, அம்மாவின் முதுகுக்குப் பின்னால் பாதுகாப்பாக நின்றுகொண்டாள். 'கேஸ்ஸூ, பூஸ்ஸூ' என்று மூச்சிரைத்தாள்.

"எதுக்குடி இந்த ஓட்டம்? என்னமாச்சும் தப்பு பண்ணுனீயா?"

"ம்"

"என்னடி பண்ணுனே?"

"அவன்தாம்மா... மொதல்லே வைஞ்சான்ம்மா. நா 'டப்பு'ன்னு ஒரடி அடிச்சுட்டு, ஓடியாந்துட்டேம்மா".

"எவன்டி?"

"முச்சாமி"

"அவனா?" என்ற அம்மாவின் குரலில் சட்டென்று ஒரு வித்தியாசம். குத்துண்ட வேதனையில் துடிக்கிற கண்கள். ஒரு ரகசிய சோகத்தை மூடி மறைக்கிற அவஸ்தை. திக்கங்கை மென்று விழுங்குகிற வேதனை. துயர நிழல். இருள் படிந்துவிட்ட முகம்.

"ஏம்மா?"

அம்மாவின் முகமாற்றத்தையே புதிர்போலப் பார்க்கிற மகள்.

"ஒண்ணுமில்லேடி"

"முச்சாமி என்னை அடிக்க வருவானா ம்மா?"

"வரமாட்டான்" சோக இருட்டில் மூழ்கிப் போகிற அம்மா. உணர்வற்ற உணர்வில் - தன்னை மறந்த துன்ப நினைவில் - பிரக்ஞையற்று பதில் சொல்கிறாள், யந்திரமாக.

"ஏம்மா... வரமாட்டான்?"

"ஒனக்கு அவன் அண்ணன்டி. அதான்.... வரவும் மாட்டான். அடிக்கவும் மாட்டான்".

"அவனா? அவனாம்மா. எனக்கு அண்ணன்? எப்புடிம்மா?"

"ஒங்க அப்பனுக்குப் பொறந்தவன். அந்த மாதிரி இன்னும் ரெண்டு பயக இருக்காங்க".

"அய்யாவுக்கா? அப்படீன்னா..?"

"ஒனக்குத் தெரியாது... போடி".

வெள்ளந்தியான ஆவலில் ஆர்வப் படபடப்பாகக் கேள்வி கேட்ட ராசாத்தியின் குறுகுறுப்பு. அம்மாவின் மூர்க்கமான சிடுசிடுப்பில் திகைத்தது. குழம்பித்தவித்தது.

அம்மாவின் கண்ணில் அடிபட்ட பறவையின் துடிப்பு. வஞ்சிக்கப்பட்ட மனசின் வலி, அதன் ரணம். ஆத்மாவையே கடித்துக் குதறிய துரோகம். ஆண் என்கிற திமிரில் செய்கிற அத்துமீறல். ஆணாதிக்க அகந்தை.

அம்மாவின் சோகத்திற்கும், கோபத்திற்குமான காரணம் புரிந்துகொள்ள முடியாத குழப்பத்தில் தத்தளித்த சின்னச்சிட்டு....

அம்மாவின் கதறல்.

"ஐயய்யோ... போய்ட்டீகளா?" என்று அம்மா மார்பில் அடித்துக் கொண்டு அழுகிற அலறல். அடுப்பங்கரையை விட்டு எட்டிப்பார்த்தாள் ராசாத்தி.

'அது'வாகிக் கிடந்த அய்யாவின் மேல் விழுந்துதலையை உலுக்கி அலறுகிற அம்மா. பூவும் பொட்டும் போய்விட்ட துக்கத்தில் வெடித்தழுகிற அம்மா.

சுற்றிலும் உள்ள பெண்கள் அவளைத்தொட்டனர். தழுவித் தாங்கினர். ஆகவேண்டிய காரியங்களைச்செய்தனர். வேலை, வேலையாக இருக்க... எல்லாரும் ராசாத்தியையே ஏறிட்டு ஏறிட்டுப் பார்த்தனர்.

'அப்பன் செத்துக் கெடக்கான், வெடிச்சு அழுகாம...புடிச்சு வைச்ச புள்ளையாரு கணக்கா... கல்லு போல நிக்காளே கொமரிப்புள்ளே..."

என்கிற கண்டனத்தொனி, எல்லாப் பெண்களின் கண்களிலும் வெளிப்படையாகவே தெரிகின்றன. வெறுப்பின் ஊமைத் தகிப்பு.

ராசாத்திக்கு அழவே தோன்றவில்லை. மனசு கலங்கவே யில்லை. கல்லாகிக் கிடக்கிற உணர்வுகள், வெறுமையான மனநிலையில் செய்வதறியாமல் நின்றாள், ராசாத்தி.

மொய்க்கிற கண்கள், கண்டனத் தொனி நிறைந்த சமூகக் கண்கள். நிர்ப்பந்தமாய் நெட்டித்தள்ளுகிற தார்மீகக் கண்கள்.

வேறு வழியில்லை.

"ஐயய்யோ... அய்யா..! எங்களை வுட்டுட்டுப் போய்ட்டீங்களே... அய்யா"

என்று தாவணித் துணியை வாய்க்குள் திணித்துக்கொண்டு 'கோ'வென்று கதறினாள். ராசாத்தி.

அம்மாவின் தோளில் முகம் புதைத்துக்கொண்டு அழுது புலம்பினாள். அந்தக் கணத்திலும்–

அதிசயமாய் அவள் உணர்ந்தாள். அவளுக்கே அவள் புதிராகத் தோன்றினாள்.

'மனசுக்குள்ளேயிருந்து துக்கம் வரல்லியே. வர மாட்டேங்குதே... மனுச உணர்வே செத்துப்போச்சா? அய்யா கொன்னுட்டாரா?'

ராசாத்தி அழுவதைப் பார்த்த திருப்தியில்– பக்கத்து வீட்டுப் பெண்களும் ஒப்பாரி பாடத்துவங்கினர்.

*தீபாவளி மலராக வந்த 'இதயம் பேசுகிறது' (18.10.98, 25.10.98) இதழில் இருவாரச் சிறுகதையாகவும், முத்திரைச் சிறுகதையாகவும் பிரசுரமாயிற்று.*

# ரோஷாக்னி

*புளுகாண்டிக்குள் ஒரே செம்மாளம். ஆதாளி. ஆர்வக் குதூகலத்தில் அலைபாய்ந்து வந்தான். இருப்புக் கொள்ளாமல் துள்ளித் துள்ளிக் குதித்தான். எப்படா விடியும் என்று மனசு கிடந்து துடித்தது. தவியாகத் தவித்தலைந்தான்.*

*'இன்னும் பொழுது அடையலே. மஞ்ச வெயில் அடிக்கிற சாயங்காலத்துலேயே பொழுது எப்ப விடியும்னு தவிச்சா... எப்படி? சரியான கோட்டிக் காரப் பயதான்!'*

*தன்னைத்தானே பரிகசித்துக் கொள்கிற புளுகாண்டி. இளக்காரமான ஒரு புன்னகை மின்னல் உதட்டில் மின்னி மறைந்தது.*

*அப்பவும்... அவன் நெஞ்சு ஆவல் பறப்பில் துடிப்பதை அவனால் நிறுத்தவே முடியவில்லை. அவன் மனசு, நினைப்பு, உயிர் எல்லாமே எப்ப விடியும் என்ற ஏக்கத்திலேயே குவிந்து கிடந்தது.*

*விடிந்தால்... பங்குனிப் பொங்கல். ஊரெல்லாம் பலகாரவாசம். ஓய்வில்லாமல் 'கடபுட' வென்று சுற்றிக்கொண்டேயிருக்கிற ஆட்டுரல்கள். ஊர் ஜனம் முகத்தில் கொண்டாட்ட கும்மாள வெளிச்சம். பிள்ளைகள் தரையில் கால் பாவாமல் சிட்டுக் குருவிகளாக... கொழுக்கட்டைகளைக் கவ்விக் கொண்டு....*

புளுகாண்டிக்கு இதிலெல்லாம் நாட்டமில்லை. விடிந்தால்... கறி திங்கலாம். அதில்தான் அவன் குறி. கறி என்றால் அவனுக்கு உயிர். அவனுக்கு மட்டும்தானா?

கவிச்சிவாடை கண்டு ரொம்ப நாளாயிற்று. ரெண்டு மூணு மாசமிருக்கும். மேலத்தெரு அப்பைய நாயக்கர் வீட்டு எருமை மாடு மண்டையைப் போட்டது.

கிழட்டு மாடு என்னத்தை தின்னதோ... எதுல போய் மேய்ஞ்சதோ... வயிறு உப்பிக் கொண்டேயிருந்தது. மூச்சுத் திணறியது. புல்லரித்துப் புல்லரித்து நடுங்கியது.

ஓடி ஓடி வைத்தியம் பார்த்தனர். எல்லா கைப் பக்குவமும் செய்து பார்த்தனர். எதுக்கும் மசியாமல் மண்டையைப் போட்டது.

புளுகாண்டியும் கூடப்போனான் தூக்க. செத்த மாட்டைக் கொண்டுவந்து, சேரியில் அறுத்துக் கூறுபோட்டார்கள். இவன் பங்குக்கு ரொம்பத்தான் வந்தது. ரெண்டு கிலோவுக்குக் குறையாது.

புளுகாண்டியின் அம்மா மசாலா அரைத்துக் கணிசமாக ஊற்றி, கூடுதலாக எண்ணெய் விளாவி, இஞ்சித்துண்டெல்லாம் தட்டிப்போட்டு வேகவைத்தாள். கறியை ருசி பார்த்துரணும் என்று நாக்கில் எச்சில் ஊற காத்துக்கிடந்தான். 'இப்ப வெந்துரும், பெறகு வெந்துரும்' என்று கிடையாய்க் கிடந்தான்.

நினைக்க நினைக்க மனசுக்குள் துடிப்பு. தவிப்பு, பரபரப்பு. கறி வேகிற குழம்பு வாசம் கமகமவென்று நாசியைத் துளைத்தது. கபகபாவென்று வயிறு பசித்தது. உயிரைக் கவ்வுகிற பசி. மனசிலிருந்துதான் பசி இறங்குகிறதா?

"என்னம்மா.... வெந்துருச்சா?"

நொடிக்கொரு தடவை எட்டிப் பார்த்தான். ஏக்கமாகக் கேட்டான்.... கேட்டான்... கேட்டுக்கேட்டு நச்சரித்தான்.

"பொறுடா சனியனே, கறி வேகவே மாட்டேங்குது. கெழட்டுக் கறி, வேகமாட்டாத சவ்வு. உசுரை வாங்குது. சித்தப் பொறுடா... கண்ணு."

எரிந்து விழுந்து, ஆசைப்படுகிற மகனின் நியாயத்தில் கனிந்து, குழைந்து... சனியன் – கண்ணுவில் கெஞ்சலோடு முடிந்தது, அம்மாவின் குரல்.

ரொம்ப நேரமான பிறகுதான்... சோறு வைத்து, கொதிக்கக் கொதிக்கக் குழம்பு ஊற்றினாள். உயிரே நாக்குக்கு வந்த மாதிரி மனப்பரபரப்பு, புளுகாண்டிக்கு. கைவிரல்கள் நடுங்கிற்று.

வெள்ளைச் சோற்றில் அரைத்த சந்தன நிறத்தில் குழம்பு. ஆசை மூட்டுகிற கறித்துண்டுகள், சுடச்சுடக் கொதித்தது.

ஆவி பறக்கிற கறித்துண்டு ஒன்றை எடுத்து, உள்ளங்கையில் வைத்து ஊதி ஊதி ஆற்றிவிட்டு வாயில் போட்டான்.

கறி சக்கை மாதிரியிருந்தது. மென்று மென்று பார்க்கிறான். ரப்பரை மெல்லுகிற மாதிரி இருக்கிறது. 'நச் நச்' சென்று சத்தம்தான் வருகிறது. கறி பல்லில் கடிபடவில்லை! நொறுங்க வில்லை. நாக்கில் ருசியாக உரசி உள் இறங்கவில்லை.

சப்பென்று அறைகிற மாதிரியோர் ஏமாற்ற உணர்வு.

"ச்சேய்! கெழட்டுக்கறி. சதைப்பிடிப்பு இல்லாத வெறும் சவ்வு. கறி மாதிரியே ருசி தட்டலியே... கைக்கு எட்டி வாய்க்கு எட்டி நாக்குக்கு எட்டாமப் போச்சே."

வெறுப்பும் எரிச்சலுமாக நிறம் மாறுகிற ஏமாற்ற உணர்வு. தக்கிமுக்கி சாப்பிட்டு முடித்தான். உயிரில்லாத உணவு. கறி சாப்பிட்ட உணர்வோ... நிறைவோ எதுவுமில்லை.

மனசுக்கு ருசியாய் அனுபவித்துச் சாப்பிட்ட வேறு வேறு நாட்கள். பழைய மாமிச நாட்கள். அதன் ருசி. அதன் வாசம். எல்லாம் நினைவில் உரசி, இன்றைய நிராசை உணர்வை பெரிதாக்கியது.

அதுதான் கடைசியாகத் தின்ற கறி. அதற்குப் பிறகு கறி என்ற பேச்சே இல்லை. கண்ணில் தட்டும் வாய்ப்பே வரவில்லை.

என்ன செய்யறது? எளிய சாதிக்காரன். அன்னாடக் கூலி. திண்டாடிய பிழைப்பு. காட்டில் போய் உசிரைச் சிந்தினால் வீட்டில் உலை கொதிக்கும். இல்லையென்றால்... அடுப்புச் சாம்பலைக் கோழி கிண்டி மேயும்.

இந்தப் பிழைப்பு லட்சணத்தில் கவிச்சி எங்கிருந்து கிடைக்கும்? எண்ணிக்கூடப் பார்க்க முடியுமா?

நாளைக்கு விடிந்தால்... பங்குனிப் பொங்கலுக்குக் கறி திங்கலாம். ஆசை ஆசையாகத் திங்கலாம். ஆசை தீரத் திங்கலாம். நிச்சயமாகிப்போன விஷயம்.

அதில் அப்பீலே இல்லை.

கட்டைக்கால், கனத்த உருப்படி, நெய்யாய் வடியும் கொழுப்பு. கறி, மரச்சிறாய் மாதிரி இருக்கும். அதிலும் சந்தேகமேயில்லை.

இவனது குடிசைக்குப் பின்னால்தான் ரெண்டு ரெண்டு

கால்களாகச் சேர்த்துக் கட்டுப்போடப்பட்டுக் கிடக்கிறது. நல்ல கட்டைக்கால். வகையான சரக்கு. செழித்த வளர்ப்பு. கூரை நிழலில் படுத்துக்கிடப்பதைப் பார்த்தாலே... ஏதோ ஒரு கறுப்பு மலை சாய்ந்து கிடக்கிற மாதிரியிருக்கிறது. கிட்ட ஆள் போனால் 'ர்ர்ர்ருக், ர்ர்ர்ருருக்க்'கென்று சீறிச் சினந்து உறுமுகிறது.

அந்த உறுமல் சத்தம் கேட்டாலே... குலை பதறுகிறது.

புளுகாண்டி குடிசைக்குள் நுழைந்தான். அடுக்குப்பானையில் ஓலைக் கொழுக்கட்டை கிடந்தது. ஓலையை உருவிப் போட்டு விட்டு... கொழுக்கட்டையைக் கடித்தான். கடைவாய்ப் பற்களில் தேன்பாகாய் உடைந்து, கரைந்து நாவில் தித்திப்பாகப் பரவிப் படர்ந்தது. இனிமைக் கரைசலாக உள்ளுக்குள் இறங்கியது.

ஆட்டுரலில் அரிசிமாவைப் போட்டு ஆட்டிக் கொண்டிருந்தவள் முனியம்மா. வலது கையில் முன்பகுதி முழுக்க மாவு அப்பியிருந்தது. வெள்ளை உறை மாட்டிய மாதிரி.

"என்னடா... கொழுக்கட்டை திங்கியா?"

"ஆமாம்மா..."

"தேங்காய்ச் சில்லும் சேத்துக் கடிச்சு தின்னுபாரு. இன்னும் ருசியாயிருக்கும்."

"சில்லு எங்க இருக்கும்மா?"

"தண்ணிச்சால் இருக்குல்லே? அதுலேயிருக்கும். எடுத்துக்க."

இடதுகையில் ஒரு கை உப்பை அள்ளிக்கொண்டு, வந்த வேகத்தில் வெளியேறுகிற முனியம்மா.

"என்னம்மா... நாளைக்குத் தோசையா?"

"ஆமாடா..."

'அப்ப... கறி எப்ப?"

"போடா பறப்பெடுத்த பயலே! விடியற்காலம் கறியை வதக்கித் தாரேம்ப்பா... மதியத்துக்குக் கொழம்பு வெச்சித்தாரேன். என்னப்பா?"

வெளிச்சமாகிற புளுகாண்டி முகம். மகிழ்ச்சி மின்னல் கண்ணில்.

"ஹைய்ய்! அம்மான்னா... அம்மாதான்... தங்க அம்மா!"

சின்னப்பிள்ளை மாதிரி துள்ளித் துள்ளிக் குதிக்கிற புளுகாண்டி. 'அய்ய்க் சக்கை... அய்ய்க் சக்கை' என்று சொல்லிக் கொண்டே குதியாளம் போடுகிறான். மடக்கிய கைகளால்

கட்கத்தில் அடித்துக்கொள்கிற உல்லாசம். உற்சாகப்பெருக்கு. றெக்கையடித்து மகிழ்கிற ஒரு மயிலைப் போலிருந்தது.

"போடா... கிறுக்குப்பய மவனே" என்று செல்லக் கோபமாகக் கண்டித்துவிட்டு... சிணுங்கல் சிரிப்பாக சிரித்துவிட்டு மறைகிற அம்மா... அந்தக் கிழட்டு முகத்தில் மின்னிய பெருமித ஒளி. பாச வெளிச்சம். அன்பு வாசத்தின் பிரகாசிப்பு.

"முழுத்த இளவட்டப் பய, கறின்னா... சின்னப்புள்ள மாதிரி கும்மாளம் போடுதான். கண்ணு மூக்குத் தெரியாம குதிக்கான். அப்பவும்... கவுச்சி வாடைக்கு இப்படியா பறப்பாக?"

செல்ல மகனின் சுபாவம் பற்றிய பூரிப்பான முணுமுணுப் போடு தெருவில் போகிற அம்மா.

அம்மாவையே பின்தொடர்ந்து போகிற அவனின் பார்வை, களி துள்ளும் பார்வை.

ஜாக்கெட் போடுகிற வயதை ரொம்ப முந்தியே தாண்டிவிட்ட அம்மா. அம்மா வயசுக்காரிகளெல்லாம் ஜாக்கெட் இல்லாமல் நூல் சேலையைப் பின்கொசுவம் வைத்துக் கட்டியிருப்பார்கள். அதுதான் பொருத்தமாகவும் இருக்கும். லட்சணமாகவும் இருக்கும்.

ஆனால், அம்மா மட்டும்....?

ஆண்பிள்ளை சட்டை மாதிரி, லொடலொடவென்று லூஸாக ஒரு ஜாக்கெட்டோடு... வித்தியாசமாக இருக்கிறது. நல்லாவே யில்லை. என்னவோ மாதிரியிருக்கிறது. மனசுக்கு ஒவ்வவில்லை. என்னமோ வடக்கத்திக்காரி மாதிரி...

ஆனா, அந்தச் சட்டை ஒரு காயம். காயத்தின் திசை. சமூகச் சோகம்.

... எப்போதோ நடந்த பஞ்சாயத்துத் தேர்தல். சுடுகாட்டுக்குப் பாதை கேட்டு வோட்டுப்போட மறுத்துவிட்ட சேரி ஜனம். அதனால் தோற்ற, கேவலப்பட்ட ஊர்க்காரர்களின் மூர்க்கம், ஆத்திர வெறி, ஆங்காரம்.

எளிய சாதி நாய்களுக்கு இம்புட்டுத் திமிரா? வைராக்கியமா? என்கிற கண்மூடித்தனமான வக்கிரம்.

ஒரு ஜாமம். ஆயுதங்களோடும் மிருகக் குணத்தோடும் சேரிக்குள் அத்துமீறலாகப் பாய்ந்த ஆதிக்கவெறி.

சேரியின் இளவட்டங்கள் ஓடிப்போக... கிழடு கட்டைகளுக்கும் மரண காயங்கள். ஏழு பெண்கள் நாசக்காடாயிருந்தனர். அதில் ஒருத்தி முனியம்மா.

அவள் வலது மார்பகத்தில் ஆதிக்கப் பற்கள் பதிந்த ரத்தக்காயம். அழுந்தப் பதிந்த ரத்தச்சுவடு.

புண்ணாகி... வீங்கி.. நீர் வைத்து...

பச்சிலை வைத்தியமும் கசாய வைத்தியமுமாக... புண் ஆறவே ஆறுமாதமாயிற்று.

மனசுக்குள் ஆறாத புண்.

வெளியே ஆறாத தழும்பு. ஆறாத சோகத்தின் அடையாளம். ஆறாத மானக்கேட்டின் கேவலம். ஆறாத உள் ரணம். ஆறாத குலைக்கொதிப்பு. மனசும் உடம்பும் சிரழிக்கப்பட்ட நாசக்காடு பண்ணப்பட்டதன் சின்னமாக அந்தத் தழும்பு.

இந்தச் சிரழிவு – கேவலம் காரணமாகவே முனியம்மாவுக்குத் தாலிகட்ட யாரும் தயாரில்லை. ரெண்டு மூணு வருஷம் கழித்து, எப்படியோ கல்யாணமாகி, அதற்குப்பிறகுதான் புளுகாண்டி பிறந்தான்...

அந்தத் தழும்பின் நிரந்தர இழிவான ரணத்தில், இன்றளவும் குன்றிக் கூசுகிற அம்மா. அதன் காரணமாகவே, கிழவியான பின்பும் லொடலொட ஜாக்கெட்டோடு...

ஆயிரம் தடவை அழுது அழுது புலம்பிப் புலம்பி அம்மா சொன்ன அந்த பாதகக் காட்சிகள். அம்மாவின் கண்ணீர் வரிகளில் அந்தக் கந்தகக் கொடுமை. சதை வெறியும் ரத்த வெறியுமாக சேரிப் பூக்களைச் சிரழித்த மிருகராட்சஸம்.

நினைவின் நிழல்கள் மனசின் வலியாகப் படர்ந்தது. புளுகாண்டிக்கு கொழுக்கட்டை தின்ன மனசில்லை இப்போது. நாக்கெல்லாம் கசந்து வந்தது. பெருமூச்சோடு வெளியே வந்தான். மனசில் இனம்புரியாத வலி.

காலாற நடந்தான். தோப்புப் பக்கமாகப் போனான். கிழே கிடந்த பனை ஓலைகள்... காய்ந்த பனைமட்டைகள்... உலர்ந்த தென்னை மட்டைகள்.

ஒரு பெரிய கட்டாகக் கட்டிக்கொண்டு வந்தான். விடிந்தால்... இது வேணும். அடிக்கிற கட்டைக்காலை வாட்டி எடுக்கணும். அதற்கு இந்த மாதிரியான விறகுகள்தான் தோதுப்படும்.

விடியவில்லை இன்னும். இருள் பிரியவில்லை. நாலு மணி இருக்கும். கனத்த இருட்டு. கோட்டான் மாதிரி முழித்தே கிடந்தான். எப்படா விடியும்... எப்படா கறி திங்கலாம் என்று மனசு கிடந்து துடியாகத் துடித்துக் கொண்டிருந்தது.

"எலேய் புளுகாண்டி... எந்திலே. ஜோலியை இப்ப ஆரம்பிச்சா தானே... காலாகாலத்துலே காரியத்தை முடிக்க முடியும்? எந்திடா...."

லேசாகத் தொட்டு எழுப்பினர் நாலைந்து பேர். சேரிக்காரர்கள்தாம். லேசாகக் கண்ணயர்ந்திருந்த புளுகாண்டி, 'தடாபுடா'வென்று துள்ளத்துடிக்க எழுந்தான்.

"என்ன... என்ன விடிஞ்சுபோச்சா?" பதறியடித்து அலறிய அலறலில் தூக்கச்சடவு பயந்துபோய் உதிர்ந்துவிட்டது.

"ஆமா.. ஆமா... விடிஞ்சுபோச்சு. கறியாக்குகிற ஜோலியை ஆரம்பிப்போம்!"

சேரியின் மையத்தில் தெருவிளக்கு. ட்யூப்லைட்டின் வெள்ளை வெளிச்சம். அந்த நாலைந்து பேரோடு இளவட்டம் புளுகாண்டியும்.

குடிசைக்குப் பின்னால் கிடந்த கறுப்பு மலை. ஆள் நெருங்கவும் பதட்டமும் மிரட்டலுமாக உறுமியது.

'கர்ர்ரு... புர்ர்ர்ரு' என்று காட்டுத்தனமாகக் கத்தியது.

கட்டிக்கிடந்த கால்களுக்குள் உலக்கையைச் சொருகினர். அந்தப் பக்கம் மூணு பேர்... இந்தப்பக்கம் மூணு பேர். தக்கிமுக்கி தம்ம் பிடித்துத் தூக்கினர்.

மலையின் கனம். கருத்த பாரம். மூச்சு முட்டுகிறது. தூக்குவது சுலபமாக இல்லை. "ம் தூக்கு... தூக்குங்கடா... விடாதீங்க... தம்ப் பிடியுங்க. விடாதீங்க... ம் தூக்கு... அம்புட்டுத்தான்" என்று ஆளாளுக்குக் கத்தி... உற்சாகப்படுத்தி... தைரியப்பட்டு... எப்படியோ தூக்கிக்கொண்டு வந்து சேர்ந்தனர்.

விளக்கு வெளிச்சத்தில் கறுப்பு மலை. உறுமுகிற மலை. கனத்த பன்றி. முன்னங்கால் ஒன்றையும், பின்னங்கால் ஒன்றையுமாக சேர்த்துக் கட்டப்பட்டிருந்தது. ரெண்டு கட்டு. ரெண்டு கட்டுகளையும் ரெண்டு பேர் பற்றிப் பிடித்து... விரித்து.. திமிறவிடாமல் அழுத்திக் கொள்ள...

மல்லாக்கக் கிடந்த பன்றியின் நடு நெஞ்சில் ஓங்கி விழுந்த உலக்கையடிகள், தலைக்கு மேல் ஓங்கி விழுந்த அடிகள்.

"டொபா...ர், டொபா..ர்" உலக்கையடியிலும் பன்றியின் மரண அலறலிலும் தெருவே அதிர்ந்தது. ஒரு நடுக்கம் நடுங்கி நின்றது.

"இன்னும் உசுரு கெடக்கா.. இல்லே, இன்னும் ரெண்டு போடு போடலாமா?"

"இல்லே... செத்துப்போச்சு."

பனைமட்டை, ஓலைகளைப் போட்டுத் தெருவிலேயே தீயை மூட்டினான் புளுகாண்டி. ஓடி ஓடிப் பரபரத்தான். அந்த வைகறையிலும் வியர்த்துக் கொட்டியது அவனுக்கு. கவிச்சி மோகம் அவனை விசைப்படுத்திக் கொண்டே இருந்தது.

செத்த பன்றியைத் தீக்குள் உருட்டிவிட்டான். தீயை அணையவிடாமல் ஓலைகளையும் மட்டைகளையும் போட்டுப் பெருக்கினர். ஜ்வாலை விட்டெரிந்த பெருந்தீயில் பன்றியை உருட்டி உருட்டிப் புரட்டினான்.

ரோமம் கருகுகிற சுறுசுறு சத்தம். பன்றியின் கருமையான மேல் தோல் உரிந்து... உரிந்து... சுருண்டு உதிர்கிறது. பன்றி மேலும் மேலும் விறைக்கிறது. ரோமமும் தோலும் கருகுகிற வாசம். நெடி. இந்த வாசம் எப்பவுமே புளுகாண்டிக்குப் பிடிக்கும். ஆசையோடு மூச்சிழுத்து உள்வாங்கினான்.

பன்றி தோலெல்லாம் உரிய... உரிய... வெண்பன்றியாக நிறம் மாறுகிற வித்தியாசம்.

நெருப்பிலிருந்து வெளியே புரட்டப்பட்ட பன்றி. உடைந்த செங்கற்களால் பன்றியின் உடம்பெல்லாம் "பர்ர்ர்... பர்ர்ர்" ரென்று தேய்த்தான். அழுத்தமான தேய்ப்பு. முழுத்த இளவட்டத்தின் பலம் முழுவதையும் உள்ளங்கையில் இறக்கி... தேய்த்த தேய்ப்பு. சொச்சமிருந்த கருந்தோலை அகற்றுகிற யத்தனிப்பு.

அப்புறம்... பிளேடைக் கொண்டு வந்து நெருப்புக்கும் கருகாத ரோமக் கட்டைகளை ஒன்றுவிடாமல் வழித்தான். அரைத்த மஞ்சளால் பன்றியின் வெளுத்த உடம்பு முழுவதும் பூசப்பூச... மஞ்சள் பன்றியாக மாற...

இப்போது... சாக்கடையில் புரண்ட பன்றிதானா என்பதை நம்பவே முடியவில்லை. அம்புட்டு லட்சணமாகிவிட்டது.

"வெள்ளக்காரிச்சி மஞ்சத் தேச்சிக் குளிச்ச மாதிரி" என்கிற வரி, மனசில் மின்னி மறைந்தது. வைத்த கண் எடுக்காமல்... இமை தட்டாமல் – பன்றியின் அழகையே பார்த்து ரசித்தான். அப்படியே பிய்ச்சுத் திங்கலாம் போலிருந்தது புளுகாண்டிக்கு.

"ம்... சரி, அந்தப் பலகைக் கதவை மலர்த்திப் போடு."

"அது மேலே ஓலைப் பாய்களை விரிங்க.... கந்தல் பாயாயிருந்தாலும் பரவால்லே..."

"அருவாமனைகளை எடுத்துப் போடுங்க. அறுத்துப்போடுகிற கறிச்சதையை, துண்டு துண்டா அறுத்துக் கூறு அடிக்கணும்லே?"

"மொதல்ல கத்தியைக் கொண்டா."

"ஆமா, கழுத்திலே வெட்டி, தலையைத் துண்டா எடுக்கணும்லே?"

"கறிக்குச் சேதாரமில்லாம... ஒட்டப் பிடிச்சு அறு."

"வவுத்தைக் கிழிச்சு... கொட்லை எடுத்து ஒரு கூடையில போடணுமப்பா."

"தலையையும் கொடலையும் தனியா ஒதுக்குன பொறகுதானே... கறியிலே கத்தி வைக்க முடியும்?"

"அறுத்த தலையை மண்ணுலே படாம... ஓரமா வையுங்க. நாய்கிய் கவ்விக்கிட்டு போயிராமப் பாத்துக்கங்க."

"சரியப்பா... கறிக்கு எம்புட்டுப் புள்ளிக சேர்த்துருக்கீக? கட்டைக்கால்னா... இப்புடி கொழுத்த உருப்படின்னா... கறி கேட்டு நா, நீன்னு ஓடியாருவாக. அவசரத்துலே வரவர போட்டுட்டா, நமக்கு இல்லாமப் போயிரப்போவுது. அதையும் கவனிச்சுக்கங்க."

"அதுவும் நெசந்தானப்பா. கவனமாயிருக்கணும். ரவ்வும் பகலுமா பாடுபட்டுட்டு, அறுத்து அறுத்து ஊருக்குப் போட்டுட்டு.... நாம வெறும் ஓலைப் பாயை மோந்துபாக்கவா? நல்ல கூத்துதான்."

"சரிப்பா... எம்புட்டுப் புள்ளிக சேர்த்துருக்கீக?"

"நம்ம தெருவுலே, நம்ம ஆளுக மட்டும் நாப்பத்து ரெண்டு கிலோ. ஊர்க்காரச் சாமிமாருக பதினெட்டு கிலோ."

"ஆக... அறுபது ஆச்சா? உருப்படி தொண்ணுத்தஞ்சு வரைக்கும் வரும். முப்பது கிலோ மிச்சமிருக்கும். இனிமே கறி கேட்டு ஊர்க்காரச் சாமிமாருக வந்தா... அந்த முப்பதுக்குள்ள போட்டுருவமா?"

புளுகாண்டி ஆத்திர அவசரமாகக் குறுக்கிட்டான்.

"அதெல்லாம் வேண்டாம். இருபது கிலோ மட்டும் போடுவோம்."

"மிச்சத்தை என்ன செய்யடா?"

"மிச்சம் இருக்கட்டும். நம்ம தெருவுலேயே கடைசி நேரத்துல வந்து தலையைச் சொறியற கேஸுக இருக்கும். அது போக மிச்சத்தை நாம் பவுந்துக்கிடுவோம். கூட ஒரு நாளைக்கு வைச்சிருந்து திம்பம்."

புளுகாண்டியை எல்லாரும் ஏளனமாகப் பார்த்தனர்.

"புளுகாண்டி இஷ்டம் போலவிட்டா... யாருக்குமே கறியைப் போடவிடமாட்டான். தானே வெச்சிருந்து திங்கணும்பான்."

"குப்"பென்று எழுந்த பரிகாசச் சிரிப்பு. அதை அமுக்கிக் கொண்டு ஒரு குரல்.

"புளுகாண்டி சொல்றதும் ஞாயந்தானே? வருசத்துக்கொரு வாட்டிதான் இப்படிப்பட்ட நல்ல உருப்படி அமையும். ஆசைதிர வெச்சிருந்து, அதைத் திங்கணும்னு நம்மள மாதிரி ஏழை எளியதுக நெனைச்சா... அது என்ன தப்பு?"

சளசளவென்று பேச்சு. தகரக்கூரையில் மழை பெய்த மாதிரியான சளசளத்த மனிதக் குரல்கள். இடையிடையே சிரிப்புச் சத்தம், கேலி, கிண்டல், நையாண்டி என்று நீள்கிற கலகலப்பு.

ஆதாளி தாங்காமல் ஆனந்தக் கூத்தாடுகிற மனசுகள். அடிமனசின் சந்தோசப் பெருக்கு. உள்மன உல்லாச வெளிச்சம் எல்லாம் துள்ளலான பேச்சுகளில் துல்லியமாக முகம்காட்டுகிறது.

புளுகாண்டிக்கு அறுத்துப் போடுகிற கறிச்சதையைப் பார்க்கப் பார்க்க மனசே கிடந்து துள்ளுகிறது. மனசின் உள்வெளிச்சம் கண்ணில் மின்னலாய் பளிச்சிடுகிறது. மஞ்சள் நிற வாரும்... கறிச்சதைத் துண்டுகளும் அதில் உறைந்து கறுப்பாகிவிட்ட ரத்தச் சொதசொதப்பும்...

அறுத்து அறுத்துக் கூறுபோட... ஒருத்தர் தராசில் அள்ளிப் போட்டு எடை போட... அலுமினியச் சட்டிகளிலும் தூக்கு வாளிகளிலும் எடைபோட்ட கறியைப் போட...

"ம்... சிட்டையிலே குறிச்சுக்கங்கடா... தவறவுட்டுராதீக."

"சக்கையன் ரெண்டு கிலோ... முத்தாண்டி ஒன்றரை... சில்லாண்டி ரெண்டு... செந்தட்டி ரெண்டரை... காக்காயன் ஒன்றரை... தலை சொட்டையன் ரெண்டு.. முத்தாச்சி ரெண்டு."

ஊருக்காரர்களிடம் ஒப்புக்கொண்ட பதினெட்டு கிலோ கறிக்கு... வீடு வீடாக சட்டி வாங்க ஒருத்தன் போயிருந்தான். அந்தந்தச் சட்டியில்... அவரவர் கறி.

ஊரெல்லாம் ஒரே பேச்சு. வியப்பும், ஆச்சரியமுமான பேச்சு.

"கட்டைக்காலு... பெரிய உருப்படி போடுதாக."

"கசாப்பா? எங்க?"

"ம்... சேரியிலதான். நல்ல கொழுப்பு. கறியும் மரச்சிறாய்

கணக்கா... திண்ணக்கமாயிருக்கு."

"அப்படியா? அரைக்கிலோ வாங்கிக் காச்சலாம்."

"ச்சேய்ய்க்! பன்னிக்கறியையா? ஐயய்யே..."

"ஏன் மூஞ்சியைச் சுளிக்கே? நல்ல கறின்னா வாங்கி பக்குவமாக சாப்புட்டா நல்லாத்தானிருக்கும். மூலத்துக்கு நல்லது."

ஊருக்குள் காற்றாகப் பரவுகிற இந்தப் பேச்சு. டீக்கடையில்... ஊர் மடத்தில் தெருத்தெருவாக எல்லா இடங்களிலும் இந்தப் பேச்சலைகள்.

தூக்குவாளிகளோடு சேரிக்கு வருகிற ஒன்றிரண்டு ஊர்ச் சம்சாரிகள். அதைத்தொடர்ந்து இன்னும் சில ஏழைச் சம்சாரிகள். சிரித்த முகத்துடன் வருகிற சம்சாரிகளுக்கு, சேரி ஜனத்தின் உபசரிப்புகளும், மரியாதைகளும்...

கூறடிப்பும்... தராசு எடையும்... சிட்டைக் குறிப்பும் மளமளவென நடந்து கொண்டிருந்தது.

முடிகிற தருணம்.

புளுகாண்டி தன் பங்குக் கறியை ஒரு சட்டியில் அள்ளிக் கொடுத்தனுப்பிவிட்டான் தன் வீட்டுக்கு. அதேமாதிரி, பன்றியறுப்புப் பணியிலிருந்த நாலைந்து பேரும்.

இன்னும் ரெண்டு கூறுதான் மிச்சம். அதுக்கும் மூன்றாட்கள் சட்டிகளோடு நின்றனர்.

ஆக... வேலை முடியப்போகுது. வதக்குன கறியைத் திங்கப் போவோம் என்று ஆசுவாசமாக நினைத்தான் புளுகாண்டி. வதக்குன கறியின் வாசம் அவனைச் சுண்டியிழுத்தது. வா வா என்று ஆசைக்காட்டியது. அவனுள் பரபரப்பு. "எப்படா வீட்டுக்குப் போவலாம்" என்கிற தவிப்பு.

எல்லார் கைகளிலும் ஒட்டியிருந்த கறி இணுக்குகள். முழங்கை வரைக்கும் ரத்தப் பிசுக்கு. வெண் கொழுப்புத் துணுக்குகள்.

அப்போதுதான்–

பாலிதீன் பையோடு ஒருத்தன் வந்தான். அவனும் சேரிக்காரன்தான். வந்து குசுகுசுவென்று காதைக் கடித்தான் நாலைந்து பேரும் அதேபோல, குசுகுசுவென்று காதுக்குள் வாயாகப் பேசிக்கொண்டனர்.

புளுகாண்டிக்கு ஒன்றும் புரியவில்லை. ஒவ்வொருவர் முகத்தையும் திகைப்பும் குறுகுறுப்புமாகப் பார்த்தான்.

"என்ன விஷயம்? சொல்லித் தொலையுங்களேன்."

"பொறுடா புளுகாண்டி."

"இப்பச் சொல்லப்போறீகளா... இல்லியா?"

ரொம்பக் காட்டமாகக் கத்தினான் புளுகாண்டி. ஏறக்குறைய விடிந்துவிட்டது. தவிட்டு நிற வெளிச்சம், மேலும் முகம் வெளுத்து வந்தது.

"ஒண்ணுமில்லேடா" என்று இழுத்த ஒரு பெரிசு, பணிவும் பவ்யமுமாக சத்தம் குறைத்துக் குசுகுசுத்தார். பெரிய வீட்டு விஷயம் என்கிற பயம்.

"நம்ம மேலத்தெரு பெரிய வீட்டுக்காரசாமியவுக கறி மேல ஆசைப்படுதாகளாம். அரை கிலோ வேணும்னு சிணுக்காண்டி கிட்ட சொல்லிவிட்டுருக்காரு. இந்த பேப்பர் பையிலே போட்டு அனுப்பணுமாம்."

"நீங்க என்ன செய்யப்போறீக?"

இறுகலான குரலில் புளுகாண்டி.

"போட்டுக் குடுத்துருவம்."

"என்னத்துக்கு?"

"அம்புட்டுப் பெரிய வீட்டுச் சாமியவுக... நாம கைபட்டு கால்பட்டு அறுத்துக் கூறுபோட்ட கறியை வாங்கிச் சாப்புட சம்மதிச்சதே பெரியவிஷயம்டா."

புளுகாண்டிக்குள் ஏனோ அம்மாவின் லொட லொட, ஜாக்கெட், கண்ணீர் வரிகளில் காட்சியான மிருகத்தன வெறியாட்டம். ஆறாத மனரணமாக... ஆறாத தழும்பு... சாதி வெறிப்பற்களில் காமக்குரூரப் பதிவுகள்.

அவனுக்குள் ஏதோ ஒருவித கோபச் சிலிர்ப்பு.

"ஏன்... நாம எதுலே தாழ்ந்துட்டம்? கொழுப்பான வளர்ப்புப் பன்னின்னு ஆசைப்பட்டுத்தானே எல்லோரும் தேடி வந்து, நின்னு வாங்கிட்டுப் போறாக? அப்படித்தானே இருவது கிலோ வித்துருக்கு? இவருக்கு மட்டும் என்னத்துக்குக் குடுத்தனுப்பணும்?"

"இவன் ஒரு கோட்டிப்பய... யாருக்குமே கறி குடுக்கச் சம்மதிக்க மாட்டான்" என்று ஒருவர் கேலியாகச் சொல்லி சிரிக்க... மற்றவர்களும் ஆமோதித்துப் பரிகாசமாகச் சிரிக்க புளுகாண்டிக்குள் பொத்துக்கொண்டு வந்தது கோபம். சிறிச்சினந்த ரோஷாக்னி.

"நா அப்படிச் சொல்லலை" என்று காட்டுக் கத்தலாகக் கத்தினான். இவன் கத்திய உஷ்ணச் சீறலில், விளையாட்டுச் சிரிப்பும், வேடிக்கைப் பேச்சுமாக இருந்த அவர்கள், கப்சிப் ஆனார்கள். இவனைக் கூர்மையாக... யோசனையோடு பார்த்தனர்.

"என்னலே சொல்லுதே?"

"எளிய சாதிப் பொம்பளைகளைத் தொட்டு நாசக்காடு பண்ணுறவக... எளிய சாதி ஆம்பளைகளை மட்டும் என்னத்துக்காக தள்ளியே நிப்பாட்டணும்?"

"அதுக்கு?"

"நாம தொட்ட கறியைச் சாப்புடச் சம்மதிச்சதே பெரிய விஷயம்னு நீங்கள்லாம் குளுந்து குளுந்து குனிஞ்சே கெடந்ததாலே தான்... அவுக அம்புட்டு அக்குருமம் பண்ணியிருக்காக..."

"ஏலேய் புளுகாண்டி, நீ என்ன விஷயம் பேசுதே? கறி விஷயத்தைப் பத்திப் பேசு?"

"நல்ல கறின்னு அறிஞ்சு வாங்கித் தின்ன ஆசைப்பட்டா... நம்ம தெருவுல வந்து வாங்கிட்டுப் போகணும்., மத்தவுகளெல்லாம் வந்து வாங்கிட்டுப் போறாகள்லே? இவருக்கு மட்டும் என்னவாம்? நாம தொட்டு அறுத்த கறி மேலே ஆசை. நம்ம தெரு மட்டும் வீசுதாக்கும்? கால் வைக்கக் கூசுதாக்கும்? பெரிய வீடு, டக்கர் வெச்சிருந்தா... அது அவருக்குத்தானே...? நாம எதுக்குப் பயப்படணும்?"

"நீ சொல்றது புதுசாயிருக்குடா புளுகாண்டி. கறி இல்லேன்னு வெறும் பையைக் குடுத்தனுப்பிச்சிரவா?"

"புதுசுதான். நாம மான ரோஷத்தோட நினைக்குறதே புதுசுதான். வெறும் பையைக் குடுத்தனுப்புங்க. பயப்பட வேண்டாம். என்னத்துக்குப் பயப்படணும்?"

மீசை முறுக்கின மதுரைவீரன் சாமி மாதிரி, உக்கிரமாக விழிக்கிற புளுகாண்டி, உத்தரவு மாதிரி கட்டன்ரைட்டாகப் பேசுகிறான்.

அடிமனசின் ரோஷாக்னி அவன் கண்ணில் சுடராகச் ஜொலிக்க... மற்றவர்கள் அவனை ஒரு புதிரைப் போலப் பார்த்தனர்.

*12.04.98. ஆனந்தவிகடன்*

*(இச்சிறுகதை இலக்கியச் சிந்தனை பரிசு பெற்றது. 1998ம் ஆண்டின் சிறந்த சிறுகதை என்ற பரிசையும் பெற்றது)*

## மாயமாகும் மயில் உலகம்

ராத்திரியில் பொத்துக்கொண்டு ஊற்றியது. கோடை மழை. லேசு மாசான மழையில்லை, பேய் மழை, தாறுமாறான மழை.

இத்தனைக்கும்.... பொழுது அடைகிற நேரத்தில்கூட மழைக்கான அறிகுறியே தட்டுப்படவில்லை. இறுக்கமும், புழுக்கமுமாயிருந்தது. பேச்சு மூச்சற்று உறைந்துபோய் நின்ற மரங்கள். சலனமேயில்லாத இலைகள். எழுதி வைத்த சித்திரமாய் மௌனத்தில் திகைத்துக் கிடக்கிற செடி கொடிகள்.

சாமக்காட்டில் முழித்துக் கொண்ட பூதத்தின் வெறியாட்டம் போல... திடுதிப்பென்று இடி முழக்கங்கள் வெட்டிச் சரித்த மின்னல், 'பளீ..ச் பளீ...ச்'சென்று வீசிய மின்னலில் காடே நடுங்கியதிர்ந்தது. மின்னல் வீச்சில் திகைத்துப் பதறிய தோப்பு.

எங்கிருந்தோ படையெடுத்து வந்த கடல் பிசாசின் சுவாசமாய் வந்து மோதிய குபீர் காற்று, புழுதியையும் மணலையும் அள்ளி யெறிந்த சூறைக்காற்று. 'வாள்... வாள்' என்று கத்திய காற்றின் இரைச்சலில் பேய்க் கூத்தாடிய மரங்கள். மரக்கிளையில் உட்கார்ந் திருந்த ஆண் மயிலையும் பெண் மயிலையும்குப்புறத் தள்ள யத்தனித்த காற்று.

ஆண் மயிலுக்கு இனம் புரியாத மகிழ்ச்சி. தோகை விரித்து ஆடிக்கூவ ஆசை. காற்றின் சீற்றத்தில்

பிய்த்துக் கொண்டு பறந்த ஆசை. பீதியில் கேர்... கேர் என்று திகைத்துக் கூவுகிற பெண் மயில். பெண் மயிலின் பதற்றத்தில் ஆண் மயிலும் நனைந்தது. இனம் புரியாத பதற்றம்.

"சொட்... சொட்... சொட்..."

பெரிய பெரிய மழைத்துளிகள். அங்கொன்றும் இங்கொன்று மாய் விழுந்த மழைப் புள்ளிகள். குப்பென்று எழுந்த பூமியின் வெக்கை. மண்ணின் ஈரவாசம்.

பதற்றத்தில் 'கூர்ர்... கூர்ர்' என்று உறுமிய பெண் மயில். நெருங்கி நெருங்கி கிட்டத்தில் வந்தது. உரசிக் கொண்டு ஒண்டியது.

ஆண் மயிலுக்கு அது ஒரு பரவசம். காற்றும் மழையுமான பயங்கரத்திற்குள்ளும் மனசுக்குள் ஒரு ரகசிய கிளுகிளுப்பு.

மழை 'சட்டச்சட... சட்டச்சட'வென்று பெரு மழையாயிற்று. காற்று நின்று போயிற்று. மழை நின்று பெய்தது. முரட்டு மழை. மூர்க்க மழை.

மயில்கள் இரண்டும் பரஸ்பரம் வெக்கையை பரிமாறிக் கொண்டன. ஒன்றுக்கொன்று ஆறுதலாய் – தோழமையாய் – நின்று, மழையைச் சமாளித்தன.

விடிந்தது. அந்தத் தோப்பு, எண்ணெய் தேய்த்த மாதிரி மினுமினுப்பாக ஜொலித்தது. பளிச்சென்கிற இலைகள். நேற்று பெய்த மழையில் கழுவித் துடைத்த சுத்தம். பசும் பளீர்!

எல்லா இலை நுனிகளிலும் முத்துப் புல்லாக்குதொங்குவது போல மழை நீர்த்துளி. லேசாக காற்று 'கிச்சலம்' காட்டினால் கூட... மரங்களெல்லாம் ஆடிக் குலுங்கிச் சிரித்தன. ஈரச் சலங்கைச் சிரிப்பாக சத்தமாகச் சிதறும் நீர்த்துளி மின்னல்கள்.

இன்னும் பொழுது புறப்படவில்லை. மயில்கள் இரண்டும் தோப்புக்குள் தரையில் நடமாடித் திரிந்தன. காலார நடை பயின்றன.

கிழடிவானம் முழுதும் கறுத்த மேகத்துண்டுகள் குவிந்து கிடந்தன. சூரியச் சிவப்பில் முதுகு கனிந்த மேகங்கள்.

கிளையிலிருந்து றெக்கையடித்து இறங்கிய ஆண் மயிலுக்கு... என்ன காரணமோ தெரியவில்லை...கண் மூக்கு தெரியாதமனக் கொண்டாட்டம். சந்தோஷத் தத்தளிப்பு.

ஈரப் பூமியின் கனிவும் குழைவும்... அதன் சுவாசமான கூதலற்ற ஈரக்காற்றும்...அதுக்கு ரொம்பச் சுகமாயிருந்தது. கண்களைச்

சொருகிக்கொண்டு இன்ப மயக்கமாயிருந்தது.

அதுக்குள் விளையாட்டுப் பிரியம், குறும்பும் கும்மாளமுமாய் ஆடித் திரிய மோகிக்கிற ஆசை மோகினி. நிலை கொள்ளாமல் ஆடிற்று.

குட்டிப் பறப்பாகப் பறந்தது. தேவையில்லாமல் றெக்கை யடிக்க... எம்பிப் பறக்க... பத்தடி தூரத்தில் குப்புறச் சாய... சின்ன ஓட்டமாய் ஓடி பாலன்ஸ் பண்ண...

பெண் மயில் அதை எரிச்சலும், கண்டனமுமாய் பார்த்தது.

"ஏய்...இந்தா, நிலைகொண்டுநிற்க முடியலியா? ஒரே கூத் தாட்டம் போடுதே"

ஆண் மயிலுக்கு ஜோடியின் கோபம் சந்தோஷமாகத்தானி ருந்தது. ஒரே கொண்டாட்டம்.

"ஆமா... கூத்தாட்டம்தான். எனக்கு ஒரே ஆதாளி (மகிழ்ச்சி)யா யிருக்கு. ஆடுதேன்... ஒனக்கென்ன... வலிக்கா?"

பெண் மயிலின் பொய்க் கண்டனம் ஆண் மயிலுக்குள் குஷியூட்டியதது. இன்னும் குறும்பு பண்ணுகிற ஆசை. ஒரு வெறியாக பற்றிக்கொண்டது.

'பெண் மயிலை இன்னும் கொஞ்சம் கோபமூட்டிப்பார்க்கணும். கொதிக்க வைத்து ரசிக்கணும்'. ஆண் மயிலுக்குள் ஆர்வக் குறுகுறுப்பு.

தலைக்கொண்டை கோபுரச் சாய்வாக சாய்... நீளக்கழுத்தை நெளித்துப் பார்த்தது. தூ...ரத்தில் ஒரு மின் கம்பம். மூன்று கம்பிகளைச் சுமந்துகொண்டு நிற்கிற கம்பம். அந்த மின் கம்ப உச்சியில் ஏறி நிற்க சம்மதிக்காது, பெண் மயில். காட்டுக் கத்தலாக கூப்பாடு போடும். கண் மூக்கு பாராமல் கோபத்தில் எகிறும். "க்ய்யா.... க்க்ய்யா..." என்று ஆங்காரமாய் கத்தும்.

அதன் பழைய ஜோடி செத்த அனுபவ அதிர்வு. இன்னும் பெண் மயில் நெஞ்சுக்குள்.

... இப்படிப்பட்ட காலைப் பொழுதுதான். தோகையை விரித்து, உயர்த்தி உல்லாசமாய் சுற்றி சுற்றியாடிய அந்த ஆண் மயில், பெண் மயிலை நெருங்கி நெருங்கி 'உர்ர்ர்... கூர்ர்ர்...'ரென்று கொஞ்சிய மயில். என்ன நினைத்ததோ... தோகையை மடக்கியது. தரையில் படிய விட்டது. மின் கம்ப உச்சியில் ஏறி நிற்கிற குறியில்... 'தம்ம்' பிடித்து றெக்கையடித்துப் பறந்திருக்கிறது.

ஒரே பாய்ச்சலில் போய் உட்காரணும். மறு பாய்ச்சலுக்கு வழியில்லை. குறி தப்பி விட்டால்... சிக்கல்தான். அடித்த றெக்கைகளை விரித்த நிலையில் நிறுத்தி, ஏறுமுக அம்பாக பறந்து... உச்சியை நெருங்குகிற கணத்தில் –

வழியில் குறுக்கிட்டு பறந்துவிட்ட கரிச்சான். இதன் குறிப் பாய்ச்சலில் தடுமாற்றம். சின்னக் குளறுபடி.

மின் கம்பிகளில் வலது றெக்கை பட்டுவிட... அவ்வளவுதான். பளீரென சிற்றமாக ஒரு தீப்பொறி. காடே அதிர்ந்து நடுங்குகிற மாதிரி ஆண் மயிலின் கூப்பாடு. மரணக் கூப்பாடு.

பெண் மயிலின் கண் பார்வையில் நிகழ்ந்துவிட்ட துணையின் மரணம். பறக்கும் காதலனின் சாகசத்தில் பூரித்துப் போய், மிருதுவும் கனிவுமாய் குழைந்திருந்த உணர்வில் தீப்பந்தமாய் வந்து விழுந்த அந்தச் சாவு. றெக்கைகளால் மாரடித்துக் கொண்டு கதறிய பெண் மயில். கிறுக்குப் பிடித்த மாதிரி மின் கம்பத்தைச் சுற்றி சுற்றி வந்து புலம்பிய புலம்பல்கள்...

.... அதை இப்ப நினைத்தாலும் நடுக்கமாயிருக்கிறது. ஈரமண்ணில் தடம்பதிய ஆதாளி தாளாமல் ஆட்டம் போடும் இந்த ஆண் மயிலை தலையை உயர்த்திப் பார்த்தது. அதன் கண்ணில் கண்டனமும் பதற்றமும்.

ஆண் மயில் நீள – நீலக் கழுத்தை உயர்த்துவதும்... கண்ணைச் சாய்த்து தூரப் பார்வை பார்ப்பதுவும்... மின் கம்பத்தில் நோட்டமும் நாட்டமும் விழுவதுவும்...

பெண் மயிலின் பதற்றமும் கோபமுமான கத்தல். "கேர்... கேர்.. கே... ர்ர்"

அதன் எச்சரிப்பை அலட்சியப்படுத்துவது ஆண் மயிலுக்கு ஒரு விளையாட்டு. மீறுவதில் ஒரு குஷி. குறும்புச் சரசம்.

பம்மிப் பதுங்கி... மூச்செடுத்து... ஒரே பாய்ச்சல். மேல் நோக்கிய அம்புப் பாய்ச்சல். பாதி தூரம் சடசடசடவென றெக்கையடிப்பு. மீதி தூரம் விரிந்து உறைந்த றெக்கைகள். ஆகாய விமானம் போல மின் கம்ப உச்சந்தலையில் கால் பதித்து நின்று கொண்டது.

அங்கிருந்து பெண் மயிலைப் பார்த்து... ஒரு எக்காளக் கூவல். மனசில் கெந்தளிப்பில் வந்த உல்லாசக் கூவல்.

"க்யா... ய்க்... க்யா...ய்ய்க்... க்யா... ய்க்"

'சொன்னபடி கேளாத சனியன். எப்படியும் போய்த் தொலை'

சலிப்பும் கோபமுமாய் பெண் மயில் ஒரு பார்வை பார்த்துவிட்டு, அங்குட்டுப் போயிற்று. மழைத் ததும்பலில் மறைந்திருந்த பழைய மண் கிறல்களைக் கொத்தியது. புழுக்களும், பூரான்களும். ஆவல் ஆவலாய்க் கொத்திய பெண் மயில் சுத்தமாய் மறந்துவிட்டது. ஆண்மயிலை, குஞ்சுகள் "கியா... கியா... க்யா" என்கிற குதூகலக் கூவலோடு... மழைக்கு வந்து செத்துக் கிடந்த ஈசல்களைப் பொறுக்கி முழுங்கின.

மழை நாளின் மறுநாளைய வெயில் இருக்கிறதே... அதன் இதமே, தனி. அதிகாலை வெயிலின் தங்க ஜ்வலிப்பு. கதகதப்பும் குளுமையும் கைகோர்த்துக் கலந்த ஒரு புது சுகமாய் வருடுகிற வெயில். கோடையின் வெக்கை தணிந்த அந்த ஈரவெயில். அடடா... என்று கண் சொக்கிப் போய் நின்றது அந்த ஆண் மயில், மின் கம்ப உச்சந் தலையில்.

கழுத்தை எல்லா வடிவங்களிலும் நீட்டி வளைத்து, திரேக பட்டாடை மின்னல்களை விலக்கி, உள்ரோம வெள்ளையை அலகால் கோதிக் கோதி வெயிலுக்குக் காட்டுவதில் ஒரு பரவசம். புல்லரிப்பான போக சுகம்.

சுகக்கிறக்கத்தை அனுபவித்துக் கொண்டே இந்த உயரத்திலிருந்து தங்களது வாசஸ்தலமான அந்தத் தோப்பைப் பார்த்தது.

தோப்பு ரொம்ப அழகாக இருக்கிறது. மரங்கள், பெரிய பெரிய மரங்கள். மழையின் சுவாசத்துக்கான நுரையீரல்கள், மாரித் தாயின் திரேகங்கள்.

ராட்சஸக் குடையாக தலை விரித்துக் கிடக்கும் வேப்பமரங்கள், வாகை மரங்கள், புளிய மரங்கள், அரச மரங்கள், தோப்புக்குக் காவல் வீரன்களாய் சுற்றுவரப்புகளில் வரிசையாக பனை மரங்கள். குளித்து முடித்த குமரிப் பெண்களாக மரங்களின் ஈர மினுமினுப்பு. ஒளிச்சுடர்களின் பசிய பேரொளி.

இந்தத் தோப்புதான் இவர்களுக்கு பரம்பரை வாசஸ்தலம். ஆத்தா, ஆத்தாளின் ஆத்தா, பாட்டிகளின் ஆத்தா, ஆதி ஆத்தா. எல்லாரும் இங்குதான். தோப்புகளைச் சுற்றிலும் செவல்க்காடு. கடலை... சோளம்... துவரை வெள்ளாமைகள். இரைக்குப் பஞ்சமே வராது இதுகளுக்கு. கோடைக் காலத்திலும் வற்றாத இரை. அடிக்கடி மழை. ஆற்றிலும் ஓடைக்காட்டிலும் சந்தனக் கரைசலாய் மழைத் தண்ணீர். மீன், நண்டு என்று ஏகப்பட்ட ஜீவராசிகள். பொறுக்கித் திங்கக் குறையாத புழுபூச்சிகள். தட்டுப்பாடே இல்லை.

வேப்ப மரங்களில் பசிய இலைகள். கொத்து கொத்தாய்

தொங்கும் காய்கள். பெரு வாகை மரம் ஓர் அதிசயம். கோடை வந்து விட்டால்... இலைகளெல்லாம் பழுத்து சுத்தமாக உதிர்ந்து விடும். மொட்டை மரமாகி விடும். ஆனால் மொட்டை மாதிரியே தெரியாது. அப்பத்தான் அது ரொம்ப அழகாக இருக்கும். இலைகள் உதிர்ந்தாலும் நெற்றுகள் உதிராது. நீள நீள நெற்று. தங்கநிறத்தில் அடர்த்தியாய்... மரமே தங்க மரமாய் தகதகக்கும். காய்ந்த நெற்றுகள் பூராவும் தங்கச் சலங்கைகள்.

லேசாக காற்று வந்து கிச்சலம் காட்டினால் கூட.. மரம் முழுக்க சின்னப் பிள்ளைகள் சிரிப்பாக கலகலக்கும். அந்தச் சலங்கைச் சிரிப்பின் சங்கீதம், ஆண் மயிலுக்குள் கார்கால மேக நகர்வாகப் போதையூட்டும்.

மயில்களுக்கு இந்தத் தோப்பு தாய் மாதிரி. நிழல் தந்து, மறைவிடம் தந்து பாசம் காட்டுகிற தாய். தமது நிழலிருட்டு றெக்கைக்குள் வைத்து இரையூட்டுகிற கருணைத்தாய்.

மழையை மாதிரியே இந்தத் தோப்பும் மயில்களுக்கு உயிர். உலகம்.

தோப்பின் காலடியில் காய்ந்த குச்சிகள். உதிர்ந்த இலைச் சருகுகள் . காய்ந்த ஓலைகள். பனை மட்டைகள். ஆத்திச் செடிகள். ஆவரைச் செடிகள். தும்பைச் செடிகள். குஞ்சுகள் விளையாட ஏகப்பட்ட வசதிகள். மைனாக்கள்... கரிச்சான்கள்... காகங்கள்... பனங் காடைகள் என்று ஏகப்பட்ட தோழர்கள் உடன் வாழும் உலகம்.

சித்திரை பிறந்துவிட்டால் போதும். ஆண் மயில் ஏக்கமாய் எதிர்பார்க்கத் துவங்கி விடும். அந்தப் பையன்களைக் காணோமே என்று ஆவலாய் கழுத்தைச் சாய்த்துப் பறக்கும்.

ரெண்டொரு நாட்களில் பையன்கள் வந்து விடுவான்கள். எல்லாம் டவுன்காரப் பையன்கள். லீவுக்கு வந்திருப்பான்கள். மயிலைப் பார்க்க தோப்புக்கு வந்து விடுவான்கள். அந்தப் பையன் களுக்குள் அந்தச் சிவந்த – குண்டுக் கன்னப் பையன் இருக்கானா என்று ஆசையோடு தேடும்.

அவன் இருப்பான். மயிலுக்குத் திருப்தியாக இருக்கும். ஆண் மயிலுக்கு அந்தக் குண்டுக் கன்னப் பையன் என்றால்... ஒரு பிரியம். பாசம். இனம் புரியாத ஒரு பிடிப்பு.

அந்தப் பையன்கள் மயில்களைப் பார்த்து சந்தோஷமும் கும்மாளமுமாய் கைதட்டுவார்கள். காணாத அதிசயத்தைக் கண்டுவிட்ட ஆச்சர்யத்தில் பரவசமாய்க் கூவுவார்கள்.

"அய்ய்... மயிலு... இங்க பார்டா... ஆண் மயிலு சூப்பராயிருக்குல்லே?"

"வாலைப் பார்டா... எம்புட்டு நீளம்னு? தரையெல்லாம் இழுபடுதே..."

"அது வாலு இல்லே... தோகைடா"

"வாலுதான்..."

"தோகைதான்"

உக்ரமமான மோதல். முடிவு பெறாமலேயே கரைந்துவிடும்.

"மயிலுக்குக் கொண்டையைப் பாருடா"

"நாதஸ்வரத்துலே இருக்குற பீப்பீ மாதிரி இருக்குல்லே?"

"கழுத்தைப் பாருடா... கலர் சூப்பராயிருக்கு"

"தங்கம் மாதிரி மினுமினுக்குதுடா..."

"அய்ய்ய்... அங்க பார்டா... நாலைஞ்சு மயிலுக்குட்டிடா"

"குட்டியில்லே... குஞ்சுடா"

எல்லாப் பையன்களும் பரிகாசமாய்ச் சிரிப்பார்கள். அவர்களது சிரிப்பாணிக் கூத்தில் தோப்பே திகைக்கும்.

இதெல்லாம் ரொம்ப ரசிக்கும், ஆண் மயில். தான் பார்க்கப் படுவது... ரசிப்பது... வியப்பது... மகிழ்ச்சிக் கொந்தளிப்பில் தத்தளிப்பது... குதூகலக் கும்மாளத்தில் சிறுவன்கள் ததும்பிக் கிடப்பது எல்லாம் ஆண் மயிலுக்கு ரொம்பப் பிடிக்கும். ஒற்றைக் காலில் நின்று ஒரு கிறக்கத்தோடு பையன்களைப் பார்க்கும்.

அதிலும் அதன் கவனம் முழுவதும் அந்தக் குண்டுக் கன்னப் பையன் மீது மென்மையாய்க் குவிந்திருக்கும். அவன் இந்த ஆரவாரக் கூப்பாடுகளிலெல்லாம் கலந்து கொள்ளமாட்டான். மயில்களைத் துரத்தமாட்டான். சத்தமில்லாமல் அவர்களோடு சேர்ந்து நிற்பான். ரொம்பச் சாந்தம். அமைதி. ஆனால், ரசனைத் தீவிரம். மயில்களையே பார்ப்பான். வைத்த கண் எடுக்காமல் பார்ப்பான். அதன் நடைகளை – அசைவுகளை – தோகை விரிப்புகளை – மயில்களுக்குள் நிகழும் செல்ல விளையாட்டுக் களையெல்லாம் இமை தட்டாமல் பார்ப்பான். மனசு கரைந்து போய், மௌனமாய் ரசிப்பான்.

சிந்தாத – சிதறாத – அவனது ரசிப்பின் உக்கிரம், ஆண் மயிலின் அடிமனசில் வருடும். ரொம்ப ரொம்பப் பிடிக்கும்.

அவனையே ஒரு பிரியத்துடன் கூர்ந்து பார்க்கும். அவனுக்காகவே அது அடிக்கடி தோகை விரித்தாடும்.

பச்சைப் புல்லுக்குள் கிடக்கும் மயில் தோகைகளைப் பொறுக்கிச் சேர்ப்பார்கள். கையில் குத்து குத்தாக மயில் தோகைகள். அந்தக் குண்டுக் கன்னப் பையன் கையிலும் நீளமான தோகை ரெண்டு. சின்னது நிறைய்ய.

இந்தப் பையன்கள் பத்துப் பதினைந்து நாட்களுக்கு தொடர்ந்து வருவான்கள். வந்து போகிற அத்தனை நாட்களும் மயிலுக்குச் சந்தோஷம்தான். பூரிப்பும், பெருமிதமும்தான். இரை பொறுக்கக்கூட மனசு வராது. தனது பிறப்பின் அர்த்தமே பூர்ணப்பட்டுவிட்ட மாதிரி... உள்ளுக்குள் ஒரு நிறைவு. ஒரு மயக்கக் குழைவு. ததும்பல் கிறக்கம்.

அந்தப் பையன்கள் வருவதை நிறுத்தியபிறகும் கூட.... ஏழெட்டு நாளைக்கு அதே எண்ணமாயிருக்கும்.

தினசரி இந்த உள்ளூர் பையன்கள் வருவான்கள். அதுகளைக் கண்டாலே மயிலுக்குப் பிடிக்காது. ஆடுகாலிக் கழுதைகள், வெறுப்பும், எரிச்சலும் பொத்துக் கொண்டு வரும்.

கன்னங்கரேலென்று வருவான்கள், குரங்குச் சனியன்கள், டவுஷரை அர்ணாக்கயிற்றில் சொருகியிருப்பான்கள். தினம் பார்த்துப் பழகிய மயில்களை ஒரு பொருட்டாகவே மதிக்க மாட்டான்கள். அவன்களைப் பொறுத்தவரை வீட்டுக் கோழியைப் போலவே இந்த மயிலும் ஓர் அசிங்கம்தான். காரண காரியம் இல்லாமலேயே கல்லை எடுத்து எறிந்து மயிலை விரட்டுவான்கள். கதிகலங்கவைத்து பதற வைப்பதில் அந்தக் குரங்குகளுக்கு ஒரு குஷி. மயில் முட்டைகளை தேடிப் பொறுக்கி எடுத்துவிடுவான்கள். பொறித்துத் தின்று தீர்த்துவிடுவான்கள். சேட்டைக்காரச் சனியன்கள்..

இந்தத் தோப்புலகத்துக்குள் ஊர் உலகமும் வந்துபோகும். காய்ந்த குச்சிகளை பொறுக்கிக் கட்டிக் கொண்டு போக ஒன்றிரண்டு பெண்கள் வருவார்கள். ஊர்ப் பொரணிகளைப் பேசித் திரிவார்கள். அல்லது உள்சோக ரணங்களைச் சொல்லி ஆற்றிவிட்டுப் போவார்கள்.

மதிய நேரங்களில் செம்மறியாடுகள் மேய்ச்சலுக்கு வரும். ஆட்டுக்காரனும் கம்போடு வருவான். பேச்சுத் துணைக்கு ஆளில்லாத வெறுமையில் ஆட்டுக்காரன் ஆடுகளைப் பெயர் சொல்லி வைவான்.

கம்பைச் சாய்வாக ஊன்றி, இடது கட்கத்தை அதன் மேல் போட்டு, உடம்பின் மொத்தப் பாரத்தையும் அதன் மீது கிடத்திக் கொண்டு கிருஷ்ண பகவான் மாதிரி நிற்பான். தனிமைச் சூன்யத் தகிப்பு தாளாமல் சத்தம் போட்டு பாட்டுப் படிப்பான். கெட்ட வார்த்தைப் பாட்டுகள். ஆபாசப் பாட்டு.

"ஏலேய்... பாட்டா படிக்கே? காடுகரைகள்லே பொம்பளைப் புள்ளைக இருக்கப் போறாக" என்று யாராவது எச்சரித்துவிட்டுப் போனால்... வெட்கத்தில் தலைகுனிந்து கொள்வான். கொஞ்ச நேரம். கொஞ்ச நேரம்தான். அப்புறம்... பாட்டு தூள் பறக்கும்.

பொழுதடைந்து கருகருவென்று மயங்குகிற நேரம். ஆளரவம் அற்றுப் போன நேரம். சிலசமயம்... எவனாச்சும் ஒரு விடலைப் பையன் வருவான். பதறிப் பதறிப் பம்முவான். நாலா பக்கமும் கிலியோடு பார்ப்பான்.

வேறொரு திசையிலிருந்து ஒரு பெண் வருவாள். கள்ளத்தனத் திற்குரிய பயம் அவள் கண்களில் அப்பியிருக்கும். நாலு வார்த்தைகள் கூட ஆற அமரப்பேச மாட்டார்கள். பதற்றமும், பரபரப்பும் மோக மோதலுமாய் படுத்துவிட்டு, அவசர அவசரமாய்ப் பிரிந்து ஓடுவார்கள்.

என்னத்துக்கு இதுகள் இப்படிப் பயந்து சாகுதுகள் என்று ஆண் மயிலுக்குப் புரியவே புரியதாது. பயப்பட வேண்டிய குற்றமா இது? அதற்கு ஒரே புதிராகத் தோன்றும்.

பெண் மயிலோடு, தான் ஆற அமர சல்லாபிப்பது, பயமில்லாத மன நிதானத்தில் விளையாடி முழுச்சுகம் பெறுவது எல்லாம் ஞாபகத்தில் முகம் காட்டும்.

இப்படி தோப்புக்குள் உலகம் வந்து போகும். தோப்பே ஓர் உலகமாயிருக்கும். வாழ்வின் ஜீவ அலைகள் தோப்புக்குள்ளும் மதுர வெள்ளமாய் வந்து தழுவிச் செல்லும்.

... மின்கம்ப உச்சியில் நின்ற ஆண்மயில் றெக்கைகளை விம்மிப் புடைக்க வைத்து நெட்டி முறித்துக் கொண்டது. தன் ஜோடி ஞாபகம் வந்துவிட்டது. வெயிலும் சுள்ளென்று உரைக்க ஆரம் பிக்க, கீழே பார்த்தது. ஈரக் குழைவான சகதியாக தரை. திட்டுத் திட்டாக நீர்ப்பெருக்கு. இரை பொறுக்கணும் என்ற ஆசை வேறு....

றெக்கையடித்துப் பாய்ந்தது. உயிருள்ள அம்பாக கீழ் நோக்கி வந்தது. விரித்த றெக்கைகளோடு தரையிறங்கி சின்ன ஓட்டமாய் ஓடி, பாலன்ஸாகி... நின்றது. மெதுநடையிலேயே நடந்து... கண்ணில்

தென்பட்ட பூச்சிப் புழுக்களைக் கொத்தி விழுங்கிக் கொண்டே... தோப்பை நெருங்கியது.

தோப்புக்குள்ளிருந்து வருகிற கதறல்கள். எல்லா மயில்களின் கூட்டுக் கலவையான கூவல்கள். பீதியும் கிலியுமான "க்யாய்... க்... யா... க்யா..."க்கள்.

என்னாச்சு? ஆண் மயிலுக்குள் ஒரு திடுக்கிடல். 'என்னமோ... பயங்கரம்' என்று பதற்ற பரபரப்பில் ஒட்டமாய் ஓடிவந்து... தோப்புக்குள் நுழைந்தால் –

இதன் அடிவயிற்றிலும் இனம் புரியாத பயபதைப்பு. அதிர்வான குழப்பம்.

பத்துப் பேருக்கு மேலிருக்கும். எல்லாரும் சைக்கிள்களை நிழலில் வைத்துப் பூட்டியிருக்கிறார்கள். பீடிகளைச் சுண்டி இழுத்துக் கொண்டிருக்கிறார்கள். சைக்கிள்களின் ஹாண்டில் பாரில் தூக்குச் சட்டிகள். மதியச் சோறு. கேரியல்களில் பெரிய பெரிய அரிவாள்கள். துரட்டிகள். கோடாரிகள்.

'என்னத்துக்கு வந்துருக்கான்கள்... இந்தப் பீமன் தடியன்கள்?' மயிலுக்குள் குழப்பம். பதற்றம். ஏதோ ஒரு பயங்கரத்தை உணர்கிற மனசு. உள்ளூர அதிர்ந்தோடுகிற மின் அதிர்வுகள்.

பேரழிவின் பெருமுழக்கம் போல நாராசமாய் தடதடத்துக் கொண்டு வந்தது. ஒரு கறுப்பு மோட்டார் பைக். அதிலிருந்து இறங்கிய ஒரு பணக்கார ஆசாமி. ஆசாமியின் வெள்ளையும், சொள்ளையுமான டிரஸ்ஸே அவனது பணக்காரத்தனத்தைக் காட்டியது. இடது கையில் தங்க நிறச் செயினோடு கடிகாரம். விரல் நிறைய மோதிரம்.

"மோலாளி வந்துட்டாரு" என்று பரபரத்த சைக்கிள்காரன்கள்.

"என்னப்பா.. எல்லாரும் வந்தாச்சா?"

"ஆமா.. மோலாளி"

"மத்ததெல்லாம் ரெடியா?"

"ரெடிதான் மோலாளி. வேலையை எங்க இருந்து ஆரம்பிக்கணும்?"

"மாரி மூலையிலேயிருந்து வேலையைத் துவக்குங்க. அதானே... சாஸ்திரம்?"

"சரிங்க"

"நீட்டி நிமிர்த்தி நேரத்தைக் கழிச்சிராதிக. சட,புடன்னு வேலையை முடிக்கப் பாருங்க"

"ஆட்டும் மோலாளி"

"செங்கல் சூளையிலே உங்களை நம்பி ஆயிரக்கணக்குலே அட்வான்ஸ் வாங்கிட்டேன். நாலு நாளைக்குள்ளே லாரியிலே லோடு பண்ணி அனுப்பியாகணும். வெறகை"

ஆண் மயிலுக்குள் உயிரே அறுந்து போன மாதிரியிருந்தது. நிலை கொள்ளாத பதற்றம். நிற்கவும் முடியவில்லை ஓடவும் முடியவில்லை. கழுத்தை உயர்த்தி சாய்த்துக் கொண்டு... பைக்காரனைப் பார்த்தது.

'அடப்பாவி... எங்க தாயையா வெட்டப் போறே? மாரித்தாயான எங்க மரமாதாவையா மாய்க்கப் போறே? வெளங்குவீயாடா... நீ? நாசமாய்ப் போயிருவே'

நினைக்க நினைக்க மயிலுக்குள் வருகிற ஆத்திரம். பொங்கிப் பீறிடுகிற ரௌத்ரம். முருகப் பெருமானின் வேலாகப் பாய்ந்தது. கோபமும், ஆவேசமுமாய் றெக்கையடித்துக் கொண்டு பைக் காரன் மீது பாய்ந்து மோதியது. "க்யா... க்யா... க்யா" என்ற ஆவேசக் கூவலோடு கண்டமேனிக்கு அவன் மூஞ்சியில் கொத்திப் பிடுங்கியது. அவன் அலற அலற.. ஆசை தீரக் கொத்தியது. ரத்தக் குதறல்...

எல்லாம் நினைவு மயக்கம்தான். மயிலின் மனமாயம்தான். எல்லா மயில்களும் பீதியும், கிலியுமாக கத்திக் கொண்டிருக்க... இந்த ஆண் மயில் மட்டும் கத்தாமல் பார்ப்பது... முறைப்பதுபோல அவனை உறுத்தியதோ, என்னவோ... பைக்காரன் பேச்சுவாக்கில் குனிந்து ஒரு கல்லையெடுத்து விர்ரென்று எறிந்தான். இதன் மேல்.

ஆண் மயில் உயிரை கையில் பிடித்துக்கொண்டு 'கோர்... கோர்... கோர்...'ரென்று அலறியது. திசைக்கொன்றாக சிதறிப்போய் ஓடின.

நாலைந்து நாட்களாய் –

மரங்கள் வெட்டப்படுகிற கோடாரியின் சத்தம், அந்த ஏரியாவை அதிர வைத்தது. அதையும் அமுக்குகிற அளவில் மயில்களின் கூட்டுக் கூவல்.

எல்லா மயில்களும் றெக்கைகளால் மாரடித்துக் கொண்டு அழுவதைப் போல் வீறிட்டு அலறிற்று. பரம்பரை பரம்பரையாய் வாழ்ந்து வந்த வாசஸ்தலம் இடிபட்டுத் தூளாகிற சோகத்தில் "கோர்... கோர்... கோர்..." என்று கத்தித் திரிந்தன. கிறுக்குப் பிடித்த மாதிரி.

ஓர் உலகமாய் - மயில்களின் ஜீவ உலகமாய் - மழைச் சுவாசத்தின் திரேகமாய் திகழ்ந்து வந்த அந்தப் புராதன அழகுத் தோப்பு.. நாலைந்து நாட்களில் ஒரு ராட்சஸ விறகுக் கடைமாதிரி யாகிவிட்டது. தோப்பு இருந்த இடம் வெட்ட வெளியாகி... எல்லார் கண்களையும் உறுத்துகிற சூன்யமாகிவிட்டது.

மரங்களற்றுப் போய் வெற்றுத் தரிசாகிவிட்ட பூமியில் மழைக்கும், மயிலுக்கும் என்ன ஜோலி?

அந்த வட்டாரத்திலேயே கிறுக்குப் பிடித்த மாதிரி சுற்றித் திரிந்த மயில்கள்... உயிர் பிழைச்சாகணுமே என்ற நிர்ப்பந்தத்தை உணர்ந்தன. பஞ்சம் பிழைக்க அகதிகளைப் போல் எல்லா மயில்களும் வாழ்வை நோக்கி வேறிடம் தேடி நகர்ந்தன. அந்த ஆண் மயிலும்தான்.

அந்த ஆண் மயில் மனசில் மட்டும் வேறொரு கவலை. கனத்த பாரமாய் உட்கார்ந்து அழுத்தியது.

அடுத்த சித்திரைக்கு வரப்போகிற அந்தக் குண்டு கன்னப் பையன். மரங்களையும், மயில்களையும் காணாமல் ஏமாற்ற மடையப் போகிற அந்தப் பையனின் சோகமுகம்.

அந்த பையனைப் பற்றிய சோகம் இதன் நெஞ்சில் நிழலாட... மாயமாகி வருகிற நிழலைத் தேடி மயில்களோடு சேர்ந்து நகர்ந்தன.

*4.7.96ல் சென்னை சாகித்ய அகாடமி கூட்டத்தில் வாசிக்கப்பட்ட இச்சிறுகதை. செம்மலரிலும் பிரசுரமாயிற்று.*

# தீண்டாதே

"யம்மோ..வ். சோறு போ...டுங்கம்மா..." என்று ராகத்துடன் மாடத்தி முற்றத்தில் நின்று கத்திய சத்தம் கேட்டவுடன் ரெங்கலட்சுமிக்கு சுள்ளென்று பத்திக் கொண்டு வந்தது.

"ஏலேய், துணி கெடக்கு... போய் வண்ணாத்தியைக் கூட்டிட்டு வாடா" என்று நேற்று மூத்த பயல் ராமானுஜத்தை அனுப்பிவைத்தாள் ரெங்கலட்சுமி.

அடிபட்ட பந்தின் வேகத்தில் திரும்ப வந்தான்.

"வரமாட்டாளாம்மா... தொறைக்குப் போறாளாம்."

ரெங்கலட்சுமிக்கு மிளகாயை அரைத்து அப்பிய மாதிரியிருந்தது. அடிமனசில் தீப்பற்றிக் கொண்டது.

"நெதம்... நெதம்.... நேரம் தப்பாம சோறு எடுக்க வரமுடியுது. வருசம் தப்பாம ரெண்டு தரம் தானியக்கூலி வாங்குறதுக்கு வரமுடியுது.... அழுக்குத்துணி எடுக்க மட்டும் வரமுடியலியாக்கும்?"

இதெல்லாம்.... நேற்று. இப்பவும் அந்த வெளமும் வேசடையும் சூடு குறையவில்லை, கொஞ்சமும்.

பருக்கைகளோடு வாசலுக்கு வந்தாள் ரெங்க லட்சுமி.

வாசலில் ரெங்கலட்சுமியைப் பார்த்ததும், கூழைப் பணிவோடு மாடத்தி, "என்னம்மா.... அழுக்குத் துணிகளை எடுத்துப் போட்டுருக்கிகளா?"

இந்தப் பணிவும், குழைவும் ஈரச்சிலிர்ப்பாக அவளைத் தாக்கின. மனத்தீ தணிந்தாலும், அதன் புகை வெக்கை.

"பெறகு.... நேத்து வரமாட்டேன்னு சொன்னீயாம்லே?"

"வேலைப்பாடு அப்புடியாம்மா. நீங்க பாத்து எங்கமேலே கோபப்படலாமாம்மா? நீங்க காலாலே தள்ளுற அழுக்கை, கையாலே அள்ளி எடுக்குற சாதி நாங்க. நீங்க போடுற சோத்துலேதான்... எங்க குடும்பமே கொடலை வளக்குது. வீட்லே கெடக்குற அழுக்கெல்லாம் மூலையிலே போட்டு வைங்கம்மா... சோத்துச் சட்டியை வீட்லே வைச்சிட்டு வந்து, எடுத்துட்டுப் போறேம்மா..."

"ஆட்டும்."

முள்குத்தலாக உறுத்திக் கொண்டிருந்த ஒரு குறை தீர்ந்துபோன நிம்மதி, சாந்தம். ரெங்கலட்சுமி அழுக்குத் துணிகளையெல்லாம் வாசல்படியையொட்டிய நடையில் போட்டாள். அப்போது,

வாசலில் ஏதோ அரவம். நிமிர்ந்து பார்த்தாள் ரெங்கலட்சுமி.

அயலூர் கிழவன். அழுக்கு வேட்டியும், கக்கத்தில் பம்மிய துண்டும் ரெங்கலட்சுமியைத் துணுக்குற செய்தது. 'துட்டி (இழவு) சொல்லி ஆள் வந்துருக்கோ...'

அவள் பயந்த மாதிரியே செய்தி. இழவு செய்திதான். அதுவும் ஆத்திர அவசரமாக ஓடவேண்டிய நெருக்கமான இழவு; போட்டது போட்டபடி ஓட வேண்டிய அவசரம்.

புஞ்சையிலிருக்கும் புருஷனுக்கு மட்டும் ஒரு பையன் மூலமாகத் தாக்கல் சொல்லிவிட்டு... உறவுக்கார சாதி ஜனத்தோடு சேர்ந்து, ஏழுமணி பஸ்சில் ஏறி உட்கார்ந்துவிட்டாள்.

மதியத்திற்குத்தான் அந்த விபத்து நிகழ்ந்தது. கண்மாய் உடைந்து வெள்ளப்பெருக்கு. கருஞ்சாம்பல் நிறத்து நீர் மூர்க்கம். பாறை முடிச்சுகள், வேலி மரங்கள் எல்லாம் முரட்டு நீர்ப்பரப்பில் காணாமல்போயிற்று.

காய்ந்த வேலி விறகுகள் கம்பங்கதிர்கள்... கூரை முகடுகள்... செத்த கோழிகள், நாய்கள்... மாடு கன்றுகள் எல்லாமே தாறுமாறாகப் புரட்டப்பட்டு வருகிற காட்டாற்று உக்கிரம். பார்த்த மனசுகள் நடுங்கும்.

அதிர்ச்சியும், ஆச்சிரியமுமாய் ஓடி வருகிற ஜனம். நிமிசத்தில்

ஊரையே துண்டித்து, தனித்தீவாகிவிட்ட பயங்கர திகிலில் உறைத்துபோன ஆட்கள், பீதியும், திகிலுமாகப் பதறிப் பதைக்கிற ஜனங்களோடு ராமானுஜமும்.

அழுகையில் விசும்புகிறான். விம்மி விம்மியழுகிறான்.

'ஊருக்குப்போன அம்மா எப்படி ஊரு திரும்புவா? வெள்ளத்தைத் தாண்டி எப்படிவந்து சேருவா?'

"எம்மா.. எம்மா.. எம்மா.." என்று விசும்பி விசும்பி கண்ணைக் கசக்குகிற ராமானுஜன் சிணுங்கலாய் நீள்கிற அழுகை.

வெள்ளம் கணத்துக்குக் கணம் அதிகரிக்கிறது. நுரைக் கோடுகள் புதிய புதிய மண்தரையை நோக்கி விஸ்தரித்து முன்னேறுகின்றன....

இழவுக்குப்போன இடத்திலும் எப்படியோ தகவல் வந்து சேர்ந்துவிட்டது. 'ஆற்றில் வெள்ளம்' என்று. ஊருக்குப்போக பாதையில்லை. ரெங்கலட்சுமிக்குள் 'திக்' கென்றது.

புருஷனைப் பார்த்துச் சொல்லவில்லை. ராமானுஜனைப் பார்க்கவில்லை. ஆத்திர அவசர யாத்திரையில் அவகாசமில்லை. சோறு குழம்பு ஒன்றும் சமைத்து வைக்கவில்லை. ராத்திரி சாப்பாட்டுக்கு ஏதாச்சும் வழி பண்ணணுமே... என்ன பண்றது? எப்படிப் பண்றது? இங்க இருந்துகிட்டு என்ன செய்ய...?

போய்த்தான் என்ன செய்ய? ஆத்துவெள்ளத்தை எப்படி நீந்திக்கடக்க? நடக்குற காரியமா?

இதெல்லாம் யோசிச்சிக்கிட்டு இங்கேயே மருகி நின்னா...

கூட வந்த யாருக்கும் ஊருக்குப்போகிற நினைப்பு இல்லை. இழவு முடிந்தபிறகும், இரவு தங்கி, சினிமா பார்க்கிற ஏற்பாடு! ம்ஹும்... இந்த ஏற்பாடு நமக்கு ஒத்துவராது.

ஒரு குருட்டு தைரியத்தில் புறப்பட்டுவிட்டாள் ரெங்கலட்சுமி.

'புருஷனைத் தவிக்கவிடக் கூடாதே... சின்னவன் ராமானுஜனை அலைபாய விடாம, உலை கொதிக்கப் போகணுமே' என்கிற பாச மூர்க்கமே ஒரு பயண வைராக்யமாக... பஸ்ஸில் ஏறி உட்கார்ந்துவிட்டாள்.

பஸ்ஸில் உட்கார சீட் கிடைத்திருந்தது. சன்னலோரம். கார்த்திகை மாசத்து மழைகளில் குளித்த புதுப்பெண்களாக மரங்கள். நனைந்த கரிசல்காடு. சின்னச் சின்னக் குழிகளில்கூட சூரிய வெயில்பட்டுத்தெறிக்கும் நீர்ப்பெருக்கு. அவ்வப்போது

சிணுங்குகிற மழை. ஊசிகளைக் கவிழ்த்துக்கொட்டிய மாதிரி மழைத்தூறல். மேகத்திலிருந்து சரிவாக இறங்குகிற நீர்க்கயிறுகள். காற்றை நடுங்க வைக்கிற ஈரக்கூதல்.

ரெங்கலட்சுமி ஒரு மனசாக இல்லை. 'எப்படியாச்சும் வீடு போய் விழுந்தாக வேண்டும். இந்தக் கட்டை' என்ற வெறியில் அவள் உயிர் துடித்தது.

பஸ்ஸுக்குள் மழைக்காலப் பகலிருட்டு. ஏழெட்டுப் பெண்கள் மட்டுமே இடமில்லாமல் நிற்கின்றனர். தனியார் பஸ். இளவயசு. கண்டக்டர். வயசுக்கோளாறு. தேவையிருந்தும் இல்லாமலும் அந்தப் பெண்களைக் கடந்துபோய் வருகிற பாவனை. இடித்து உரசுகிற அற்பசுகம். கட்டைச்சுவரில் உடம்பைத் தேய்க்கிற எருமைத் தோலின் தினவு.

கடுப்பும், காட்டமுமாக அவனையே பார்க்கிற ரெங்கலட்சுமி. அந்த சிவந்த பெண். லட்சணமான பெண். குடும்பப்பாங்கு. நடு வயசு. அவளை மிகுந்த வெறுப்பும், அசூயையுமாகப் பார்க்கிற ரெங்கலட்சுமி.

ஒரு தடவை கிணற்றில் தவறி விழுந்துவிட்ட நடுத்தெரு பார்வதி. நீச்சல் தெரியாமல், ரெண்டு தடவை முங்கிமுங்கி வந்துவிட்டாள். மரண விளிம்பு. கிணறு முழுக்க சாவின் நிழல். ஊரே கிடந்து கதறியது.

ஒரு வாலிபப்பயல் துணிந்துவிழுந்து காப்பாற்றினான். பதற்றத்தில் – உயிர்ப்பயத்தில் – அந்த அந்நிய வாலிபனை கழுத்தைச் சேர்த்துக் கட்டிக் கொண்டாள். அப்பிக்கொண்டாள். அவனும் சிரமப்பட்டு இழுத்து, கட்டித்தழுவி, அரவணைத்து... தூக்கி தோளில் போட்டுக்கொண்டு, கயிற்றைப்பிடித்து மேலேறினான்.

ஆபத்துக்குப் பாவமில்லாமல் நடந்த அந்தச்சம்பவம். பார்வதி காட்டுவேலைக்கு வருகிறபோதெல்லாம்... சக கூலிக்காரப் பெண்கள் பார்வதியைக் கேலி பண்ணி, கிண்டல் பண்ணி, பாடாய் படுத்துவார்கள்.

"அவன் எங்கன தொட்டான்...", "எப்படித் தொட்டான்...", "கசக்கிப் பொரட்டிட்டானோ....", "ஒனக்கு எப்புடி இருந்துச்சு....", "நனைஞ்ச துணியா போய் ஒட்டிக்கிட்டியே...", "ஒனக்கும் சொகமாத்தான் இருந்துச்சா?"

ஆள் ஆளுக்கு கேள்வி மேல கேள்வியாகக் குடையக்குடைய...

பார்வதி புழுவாக நெளிவாள். கூசிக்குன்றிப்போவாள். 'இதைவிட அன்னைக்கே செத்துத் தொலைஞ்சிருக்கலாமே' என்று எண்ணி எண்ணி மருகுவாள். மனம் கலங்கி, கண் கசிவாள்.

"வெள்ளம், ஓடுபாலம் தெரியாம ஓடுதாம்... ஆளே எறங்க முடியாதாம். அம்புட்டுத்தான். பஸ் போகாது. இங்கேயே எல்லோரும் எறங்கிக்கோங்க."

கண்டக்டரின் சாதாரணக்குரல், அவளுக்குள் அபாயச் சங்காக ஒலிக்கிறது. பதற்றத்தில் திக்கென்கிற மனசு. அரை மனசாக இறங்குகிறாள். சாயங்காலச்சூரியனை விழுங்கிக்கொண்ட மழை மேகங்கள்.

'வேகு, வேகு' என்று நடந்தாள். இருட்டுவதற்குள் ஆற்றுக்குப் போய்விட்டால்... தண்ணீர்ப்போக்கு ஒரு கட்டுக்குள் இருந்தால்... இறங்கிப்போய்விடலாம்.நாம் பார்க்காத வெள்ளமா? சின்னப் பிள்ளையிலிருந்து விவசாய வேலைக்காக ஆற்றைக்கடந்து, சன்னத்தடவைகளா போய் வந்திருக்கிறாள்? வெள்ளம் போகாத வெறும் காலத்திலும் போயிருக்கிறாள். வெவ்வேறு அளவுகளில் வெள்ளம் போன மழைக்காலங்களிலும் போய் வந்திருக்கிறாள். நெஞ்சளவுத் தண்ணீர் என்றால்கூட, பயப்படாமல் இறங்கி யிருக்கிறாள். தண்ணிப்பயம் இல்லை. ஆடு மேய்க்கிறவனுக்கு இருட்டுப்பயம் இல்லாததைப்போலவே, கிராமத்து விவசாயப் பெண்களுக்கு வெள்ளப்பயமும் இருக்காது.

நினைத்ததைவிட நிலைமை ரொம்ப மோசமாக இருந்தது. ஆறுகொள்ளாத வெள்ளம், ஆற்றின் கரைகளையெல்லாம் விழுங்கி, மூர்க்கவெறியாக புரண்டோடுகிற ஊழிப்பெரு வெள்ளம். ஓடுபாலம் தெரியவில்லை. அபாய அளவைக்காட்டுகிற கம்பத்தையும் மறைத்துக்கொண்டு பாய்கிற வெள்ளம். மேடும் பள்ளமுமான கோரச் சுழல்கள். பேயிரைச்சல்.

அவளுக்குள் ஒருபிசைவு. அடிவயிற்றுக்குள் ஏதோ புரள்கிற ஓர் உணர்வு. நடுக்கிடுகிற அச்சம். ரெங்கலட்சுமிக்குள் தலைகாட்டுகிற பயத்தை மீறிக்கொண்டு... ராமானுஜனின் ஏங்கிய முகம். புருஷனின் முகம், "வா..வா... வா.." என்று சுண்டியழைக்கிற பாசக்குரல். அன்புக்குரல்கள்.

கரையின் எதிர்புறத்தில்...

உள்ளூர் ஆட்கள். கிழடுகளும், இளவட்டங்களும், ஒன்றிரண்டு பெண்களுமான கூட்டம். ஏதோசொல்லி கத்தி கைகளை அசைக்கிற அவர்களின் குரல்களையெல்லாம் பொய்யாக்கிக்

காட்டுகிற வெள்ளப்பேரிரைச்சல். வெள்ளக் காட்டின் விகாரக் கூச்சல். பூமியே நடுங்கியதிர்ந்து நகர்கிற மாதிரி ஓர் பயப்பிரமை.

'இறங்காதே' என்று எச்சரிக்கிறார்களா? 'இறங்கு, இறங்கு' என்று உற்சாகப்படுத்துகிறார்களா? ஒன்றும் புரியவில்லை. கண்தான் பார்க்கிறது. காதுகளுக்கு வெள்ள இரைச்சல் மட்டுமே கேட்கிறது.

காலடிச்சேலையையும், பாவாடையையும் முழங்காலுக்கு உயர்த்திக்கொண்டு நீருக்குள் காலை வைத்தாள். வேக இழுப்பான வெள்ளம். தூசியும் துப்பட்டையும் இழுபட்டுச் செல்கிற வேகம். காலில் வந்து மோதி விலகுகிற நுரைக்கற்றை.

பாதத்தில் புல்லின் ஸ்பரிசம். ஈரமண்ணின் ஸ்பரிசம். கட்டை முள்ளின் உராய்வுகள்.காய்ந்த வேலிமுள் கவைகளை உருட்டிப் புரட்டி இழுத்துச்செல்கிற வெள்ள மூர்க்கம். புரட்டியெடுக்கப் படுகிற முன் கவைக் குவியலைப்பார்த்தால், ஒரு குன்றையே புரட்டிச்செல்வதைப்போன்ற பயங்கரம். பயப்பிரமாண்டம்.

பயந்த மனசை திடப்படுத்திக்கொண்டு இறங்குகிறாள். தொடைக்கு வந்துவிட்டதண்ணீர். அவளை இழுக்கிறது. காலை மட்டும் கவ்வியிழுக்கிறது. கால் தரையில்பாவ மறுக்கிறது. தரையிலிருந்து காலை எடுத்துவிட்டாள். நீந்த ஆரம்பித்தாள். நீரின் போக்கில்போய்க்கொண்டே, நீந்தி முன்னேறுகிற கிராமத்து அனுபவம்.

எதிர்க்கரையில் கைகளை ஆட்டுகிற ஊர்ஜனம். பதற்றமாகக் கத்துகிற மனிதர்கள். இவள் நீந்த ஆரம்பித்தவுடன் அங்கும், இங்குமாக நிலைகுலைந்து பரபரக்கிற ஆட்கள்.

இவள் இதையெல்லாம் கவனிக்கவில்லை. கருஞ்சாம்பல் நிறத்து வெள்ளத்தின் அலைவு. மூர்க்க அசைவு. திமிங்கில நெளிவு. சின்னச்சின்ன ராட்சஸச் சுழல்கள்.

ஒரு சுழல், இவளை வெறியோடு அள்ளியணைத்தது. ஆவல் பறப்போடு பிடுங்குகிற மாதிரி, ஒரு சுழற்று சுழற்றி... தன் ஈர இருட்டு மடிக்குள் பதுக்கிக் கொண்டது.

உயிர்ப்பறவை ரெக்கையடிக்க. போராடி வெளிவந்த ரெங்கலட்சுமி. கையிலும், காலிலும் மனப்பயம் இறங்கி... நனைந்த நூலாக செயலற்றுத் துவள...

வெள்ளத்தின் இழுப்பில் வேரிழந்த சருகாகப் புறப்பட்ட பயங்கரத் தருணம். அவிழ்ந்த தலைமுடி முகமெல்லாம் நனைந்து. இருளாகச்சூழ... குடித்துவிட்ட தண்ணீர், நெஞ்சுக்குள் பயச்

சிலிர்ப்பாக மூச்சுத்திணற.... திகிலில் நனைந்து நடுங்குகிற மனசு.

மரணத்தை உணர்கிற ரெங்கலட்சுமி. ராமானுஜனை ஒரு வெறியோடு நினைக்க. புருஷனை நினைக்க... கண்ணியில் சிக்கிய பறவையின் ரெக்கையாக மன உணர்வுகள் மாரடித்து ஒப்பாரி வைக்க.... நல்லவேளை...

ஒரு வேலி மரத்தில் முட்டினாள். உயிர்ப்பறவை துடிதுடிக்க... அதிலிருந்து புரட்டப்பட்ட மூர்க்க தருணத்தில் வேலிமரத்து விளாரைப் பற்றிக் கொண்டாள். கையில் குத்துகிற முட்கள். காந்தல், ராமானுஜ பாசத்தில் தாங்கிக்கொண்டாள். விளாரைப்பற்றிக்கொண்டாள். அழுத்தமாக. உயிரைப் பற்றுகிற வெறி. மகனைப் பிரசவிக்கிற வலி. வலிமை.

அவளை இழுக்க முயல்கிற வெள்ள வேகம். முள்ளில்சிக்கிய ஈரத்துணியாகத் தண்ணீரில் மிதந்து தொங்குகிற பயங்கரம்.

விளார். வேலி மரத்தின் பசிய நீள்கிளை. பூமியுடனான ஒரே பந்தம். மகனோடு... புருஷனோடு... வாழ்வோடு இணைக்கிற ஒரே இழை. அது அறுந்தால்.... அம்புட்டுத்தான்.

ரெங்கலட்சுமி நடுங்கினாள். அழுதாள், "ஐய்யோ.. எம் மவனே..." கதறிப் புலம்புகிற மனசு. ஊர்ஜனம் சிறிசாக... சின்ன நிழல்களாக... பதறிப் பரபரத்து அலைபாய்கிற நிழல்கள்.

நிழல்கள் அனுப்பிவைத்த நிஜமாக. வெள்ளத்தோடு நீந்தி வருகிற ராக்கப்பன். கருவேலங்கட்டை மாதிரி கருந்திரேகம். மாடத்தி மகன். வலுத்த திரேகம். இளவட்டம். எல்லா வெள்ளங்களிலும் இறங்கிப் பழகி... தண்ணீரே பிழைப்பு இடமாகிப்போய்... மீனுக்குத் தண்ணீர் மாதிரி, அவனுக்கு வெள்ளம் இயல்பாகி...

வெள்ளத்தில் இறங்கி.... மீட்காமல் அவன் திரும்பியதே இல்லை. "தலைக்கு மீறின வெள்ளமா? கூப்பிடு ராக்கப்பனை" என்பது ஊரின் சுபாவம்.

ராக்கப்பன் நெருங்குகிறான். தண்ணீரை வாயில் அள்ளியள்ளி கொப்பளித்துக்கொண்டே.

நிழல்களாகத் தெரிந்த ஊர்ஜனமும்... ஓட்டமும் நடையுமாகக் கரையிலேயே வந்து... இதோ ரொம்பப் பக்கத்தில்....

விளாரையும் உருவிக்கொண்டு நகர்கிற உள்ளங்கை. உயிரை.. மகனை – வாழ்வை நழுவ விடுகிற இறுதிக்கணம். அவளுக்குள் உயிரின் படபடப்பு. மாரடிக்கிற மனச்சிறகுகளின் சடசடப்பு.

காலால் தள்ளுகிற அழுக்கை.... கையால் அள்ளித் துவைக்கிற மாடத்தியின் மகன். தாழ்ந்து ஏந்திய சட்டியில்... உயரத்திலிருந்து கை போடுகிற பருக்கைகளைப் பெற்றுக்கொள்கிற மாடத்தியின் மகன். 'இவனா? இவன் தொட்டுத் தூக்கவா? தொட்டு.... அணைத்து.... தழுவி.... கட்டிப்பிடித்து... ஊர்ஜனம் பார்வையில் கரை சேர்க்கவா?'

பார்வதி பட்டபாடு... கிணற்றில் விழுந்து தூக்கப்பட்ட அவளைப் படுத்திய பாடுகள்... பேசிய கிண்டல், கேலிகள்... குத்தல் முட்கள்....

நெருங்கிவிட்டான் ராக்கப்பன். அவன் திரேக ரோமங்கள்.

"யம்மோ..வ், விளாரை வுட்டுராதீகம்மா... புடிச்சுக்கங்கம்மா.... இந்தா வந்துட்டேன்.... விளாரை வுட்டுராதீக... நா உங்களைக் கட்டிப்புடிச்ச பெறவு, விளாரை வுட்டாப்போதும்மா... புடுச்சுக்கங்கம்மா..."

எச்சரிக்கையையும், தைரியத்தையும் சொல்லிக்கொண்டு மிதந்து நெருங்குகிற ராக்கப்பன்; வாழ்க்கை; உயிர்.

ரெங்கலட்சுமிக்குள் பார்வதியின் முகம். வெட்க வேதனையில் குன்றிக் கூசுகிற பார்வதியின் முகங்கள்,

'மாடத்தியின் மகன்' என்கிற நினைப்பு. அழுக்கை கையால் எடுக்கிறவன்.

"யம்மோ....வ் ஒங்களைப் புடிக்கட்டா?"

"கையை மட்டும்தான் நீ தொடணும். அதுவும் முனிக்கையை (நுனிக்கையை) மட்டும்தான் தீண்டணும்".

"அதெப்படிம்மா... முடியும்?"

"அது அப்படித்தான். என்னோட ஒடம்பைத்திண்டாதே..."

வெள்ளத்திற்குள் நீந்துகிற அவனுக்குள் பற்றி யெரிகிற நெருப்பு. அவமான நெருப்பு. சாவின் விளிம்பிலுமா...சாதி?

அவனுக்குள் திகைப்பு. தடுமாற்றம், தத்தளிப்பு.

'இந்தக் குரலைப் பொருட்படுத்தவா, ஒதுக்கவா? உயிரைக் காப்பாத்துறது ரொம்ப முக்கியமில்லியா?'

'ஆம்பளையா மட்டும் நெனச்சிருந்தா...'பரவாயில்லே'ன்னு ஒதுக்கிடலாம். ஏகாலின்னு நெனச்ச பிறகும்... எப்புடித் தொட?"

அவனுள் ஒன்றிரண்டு கணங்களின் தயக்கம்.

திண்டாமைத்தியின் தகிப்பையும் மீறி, அவனது மனித நேயம் செயல்பட யோசித்த கணத்தில்–

விளாரை நழுவ விட்டுவிட்ட ரெங்கலட்சுமி. பெரும்பாறை முடிச்சுகளில் முட்டிச் சுழன்ற வெள்ளச் சூழலில், ரெங்கலட்சுமியின் உடல் சுழற்றியடிக்கப்பட்டதை மனக்கனத்தோடு பார்த்த ராக்கப்பன்.

அவள் பிரேதம் தட்டுப்பட நாலைந்து நாளாயிற்று.

*குங்குமம் : 19.3.1999*

# பட்டம்

*"இந்தா வந்துருச்சில்லே. நம்ம ஊரு டவுன் பஸ்."*

*"ஆமோப்போய்... நெசந்தா... நம்ம பஸ்ஸுதான். ஓடியாங்க.:"*

*"கெழடாய்ட்டா கண்ணு எழவும் தெரிய மாட்டேங்குது. எந்த வண்டிடா ராசா? ஒக்கார எடம் போடுடா."*

*"வா... பெருசு, எம் பின்னாடி. இந்தா, வர்ற வெள்ளை வண்டி".*

*அல்லோலகல்லோலப்படுகிற பஸ் ஸ்டாண்ட் டவுன் பஸ்கள், பூராவும் வடக்கு ஸைடில், அங்குதான் திருவிழா போல கூட்டம். அங்கும் இங்குமாக ஓடிப் பாய்கிற ஜனம்.*

*இளவட்டங்களின் ஆரவாரிப்பு. கிழடுகட்டை களின் குருட்டுப் பரபரப்பு. ஆண்களின் பெண்களின் அலைபாய்வு. முண்டியடித்து, நெருக்கியடித்து, திணறடிக்கிற ஜன அடர்த்தி, மூட்டை முடிச்சுகளும், தலைச்சுமையும், கைப்பாரமுமாக தத்தளிக்கிற ஜனமொய்ப்பு, பதட்டமும் பரபரப்புமான கணங்கள்.*

*மனிதக் கற்றைப் பெருவெள்ளப் பெருக்கில் ஊடுருவி, பிளந்து, முன்னேறி... வெள்ளை பஸ்களிடையே நெளிந்து... வழி பார்த்து... வெளியேற்றுவதற்குத் தோதான இடம் பார்த்து*

நிறுத்துவது டிரைவரின் மகா பெரிய சாமர்த்திய சாகசம், சாகச நுட்பம்.

அடித்து நொறுக்க வருகிற மாதிரியான ஆவேசத் தள்ளு முள்ளுகளோடு வந்து மொய்க்கிற மனுச மக்களை உரசிவிடாமல், முட்டித் தள்ளிவிடாமல், வீழ்த்தி இரத்தக் காடாக்கி விடாமல்.... பஸ்ஸை நகர்த்திக்கொண்டு வந்து நிறுத்துவது அத்தனை சாதாரணமல்ல; உலக மகா திறமை. ஆம்ஸ்ட்ராங்கையும் மிஞ்சிய திறமை, சத்தியமாக.

பஸ் நின்றவுடன், குலுக்கலும் இரைச்சலுமாக மூச்சு விட்டது வெக்கையாவி நாலா பக்கமும். பஸ்ஸுக்குள்ளும் பெருங்கூட்டம். நின்று கொண்டும் உட்கார்ந்து கொண்டுமாக ஜனம். ஒருத்தர் மேல் ஒருத்தல் கால் கிட்டித்த சதைத் திணறல். வாசல்களை வந்து மொய்க்கிற ரெண்டு பஸ் கூட்டம். இறங்குகிறவர்கள் இறங்க முடியாமல், ஏறுகிறவர்கள் ஏற முடியாமல்... ஏகத் தள்ளு முள்ளுகள். வசவுகள். சாபங்கள், காட்டுக் கூச்சல்.... சந்தைக் கூச்சல் மந்தைக் தனம்.

டிரைவர் சிரமம் எதுவுமில்லாமல் இறங்கிவிட்டார். கண்டக்டர் கணேசன்பாடுதான் பெரும் திண்டாட்டம். 'சதைத் திரளின்' மையத்தில் மாட்டிக்கொண்டார். கடந்து நகரவே முடியவில்லை. இந்த லட்சணத்தில் எப்படி இறங்க?

ரெண்டு டிரிப் முடித்தாகிவிட்டது.இதே மாதிரி ஜனக்கூட்டம் தான். இமாலய இச்சிலாத்தி, தொண்டைத்தண்ணி காய்ந்து விட்டது. கத்திக் கத்தி நெஞ்சுக் கூடெல்லாம் காந்தல். நின்று நகர்ந்தும் முன்னுக்கும் பின்னுக்கும் போய் டிக்கெட் அடித்ததில் கணேசன் குறுக்கெல்லாம் கடுப்பு, தொடைச் சதையில் மெல்லுகிற மாதிரியான வலி. ரணம்.

வண்டிக்கு ரெஸ்ட் டயம் அஞ்சு நிமிஷம்தான். அப்புறம் உடனடியாக வண்டி எடுத்தாக வேண்டும். அதற்கும் முன்பாக டிக்கெட் அடித்தாக வேண்டும்.

கிடைக்கிற இந்த அஞ்சு நிமிஷத்துக்குள்....

ரெண்டு கிளாஸ் பச்சைத் தண்ணீரைக் குடித்தது, ஒரு டீயை அடித்துவிட்டு ஒரு சிகரெட்டையும் சுண்டி முடித்தால்.... அடுத்து ஒரு டிரிப் நரகத்தைத் தாங்குகிற சக்தி வந்துவிடும். உடம்பில் ஒரு தெம்பு வந்துவிடும். கணேசனுக்குள் அலைபாய்ச்சலாக நினைவு.

டீ அடிக்க வேண்டுமானால், பஸ்ஸைவிட்டு இறங்கணுமே.

எப்படி இறங்க? இறங்குகிற பயணிகளை இறங்கவிடாமல், முண்டியடித்து மோதுகிற ஜனம். போர்க்கள உக்கிரம். இண்டு இடுக்குகளில் புகுந்து நுழைந்துவிடுவதற்கான பகீரத யத்தளிப்புகள்.

"துண்டைப்போடு..."

"இந்தா... ஸீட்டைப்போடு..."

"அடேய்... இந்தாடா பைக்கட்டு... அந்த ஸீட்லே போடு...

"ஸீட்டே இல்லே... எல்லா ஸீட்லேயும் துண்டும் பைக்கட்டும்".

"இன்னும் ஆளே ஏறலே... அதுக்குள்ளே ஸீட்டெல்லாம் ஃபுல்லா?"

"ஆமா... ஆமா..."

"ஏய்... வழியை விடுங்கய்யா... எறங்கணும்".

"எறங்கவிட்டாத்தானே... ஏறமுடியும்?"

"எழவு வுழ... நாசமாப்போக... ஏறங்குறதுக்கு வழி வுடுங்களேன்..."

"ஏய்.... இடிக்காதே..."

"ஏலேய். மிதியாதே... நாயே...."

"கைப்புள்ளைக்காரி எறங்கவுடுங்க. புண்ணியமாப்போகுது".

"புண்ணியத்துலே உக்காந்து போகமுடியுமா? ஸீட்டு வேணும்லே?"

"இதென்ன...ராட்சஸக் கூட்டமாயிருக்கு? கெழடு கட்டைக சிக்குச்சுன்னா... நசுங்கிச் சாக வேண்டியதுதான்".

பஸ்ஸுக்கு உள்ளும் வெளியேயும் சத்தக்காடு. கூவ(ல்)க்காடு. வசவும் புலம்பலுமாக கூச்சல். ஏளனமும், விமரிசனமுமாக இளக்காரம். ஒரே சந்தைக் கூச்சல். குழப்பக் கூச்சல். களேபரம். முண்டியடித்து இடம் பிடித்துவிடுகிற மூர்க்கமும், எப்படியாவது இறங்கிவிட வேண்டுமே என்கிற அவசரமும் முட்டி மோதிக் கொள்கிற பயங்கரம்.

பொறுத்துப் பொறுத்துப்பார்த்த கண்டக்டர் கணேசன், சனக் கூட்டம், அசைய முடியவில்லை... கிட்டித்து விட்ட இறுக்கம். நகர இயலவில்லை. பொறுமை சிதைகிறது.

'டீ குடிக்கக்கூட முடியாமப் போயிருமோ' – பயம், ஆத்திரமாக நிறம் மாறுகிறது.

ஜிவ்வென்று மண்டைக்குள் ஓர் உணர்வு. சண்டாளமாக வந்த கோபம். வாசலை அடைத்துக்கொண்டு நின்ற ஜனத்தைப் பார்த்து... காட்டுக் கத்தலாகக் கத்தினான், கணேசன்.

"ஏய் அறிவுகெட்ட நாய்களா...முண்டங்களா.... மூதிகளா... எறங்குறவுகளை எறங்கவிட்டுட்டு... அப்புறம் ஏறுங்களேன். ஓய்! பச்சைத்துண்டு எறங்குய்யா... எறங்கு. எறங்கிட்டு வேற பேச்சுப் பேசு..." இடி முழக்கமாக இவனது கத்தலதிர்வு.

கண்டக்டரின் காட்டுக் கத்தலில், வாசலை மொய்த்தவர்கள் வெலவெலக்க மளமளவென்று இறங்குகிறவர்களை மேலும் விறைப்பாக அதட்டினான். உச்சநிலைக் கோப அதட்டல்.

"எறங்கித் தொலைங்களேன்... சட்டுனு... தேரு அசையுற மாதிரி... ஊர்ந்துக்கிட்டு...! சட்சட்டுனு எறங்குங்க."

எப்படியோ சதையைப் பிய்த்த மாதிரி, கூட்டத்தைப் பிளந்துகொண்டு கணேசன் ஊடுருவி... இறங்கி, அலைவீசி ஆர்ப்பரிக்கிற சதைத் திரட்சியிலிருந்து உருவிக்கொண்டு வெளிக்காற்றுக்கு விலகி வந்தபோது—

'அப்பாடா!' ஒரு பெரும் சுமையே இறங்கிய மாதிரியிருந்தது. உயிரே வந்த மாதிரியிருந்தது. விடுதலை உணர்ச்சியின் சுரீரிடுகிற உணர்வு. அதுவே எரிச்சலாக வந்தது.

அடியும் பிடியுமாக தடபுடவென்று இடித்துக்கொண்டு ஏறுகிற மனுச ஜந்துகளை வெறுப்புடன் திரும்பிப்பார்த்தான், கணேசன்.

'ச்சேய்...! இதுகளெல்லாம் மனுச ஜென்மமா? ராட்சஸப் பெறவிக. இதுகளோட மாரடிக்குற பொழப்பே தொழிலுன்னு ஆயிப்போச்சே...'– கசந்த மனசின் வெறுப்போடு காறித் துப்பினான்.

பஸ் ஸ்டாண்டுக்குள் வரிசையாகக் கடைகள்... டீக்கடைகள், இனிப்புக் கடைகள், இளநீர்க் கடைகள், புத்தகக் கடைகள்.

எல்லாவற்றையும் கடந்து, நல்ல நிஜ டீ குடிக்கிற எண்ணத்தில் பஸ் ஸ்டாண்டுக்கு வெளியே வந்தான். ரொம்ப நாளைய வழக்கம்.

முழங்கை நீள டர்க்கி டவலை காக்கிச்சட்டையின் காலருக்குள் வைத்திருந்த டிரைவர், முகம் கழுவி துடைத்து முடித்துவிட்ட அடையாளம். பஜ்ஜிகளைச் சாப்பிட்டு, டீ அடித்துவிட்டு, நுனிவிரலில் ஒட்டிய டீயின் பிசுபிசுப்பையும் கழுவித் துடைத்துவிட்ட ஆசுவாசம்.

கசங்கி நைந்துபோன காகிதப் பிசுறாக வந்த கணேசனை, ஏளனமாகப் பார்த்துச் சிரித்த டிரைவர்:

"என்ன பாஸ், வண்டியை விட்டுட்டு வர மனசில்லியா?"

எரிச்சலும் சிடுசிடுப்புமாக வந்த கணேசன், சிரமப்பட்டு அதிலிருந்து விடுபட்ட கணேசன். வலியச் சிரிக்க முயன்ற யத்தனிப்பு. கறுத்த உதடுகளின் விரிவில் ஒரு செயற்கை. பிய்ந்த உதடுகளின் பொய்ச்சிரிப்பு. வலிச்சிரிப்பு.

"சும்மா வயித்தெரிச்சலைக் கிளப்பாதிக, பாஸ். கும்பல்லே மாட்டிக்கிட்டேன். பிய்ச்சுக்கிட்டு வர்றதுக்குள்ளே 'ஆத்தாடி, யம்மாடி'ன்னு ஆயிப்போச்சு".

"இப்பவே அஞ்சு நிமிஷமாச்சு, வண்டியெடுப்பமா?"

"கிண்டலா? நான் டீ சாப்புட வேண்டாமா?"

"தாகமிருந்தா... நேரத்துல வந்துருப்பீகளே...! ரொம்ப லேட்டாச்சுன்னா... டைம் கீப்பரு கூவக்காடு போடுவாருல்லே?'

"கொஞ்சம் பொறுங்க. அண்ணே, ஒரு டீ போடுங்க. க்விக்" கடைக்காரரைப் பார்த்த கணேசனை கனிவுடன் விசாரிக்கிற கடைக்காரர்....

"பஜ்ஜி எடுத்துக்கலியா?"

"ம்ம்..."

"சட்னி இருக்கு".

"சும்மா இருங்கண்ணே... இப்பவே லேட்டு. பஜ்ஜி சாப்பிட எங்கேயிருக்கு நேரம்? டீ போடுங்க... இந்தா சிரெட்டு வாங்கிட்டு வந்துருதேன்..."

பரபரப்பும் பதட்டமுமாக வெத்தலை பாக்குக் கடைக்கு ஓடிய கணேசன், சிகரெட் வாங்கிய சுறுசுறுப்பு. கட்கத்தில் இருந்த தோல் பை. ரெண்டு பட்டன் திறந்த காக்கிச் சட்டைக்குள் கலர் பனியன்.

கணேசன் டீயை எடுக்கப் போனான்.

"பாஸ், மூஞ்சியைக் கழுவலியா?"

"ம்ள்ச்சூ!"

"காய்ஞ்சி போய் எப்படியோ இருக்கு".

"இருந்துட்டுப் போவட்டும். டயமில்லியே. அழகுப் போட்டிக்கா போறோம்?"

கடைசி உறிஞ்சு உறிஞ்சிவிட்டு சிகரெட்டைச் சுண்டியெறிந்த டிரைவர். சூடான டீயை 'அவக் தொவக்'கென்று ஆத்திர அவசரமாகக் குடிக்கிற கணேசன். பற்றவைத்த சிகரெட்டை 'பக் பக்'கென்று அடித்த வேகம். நாசியில் புகை வரும்போதே, உதட்டில் சிகரெட்டை வைக்கிற பரபரப்பு. கொதி டீயில் மரத்துப்போன நாக்கு.

கணேசனின் அவசர அவஸ்தையை மென்னகையோடு பார்க்கிற டிரைவர். தோழமையும் பரிவுக்குழைவுமாக பார்க்கிற பார்வை.

"கணேசன்."

"ம்."

"சள்ளுபுள்ளுன்னு வுழுவாரு. டைம் கீப்பரு. அவருகிட்டே போய் பேச்சுக்குடுத்து... நைஸ் பண்ணிக்கிட்டிருக்கேன். நீங்க போய் வண்டியிலே டிக்கெட் அடிங்க..."

"ஆட்டும்..."

"வண்டியிலே கூட்டம் சள்ளை பறியுது போலிருக்கே. டிக்கெட் போட்டுருவீகளா? முடியுமா?"

"போட்டுத்தானே ஆகணும்? ஒரலுக்குள்ளே தலையைக் குடுத்தாச்சு. ஒலக்கைக்குப் பயந்தா முடியுமா?"

"சரி... சீக்கிரம் வண்டிக்குப் போங்க. லேட்டாகுது."

"ம்..."

டிரைவர் ஆபீஸ் ரூமை நோக்கி நகர... கணேசன் இங்கிருந்தே பஸ்ஸைப் பார்த்தான். நல்ல கூட்டம். சாயங்கால வெயில் பஸ்ஸுக்குள்ளும். அடர்த்தியாக நிற்கிற பயணிகள். நிற்கக்கூட இடமில்லாமல், அப்பிப்போயிருக்கிற பயணிகள். கிட்டித்த புளிச்சிப்பமாக இறுக்கமாக அடைந்திருக்கின்றனர். மூச்சுத் திணறுகின்றனர். ஒருத்தர் செவியில் ஒருத்தர் உஷ்ணமூச்சு. ரெண்டு வாசல்களிலும், வாசல் படிகளிலும் இளவட்டங்கள். மேல்நிலைப்பள்ளி மாணவர்கள், காக்கி பாண்ட்டும் வெள்ளைச் சட்டைகளும்.

இன்னும் ஆறு ஸ்டாப். நகர எல்லைக்குள், எல்லா பஸ் ஸ்டாப்புகளிலும் பெரிய பெரிய கூட்டமாகக் காத்திருக்கும். ஏறுவதற்கு. எப்படிச் சமாளிக்க?

இந்த டிரிப், ரொம்ப மோசம். நரகம். பள்ளிவிடுகிற நேரம்.

கூட்டம் வந்து அப்பும். எப்படித்தான் மாரடிக்கப் போறேனோ? மனுசருக்குள் நுழைந்து டிக்கெட் அடிக்க நகர முடியுமா? சதைகளைக் கிழித்து ஊடுருவுகிற மாதிரி, அவஸ்தைப் படணும். டிக்கெட் அடிக்க முடியுமா? இதுலே டிக்கெட் எடுக்காம நைஸா தப்பிக்கப் பார்க்கிற பார்ட்டிகள், பொண்ணுகளை இடிக்குறதுக்காக, வழி மறித்துக்கொள்கிற ஜொள்ளு பார்ட்டிகள், ஐம்பதும் பத்துமாக ரூபாய்த்தாள்களையே நீட்டுகிற லொள்ளுகள்.

இந்த லொள்ளுகள் போதாதென்று வசவுகள் வேறு. கண்டக்டரை எதிரியாகப் பார்க்கிற விஷப் பார்வைகள். சில்லறை கொடுக்காமல் மிச்சம் பிடித்து, 'பெருங் கொள்ளை'யடிப்பதாக ஒரு சந்தேகப் பேச்சு. சூடேற்றுகிற வார்த்தைத் திராவகம், திராவகம்கள்.

நினைக்க நினைக்க மனசே கிடந்து தகிக்கிறது, கணேசனுக்கு.

'ச்சேய்' என்று வருகிறது. மனிதர்களையே எரித்துப் பஸ்பமாக்கி விடவேண்டும் என்கிற விநோத வக்கிர உணர்வு. தொழிலின் ராட்சஸத்தில், ராட்சஸமாகிப்போகிற மனசு. தணல் பெருமூச்சு.

'என்ன செய்ய? மூளிச் சமூகத்துலே கொறை மனுசங்க. பேய்ப்பய வேலை. நாய்ப்பய கொணம்...இதுலே யாரைக் கொறை சொல்றது? எம்.ஏ. இங்கிலீஷ் லிட்டரேச்சர். மில்டனையும், ஷேக்ஸ்பியரையும் படிச்ச வேகம். மாக்பெத்தையே சாய்ஸ்லே விட்ட துரிதம். படிச்ச படிப்புக்குத் தகுதியான வேலையில்லே. படிப்பே வேஸ்ட்டாயிருச்சு. ஏழு வருஷக் கல்வியாண்டு, எல்லாமே, வவுத்துக்கு ஆகலே. மூளைக்கு ஆகலே. டென்த்லே வாங்குன நானூத்து முப்பத்திரண்டு மார்க்தான் வவுத்துக்கும் வாழ்வுக்கும் வேலை வாங்கித் தந்துச்சு. புருச லட்சணம் தந்துச்சு'.

மனசுக்குள் பரவிய கசப்பு உணர்ச்சி. ஹாஸ்டல் மைதானங் களில் ரவுண்டடித்த நாள்கள். பேசிப் பேசி அடைகாத்த கனவுகள். 'கல்லூரி விரிவுரையாளர்' கனவுகள். கை நிறைய சம்பளம், வசதியான வாழ்க்கை. 'அறிவுஜீவி' என்கிற அந்தஸ்து. உயர்மட்ட மனிதச் சூழலின் சகவாசம். 'கோட்டும், பூட்டும், பைப்புமாக ஐந்து நட்சத்திர ஓட்டல்களில் 'வேர்ல்ட் லிட்டரேச்சர்' பற்றிய அரட்டைகள். கனவுகள்.

எல்லாமே போச்சு, கட்கத்தில் பையை இடுக்கி, எச்சிலைத் தொட்டு, டிக்கெட் தருகிற அவலம்... கிராமத்து ஜனங்களைத் திட்டி... திட்டு வாங்கி... ஆத்திரப்பட்டு... ஆவேசப்பட்டு... காயம்பட்ட இரத்தக் கனவுகளின் மறுமுகமாக, மூர்க்கத் தினவுகள். குருட்டுக்

கோபப் பாய்ச்சல்கள்... பலிகொண்ட சமூகத்தின் மீதான வன்மம். வேட்டையாடி விட்ட உலகத்தின் மீதான வெறுப்பு, கசப்பு, பழிவாங்க வேண்டும் என்கிற உள்தினவு. திசையற்ற தினவு. வன்மத் தகிப்பு.

டவுன் பஸ்கள் நிற்கிற ஸைடில் ஏகப்பட்ட பஸ் கூட்டம்.... ஒன்றுக்குள் ஒன்றாகச் சொருகிக்கொண்டு, ஒன்றையொன்று முந்திக் கொண்டு, விடாத ஹாரன் அலறல்கள். அபாயச்சங்கு மாதிரி, படகுகள் மிதக்கும் சமுத்திரத் தண்ணி மாதிரி, ஜனம், ஜனத்தின் அலை பரபரப்புகள்.

கணேசன் ஒரு பாக்கு வாங்கினான். மூலையைக் கிழித்து, வாய்க்குள் தட்டிக்கொண்டான். பஸ்ஸுக்கு வந்தான். உள்ளேயே ஏற முடியவில்லை.

முகத்தில் சிடுசிடுப்பு. மனசின் தகிப்பு. கண்ணின் கனலாக... உதடுகளின் இறுக்கத்தில் தெறித்தது. கன்னக் கதுப்புகளில் ஆத்திரத்துடிப்புகள்.

வாசலில் அடைத்துக்கொண்டு நின்ற இளவட்டங்களை முறைத்தான். சண்டைக்காரனின் பகைமுறைப்பு. அனல் தெறிப்பு.

"எப்படிப் போறது... டிக்கெட் அடிக்கணும்லே? பஸ் போகணுமா, போக வேண்டாமா? வழியை வுடுங்கப்பா... ச்சேய். ஒங்களாலே உசுர்வதை".

இவனின் கோபக் கத்தல் மனசின் வெடிப்பு, இறங்கி வழிவிட்ட பையன்கள், கண்டக்டரை முறைத்தனர். மௌன முறைப்பு.

"பெரீ...ய்ய சண்டியர் கணக்கா... சீறுறாரே. கழுத்தைச் சீவிருவாரா?"

"கை நிறைய சம்பளமும் போனஸும் வாங்குறான்ங்க, இல்லே? அந்தத் திமிரு. சீறத்தான் செய்வான்?'

"செவிள்லே சப்புன்னு அறைவுட்டா... சீறுவானோ?"

கிசுகிசுப்பான உரையாடல். முணுமுணுப்பு போன்ற எதிர்ச் சீறல். எல்லாம் கேட்கத்தான் செய்தது கணேசனுக்கு. சுள்ளென்று கோபம் வந்தது. 'எங்கேடா... செவிள்லே அறைஞ்சிருவீயா? பாப்பமாடா...?' என்று எகிறிக் குதிச்ச மனசை அடக்கினான், கணேசன். லகான் போட்டுக் கொண்ட உணர்வு. 'பொறு... கணேசா.... எகுறாதே! சண்டை சச்சரவு உப்புக்கல்லுக்குப் பொறாது. ஒந்தரத்தைக் கொறைச்சுரும். பல்லைக் கடி. மனசைக் கட்டுப்படுத்து. கொதிப்பை அடக்கு. நிதானமாகு.'

மனசின் சிறலை பெருமூச்சாக நிறம் மாற்றிக்கொண்டான். திருப்பி ஒரு முறைப்பு முறைத்தான். விறைத்த பார்வை. வெடித்துத் தெறித்த தீக்கங்குகள். அதிலேயே பம்மிப்போன அந்த ஆட்கள்.

"டிக்கெட்... டிக்கெட் வாங்குங்க... சில்லறையா எடுத்து வெச்சுக்கங்க... நோட்டை நீட்டாதிக. மனுசனா இருக்க விடுங்க, மனுசனை. ம்ம்...சீட்...சீட்...சீட்டு..."

கட்கத்துத் தோல்பை கைக்கு வந்தது. பைக்குள்ளிருந்து டிக்கெட்டுகள், சுற்றியிருந்த ரப்பரை உருவி விரலில் மாட்டிக் கொண்டான். டிரைவர் ஸீட்டுக்குப் பக்கத்தில் நுழையப் போனான். முடியவில்லை. அப்பிப்போயிருந்த ஜனக்கற்றை, கற்றையைப் பிளந்துகொண்டு, திக்கித் திணறி... சிக்கித் தவித்து... உருவிக்கொண்டு போய் நின்...

நிற்கவும் முடியவில்லை. ஒரு காலை ஊன்றினால், மறுகாலை வைக்க இடமில்லை. தவமிருப்பவனைப் போல, ஒற்றைக் காலில் நின்ற கணேசன். பக்கத்தில் நிற்பவர் மேல் சாய்வதைத் தவிர்க்கவே முடியவில்லை.

"மேலே சாயாதீங்க... தள்ளி நில்லுங்க..."

"எங்க நிக்க? எடமில்லியே..."

"மேல சாய்ஞ்சா எப்புடி"

'கூட்டத்துலே அப்புடி இப்புடி'த்தான் இருக்கும். சகிச்சுத்தான் ஆகணும்."

"உங்களை எதுக்கு நான் சுமக்கணும்?"

"சிக்கெடுத்தாப்புலே வரணும்னா டாக்ஸியிலே போகவேண்டியதுதானே?"

"அதுக்கெல்லாம் வழியிருந்தா இந்தக் கூட்டத்துலே இடிபட்டுச் சாகணுமா?"

"அதுக்கு யார் என்ன செய்றது? நானும் கெடந்து சீரழியத்தான் செய்றேன்?"

சண்டையாகவில்லை. சத்தம் உயரவில்லை. சண்டைக்கான வெக்கைத் தொனி, உரையாடலில் உள்ளுக்குள் கனன்றது. நீறுபூத்த நெருப்பு. கங்குச் சொற்களின் உரசல்.

"ம்... டிக்கெட்... டிக்கெட்... எங்க? பிஎஸ்கே நகரா? அதுக்கு இதுலேதான் ஏறணுமா? 'சத்திரப்பட்டி சண்டிங்'லே ஏறலாம்லே?"

முதல் துவக்கமே சரியில்லை. கணேசனுக்குள் கனன்றது. மனசுக்குள் கசங்கிப் புழுங்கிய மாதிரியோர் நசநசப்பு.

குலுங்கிக் குலுங்கி அதிர்கிற தோல்பை. சில்லறைச் சிரிப்புகள். "ம்... கொண்டாங்க எங்க? ராசூல்ராமனா? ம்... இந்தாங்க... காரூவா இருக்கா?"

மளமளவென்று வேலை. வியர்த்துக் கொட்டுகிறது. அப்பிப்போன மனிதச் சதை. மனித நெடி. வியர்வை நாற்றம். தகரக் கணகணப்பு. எல்லாருக்கும் வியர்வை நசநசப்பு தாங்கமுடியாத வெக்கைப் புழுக்கம்.

"வண்டியை எடுங்கப்பா..."

"டிரைவரு ஏறல்லியா?..."

"வேர்வைக்காடு நெருஞ்சிமுள்ளா குத்துது. பஸ்ஸை எடுத்தா.... காத்தாச்சும் வரும்..."

பயணிகளின் மனவெடிப்புகள். சத்தக் கோபங்கள். கணேசன் டிக்கெட் அடித்தான்.

"ம்... கொண்டாங்க... என்ன இது? ஐம்பது ரூவாயா? ஏன். ஐந்நூறு ரூவாத்தாளு இல்லியா?"

"இல்லே".

"ஏங்கிட்டே சில்லறை இல்லேல்லே?"

"எப்படியாச்சும் பாருங்க."

"என்னத்தைப் பாக்க? அப்பதையே உங்களைப் பாத்துட்டேன். சில்லறை இருந்தா டிக்கெட் வாங்குங்க. இல்லேன்னா... கிழே எறங்குங்க..."

ஐம்பதுக்காரர் முறைக்கிறார். தாட்சண்யமற்ற இவனது பதிலைச் சகித்துக்கொள்ளாத கோபம்.

அவரது முறைப்பை அலட்சியப்படுத்துகிற கணேசன். அவரைத் தவிர்த்துவிட்டு, மற்றவர்களுக்கு டிக்கெட் தருகிற வேகம். கிழிபடுகிற டிக்கெட், ஸ்டேஜை கணக்கிட்டுப் பெருவிரலால் துளைபோடப்படுகிற டிக்கெட். வாங்கிய ரூபாய்த்தாள்களை நீளவாக்கில் மடித்து விரலிடுக்கில் சொருகிக்கொள்கிற லாவகம். ஐந்துரூபாய், ரெண்டுரூபாய் நாணயங்களை மட்டும் தனிப்பிரித்து சட்டைப்பைக்குள் போட்டுக்கொள்கிற கவனநுட்பம்.

"ம், டிக்கெட்... டிக்கெட்... கேட்டுக் கேட்டுச் சீட்டை வாங்குங்க.

சீட்டை வாங்குனாத்தான் பஸ் நகரும்... ம்... வழிவிடுங்க... கொஞ்சம் தள்ளுங்க. ரெண்டா? ஆலங்குளமா? ம்... எம்மா... இந்தப் பக்கம் ஒதுங்குங்க... சொன்னா கேளுங்க... ம்... ரெண்டு தொம்பக்குளமா? அம்பது பைசா இருக்கா? 'அண்ணன், சார்'ங்குறதெல்லாம் பெறவு. தயவுதாட்சண்யம், பழக்கவழக்கமெல்லாம்... அப்புறந்தான். டிக்கெட், டிக்கெட், எம்மா, சங்கம்பட்டியா? எத்தினி? ஏழா?ம்..."

மளமளவென்று பின்னேறுகிற கணேசன். நிற்கிற, உட்கார்ந்திருக்கிற எல்லோருக்கும் போட்டுக்கொண்டே வந்தான். பாதிக்கு மேல் நெருங்கிவிட்டான். சள்ளையும் தொல்லையுமாக நகர்கிற நேரம், சாய்கிற வேலை.

டிரைவர் கதவைத் திறந்து ஏறினார். ஸீட்டில் உட்கார்ந்து ஸ்டியரிங்கைப் பற்றிய நிலையில், கழுத்தைத் திருப்பி உள்ளே பார்த்தார். தேடப்படுகிற கணேசன். கண்ணில்படாத கணேசன், சுவராக, ஜனம்.

"என்ன தோஸ்த், டிக்கெட் அடிச்சாச்சா?"

"ம்..."

"வெயிட் பண்ணணுமா... ஸ்டார்ட் பண்ணலாமா?"

"ஸ்டார்ட் பண்ணுங்க, பாஸ். நான் பாத்துக்கிடுதேன்..."

உயிர்பெற்று இரைந்த இஞ்ஜின். தகரக் கிழிசல்களாக பஸ். பாதி ஆணிகள் காணவில்லை. அதிர்கிற தகரங்கள் பேயிரைச்சலாகி... கர்ண கடூர இரைச்சலாகி... மனசுகளைக் கலவரப்படுத்தி...

பஸ் நகர்ந்தது. ஹாரன் அடித்த வண்ணம் மெதுவாக நகர்ந்தது; ஊர்ந்தது. பஸ் நகர்ந்தவுடன்.. அங்கும் இங்குமாக அசால்ட்டாக இருந்துவிட்டு 'மொலே'ரென்று வநது அப்பிய இளவட்டங்கள். வேதாளங்களாகத் தொங்குகிற பரிதாபம். ஒற்றைக் காலைக்கூட வைக்க இடமில்லாமல், கம்பிப் பிடியில் தொங்குகிற பயங்கரம்.

"படியிலே நிக்காதீக. தொங்காதீக. உள்ளே வந்துருங்க... மரியாதையா சொல்றப்பவே ஏறிருங்க. பெறவு... 'நாய்... பன்னி'னு பேச வெச்சிராதீக".

என்று பலமாகக் கத்திய கணேசன், காட்டுக் கத்தலாகக் கத்தினான். "கவலையில்லாம நீங்க மண்டையைப் போட்டுருவீக. நசுங்கிச் சசெத்துப்போவீக, டிரைவரும் நானும்தான் நாயா பேயா அலையணும் கோர்ட்டுக்கு. உசுரை வாங்காதீக. உள்ளே வாங்கப்பா..."

"ஏய், தலைப்பாகை, எங்க போகணும்? கம்மாப்பட்டியா? மூணா..? பெரிசு, ஆமர்நாடா? கொண்டாரும்யா.... 'சட்'டுன்னு குடும்யா... செல்லும், செல்லும்... அஞ்சுரூவா கந்தலானாலும் செல்லும்..."

எல்லாமே... கோபத்தொனி. எரிச்சல், தாங்கமுடியாத சள்ளை. இச்சிலாத்தி பொறுக்காத சிடுசிடுப்பு. காட்டமும் கடுப்புமாக சீறுகிற கணேசன். 'சள்ளுபுள்ளெ'ன்று எரிந்து விழுகிற ஆத்திரம்.

பஸ் மெள்ள மெள்ள உருண்டு... வெளிவாயிலின் விளிம்புக்கு வந்தது. சற்றே திகைத்து நின்றது. இஞ்ஜினின் கர்ண கடூர இரைச்சல். நின்று இரைகிற இரைச்சல்.

டிக்கெட் கொடுக்கிற வேகத்திலேயே, ஜன்னல் வழியே எட்டிப்பார்த்தான். 'ஏன் பஸ் நிக்குது?" என்று.

"தோஸ்தூ..."

டிரைவரின் அரூபக்குரல். அசரீரி. அழைப்புச் சத்தம்.

"என்ன தோஸ்து?"

"ரொம்பக் கோபத்துலே இருக்கீகளா?"

"என்ன சங்கதி? சொல்லுங்க."

"இந்தக் கடைக்காரரை ஏத்திக்கோங்க, லோடுகளையும் ஏத்திக்கங்க. கோபப்படாதீக, நம்மாளு..."

"உங்களுக்கு வேண்டிய ஆளா?"

"ஆமா தோஸ்து... நம்மாளு."

" 'நம்மாளு' என்பதன் அழுத்தம்... 'உங்களுக்கும் வேண்டியவர்தான்' என்கிற மர்ம உணர்த்தல். கணேசனுக்குள் கேள்வி நமைச்சல். 'யார்?'

சவுண்டை ஏற்றினான், கணேசன்.

"சரக்கு ஏத்தட்டும், வழிவிட்டு ஒதுங்குங்க..."

அதற்கும் பின்பகுதிப் பயணிகளிடையே கசகசப்பு. மெல்லிசான கிசுகிசுப்பு. "எல்லாம் கமிஷன் பண்ணுற கூத்து".

"கடைக்காரன் அஞ்சு ரூவா குடுப்பான்லே? அதுக்குச் சாமியாடுறானுக."

"ஆடுனா ஆடிட்டுப் போவட்டும்... வேண்டாங்கலே. நம்ம மேலே சாட்டையடி விழுதுல்லே? அதா...ஞ் சிக்கலு."

அந்தப் பொருமலான முணுமுணுப்புகள். ஒரு நிழல்போல மங்கலாக இவனுக்குக் கேட்டது. தீயில் காலை வைத்த மாதிரியிருந்தது. யாரோ நெருப்புச் சாட்டையால் விளாசுகிற உணர்வு. மனசின் ஆழத்தில் சுரீரிடுகிற வலி. நெற்றியில் வந்து விழுந்த சாணி.

எம்.ஏ. பட்டதாரி. உலக இலக்கியங்களை வகைப்படுத்தி, ஆங்கிலத்தில் அலசியவன். அலசித் தேர்ந்தவன். அவனுக்கோ இந்த அற்பப் பெயர்? 'அஞ்சுக்குச் சாமியாடுகிறவன்' என்ற இழிவா? ரோஜாவை மிதிக்கிற சாக்கடைப் பன்றிகள். ச்சேய்ய்க்...

கணேசனுக்குள் சண்டாளமாக வந்த கோபம்.

உள்ளுக்குள்ளிருந்து பொங்கிப் பீறிட்ட தீக்குழம்பு. அடிபட்ட பாம்பாகச் சீறுகிற மனசு. தகிக்கும் கண்ணோடு 'விருட்'டென்று நிமிர்ந்து, முணுமுணுப்புகளைப் பார்த்தான். ரோஷப்பட்ட அக்கினிப் பார்வை.

'கணேசா... வாயை மூடு. நாவைச் சுழற்றிவிடாதே. தீயை எறிந்துவிடாதே... பொறு மனமே... பிழைப்பு முக்கியம். சண்டை போட்டால், கேவலம், தலைகுனிவு. மெமோ வரும்... ஓர் அற்ப ஆபீஸரிடம் தலை சொறியணும். என்னத்துக்கு...?"

உள்மனசைச் சுண்டுகிற லகான். திமிறுகிற மனசை நிறுத்துகிற லௌகீக மூக்கணாங்கயிறு. மனசின் தீக்கங்குகளை பல்லைக் கடித்து விழுங்கினான். பிரயத்தன சகிப்பு.

சதைத்திரட்சி முறுக்கிக்கொண்ட மாதிரி.... நெருக்கியடித்துத் திணறிய ஜனம் சற்றே வழிவிட... பெரிய பெரிய தூக்குப் பைகள் ஏறிற்று. ஸீட்டுக்கடியில் கால்களுக்கிடையில் சொருகப்பட்டன. தக்காளிப் பைகள், காய்கறிப் பைகள், ஸ்டேஷனரி சாமான்கள் உள்ள கனத்த கனத்த பைகள், அரைச்சாக்கு மூட்டைகள் ரெண்டு, கடலெண்ணைய் டின்கள் மூன்று, வாழைத்தார் ரெண்டு.

எல்லாம்... ஏற்றப்பட்டன. ஆளும் பேருமாக ஒத்தாசை செய்தனர். பயணிகளுக்கு இடைஞ்சல் இல்லாமல், ஆங்காங்கே ஸீட்டுக்கிடையில் கச்சிதமாயிற்று

கடைக்காரரும் சதைகளுக்கிடையில் சதையாகச் சொருகிக் கொண்டார். முற்றலான இளைஞர். கறுத்த ஆள். சில்லறைக் கடைக்காரருக்குரிய யூனிஃபார்ம். அரைக் கைச்சட்டையும் மடித்துக்கட்டிய கைலியும், நனைந்த சட்டை வியர்வை முகத்தில் சாக்குத் தூசிகள் அப்பியிருந்தன. கனத்த சுமைகளை ஓடி ஓடிச்

சுமந்த களைப்பு. மூச்சிரைப்பு.

சாலையின் வாகன நெருக்கடிகளுக்கு மத்தியில், பஸ் ஊடுருவி வேகமெடுத்தது.

கணேசன் வேகவேகமாக டிக்கெட் அடித்தான். வாங்கிய தாள்கள் நீள்மடிப்பாக விரலிடுக்கில். சில்லறைகளின் கனத்தில் தோல்பை. இவனுக்குள்ளும் வியர்வை நசநசப்பு. மனப்பரபரப்பு. 'துட்டை விட்டுவிடக்கூடாதே' என்கிற எச்சரிக்கை உணர்வு.

இத்தனைக்கும் மத்தியில் இவன் பார்வை அடிக்கடி தாவுகிறது, கடைக்காரன் முகத்துக்கு.

புதிய முகம். இந்த லைனுக்குப் புதுசு. அதுமட்டுமல்ல...

முகத்தில் ஒரு படிப்புக் களை. கண்ணில் ஒரு வித்தியாசம். ஓர் அறிவுக் களை. கடைக்காரருக்குரியதல்லாத வேற்று முகம். வேற்றுக்களை.

அந்த வித்தியாசம் இவனுள் சுண்டியது. 'யாரிது? நம்மாள்னா... யாரு...'

டிக்கெட் அடித்துக்கொண்டே, கிட்டத்தில் போனான்.

இருபது ரூபாயை நீட்டுகிற கடைக்காரர். உதட்டில் ஒரு மென்னகையின் ஒளி. அறிமுகமாகிக்கொள்ள முனைகிற நயப்பாங்கான ஒரு புன்சிரிப்பு.

"எட்டு லக்கேஜ், ஒரு டிக்கெட்".

"எங்க?"

"ஆலங்கொளம்".

"நீங்க புதுசா...? இப்பத்தான் கடை வெச்சிருக்கீகளா?"

"இல்லே.. கடை பழசு. எங்கண்ணாச்சிதான் வாடிக்கையா சரக்கு பர்ச்சேஸ் பண்ண வருவாரு. நான் கடையிலே மட்டும்தான் இருப்பேன்/"

"இன்னிக்கு மட்டும் நீங்க வந்திங்களா?"

"ஆமா..."

பேசிக்கொண்டே இன்வாய்ஸ் எழுத முனைகிற கணேசன். ஆயினும், உள்ளுக்குள் ஒரு நமைச்சல். மன நச்சரிப்பு. மர்மமான ஆர்வக் குறுகுறுப்பு.

"படிச்சிருக்கீகளா?"

"ம்..."

"ப்ளஸ் டூவா?"

மெல்லிசான புன்னகை, கடைக்காரர் உதட்டில்.

"எம்எஸ்ஸி. கெமிஸ்ட்ரி".

கணேசனுக்குள் ஓர் உலுக்கல். சூறாவளிக்குள் சிக்கி மீண்ட அவரைக்கொடி போல வெலவெலத்தான். சகல நரம்புகளிலும் அதிர்வின் பரவல்.

"எம்எஸ்ஸி-.ஆ?"- மன அதிர்வில் நடுங்கிய குரல்.

"ம்..."

"எம்எஸ்ஸி. முடிச்சுட்டா பலசரக்குக் கடை நடத்துறீக?"

"வேற வழி?"

"ஜாப்புக்கு ட்ரை பண்ணலயா?"

"ம்ள்ச்சூ... ஜாப் வாங்கணும்னா, ஒரு லட்சம் வேண்டியிருக்கு. குடுக்க மனசில்லே. லஞ்சம் குடுத்து வேலை வாங்கிப் பெருமையடையுறதைவிட கடையிலே ஒழைக்குறது கெளரவம்னு தோணுச்சு.. அதான்"- உதடுகள் அதிராத பேச்சு. அத்தனை மென்மை.

ரசாயனச் சலவைக்குள்ளான நிலையில்... கணேச மனசு.

அந்தக் கறுத்த முகத்தில் ஓர் ஒளி. அந்த ஒளியில் தன் உணர்வை-சுபாவத்தை-தன்னையே பார்க்கிறபோது...

அப்புறம்-

பலிகொண்ட சமூகத்தின் மீதான வன்மம் ஆழத்தில் உறைந்தது. ஆழ்ந்து கிடந்தது.

இப்போதெல்லாம்-

திருவிழாக் கூட்டம் போல ஜனக்கூட்டம் பஸ்ஸில் திமிலோகப் பட்டாலும்கூட... கணேசன் சிடுசிடுப்பதும் இல்லை; சிரித்த முகம் மாறுவதுமில்லை. அவன் அவனாகவே இருக்க முடிகிறது.

*ஆனந்தவிகடன் 27-12-1998*

*அந்த மாதத் தமிழ்ச் சிறுகதைகளிலேயே சிறந்த கதை என்ற "இலக்கியச் சிந்தனை" பரிசுபெற்ற கதை.*

# கிறுக்கு

உள்ளங்கையின் மையத்தில் கருமையான ஈரத்தூள், பேன் மாதிரியான சின்னச் சின்ன இணுக்குகள், மிச்சமிருந்த தூளைத் தட்டிவிட்டு, வெற்றுத்தாளை வீசியெறிந்தான் பூபாண்டி. வலதுகை விரல்களால் பதமாக நசுக்கினான். ஊதினான். சுத்தமான போயிலைத் தூளை விரல் நுனிகளால் கூட்டி, அள்ளி, கீழுதட்டை இழுத்து, உள் பக்கமாய் திணித்துக் கொண்டான். ரூபாய்த்தாளை மடித்து பர்ஸுக்குள் சொருகிக்கொண்டமாதிரி.

அழுந்த மூடிக்கொண்ட அடி உதடு. கர்ப்பவதி வயிறு மாதிரி புடைத்திருந்தது. திருப்தியும், உல்லாசமுமாய் உள்ளங்கைகளை தட்டி உதறிக்கொண்டான்.

ஈருக்கும் உதட்டுக்கும் நடுவில் திணிக்கப்பட்ட போயிலைத்தூள். ஊறுகிற எச்சிலில் போயிலையின் லாகிரிவாசம். 'சுரு சுரு'வென்ற ருசி, கிறங்கடிக்கிற சுகமான உணர்வு, பரவசமான ஒரு காந்தல்.

"அடுத்த வேளை போயிலைத்தூளு இல்லே. வாங்கணும் எங்கே வாங்குறுது? ஒருபய கூட கடை தெறக்கலே"

பூபாண்டிக்குள் ஒரு குடைச்சல், மண்டைக்குள் கருவண்டு புகுந்தமாதிரியான குடைச்சல். நிஜமாகவே ஒரு கடைகூட திறந்திருக்கவில்லை. சர்வநிசப்தமாக நகரம். சுத்தமான கடையடைப்பு பயத்தில் புதைந்திருந்தது.

நகரமே அரண்டு போய் கிடக்கிறது. வெட்டும், குத்துமாக சாதிச் சண்டை. அறுபட்டு விழுந்த தாலிகள் நிறைய்ய. எல்லா நேரமும் எங்காவது வெடித்துக்கொண்டேயிருக்கிற பெட்ரோல் குண்டுகள். அலறியடித்துக்கொண்டு ஓடுகிற ஜனம், எல்லா மனிதர்கள் மனசிலும் கலவரப்பீதி, திகில். எந்நேரமும் யார் தலை உருளுமோ? மனசைக் கவ்வுகிற கிலி.

அறுபது ஊர் ஜனம் அன்றாடம் வந்து போகிற பெரிய்யய சந்தை நகரம். வியாபார நகரம்.

இப்போது...

வெறும் நகரம். ஓர் ஈங்குஞ்சுகூட வராது. வர முடியவில்லை. வெறிச்சோடிப்போன மயான நகரம், வாகனங்களின் சத்தமே யில்லை. வாழ்க்கையின் இரைச்சலேயில்லை. காவல்துறை வேன்கள் மட்டுமே ரவுண்டடிக்கின்றன. பல மாவட்டத்து வேன்கள். அடி வயிற்றை கலக்குகிற அசுரப் பேயிரைச்சலாக அடிக்கடி விரைகிற தியணைப்பு வண்டிகள்.

பூபாண்டி மண்டைக்குள் 'கிண்ண்'ணென்றிருக்கிறது. கிறுக்கு பிடித்த மாதிரியிருக்கிறது. 'கணேஷ் போயிலை இல்லாம இருக்க முடியாதே... எங்க வாங்குறது? ஹூம்... ஒரு வழியும் புரியலியே...!'

வெறிச்சோடிக்கிடக்கிற தெருவுக்குள் இறங்கினான். சின்னச் சின்னத் தெரு. சந்து பொந்துகளில் ஊடுருவி நகர்ந்தான். பூனை நடை. கள்ள நிதானம். ஒரு வீட்டுக்கதவை மெல்லத் தட்டினான்.

"யாரு?"

உள்ளிருந்து பதற்றமும், அதட்டலுமான குரல்கள்.

"நாந்தே..ன், பூபாண்டி."

திறந்து மூடிக்கொண்ட கதவு. உள்ளே...

நீள அகலமாய் பெரிய ஹால். அது நிறைய உட்கார்ந்திருக்கிற ஆட்கள். தள்ளுமுள்ளான நெருக்கடி. இடமில்லாமல் நிற்கிறவர்கள்.

சாதிக்கூட்டம் ரகசியக் கூட்டமாக நடந்துகொண்டிருந்து. போலீஸில் சிக்கியவர்களின் உறவுக்காரர்கள். சிக்காமல் மலைக் காட்டில் பதுங்கியிருப்பவர்களின் இரத்த பந்தங்கள். வெட்டுப் பட்டு செத்தவர்களின் சொந்தக்காரர்கள். சாதி ஜனம், மாமா மச்சினன்கள். கொடி பின்னிக்கிடக்கிற உறவுக்காரர்கள்.

அழுகையும், அங்கலாய்ப்புமாக மனிதர்கள். ஆத்திரமும், ஆவேசமுமாய் குமுறுகிற குரல்கள். உணர்ச்சிக் கலவையான

பலவகைக் குரல்கள். உஷ்ண மூச்சுகளின் உரசல்கள்.வீட்டின் உள்புறமே மூச்சு முட்டலாக இருந்தது. காரமும், வேகமுமான பேச்சுச் சத்தம், ஃபேன் காற்றுகூட வெப்பமாகத் தகித்தது.

பூபாண்டியும் ஒரு மூலையில் ஜனநெருக்கடிக்குள் தன்னைச் செருகிக்கொண்டான். அங்கே நிலவிய சூழல், பூபாண்டி மனசை என்னவோ செய்தது. ஒரு பிசைவு. அடிவயிற்றில் ஒரு பகீர்.

ஆள் ஆளுக்குப் பேச்சு. காட்டுக் கூச்சல். கோபமும், சோகமுமான சிறல்கள். வாய்ச்சவடால்கள், நொறுங்கிச் சிதைந்த நொம்பலக் குரல்கள்.

மீசை நரைத்த ஒரு பெரியவர். பெரிய சத்தமாய் அதட்டுகிறார்.

"ஏலேய்... என்னலே ஆள் ஆளுக்கு வாய்ச் சத்தம்? சலசலன்னு... ஓலைப்பாயிலே நாயி ஒண்ணுக்கிருந்த மாதிரி. நிறுத்துங்கலே. ஆகவேண்டியதைப் பேசுங்க..."

"என்னத்தைப் பேச? பத்து உசுரைப் பறிகொடுத்துட்டு... பரிதவிச்சுப்போய் நிக்கோம். இந்த லட்சணத்துலே என்ன இருக்கு, பேச?"

"பதிலுக்கு எத்தனையை சாய்ச்சோம்? நாலுதானே? நாலேநாலு தான். அதுவும் ஏலமாட்டாத கெழடு கட்டைக. ஒறங்கிக்கிட்டிருந்த பெரிசுக துள்ளித் திரியுற எளவட்டப் பய ஒருத்தனையாச்சும் சாய்ச்சிருக்கமா? இல்லே, ச்சேய்! வெக்கக்கேடு".

"இந்த மாதிரி பூட்டுன கதவுக்குள்ளே பம்மிக்கெடந்துக்கிட்டு, வெறும் பேச்சா பேசிக்கிட்டிருந்தா... எங்குட்டுக்கூடிச் சாய்க்க? எளவட்டப்பயகளை 'செட் செட்'டா பிரிச்சுவிட்டு, அருவாக்கம்பு ஆயுதங்களோட களத்துல எறக்கிவிட்டாத்தானே காரியம் நடக்கும்? அடுத்த சாதிக்காரன் தலைக தரையில உருளும்?"

"கூப்புட்டா... வரணும்லே?"

" வர மாட்டாங்களாக்கும்?"

"நம்ப பயக இப்ப இப்ப, நனைஞ்ச வெறகாயிட்டாங்க. சூடு சொரணையை தொலைச்சிட்டாங்க. அந்தக் காலத்துலேயெல்லாம் இப்புடியா? கட்டிட்டு வாங்கடான்னா... வெட்டிட்டு வருவாங்க."

"அது உங்க காலத்துலே."

சுய எள்ளலின் குரல், கொதித்த மனசின் நிறமாற்றம். குமுறலின் உள்பொதிந்த உணர்ச்சிக் கற்றை.

பெரியவர் ஆமோதித்தார். "ஆமா... நெசந்தான்" என்று சாந்தமாக எதிரொலித்தார். பூமியின் மையப்பகுதிபோல அவர் மன ஆழத்தில் எரிமலைத் தழல்.

"அந்த காலத்துலே நாங்க துடியா நின்னோம். என்னையே எடுத்துக்கோயேன். ஒல்லியாத்தான் இருப்பேன். நெத்திலிக் கருவாடு மாதிரி. ஆனா... ஏஞ்சத்துக்கு மூணு தலைகளை வெட்டிச் சாய்ச்சிருக்கேன். அறுபத்தஞ்சி கலவரத்துலே. நாலு வைக்கப் படப்புகளை தீ வைச்சு சாம்பலாக்குனேன். ஒத்தையாளாய்போய், மூணு குறுக்கம் வாழைத்தோப்பை ஒண்ணு விடாம வெட்டிச் சாய்ச்சி சிரழிச்சேன்... இப்ப இருக்குற எளவட்டப் பயலுகளுக்கு இதை நெனைச்சுப்பாக்கவாச்சும் தெம்பிருக்கா?"

பெரியவர் கண்ணில் அந்தக்காலம். முகத்தில் பெருமிதத் ததும்பல். கன்னக் கதுப்பின் துடிப்பில் அந்த ஏக்கம்.

"நாமட்டுமில்லே, அப்ப நம்ம சாதிப்பயக எல்லாருமே வீரமாயி ருந்தாங்க. வீமன் கணக்கா ஓங்குதாங்கா... நல்ல தாட்டியமாயிருப் பாங்க. கம்மஞ்சோறும், காணப்பயத்துத் தொவையலும் தின்னுட்டு, சூடு சொரணையோட இருப்பாங்க. சிங்கம்போல நிமிர்ந்து நடப்பாங்க. முறுக்கிவிட்ட மீசையும், நெத்திமட்டத்துக் கம்புமா சூரிக்கத்தியோட களத்துல எறங்கிட்டா.. ரெண்டு தலை யாச்சும் உருட்டாம வீடு திரும்பமாட்டாங்க. இரத்தக் கவுச்சியோட தான் வாசப்படியை மிதிப்பான். கெண்டைக்கால் ரோமத்துக்குச் சமானம்தான்-உசுருங்குறது"

பூபாண்டிக்குள் பெரியவரின் ஆவி இறங்குகிற மாதிரி.... நரம்புகளில் பரவிப் படர்கிற மாதிரியோர் – உணர்வுத் தினவு. இரத்த நாளங்களில் ஓடிப்பரவுகிற வெப்பம், தகிப்பு.

பெரியவரின் கனவு தேங்கிய உதடுகளையே பார்த்தான். வாழ்ந்துகெட்ட சோகத்தைச் சுமக்கிற வெள்ளை மீசை, இப்போதைய அவலத்தில் சிறுமைப்பட்டு நொந்துபோன முதிய கண்கள். அவர்மீதே பூபாண்டியின் பார்வை நங்கூரம்.

"இந்த நாள்லே எவன்கிட்டேயிருக்கு. அந்தத் தைரியம்? இப்ப இப்ப நம்ம சாதிப்பயக 'ஏவாரம், தொழில்'னு வசதியான எடத்துலே உக்காந்துட்டாங்க. படிப்பு, உத்தியோகம், பதவின்னு வெள்ளையும் சொள்ளையுமாயிட்டாங்க. நாலு சில்லறை கைகள்லே சேந்துருச்சு. சொத்து சொகம்னு வந்துட்டா... கோழைத்தனமும் வந்துரும்லே? உள்ளதை உரியதை காப்பாத்திக் கிடணும்னு ஆசை வந்துரும்லே? அருவாக்கம்புகளைப் பாத்தாலே...

'தருக், தருக்'குன்னு கழியுற பயம் வந்துரும்லே? சாதி உணர்ச்சி போயிரும்லே?"

"போச்சு, ரோஷம் மானம் எல்லாமே செத்துப்போச்சு".

"அதனாலேதா... பத்து உசுரைப் பறிகுடுத்துட்டு பம்மிப்போய் கெடக்கோம். நாயை வெறட்டுற மாதிரி.. நம்மளை ஓடவிட்டு ஓடவிட்டு வெட்டிச் சாய்க்கான்."

பெரியவரின் குரலில் கசிந்த துயர உணர்ச்சி. தொண்டை கரகரத்து... கலங்கிய கண்ணின் ஈர மின்னல். மீசைக்கு அடியில் சின்ன உதட்டில் மெல்லியசோகத்துடிப்பு.

பூபாண்டிக்குள் பற்றிக்கொண்ட தீ. நெஞ்சின் மூலை முடுக்கி லெல்லாம் 'திகுதிகு' வென்று எரிந்த தீ. அவனை நெட்டித் தள்ளு கிற மனத் தீ. 'ஏதாச்சும் செய்... என்னமாச்சும் செய்... எவனையாச்சும் ஒருத்தனைப் போட்டுத்தள்ளு... குத்தி மலர்த்து' என்று அவனுள் உந்தித் தள்ளுகிற உணர்வுத் தீ. உணர்வை, வெறியாக நிறம் மாற்றுகிற இரத்தத் தீ.

அடைத்த ஜன்னல்கள், டியூப் லைட்டின் வெள்ளை வெளிச்சம். வந்து போகாத காற்றின் இறுக்கம். சாதி ஜனம் விட்ட உணர்வுப் பெருமூச்சுகள். கொதிக்கும் மனக் கண்ணீராக அறையெங்கும் பரவித் தகிக்கிற வெக்கை.

"சரி சரி... பழசையே எம்புட்டு நேரத்துக்கு மென்னுக்கிட்டு இருக்கப்போறீக? ஆகுற ஜோலியைப் பாருங்க..."

பொறுமை சிதைந்த உணர்வின் குரல்.

"என்ன ஜோலி?"

"இன்னின்னாரு ஒரு செட்டுன்னு ரெண்டு இளவட்ட செட்டு களைப் பிரிச்சுவிடுங்க... இன்னிக்கே களத்துலே எறங்கட்டும். ரவ்வோட ரவ்வா... நாலு தலைகளைத் தீர்த்துக்கட்டட்டும்."

பெயர் பெயராகச் சொல்லி வருகிற பெரியவர்.

பூபாண்டிக்குள் பரபரப்பு, ஆவல் பறப்பு.

'பூபாண்டி பெயரையும் சொல்லப்போகிறார்' என்கிற உணர்வுத் துடிப்பு. ஆர்வத் தீவிரம்.

இவன் பெயரை கடைசி வரைக்கும் சொல்லவேயில்லை.

ஏமாற்றம், கோபமாக நிறம் மாறியது. பூபாண்டிக்குள்.

'பூபாண்டின்னா'... ஆம்பளையில்லியா? எளவட்ட மில்லியா?

செட்டுல சேத்துவிட்டு எறக்கிவிடுற அளவுக்கு இவனைப் பொருட் படுத்தலியா? பொண்ணைப் பயன்னு நெனைச்சிட்டாகளா?'

அவனுக்குள் பொத்துக்கொண்டு பீறிட்ட ரோஷாக்னி. புறக் கணிக்கப்பட்ட அவமானத்தில் கொதித்துப்போன மனசின் நினைவுத் தீ.

அரவமில்லாமல் எழுந்தான். ஆட்களை மிதித்து விடாமல் நிதான எச்சரிக்கையோடு தாண்டித் தாண்டி வந்தான். உடைபடாத திரா வகப் பல்பாக... அபாய நிலையில் அவன் மனசு. கதவைத் திறந்தான்.

"யாருடா... அது? பூபாண்டியா?"

"ம்"

"எங்கடா போறே?"

கழுத்தை மட்டும் வெளியே நீட்டி எச்சிலைத் துப்பினான். காந்தலான கார எச்சில். வாயின் உட்பகுதி முழுதும் ஒரு நமைச்சல். சுகமான நமைச்சல்.

மீண்டும் பெரியவரின் அதட்டல்.

"காதுல வுழுதா? எங்கடா போற?"

"சும்மாதான்"

"இடுப்புல ஆயுதம் வைச்சுக்க. ஜாக்கிரதையா போ."

"ம்"

மனசுக்குள் திருகல் முருகலான நினைவுகள். வீட்டுக்குள் முண்டியடித்து, ஒட்டி உரசி உட்கார்ந்திருக்கும் மொத்தக் கூட்டத் தையும் எகத்தாளமாய் ஒரு பார்வை பார்த்துவிட்டு, தெருவில் இறங்குகிற பூபாண்டி.

அவனுள் ஒரு வன்மம். கத்தி தீட்டப்பட்ட கூர்மையான வன்மவெறி.

'பூபாண்டின்னா.. கொலைச்சுக்கிட்டே திரியுற நாயி இல்லே. கடிச்சுக் கொதறுற நாய்ங்குறது நாளைக்குத் தெரியும்... பாருங்க'

அவனுள் ஜ்வாலைச் சுடர்கள். தீ நாக்குகளின் அலைவுகள். இரைதேடித் திரியும் ஓநாயின் தீ நாக்கு. வெறிச்சோடிக்கிடக்கிற தெரு. ஜன சந்தடியின் உயிர்ப்பற்ற சவச்சாலை. காவல்துறை வேன்களின் உலாவல் மட்டும். காவலர்கள் பூட்ஸின் "நெறுக், நெறுக்". அச்சுறுத்தலான 'நெறுக், நெறுக்'. தூக்கி மாட்டிய துப்பாக்கிகளின் பயமுறுத்தல். கிலியூட்டுகிற அசுரத் தோற்றம்.

பயப்படாமல் வன்மத்துடன் பூபாண்டி. குறுகல் குறுகலான

சந்துகளில் ஊடுருவி நழுவினான். ஜன்னல் கதவுகள்கூடச் சாத்தப் பட்டுக்கிடந்தன. சந்துகளில்கூட தன் நகங்களைப் பதித்திருந்த கலவரபயம்.

அடி உதடு நமநமத்தது. மனசுக்குள் ஒரு வெறுமையான பசி உணர்வு. மண்டைக்குள் குடைச்சலெடுக்கிற ஒரு தாகம். 'கணேஷ் போயிலை இருந்தா... நல்லது. கொஞ்சம் நசுக்கி... உள்ளே திணிச்சா... சுறுசுறுப்பா இருக்கும்...'

கண்ணுக்குள்ளேயே சுற்றும் ஈயைப்போல, அச்சலாத்தியான மன நச்சரிப்பு.

அதைத் தள்ளினான் தூர. "ச்சேய்... நாயே! ஒரு புத்தியோட இரு... இரைமேலேயே கண்ணை வை."

அவனை அவனே அதட்டிக்கொண்டான்.

அவன் மனசில் அலைவு. இரை தேடுகிறதாக அலைவு. தாகத் தவிப்பு, திவிர யோசிப்பு.

"ஆ...ங். அந்தப் பயலை போட்டுத் தள்ளிரவேண்டியதுதான்."

மில்வேலை செய்கிற இளவட்டப் பயல், துடியான பயல், தராதரம் பார்க்காமல் எல்லோரையும் தடாலடியாகப் பேசி எகிறுவான். பஸ்ஸில் ஏறினால்... ஏகச் சலம்பல். கொஞ்சம் லட்சணமான பெண்கள் ஸ்டாண்டிங்கில் வந்தால்... அங்குதான் போய் ஒட்டிக்கொண்டு உரசிக் கொண்டு நிற்பான். அலட்டல் பண்ணுவான். பார்த்தாலே... நமக்கு பற்றிக்கொண்டு வரும். சகிக்கவே முடியாது. அந்த நாயைப் போட்டுத் தள்ளிட வேண்டியதுதான். நாலை அஞ்சாக்கி... நம்ம சாதி மானத்தையும் காப்பாத்திரலாம். ஒரு நாய்ப் பயலையும் ஒய்ச்சிரலாம்."

குறி கிடைத்துவிட்ட குஷியில் கும்மாளம் போடுகிற வன்மம். சுறுசுறுவென்று அலைந்த நினைவு. இரைகிடைத்த வேகத்தில். பாய்ச்சலுக்குத் திட்டம் போடுகிற பரபரப்பில் மனசு. மூர்க்கமாகிப் போன உணர்வு. உசுப்பி விடப்பட்டு, சூடும் போடப்பட்ட ஒரு வேங்கையின் வெறி. தன் உயிர்முழுவதையும் கண்ணில் குவித்து... அந்தக் கட்டட மறைவின் இருட்டில் பதுங்கியிருந்தான், பூபாண்டி.

மில்லில் நைட் ஷிப்ட் முடிந்து, இந்தத் தார்ச்சாலையில்தான் தொழிலாளர்கள் வருவார்கள். நடந்தும், சைக்கிளிலுமாய் பேசிக் கொண்டே வருவார்கள். 'சள சள'வென்று மஞ்சள் நதியாகப் படுத்துக்கிடக்கிற தார்ச்சாலை, சோடியம் விளக்கு வெளிச்சத்தில். அதில் வடிவங்களாக நகர்வார்கள். அதில் அவன் மட்டும்...

சாலையிலிருந்து விலகி சந்துக்குள் நுழைவான். இருட்டுச் சந்து. கலவரநேரம். ஆளரவமற்ற குறுகலான சந்து. நல்ல தருணம். வேட்டைக்கான சமயம். உயிர் வேட்டைக்கு உரிய கணம்.

ஓடிப்போய்... பின்பக்கமாய் தழுவி, இடது கையால் கழுத்தைச் சுற்றி, ஒரு கவ்வு கவ்வி... இறுக்கிய வேகத்தில் வலதுகைச் சூரிக்கத்தியால் ஓங்கி... ஒரு சொருகு... உருவிக்கொண்டு, 'சதக், சதக்'கென்று ரெண்டு குத்து.

விம்மி விடைக்கிற திரேகம் உயிர்ச்சுடர் அணைந்து, துவண்டு, சரிந்து... கையெல்லாம் இரத்த வெதுவெதுப்பின் நசநசப்பு, உயிரின் இறுதி ஈரம். அம்புட்டுத்தான் நாலு அஞ்சாகிவிடும். விட்டது.

உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஓடிவந்தான். வெறிவேக ஓட்டம். சின்னச் சின்ன சந்துகளில் சுண்டெலியாக ஓடிவந்தான். மனசுக்குள் பெருமிதம். காரியம் முடிந்த சந்தோஷம். ஒருத்தனை.. ஓர் இளவட்டத்தை 'போட்டுத்தள்ளி'ட்ட உல்லாசம்.

இரத்தத்தில் நனைந்த ஈரச் சொதசொதப்பான துணிமணி. எல்லாவற்றையும் கழற்றி மூலையில் போட்டுவிட்டு குளித்தான். மாற்று உடையில் புகுந்த வேகத்தில்... இரத்த ஈரத்துணியில் சீமைத் தண்ணீரை (மண்ணெண்ணெய்) ஊற்றி, தீக்குச்சியை உரசிப் போட்டான். சாம்பலாயிற்று. சந்தோஷமாய் படுத்தான். உறக்கமே வரவில்லை. மனசின் ததும்பல். பெருமிதப் பூரிப்பு.

நாளைக்கு...

எல்லோரும் இவனது 'செயலை'ப் பற்றித்தான் பேசுவார்கள். ஊர்முழுக்க நாளிதழ்களில்கூட நாளைக்கு இந்தச் 'செயல்'தான்.

"மேலும் ஒரு கொலை"

பரவும் கலவரம், கொட்டை எழுத்தில் செய்திகள். நினைக்க நினைக்க மனசுகிடந்து கூத்தாடியது. கும்மாளம் போட்டது.

மறுநாள்.

தெருமுழுக்க ஒரே பேச்சு. கிலியும், திகிலுமான பேச்சு.

"ராத்திரியிலேயும் ஒரு கொலை வுழுந்துருச்சு"

"எங்கனே?"

"மில்லுகிட்டே"

"யாரு...? இவனுகளா, அவனுகளா?"

"ரெண்டுமேயில்லை..."

"பெறவு?"

"சாதிக் கலவரத்துக்குச் சம்பந்தமேயில்லாத வேற சாதிக் காரன். கலவரத்தைச் சாக்கா வைச்சு, எவனோ சொந்தப் பகையை தீத்துக்கிட்டான்".

"செத்தது யாரு?"

"மில்லுகிட்டே சைக்கிள்லே டீ வைச்சு விக்கிறவன். பாவம், ஏழைப்பட்டவன். கொஞ்ச வயசுக்காரன். எவனோ போட்டு மலர்த்திட்டான்."

"அடக்கொடுமையே..."

பூபாண்டிக்குள் கத்தி சொருகின மாதிரியிருந்தது. 'வேறு சாதிக்காரனா?'

அதிர்ச்சியில் வெலவெலத்துப்போனான். பெருமிதப் பூரிப்பும், ததும்பலும் இருந்த இடம் தெரியாமல் மாயமாகி, மனசில் ஒரு பாறையின் பாரம். சுமையின் அழுத்தம்.

கிறுக்கு பிடித்தவனைப்போல வெறி வேகமாக ஓடினான். போலீஸ் மயம். அதையும் மீறிக்கொண்டு வேடிக்கை பார்க்க முண்டியடிக்கிற பொதுஜனம்.

"அடடா... பாவமே" என்று பரிதாபப்படுகிற ஈரமனிதர்கள்.

ஈர நெஞ்சின் கொதிப்பு, சாபமாக வெளிப்பட்டது.

"எந்தப் பாவிப்பய செய்ஞ்சானோ... இந்தப் பாதகத்தை? அவன் வெளங்குவானா? நாசமாய்ப் போக"

செத்துக்கிடக்கிற டீக்காரன். போலீஸ் அதட்டி மிரட்டி உருவாக்கியிருந்த வெட்டவெளி. அதன் மூலையில் கிழிந்த சேலையும், காய்ந்த தலையுமாய் இறந்தவனின் மனைவி. தலையிலும், மார்பிலும் 'மடேர், மடே'ரென்று அடித்துக்கொண்டு அழுது கதறுகிற பரிதாபம்.

"ம்மா... ம்மா... ம்மா..." என்று அவள் தோளைப் பிடித்துக் கொண்டு அழுது சிணுங்குகிற பத்துவயதுச் சிறுவன்.

அழுது அரற்றுகிற அந்தப் பெண். கண்ணீரும் கம்பலையுமாய் கதறுகிற சோகம்.

"ஐயய்யோ... உங்க உசுரைப் பறிச்ச பாவி யாரு? அவன் நாசமாய்ப் போக... 'நா படிக்க முடியாமப் போச்சு. டீ வித்தாச்சும்

எம்புள்ளைய பெரிய படிப்பு படிக்க வைக்கணும்'னு வாய்க்குவாய் சொல்லுவீகளே, பாதியிலே போய்ட்டீங்களே... நா என்ன செய்வே? ஏது செய்வே? எம்புள்ளையை எப்படி வளர்ப்பேன்?"

அவளது ஒப்பாரியின் ஓலம். மனசின் உள்நரம்புகளை கொத்தாகப் பற்றிச் சுண்டியிழுக்கிற அவலக் கதறல்.

பூபாண்டிக்கு காலடித் தரை உருவிய மாதிரியிருந்தது. துப்பாமல், போயிலை எச்சிலை விழுங்கிவிட்ட மாதிரி கிறுகிறுப்பாக இருந்தது. நிற்க முடியவில்லை. ஓடினான். பதறியடித்துக் கொண்டு ஓடுகிற பதைப்பு.

அவனைக் கண்டு அவனே பயந்து, அலறாமல் ஓடிய ஓட்டம்.

ஒரு வருஷமாகிவிட்டது.

கலவரம். நகரத்தின் காயத் தழும்பாகிவிட்டது. யார் யாரோ... எப்படி எப்படியோ.... ஏதேதோ வழக்குகளில் சிக்கிச் சிரழிய.... சாதிக்கூட்டம் கண்டு கொள்ளாததைப்போலவே, வழக்கும் இவனைப் பொருட்படுத்தாமல் விட்டுவிட்டது. ஆனால்...

பூபாண்டி, பூபாண்டியை விடுவதாக இல்லை. ரவ்வும், பகலுமாய் மன உளைச்சல். முள்முள்ளாகக் குத்துகிற துணிவுதான். சூரிக்கத்தியின் குத்தல்கள். பற்றியெரிகிற இரத்தத் துளிகள்.

தலைவிரிகோலமாய் அந்தப் பெண். கண்ணீர் வழிகிற பிஞ்சுக் கன்னத்தோடு அந்தச் சிறுவன். அழிக்க முடியாத பிம்பம். மனசை வதைக்கிற காட்சி. தூங்கவிடாமல் தொல்லை பண்ணுகிற மனசாட்சி.

நாள் ஒன்றுக்கு மூன்று பாக்கெட் கணேஷ் போயிலை என்பது, முப்பது பாக்கெட்டாயிற்று. மாறி மாறித் திணித்தான். துப்ப, துப்ப திணித்தான். போயிலை எச்சிலின் லாகிரிக் கிறுகிறுப்பிலேயே மனசு தூங்... மனசு கிறுகிறுக்க...

நாளும் பொழுதும் நகர்ந்தன.

இவனுக்குள்ளும் 'அது' காயத் தழும்பாகிவிட்டது.

சைக்கிள் பஞ்சராகிவிட்டது, பேக் வீல். உருட்டிக்கொண்டே வந்தான். உச்சிவெயில். உச்சிமண்டை தகித்தது.

வேர்வை வரிவரியாக நெளிந்து இறங்கியது. பனியனும் சட்டையும் 'தொப், தொப்'பென்று நனைந்து விட்டது.

அதோ ஒரு சைக்கிள் கடை. பஞ்ச்சர் பார்த்துவிடலாம்.

ஆறுதல்பட்ட பூபாண்டி மனசு.

அந்தக் கடையில் சைக்கிளை நிறுத்தி, ஸ்டாண்ட் போட்டு கிளிப்பை தட்டிவிட்டு, கடைத் தாழ்வார நிழலில் ஒதுங்கி 'உஸ்ஸ்'ஸென்று உட்காரப் போனான்.

கடைக்குள் ஒரு பையனின் கதறல். 'டபார், டபார்' என்று செவிட்டில் விழுகிற அறை. திக்கங்காக விழுந்த அடிகள். கடைக்காரன் அடித்த அடியில், துள்ளியடித்து கதறியழுத பையனின் சத்தம் பழகிய சத்தம். மனசுக்குள் உரசுகிற சத்தம்.

"யாரது?" பூபாண்டி உற்றுப்பார்த்தான்.

"வண்டியைக்கூடத் தொடைக்காம... எங்கடா போயிருந்த நாயி? படுவா... ஒழுங்கா வேலை பழகப்பாரு. இல்லே... தொலியை உரிச்சிருவேன். உரிச்சு"

நாக்கை வளைத்துக் கடித்துக்கொண்டு, இன்னும் அதட்டுகிற கடைக்காரர்.

வாங்கிய அடியோடு அழுதுகொண்டே கரித்துணியை கையிலெடுத்து சைக்கிளைத் துடைக்கப் போகிற சிறுவன். அவனது டவுசரும் சட்டையும் கூட கரித்துணிதான்.

பூபாண்டிக்குப் பாவமாக இருந்தது. கருணை பொங்க பார்த்தான், அந்தச் சிறுவனை.

இவனுக்குள் அடிவயிற்றில் ஒரு பிசைவு.

யார் இந்தச் சிறுவன்?

"நா படிக்க முடியாம போச்சு, டீ வித்தாச்சும் எம் புள்ளையை பெரிய படிப்பு படிக்க வைக்கணும்னு வாய்க்குவாய் சொல்லு வீகளே, பாதியிலே போய்ட்டீகளே..."

அழுது கதறிய அம்மாவின் தோளைப் பற்றிக் கொண்டு சிணுங் கிக் கொண்டிருந்தானே... அந்தச் சிறுவனா இந்தக் கடையில்.

அடி வாங்கி, அழுதுகொண்டு, கிழிந்த கரித்துணியா...

பூபாண்டியின் காயத்தழும்பில் 'சதக்'கென்று பாய்ந்த ஒரு சூரிக்கத்தி. அடிவயிற்றில் புதைந்து, உருவுகிற கத்தி.

"ஐயய்யோ... உங்க உசுரைப் பறிச்ச பாவி... யாரு?"

மனசின் ஆழத்தில் அந்தப் பெண்ணின் அவலக்கதறல், உயிரின் நரம்புகளை உலுக்குகிற ஓலம். நினைவின் ஆணிவேரையே அறுக்கிற அலறல்.

'என்னத்துக்குக் கொன்னேன்... நா? யாரைக் கொன்னேன்? டீக்காரனையா? அவனை மட்டும்தானா? அவன் ஒருத்தனை மட்டுமா?....'

"யாரு... யாரு... யாரு.."

உள்மனசுக்குள் தலைவிரி கோலமாக அழுகிற கேள்வி. விஸ்வரூபமாய் எழுகிற கண்ணீர்த்துளி. படிப்பைவிட்டு, சைக்கிள் கடையில அடிவாங்கிக் கேவுகிற இந்தச் சிறு பூ.

"யாரு...யாரு...யாரு...?"

இந்தக் கேள்வியின் ஓங்காரத்தில், பிரபஞ்சத்தின் சகல ஒலிகளும் அமிழ்ந்து மூழ்கிப்போய்விட....

ஓங்காரமே அனைப் பிடித்து உலுக்க...

"நா இல்லை... நா இல்லே... நா இல்லே..." என்று பீதியும், கிலியுமாகக் கதறிக்கொண்டே தெருவில் கதிகலங்க ஓடினான் பூபாண்டி. ஒரே சொல்லையே மாறி மாறி உச்சரித்தான்.

ரவ்வும், பகலும், உறங்கும்போதும், விழித்திருக்கும் போதும், செத்து மடிகிற வரை அவன் உச்சரித்துக்கொண்டிருந்த ஒரே சொல், அதுதான் "நா இல்லை... நா இல்லை.. நா இல்லே..."

*இந்தியா டுடே, மார்ச் 24–1999*

# ஆட்டுக்கம்பும் பூ மொட்டும்...

ஆட்டுக்கம்பை எடுத்துக்கொண்டு வாசல்படி தாண்டிய செந்தட்டி மனசுக்குள், கம்பு கனத்தது. மனசு கிடந்து அல்லாடியது. பாம்பைப் பிடித்திருக்கிற மாதிரியோர் மனமயக்கம்.

"சனியன் புடிச்ச இந்தக் கம்பை தலையைச் சுத்தி வீசியெறிஞ்சாதான் மன நிம்மதி."

சள்ளையும் கோபமுமாக கங்குச்சிதறலான முணுமுணுப்பு.

ஆடு மேய்க்கப் போகமாட்டேன்னு அம்மாகிட்டே அடம்பிடிக்கணும். அழுதுபுலம்பி ஆட்டம் போடணும். எதுக்குன்னு கேட்டா... என்ன சொல்ல? அதை எப்படிச் சொல்ல?

– சிடுசிடுப்பும் எரிச்சலும் மண்டுகிற மனசுக்குள் வந்துபோகிற நினைப்பு. வாயைத் திறக்கமாட்டாத உணர்வு, லஜ்ஜையில் ஊமையாகிற மனசு, ஊமையாகி அடங்காமல், பயத்தில் துடிக்கிற எண்ணம், திமிறிக்கொண்டு வெடிக்கிற வார்த்தைகள்.

ஆங்காரத்தில் டயர் செருப்பு தடக் தடக்கென்று அடித்தது. ஆடுகள் அடைத்திருக்கிற தொழுவத்தை நோக்கி நகர்ந்தாள்.

"அடியே..."

அம்மா சனியன்தான். அவளது ஆங்காரச் சத்தம்.

"என்ன..." – எதிர்க்கோபமாக இவளது வீறிடல்.

"சோத்துச் சட்டியை எடுத்துக்கிட்டியா?"

"ம்... ம்... எடுத்துக்கிட்டேன்."

"ஆடுகளைப் பார்த்து மேய்டி. காடு கரைகள்லே மேய விட்டுராதேடி... வெள்ளாமை வெளைச்சல்லே விட்டுட்டீன்னா... ஊர் ஜனத்து முன்னாலே தலைகுனிஞ்சு நிக்கணும்..."

"ம்...ம்... ஆகட்டும்...."

"அந்தக் கருமூக்கை ஒரு கண்ணு பாத்துக்கடி... செனையாடு. கல்லுட்டு கில்லுட்டு எறிஞ்சிராதேடி..... பணம் பெத்த ஆடு..."

"சரி..."

செந்தட்டி உயிரில்லாமல் எதிரொலித்தாள். சுரத்தில்லாத ஆமோதிப்பு. மனசுக்குள் தகிப்பு. சிறிப்பாய்கிற நாறவசவுகள். அம்மாவைத் திட்டித் தீர்க்கிற ஆத்திரம்.

'ஆட்டை மேயி... ஆட்டை மேயின்னு காட்டு வழியிலே வெரட்டுறதுலேயே குறியாயிருக்கா. கருமூக்கு மேலே வெச்சிருக்கிற அக்கறையிலே பத்துல ஒரு பங்குகூட பெத்த புள்ளை மேலே கெடையாது. இவள்லாம் ஒரு தாயா? பேயி... நாயி... மூதேவி..."

கசந்த மனசின் வெக்கையான முணுமுணுப்பு. வெந்து கொதிக்கிற நினைவின் தகிப்பு. காலை வெயில் கண்ணில் ஊசியாகப் பாய்ந்தது. சுள்ளென்று அறைகிற ஏறுவெயில்.

செம்பட்டை ரோமக்கற்றை கண்ணில் குறுக்கில் விழுந்தது. ஒதுக்கி அதைத் தலைமுடிக்குள் செருகிக் கொண்டாள். சாயம் போன பாலியஸ்டர் பாவாடையின் காலடி நுனியில் தொங்குகிற கிழிசல் நூல்கள். கரண்டைக் காலின் புழுதி வெள்ளை.

பாவாடைக்கு மேல் போட்டிருக்கிற ஐயா சட்டை, அரைக்கை சிலாக்ஸ், தொளதொளப்பான சட்டை, பெல்ட் மாதிரி இடுப்பில் கட்டியிருந்த அழுக்குத் துண்டு, துண்டுக்குள் கோத்திருந்த சோத்துத் தூக்குச்சட்டி நடைக்கேற்ப 'களுக் கிளுக்'கென்று ஆடியது.

வீட்டுக்குப் பின்னால் தொழுவம். நாலு பக்கமும் வேலி முள் அடைப்பு. முள்வேலிச் சுவர், மேலே கூரைச்சாய்ப்பு, கிட்ட வந்தவுடன் நாசிக்கு சுகமான சாணக்கழிசல் நெடி, மூத்திரக் கவிச்சு வாசம்.

காலடிச் சத்தத்திலேயே இவளை உணர்ந்து நட்புடன் கனைக்கிற செம்மறிகள். படலைத் திறந்தாள் செந்தட்டி. தடதடத்து எழுகிற ஆடுகளின் கதறல்கள், செவலையும் வெள்ளையுமான ஆடுகள். சாணக் கழிசலில் புரண்டு காய்ந்த சொறசொறப்பு.

அவளது காலடியில் வந்து உரசுகிற ஆடுகள். அந்தச் சிறுமியின் பாதங்களை நுகர்கிற ஆடுகளின் பாசம். அதன் சுவாச வெதுவெதுப்பு.

இந்த வெதுவெதுப்பு அவள் மனசுக்குள் இறங்குகிறது. இந்த நெடி அவளுக்குப் பிடிக்கும். ஆடுகளின் சொறசொறப்பும், மூத்திர நாற்றமும், ஆடுகள் செருமுகிற சளியின் வாசமும் செந்தட்டிக்கு ரொம்பப் பிடிக்கும். பரணில் கிடக்கும் காய்ந்த கொழைகள், வாடலும் புழுக்கமுமான அதன் மணம், படல் விலகியவுடன் வெளியேறுகிற செம்மறிகள். அப்போதுதான் நீட்டி நெளித்து நெட்டி முறிகிற ஒன்றிரண்டு சோம்பேறிகள், ஒன்றுடன் ஒன்று ஒட்டிக்கொண்டும் உரசிக்கொண்டும் நெருக்கியடித்துக்கொண்டு நகர்கிற அதன் பிறவிக்குணம். வெளியேறிய வேகத்தில் பக்கத்து வீட்டுச் சுவர்களில் உடம்பைத் தேய்த்துக் கொள்கிற பரபரப்பு. சொறிந்துகொள்கிற அதன் சுபாவம். சுகம், செந்தட்டி வாயிலிருந்து நெருப்பாகச் சீறிய கெட்ட வார்த்தை, எரிச்சலான வசவு நாராசம்.

"வெள்ளைக் காலுக்கு மப்பைப் பாரு. போய் ஒட்டைக்காது கிட்டே வம்புக்கிழுக்கு, முட்டுபோடுது..."

இயந்திரக்கதியில் குனிந்து ஒரு கல்லை எடுத்து அனிச்சையாக எறிந்தாள். விர்ரென்று இரைச்சலோடு சிறிய கல் வெள்ளைக் காலின் நெற்றிப் பொட்டில் பட்டுத் தெறித்தது.

"ம்மேய்க்" என்ற கதறலோடு ஓடிய வெள்ளைக்கால் ஆடு. அடிவாங்கிய அதிர்வில் விளையாட்டில் இருந்து விலகிய சிறுமியைப் போல கனைத்துக்கொண்டு ஓடுகிற ஒட்டைக்காது. அதன் கண்தெறிப்புகளில் பீதி.

அந்த வட்டாரம் முழுக்க ஆடுகளின் கத்தல். வெயில் பூராவும் கதறல்கள்.

"ம்மேய்க்க்... ம்ம்மேய்க்..." என்று எல்லா ஆடுகளின் கூட்டுக் கதறல். ஒழுங்கற்ற காட்டுக் கத்தல். நீட்டி முழக்குகிற கனைப்புச் சத்தங்களோடு வேறு வேறு திசைகளில் ஆவல் பறப்போடு ஓடிச் சிதறுகிற செம்மறிகள்.

கம்பு வீச்சும் கல்லெறியுமாக ஓடி ஓடி மடக்குகிற செந்தட்டி. கம்பால் அடித்து, பேர் சொல்லி அதட்டி அதட்டிக் களைத்துப் போகிற அந்தச் சிறுமி, அங்கும் இங்குமாக ஓடி ஓடி வியர்த்த எரிச்சலில் வீரிடுகிறாள்.

"ஏய்ய்க், வவுறு வெள்ளை... எங்க போற? ஏய், கறுப்பு வாலு... ஒனக்குத் தனியா கத்தணுமா? ஆடுகளோட சேர்ந்து போறீயா... இல்லியா? விட்டேனா தெரியும். ஒரு கல்லு... மண்டை மூளை செதறிப்போவும். ஏய்ய்க் நாக்குப்புள்ளி..."

ஓடி ஓடிக் களைத்துப்போனாள். ஏறுவெயிலில் முத்து முத்தாக மின்னுகிற வியர்வை மணிகள். செவிரோமங்களை நனைத்துப் படியவைக்கிற வியர்வை. ஓடி ஓடி... ஆடுகளை மடக்கி... வண்டிப் பாதைக்குள் ஒழுங்குபடுத்துவதற்குள் ஆத்தாடி, அம்மாடி என்றாகிப் போயிற்று செந்தட்டிக்கு.

தொழுவத்தின் படலை இழுத்துச் சாத்துகிறாள். சாணிச் சகதி முழுக்க ஆட்டுக்குளம்புத்தடங்கள். வெள்ளையும் சிவலையுமா ரோமச் சிதறல்கள்.

அதற்குள் செம்மறிகள் கொஞ்ச தூரத்துக்குப் போய்விட்டன. தெருப்புழுதியின் புகைமண்டலம். காலை வெயிலில் நனைந்த ஒளிப்புழுதித் திரை.

படலை இழுத்துச் சாத்தி, கொக்கியை இழுத்து மாட்டிய வேகத்தில் ஆடுகளைத் துரத்திக்கொண்டு ஓடுகிற அந்தச்சிறுமி. கால்களின் பரபரப்பு. பதட்டம்.

டடப் டடப்பென்று கதறுகிற டயர் செருப்புகள்.

வெளிப்பானையில் வாய் வைக்கிற கிழிஞ்ச காது. அவரைப் படலில் முன்னங்காலைப் போட்டு கொழை மேய்கிற கள்ளச் செவலை. தெருவோர வைக்கோல் படப்பில் கூளத்தை வளைத்து அமுக்குகிற வாலாட்டி. ஆட்டுக்கொரு சேட்டைகள், அழிச்சாட்டியங்கள்.

பதட்டமும் மனச் சிடுசிடுப்புமாக விரட்டி விரட்டிப் பத்துகிறாள். மடக்கி ஆடுகளை வழிக்குக் கொண்டு வருகிறாள்.

"ஏய் சனியன்களா... ஒழுங்கா போங்களேன். பேதியா எடுக்கு? எழவுலே போய்ச் சேர... பாதை பாத்துப் போங்க..."

கத்துகிற செந்தட்டியின் வாயிலிருந்து சிதறுகிற நாற வசவுகள், கூச்சமற்ற கெட்டவார்த்தைகள். காடே கதியென்று ஒற்றையாகப் பொழுதைக் கழிக்கும் தொழிலின் இயல்பான நாறவார்த்தை

செந்தட்டிக்கு இப்போதே கால் வலிக்கிறது. இடுப்பெல்லாம் கடுக்கிறது. ஓடிச்சாடி பரபரத்த வேகத்தில் தொடைச் சதையெல்லாம் வலி. முறுக்கிப் பிழிகிற வலி. இடுப்பில் பின்பக்கம் தொங்கிக் குதிக்கிற தூக்குச்சட்டி வேறு இச்சிலாத்தி. கத்திக் கத்தி தொண்டையெல்லாம் உலர்ந்து காந்துகிறது. நடக்கிற ஆடுகள் எழுப்புகிற புழுதிப்புகை நாசிக்குள் நுழைந்து கமறுகிறது.

இதையெல்லாம் உணரப் பொழுதில்லை, செந்தட்டிக்கு. ஆடுகளின் பின்னால் லொக் லொக்கென்று ஓடுகிறாள். வியர்வை துடைக்கக்கூட நேரமில்லை. நாடி நுனியில் வியர்வை மணியின் ஆட்டம். அதைக்கூடப் பொருட்படுத்தவில்லை.

நாலு வருஷப் பழக்கம். அன்றாட அனுபவம். பழகிப் பழகி மரத்துப்போன ரணம். எட்டு வயசில் தூக்கிய ஆட்டுக்கம்பு. ராசாத்தியக்கா பாதுகாப்பில் ஆடு மேய்க்க ஆரம்பித்த நாட்கள். ஆட்டு வாலில் தொங்கி, வெயிலில் கருகிய பகல்கள். புல்லை மேய்கிற ஆடுகளையே வெறும் வாயால் வெறித்த முடிவற்ற பொழுதுகள்.

சாய்வாக ஊன்றிய கம்பில் கட்கத்தையும் உடல் பாரத்தையும் போட்டு, விறைத்து ஊன்றிய வலதுகாலில் மடங்கிய நிலையில் இடதுகாலை வைத்து... வெட்ட வெயிலில் மணிக்கணக்காக உறைந்து நின்று பழகிப்போன நாட்கள், கானல் அலைகள் மிதக்கிற வெள்ளை வெயிலை இமைதட்டாமல் பார்த்துப் பார்த்து தேய்ந்துபோன கண்கள், கன்னக்கதுப்புகளின் காந்தலையும், செவிமடல் எரிவையும் எச்சிலைத் தொட்டுத் தடவி தடவி சமாளித்த குழந்தைத்தனம்.

ஆடு மேய்க்கப் போயிருந்த அய்யாவை நாலு பேர் தூக்கிக்கொண்டு வந்தார்கள். ரத்தம் ரத்தமாக கக்கினாராம். கண்ணைக் கட்டிக்கொண்டு வந்ததாம். விழுந்தவர் அசையவேயில்லையாம்.

செத்துக்கிடந்த ஐயாவின் மேல் விழுந்து கதறிய அம்மா, "ஐயய்யோ... எங்களைத் தவிக்க வுட்டுட்டு இப்படிப் போயிட்டீங்களே... என்ன செய்வேன் நான்? எப்படிக் கரைசேரப் போறேன்? ஐயய்யோ... ஐயா... ஏஞ்சாமி... ஏந்தெய்வமே..."

தலைவிரி கோலமாக நெஞ்சில் அடித்துக்கொண்டு கதறிய அம்மா, நனைந்த காகிதமாக நைந்து கிடந்த அம்மா... மாறி மாறி அம்மா வைத்த ஒப்பாரியில் கதிகலங்கிப் போயிருந்தாள். நாலாப்பு செந்தட்டி.

செத்துப்போன ஐயாவுக்குக்கூட அல்ல, அழுது அரற்றுகிற அம்மாவின் கண்ணீருக்கே பரிதாபப்பட்ட செந்தட்டி, கலங்கி நெகிழ்ந்தாள். விம்மலும் விசும்பலுமாக, "ம்மா... ம்மா..." என்று அம்மா தோளைத் தொட்டுக்கொண்டே அழுதாள்.

பதினாறாம் நாள் காரியம் முடிந்தபிறகு...

வாழ வேண்டிய மிச்ச வாழ்வைப் போல எதிரில் நின்றன ஆடுகள். பதினெட்டு ஜோடிகள். முப்பத்தாறு செம்மறிகள். வீட்டின் ஜீவனம். என்ன செய்ய?

ஐயாவோடு சேர்ந்து சாகமுடியாதே. வாழ்ந்தாகணுமே... வாழ்வோடு மல்லுக்கட்டி உருண்டு புரளணுமே...

ஐயாவின் ஆட்டுக்கம்பு செந்தட்டி தோளுக்கு வந்தது. கவரில் தொங்கியது நாலாப்பு பைக்கட்டு.

"ஐயையோ... பொட்டைப் புள்ளையை ஆடு மேய்க்க அனுப்புற மாதிரியாகிப் போச்சே... நான் ஒரு பாதகத்தி... யோகங்கெட்ட சிறுக்கி..." என்று அழுது கரைந்தாள் அம்மா. ஆட்டுக்கம்பை எடுத்த அன்றைக்கு, நனைந்த துணியாக துவண்ட குரலில் கண்ணீரும் கம்பலையுமாகப் புலம்பினாள்.

"இந்த வங்கொடுமையையும் கண்கொண்டு நான் பார்க்கணுமா? கண்ணு முழியாத சின்னக்குஞ்சு காட்டு வழியிலே ஆட்டைப் பத்திக்கிட்டு அலையணுமா? அடக்கூத்துவனே... இதுவும் ஒனக்குச் சம்மதமா? இப்படியுமா எங்களைச் சீரழிய வெச்சு பேரிழவு கூட்டணும்?"

மடேர் மடேரென்று மார்பில் அறைந்து கதறியழுத அம்மாவைக் காணச் சகிக்கவில்லை செந்தட்டிக்கு. நெஞ்சை உடைத்துக் கொண்டு பீறிட்ட விம்மல்கள். அழுவதற்கு வெட்கமாக இருந்தது. முகத்தை மறைத்துக்கொண்டு ஆட்டுக்கம்போடு தெருவில் இறங்கினாள் செந்தட்டி.

ஏழைப்பட்ட சனத்தின் அவலமாக, அம்மாவின் அழுகைச் சத்தம் துரத்தி வந்தது, முதுகுக்குப் பின்னால்.

ஆற்றோரம் வந்துவிட்டன ஆடுகள். தண்ணீரில்லாத ஆறு. மணல்கூட இல்லாத ஆறு. வேலி மரங்களும் பாறை முடிச்சுகளுமே உள்ள ஆறு.

வெட்டவெளி. ஆள் போக்குவரத்தே இல்லை. பக்கத்தில் வெள்ளாமை விளைச்சல் இல்லை. ஆடுகளை சுதந்திரமாக மேயவிட்டு நிற்கலாம், உட்காரலாம், என்ன வேண்டுமென்றாலும் செய்யலாம்.

பேச்சுத்துணைக்கு மாரிமுத்துவும் வந்துவிட்டான். அவன் ஆடுகளும் நாலு வருஷ சிநேகத்துடன் ஒண்ணடியும் மண்ணடியுமாகக் கலந்து மேயும்.

எப்பவுமே அவனைப் பார்த்துவிட்டால் மனசு கும்மாளம் போடும். சிறுமிக்குரிய குதூகலத்தில் மனசெல்லாம் பூத்துச் சிரிப்பாள்.

"நல்லவேளை... நீ வந்துட்டே..." என்று வெள்ளந்தியாகக் கூவுவாள். கூடமாட விளையாடுகிற கள்ளமற்ற சிறுவனைப் பார்த்துவிட்ட மகிழ்ச்சி, சிறகடிக்கிற மனக்குருவி.

இப்ப... இப்ப... இவன் வந்துட்டானே என்று மனசு கிடந்து பதறுகிறது. பயப் படப்படப்பு. இனம்புரியாத பயம். மர்மமான பதட்டம். முகமில்லாத பீதி.

பதினெட்டு வயசிருக்கும். அழுக்குக் கைலி. தொடை தெரிய உருட்டிக் கட்டிக் கொள்வான். கலர் பனியனில் அவனது தலைவரின் ஸ்டைலான கையசைப்பு.

தலைவர் ஸ்டைல், சண்டை போடுகிற வேகம், அவர் நடிக்கிற சிரிப்புக் காட்சி என்று வெயில் தெரியாமல் கதை சொல்வான் முன்பு. இப்போது... சிம்ரன் குளிப்பது... துணியில்லாத கதாநாயகியை லவர் பார்த்தது... மழையில் நனைகிற கதாநாயகியோடு உருளுவது... காதல் காட்சியில் நெருங்கிக் கட்டிப் புரள்வது என்று இதையே சொல்கிறான்.

வெயில் தெரிகிறது. மனசுக்குள் வெறுப்பாக இருக்கிறது. 'ச்சீய்'யென்றாகிறது.

"ஆட்டைப் பாத்துக்க... இந்தா வாரேன்"...

செந்தட்டி சோத்துச் சட்டியை ஒரு மஞ்சணத்தி மரத்தில் கட்டித் தொங்கவிட்டாள். துண்டை உருவி தலையைச் சுற்றி வட்டக் கட்டாகக் கட்டினாள். மாரிமுத்துவைப் பார்த்துக் கொண்டே, தூரமாகப் போய்... வேலியோரம் மறைந்தாள். ஆற அமர வெளியே வந்தாள்.

ஐயா சட்டை தொள தொளப்பாக இருப்பது அசிங்கமாகத் தோன்றுகிறது. குறைகோலமாக மூளியாகிவிட்டதைப் போல ஓர் உணர்வு, மனசுக்குள் அவஸ்தை.

நீலத்தாவணி போட்டு... இறுக்கிப் பிடிக்கிற வெள்ளை ஜாக்கெட் போட்டு புத்தகமும், பேடுமாகப் பள்ளிக்கூடம் போகிற இவள்

வயசுப் பிள்ளைகள். எண்ணெய் மின்னலும் சடைப் பின்னலுமாக அதுகளின் லட்சணம்.

தான் இருக்கிற அலங்கோலம். சாயம் போன ஐயா சட்டை. தொளதொளப்பாக இருக்கிறது. அதுவே ஒரு வசதிதான். இல்லை என்றால், என்னவோ போலிருக்கும். எப்படி மறைக்க என்று மனசு கிடந்து மறுகித் தவிக்கும்.

அப்பவும் மாரிமுத்துப் பயல் –

முன்பெல்லாம் கல்மிஷமில்லாமல் விளையாடுவான், ஓடிப்பிடிப்பான். தொட்டு விளையாடுவான். விளையாட்டுச் சண்டையில் கட்டிப் புரளுவார்கள். எந்த மர்மமுமில்லை. மறை திரையுமில்லை.

இப்ப... இப்ப... அவன் பார்க்கிற பார்வையில் கள்ளம். இவளது கண்ணைப் பார்க்கிற குறுகுறுப்பு, உதடுகளைப் பார்க்கிற வெறி, கழுத்துக்குக் கீழே நங்கூரம் போடுகிற பார்வை. அதன் உக்கிரம், ஓநாயின் கண்ணைப் போல அலைபாய்வு. பச்சைப்புல் பார்த்த கள்ள ஆடு மாதிரியான தவிப்பு.

இவளுக்குள் என்னவோ போலிருக்கும். கூசிக்குன்றிக் குனியத் தோன்றுகிற மனச்சிரமம். இயல்பாயிருக்க முடியவுமில்லை. சிறுமியில்லை. மறு பக்கம் திரும்பிக் கொள்ளவும் முடியவில்லை. குமரியென்று உணர்த்துவதிலும் சிரமம்.

அந்தப் பாவியின் பார்வையையும் சுமக்க முடியவில்லை. என்ன செய்ய? மனத்தத்தளிப்பு. உள்மனக்கூச்சம்.

குனிந்து கல்லையெடுத்து, ஆடுகளை விரட்டுகிற சாக்கில் ஓடணும், ஆடுகளை அதட்டிக் கொண்டே. பொய் விரட்டல், பொய் அதட்டல்கள்.

மதியம் சாப்பிடும்போதெல்லாம் ஒரே இச்சிலாத்தி. அவனது தொல்லை.

"செந்தட்டி, நீ ரம்பா மாதிரியிருக்கே" என்பான். இவள் முறைப்பாள். "இந்தப் பேச்செல்லாம் எங்கிட்டே வெச்சுக்கிடாதே" என்று சீறுவாள்.

"ஏன்... வெச்சுக்கிட்டா என்னவாம்?" – திமிரான அவனது கேள்வி.

"அதுக்கு வேறு ஆளைப்பாரு"

"அப்ப... உனக்கு ஆளைப் பார்த்துக்கிட்டியா?"

அழுகை அழுகையாக வரும். கோபம் பயனற்றுப்போன உச்சத்தில் அழுகை வெடிக்கும். கண்கலங்கும். மறுகித் தவிக்கிற மனசு.

இவன் சங்காத்தமே வேண்டாம் என்று விலக முடியாதே. காட்டில் ஒற்றையாளாக நிற்க முடியாதே. நச்சரித்துப் பிடுங்கும் தனிமை முள்ளைத் தாங்க முடியாதே.

முப்பத்தாறு ஆடுகளை ஒற்றைச் சிறுமி மேய்க்க முடியாதே. மடக்க... பத்த.. இனம்பார்க்க... கல்கிடங்கு தண்ணீரில் இறக்கி ஏற்ற... கிடைக்குக் கொண்டுபோய்ச் சேர்க்க... எல்லாவற்றுக்கும் ஆள் வேண்டுமே. ஒரு துணை வேண்டுமே... இல்லாமல் சமாளிக்க முடியாதே...

ஆனால், துணையே முள்ளாகி 'சுருக் சுருக்' என்று குத்துகிறது.

சாயங்காலமாயிற்று. செந்தட்டி மேற்கில் தள்ளி நின்றாள். வேண்டுமென்றே உருவாக்கிக் கொண்ட இடைவெளி. பாதுகாப்பு இடைவெளி.

அங்கிருந்தே பாட்டு படிக்கிற மாரிமுத்து, கூச்சநாச்சமில்லாத கெட்ட வார்த்தைப் பாட்டு. ஓங்கிச் சத்தமாகப் பாடுகிறான். இவளுக்குள் கலக்கம். அடிவயிற்றுப் புரட்டல். மன ஆழத்தில் பதைப்பு.

குங்குமச் சூரியனையே பார்க்கிறாள். தங்கத் தூசியான வெயில் வேலிமரங்களில் படுகிறது. கருமூக்கு முதுகில் உட்கார்ந்திருக்கிற கரிச்சானைப் பொருட்படுத்தாமல் புல்லைக் கடித்து மேய்கிற கருமூக்கும், பிற ஆடுகளும் ஆட்டுச் சளியின் புழுக்களை மேய்கிற மைனாக்கள்.

அம்மாகிட்டே சொல்லிடலாமா? மாரிமுத்து சேட்டைகளைச் சொல்லிடலாமா? என்ன செய்தான்னு சொல்ல? கள்ளப் பார்வையைச் சொல்லவா? விளையாட்டாகப் பேசுகிற விஷமத்தைச் சொல்ல முடியுமா? சொன்னா... நம்புவாளா?

நம்பிட்டாலும், பத்ரகாளியாகி விடுவாளே... தெருச் சண்டையில் ஊரையே நாறடித்துவிடுவாளே... கிழிபடுவது இவளது மனம்தானே...?

ஊமைச்சி கண்ட கனாவாக செந்தட்டிக்குள் பீதி. கொட்டியழ முடியாத குமைச்சல். ஆடி மாசக் காற்றில் அல்லாடுகிற வேலி விளாரைப்போல, மனசு நிலைகொள்ளாமல் தத்தளிக்கிற உணர்வு.

"ஏய்... செந்தட்டி..."

"என்ன...?"

"ஆட்டைப் பத்து, கல்கெடங்குத் தண்ணியிலே போட்டெடுத்துட்டு, வீட்டுக்குப் பத்துவம்..."

பொழுது அடைந்துவிட்டது. மேகத்து வெளிச்சம் மிச்சமாக இருந்தது. 'வரட்டா, வரட்டா' என்று பயங்காட்டுகிற இருட்டு.

ஆடுகளை மடக்கினாள். அவனும்தான். அங்கும் இங்கும் வேலிப்புதர் மறைவுகளில் நின்ற ஆடுகளையெல்லாம் அதட்டி... சத்தம் போட்டு... கல்லெறிந்து... மடக்கி... ஒன்றுபடுத்தி...

பக்கத்தில் கருங்கல் கிடங்கு. வெடிவைத்து கல்லை உடைத்த பழைய குவாரிக் கிடங்கு. தேங்கிப் பாசி படிந்து கிடக்கிற கருந்தண்ணீர்.

அதில் ஆடுகளை இறக்கி... தண்ணீர் குடிக்கவைத்து தண்ணீரில் நீந்தவிட்டு பத்தணும்.

பின்பக்கமாக வந்து அப்படியே அணைத்துக்கொண்ட மாரிமுத்து. நெஞ்சின் குறுக்கிலும் வயிற்றுக்கு அடியிலும் கைகளால் பின்னிக் கொண்ட வேகம்... பின்னியவுடன் இறுகிய இறுக்கம். திரும்பிய அவன் கன்னத்தைக் கவ்வுகிற பீடி நாற்றம்.

வெலவெலத்துப் போனாள் செந்தட்டி. தீயை மிதித்து விட்ட மாதிரியான துடிப்பு. பூரான் ஊர்கிற மாதிரியோர் அருவருப்பு. அவளுள் வந்த சண்டாளம். பீறிட்ட பத்ரகாளியின் ருத்ரம்.

"ச்சேய்ய்ய்க்"

திமிறி மூர்க்கமாகக் கத்தினாள். ஒரு மின்னலைப் போல சரேலென்று உருவிக்கொண்டு.... கரும்பாறையில் ஏறி... வெட்டவெளிக்கு வந்தாள்.

மனம் கசந்த வெறுப்பு... அச்சமும் குமட்டலுமாகப் பார்த்த பார்வையின் மருளல். 'ச்சிய்... நாயே' என்று சீறிய பார்வை.

"வாடா...வா... எங்கம்மாகிட்டே சொல்லுதேன். நீ செஞ்ச காரியத்தை. ஒன்னோட தொலியைக் கிழிச்சு, உப்பைத் தடவுவா... பாரு"

அவன் முகத்திலும் பயத்தின் இருட்டு. வரப்போகும் பிரளயம் பற்றிய நடுக்கம். அவசர அவசரமாக அவனது ஆடுகளை மட்டும் இனம் பிரித்து, பத்திக்கொண்டு போய்விட்டான்.

ஈரத்துண்டை உடம்பில் போர்த்திக் கொண்டாள் செந்தட்டி.

மிச்சமிருந்த மேகத்து வெளிச்சமும் கறுத்துவந்தது. றெக்கை நிழலாக வந்து கவிகிற இருட்டு.

விசும்பி விசும்பி அழுத செந்தட்டி. சொல்லியழ ஆளில்லா தனிமையின் தவிப்பு, திணறல். ஆடுகளைப் பத்தினாள். ஊரை நோக்கி நகர்ந்தாள்.

மாரிமுத்தை நினைக்க நினைக்க பயத்தில் நனைகிற மனசு. அம்மாவிடம் போய் ஆட்டுக்கம்பை வீசியெறியணும். ஆடு மேய்க்க மாட்டேன் என்று அடம் பிடிக்கணும். அழுது புரளணும். வைராக்கியமாக மறுத்திரணும்.

தன் நடையாக ஆடுகளின் நடை. கத்தல் இல்லாத நடை. வெறும் செருமல் மட்டும் அவ்வப்போது.

மெல்லிய காற்றின் வருடலில் உலர்கிற ஈரத்துணி. ஏனோ... ராசாத்தியை நினைக்கிறது. மனசு.

செந்தட்டி ஆட்டுக்கம்பை எடுத்ததே ராசாத்தி தைரியத்தில் தான். அப்பவே அவள் முற்றலான குமரி. சடங்காகி ஏழெட்டு வருஷமாகியிருந்தது. ஆடுதான் மேய்த்தாள். சின்னப் பிள்ளையில் பிடித்த ஆட்டுக்கம்பு. எதற்கும் பயப்படவே மாட்டாள். இருட்டுக்கும் பேய்க்கும் பயப்படமாட்டாள். ஆம்பளைக்கும்தான்.

'ஐயா இல்லாத புள்ளை' என்ற அனுதாபத்தில் செந்தட்டிமேல் அவளுக்கு ரொம்பப் பிரியம். ஈரத்தில் வேர்விட்ட பாசம். இவளுக்கும் ராசாத்தி என்றால் உயிர். தாயைப் போல காவல் தருகிற ராசாத்தி. காவல் தேவதை என்கிற பாசம்.

ராசாத்தி ரொம்ப வாடிப் போயிருந்தாள். வெட்டி வெயிலில் போட்ட கீரைத்தண்டாக குறாவிப் போயிருந்தாள்.

"ஏங்க்கா... ஒரு மாதிரியாயிருக்கே?"

"ப்ச்சூ... ஒண்ணுமில்லே."

முழுங்கி மறைக்கிற காயவேதனை. பொத்திவைக்கிற ரணம்.

"செந்தட்டி...."

"என்னக்கா?"

"எங்காச்சும் பீர்க்கைநெத்து தட்டுப்பட்டுச்சா?"

"பீர்க்கைங்காயா?"

"இல்லே, பழுத்து... முத்தி.. காய்ஞ்சிபோன நெத்து"

"எதுக்குக்கா?"

"சொன்னா ஒனக்குப் புரியாது. வேணும். அவசரம்".

"சீனியப்பநாடாரு மொளகாப் புஞ்சையிலே வேலிமேலே தொங்குச்சு".

"எந்தப் புஞ்சை?"

"மேல ஓடைக்கு மேக்கே..."

"இருக்கா? பீர்க்கை நெத்துதானா?"

"நெத்துதான். தங்கநெறத்துலே தொங்குச்சு. குலுக்கிக் கூடப் பார்த்தேன். வெதை கலகலன்னு சிரிச்சது."

"புடுங்கிட்டு வாரீயா? நான் ஆட்டைப் பாத்துக்கிடுதேன்."

"ஆகட்டும்..."

சிட்டாகப் பறந்தாள் செந்தட்டி. அக்காவுக்கு உதவி செய்கிற பாக்கியம் கிடைத்த மகிழ்ச்சி. குதூகலப் பெருக்கு. றெக்கையடிக்கிற மனத்துள்ளல்.

போன மாயத்தில் வந்துவிட்டாள். கலகலக்கிற பீர்க்கை நெற்றோடு.

மறுநாளுக்கு மறுநாள் –

ராசாத்தியக்கா செத்துப் போய்விட்டாள். பீர்க்கை விதைகளை அரைத்துக் குடித்துவிட்டாளாம். கருக்கலைப்புக்கான மருந்தாம். போக ஆரம்பித்த ரத்தப்போக்கு நிற்கவேயில்லையாம். உயிரைப் பறித்துக்கொண்டுதான் நின்றது. நாலாவது கருக்கலைப்பாம்...

'அக்காவைக் கொல்றதுக்காகவா... பீர்க்கைநெத்துக்காக அந்த ஓட்டம் ஓடினேன்?'

செந்தட்டிக்குள் இப்ப நினைத்தாலும், பகீரென்றது. ராசாத்தியக்காவின் அன்பு முகம். பாசமுகங்கள். நார்க்கட்டிலில் தூக்கிப்போட்ட பிரேதத்தை எவ்விதச் சடங்கு சாத்திரமும் இல்லாமல்... அப்படியே மயானக்கரைக்குக் கொண்டுபோன அவலம். நிமிஷத்தில் புகையாகிவிட்ட மாயம்.

அதோ... ஊரின் தெருவிளக்குகள். இருட்டு கவிந்துவிட்டது. நினைவுகள் ஒரு பக்கம் இழை பின்னினாலும், ஆடுகளின்மீதும் ஒரு கண்.

மாரிமுத்துவின் ஸ்பரிசம். அவன் கைகள் இறுக்கிய உணர்வுத் திணறல். அவனது வியர்வை நாற்றம். சுவாச வெக்கை, பீடிவாசம். எச்சில் வடிகிற அவனது காமக் கண்கள். அவனை விட்டுப் பிரிந்து... ஒற்றையாக ஆடுகளைச் சமாளிக்க முடியாத நிலைமை. ஆட்டுக்கம்பை தலையைச் சுற்றி எறிய முடியாத நிஜம். அம்மா சம்மதிக்கமாட்டாள். அதட்டுவாள். திராக் கடைசிக்கு கண்ணீரால்

கரைத்துவிடுவாள்.

'அப்ப... அப்ப... எனக்கும் பீர்க்கை விதைக் கரைசல்தானா? அந்த விதிதான் எனக்கும் காத்திருக்கிறதா? நானும் ராசாத்தியக்கா மாதிரிதானா?'

– செந்தட்டிக்குள் பயச்சிலிர்ப்பு, அடிவயிற்றைப் புரட்டுகிற கலக்கம், பீதியூட்டுகிற கற்பனைகள்.

செந்தட்டிக்குள் ஒரு வைராக்கியமான நினைப்பு.

'அம்மா அழுதாலும் சரி... புரண்டு கதறினாலும் சரி... கரையவே கூடாது. ஆட்டுக்குப் போகவே கூடாது. என்ன ஆனாலும் சரி... ஆட்டுக்கம்பை கையிலே தொடவேக் கூடாது. மாரிமுத்து மூஞ்சியிலே முழிக்கவே கூடாது...!'

இந்த முடிவுக்கு வந்த பின்னும் கூட மனசில் ஒரு கலக்கம். அம்மாவின் கண்ணீரையும், கதறலையும் எப்படி எதிர்கொள்வது என்கிற நடுக்கம்.

ஆடுகளைப் பத்தி தொழுவத்துக்குள் அடைத்தாள். படலை இழுத்துச் சாத்துகிறபோது –

அடிவயிற்றில் ஊசிக்குத்தலான ஒரு வலி. சரேலெனப் பாய்ந்த குத்தல். உயிரே கழன்றுபோகிற மாதிரியோர் உணர்வு.

"ஹா... ஹ்... ம்ம்ம... மா... ஹ்"

நீளத்திணறலான ஓர் அலறல், அப்படியே உட்கார்ந்து விட்டாள். இடுப்பு எலும்பே உருவிக்கொண்ட மாதிரியோர் உளைச்சல்.

சத்தம் கேட்டு ஓடிவந்த அம்மா... "என்னடி.... என்ன செந்தட்டி" என்று பதட்டப் பரபரப்பாக வந்தவள்... மகள் முகத்தை சற்றே கூர்ந்து பார்த்தவுடன், "மகராசியாயிருக்கணும்டீ. பூத்தநேரம் பொன்னா இருக்கணும்" என்று மகள் முகத்தை கைகளால் வழித்து, வருடி.... பூரித்த மனதோடு ஆசிர்வதித்தாள்.

'என்ன ஆயிருக்கு' என்பதை ஊகித்துக்கொண்ட செந்தட்டி,

'நல்லவேளை.... இதைச் சொல்லியே ஆட்டுக்கம்பைக் கிழே போட்டுரலாம்...'

அவளுள் வெட்கமும் வேதனையுமான லஜ்ஜை உணர்வுகளைத் தாண்டிய ஆழத்துக்குள் ஓர் ஆசுவாசமும் பரவசமும் மலர்ந்தது. அவலமான ஆசுவாசம்... சோகமான பரவசம்.

*ஆனந்தவிகடன், 17.10.1999*

# துபய் நண்பர்களின் சில கவிதைகள்

## விவசாயி

**ப**ந்தியில் முகம் பார்த்து... நிலவுக்கு அழைப்பு விடுத்து...
பின்உறங்கி.... மின்வெட்டால் கட்டுண்டு....
இரவை பகலாக்கி.. இறவை தொழில் செய்து...
நாட்டை காத்திட தான் அழிந்த பனிமலர்கள்.....
மலர்மணம் அறியாத பூவியாபாரிகள்....
வீழப்பிறந்த விடுதலைச் சிற்பிகள்....
பூமிக்குள் வாழ்வை தொலைத்துவிட்டு...
மீண்டும் மீண்டும்.... உழுது! உழுது....
–தேடும் ஆராய்ச்சியாளர்கள்....
'துயரம்' தொகுதியில் 'வியர்வை' சின்னத்தில்
போட்டியிடும் சுயேட்சைகள்....
இவர்கள் மலர்களை பயிரிடுகிறார்கள்
வாசனைக்கு அல்ல.... வயிற்றுப் பிழைப்புக்காக...
கொழுவினை தீட்டி.... ஏர்தனைப்பூட்டி....
உழவினைக் கூட்டி.... விதை எடுத்து! வியர்வை கலந்து தெளித்து...
உலகத்தேர் உருண்டோட... அச்சாணியை ஆக்குபவன்....
சக்கரமாய் இருந்து சமூகத்தை வலம் வருபவன்.....
உவகைக்கு அப்பாற்பட்ட ஊழியன் இவன்....

– ***சின்னவன் பாரதி***

## நம்பிக்கை

**கா**ய்ச்சல்... அப்பா கோவிலுக்கு
அழைத்துச் சென்றார்...
போதை பூசாரி விபூதி தின்றேன் – பேதியானது....
மந்திரித்த கயிறு கட்டி, இரத்த ஓட்டம் நின்றது...
வேப்பிலை அடித்ததில் கண்பூவிழுந்துவிட்டது...
'நம்பிக்கை' இருக்கிறது. எப்படியும் இவர்களிடமிருந்து
பிழைத்துவிடுவேன் என்று....

– ***சத்யா***

## கல்குவாரி

மடையனுக்கு வயது அறுபது....
மடந்தைக்கு வயது இருபது....
அரைகாணி நிலத்திற்கு....
வாரிசு வேண்டி மறுமணமாம்....
அறுபத்திரெண்டில் நோயுற்றவன்
அரைகாணி விற்றும் தேறவில்லை.....
கைகுழந்தையுடன் கல்குவாரியில்
அடிமையாய் மடந்தை...

*–முத்துப்பாண்டி*

## முரண்பாடு

கருவறை தந்த தாயிடம் மகன் கேட்டான்....
"நீ எனக்கு என்ன கொடுத்தாய்..."

*– ஆனந்த்*

தலையங்கம் படித்தேன்....
சாதிமத பேதமற்ற சமுதாயம் அமைப்போம்
– மூப்பனார் முழக்கம்...

*– ஸ்ரீமயில்பாரதி*

தண்ணீரில் பயணம்
தாகத்தில் மரணம்...
மீனவர்கள்...

*–முகவை மாதவன்*

## கலப்பை

மண்ணைப் பொன்னாக்கி
மானுடம் வாழ்ந்திட
வீரமரணம் தழுவும் தியாகிகள்....

*– ஜெயராம்*

## கடை

சாப்பிட்டேன்.....
"சத்தமின்றி" பணம் கொடுத்தேன்...
அதுதான் அடையாளமாம்..
ஆ... கையில் கஞ்சா பொட்டலம்.

*– பெரம்பலூரரான்*

## வியாபாரி

கதவை உடைக்காத
கல்லாப்பெட்டி திறவாத
நேர்மையான திருடன்

*– சிராஜுதீன்*

## வளைகுடா நாடு

இந்திய வியர்வையில்
சமுத்திரமாகிப்போன பூமி....

*–சுந்தராசு*

## திருடன்

கவிதை திருடினேன் அவள் கண்களிலிருந்து....
எழுத முடியவில்லை....
கலையை திருடினேன் அவள் இதழ்களிலிருந்து....
படைக்க முடியவில்லை.....
பெண்மையைத் திருடினேன்... அவள் சம்மதத்துடன்....
இப்போது நான் அப்பாவாக...

*– திருவள்ளூரரான் ரகு*

## களவாணி

திருடன்! திருடன்!!
கன்றுகுட்டி கத்தியது
தாய்ப்பசுவிடம் பால்க்காரன்

*– ஆள்வாரப்பன்*

## அமாவாசை

நிலாப்பெண்ணிற்கு மாதவிடாய் விடுப்பு
நிசப்தமாய் அமாவாசை இருட்டு...

*– பாட்சா*

## தேன்கூடு

தியேட்டர் வாசலிலே கூட்டம்
நிரம்பி வழிந்தது... ஆ.. படம் 'தேன்கூடு'...
ஈக்களாய் மக்கள்.....

*– ஜெயக்குமார்*

## எறும்பூர்

எறும்பூர கல்லும் தேயும் என்றீரே.....
நானும் எறும்பைவிட வேகமாக ஊர்ந்தேன்...
தேய்ந்தது என் காலமும் கால்களும்தான்....
என் கனவுகள் மட்டும் சிறுவனாய்....
என் மகனுக்கு பட்டம்விட பட்டய பேப்பரோடு நான்,,,

*–கவிஞர் சுதி*

# நான் பிறந்தமண்

கீழமலைச்சாரல் வந்து தென்றலாய் சேதி சொல்ல...
வடக்குமலைச் சாரல் வந்து கருவேல மரம் குறுக்க......
மேலட்டாயி புயல்வந்து ஏரிக்கரை அலையை கூட்ட....
இறகுக் கூட்டம் ஒன்றுகூடி ஆலமர மாநாடு செய்ய....
வெண்முடி பெருசுகள் மந்தைவெளி வேப்பமரம் புடைசூழ...
வாலிப வட்டமெல்லாம் வாசக சாலையில்கூட....
ஆங்கோர் பூமலை இதயமாய்த் தூவியது...
குரும்பாடு கூட்டமாய்.... ஊருக்குள் உலாவர.....
என் வீட்டு பசுமாடு 'அம்மா' வென அறைகூவல்விட
கன்றுக்கு பால் ஊட்டும் காலத்தினை நான் உணர....
வெங்காயம் வைக்க சென்ற பெண்டிரெல்லாம் ஈரத்தோடு தெருக்கடக்க...
மீனாட்சி பாட்டி மட்டும் மழைநீரில் தொட்டி நிரப்ப....
சத்துணவு சில்வண்டுகள் ஓட்டமாய் தட்டோடு...
அவசரமாய் பால்காரர் திருப்பத்தில் விழுந்து எழ...
சீனிவாச ரெட்டியார், மாடியிலிருந்து கீழ்வானம் நோக்க....
பொன்னஞ்செட்டி அவசரமாய் மழைபார்த்து கடைமூட
நான் மட்டும் தனியாக பாலைவனத்தில்

*–எஸ். பொம்மனப்பாடியான்*

**நூல்சிறப்புற வாழ்த்தும் நெஞ்சங்கள்**

பத்மநாபன், லட்சுமிபதி, செந்தில்,
நெல்லை முருகேஷ், ரமேஷ்,
சீனிவாசன், குமார்.

★

# குறிப்புகள்

... அயல்நாட்டில் குளிர்சாதன அறைகளில் மெத்தையில் அமர்ந்து கொண்டு குளிர்சாதனக் காற்றை அனுபவிக்கின்ற இன்பத்தைவிட சொந்த கிராமத்தில் மணல்வெளியில் அமர்ந்து கொண்டு தென்றல் காற்றை சுவாசித்துப் பெறுகின்ற சுவை மிகமிக இனிது. அதுபோல திரு. மேலாண்மை பொன்னுச்சாமியின் சிறுகதைகள் கிராமத்து வாசனைகளை அள்ளி வீசுகின்றன...

... துபையில் பணிக்குச் சென்று திரும்பியவுடன் நம்மை நம் ஊருக்கே அழைத்துச்சென்று அவரது படைப்புப் பாத்திரங்களோடு ஒன்றி உலாவச் செய்து விடுவார் மேலாண்மை அவர்கள். மேலாண்மையாருடைய கதைகளுக்காகவே ஆனந்தவிகடன் பத்திரிகை எங்கள் சத்வா பகுதியில் விற்றுத் தீர்ந்துவிடும்...

... மெல்லிய கிராமத்தில் பிறந்து சராசரி விவசாயிக்கே உரிய கடன் சுமைகளோடு இவ்வளவு சிறப்பாகப் படைப்புகளை நம் தமிழ் உலகத்திற்கு வாரிவாரி வழங்குகிறார் என்பது ரொம்பவும் வியத்தகு விஷயம்தான்.

– துபாய் நண்பர்கள்.